முக்தி வழி

நூலாசிரியர்
வேதஞான வித்தகர், மறைதிரு.
அமரர் N.J.S. சிவசுந்தரம்

முக்தி வழி

(சமய ஆய்வு நிரூபணம்)

நூலாசிரியர்

வேதஞான வித்தகர், மறைதிரு.

அமரர் N.J.S. சிவசுந்தரம்

பதிப்பாசிரியர்

Rev. D. விஜயகுமார்

Rev. D. VIJAYAKUMAR,

Missionary Movement of India,

Founder & President

229/239, Bharathipuram, Surampatti (P.O),
Erode - 638 009. Tamil Nadu. South India.
Mobile : 93641 02490 Fax : 0424 - 2252181
e-mail : ramaniviji2003@yahoo.com

நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர்	:	முக்தி வழி
நூலாசிரியர்	:	அமரர் N.J.S. சிவசுந்தரம்
பதிப்பாசிரியர்	:	Rev. D. விஜயகுமார்
வெளியீடு	:	மிஷனரி மூவ்மெண்ட் ஆஃப் இந்தியா
அஞ்சல்	:	229/239, பாரதிபுரம், சூரம்பட்டி அஞ்சல், ஈரோடு - 638 009. தமிழ்நாடு. செல் : 93641 02490
பொருள்	:	சமய ஆராய்ச்சி நூல்
முதற்பதிப்பு	:	1971
2ம் பதிப்பு	:	1989
3ம் பதிப்பு	:	நவம்பர் 2007
நூல் அளவு	:	டெம்மி
பக்கங்கள்	:	424
மொழி	:	தமிழ்
எழுத்து	:	12 புள்ளி
தாள்	:	18.6 கி.கி. வெள்ளைத்தாள்
நூல் கட்டுமானம் பைண்டிங்	:	அட்டை
ஒளி அச்சுக் கோர்ப்பு	:	துர்கா பிரிண்டர்ஸ், ஈரோடு.
அச்சிட்டோர்	:	நியூ செண்பகம் ஆப்செட், 163, சாட்சியாபுரம், சிவகாசி மேற்கு.
விலை	:	ரூ.150/-

முதற்பதிப்பு	:	1971
2ம் பதிப்பு	:	1989
3ம் பதிப்பு	:	நவம்பர் 2007 ¡
பிரதிகள்	:	1000
உரிமை	:	பதிப்பாசிரியர்க்கே

தொடர்புக்கு :

Rev. D. VIJAYAKUMAR,
Missionary Movement of India,
Founder & President
229/239, Bharathipuram,Surampatti (P.O),
Erode - 638 009. Tamil Nadu. South India.
Mobile : 93641 02490 Fax : 0424 - 2252181
e-mail : ramaniviji2003@yahoo.com

குறிப்பு :

இப்புத்தகத்தில் வரும் கருத்துக்களையோ, மற்ற எந்த ஒரு பகுதியையோ எடுத்தாள்வது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

அர்ப்பணிப்பு

நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே
நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று
அப்போஸ்தலனாகிய பவுல் முழங்கியதற்கு ஏற்ப
மனுஷசாதியான சகல ஜனங்களுக்கும்
கர்த்தராகிய அவரைத் தடவியாகிலும்
கண்டுபிடிக்கத்தக்க ஏதுவாக, இந்நூலை
சர்வவல்லவரும் கர்த்தருமாகிய இயேசு
கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கிறேன்.

- **Rev. D. விஜயகுமார்**
பதிப்பாசிரியர்



அமரர் N.J.S. சிவசுந்தரம்

"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும் பொன்னிலும் உத்தமமானது. முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப் பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல. அதின் வலது கையில் தீர்க்காயுசும், அதின் இடது கையில் செல்வமும், கனமும் இருக்கிறது. அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம். அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவ விருட்சம், அதைப் பற்றிக் கொள்ளுகிற எவனும் பாக்கியவான்."

(நீதிமொழிகள் 3:13-18)

முன்னுரை

அன்பர்களே !

''நூற் பல கல்'' என்னும் பண்டைப் பழஞ் சொற்படி நம் நாட்டில் கற்றுப் பயிற்சிக்குட்பட்டுள்ள விசேசித்த கலைகள் அறுபத்து நான்காகும். இவற்றில் நான்காவது கலை வேதம், அல்லது மெஞ்ஞான கலையாகும். இக்கலையே மானிடர் பரம் பொருளின் அநுக்கிரகத்தால் மறுமையில் அடையும் நன்மைகளை மிக விரிவும் தெளிவுமாய்க் காட்டும் கலை. நாளடைவில் மெஞ்ஞானம் மறைந்து அஞ்ஞானம் உச்சம் பெற்று நாத்தீகம் பெரிதும் பெருகியதால், மக்களிடையில் நீதி குறைந்து, பக்தி அற்றுப் போயிற்று. நாத்தீகம் தீய்ந்து அஞ்ஞானம் மறைந்து, மெஞ்ஞானம் துளிர்த்து, ஓங்கி வளர்ந்து, ஞானப் பசியுள்ளார்க்கு நற்சுவையமுதாய் மாறி நல்வழிகாட்டும் என்னும் நம்பிக்கையுடன் என் ஆராய்ச்சியிலும், அனுபவத்திலும், நான் கேட்டதையும், கண்டதையும், கற்று ருசித்ததையும் திரட்டி ''முக்திவழி'' என்னும் இச்சிறுநூலை வெளியிட்டுள்ளேன். இந்நூலின் உட்கருத்தை தெளிவான நடையில் விளக்க உபகரணமாய் அகஸ்தியர் முனிவர் நூல்களில், அகஸ்தியர் ஞானம் முப்பது, அகஸ்தியர் ஞானம் ஆறு, அமரர் புராணசுருக்கம், அருணசல புராணம், ஆனந்தமாலை, தாம்பிரபரணி மகத்துவம், திருவிளையாடல், திருவையாற்று புராணம், நீதிசாரம், பதினெண் சித்தர், ஞானக்கோவை, பாகவதம், பாரதம், புராணம், புலஸ்தியர் நூல், பேரின்ப மணிமாலை, போகர் முனிவர் பெரும் நூல் என்னும் போகர் ஏழாயிரம், சத்தகாண்டம், வால்மீகர் சூத்திரஞானம் பதினாறு, மற்றும் சமய ஆராய்ச்சிக்குகந்த பல அரும், பெரும் நூல்களையும் கூர்ந்து ஆராய்ந்து அவ்வவற்றின் பொருள் பொருத்தத்திற்கேற்ற அவசியமான கருத்துரைகளை மாத்திரம் அவைகளிலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூலை வாசிக்கும் வாய்ப்புடைய வாசகர்கள் மதசார்பற்ற நிலையில் இருந்து ''எப்பொருள் எத்தன்மையாயினும், அப்பொருளின் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற நீதி வாக்கின் படி உத்தம பக்தி ஆராய்ச்சிக்குகந்த ஆழ்ந்த

சிந்தையுடன் மனதை ஒருமைப்படுத்தி ஏகாந்த நிலையில் அமர்ந்து இருந்து, இதில் காணக்கிடைக்கும் சொற்பிழை, அச்சுப்பிழை மற்றுமுள்ள புறத் தோஷங்களை பொருட்படுத்தாது அறவே மன்னித்து, மறந்து, பொருட்சுவையை மாத்திரம் அன்னபட்சி நீரைநீக்கிப் பாலைப் பருகுமாப்போலும், பசு, வளம் மிகும் புல்கண்டு வயிறு புடைக்க விரைந்து மேய்ந்து, பின் ஓய்ந்து, அசைபோட்டு மீண்டும் மென்று தின்று, மதுரமிக்க பால் தருவதுபோலும், முற்றிலும் கருத்தாய் வாசித்து ''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நல மானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்ற திருமறை வாக்கின்படி நீதி சாரங்களை கூர்ந்து கிரகித்து, நற்பொருளைக் கண்டு கடைபிடித்தால், அந்த கார அஞ்ஞானக் கடல் கடந்து, அருளொளி வீசும் மெஞ்ஞானக்கரைகண்டு, உயர் ஞானத்தால் பூரணப்பட்டு, நித்தியானந்தமுள்ள ஏகசக்ராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவரும், சர்வசிருஷ்டிகளின் கர்த்தனும், ஒன்றான மெய்ப்பராபர வஸ்துவுமாகிய, ஜீவனுள்ள மாசற்ற ஜோதியை, மனக்கண்களால் தரிசித்து, நீதி பரிசுத்தம் என்னும் நிர்மலமற்ற பூரண நிலையடைந்து, இகபரநித்தியானந்த பேரின்ப சந்தோஷங்களால் நிறைந்து, மறுமையில் நீடூழி வாழ, இந்நூல் மெய்ஞ்ஞானத் திறவுகோல்போல் உதவி, நற்பலன் அளிக்கும்.

மெய்ஞ்ஞான ஆராய்ச்சியாளரின்

பேரின்ப வாழ்வை விரும்பும் ஆத்தும நண்பன்

N.J.S. சிவசுந்தரம்.



அணிந்துரை

திருமறைப் பெரியார்
Rev. Dr. யோபு ஞானப்பிரகாசம்
ஸ்தாபகர் & தலைவர்,
இந்திய பெந்தோகொஸ்தே அசெம்பிளி
கோவை -12.

நம்முடைய பெருமதிப்பிற்குரிய Rev. N.J.ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் எழுதியுள்ள 400 பக்கங்கள் அடங்கிய முக்தி வழி நூலையும், சிவன் முதல் கிறிஸ்து வரை என்ற 275 பக்கங்கள் அடங்கிய அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒரு வார காலமாக மிகவும் உற்சாகமாகவும் கவனமாகவும் வாசித்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்ததுடன். நான் எனது வாழ்க்கையில் மறுமலர்ச்சியடைந்தேன். நான் கடந்த 54 ஆண்டுகளாக கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து வந்தாலும் Rev. N.J.ஸ்டீபன் அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரமானது எனக்குப் பெரிய வியப்பை உண்டு பண்ணி விட்டது.

அவர் 1903 ஜனவரி 6-ல் இலங்கை நாட்டில் பிறந்ததும் சிவன் என்று பெற்றோரால் பெயர் சூட்டப்பட்டதும், கிறிஸ்தவருடைய வீட்டிலிருந்தாலும், கிறிஸ்தவப் பள்ளியில் கல்வி பயின்றாலும் அவர் ஒரு இந்து மாணவனாகவே நடக்க முயன்றதும் அவர் 1918-ம் ஆண்டில் சென்னையில் கெல்லட் உயர்நிலைப்பள்ளியில் நடந்த கூட்டத்தில் சாதுசுந்தர்சிங் அவர்களுடைய சாட்சியால் குணப்பட்டதும் இலங்கையில் அட்டன் பகுதியில் உள்ள நாட்டன் பிரிட்ஜ் பட்டிணத்தில் தனியார் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்தினதும் பிறகு பின்மாற்றமடைந்திருந்த காலத்தில் முன் இந்து சமய நூல்களைப் படித்து பாராயணம் பண்ணினபடி குறி சொல்லித் திரிந்ததும், 1926-ல் திருமணமான பின்னர் வாழ்க்கையில் எதிர்பாராத சோதனைகள் வந்து மனமடிவை ஏற்படுத்தினதும்,

பிறகு காலம் சென்ற இலங்கை பெந்தேகொஸ்தே ஸ்தாபகரான அருமையான பரிசுத்தவானாகிய பாஸ்டர் பால் அவர்களால் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றதும். யாழ்பாணத்தை அடுத்துள்ள மண்டத்தீவு, புங்குடித்தீவு, நெடுந்தீவு ஆகிய தீவுகளில் ஊழிய அனுபவங்களும், கெங்கிராவா ஊரின் 26 மைல் நடை பயண ஊழிய அனுபவங்களும், ஒவ்வொரு இடத்திலும் கர்த்தர் கொடுத்த தரிசனங்களும் வெளிபடுத்துதல்களும், அவர் எண்ணெய் பூசி ஜெபித்த பல்வேறு நீண்ட கால பெரும் வியாதியஸ்தர்கள் குணமடைந்ததுமான சம்பவங்களும் எனக்குள்ளாக பெரிய எழுப்புதலையும், விசுவாசத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கினது.

அதுவுமல்லாமல் அவர் 1937-ல் இந்தியாவிற்குத் திரும்பி வந்து மதுரை, சென்னை முதலிய இடங்களில் நடத்தின ஊழியங்கள் அங்கு ஜெபத்தினால் நடைபெற்ற அற்புதங்கள் முதலியனவும், 1937 மே, 4ல் விழுப்புரம் வந்து தங்கி 1956 வரை ஊமங்கலத்தைச் சேர்ந்த அஜீஸ்நகர் கிரிமினல் செட்டில்மெண்டிலிருந்த 1500 கைதிகளுக்கு சுவிசேஷம் அறிவித்ததும் பிசாசுகளைத் துரத்தினதும் வியாதியஸ்தர்களைக் குணமாக்கினதும் அவர்களில் அனேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததும், 14 வருடங்களாக விழுப்புரத்தில் விசுவாசத்தில் 14 கன்வென்ஷன்களை நடத்தினதும் எனக்குப் பெரிய ஆச்சரியத்தை உண்டு பண்ணினது.

அதுவுமல்லாமல் அவர் 1956 ஜனவரி 22-ல் தரிசனத்தோடு கல்வராயன் மலைக்குப் போனதும் அங்கிருந்து மிஷினரியம்மாவாகிய மிஸஸ்- பிராண்ட், மிஸ், ஆன்ஸன் ஆகிய அம்மையார்களைச் சந்தித்து மலை ஜாதியர்களிடம் ஜாகீர்தார்களின் எதிர்ப்புகள் பயமுறுத்தல்கள் மத்தியில் வல்லமையாக அற்புத அடையாளங்களோடு கூடிய ஊழியம் செய்து அநேகரை ஆண்டவருக்குள் வழி நடத்தி ஞானஸ்நானம் கொடுத்த சம்பவங்களும் 1962 ஜூன் 2ந் தேதி கல்வராயன் மலையில் மலைஜாதி பிள்ளைகளுக்கு சர்க்கார் ஆரம்ப பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பித்து வைத்ததும், 1963ல்

சிட்டம் பட்டியில் ஒரு அஞ்சல் நிலையத்தையும் திறந்து வைத்து அவரை சீர்திருத்த இயக்கத்தின் ஜில்லா கௌரவ சூப்பிரண்டாக சர்வதேச குடிசைவாசிகள் சீர்திருத்த சங்கத் தலைவர் Dr.D.B.மோசஸ் நியமித்ததும் அதன் பிறகு அப்பகுதியில் அவர் ஆற்றின அரும்பெரும் தொண்டுகளும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இறுதியாக கர்த்தர் அவரையும் அவரது குடும்பத்தையும் 1978-ம் வருடம் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி சேலம் மாவட்டம் சங்ககிரியில் நிரந்தரமாகக் குடியிருக்கும்படி செய்து ஊழியங்களை தொடர்ந்து நடப்பித்து வருகிறார். இவர் எழுதிய முக்தி வழி நூலும் இவரது வாழ்க்கை சரித்திரத்தையுடைய சிவன் முதல் கிறிஸ்து வரை என்ற நூலும் அனைத்து கிறிஸ்தவ சபையின் போதகர்களும், தேவ ஊழியர்களும், விசுவாசிகளும், வேதாகம கல்லூரி மாணவர்களும் வாசித்தல் அத்தியந்த அவசியமாயிருக்கிறது. அதனால் அரும்பெரும் அனுபவங்களை அறியலாம்.

ஆதலால் இச்சரித்திர ஆசிரியராகிய Rev. N.J.ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்களையும், அவரது முக்தி வழி நூலையும், வாழ்க்கை வரலாற்று நூலையும் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

Rev. N.J. ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் நமது தமிழகத்தில் ஓர் சிறந்த ஆராய்ச்சி ஆர்வமும், முதிர்ந்த அனுபவமும் நிறைந்த எழுத்தாளர் என்பதில் ஐயமில்லை. அவர்கள் இதற்கு முன் வெளியிட்டுள்ள முக்தி வழி, சிவன் முதல் கிறிஸ்து வரை, கிறிஸ்துவின் மூல உபதேசம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, ஆவி உலகம், ஜீவத்தண்ணீர் ஆகிய நூல்கள் பெற்றுள்ள சிறப்பான வரவேற்பினை தொடர்ந்து இந்நூல்கள் பெறும் என நம்புகிறேன் நமது சபைகளிலும், நூலகங்களிலும், இந்நூலைப் பரவச் செய்து Rev. N.J. ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் வழியில் செயல்படும் பதிப்பாசிரியர் Rev.D.விஜயகுமார் அவர்களை கர்த்தர் பலப்படுத்தி இத்தகைய முயற்சிகள் மேலும் தொடர வழி வகுப்போமாக ! கர்த்தர் பதிப்பாசிரியர் மூலம் இன்னும் அநேக ஆவிக்குரிய நூல்களை வெளியிட அநுக்கிரகம் பண்ணுவாராக!

★★★

வாழ்த்துரை

பேராயர். டாக்டர்.
சாமுவேல் ஜே.இன்னோசண்ட்
பெத்தானியா ஸ்தாபனம்,
25, லெனின் வீதி, நாடார்மேடு, ஈரோடு – 638 002.

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களே! உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

Rev. N.J.ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் எழுதியிருக்கும் இந்த முக்திவழி என்ற நூலை குறித்து வாழ்த்துரை எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய நாட்களில் நம்மவர்களுக்கு பக்தி உண்டு, புத்தியுமுண்டு, ஆனால் முக்தியடைவதற்கான வழிதான் தெரியவில்லை. இந்த ஆவிக்குரிய பற்றாக்குறையை தீர்க்கும் வண்ணமாக இந்த புத்தகம் ஒரு சத்துவமாக அமையும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஏராளமான புத்தகங்கள் மலிந்து கிடக்கும் இந்த நாட்களில் மெய்யாகவே முக்திக்கு வழி காட்டும் உபகரணமாக இந்த புத்தகம் விளங்க வேண்டும் என்று ஜெபிக்கின்றேன்.

Rev. N.J.ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் ஒரு மிஷினரியை உருவாக்கியிருக்கிறார் என்றே சொல்லுவேன், மிஷினரி செய்யும் வேலையை இந்த புத்தகம் நிறைவேற்றும் என்று வாழ்த்துகின்றேன். மேலும் கிறிஸ்தவ உலகம் 'LOGOS' ஆகிய அவருடைய வார்த்தையால் இன்னும் அதிகமாக நிரப்பப்பட, போதகர் சிவசுந்தரம், ஆசிரியர் மூலம் உருவாக்கப்பட்ட Rev. D.விஜயகுமார் அவர்களுக்காய் கர்த்தரைத் துதிக்கிறேன். இன்னும் பல சிறப்பான நூல்கள் எழுதப்படுவதாக, வெளியிடப்படுவதாக. இவரை கர்த்தர் ஈரோடு மாவட்டத்தின் வல்லமையான எழுத்தாணியாக மாற்றுவாராக. ஆமென்.

அன்புடன்

(பேராயர். டாக்டர். சாமுவேல் ஜே. இன்னோசண்ட்)

வாழ்த்துரை

திருமறைப் பெரியார்
Rev. Dr. **யோபு ஞானப்பிரகாசம்**
ஸ்தாபகர் & தலைவர்,
இந்திய பெந்தோகொஸ்தே அசெம்பிளி
கோவை -12.

நம்முடைய பெருமதிப்பிற்குரிய Rev. N.J.ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் எழுதியுள்ள முக்தி வழி, சிவன் முதல் கிறிஸ்து வரை மற்றும் எல்லா வெளியீடுகளும் பதிப்பாசிரியர் D. விஜயகுமார் (ஈரோடு) மூலம் அவரது அனைத்து நூல்களும் வெளிவர வாழ்த்துகிறேன். இந்நூல்களுக்கு நான் ஏற்கனவே 5-4-1989ல் அணிந்துரை எழுதியுள்ளேன். அதையே இப்பொழுது மறு பதிப்பு செய்யும் நூல்களில் எனது அணிந்துரையை எழுதுவதற்கும் நான் அனுமதிக்கிறேன்.

இந்நூல்கள் அநேகரை ஏசுவுக்குள் வழி நடத்திட வாழ்த்துக்கிறேன்.

இப்படிக்கு
திருமறைப் பெரியார்

18.2.2006
கோர்வை - *12*

வாழ்த்துரை

அமரரும் 'முக்தி வழி' நூலாசிரியருமான என். ஜே. எஸ். சிவசுந்தரம் அந்நூலின் முன்னுரையிலேயே "நூற் பல கல்" என்னும் பண்டைய சொல்லினைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

சில நூல்களை ருசி பார்க்க வேண்டும். சில நூல்களை மெல்லாது விழுங்கிவிட வேண்டும். சில நூல்களை நன்கு சுவைத்து மென்று விழுங்கிச் செரிக்கச் செய்ய வேண்டும் என்பார் மேதை பேகன்.

இந்நூலின் முதற்பதிப்பு 35 ஆண்டுகளுக்கு முன்பு வெளியாயிற்று. முடிவில்லாப் பேரின்ப வாழ்விற்கு மெய்யான திறவுகோலாய் அமைந்துள்ள இந்நூல் ஆசிரியரின் பட்டறிவு, அனுபவம், மெய்ஞானம் ஆகியவைகளின் கோர்வையாகும்.

ஆண்டவரின் நீதி நெறிகள் உண்மையானவை, அவை முற்றிலும் நீதியானவை. அவை பொன்னினும், பசும் பொன்னினும் மேலாக விலைமிக்கவை. தேனினும், தேனடையினின்று சிந்தும் தெளிதேனினும் இனிமையானவை, என்ற தாவீதின் புகழ்பாவுக்கு ஏற்ப மனுக்குலத்துக்குப் புத்துயிர் அளிக்கும் நிறைவான திருச்சட்டத்தைப் பற்றிக் கொள்வதே ஒருவனை **முக்தி வழிக்குத் தடம் காட்டும்** என்பதை சமய ஆராய்ச்சியில் புதிய ஆதாரங்களைக் கொண்டு விளக்கும் இந்நூல் செம்மையுற அறிவுறுத்துகிறது.

புத்தகங்கள் மட்டும் இல்லையென்றால் கடவுள் இல்லை. நீதி சகிக்க முடியாததாக இருக்கும். இயற்கை விஞ்ஞானம் குத்திட்டு அசையாமல் நின்று விடும். தத்துவம் முடமாகிவிடும். எழுத்துக்கள் ஊமையாகிவிடும். சகலமும் இருண்டுவிடும் என்று முழங்குகிறார். **அறிஞர் பார்த்தலோனி** என்பவர்.

இன்றைய சூழலில், இதுபோன்ற நூல் மறுபதிப்பைக் காணவேண்டும் என்பதை நன்கு உணர்ந்த போதகர் டி. விஜயகுமார் இந்த அரிய முயற்சியை மேற்கொண்டுள்ளார். என் இனிய நண்பரும், .மிஷனரி மூவ்மெண்ட் ஆஃப் இந்தியா வின் நிறுவனருமான அவருக்கு இறைமகன் இயேசுவின் திருப் பெயரில் நல்வாழ்த்துக்கள்.

45 ஏ, டெலிகாம் சிட்டி,
செங்கோடம்பாளையம்,
திண்டல் (அ), ஈரோடு - 9.
அலைபேசி : 94438 41122

சந்திரா மனோகரன்
செயலாளர்,
கிறிஸ்தவ இலக்கியப் படைப்பாளர் இயக்கம்
ஆசிரியர் சிகரம், தன்முனைப்பு இதழ்

பதிப்பாசிரியர் உரை

Rev.D. விஜயகுமார்
ஈரோடு.

எனது ஆவிக்குரிய தகப்பனார் கணம் Rev. N.J. ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்கள் எழுதியுள்ள 'முக்திவழி' என்ற புத்தகம் 404 பக்கங்கள் அடங்கிய மிகச்சிறந்த மெய்ஞ்ஞானம் நிறைந்த சமய ஆய்வு புத்தகமாகும். இது ஆயகலைகள் அறுபத்து நான்கு கலைகளில் நான்காவது கலையாகிய வேதம் என்ற மெய்ஞ்ஞான கலையாகும். இந்நூலிற்கு **என்னுரை** எழுத எனக்கு வாய்ப்பு கொடுத்த தேவனுக்கே ! மகிமை செலுத்துகிறேன்.

நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெட்டுப் புராணங்களின் ஆராய்ச்சியில் தோன்றிய இச்சரித்திர ஆசிரியர் ஸ்டீபன் சிவசுந்தரம் அவர்களின் முக்திவழி நூலை வாசிக்கும் வாய்ப்புடைய அருமை வாசகர்கள் அனைவருக்கும் என் மனம் மலர்ந்த அன்பின் வாழ்த்துக்கள்.

அஞ்ஞான இருளை நீக்கி இந்த விஞ்ஞான உலகில் மெய்ஞ்ஞான ஒளி கொடுக்கும் இம்முக்தி வழி புத்தகம், வேத ஞான வித்தகரான ஸ்டீபன் சிவசுந்தரம் ஐயா, அவர்களின் மெய் பக்தி வேத ஆய்வின் பலன் ஆகும். எனவே, "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்ற உயர் ஞான வேதாகம பொன் மொழியின் படி இதில் கானும், குறை, பிழைகளை, மன்னித்து, மறந்து வைதீக கருத்துரைகளை மாத்திரம் கூர்ந்து கவனித்து வாசித்து உணர்ந்து, வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

மெய்பக்தி ஆராய்ச்சி இன்றி பரம்பரையாய் அஞ்ஞானம் என்னும் அவபக்தியை தங்கள் வணக்க வழிபாட்டிற்கு ஆதாரமாக்கி சுய இஷ்டமான ஆராதனையை மெய்ஞ்ஞானம் போல் புகழ்ந்து போற்றி நடித்துக் காட்டி வந்த சந்ததியில் தோன்றின இவர்,

சர்வ படைப்புகளுக்கும் கர்த்தராயிருக்கிற அநாதி தேவனின் இரக்கத்தால் மெய் பக்தியை கண்டடையும் கிருபை

பெற்று, அவரே பாவ உலகத்தை மீட்கும் பாவநிவாரணபலியாய் இயேசு கிறிஸ்து நாமத்தில் மனித அவதாரத்தில் வந்த ஒன்றான மெய்தேவன், இவரை விசுவாசித்து அவரே என்பாவங்களை மன்னித்து பரிசுத்தமாக்கி, நீதிமானாக்கின நிச்சயத்தைத் தந்தார். இந்த உண்மை சாட்சியின் அனுபவத்தை இச்சிறு ஆராய்ச்சி நூலில் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

பக்தியை போதிக்கும் பல மார்க்கங்கள் செயல்பட்டு வந்தாலும், பாவியை பரிசுத்தனாக்கி, தேவனோடு சமத்துவ உறவு கொள்ள வைத்து, நீதியில் நடத்தும் மார்க்கம், கிறிஸ்துவின் போதனை நிறைந்த ஜீவமார்க்கம் என்பதைக் கற்றுக் கொண்டார். 1918ல் சென்னையில் கெலட் உயர்நிலைப்பள்ளியில் சாது சுந்தர்சிங் கூட்டத்தில் அவர் மூலமாக ஏசுவை ஏற்றுக் கொண்டார்.

தேவனது ஆலோசனையின்படி இவரை ஆண்டவர் அழைத்த போது உலக வேலையை விட்டு முற்றுமாய் அவருக்கு தன்னை ஒப்புக் கொடுத்து இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்து 58 ஆண்டுகளாக அவரது மீட்பின் சாட்சியை சொல்லி வருகிறார். 1937ல் இந்தியாவிற்கு திரும்பி வந்து மதுரை, சென்னை குறிப்பாக விழுப்புரத்தில் 14 வருடங்களாக 14 கன்வென்ஷன்களை விசுவாசத்தில் நடத்தியது ஆச்சரியமான காரியமாகும். 1956 ஜனவரி 22ல் தரிசனத் தோடு கல்வராயன் மலைக்கு போனார். மலைஜாதி மக்கள், ஜாகீர்தார் மத்தியில் வல்லமையாக ஊழியத்தை அற்புத அடையாளங்களோடு, தேவன் செய்வித்தார். இவரது வாழ்க்கை வரலாற்றினை சிவன் முதல் கிறிஸ்துவரை என்ற நூலில் வாசித்து தெளிவாக, விளக்கமாக அறியலாம்.

1970 ஆம் ஆண்டு **முக்திவழி நூலை எழுதினார்**. 1971-ல் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது. அதன்பின்னர் 2ம் பதிப்பு 1989-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மீண்டும் **18** ஆண்டுகள் கழித்துத்தான் N.J.S. அவர்களால் உருவாக்கப்பட்ட **பதிப்பாசிரியர் Rev. D.** விஜயகுமார் அவர்கள் மூலம் **நவம்பர் 2007ல்** 3-ம் பதிப்பு வெளியிட தேவன் கிருபை செய்தார்.

கர்த்தர் அவரையும் அவரது குடும்பத்தையும் 1978ம்

வருடம் ஏப்ரல் மாதம் 23ம் தேதி சேலம் மாவட்டம் சங்ககிரியில் நிரந்தரமாக குடியிருக்கும்படிச் செய்தார். அங்கிருந்து பல ஊழியங்களைச் செய்து வந்தார். இந்தக் காலகட்டத்தில் நான் சங்ககிரியில் புனித ஜோசப் நர்சரி, ஆங்கிலப்பள்ளியை நடத்தி வந்தேன். அச்சமயத்தில் வேதஞானவித்தகர், வேத விற்பன்னர் அருமை ஐயா உடன் பழகும் வாய்ப்பைப் பெற்றேன். இது முழுமையான தேவனின் வழி நடத்துதலே ஆகும். எங்கள் பள்ளி ஆண்டு விழாவிற்கு ஐயா வந்திருந்து தலைமை தாங்கி நடத்தினார்கள். அது முதல் தினமும் அவரைச் சந்தித்து வேத இரகசியங்களை கேட்டு அறிந்தேன். அப்பொழுது அவரது ஞானமுள்ள, சாதுரியம் நிறைந்த உரையாடல்களை தெரிந்து கொண்டேன். அவர் மூலம் நான் ஆண்டவர் இயேசுவை நன்கு அறிந்து, ஏற்றுக் கொண்டு அவரிடம் வைகுந்தம் ஏரியில் ஞானஸ்நானம் எடுத்து அவரது திருச்சபையில் ஒருவனாக ஆவியின் அனுபவங்களோடு என்னை ஞானப்பால் கொடுத்து வளர்த்தினார். அச்சமயம் அவரது வேத அறிவையும், புராணங்களைப் பற்றி அவர் அறிந்த சமய ஞானத்தையும் கண்டு மெய்ச்சிலிர்த்துப் போனேன். அன்று தொடங்கிய தொடர்பே எனக்கும் மெய்ஞ்ஞான அறிவைக் கற்றுக் கொள்ள உதவிற்று. எனது ஆவிக்குரிய தகப்பனார் இவர்.

அவர் காட்டின சீலமிகுந்த வழியில் நான் நடக்க ஆரம்பித்தேன். அவரிடம் பல நல்ல அரிய, பெரிய காரியங்களைக் கற்றுக் கொண்டேன். இத்தகைய வேத ஞான வித்தகர் 1990ம் ஆண்டு தேவ இராஜ்ஜியம் சென்றார். அவரது தரிசனம் நிறைவேறும் வண்ணம் அவரது வெளியீடுகளை இந்திய மிஷனரி இயக்கம் மூலம் அச்சிட்டு விநியோகிக்கிறோம். தேவைப்படுவோர் எங்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். எங்கள் வெளியீடுகளை அட்டவணையில் காணலாம். அவர் காட்டின நல் வழியில் நடக்கின்றோம்.

இந்நூல் சிறப்பாக வெளிவர பதிப்பாசிரியர் பற்றி பாராட்டி, வாழ்த்துரை, அணிந்துரை வழங்கிய **திருமறைப் பெரியார் யோபு ஞானப்பிரகாசம்** ஐயா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய

பேராயர். **டாக்டர் சாமுவேல் ஜே.இன்னோசண்ட்,** பெத்தானி பெல்லோஷிப், ஈரோடு அவர்களுக்கும், மற்றும் வாழ்த்துரை வழங்கிய கிறிஸ்தவ இலக்கிய படைப்பாளர் இயக்க செயலாளர் **சகோ. சந்திராமனோகரன்** அவர்களுக்கும், பதிப்பாசிரியரைப் பற்றி விளக்கம் கொடுத்த **பிஷப் டாக்டர். எம். பிரகாஷ்,** (சிஷ்வா - ஐ.சி.ஐ. மற்றும் தமிழக சிறுபான்மை ஆணையத்தலைவர்) அவர்களுக்கும், அச்சாக்கம் செய்த சிவகாசி நியூ செண்பகம் ஆப்செட் உரிமையாளர் திரு. A.S. தர்மராஜன் அவர்களுக்கும், DTP செய்த சகோ. தி.சரவணன் ஈரோடு அவர்களுக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக்கொள் கிறேன்.

மெய்பக்தியைத் தேடும் மெய்ஞ்ஞான பசி தாகம் உள்ளோருக்கு முக்திவழி என்ற அரும் நூல் நமக்கு இம்மையில் இன்ப வாழ்வளித்து மறுமையில் நீடித்த பேரின்ப வாழ்விற்கு வழி நடத்தும், பொன் திறவு கோலாய் இருக்கும் என்பது திண்ணம்.

தேவன்தாமே! வாசகர்களை பக்தியில் பூரணப்படுத்தி முக்தியில் சேர்ப்பாராக!! ஆமென்.

பதிப்பாசிரியர் Rev. **D. விஜயகுமார்**
ஈரோடு.

சமர்ப்பணம்

எனது தாழ்வில் என்னை நினைத்தவரே உம்மை துதிக்கிறேன். உம்முடைய கிருபை என்றுமுள்ளது.

(சங். 136 : 23)

என்னை கர்த்தருடைய சித்தத்திற்காகவே ஈன்றெடுத்து இந்நாள் வரை என்னையும் என் குடும்பத்தையும் ஜெபத்திலே சுமந்து ஊக்கமும், ஆக்கமும், உற்சாகமும், **தாய்ப்பால் ஊட்டி** வளர்த்த என் அன்புத்தாய் **C. சுந்தரம்மாளுக்கும்** இவ்வுலக வாழ்வில் கற்றோனாய் சிறந்து விளங்கிட **அறிவுப்பால்** புகட்டிய என் **பாசமிகு தகப்பனார் G. தனராஜ்** அவர்களுக்கும் விஞ்ஞான உலகில் அஞ்ஞான இருள் நீக்கி, மெஞ்ஞான ஒளி கொடுத்து ஒவ்வொரு மனிதரின் வாழ்வையும் மாற்றிடக் கூடிய அரிய பெரும் சத்தியங்களை உள்ளடக்கிய இந்நூல் **"முக்தி வழி"** உலகில் எத்தனை மொழிகளில் நூலாக வெளியிட முடியுமோ அத்தனை மொழிகளிலும் நூலாக வெளியிட வேண்டும் என்ற வாஞ்சையை நிறைவேற்ற **களங்கமில்லாத ஞானப்பால்** கொடுத்து என்னை வளர்த்த ஆவிக்குரிய தகப்பன் **N.J.S. ஸ்டீபன்** அவர்களுக்கும்.

இந்த புத்தகத்தை சமர்ப்பணம் செய்கிறேன்.
நான் தேவனுடைய சித்தத்தைச் செய்வதினால்,
என் மூலம் ஆசீர்வதிக்கப்படுகின்ற மக்கள்
**"உன்னைப் பெற்ற கர்ப்பமும், நீ பாலுண்ட
தாயும் பாக்கியமுள்ளவர்கள்"** (லூக். *11 : 27*)
என்று சொல்லி உங்களைப் புகழட்டும்.

நன்றி

இப்புத்தகம் அச்சிட்டு வெளிவர உதவிய அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இப்புத்தகத்திற்காக ஜெபித்த, ஜெபித்துக் கொண்டிருக்கிற அனைத்து நல் உள்ளங்களுக்கும் **மிக்க நன்றி.**

18 ஆண்டுகள் கழித்து 3-ம் பதிப்பில் மீண்டும் இப்புத்தகம் வெளிவர ஆவலோடும், ஜெபத்தோடும் காத்திருக்கிற எனது அன்புக்குரிய மனைவி **பிரபாரமணி** அவர்கள் எனக்காக பட்ட எல்லா தியாகங்களுக்கும் நன்றியை மகிமையான எதிர்பார்ப்போடு சமர்ப்பிக்கிறேன். நீதி மொழிகள் 31ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட குணசாலியான ஸ்திரீயின் அநேக அம்சங்கள் உன்னிடம் இருப்பதைக் கண்டு வியப்படைகிறேன். இதனால் நான் தேசத்தின் மூப்பர்களோடு நியாய ஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் உன் நிமித்தம் பேர் பெற்றவனாயிருப் பேன்.

மேலும் எனது கிருபையை அறிந்து அந்தக் கிருபையிலே நான் சுயாதீனமாய் செயல்படுவதற்கு, எங்கள் மிஷனரி இயக்கத்தின் பொறுப்பை சுமந்து கொள்கிற எனது உடன் ஊழியர்களுக்கும், நண்பர்களுக்கும், உதவியாளர்களுக்கும், சபையார்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, இப்புத்தகம் வெளிவர எனக்கு எல்லாவித உதவிகளையும் செய்த அனைத்து நல் உள்ளங்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக !

நன்றியுடன்,
Rev. D. விஜயகுமார்,
ஈரோடு.

இந்திய மிஷனரி இயக்கத்தின் வெளியீடுகள்

முக்தி வழி ஆசிரியர் என். ஜே. எஸ். சிவசுந்தரம் (எ) போதகர் என்.ஜே.ஸ்டீபன் அவர்கள் எழுதிய எங்கள் வெளியீடுகளான புத்தகங்கள், கைப்பிரதிகள் வாங்கிபயன்பெறுங்கள். மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள்.

புத்தகங்கள்

1. முக்தி வழி
2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
3. கிறிஸ்துவின் மூல உபதேசம்
4. ஆவி உலகம்
5. ஜீவ தண்ணீர் உள்ள நதிகள்
6. சிவன் முதல் கிறிஸ்து வரை
7. நல்ல போர் சேவகர்கள்
8. கிறிஸ்துவின் சபை எது?

கைப்பிரதிகள்

1. நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை
2. நீ மோட்சத்திற்கா? நரகத்திற்கா?
3. எது நீர் வணங்கி வழிபடும் பக்தி
4. சூரியன் வணக்கம்
5. ஒன்றான மெய்தேவன்
6. உன் கிரயம் தெரியுமா?
7. உன் முன் பிறவி எது?
8. பஞ்சாட்சரமகிமை
9. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை
10. அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞானம்
11. நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்
12. மாசில்லாத சுத்தமான பக்தி
13. வஞ்சிக்கப்படாதிருங்கள், மோசம் போகாதிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள்.
14. கண் சொருகிப் போன குருடன்
15. இரட்சிப்பு .... இப்பொழுது அதிக சமீபமாயிருக்கிறது.

இன்னும் பல...

பொருளடக்கம்

1.	இந்துதேச வரலாறும் சிறப்பும்	....	7
2.	இந்துதேச சமய வரலாறு	....	12
3.	தேவர்கள் உற்பவ வரலாறு	....	16
4.	மும்மூர்த்திகள் நடபடிகள்	....	31
5.	பிர்ம்மாவின் வரலாறு	....	47
6.	விஷ்ணுவின் வரலாறு	....	59
7.	விஷ்ணுவின் தச அவதாரம்	....	64
8.	சிவனின் வரலாறு	....	88
9.	பஞ்ச கர்த்தாக்கள் வரலாறு	....	103
10.	முப்பத்துமுக்கோடி தேவர்கள்	....	104
11.	விநாயகர் உற்பவம்	....	108
12.	சுப்ரமணியர் உற்பவம்	....	112
13.	வயிரவன் உற்பவம்	....	117
14.	வீரபத்திரன்	....	118
15.	திக்குப் பாலகர்கள் வரலாறு	....	121

1. இந்திரன்
2. அக்கினி பகவான்

3. இயமன்

4. நிருதி

5. வருணன்

6. வாயு

7. குபேரன்

8. ஈசானன்

16. விசுவகர்மன் வரலாறு 131

17. மன்னார்சாமி வரலாறு 132

18. தருமதீலி வரலாறு 133

19. மன்மதன் வரலாறு 134

20. தேவிமார்கள் வரலாறு 136

1. பார்வதி வரலாறு

2. லட்சுமி வரலாறு

3. சரஸ்வதி வரலாறு

4. மாரியம்மன் வரலாறு

21. சாமானிய தேவர்கள் வரலாறு 141

1. இராட்சதர்

2. கந்தருவர் - கின்னரர்

3. வித்தியாதரர் - விஞ்சையர்

4. அப்சரர்

5. அஷ்டதசாகணங்கள்

22. சர்வத்தையும் தெய்வமாய் வணங்குதல்.... 143

23. பலவித வணக்க வழிபாடுகள் 146

1. பசு வணக்கம்
2. எருது வணக்கம்
3. அநுமார் வணக்கம்
4. நாய் வணக்கம்
5. பட்சி வணக்கம்
6. மச்ச வணக்கம்
7. விருச்ச வணக்கம்
8. கற்கள் வணக்கம்
9. நதி வணக்கம்
10. ஆயுத வணக்கம்
11. நவக்கிரக வணக்கம்
12. விக்கிரக வணக்கம்

24. உலக சிருஷ்டிப்பின் வரலாறு 162

25. ஐம்பத்தோர் அட்சர விளக்கம் 166

26. தொண்ணூற்றாறு தத்துவ விளக்கம் 169

27. ஞானநூல் மறைவு 175

28. சொற்குருக்கள் லட்சணம் 177

29. முனிவர்கள் 194

30. தமிழ்ச் சங்கத் தலைவர்கள் 196

31. கலைகள் அறுபத்து நான்கின்விளக்கம்... 198

32. வேதம் நான்கின் விளக்கம் 200

1. இருக்கு வேதச் சுருக்கம்

2. யசுர் வேதச் சுருக்கம்

3. ஸாம வேதச் சுருக்கம்

4. அதர்வண வேதச் சுருக்கம்

33. மதுபர்க்கம் வழங்கல் 218

34. அஸ்வமேதயாகம் 220

35. உபவேதங்கள் நான்கின் விளக்கம் 222

36. முப்பத்திரண்டு உப நிடதங்கள் 223

37. ஓம் என்னும் அட்சர விளக்கம் 232

38. சாஸ்திரங்கள் ஆறின் சுருக்கம் 233

39. அஷ்டாங்க யோகாப்பியாச பலன் 237

40. சோதிடம், சகுணம் முதலான சாஸ்திரம் 239

41. நல்ல நாள் - தீய நாள் பார்த்தல் 241

42. புராணம் பதினெட்டின் சுருக்க விளக்கம் 244

43. உப புராணம் பதினெட்டின் விளக்கம்.... 246

44. இந்து சமய விளக்கம் 250

45. சைவசமய விளக்கம் 253

1. சைவம் பதினாறின் சுருக்கம்

2. சைவத்தின் ஆறு உட்ச்சமயங்கள்

3. சிவ தத்துவம் ஐந்தின் விளக்கம்

4. சைவத்தின் ஆறு புறச் சமயங்கள்

5. சிவாகமம் இருபத்தெட்டின் விளக்கம்

6. சிவபூஜையியல் பின் விளக்கம்

7. சரியையின் விளக்கம்

8. சரியைமார்க்க பலன்

9. கிரியையின் விளக்கம்

10. யோகத்தின் விளக்கம்

11. ஞானத்தின் விளக்கம்

46. முக்தி பதவிகள் நான்கின் விளக்கம் 270

47. வைஷ்ணவ மதச் சுருக்கம் 273

48. ஜைன மதச் சுருக்கம் 275

49. பௌத்த மதச் சுருக்கம் 278

50. சார்வாக மதச் சுருக்கம் 281

51. உலகாயுத மதச் சுருக்கம் 282

52. மறு பிறப்பு 284

53. ஆலயம் தொழுதல் 290

54. எச்சில் தீட்டு 294

55. பலவகைத் தீட்டுகள் 297

56. கள்ளச் சைவம் 302

57. பலவித பொருத்தனைகள் பலிகள் 308

58. பஞ்சாட்சர விளக்கம் 316

59. ஜாதி உற்பவ வரலாறு 325

60. பராபரவஸ்துவின் லட்சணம் 343

61. சற்குருவின் லட்சணம் 366

62. மரித்தோர் உயிர்த்தெழுதல் 390

63. மரித்தோர் நியாயத் தீர்ப்பும் -
நரக ஆக்கினையும் 394

64. மோட்சம் என்னும் பேரின்ப முக்தி 397

1

இந்து தேச வரலாறும் சிறப்பும்

வடக்கிலே தாத்தாரி தேசத்தையும், கிழக்கிலே அசாம் தேசத்தையும், தெற்கிலே இந்துசமுத்திரத்தையும், மேற்கிலே பார்சு தேசத்தையும் எல்லைகளாகக் கொண்டு, 189 காதவழி நீளமும், 155 காதவழி அகலமுமாயிருக்கிற பூமி பரப்பிற்கு இந்துதேசமென்று பெயர். இந்து தேசத்திற்கு, மத்தியபாமா என்பதும், புண்யபூமி என்பதும் பூர்வீகப் பெயர்களாம்.

நீல ஆறு, அல்லது கறுத்த ஆறு என்று அருத்தங் கொள்ளும் இந்து நதியினாலே, இந்து தேசத்திற்கு ''இந்தியா'' என்று பெயர் உண்டாயிற்றாம். இந்துஸ்தான் என்பது, இந்துதேச மென்ற பார்சுமொழி. இவ்வித மாபெரும் சிறப்புற்ற தேசம் நம் இந்தியா.

இதன் வடக்கிலே கங்கை, பிரம்மபுத்திரி, யமுனை, சிந்து முதலான ஆறுகளும், தெற்கிலே நருமதை, கோதாவரி, கிருஷ்ண, காவேரி,

தாம்பிரபரணி, துங்கபத்திரை முதலான புண்ணிய நதிகள் என்று சொல்லப்படும் ஆறுகளும் உண்டு. இங்கே எண்ணற்ற தபயோகிகளான ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் இருக்கின்றனர்.

தேசப் பிரிவுகள் 56

அங்கம், அருணம், அவந்தி, அந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னாடம், காசம், காஷ்மீரம், காந்தாரம், காம்போகம், கிராடம், முருகு, குடகம், குந்தளம், குருகு: குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சுரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மாராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதற்பம் என்பனவாகும்.

தமிழ்நாட்டுப் பிரிவுகள் 13

செந்தமிழ்நாடு ஒன்று :- அதன் எல்லை, கருஊரின் கிழக்கு, மருவூரின் மேற்கு, வைகையாற்றின் தெற்கு, மருதயாற்றின் வடக்குமாகும்.

கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டு :- பாண்டி, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புள்நாடு ஆகியவைகள்.

பிரதான ஜாதிகளும் - தொழிலும் :- பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வர்ணத்தினர் உளர் இதல்லாது மக்களில் இழிகுலத்தோர் எனக்கருதும் பஞ்சமர் என்ற ஜாதியும் உண்டு.

அந்தணர் தொழில் ஆறு :- ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

சத்திரியர் (அரசர்) தொழில் ஆறு :- ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல் என்பவை.

வைசியர் தொழில், ஆறு :- ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல்.

சூத்திரர் தொழில் ஆறு :- முதல் மூவர்க்கு ஏவல் செய்யல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத் தொழில் செய்தல், காருகவினைகளாக்கல் ஆகும். குயிலுவத்தொழில் என்பது, தோற்கருவி களைக் கொட்டலும், துளைக்கருவிகளை ஊதலுமாம்.

காருக வினைகள் என்பது. பருத்தி நூலையும் பட்டு நூலையும் கொண்டு, ஆடை நெய்தலும், முடித்தலும், சுமத்தலுமாம். ஆனால் காலபேதத்ததாலும், இன்றைய நடைமுறையில் காணும் கல்வி, நாகரீக உச்சமேலீட்டாலும், சர்வ சாதியாரும், எல்லாவகைத் தொழில்களையும், ஏற்றத் தாழ்வென்னும் வித்தியாசமின்றிப் பழகி ஊதியப் பெருக்க அவசியத்தின் நோக்கமுடையோராய் அலுவல் புரிகின்றனர். பண்டைய பாரம்பரியக் கட்டுகள் அறுந்து எல்லாத்துறைகளிலும் சமத்துவ சுயாதீன நிலையடைந்து, "திரைகடலோடி திரவியம் தேடு," என்ற வருவாய் வாய்ப்பு ஒளி விசுகிறது.

பாஷைப் பிரிவுகள்

இந்துக்களின் பூர்வபாஷை சமஸ்கிரதமாகத் தெரிகிறது. அதிலிருந்து பிராகிரதம், பாலி, சிந்து என்ற மூன்று பாஷைகள் பிறந்தனவாம். பிராகிருதத்தில், ஜைனர்களின் சாஸ்திரங்களும், பாலி பாஷையில் பவுத்தர்கள் (புத்தர்) சாஸ்திரங்களும், சிந்து பாஷையில் அக்கினி பூசைக்காரராகிய பார்சியருடைய சாஸ்திரங்களும் எழுதப்பட்டிருக் கின்றன. கீழ்க்கண்டவை இப்போது வழங்கும் பாஷைகளில் பிரதான மானவைகள்.

இந்துஸ்தானி, பங்காளி, காஷ்மீர், தொகுரா, ஒச்சு, சிந்து, கச்சு, குஜராத்தி, கொங்காணி, பஞ்சாபி, பிக்காணி, மார்வார், சேய்ப்பூர், ஓடியப்பூர், மாளவா, கோசலா, மாதிலா, நேபால், ஒடிசா, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகும்.

நம் நாட்டில் ஒரு தேசத்திலும் காணக் கூடாத அளவில், பல பாஷைகள் பேசும் மக்கள் கூட்டம் குழுமிக் கிடக்கக் காண்பது புறநாட்டார் கவனத்தில் விசேஷித்த அதிசய அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. இதில் கண்ணோட்டமிட்ட புறநாட்டார் பலர், பாஷை பல, கற்று, தங்கள் நாட்டுத் தாய் மொழியில், பல இந்துசமய காவியங்களை உருவாக்கும் உச்சவரம்பெய்திவிட்டார்கள்.

ஜனத் தொகை

நம்நாட்டில் 1889ம் வருஷ ஜன சங்கியைப் படி 30 கோடி ஜனங்கள் வசித்திருக்கின்றனர். இவர்களில் 15 லட்சம் பேர் கிறிஸ்தவர்களும், 1கோடி பேர் முகமதியரும், மற்றவர்கள் அனைவரும், விக்ரக ஆராதனைக் காரருமாவர். 1889ம் வருஷ ஜன சங்கியையுடன் ஒத்திட்டுப் பார்த்தால், இந்தியாவிலிருந்து சுதந்தர நாடாய்ப்பிரிந்த பாகிஸ்தான் நீங்கலாக சுமார் 60 கோடி ஜனங்கள் உண்டு.

ஜனத்தொகை (Census) 2001

இந்திய ஜனத்தொகை	=	1,02,87,37,436 நூற்றி இரண்டு கோடியே என்பத்தேழு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நானூற்றி முப்பத்தாறு
கடந்த பத்து ஆண்டுகளில் அதிகரித்த மக்கள் தொகை	=	18 கோடி
அதிகரித்த சதவீதம்	=	21.54%
ஆண்களின் எண்ணிக்கை	=	53,22,23,090 ஐம்பத்தி மூன்று கோடியே இருபத்திரண்டு இலட்சத்து இருபத்தி மூன்னாயிரத்து தொண்ணுூறு
பெண்களின் எண்ணிக்கை	=	49,65,14,346 நாற்பத்தொன்பது கோடியே அறுபத்தைந்து இலட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு.
பெண்கள் - ஆண்கள் விகிதம்	=	933 பெண்கள் / 1000 ஆண்கள்
படித்தவர்கள்	=	64.8%
ஆண்கள்	=	75.5%
பெண்கள்	=	53.7%
படித்தவர்கள் அதிகம் உள்ள மாநிலம்	=	கேரளா (90.9%)
படித்தவர்கள் குறைவாக உள்ள மாநிலம்	=	பீகார் (47%)
இந்தியாவின் மெத்த மக்கள் தொகையின் அடர்த்தி	=	325 சதுர கிலோமீட்டர்.
அதிக மக்கள் தொகை உள்ள மாநிலம்	=	உத்திரபிரதேசம் 16,61,97.927
குறைவான மக்கள் தொகை உள்ள மாநிலம்	=	மிஸோராம்

மக்கள் தொகை முக்கிய மதம் வாரியாக

மதங்கள்	1991ல் மக்கள் தொகை மில்லியனில்	மொத்த மக்கள் தொகை சதவீகிதம்	2001-ல் மக்கள் தொகை மில்லியனின்	மொத்த மக்கள் தொகை சதவிகிதம்
1. இந்துக்கள்	672.6	82.41	827	80.5
2. முஸ்லிம்கள்	95.2	11.67	138	13.4
3. கிறிஸ்தவர்கள்	18.9	2.32	24	2.3
4. சீக்கியர்கள்	16.3	1.99	19	1.9
5. பௌத்தர்கள்	6.03	0.77	7.9	0.8
6. ஜைனர்கள்	3.4	0.41	4.2	0.4
7. பிற மதத்தினர்	3.5	0.43	6.6	0.6

மாபெரும் மக்கள் கூட்டமும் பாஷைப் பிரிவினையும் நிறைந்த தேசம் நம் இந்தியா. இவ்வகையில் மக்கள் தொகை எண்ணிக்கையில் ஏராளம் பெருகி கர்ப்பத்தடை வேலியையும் தாண்டிக் காட்சியளிப்பது. கர்த்தர் செயல் என்பதிற் சந்தேகமில்லை.

2

இந்து தேச சமய வரலாறு

அகரமுதலெழுத்தெல்லாம் - ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்தெல்லாம், அகரத்தை அடிப்படை யாகக் கொண்டிருப்பதுபோல், உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. என்று திருவள்ளுவர், தம், பொன் மொழியாகிய குரளில் கடவுளைப் பெரிதும் போற்றிப் புகழ்கிறார். இது சிருஷ்டி கர்தாவென்னும் பராபர வஸ்து, உலகத்தைப் படைத்துக், காத்து நடத்துகிறார் என்னும் சத்தியத்தை ''உள்ளங்கை நெல்லிக்கனி'', போல் உறுதிப் படுத்துகிறது.

இன்றைய நடப்பில், உலகத்தை உற்றுப்பார்த்தால், மக்கள் குலம், அஞ்ஞானத் தையும், விஞ்ஞானத்தையும், நாஸ்தீகத்தையுமே உலகத்திற்கு அடிப்படையாகக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. கால தோஷத்தால் மக்கள் மனதில், பரம் பொருளை அறிந்து பக்தி செய்யும்

ஆவிக்குரிய புத்தகங்களை உருவாக்கும்
எழுத்தாளர்கள் Rev. Dr. கிறிஸ்டோபர் IPA,
ஈரோடு. சிவகாசி, திருத்தங்கல்
பாஸ்டர் ஜான்ராஜ்
சீயோன் திருச்சபை தலைவர்
பாஸ்டர் சாம்சன் செல்வராஜ் ஈரோடு.
அவர்களுடன் Rev. D. விஜயகுமார்.

SIM ஸ்தாபனத்தின் தலைவர்
டாக்டர் ஹாவார்ட் பிராண்ட் (அமெரிக்கா)
மற்றும் எத்தியோப்பியா ஊழியர்கள்
உடன் Rev. D. விஜயகுமார் மற்றும்
நண்பர்கள் பால் எட்வின் மற்றும்
பாஸ்கர்ராஜ் குடும்பத்தினர்

Rev. Dr. ஜவஹர் சாமுவேல்
(அன்பின் ஊழியம், கோவை)
அவர்கள் ஒன்றானமெய்தேவன்
என்ற நூலை முதலில் ஈரோடு கூட்டத்தில்
பிரதிஷ்டை செய்து வெளியிட்டபோது
அருகில் Bro. S. ஜெயகுமார்
பெற்றுக்கொண்ட காட்சி.
இந்திய மிஷனரி ஊழியத்தின்
தலைவர் - நிறுவனர் Rev. D. விஜயகுமார்
உடனிருக்கும் காட்சி.

பதிப்பாசிரியர் Rev. D.விஜயகுமார் அவர்கள் முயற்சியால் இந்திய மிஷனரி இயக்கத்தின் மூலம் கிறிஸ்துவின் சபை எது? என்ற புத்தகத்தை முதன்முதலில் பேராயர் **டாக்டர் பிரகாஷ்** (சிஸ்வா) அவர்கள் வெளியிட **சகோதரி பத்மா முதலியார்** அவர்கள் (பாலைவன ஊழியம், சென்னை) பெற்றுக்கொள்கிறார்

சென்னை அற்புத ஊழியத்தின் தலைவர் சுவி டாக்டர் **ஜான் சாலமோன்** அவரது துணைவியார் **சாந்தி சாலமோன்** உடன் Rev. D. விஜயகுமார் குடும்பத்தினர்.

பாஸ்டர் **ஜோசப் பாலச்சந்திரன்** இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின் தலைவர் அவர்கள், மதுரை. ஈரோட்டில் இந்திய மிஷனரி இயக்கத்தின் சார்பில் நடந்த இயேசுவின் வல்லமை முகாமில் கலந்துகொண்டபோது அவருடன் Rev. D. விஜயகுமார் குடும்பத்தினர் மற்றும் **திரு.மனோகர் சௌந்திரராஜன்** குடும்பத்தினர் பங்கெடுத்த காட்சி.

Rev. D. விஜயகுமார் அவர்கள் 2003-ம் ஆண்டில் மலேசியாவில் ஊழியம் செய்தபோது மலேசியா தமிழ் எழுத்தாளர்களுடன் போதகர் ராஜ்குமார் எழுதிய அப்போஸ்தல சீர்திருத்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேராயர் மாணிக்கம் (Church of God), அவரது துணைவியார், பாஸ்டர் டேவிட் ஆகியோருடன் பங்கு பெற்ற காட்சி.



அகில இந்திய போதகர் மற்றும் சுவிசேஷகர்கள் நலகூட்டம், சென்னை அமைப்பாளர்கள் கலந்துகொள்ள Rev. D. விஜயகுமார் அவர்கள் ஊழியர் நலத்திட்ட செயல்பாடுகளை விளக்குதல்.

மலேசிய நாட்டின் தமிழ் எழுத்தாளர் சங்க ஊழியர்களுடன் Rev. D. விஜயகுமார் அவர்கள் கலந்து கொண்ட காட்சி

Rev. N.J.S. ஸ்டீபன் சிவசுந்தரம்
அவர்களுடன்
Rev. D. விஜயகுமார் அவர்கள்
1978-ம் ஆண்டு எடுத்த படம்.

இந்திய பெந்தகோஸ்தே அசெம்ளியின்
ஸ்தாபகர் மற்றும் தலைவருமான
யோபு ஞானப்பிரகாசம் ஐயா,
அவர்களுடன் இந்திய மிஷனரி
இயக்கத்தின் தலைவர்
Rev. D. விஜயகுமார், ஈரோடு அவர்கள்.



சி.எஸ்.ஐ. கொடுமுடி திருச்சபை விழாவில்
Rev. D. விஜயகுமார் அவர்கள்,
பேராயர் வில்லியம் மோசஸ்
அவர்களைப் பாராட்டி வாசித்த
வாழ்த்து மடலை வழங்கும் காட்சி.

மெஞ்ஞான அறிவு மங்கி, மறைந்து, அவபக்தி நிறைந்த அஞ்ஞானம் மலிந்து மலர்ந்து ஓங்கிவளர்ந்தும், இதனிடையில், சிருஷ்டி கர்த்தனை மறைத்து, மறுதலிக்கும், நாஸ்திகம், கொள்ளை நோயிலும் மிக்க வாதையுண்டாக்கும் கொடும் நோய் போல், வாயுவேக, மனோவேகத்திலும் தீவிர வேகமாய் தன் நாஸ்தீக நம்பிக்கைக்கு அடிப்படையாக வித்திட்டு, எங்கும், பரம்பி வளர்ந்து வருவதைக் காணலாம். இது உலக முடிவின் கடைசிகால சம்பவக் குறிப்பாகும். சந்தேகமேயில்லை.

அரூபியாகிய பராபர வஸ்துவை, மனமலர பக்தி செய்து ஆத்ம முக்தியடையும் அறநெறி விதி முறைகளை களங்க மற்ற நிலையில் விளக்கிக் காட்டும் ஓர் தனிப்பட்ட வேத காவிய நூலை இந்து சமயத்தில் காணக்கிடைக்கவில்லை. ஆன்ம வளர்ச்சியின் முன்னேற்றத்தை மிகவாய் விரும்பும் பக்தர்களுக்கு, இவ் வாய்ப்பற்று இருப்பது, வருந்தத்தகும் பெரும் நஷ்டமே.

இந்து தேசம் **சன்மதபக்தி**, நிறைந்ததென்பதிற் சிறிதேனும் சந்தேகமில்லை சன்மதம் என்பது, சர்வவிய, சாக்கேய, சார்வாக்கு, காப்பலிக்க, பவுத்த, வைஷ்ணவ என்னும் ஆறு தனிச் சமயங்களாகும். இதுவே, சைவம், வைஷ்ணவம் ஜைனம், பௌத்தம், சார்வாகம், உலகாயுதம் என்பதும்.

உலகாயிதம், நாஸ்தீக மதம் மற்ற ஐந்து மதங்களும், தனிப்பட்ட தேவர்களையும் வணக்க வழிபாடுகளையும், தன்னில் கொண்டது. ஒவ்வொன்றிற்கும் சடங்குப் பிரமாண விதிமுறைகளும் உண்டு. காலா காலங்களில் தோன்றிய ஞானிகள் பலர், இச்சமய நூல்களில், ஒன்றான பராபரவஸ்துவை ஆராதிக்கும் ஞானமார்க்க மெய்ப்பக்தி வழிபாடுகளுக்கு மாறாய், கண்ட தப்பறைகளை கண்டித்து, எச்சரித்து, பராபரவஸ்து ஒன்றென விசுவாசித்து, ஆராதித்து, பக்தி செய்யும்படி போதித்தனர். இவர்கள் சாயுச்சிய, தானமாய் பின் வைத்துப் போன பல ஞான நூல்கள், மெய்ப்பக்தி அறிவு ஆராட்சியாளர்களுக்கு, முக்தி வழி காட்டும் ஞான ஒளியாய் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. களங்கமற்ற மெய்ஞ்ஞான அறிவை ஆராய்ந்து அடையவிரும்புவோர், இவற்றைத் தேனிலும் மதுரமிக்க தெளி தேனாய் விரும்புவார்கள்.

இந்து சமயம் நாலுவேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைக்கியானம், தொண்ணூற்றாறு தத்துவங்களையும், பதினெட்டு புராணங்களையும், பக்தி வளர்ச்சிக்கு ஆதாரமாகக் கொண்டது. மேற்கூறிய ஐந்து சமயத்தையும் சார்ந்து வழிபடும் பக்தர்கள், மெய் பராபரவஸ்து

ஒன்றென விசுவாசித்து வணங்கும்படி கற்பிக்கப்படாமல், மனிதர்களையே தேவனுக்குச் சமத்துவமாய் மதித்து வணங்கக் கற்பிக்கப் பட்டிருக்கிறார்கள்.

திருஷ்டாந்த சுலோகம்

தேவாதீனம், ஜெகத்சர்வம், மந்ராதீனம் து தெய்வ தஹாதன் மந்திரம், பிராஹ்மணுதீனம், பிராஹ்மணோ மமதேவதஹா.

இதன் பொருள் :- உலகமெல்லாந் தெய்வத்துக்குள் அடங்கியது. அந்த தெய்வம் மந்திரத்துக்குள் அடங்கியது, அந்த மந்திரம் பிராமணருக்குள் அடங்கியது, பிராமணரோ நமக்குத் தேவர்கள், என்பதாம்.

பூர்வகாலமுதல் உத்தமசீல பக்தசிரோன் மணிகளாய் விளங்கிய ஞானிகளும், வேதாந்திகளும் தங்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியில், பராபர வஸ்துவாகிய பரம்பொருள், மாசற்ற தூய்மையும், ஆதியந்தமில்லாத, அழிவற்ற அநாதி நித்திய ஜீவன் என்றும், நாம் காணும் சகல தோற்றங்களின் சிருஷ்டி கர்த்தாவும், எறும்பு முதல் யானை வரையுள்ள சர்வ ஜீவன்களுக்கும், மனித சிருஷ்டிகளுக்கும், ஆதிகாரண சிருஷ்டி கர்த்தனும், பரம்பொருளும், ஒப்பற்ற சர்வ வல்லமையும் நிறைந்த தனி முதற்சுயம்பு ஒளியுமென்று ஆராய்ந்து அறிந்து, வெட்ட வெளியாக்கி விசேஷப்படுத்திப் போதித்திருக்க, இத்தனை மகத்துவமும், மகிமையுமுடைய பராபர வஸ்துவை எள்ளளவேனும், மக்கள் வணங்கி வழிபட விவரித்துக் காட்டாது மறைத்து, எண்ணற்ற பல தெய்வங்களை வணக்கத்திற்குரிய தேவர்களாக்கி வைத்து, இவர்களில், சிவன், பிரம்மா, விஷ்ணு வென்னும் மூவரும் மும்மூர்த்திகள் என்றும், வணக்கத்திற்குரிய தேவர்களில் இவர்களே பிரதானமான தேவர்கள் என்றும், தொழுது ஆராதித்து வருகிறார்கள். இம் மூவருடன் பின்னும் இருவரைச் சேர்த்து, பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன், ஆகிய ஐவரையும், பஞ்சகர்த்தாக்களென்றும், இத்தோடல்லாது, பின்னும் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் வணக்கத்திற்குரிய தேவர்கள் என்று வணங்கி வருகிறார்கள்.

இதுவுமல்லாமல், மரித்துப் போன மனிதர்கள், மிருகங்கள், பலவித பறவைகள், வானத்தில் காணும் ஜோதி நட்சத்திரங்கள், பலவகை கற்கள், ஆயுதங்கள், பஞ்சபூதங்களாகிய காற்று, இடி, மின்னல், நெருப்பு முதலானவைகளையும், தங்களுக்குக் கதியருளும் தெய்வமாக நம்பி, வணங்கி வருகிறார்கள். சுருக்கிச் சொன்னால், பக்தி வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள தேவர்கள் பூர்வோத்திர வரலாறும்; வேத புராணகாவிய நூல்களும், சாஸ்திரங்களும், தத்துவங்களும், குசமசக்கும், குழப்பங்களும், நிறைந்ததாய், ஒன்றை ஒன்று இழிவுபடுத்தும் விபரீதமான நடையிலும்,

கடுகளவேனும் நம்பிக்கைக்குரிய ஆதாரமற்றமுறையிலும், எழுதப்பட்டிருக் கிறது. பின்வரும் பிரிவுகளில், இவற்றை, உபகரண உதாரணங்களோடு ஆதாரங்காட்டி மிகத் தெளிவாய் விளக்கியிருப்பதை வாசித்து உணர்ந்து அறிந்து, பக்தி வளர்ச்சியின் பூரண நிலையையடைய, மெய்ப்பொருளைக் கண்டு பயன் படுத்திக் கொள்ளவும்.

ஒன்றான சிருஷ்டி கர்த்தாவாகிய பராபரவஸ்துவின் தெய்வீக மகத்துவங்களையும், வல்லமைகளையும், அவரின் விவரிக்கவொண்ணு தூய்மை நிறைந்த லட்சணங்களையும், அவர் மனித சிருஷ்டிகளை தமது தூய சாயலுக்கொப்பாய் பூரணப்படுத்தி, முக்தி பதவியளித்து, தம்மோடு நீடுழிவாழ வைத்துள்ள ஞானநெறி முறைகளையும், கூர்ந்து ஆராய்ந்து கிரகித்துப் பயன்படுத்தும் போது, மெய்ஞான ஒளி பக்தரின் உள்ளத்தை பேரின்ப சந்தோஷத்தால் நிரப்பி, பேரானந்தம், என்றென்றும் பொங்கிவழியும் நிலையில் மகிழ்விக்கும்.



3

தேவர்கள் உற்பவ வரலாறு

மும்மூர்த்திகள் உற்பவம்

இந்து சமய வணக்கத்துக்குரிய தேவர்களின் மகாபிரதான தேவர்களாய் மதித்து வணங்கிவரும் மும்மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரின் பிறப்பின் வரலாற்றை தனித்தனியே ஆராய்ச்சி செய்யுமுன், பொதுப் பட சுருக்கமாய் விவரித்துள்ளதை, பின்வரும் ஆதாரங்களோடு கருத்தாய் வாசித்து அறியவும்.

சத்தி, மும்மூர்த்திகளைப் பெற்ருள் என்பதற்கு விளக்கம்.

சித்தன் அந்தாதியில் - (கலித்துறை)

சிற்றிடை கொல்கி நுடங்குந்திரு வயிற்ருளொருத்தி

பெற்றிடவுந்தியிற் பிள்ளைகள் மூவரம்

மூவரையுங்

கற்றிடச் சொன்னத் தொழிலொரு மூன்றுவரிக் கடைக்காற்
செற்றிடச் சொன்னவள் பிள்ளைக்கவளம்மைத் தேவியுமே

பொருள் :- கர்த்தா, பத்தா இல்லாத சக்தி வயிற்றில், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்து, சிருஷ்டிக்க, இரட்சிக்க, சங்கரிக்க மூன்று தொழிலைக் கற்றுக் கொடுத்து, கடைசிப்பிள்ளையாகிய ருத்திரனுக்குப் பாரியாயிருந்தாள் என்பதாம். இது இப்படி இருக்க, இருசமயவிளக்கம், விஷ்ணு உபாசனைப்படலத்தில் உள்ளது.

விருத்தம்

(1)

அம்புவியுமாருதமும் புனலுந்தீயு
மாகாயப்பரப்பும் பேரண்டந்தானும்
மும்பரும்போய் மாண்டிறந்த காலந்தன்னில்
யோங்கு அரியொருவனுமேயுளனாய் நின்ருன்
பம்புயச்சீர் புனைந்திடுமங் அரியினாபிப்
பங்கயத்தினான் முகனுற்பவித்தானந்தச்
செம்பதுமத்தான் பெற்றான் சிவனையென்று
தெளிவாக வெகுவிருக்கிற்செப்புமன்னோ

(2)

நரருடனே சுரர்கணமு மண்டந்தானு
நடப்பனவு நிற்பனவுநசித்தநாளிற்
பிரமமெனும் பொருளொன்றேயிருந்ததந்தம்
பிர்மத்தின்றிருநாபிப் பெரும்பொற்பூவிற்
பரவுமறைப்பொருடெரியும் பிர்மாவந்துற்
பவித்தானப் பசும் பொற் பூ பதுமத்தான்பா
லரியவுருத்திர மூர்த்தி பிறந்தானென்பத்
தருவமாம் பிரமாணத்தறியலாமே.

முந்தின பாடல், ருக்வேதத்தில், பஞ்சபூதியமும், சித்தண்டமும், பேரண்டமும் தேவர்களு மாண்டு நிர்மூலமாய்ப் போன கற்பாந்திர முடிவில்; விஷ்ணு மாத்திரம் மீந்தவராயிருந்து, அவர் நாபிக்கமலமாகிய, தொப்புளிலே பிர்மா பிறந்து, சிவனைப் பெற்ருரென்று விளக்குகிறது. 2-ம் பாடல் அதர்வணவேதத்தில், நரர்களுந், தேவர்களுங், கணங்களுஞ், சராசர அண்டமெல்லாம் நாசஞ்செய்த நாளிலே பரப்பிரம்மம் என்று சொல்லப்பட்ட

பொருளானவர் மாத்திரம் மீந்திருந்தார். அந்தப் பரப்பிரம்மத்தின் திருநாபிப் பொற்பூவில் பிர்மாவும், அந்த பிர்மாவினிடத்தில் அரியும், ருத்திர மூர்த்தியாகிய சிவனும் பிறந்தார்கள் என்பதாம்.

பெரியபுராணம் - சுருக்க - ஸ்காந்த விருத்தம்

சுடரொளியுமதியும் விண்ணும்,
மண்ணுமே தோன்ருமுன்னம்,
மடமயிலுமையாள் பெற்ற
மா, லரவ, னெடியோன், தேவன்.

இரு சக்தி, திரியேகமூர்த்திகளையும் பெற்ருளென்று விளக்குகிறது. சர்வ படைப்பிற்கும் முன்னாக.

இரு சமய விளக்கம் சிவ உபாசனைப்படலம் 30-ம் பாட்டு

ஈதெல்லா ஞ்சிவாகமத்தில் விளம்பியதிவ்வா
ரேது சொற்கிசைந்திட வரனுபையவூருவினும்
வேதனுந்திறல் விஷ்ணுவும், பிறந்தது விரித்துப்
போதமேற்கொளவியம்பியதிலிங்கமா புராணம்

சிவசமய விளக்கப்படி விஷ்ணுவும், பிரம்மாவம் சிவன் சரீரத்திலிருந்து பிறந்தார்களென விளங்குகிறது.

இரு சமய விளக்கம், விஷ்ணு உபாசனைப்படலம் 174-ம் பாட்டு

பண்ணுசிவாகம நூலும் மேனை நூலும்
பண்பு பெறத் தெளிந்துரைக்கும் பதுமத்தோகாய்
இன்ன முமச்சுவாலத்தி லியம்புத்தன்மை
இசைப்பக்கே ளகிலத்தி னியற்சிட்டிக்கும்
முன்னிந்த நாரணன் றன் பாதிமெய்யின்
முக்கண்ணனைச் சிட்டித்தான் முறைதப்பாமற்
பின்னையிமை யோர்களையு முனிகளானப்
பேரையுமற் ரேரையுஞ்சீர் பெறச் சிட்டித்தான்.

விஷ்ணுசமய விளக்கபடி, விஷ்ணு தன் பாதி சரீரத்தில் சிவனையும், மற்ற பாதியிற் தேவர்களையும், முனிவர்களையும், மற்றவர்களையும், உண்டாக்கியதை விளக்குகிறது.

மற்ரெரு விருத்தம்

சிவன் சக்தி தன்னையீன்றுஞ்
சக்திதான் சிவத்தையீன்று
முவந்திரு வரும் புணர்ந்து
வுலகுயிரெல்லா மீண்டும்
பவன் பிர்மச்சாரியாவான்
பார்வதி கன்னியாவாழ்
தவம் புரி ஞானத் தோர்க்குத்
தன்மையாய்த் தெரியுமன்றே

முந்தின கவிதைகள் மும்மூர்த்திகளையும் சக்திபெற்றதாக விளக்கிற்று. இக்கவியில் முதலாவது சிவனிடத்தில் சக்தி பிறந்ததாயும், இரண்டாவது சிவன் சக்தியிடத்தில் பிறந்ததாயும், மூன்ருவது இருவரும் புணர்ந்து, உலகத்தில் காணும் எண்பத்திநானூருயிரம் ஜீவஜந்துக்களையெல்லாம் பலபல வேற்றுமையாகப் பெற்ருர்கள் என விளங்குகிறது. இப்படித்தாயும், பிள்ளையும், தகப்பனும், மகளும் வரிசை பாராமற் புருஷனும் பெண் சாதியுமாகக்கூடி, சகல ஜீவன்களையும் பெற்றபின், இருவரும் பிரமச்சாரியாகவும் கன்னிகையாகவும் இருப்பார்கள் என விளங்குகிறது.

வேதசாஸ்திரங்களிலுள்ள சுலோகம்

ஆதி சத்திமயம் பீஜம் - பீஜசச்திமயம் சிவஹ

சிவசக்திமயம்விஷ்டுனு - சர்வம் விஷ்ணுமயம் ஜகத்

இதன் பொருள் :- ஆதிசக்திக்குள் வித்து தோன்றி, வித்தில் நின்று சிவன் பிறந்து, சிவனிலிருந்து விஷ்ணு பிறந்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறையில் சிவன் விஷ்ணுவுக்கு தகப்பனானது உண்மையல்லவா? முந்தின கவியில் விஷ்ணு, சிவனுக்கு தகப்பனாய் காண்பது உண்மையல்லவா?

பின்னும் சிவபுராணங்களிலும், பாகவதம் ஒன்பதாஞ்சல்லாபத்திலும், விஷ்ணுவின் நாபிக் கமலத்திற் பொற்ருமரைப் புஷ்பமுளைத்து, அந்த புஷ்பத்திலே நாலுமுகப் பிர்மா பிறந்து, சகலத்தையும் உண்டாக்கியதாய் தெரிகிறது. முந்திய கவிதைகள் விளக்கியபடி, சிவன் விஷ்ணுவுக்குத் தகப்பனானால் இந்த வரிசையில், சிவன் பிர்மாவுக்குப் பாட்டனல்லவா?

வாலகாண்ட விருத்தம்

(1)

ஆகாயம், பார், பரம், பொன்னண்ட மூன்று
மதிற்பிறந்த அயனுடனேயயலாள் தோன்றி
மாகயமாலூடனே வுமையாள் தோன்றி
மாது வெள்ளைச் சிவனுடனே வாணி தோன்றி

(2)

பாகாய மொழிமாது அயனுக்கானாள்
பங்கயத்தாள் பணிபாவை மாலுக்கானாள்
சீகாஞ்சிப் புரத்துமையாள் சிவனுக்கானாள்
சிவனண்டம் படைத்ததருஞ் செய்கைதானே.

முன்சொன்ன கவியனைத்தும் வெவ்வேறு விளக்கமாயக் காணினும், இக்கவியின் விளக்கம் முற்றும் வேறு அர்த்தமுள்ளது, பரமாகிய, பராபரவஸ்து, ஆகாயம், பார், பரம், இம்மூன்று அண்டங்களையும் உண்டாக்கி, ஒன்றில் பிர்மாவும், லட்சுமியும், ஒருதாய் பிள்ளைகள் என்றும், 2-வதில், விஷ்ணுவும், பார்வதியம் ஒரு தாய் பிள்ளைகளென்றும்; 3-வது அண்டத்தில், சிவனுஞ், சரஸ்வதியும் ஒருதாய் பிள்ளைகளென்றும் அப்படியே சிவன் கூடப் பிறந்த சரஸ்வதி, பிர்மாவுக்கு பெண் சாதியாகவும், பிர்மாவோடுப் பிறந்த லட்சுமி விஷ்ணுவுக்குப் பெண்சாதியாகவும், விஷ்ணுவோடு கூடப் பிறந்த பார்வதி சிவனுக்கு பெண் சாதியாகவும், வரிசை தப்பாமற் கட்டிக் கொண்டார்களென்றுஞ் சொல்லியிருக்கிறது. இவையனைத்தும் கூர்ந்து வாசித்து, வாசகர்களே சீர்தூக்கி பார்ப்பீராக ! சீர் தூக்கிப் பார்த்தால், பல குருடர் போய் யானையைத் தடவிப் பார்த்து சொன்ன கதையைப் போல் இருக்கிறதல்லவா? இதில் எதை விட்டுவிடுவது எதைக் கடைப்பிடித்து பக்தி செய்வது என்று நீங்களே தீர்ப்பிடுங்கள்.

விருதாசலபுராணத்தில் விருத்தம்

பூருவந்தனில் நான்முகன் புனலை முன்படைத்து
வீரிவிந்துவை விட்டனன் முட்டையாய் மிதப்ப
மூரிமுட்டையைத் தகர்த்தனன் முக்கணன் தோன்றி
சோர்வில்லாதவைம் பூதமும் பிறந்ததக்கணனே

இதன் பொருள் :- ஆதியில் பிர்மா, தண்ணீரை முந்திச் சிருஷ்டித்து, தன் விந்தை அத்தண்ணீரில் விட்டான். அது முட்டையாகி மிதக்க, அம்முட்டையை தகர்க்க முக்கண்ணனாகிய சிவன் தோன்றி, அந்தச் சணமே

சி.எஸ்.ஐ. கோவை திருமண்டல
பேராயர் டாக்டர். M. துரை
அவர்களுக்கு திருச்சபை மலரினை
வழங்கும் காட்சி.
Rev. D. விஜயகுமார் மற்றும் நண்பர்கள்.

இயேசு அழைக்கிறார் ஊழியத்தின்
ஸ்தாபகர் டாக்டர். டி.ஜி.ஸ்.தினகரன்
அவர்களை Rev. D.விஜயகுமார் அவர்கள்
மாலையணிவித்து கௌரவிக்கிறார்.
இவர்களுடன் ஈரோடு மாவட்ட
பொறுப்பாளர் Bro. ஜார்ஜ் ஜவஹர்
அவர்கள் உடனிருக்கிறார்.

1991-ல் ஈரோடு பேரின்ப
பெருவிழாவினை Rev. D. விஜயகுமார்
அவர்கள் நடத்தியபோது அக்கூட்டத்தில்
மதுரை துதி சங்கர்
அவர்கள் சிறப்புரை வழங்கிய காட்சி.

ஈரோடு ஆவிக்குரிய கூட்டத்தினை
Rev. D. விஜயகுமார் ஒழுங்கு செய்து
நடத்தியபோது எடுத்தபடம்.
அமெரிக்கா SIM இயக்குனர்
ஹவார்ட் பிராண்ட் மற்றும் சி.ஐ.ஜி.எம்.
பேராயர் ராஜா செல்வராஜ் சத்தி
அவர்கள் உடனிருந்து சிறப்புரை ஆற்றினார்.
அவர்களை Rev. D. விஜயகுமார்
வரவேற்று பேசுகிறார்.

ஈரோடு பேரின்ப பெருவிழாவில்
கலந்துகொண்ட ஆயர் அன்பழகன்,
ஆயர் தர்மராஜ், திரு. ஜோசப் (Rly),
மற்றும் சுவி ஜான் சாலமோன் அவர்கள்,
அவரது துணைவியார் சாந்தி சாலமோன்
அவர்களை, Rev. D. விஜயகுமார்
வரவேற்கும் காட்சி.

Rev. D. விஜயகுமார் மூலம் ஒழுங்குசெய்து
இந்திய மிஷனரி இயக்கத்தின் சார்பில்
நடந்த கூட்டத்தில்
சுவி ஜான் ஜோசப் அவர்கள்
தேவசெய்தி வழங்க ஆயர் சாந்தகுமார்
உடனிருந்த காட்சி.

புதிய தரிசன முகாம் - 2005 ல் பிரதம பேராயர் Dr.M. பிரகாஷ் மற்றும் பேராசிரியர் சாம்ராஜ் சென்னை பேராயர் சாமுவேல் இன்னசென்ட் அவர்கள் முன்னிலையில் ஒருங்கிணைப்பாளர் Rev. D. விஜயகுமார் அவர்கள் ஐ சி ஐ பற்றி விளக்கும் காட்சி.

ஊழியராக Rev. D. விஜயகுமார் அபிஷேகம் பெறும் காட்சி. வழங்குபவர்கள் ஆப்பிரிக்கா-AFM தலைமை போதகர் மற்றும் பேராயர் Dr.M. பிரகாஷ் (சிஸ்வா)

அகில இந்திய கிறிஸ்தவ லீக் சார்பில் ஈரோட்டில் முப்பெரும் விழா நடந்தபோது, கலந்துகொண்ட பிரதான தேவ ஊழியர்கள்.

ஈரோடு சிஸ்வா முகாமில்
பதிப்பாசிரியர் Rev. D. விஜயகுமார்.

* உன் முன்பிறவி எது?
* மாசில்லாத சுத்தமான பக்தி?
* உன்கிரயம் தெரியுமா?
* நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை !

என்ற புத்தகங்களை
பேராயர் டாக்டர் M. பிரகாஷ் அவர்கள்
பிரதிஷ்டைசெய்து வெளியிட
I.T.O.ஏசய்யன் பெற்றுக்கொள்கிறார்

தமிழகத்தின் சிறந்த கவிஞர்
சுரதா அவர்களுடனும்,
கவிஞர் நாமக்கல்நாதன்
அவர்களுடனும் Rev. D. விஜயகுமார்
தம்பதியர் நடத்திய இலக்கிய
கூட்டத்தில் பங்குபெற்ற காட்சி.

இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின்
தலைவர் ஜோசப் பாலச்சந்திரன்
அவர்களுடன் பதிப்பாசிரியர்
Rev. D. விஜயகுமார் இயேசுவின்
வல்லமை முகாம் ஈரோட்டில்
நடந்தபோது எடுத்தபடம்.

குற்றமில்லாத பஞ்சபூதங்களும் உண்டாயிற்றென்பதாம். பின்னும் மச்சப்புராணத்தில், பிர்மாவில் இருந்து சிவன் தோன்றியதாய் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் சுலோகம் பின் வருமாறு.

சுலோகம்

குணேபியச் ஷோபியஹ, மாணேபியஹ
திற யோ தேவாஜிதத்திறே
ஏக மூர்த்தி திறயோபாகா
பிரம்மா விஷ்ணு மகேஷ்வரஹா

இதன் பொருள் :- ராசச, தாமச, சாத்வீக என்கிற மூன்று குணங்களின் பிரயத்தனத்தினாலே ஏகரூபமாயிருக்கிற திரிமூர்த்திகள் தோன்றினார்கள் என்பதே.

சுலோகம்

ததோசுரு ஜித்வாமதேவம். திருபுண்டிறவறதாரிணம்.

இதன் பொருள் : பிர்மம், திரிபுண்டாதாரி என்கிற வாம தேவனை உண்டாக்கினான் என்பது.

நாரதபுராணத்தில், நாரயணனுடைய வலது பக்கத்திலிருந்து பிர்மாவும், இடது பக்கம் விஷ்ணுவும், நடுவில் சிவனும் தோன்றியதாய் சொல்லப் பட்டிருக்கிறது. **லிங்கப்புராணத்தில்,** இவ்வுலக அண்டத்திலிருந்து சிவன் ரூபிகரிததுப் பின், தன் இடப்பக்கத்திலிருந்து விஷ்ணு லட்சுமியையும், வலப்பக்கத்திலிருந்து பிர்மா சரஸ்வதியையும் உண்டாக்கியதாய் சொல்லியிருக்கிறது. பின்னும் லிங்கப்புராணத்தில் தானே, சிருஷ்டிக்கிரியையை முடிக்க சக்தியின்றி, பிரம்மா கண்ணீர்விட, அக்கண்ணீர் ருத்திரன் என்னும் சிவன் தோன்றி, தானும் முடிக்க முடியாமல் வருந்துவதை தகப்பனாகிய பிர்மா கண்டு, தான் துணை செய்ததாய் சொல்லியிருக்கிறது இந்த சந்தர்ப்பத்தில், ருத்திரனுக்கு பிரம்மா, தகப்பன் அல்லவா? வாசகரே! யோசித்துத் தீர்ப்பிடுங்கள். பின்னும் **மார்க்கண்ட புராணத்தில்,** மகாலட்சுமியிலிருந்து பிர்மாவும், மகாகாளியிலிருந்து சிவனும், மகாசரஸ்வதியிலிருந்து விஷ்ணுவுந் தோன்றியதாய் சொல்லியிருக்கிறது. **வராகபுராணத்தில்** திரிமூர்த்திகளிலிருந்து சக்தி தோன்றி, அவள் மூன்று பிரிவுகளாகி காளி, சரஸ்வதி, லட்சுமி உண்டானார்கள் என்று சொல்லியிருக்கிறது. இவ்வித பல பேதா பேதங்களும், குசமசக்கம், குழப்பங்களும், நிறைந்த புராணகாவியங்கள், மெய்ப்பராபரவஸ்துநிலையை, அதைப் போற்றி நிற்கும் பக்தருக்கு

காட்டுவதெவ்விதம், என்பதை வாசகர்கள் தீர்ப்பிடுங்கள்.

ஓர் கிரந்த சுலோகம்

சர்வவியாபீச பகவான் தஸ்மாத் ஸர்வ கத சிவஹா

பொருள் :- அந்த பகவானெனப்பட்ட சிவன் சர்வ வியாபியாகி, எங்கும் நிறைந்திருக்கிறன் என்பது. இது மெய்யானால், இதற்கு மாருய், பாகவதத்தில் தானே சொல்லிய சுலோகமாவது.

பவ விறததனா யேச்சா, ஏச்சதாம்ச மநோவிரதஹா
பாஷாண்டினஹத்தே பவந்த்து, சஸ்ச்சாஸத்திறபரி
பந்தனஹா
முமுஷ்சுவோ கோரரூப்பா, நத்வாபூத்தபதிர்ன தாஹா
நாராயண ஹாகளாசாந்த்தா, பஜந்திஹியனா சூயவஹா

இதன் பொருள் :- சிவனைப் பூசித்து, அவன் நெறியைப் பின்பற்றுவோர் எவரோ அவர்கள் பதிதரென்றும் மெய் சாஸ்திரத்திற்குச் சத்துருக்கள் என்றும் சொல்லுவது நியாயமே. மேலும் முடிவில் முக்தி பதவியை விரும்புகிறவர்கள் பூதங்களின் பயங்கரமான அநித்திய தேவர்களை வெறுத்துத் தள்ளி, நாராயணனைத் தியானித்து நிர்மலமான மனதோடும், பொருமையின்றி அவனை ஆராதிப்பார்கள் என்பதே. இதில் சிவனை எவ்வளவாய் இழிவுப்படுத்தியிருக்கிறது என்று பாருங்கள்!

பதுமபுராண சுலோகம்

விஷ்ணுதர்சன மாத்திரேண சிவத்து ரேஹபிரஜாயதே
சிவத்துரேஹ நசந்தேஹோ, நரக்கம் யாந்த்தி தாருணம்
தஸ்மான் விஷ்ணு நாமா பிறவக்த்தவியங்க்கதாச்னா

இதன் பொருள் :- விஷ்ணுவை தரிசித்த மாத்திரத்தில் சிவன் உக்கிரங்கொள்வான். அவ்வுக்கிரத்தால் மிகவும் பயங்கரமான நரகத்தில் நாம் விழுவோம் என்பது நிச்சயம். அதனால் விஷ்ணுவின் பெயரை ஒரு பொழுதும் உச்சரிக்கலாகாதென்பதே. இதில் சிவன் புகழப்பட்டும் விஷ்ணு இகழப் பட்டும் இல்லையோ? இதே புராணத்தில் மற்ரெரு சுலோகம்.

யஸ்து நாராயணம் தேவம் பிர்மஹருத்ராதி தேவத் தாஹா
சமமன் வைற்னினோ ஷேத்தாசபா ஷாண்டிப வேத்பதா
திரிமந்திர பகு மோக்தனோ பிரம்ஹரைன யேப்பிய வைஷ்ணவாஹா
நஷபஸ்ட வியானவக்தவியா நதுருஷபுட்ட வியாக தாச்சனா

இதன் பொருள் :- எவன் நாரயணனை, பிர்மா, ருத்ரன் முதலான

தேவர்களுக்கு சமமென்று சொல்லுவானோ, அவன் என்றும் பதிதனாய் இருப்பானாக. அன்றியும் விஷ்ணு பக்தர்களான பிராமணர்களை ஒருக்காலுந் தொடவும், பேசவும், கண்களால் பார்க்கவும் கூடாது. மேலும் வேதத்திலே சிவன் மகாதேவரென்றும் நாமத்தாற் சொல்லப்பட்டிருந்தும், சிவனை நீக்கி, விஷ்ணுவை போற்றிப் புகழ்வது நியாயம் என்பதே.

இதில் ஒருபுறம் விஷ்ணுவும், பக்தரும் இகழப்பட்டும், மறுபுறம் விஷ்ணு புகழப்பட்டுமிருப்பதைப் பார்க்கலாம்.

புராணத்தில் மற்றொரு சுலோகம்

ஐனிய தேவம் பரத்வேனா பதந்த்திகிஞானமோகிதாஹா
நாராயண ஜெகந்நாதா, தேவபஷாண்டி நஷ்முறுத்தாஹா

இதன் பொருள் :- ஜகநாதனாகிய நாராயணனைப் பார்க்கிலும் வேறொரு முக்கியமான தெய்வம் உண்டென்போர் அறிவீனரும் வஞ்சகருமல்லாமல் அவர்களைப் பதிதர் என்று அழைக்கவும் பாத்திரர்கள் என்பதே.

இதில் விஷ்ணு பூரணமாய் புகழப்பட்டிருப்பதைப் பார்க்கவும், மற்றொரு பங்கில் உள்ள சுலோகமாவது,

''ரமதேவோ, மகாதேவோ, விக்ஞ்ஞேயஸ்து மஹேஸ்
வரஹா, நதப்மாத்சரமஞ்சித், பதம்சமதிமியத்தே''

இதன் பொருள் :- மகாதேவனெனப்பட்ட வஸ்துவே மஹேஸ்வர னென்றும் அறியப்படவேண்டும். ஏனெனில் இவர்க்கும் மேலான வஸ்து ஒன்றுமில்லை என்பதாம்.

இதில் சிவன் புகழப்பட்டிருப்பது தெளிவல்லவா? இதற்கு விரோதமாய் உள்ள மற்றொரு சுலோகத்தையும் ஒத்திட்டுப் பார்க்கவும்.

''வாசுதேவம் பரித்தியக்ஞிய, ஏன்னிய தேவமுபாசத்தே
துருஷித்தோ ஜாஹைா வீத்திறே கூப்பங்குளத்திதுற்மதிஹி'',

இதன் பொருள் :- வாசுதேவனெனப்பட்ட விஷ்ணுவை விட்டுவிட்டு, அந்நிய தேவனை வணங்குகிறவன், தாகமடைந்த மதியீனனாவான். அவன் கங்கை நதிக்கரைமேல் உட்கார்ந்து கிணற்றை வெட்டுவோனுக் கொப்பாவான் என்பதாம்.

இதில் விஷ்ணு புகழப்பட்டிருப்பது தெளிவல்லவா? இவ்விதம், பக்தி வளர்ச்சிக்கு ஞானச்சுடர் விளக்காய் பிரகாசித்து மெய்வழி காட்ட வேண்டிய தத்துவங்கள், வேதங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் யாவும்

வணக்கத்திற்குரிய தேவர்களான விஷ்ணுவையும், சிவனையும் இகழ்ந்தும், புகழ்ந்தும்; புகழ்ந்தும், இகழ்ந்தும் ஒன்றுக் கொன்று ஒவ்வாத முறையில் பக்தர்கள் ம்னதில் மாறுபாடான விரோதங்கொள்ளும் உணர்ச்சியை உருவாக்கும் முறையில் எழுதப்பட்டிருப்பதால், எதை உண்மையென நம்பி கடைப்பிடித்து, பக்தி செய்வதென்று தெரியவில்லையே! தேவர்கள் ஜனனத்தைப் பற்றி, தத்துவத்தில் சொல்லியிருப்பதைக் கீழே காண்கவும் தத்துவம் என்பது வேதம் என பொருள்படும்.

முந்தின தோற்றத்திலே, பராபரமாகிய பரமேஸ்வரன் தராதலம் படைக்கத் தாம் நினைத்தருளிப் பராபரத்திற் பரந்தோன்றி, பரத்திற் சிவன்தோன்றி, சிவனிற் சக்திதோன்றி, சக்தியில் நாதந்தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்துவில் சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில் மயேசுரன் தோன்றி, மயேசுரனின் ருத்திரன் தோன்றி, ருத்திரனில் விஷ்ணு தோன்றி, விஷ்ணுவில் பிர்மா தோன்றி, பிர்மாவில் ஆகாயந்தோன்றி, ஆகாயத்தில் வாயு தோன்றி, வாயுவில் அக்கினி தோன்றி, அக்கினியில் அப்பு தோன்றி, அப்புவில் பிரிதிவு தோன்றி, பிரிதிவுவில் அன்னந்தோன்றி, அன்னத்தில், நர, மிருக, பட்சி, மட்ச, தாபரசங்கம் அனைத்தும் தோன்றிற்றென்றவாறு.

மேற்காட்டியுள்ள தத்துவம், சிருஷ்டிப்பின் மகத்துவங்களை சொன்ன வகையில் அது முற்றும் தப்பென்பதைக் காட்டும் மற்றொரு சுலோகத்தைக் கீழே காண்கவும். இதன் மூலம் தேவர்கள், முதல் மற்றும் காணப்படும் சர்வ படைப்புகளும், மற்றுமுள்ள ஜீவ கோடிகளும் அவ்விதம் சிருஷ்டிக்கப்படவில்லை எனதோன்றுகிறது.

சுலோகம்

சீர்பராபரத்திற், பரமுதற்றேன்றி, செய்பரத்திற் சிவன் தோன்றி
சிவத்தினிற் சத்தி, சத்தியிநாதஞ், சேர்ந்திடு நாதத்தில் விந்துஞ்
சார்து ராவிந்து, வினிற்சதாசிவனுஞ் சதாசிவத்தான் மயேசுரனுந்
தருமயேசனிருத்திரனு ருத்திரனிற் சாற்று விஷ்ணுவும் விஷ்ணுவிற்
பார்பராபரி பிர்மாவும், பிர்மாவிற் பகருமாகாயமும் தனிற்
பறந்து வாய்வும் வாயுவிற்றேவும், பத்திய தேய்விலக்கினியும்
மார்சுடராக்கினியி, லப்புமப்புவினி லடர் பிரிதிவும் பிரதிவியி
லன்னமு, நரரு, மிருகபட்சிகளுமனைத்து மாச்சென்ற பேதைகளை

சிவபுராணமாகிய – அருணசலபுராணம் திருமலைச் சுருக்கம்

6,7,8-ம் பாடல்

பரசிவன் பராசக்தி பாற்குடிலையின் பாங்காய்

விரவிடும் பரதத்துவமுடிவிலே விரிந்த
மருவுமை வரு மொடுங்கிய முறையிலே வந்தா
ரரிமகன் படைத்திடு மதுநினைந்தன னகத்தில்

பொருள் :- அப்படி சகல பூதமும் ஒடுக்குவித்த பரசிவந்தானே தானாய் நின்றபின், எப்போதும் போல் இப்பிரபஞ்சம் உண்டாக்கப் படவேண்டு மென்று நினைத்ததும் பராசக்தி தோன்றியது. அந்த பராசக்தியினி டமாய் நாதாந்தத் தத்துவங்கள் தோன்ற, அந்த தத்துவத்திடம், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி தோன்ற, அந்த ஞானச்சக்தியிடம் சதாசிவமும், சதாசிவத்தில் மயேசுரன் தோன்ற, மயேசுரத்தில் ருத்திரனும், ருத்திரனில் விஷ்ணு தோன்ற விஷ்ணுவில் பிர்மா தோன்ற, பிர்மா இந்த ஜெகமெல்லாம் உண்டாக்கவேண்டுமென்று மனதில் நினைத்தனன் என்பதாம்.

மரிசியங்கிராப்புலத்தியன் புல்கநான்மறையோன்
கிரிதுவத்தரிசன பதியெழு வருங்கிளைத்தா
ருரியதக்கனுவலப்பதப் பெருவிரலுதித்தான்
பிருகு மார்பினு மாத்திரைமுலையினும் பிறந்தார்.

இதன் பொருள் :- அந்த பிர்மாவானவன் சகல லோகமும் உண்டாக்க வேண்டுமென நினைத்தச்சணமே மரிசிரிஷி அங்கிராச ரிஷி, புலத்திய ரிஷி, புல்கரிஷி, நான்மறையாகிய வேத கோஷ்டமுடைய கிருத ரிஷி,. அத்திரிபகவான் சனபதியென்னும் சத்தரிஷிகளும், பிர்மாவினிடமாய்ப் பிறந்தார்கள். உரிமையாகிய தக்கனும் வலப்பாதப் பெருவிரலிற் பிறந்தான். பின் பிருகு ரிஷி மார்பில் பிறந்தான். தரும தேவதைகள் மார்பின் முலையில் பிறந்தார்கள் என்பதாம்.

உன்னுமைந்தரின் மரிசிபாற்காசி பனுதித்தான்
பன்னுதக்கனுமைம்பது பெண்களைப் பயந்தா
னன்ன காசி பனவன்பதின் மூவரையணைந்தான்
முன்னலாகிய வதிதிபாலிமையவர் முளைத்தார்.

பொருள் :- அப்படி நினைத்த மாத்திரத்தில், பிர்மாவுக்குப் பிறந்த மரிசி ரிஷியிடம் காசிபரிஷி பிறந்தான். முன் தோன்றிய தக்கனிடம் ஐம்பது. பெண்கள் பிறந்தார்கள். அவர்களிற் பதின்மூன்று பெண்களை காசிப ரிஷி சேர்ந்தான். அதில் மூத்தவளாகிய அதிதியினிடமாய் முப்பத்துமுக்கோடி தேவர்களும் பிறந்தார்கள் என்பது.

ஞானவெட்டி 452-ம் பாட்டு

முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்

முதலான இந்திரர் நாரதர் கின்னரர்
உற்பத்தியாகவும் நாதவிந்தாலே,
யுதித்தவரெல்லா மாதித்தன் குலங்காணும்
அம்புவி யாவுமனேக வுயிர்களும்,
அண்டபிண்ட மதிலாச் சுந்தனேகமுந்,
தப்பில்லையே பறையநம்பிக்கை தன்குலஞ்,
சாம்ப சதாசிவன் தந்தை காணுண்டையே.

பொருள் :- முப்பத்து முக்கோடி தேவர், முனிவர், இந்திரர், நாரதர் முதலானோரும் உலகப் பிரஜைகள் யாவரும் நாதவிந்தாகிய ஆண் பெண் இருவரால் உற்பத்தியாயினர். அதில் ஞானவெட்டியாகிய தாமும் சிலகுலத்திற் பிறந்தவர் என்று சொல்வதாகும். பரகதியளிக்கும் பரஞ்சுடராகிய பராபரவஸ்து ஒன்றென மனதிலுணர்ந்து. அரூபியான அவரின் அருள்பெற தன்னையே காணிக்கையாய் அர்ப்பணித்து மனப்பூசை செய்து தீமைக்கு விலகி நீதியைக் கடைப்பிடித்து வழி நடப்பதல்லாது வேறென்னத்தைக் கொண்டு அவரை திருப்தி செய்ய முடியும்? வெறென்னத்தை மனிதன் கையில் எதிர்பார்க்கிறார். கேட்கிறார் என்பதைக் கவனியுங்கள். பலர் இதைக் கருதாமல், பசு பல வர்ணமாயினும் பால் நிறம் ஒன்றல்லவோ? ஒரு ஊருக்குப் பல வழியாய்ப் போய்ச் சேரவொண்ணுதோ? பணதி பலவாயினும் பொன்னொன்றல்லவோ? பராபரவஸ்து ஒருவராயிருந்தாலும், அவருக்கு நானாவிதப் பெயரிட்டு அவரை வணங்குவதால் தோஷமில்லை என்றும், பல பெயரால் ஜீவனில்லா சுரூபங்களை உண்டாக்கி, இவைகளுக்குச் செய்யும் ஆராதனை பூசையெல்லாம், பராபரவஸ்துவுக்கே யாகும் என்று நினைப்பது, எத்தனை மடமையும், அறியாமையும் என்பதை அறிவாரில்லையே!

பசு பல பல வர்ணமாயினும், பால் எல்லாம் வெண்மை என்று ஒத்துக் கொள்வது சரி, ஆனால், நாய், நரி, பன்றி, யானை, பூனைப்பாலும் வெண்மையென்றும் பசுவின் பாலுக்கொப்பாய் ஏற்றுக் கொள்ளலாமா? கூடாதே இவ்வித உதாரணத்தால் முன் சொன்னபடி ஐந்து சமயங்களும், அதன் சுரூப விக்ரகங்களும், ஆராதனைகளும், அந்த ஒரே கடவுளுக்கேயாகும் என்பது உண்மையாகாது. அப்படியானால், கள்ளிப்பாலும், வெள்ளை நிறமே. ஆனால், கள்ளிப் பால் பசுவின் பால் ஆகுமா? ஆகாதே. பின்னை எப்படி ஜீவனில்லா ஊமை விக்கிரங்களை ஜீவனுள்ள மெய்ப் பராபரவஸ்துவுக்கு ஒப்பிடலாம், இதன் உண்மையை

விளக்கும் விருத்தம்.

(பேரின்பமணி மாலையில் - விருத்தம்)

பல வழி போ யோரூரிற் கூடினாலும்
பலன் தருவோனொருவனல்லாற் பலபேருண்டோ
உலகோரே யொவ்வொருத்தன் பதம் வெவ்வேறென்
றுரைப்பதென்ன மதியிலா ருரைத்தாற்போல
சிலபேர்கள் சிவபதமே விரும்பு மற்றோர்
சிவனேது வைகுண்டத் திருப்பதாமென்
யிலவுதனை காத்த கிள்ளை யதனைப் போலே
யெண்ணி யெண்ணி யிருந்து நரகெய்துவாரே

விவேக சிந்தாமணி 37-ம் பாட்டு

கானலை நீரென்றெண்ணிக் கடுவெளிதிரியுமான்போல்
வானுறு மிலவுகாத்த மதமியிலாக் கிள்ளை போல
தேனினைக் கண்டு தும்பிதியங்கிய தன்மை போல
நானுனை யரசென்றெண்ணி நாளவம் போக்கினேனே

பஞ்சாட்சர பதிபசுபாச விளக்கம் 5-ம் பாட்டு

கானலை நீரென்றெண்ணிக் காதலித்திடுவார் போல
ஊனுடனானென்றுண்ணி யுணர்வினைப் பிரிந்து நின்றேன்
கானலை நீரன்றென்று கைவிடுவார்கள் போல
ஊனுடனானன்றென்று வுணர்வோடு முறங்கினேனே

முன்னுள்ள பாடல்களின் கருத்து, மனிதர் ஞான வெளிச்சமில்லாமை யால், தேவனல்லாதவைகளை தேவனாய் நம்பி, தங்கள் நாட்களை அவமாக்கி கடைசியில் நரக ஆக்கினைக்கு, ஆளாகிறதை விளக்குகிறது. இவ்வித பொய் நம்பிக்கை, கானலை, தண்ணீரென நம்பி, ஓடி கண்டடையாமல் களைத்து இறந்த மான்களுக்கும், இலவு மரம் காத்த கிளி, கடைசியில் ஏமாந்து ஏங்கிப்பறந்து ஓடிவிட்டதற்கும் ஒப்பாய் முடியுமென்பது நிச்சயம்.

பேரின்ப மணி மாலை - விருத்தம்

பொன்னொன்று, பணதி பலபல வென்போரே
பொதுமகளைக் குலமகளுக்கொப்பிடவும் போமோ
மன்னவர்களிருக்கும் மரசாட்சிதன்னில்
மதியில்லார் தம்மை வைத்து வணங்குவார் போல்

தன்னகரில்லாத சருவேசன் தன்னைத்
தான் வணங்கா தெரிநரகிற் றவிக்கும் பேயை
யுன்னி யுன்னி பல மதத்திலுதித்து நிற்போ
னொருவனென்றே நரகில் விழுந்துழலுவாரே

பொருள் :- பொன் ஒன்றேயானாலும் அதனால் செய்யும் பலவித ஆபரணங்களின் மாத்துக்களுஞ் சரியாயிருக்க வேண்டாமா? பொன்னைப் போலொத்த நிறமுள்ள பித்தளையுஞ் சரியாமோ? வேசியும் பத்தினியுஞ் சரிதானோ? மகா ஞானம் நிறைந்த ராஜன் அமரும் சிம்மாதனத்தில் பித்தளையேற்றிவைக்கலாமோ? என்பது. ஆகாதென்றால் மெய்ப்பராபர வஸ்துவுக்குச் சமமாக்கி ஜீவனில்லா விக்கிரக சுருபங்களையும் வணங்கலாமோ? நீரே தீர்ப்பிடும். இது வரையில் விளக்கிக் காட்டிய சக்தியாவது, திரிமூர்த்திகள், பஞ்சகர்த்தாக்கள், முப்பது முக்கோடி தேவர்களாவது, பிதுர் தேவதைகள், கிராமதேவதைகளாவது, பிசாசுகளாவது, மற்றுள்ள மிருகம், பட்சி, மட்சம் மனித இனங்களாவது, பிரிதிவு, அப்பு, தேயு, வாயு மற்றுள்ள தாபரவிருட்சயினங்களாவது, சந்திர, சூரிய, நட்சத்திரங்களாவது, தானே தானாய் நின்று, தாங்கி சகலத்தையும், இயங்கவைக்கும், ஒன்றுன பராபர வஸ்துவுக்கு ஒப்பாயிருக்க முடியுமோ? அது ஒருக்காலும் முடியாதே! இதை திருஷ்டாந்தப்படுத்தும் கவி.

சிவ வாக்கியர்

தான தான தான தான தான தான தானப்பர்
தான தான தான தான தான தான தானவர்
தான தான தான தான தான தான தற்பரர்
த்தான தான தான தான தான தான தம்பிரான்

இப்படித் தானே தானாய், அநாதிச் சுயம்பு ஒளியாய், படைத்தல், காத்தல், அழித்தலாகிய, முக்கிய கிரியைகளுக்கும், காரணனும்; கர்த்தனுமாகி உலகுயிர் அனைத்தும் ஓம்பி காப்பவனை யாருக்கும் ஒப்பிடத் துணிவீர்? பற்பல தேவர்களின் தன்மை, லட்சணங்களையும், இந்த ஒன்றான பராபரவஸ்துவாகிய ஆதிப்பரம் பொருளையும், அவர் தன்மை லட்சணங்களையுங் குறித்து ஆழ்ந்து யோசித்து பகுத்துத், தொகுத்துப் பார்த்து, ஆராய்ந்து பரிசோதித்து அறிந்தாலே ஒழிய, பராபரவஸ்துவின் எல்லையற்றதும் புல் அறிவுக் கெட்டாததுமான மகத்வ, மகிமை வல்லமைகளை, அறிய முடியாதே! உதாரணம்.

தத்துவத்திலுள்ள கவி

ஒப்பில்லாக்கனகந்தன்னை உறைக்கல்லிற் காணலாகுந்

தப்பில்லா மணிகலெல்லாஞ் சாணையிற் காணலாகுங்
கப்பு வாளெடுத்தோன் தன்னைக் களரியிற்காணலாகும்
செப்பினாலறியலாகுந் தேசிகன் பெருமை தானே.

பொருள் :- எப்பேர்ப்பட்ட தங்கப் பொன்னாயினும் உரைகல்லில் உரைத்துப் பார்க்க வேண்டும், மதிக்கப்படாத மாணிக்க மானாலுஞ் சாணையில் வைத்தல்லவோ பார்க்க வேண்டும். போர் வீரனின் சுத்த வீரியத்தை, யுத்தக்களரியில் அல்லவோ பார்க்க வேண்டும், இதுபோல மெய்க் கடவுளாகிய பராபர வஸ்துவின் தூய லட்சணங்களை விளக்கிக் காண்பித்தாலே அறியலாகும் என்பதாம். ஆகவே இதுவரையில் திட்டந் தெளிவாய் விவரித்து விளக்கிக் காட்டிய எல்லாத் தேவர்களின் பிறப்பின் வரலாறைப் பார்க்கும் பொழுது, எவ்வளவு ஏறுக்கு மாருய் எழுதப்பட்டிருக் கிறது என்பதைக் கண்டீர்களே! பாகவதம் முதலிய நூல்களில், விஷ்ணுவின் நாபிக் கமலத்தினின்று பிர்மா உற்பத்தியானதாயும், மற்றும் சில நூல்களில், ஆதிசக்தி உண்டாக்கிய வித்தில் விஷ்ணுவின் தகப்பனாகிய சிவன், உற்பத்தியானதாயும், மச்ச புராணத்தில், ருத்திரன், பிர்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டதாயும், நாரதீய புராணத்தில் நாராயணனுடைய வலப்புறத்தில் பிர்மாவும், இடப்புறத்தில் விஷ்ணுவும், மத்தியில் சிவனுந் தோன்றியதாயும், லிங்கப் புராணத்தில், பிர்ம அண்டத்திலே ருத்திரன் ரூபிகரமாய் தோன்றி தனது இடப்புறத்தில் விஷ்ணுவையும் லட்சுமியையும், தன் வலப்புறத்தில் பிர்மாவையும், சரஸ்வதியையும், பிறப்பித்ததாயும், மேற்படி புராணத்தில் தானே, வேருேருஇடத்தில் பிரம்மா தன் சிருஷ்டித் தொழில் மந்தப்பட்டதால் விட்ட கண்ணீர் பெரு மூச்சில் பிறந்த ருத்ரன், தானும் அந்தத் தொழிலை நடத்த முடியாது மந்தப்பட்டதால், பிர்மா மீண்டும் அத்தொழிலை தானே நடத்தியதாயும், மார்கண்டேய புராணத்தில், மகா லட்சுமியிலிருந்து பிர்மாவும், மகாகாளியிலிருந்து ருத்திரனும், மகா சரஸ்வதியிலிருந்து விஷ்ணுவும் தோன்றினார்கள் என்றும், வாரகபுராணத்தில், பிர்மா, ருத்திரன், விஷ்ணு என்ற மூவர்களிலும் ஓர் சக்தி உண்டாகி மூன்று பகுதியாகி, லட்சுமி, காளி, சரஸ்வதி என்பவர்கள் உண்டானார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற தேவர்களாகிய இவர்கள் எல்லாரும் ஒன்ருன பராபரவஸ்துவுக்கு ஒப்பானவர்களா? இப்படி பல தன்மை லட்சணங்களையுடைய மும்மூர்த்திகள், பஞ்சகர்த்தாக்கள் முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒருவரிலிருந்து ஒருவர் உற்பத்தியாகி உலகத்தில்

தேவர்கள் ஆனார்கள் என்று வேதாந்தமென்னும் தத்துவ சாஸ்திரத்திலும் பாகவதம், மற்றுள்ள பதினெட்டு, புராணங்களிலும், உபபுராணங்களிலுமுள்ள சாஸ்திரங்களிலும், இயற்கையறிவுக்கு மாருய் மனிதர் நம்பவொண்ணு வகையில் எழுதிவைத்திருக்கும் இவைகளால், மனிதர் உள்ளத்தில் மெய்ஞ்ஞானவொளி உதிக்குமா? இவ்வகைக் காவியங்கள் மனிதரை கடவுளண்டை சேர்க்கும் நோக்கமாய் எழுதிய சத்திய நூல்கள் தானா? அவ்விதமிருக்குமானால், இத்தனை பேதாபேதமும் மாறுபாடும் இராதே! இத்தேவர்கள் அனைவரும் மனிதருக்குப் பிறந்த மனிதவர்க்கங்களேயல்லாது வேறல்லவே. தேவலட்சணத்துக்குரிய அம்சம் ஓர் சிறு கடுகளவேனும் இவர்களில் காணக் கிடையாதே, பின் எந்த சாஸ்த்திரத்தை, புராணத்தை துணிந்து நமது பக்திக்குரிய ஞான நூலாய் ஆதரிக்கலாம், நீங்களே, தீர்ப்பிடுங்கள்.



4

மும்மூர்த்திகள் நடபடிகள்

இதுவரையில், மும்மூர்த்திகள், பஞ்ச கர்த்தாக்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள், ஆகியோரின் பிறப்பின் வரலாற்றைப் பார்த்தோம். இனி பின்வரும் பிரிவுகளில் திருமூர்த்திகளின் தெய்வீக லட்சணங்களை, ஒன்றன்பின் ஒன்ருய் கவனித்துப் பார்க்கவும்.

தத்தாத்திரி மெய்சதகத்தில் சொல்லியிருப்பது பின் வருமாறு : அத்திரி மகா முனிவரின் மனைவி அனுசூயை, தன் பதிவிரதாதனத்தில் மிகுதியும் பிரகாசித்திருக்கிறாள் என்றும், அவளை கற்பழிக்க தேவேந்திரன் முதலான தேவர்களுக்கும் முடியாமற் போனதென்றும் திரிமூர்த்திகளுக்கு நாரதமுனிவர் சொல்ல, அதுகேட்ட மும்மூர்த்திகளும் அவளை கற்பழிக்க ஆலோசித்து, பரதேசிகளான யாசகப் பிராமண வேஷகோலத்துடன் அவள் முன்நின்று பிச்சை

கேட்டார்கள். அனுசூயை அந்தணர்களுக்குத் தானமிடும் பக்தி மரியாதையோடு வந்து பிச்சையிட, மூவரும் அப்பிச்சையை வாங்க மறுத்து, அப்பத்தினியை பிறந்த சுரூபமாய் நிர்வாணத்துடன் தங்கள் முன் வந்து நின்றால் அதுவே தங்களுக்கு ஏற்கத் தகும் பிச்சையென்றார்கள். அருவருப்பான அப்பொல்லாத வார்த்தையைக்கேட்ட அப்பதிவிரதை வெட்கி தலைகுனிந்து, அநாதிதேவனை மனதில் தியானித்து சபித்து அவர்கள் மேல் தீர்த்தந் தெளிக்க, அம் மூவரும் மூன்று இளங்குழந்தைகளாய்ப் போனார்கள். இம் மூவருக்கும் அவளே முலைப்பால் கொடுத்து காப்பாற்றி வந்தாள். அனுசூயை திருமூர்த்திகளையும் தன் வசமாக்கிக் கொண்டதை தேவர்கள் அறிந்து பயந்து தேவேந்திரனிடத்தில் முறையிட, தேவேந்திரன் நாரதனை அழைத்து, திரிமூர்த்திகளையும் மீட்டுக் கொண்டுவரச் சொன்னான். அது கேட்ட நாரதன், மகாதேவர்களாகிய திரிமூர்த்திகளையே சாபமிட்டு சபித்தவள் என்னையும் என்ன செய்வாளோ என்று பயந்து நான் போகமாட்டேன் என்றார். இது கேட்ட திரிமூர்த்திகளின் தேவிமார், நாரதரையணுகி தங்களுக்குப் புருஷப்பிச்சை தரவேண்டுமென உபசாரத்துடன் கெஞ்சி பஞ்சரிக்கவே நாரதன், அத்திரி, மகாமுனிவரின் ஆசிரமத்தை சேர்ந்து தந்திரம் பண்ணி, உலகம் வெகுகாலமாக விருத்தியற்றுக் கிடக்கிறபடியால் இவர்களுக்கு இந்த மன்றாட்டுக்கு இரங்க வேண்டுமென உபசார மரியாதையுடன் கேட்டு கொண்டதால் முனிவரின் மனைவி இரக்கமுற்றுச் சம்மதித்து சாபநிவர்த்தி செய்து, மும்மூர்த்திகளையும் போகச் சொல்லி விட்டாளாம். இது வாய்விட்டு வெளியில் சொன்னால் அருவருக்கத் தக்க எத்தனை இழிவான சரித்திரம் என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்கவும்.

இம் மூன்று தேவர்களும், சிருஷ்டி, திதி, சங்காரமென்னும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களை நடத்தும் மெய்த் தேவர்களானால், இவர்களால் சிருஷ்டிக்கப்பட்டும், காக்கப்பட்டும் வந்த ஒரு அற்ப ஸ்திரியை தம்முன் நிர்வாணமாய் வரச் சொல்வது தேவசீலமா? அந்த ஸ்திரீயினால் மூவருஞ் சபிக்கப்பட்டுக் குழந்தைகளாய் மாறிய தும் தேவ தன்மையோ? என்று வாசகர்கள் சிந்திக்கவும்.

பிரம்மா சகலருக்கும் சிருஷ்டி கர்த்தாவென்பது மெய்யானால், அந்த ஸ்திரீ, குழந்தைகளாக சபித்தத் தங்களை மறுபடியும் புருஷ வடிவிலாக்க வல்லமையற்றுப் போன காரணம் தெரியவில்லை.

சிவன் சகலரையும் சங்கரிப்பது மெய்யானால், தங்களை சபித்து குழந்தைகளாக்கின, அந்த ஸ்திரீயை ஜெயித்துச் சங்கரித்து அழிக்க ஏன் வல்லமையில்லாமற் போயிற்று? என்பதை யோசிக்குமிடத்து, இவர்கள்

வல்லமையற்ற சாதாரண மனிதவர்க்கமாகவே தெரிகிறது.

திருமூர்த்திகள், மூவரும் சாபத்துக்குள்ளாகி குழந்தைகளாய்க் கிடந்த பொழுது, சிருஷ்டி, திதி, சங்காரத் தொழிலை இவர்களுக்குப் பதிலாய் நடத்தினவர்கள் யார் என்பது புரியவில்லை.

இவர்களில், திருமூர்த்திகளை சபித்து குழந்தையாக்கிய ஸ்திரீயா, அவள் சாபத்துக்குள்ளான திருமூர்த்திகளா யார் பெரிய தேவன்? இவைகளை யோசிக்கும் பொழுது இவர்கள் மனிதரா தேவர்களா? என்பதை இலகுவாய் அறிந்து கொள்ளலாமே!

ஆசிரிய விருத்தம்

உலகதிசயங்களனைத்தையும் பார்க்க வுகந்துயர் திரிமூர்த்திகளு
முளங் கனிந்தேகும் வழியிலோர் முனி
தன்னுடமனை புகரிஷிமனைவி
பெலனொடு கடிந்து சொலிமிகச் சினந்து பேய்கனென்,
றேசி யேசபித்து
பிறக்கினை கெடுத்துக் குழகவிளாக்கிப் புரட்டி
ஓர் மூலையிற் கிடத்த
அலறியே வீறிட்டழுதபேயர்களோ வளித்தழித் திரட்சை
செய்திடுவோர்
அவனவன் தனைக்காப்பதற்கியலா ரவரையடுத்
தவர் தமைக் காப்பவரோ
பலபல பொருட்களுயிர் சகலத்தையும் பரித்து முற்ருெழிலுடனாளும்
பரமவல்லமைகளிவரிடத் துளதோ பகுத்தறிவற்ற பித்தர்களே.

பொருள் :- உலக அதிசயங்களைப் பார்க்க மும்மூர்த்திகளும் சந்தோஷமாய்ப் போகும் பொழுது வழியில் ஓர் ரிஷியின் ஆசிரமத்தைச் சேர்ந்து, அந்த ரிஷியின் பத்தினி கற்பை அழிக்க எத்தனித்ததால் (பிருகு ரிஷியின் மனைவி நாகவல்லி) இம் மூவரையும் கோபித்துக் கடிந்து, சபித்து மூன்று குழந்தை ரூபமாய் மாற்றிப் புரட்டி உருட்டி ஓர் முலையில் ஒதுக்கிக் கிடத்த வீறிட்டழுது கொண்டிருந்த இவர்கள் தேவர்களோ? என்பதை யோசித்துப் பாருங்கள் என்பதாம். தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளத்திராணியற்று ஒரு ஸ்திரீயிடம் அடங்கிப் போன பலவீனர். அடுத்தோரைக் காப்பதெப்படி? இவர்களில் தேவ லட்சணங்களின் அம்சம் சிறிதும் இல்லாதிருப்பதை கவனியாதிருப்பதேன்? என்கிறார் கவி ஈசுவரன்.

இருசமய விளக்கம் - மோகினிபடலம் - விருத்தம்

கொன்றையுஞ் செஞ்சடை சங்கரன்றுங்கள் வைகுந்தமேவித்
துன்றுபைந் தண்டுழாய் மாயனைக் கண்டதோர் தொல்லை நாளில்
இன்றுபோலென்று முள்ளாய்சுரர்க் கமுதளித்திடுவதற்காய்
நின்றநின் பெண்ணுரு காண விச்சித்ததென் நெஞ்ச மென்றான்

நெற்றி சேர்விழியினானிது பகர்ந்திடுதலு நேமிமாலுங்
கற்றைவார் சடையினாய் நீயுமவ்வடிவினைக் கண்டபோழ்தே
பற்றி சிந்தையனுமாய் மாயையாகிய வலைப் படுதியென்றான்
கொற்ற மூவிலை நெடும் படையினான் மீளவுங் கூறலுற்றான்

அழைக்கு மானைக்கு நீயஞ்சலென்றுதவு கூராழியாய் நீ
யிழைக்கு மாயைக்கு நானுள்ளலேலென நகைத் தெம்பிரானும்
மழைக்குலஞ்சார்வதோ சந்தனச்சோலையும் வாவியும் போன்
றழைக்கு மின்னூஞ்சலுஞ் செய்ததிற்றனு மோர் தையலானான்

கன்னியைப் பொன்னினூஞ்சலி னெதிர்ந்தளவிலே கவுரியந்தன்
சென்னியிற் கங்கையுங் குவளென்றதனை யோசிறிது மெண்ணன்
மன்னுநற் பரிமளப் புது மலர்கண்ட சீர் வண்டு போல
மின்னுருக் கொண்ட மோகினித் தனந்தழுவமேல் விழுவதானான்

மானெனத்தகைய கண் வல்லி பொன்னூஞ்சன் மேன்மருவினான்
மேனியை தொடுமேனா நிலனிழிந்தோட வவ்விடையினானுங்
கானலைப் புனலெனத் தொடருவார் போனெடுங் காலு மாறுந்
தானிளைப் புற நடந்தோடி வெள்ளரு விகடாளினூர்.

கிட்டவந்தளவிலே தன்னுருக்கொண்ட மால்கிளா நின்றான்
றிட்டமிங்கதிக மாயைக்குளானோ மெனச்சிந்தை செய்யாக்
கட்டுஞ் செஞ்சடையனு நாணினானெற்று பாகவத மங்கேர
தட்டகக் கந்தநன் குரைசெயுங் காரணத்தடவி தன்றே.

இவ்வாறு பாடலின் பொருள் :- கொன்றை மாலை சூடப்பட்ட சிவந்த சடையினையுடைய சங்கரனாகிய சிவன் உயர்ந்த வைகுண்டத்தில் பிரவேசித்துக் குளிர்ந்த பச்சைத் துளசிமாலையை யணிந்த ஸ்ரீ ஹரியைக் கண்ட ஒர் பூர்வநாளில், அவருடன், இன்று போலென்றும் இருக்கப்படா நின்ற நீர், அன்று தேவர்களுக்கு அமுதிடும் படிக்கு எடுத்து நின்ற ஸ்திரீ ரூபத்தின் அழகினைக்காண என் நெஞ்சம் இச்சித்ததென்று சொல்ல, ஸ்ரீ ஹரி பிரதியுத்தரமாக நீர் அந்த ஸ்திரீ ரூபத்தின் அழகைக் கண்ட மாத்திரத்தில் நீர்

அதைக் கருத்திலே யுண்ணித் தப்பாது மாயைக் குட்படுவீர் என்று சிவனுக்குச் சொல்ல, சிவன் மீண்டும் அபயமிடும் யானைக்கு அபயாஸ்தங் கொடுக்கும் நீர் இழைக்கும் மாயைக்கு, நான் உட்பட்டவனல்ல வென்று, உறுதி சொல்லவே ஸ்ரீஹரி நகைத்து குளிர்ச்சி பொருந்திய சந்தணச் சோலையும் அதனுள் நீர் தடாகமும், அதன் அருகே பிரகாசம் பொருந்திய தொங்கிநிற்கும் பொன் ஊஞ்சலையும் உண்டாக்கி ஸ்ரீஹரி தானும் ஓர் யவ்வன சௌந்தரியம் பொருந்திய அழகு நிறைந்த ஸ்திரீயாய் அந்த ஊஞ்சலின் மேல் எழுந்தருளிக் காட்சி அளித்தார். கண்கவரும் கன்னிகை வடிவமாய் ஊஞ்சலில் மாருருதரித்தமர்ந்திருந்த ஸ்ரீஹரியை சிவன் கண்ட மாத்திரத்தில் தன் பக்கத்திலமர்ந்திருக்கும் உமையவளும், தன் தலையில் இருக்கும் கங்கையுஞ், சிரிப்பார்களென கொஞ்சமேனும் மனதில் எண்ணாமல், பிரகாசத்தையும் திவ்விய பரிமளத்தையும் உடைய மலர்ந்த புஷ்பத்தைக் கண்ட வண்டு தாவிப்பறப்பது போல் மோக இன்பத்தை மூட்டும் வடிவுப் பிரகாசத்துடன் காட்சி அளித்த ஸ்ரீஹரியின் மோகினிஸ்தனங்களைத் தழுவுதற்கு மேலே விழும்படி வந்தார். அது கண்டு நம்மேனியைத் தொடுவீரோ? தொடும் பார்ப்போமென்று, ஊஞ்சலை விட்டு இழிந்து, ஸ்ரீஹரி முன்னும், எருது ஏறும் சிவன் பின்னுமாக கானலை ஜலமென்று தொடர்வார் போல் நெடுத்தூரம் இளைப்புடனே விந்துகால் வழியாக அருவிபோல் ஓடி வடியத் துரத்திக் கிட்டி வந்த பொழுது, ஸ்ரீஹரி, தன் நிச ரூபத்தைக் காட்டி நின்ரூர். இதைக் கண்ட சிவன், திருஷ்டாந்தமாய் மாயைக்கு உள்ளானோமே என்று சிந்தித்து வெட்கி நின்றான் என்பதாம். பகவதத்தின், எட்டாவது ஸ்கந்தத்தில் எழுதியிருக்கிறது.

இவ்வித அருவருப்பான காமக் குரோ தாதி கர்மங்களைத் தேவர்கள் செய்வது, தெய்வ லட்சணங்களுக்கும் பொருத்தமாகுமா? இதுவல்லாமல், இந்த தோஷங்கள் அனைத்தையும், இந்த தேவர்கள், தம் சுபாவப்படி செய்யாமல் சனி பகவானாலே நடத்தப்பட்ட தேயல்லாது, வேறல்ல, என்பது பொருந்திய நியாயமாகுமா? இதை திருஷ்டாந்தப்படுத்தும்,

விருத்தம்

வேலவனை வேங்கை மரமாக்கி வைத்தாய்
விறகு கட்டி சொக்கர்தனை விற்கவைத்தாய்
மாலவனை உரலோடே கட்டிவைத்தாய்
வள்ளி தனைக்குரவருடன் வனத்திற் சேர்த்தாய்
காலனை மார்க்கண்டனுக் காயானுரைத்த
காரணனை நீர் பிடித்த கர் மத்தாலே
சாலவேயுனைத் தொழுவே னெனைத் தொடாதே

சனியனேகாக மேறுந் தம்பிரானே

தேவர்களையும் சனி பகவான் ஆட்டி அலக்கழிப்பது உண்மை யானால் சனிபகவான் திரிமூர்த்திகளைக் காட்டிலும் மேற்பட்ட தேவனாய்த் தெரிகிறதே!

சனிபகவான் எங்கேயிருந்து, யாரால் அனுப்பப்பட்டு வந்தார்? யார் அனுமதியில் மூவரையும் பிடித்துக் கொண்டார்? ஆகவே அந்தச் சனிப்பகவானோ, அல்லது அவரால் அனுப்பட்டும், அலக்களிக்கப்பட்டும், இமிசைப் பட்டும் திரிந்து அலைந்த திரிமூர்த்திகளோ? யார் பெரிய தேவன்? நீங்களே நிதானித்துப் பாருங்கள். இதைப் பற்றிய ஒரு விருத்தம்.

பேரின்ப மணிமாலை

மூவரையுஞ் சனியன் தான் பிடித்ததாலே
முதலொரு வன்றலை யிழந்தான் முக்கண்ணுள்ளோன்
சாவு வருமென முனிவன்ற னக்குமஞ்சித்
தானொளித்தானை விரலி தன்னிலே தான்
பாவியென்ற திருமாலோர் பெண்ணினாலேப்
பதியிழந்து பாரியுடன் வனத்திற் சென்ருன்
தேவனென்றே இவர்கள் தம்மை வணங்கினால் மெய்த்
திறமையுள்ள கதியருளுந் தேவனாமோ?

பொருள் :- இவ்விதமே அந்தச் சனியனுக்குப் பயந்து ஓடி ஒளிந்தும், தலையிழந்தும், பதியிழந்தும், பெண்டிழந்தும், வனம் புகுந்தும், தண்டி ழந்தும் போன இந்தப் பாவிஷ்டர்களையோ கதியருளும் தேவர் களென்று சொல்லலாம்? என்பதாம் இதற்குப் பின் ஒரு திருஷ்டாந்த விருத்தம்.

விருத்தம்

சொல்லு மும்மூர்த்திகளின் மகத்துவங்க
டொகுத்துச் சிட்டிப்பது பிரமன்
ரேற்றங்கள் வகுப்பதனைத்தையுங் காத்து
சுகித்திடத்திதிப்பது விஷ்ணு
பல்லுயிரையுஞ் சங்கரிப்பது ருத்திரன்
பகுந்திதைப் பகரும் பேயர்களே
படைப்பவன்றனது சிரமிழந்ததுவும்
பரிக்கு ரட்சகனி ராவணன்றன்

னில்லமாமிலங் கைச் சுட்டழித்ததுமி

யாவையுஞ் சங்கரித்திடுவோ
னெதிர் பற்பரிஷயா லை விரற்காயி
னிடைபுகுந் தொழித்ததும் பார்க்கிற்
கல்லைகளாகு மாகையாலிவர்கள்
கதைகளையறிந்து மீட்டிவரை
கடவுடற்று வமுற்றெழிற்குரியோ
ரென கட்டுரைப்பது கடப்பிதமே.

துஷ்ட பேய் காளியொடு சிவன் வாது
தொடுத்து நின்ருட கார்சிலம்புத்
துண்டித்துத் தெறித்தவிடமறியாமற்
துடர்ந்து வள்ளுவன் சொலவறிந்து
திட்டமாய் தேடி எடுத்த பேதைகளோ
செயமிகு தேவவல்லபிகள்
திகற்சியுற் றெண்ணெட்டாங் கலைக்கியானத்

திறம் விக்ரமாதித்தன் கேட்க
அட்டமாத்திசை மெச்சியரிஷயிடஞ்
செல்லவர் சொல்வரென மும்மூர்த்திகளு
மருளின ரதனாற் பொருள் பலகடந்த
வறிவிலரென்கலா மிவர்கள்
பட்டபாடொடு கெட்டிட்ட கேடுகளும்
பகுத்தறிந் திருப்பர்களிவரைப்
பாதகர் என்பர்த் தேவர்களென்றுப்
பகர்பவர் பாழ்நர கெய்வார்.

இவ்விரண்டு செய்யுளின் பொருள்கள் :- சாஸ்திரங்களில் சொல்லியபடியே திரிமூர்த்திகளின் தொழிலையும் தங்கள் நடக்கை களையும், துர்ப்பலவீனங்களையும், வெளிப்படுத்துகிறதுமன்றி, இந்து சமய சாஸ்திரப்படி முப்பத்து முக்கோடி தேவர்களை விட மும்மூர்த்திகளே ஆராதனைக்கு முதன்மை ஸ்தானத்திற்குரியவர்கள் என்று ஆராதித்தாலும் இவர்களுக்குரிய தேவ லட்சணங்கள் இல்லையே? இதுமன்றி பிர்மாவும், விஷ்ணுவும் சிவனை நோக்கி தவம் புரிந்தும், அப்படியே சிவனும், ஒரு வேதத்தைத் தேட பக்தி வினயத்தோடு பராபர வஸ்துவை நோக்கி தபசு பண்ணியதாயும் வெளிப்படையாய்த் தெரிகிறதே ! இதனால் இவர்கள்

வணக்கத்திற்குரிய தேவர்களே அல்லவென்றும், இவர்களுக்கு மேலாக தேவன் ஒருவர் உண்டென்றும் தெளிவாகிறதல்லவா? இதற்குத் திருஷ்டாந்தம்.

பேரின்ப மணிமாலையில் விருத்தம்

ஒருவனே தேவனென்று வுலகுளோ ரறிந்திருந்தும்
பரகதி கொடுக்கும்மேலாம் பராபரப் பொருளைநம்பார்
அறிவையர் மயக்கந்தன்னி லழுந்துவோர் தம்மை நம்பி
பரகதி யிழந்தெப்போதும் பாழ்நரக டைவர்மாதே

சிவவாக்கியர்

மூவரில் மூவரல்லாமல் முப்பத்து மூன்று கோடி
தேவர்தம் செயலைக்கேட்டால் தெறிந்தவர்க் கருவருப்பாம்
நாவலர் முதலாயுள்ள ஞானிகளனைத்துமிந்தப்
பாவலரிருளைத் தள்ளி பராபரர்க்கடிமையாவார்.

முச்சுடரு மொன்ருகும் மும்மூர்த்தி யல்ல
  முவருமே யாளுருவ மொன்றே யாகும்
அச்சுதா யிவர்களுமே ஆண்பெண் ணல்ல
  அரனுமல்ல லிங்கமல்ல வநாதி யான
சச்சிதா நந்தனையே வணக்கஞ் செய்து
  சர்க்குருவைத் தரிசித்துப் பாதம் போற்றி
எச்சரிக்கை கொண்டு நடவப்பா வப்பா
  யெண்ணில்லா முக்திவழி யெய்துவாயே

தேவர் தேவரென்று நின்று தேடுகின்ற மூடர்காள்
தேவர் யாவர் என்றறிந்து தேடவுமறிகிலீர்
மூவர் தேவரென்று நீர்மொழிந்ததென்ன ஞாயமோ
மேவதாகவும்முளே விரித்துணர்ந்து கொள்ளுமே

அரியுமல்ல அயனுமல்ல வரனுமல்ல வப்புறங்
கருமை வெண்மை செம்மையுங் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்லப் பெண்ணுமாணுமல்லவே
துரியமும்கடந்து நின்ற தூர தூர தூரமே

கழுதை கட்டி யோமஞ் செய்தால் கழுதை யன்னமாகுமோ
பழுதுகற்றமாந்தர் கேளும் பரமசிவன் கர்த்தனோ

முழுதுமான ஞானரூப மூர்த்திநின்ற தப்புறம்
எழுதுமாதி யந்தமு மிதயமுங் கடந்ததே

ஔவையார்

மாலும் மனிதன் மலரோனும் தான்மனுடன்
ஆலமுண்ட கண்டன் அவன்மனுடன் - சீலமுடன்
உற்று உணர்ந்து உகந்த பெரியோர்கள்
கற்று மறிந்தார் இல்லை காண்.

இப்பாடலின் பொருள் : மேற்கூறியுள்ள மும்மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, சிவன், தேவர்கள் அல்லவென்றும், தேவர்கள் பெண் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவென்றும், மூவரையும் தேவரென்று சொல்லுவது நியாயமாகது, அவர்கள் மூவரும் மனித வர்க்கங்களே! நீங்கள் தேடும் தேவன் முழுதுமான ஞானரூப மூர்த்தியாய் மனித கட்டுரை காவியங்களுக்கும், அவர்கள் மன நிர்ணயங்களுக்கும் அப்பால் உள்ளது என்பதாம்.

இருசமய விளக்கம் தாருகவன சாபப்படலம்

விருத்தம்

மருவுநற்ருரு காவன முனித்தலைவர் தம் மனவிருத்திப்
பெருமை எவ்வளவென காட்டவே செங்கண்மால் பெண்ணதானான்
விரவுமங்கையர்கள் பத்தினியர் கற்பினை விவேகிப்பதற்கே
பெருமுனைப் பரசு பாணியு மனோகரமிகும் புருடனான்
கருதுமிங்கவர்கள் மோகன சுரூபங்களைக் கண்ட போழ்தே
திரமிகுத்திடு முனித்தலைவரோடவர்கள் பத்தினிய ரெல்லா
முருகு சிந்தையர்களாய் மதன்வேள் கணைகள் பட்டுருவலோடும்
விரத நிட்டைகள் மறந்தனர்கள் தங்கற்பும் வெவ்வேறு பட்டார்.
தங்கள் பத்தினியர் கற்பழிய மாதவர் பொருத்தார்களாய் மற்
றிங்குவந்திணைய மோகம் விளைத்தவனிலிங்கந் துணிந்தே
பங்கமுற்றிட வெனச் சாபமிட்டார் களப்பரவுசாபம்
பொங்கிய புருடனிற் சம்பவித்தது கணப்பொழுது தன்னில்

பொருள் :- ஓர் சமயம் தாருகாவனத்தில் தபசு பண்ணிக் கொண்டிருந்த ரிஷி பத்தினிகளின் கற்பை இச்சித்து, சிவன் ஓர் அலங்காரமுள்ள புருஷ ரூபத்திலும், விஷ்ணு மகா சவுந்தரியமுள்ள ஸ்திரீ ரூபத்திலும் மாறி, ரிஷிகளின் ஆசிரமத்தைச் சேர்ந்து அவர்கள் தபசைக் கலைத்து, ரிஷி பத்தினிகளையும் கற்பழித்து விட்டதால், ரிஷிகள் சபித்தும் சிவனின் லிங்கமாகிய சிசினமும் அறுந்து விழுந்து போயிற்று என்பதாம். முன்

இவ்விருவரும் ஒருவரை ஒருவர் மோகித்து புணர்ந்ததுமன்றி, பின்னும் ரிஷிபத்தினிகளில் இவ்வித அருவருப்பான காமக் கருமங்களை நடப்பித்து அவர்கள் சாபம் மூண்டு, சிவன் சிசினமாகிய லிங்கம், அற்றுவிழும்படி செய்ததை பார்க்கும் பொழுது ரிஷிகளும், பத்தினிமார்களும், இத்திருமூர்த்திகளை விட மகாப் பெருமூர்த்திகளென்றே சொல்லக்கூடும். இவர்களின் தெய்வீக லட்சணங்களைப் பார்த்தால் கனவிலும் நினைவிலுங்கூட இவர்களைத் தேவர்கள் என்று சொல்ல இடமில்லையே! சாதாரண மனிதர்களிலும் காணக்கூடாத அருவருப்பான அதர்மக் கிரியைகளை நடத்தும் இவர்களைத் தேவர்களாய் வணங்கி, தேர், திருவிழா நடத்துவதால் என் பலன் பெறுவோம்? இப்பாடல்களை உருவாக்கி எழுதி வைத்தது நாமோ? இவை பின்னுள்ளவர்கள் நம்பி, பின்பற்றத்தானே எழுதி வைத்தது என்பதை யோசித்துப் பாருங்கள். நம்மில் ஒருவர், இன்று இவ்வித நடப்பில் ஈடுபட்டுச் செய்வதானால், மக்கள் மனம் பூரித்து, மகிழ்வுடன் தேவர்களாய் மதித்து, நமக்குக் கோவில் கட்டி, தேர், திருவிழா உண்டு பண்ணி வணங்க வருவார்களா? நமக்கு என்ன தான் செய்யத் துணிவார்கள் என்பதை இங்கு எழுதாமலேயே புரிந்து கொள்ளலாமென்று விடப்பட்டது. பின்னொரு தரம் கொண்டகி என்ற வேசி, நிதம், நிதம் தன்னிடம் வரும் புருஷன் எப்பேர்ப்பட்டவனாயினும், அவள் அவனை மகாபக்தியோடு உபசரித்து, ஏற்றுக் கொள்வாள் என்று கேள்விப்பட்டு, இந்த உண்மையைச் சோதிக்கத் துணிந்து, மும்மூர்த்திகளும் மாறுவேஷம் தரித்து ஒரு ராத்திரி கொண்டகி வேசியையணுகி, காம சேஷ்டைகளைப் பண்ணினார்களாம். விசேஷமாக, விஷ்ணு மூன்று விசை வயறுகழிந்து, அவள் வஸ்திரம், படுக்கை, வீடு முழுமையும் மிக அசுத்தம் செய்யவே வேசியிவர்களைச் சபித்தாளாம். அதனால் மும்முர்மூத்திகளும் மூன்று விதக் கல்லாகப் பிறந்தார்களாம். கெண்டகி வேசி காலம் சென்ற பின் திரி மூர்த்திகளும், மூவிதக் கல்லாய் சமைந்த அந்த நதிக்கு, கெண்டகி நதியென்று அந்த வேசியின் பெயரையே வைத்தார்களாம். இதன் காரணமாய் கல்லாய் பிறந்த பிர்மாவுக்குப் பெயர் இரணிய கற்பம், விஷ்ணுவுக்குப் பெயர் சாலக்கிராமம், ருத்திரனுக்குப் பெயர் சிவகாமம். இம்மூன்று தினுசு கற்களுக்கும், இம்மூன்று பெயர்களை வைத்து, இதைப் போய் தேடிக் கண்டுபிடித்து, அதிக விலைக் கொடுத்து வாங்கி, பூசை பண்ணிக்கொண்டு வருகிறார்கள். இதற்கு திருஷ்டாந்தமாய் கெண்டகி நதியின் பேரில் சொல்லியுள்ள சுலோகம்.

விக்கினேஸ்பர பிரபந்தம்

வேசியாந் தரிசனம் புண்ணியம், பரிசனம் பாபநாசம்
சும்புநாம சாப தீர்த்தானம், மைத்தனம் மோட்ச சாதனம்

பொருள் :- வேசிகளைத் தரிசிக்கிறது புண்ணியம், அவர்களை தொடுகிறது பாவ விமோசனம், சப்புகிறது சகல தீர்த்தத்திற்கும், சமானம், மைதானம் பண்ணுகிறதோ, (கூடிச் சேர்வது)மோட்சத்தை அடையலாம் என்பதாம்.

பிரம்ம குலத்தவர் என்னும் பிராமணரிற்சிலர் இவ்வித அருவருப்பான வார்த்தைகளை மந்திரங்களென மனனம் செய்து ஜெபித்தால் இச்சை ரோகங்களாகிய காமக் கிரியை சேஷ்டைகளிலிருந்து விடுதலை பெற்று ஆத்துமா முக்தி பதவியடையுமென நம்புகிறார்கள். இது சாத்தியமான காரியமா? வாசகர்களே தீர்ப்பிடுங்கள். இது எத்தனை மனத்துணிச்சலான பாவக்கிரியைகளுக்கு வழி காட்டும் மூல மந்திரம் என்பதை மறக்க முடியுமா?

வேமையர் தெலுங்கு வாக்கியக் கவி

கால முந்தர எருகுடா யிந்தலாக்கனு முக்குறு
இந்தக் காணரு முணிகிப் பொய்யரி நருண்டுயிந்த்த மண்டே
நகபாட்டிகாதயா, விஸ்வதா: அபிராமவினுராவேமா.

பொருள் :- பிராமண குருக்கள் மட்டுமல்ல, வணங்கும் திரிமூர்த்திகளும் கூட காமிகளாய் விபச்சாரக் கடலில், அமிழ்ந்தி மோட்சகரை ஏறாமல் நரகாக்கினியில் முழுகிப் பேய்களுக்கு அடிமைகளாய்ப் போனார்கள், என்பதாம்.

அகஸ்தியர் - விருத்தம்

வேதாந்தத்தமிழ் மார்க்க முறையைக் கேளும்,
விரித்துரைக்கப் பெரியோர்க்குக் கோபம் வேண்டாம்
நாதரென்னும் மும்மூர்த்தி நரகப் பேய்கள்
நாடுதனிற் பலபல தந்திரம் பண்ணி
காதாந்தமாய் வலைக் கண்ணிக் குற்றிக்
காசிகங்கை என்றுநவதானம் பண்ணி
மாதாந்த உருவமே யெடுத்து யிந்த
வையகத்தை மயக்கினார் வகுத்துப் பாரே

பிறந்தவர்க்கு பஞ்சபட்சி குருவால் கண்டு
பிறிக்கறியார் பொய்யெனவே பேசுவார்கள்
அறிந்தவர்க்கு மோட்சமுண்டு படைத்தோன் றன்னை
அறியாதோர் எரிநரகி லழிந்து போவார்
வெறிபிடித்த சிவன்பெருமாள் பிர்மா தானும்
மேலான தேவரல்ல மனித ரப்பா

அறிவடைந்து நமைப்படைத்தோன் றன்னைத் தேட
அப்பனே புத்தியுள்ளோர்க் கறிவித் தேனே.

அகஸ்தியர் மட்டுமல்ல, மற்றும் பல ஞானிகள், முனிவர்கள் தங்கள் ஆராய்ச்சியால் பராபர வஸ்துவாகிய நிர்மலப் பரம்பொருள் ஒன்றையல்லாது. மும்மூர்த்திகளும், பஞ்ச கர்த்தாக்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும், மற்றும் பிதுர்த் தெய்வங்களும் தேவர்கள் அல்ல. வென்று வெட்ட வெளியாய் விளக்கிக் காட்டி, இவர்கள் காம சமுத்திரத்தில் முழ்கிய பெரும்காமிகள் அன்றி, சாமிகள் அல்லவே, என்று சொல்லிவிட்டார்கள். இன்றும் இவ்வித பல விர்த்தாந்தங்களை ஔவை நல்வழி 20-ம் பாட்டு தண்டலையார் சதகம் 32-ம் பாட்டு ஞானவெட்டியான் 470-ம் பாட்டு, திருவேகம்பமாலை 29-ம் பாட்டு கடுவெளிச் சித்தர் பிரபந்தம் 10-ம் பாட்டு பரத்தையர் பாமாலையிலும் பார்த்தால் நன்றாய் விளங்கிக் கொள்ளலாம். இதுவும் அல்லாமல் இவர்கள் ஒருக்காலும் தேவர்கள் அல்ல என்பதை காட்டும் மற்றொரு திருஷ்டாந்தம்.

ஔவை நீதிமொழி வெண்பா

விதியால் வருவதல்லால், வேதத்தோர் தங்கள்
மதியினால் வாழ்வதொன்றுண்டோ - பதிதோறுஞ்
சங்கரனுமைய மிரந்துண் டான்றடங் கடற் சூழ்
மங்கையுடன் காடுறைந்தான் மால்.

இதைக் கூர்ந்து கவனித்தால் திரிமூர்த்திகள் தேவர்களல்ல. பராபர வஸ்துவுமல்ல, அவரால் சிருஷ்டிக்கப்பட்ட வெறும் மனிதரென்று விளங்குவதுமன்றி, இத்தேவர்கள் தங்கள் விதிப்பயன் படி சிவன் ஊரூராய் பிச்சை எடுத்து சாப்பிட்டும், விஷ்ணு தன் பெஞ்சாதியோடு வனவாசந்திரியவும், கடலோரஞ் சுற்றவும், இலக்கான மனிதர்கள் என்று காட்டுகிறது.

பின்னும் புராணக் சாஸ்திர காவியங்களை கூர்ந்து கவனித்தால் இந்த திரிமூர்த்திகளும் மற்றும் மனிதரைப் போலவே ஆயுசும் அழிவும் உள்ள வெறும் மனிதராய்த்தெரிகிறது. சாஸ்திரங்களில் திரிமூர்த்திகளுக்கும் ஏராளமான வருஷங்களை ஆயுளாய் குறிப்பிட்டு, தங்கள் ஆயுள் முடிவில் மரித்து மறைந்து போகும் மனிதர்க் கொப்பாய் எழுதி வைத்திருக்கிறது. பராபர வஸ்துவென்றால் மரணமும் உண்டா? இவ்விதமானால் மனிதருக்கும் தேவனுக்கும் வித்தியாசம் தான் என்ன? நீங்களே தீர்ப்பிடுங்கள்.

கமலப் புராணம் வெண்பா :-

கோடி விதிமாண்டல் குலாவுங் கமலக்கண்ண
னோடிவட் பாலுறங்குமே, - நாடுங்கா
லக்கண்ணர் கோடியழிகுலருணசிரி
நக்கனொரு சத்தே நகும்.

பிரளையத்திற் பிரமன் சதாசிவப்
பேரினான் முதலோரைப் - பெரும்பயங்
கர சொரூபமா யழிவிப்பவன்
கண்ண னென்னுங் கமலப் புராண நூல்

இது, பிரம்மாவுக்கு ஆயுள் கணக்கிட்டு அவன் சாகிறவன் அவன் பதவிக்கு பின்னொரு பிரம்மா வருவான் என்று விளக்கவதுமன்றி தெட்சப்பிர்மாவென்றும், காசிபப்பிர்மா என்றும் இருவகையினர் இருப்பதோடு, இன்னும் அநேக பிர்மாக்கள் இருப்பதாய் சொல்லி யிருப்பதால், இவர்கள் பூர்வ காலத்து மனிதரும் தங்கள் தலைமுறைப்படி விர்த்திக்குள்ளானோரின் ஆதிப்பிதாக்கள் என்று விளங்குகிறதே! தலைமுறை வரிசைப்படி பார்த்தால், இப்பொழுது பிள்ளைப் பெற்று விர்த்தியாயிருக்கும் ஒவ்வொரு புருஷனும், பிர்மா வல்லவோ? ஆனால் ஒடுக்கத்தின் வழியே நோக்கினால், எல்லா பிரம்மாக்களும் முதல் பிர்மாவின் தேகத்தில் ஒடுங்கி, ஸ்ரீ விஷ்ணு தம் பர்த்தாவாகிய சிவனில் ஒடுங்கி, சிவன் தான் எடுக்கப்பட்ட மண்ணில் ஒடுங்கி; மண், தண்ணீர், நெருப்பு, காற்று நான்கும் ஆகாயத்தில் ஒடுங்கி, ஆகாயஞ் சிருஷ்டி, திதி, சங்காரக்காத்தா வாகிய ஆதிகாரணர் வார்த்தைக்குள் ஒடுங்கி ஆதிகாரணர் மாத்திரமே அநாதி தனி முதற் பொருளாய் விளங்கும், என்பது ஓர் உத்தம உண்மையல்லவா?

இந்து புராண காவியக் குறிப்புப்படி, பிரம்மாவின் வயது எவ்வளவென்றால், கண்இமை அசையும் காலம், நிமிஷம் என்றும் நிமிஷம் 15 கொண்டது கரட்டையென்றும், கரட்டை 30 கொண்டது, கலை என்றும் கலை 30 கொண்டது நாள் என்றும் நாள் 15 கொண்டது பட்சமும், பட்சம் 2 க்கு ஒரு மாதமும், மாதம் 2 க்கு இருது ஒன்றும், இருது மூன்றுக்கு அயனம் ஒன்றும், அயனம் இரண்டுக்கு வருஷம் ஒன்றும் இவ்விதமான வருஷம் 360 கொண்டது தேவர்களுக்கு ஒருவருஷம் ஆகுமாம். இந்த வருஷத்தில் கிரேதாயுகம் 4800 வருஷம் இதற்கு மனித வருஷம் 17,28,000 பதினேழு

லட்சத்து இருபத்தெட்டாயிரம், திறேதாயுகம், தேவ வருஷம் மூவாயிரத்து அறுநூறு; இதற்கு மனித வருஷம் பன்னிரண்டு லட்சத்து அறுபத்தாறாயிரம் துவாபரயுகம் தேவ வருஷம், இரண்டாயிரத்து நானூறு; இதற்கு மனித வருஷம் எட்டு லட்சத்து அறுபத்திநாலாயிரம். கலியுகம், தேவ வருஷம் ஆயிரத்து இருநூறு இதற்கு மனித வருஷம் நானூறு ஆயிரத்து முன்னூற்று இருபத்தி எட்டாயிரம், ஆக யுகங்கள், நாலுக்கு தேவ வருஷம் பன்னிரெண்டாயிரமாம். இதற்கு மனித வருஷம் நாற்பத்து நூறாயிரத்து முன்னூற்று இருபதாயிரம். இந்த யுகங்கள் ஆயிரம் கொண்டது பிரம்மாவிற்கு ஒரு பகல்; பின்னும் ஆயிரம் வருஷம் கொண்டது பிர்மமாவிற்கு ஒரு நாள், இவ்வித நாள் முப்பது பிரம்மாவுக்கு ஒரு மாதம். இப்படி பன்னிரெண்டு மீ கொண்டது பிர்மாவுக்கு ஒரு வருஷம்; இவ்வித வருஷம் நூறு சென்றபின் பிரளயம் ஏற்படுமாம்.

பிர்மாவின் ஆயுள் 720,000 வருஷங்கள். இவ்வித ஆயுள் இரண்டு பங்கு கொண்டது 144000000 வருஷம் விஷ்ணுவுக்கு ஆயுளாம். பிரம்மாவின் மூன்று பங்கு, சிவனுக்கு ஆயுளாம். வாசகர்களே! இந்த புராணக்குறிப்பில் தேவர்கள் வயதை திட்டமாய் கண்டு கொண்டீர்களா? இது உண்மையானால் இதுவரையில் எத்தனை பிரம்மாக்கள் மரித்தவர்கள்? பின் அவர்கள் பதவியை ஏற்றவர்கள் எத்தனைபேர்? இந்த கணக்கேடு யாரோ வைத்திருப்பவர்? இன்னும் வரவேண்டிய பிர்மாக்கள் எத்தனை பேர்? இது உண்மையான புராண சாஸ்திர வரலாறு தானா? என்பதை நீங்களே தீர்ப்பிடுங்கள் ஆனாலும் இம்மும்மூர்த்திகள் மண்ணில் பிறந்து மண்ணில் வளர்ந்து மரணத்தை தலைமேல் சுமந்து திரிந்து மரித்து, மறைந்து போன மனிதர்கள் என்று விளங்குகிறது அல்லவா? இதை திருஷ்டாந்தப்படுத்தும்.

ஓர் கவி

ஐங்கரன் தலையிழக்க
அரிவனம் தன்னிற்போக
சங்கரன் பிச்சை யேற்க
சதுர்முகன் எழுதினானோ
அங்கவ னெழுதினால் மற்
றவன் தலையற்றுப்போக
இங்கெவ வெனழுதினால் சொல்

லிது வெல்லாமையந்தானே

பொருள் :- ஐங்கரன் என்னும் பிரம்மா தன் தலையையிழந்ததும், ஹிரி என்னும் விஷ்ணு, ராம அவதாரத்தில் தன் பெண்சாதி சீதையோடு வனவாசம் போனதும், சங்கரன் என்னும் மகாவேதனென்னப்பட்ட சிவன், பிச்சை கேட்டிறந்து, அலைந்து திரிந்ததும், சிருஷ்டி கர்த்தாவென்னும் பிரம்மா எழுதின விதிதானோ? இது உண்மையானால் பிர்ம்மா தன் தலையையிழக்க விதியெழுதியது யார்? என்பதாம்.

தேவர்கள் என்னும் மும்மூர்த்திகள், பஞ்சகர்த்தாக்கள், முப்பத்துமுக்கோடி தேவர்கள் முதலானோர், நடத்திய துர்க்கிரியைகளையும், அனுபவித்த இம்சைகளையும், பிர்ம்மா எழுதிய விதிப்பயனும், சனி பகவானின் ஆட்சியும் என்றால், இது பராபரவஸ்துவின் லட்சணங்களுக்கு தகுதியாகுமா?

கவி விருத்தம்

உலகிலே பிறந்த முன்னோர்
ஓதிய கலைகளெல்லாம்
நிலையதாம் சோதி தன்னை
நிசமதாய்ச் சொன்னதில்லை
பலபல பேதமாகப்
பங்கமாய் கூறுசெய்தே
அலகைப்போல் பொய்யைப்பேசி
அருநரகிலழிந்துப் போனார்.

இது, பூர்வீகத்திலிருந்த சாஸ்திர புராணகாவிய கிரந்த காத்தாக்கள், தாங்கள் எழுதிய வேதநூல் என்னப்பட்ட ஆகமங்களில் பராபரவஸ்து என்னும் பரஞ்சுடரொளி ஒன்று உண்டு என்று தெளிவாய் எழுதவில்லை. பலபல பேதங்களாக இழிவுபடத்தக்க கதைகளை உண்டாக்கிப் பிளவுரச் செய்து, பேய்கள் போல் பொய்பேசி நரகில் விழுந்தழிந்து போனார்கள் என்பதாம்.

மற்றொரு கவி

கல்வியைப் பெருமையாகக்
கதரியே திரிவார் புல்லர்

சொல்லிய ஞான நூலின்
சூட்சத்தையறியமாட்டார்
வல்லவர் நாங்களென்று
வாதுகள் மிகவேபேசி
எல்லையில்லாத கன் மத்
தெய்தியே மூழ்குவாரே

பொருள் :- ஆழந்த, வேதாந்த ஆராய்ச்சி அறிவற்ற சிற்றறிவுடையோர், ஞான நூலென்னும் சத்திய வேதத்தில் காணும் பாரபரவஸ்து ஒன்றென்னும் அறிவையடைய மாட்டார்கள். ஆதாரமற்ற பல வாதங்களையும் குழப்பங்களையுமே பேசி, தங்கள் கல்விப் பெருமையையே உயர்த்திக் காட்டி, தாங்களே வல்லவர்கள் என்று வாதிட்டுப்பேசி, எண்ணற்ற பல துர்க்கருமங்களைச் செய்து நரகில் மூழ்கி அழிவார்கள் என்பதாம்.

சிருஷ்டிப்பில் எண்பத்துநாலு லட்சம் ஜீவன்கள் உண்டு என்னும் நம்பிக்கைப்படி, யாவற்றிலும் மேலான சிருஷ்டியாய் படைக்கப்பட்ட மனிதன் தன்னை உண்டாக்கிய சிருஷ்டி கர்த்தன் ஒருவன் உண்டு, என்பதை அறிவால் ஆராய்ந்து மெய்ப்பக்தி செய்து முக்திசேரும் வழியைக் கண்டு கடைபிடித்து வாழாவிட்டால், மனித வாழ்க்கையின் மேன்மையின் முடிவு எத்தனை பரிதாபமான நிலையில் மறுமையில் அவனை தொடர்ந்து, நீடுழிகாலம் வாதைக்குள்ளாக்கும் என்பதை வாசித்தறிந்து தேர்ச்சி யடையுங்கள். இதுவே மனிதப் பிறவியின் சிறப்பும், பொறுப்பு மென்பதை மறவாதிருங்கள்.

5

பிரம்மாவின் வரலாறு

இதுவரை தேவர்கள் பிறப்பின் வரலாறும், மும்மூர்த்திகள் பிறப்பின் வரலாறும், பொதுப்படையாய் விளக்கிக் காட்டப்பட்டது. பின்வரும் பிரிவுகளில் மும்மூர்த்திகளின் நடபடிகளைத் தனிப்பட்ட முறையில் விளக்குவதை கூர்ந்து ஆராய்ந்து சிந்தித்தால் மேலான பக்தி உணர்ச்சியை உள்ளத்தில் உருவாக்குமென்பது பெரும் உண்மை.

பிர்ம்மா, மும்மூர்த்திகளில் ஒருவர் பிர்ம்மாவே, கண் காணும் சர்வ படைப்புகளுக்கும் சிருஷ்டிகர்தாவென்பது வேதாந்த நம்பிக்கை, பிர்ம்மா, பல நாமங்களால் அழைக்கப்படுகிறார்.

பிர்மாவின் மறுநாமங்கள்

அந்தணன் - அன்னவூர்தி - இரண்யகறப்பன் - இறை - எண்கணன் - ஓதிமுலர்த்தோன் - கமலயோனி - கம் - குரவன் - தமனியன் - தாதா - திசைமுகன் - நான்முகன் - பகவன் - பங்கயன் - பரமேட்டி - பாரதிகொழுநன் - பிதாமகன் - போதன் - மண்பொதுத் தந்தை - மலரோன் - மாலுந்தி வந்தோன் - மான்மகன் - வரன் - வாணிகேள்வன் - விதாதா - விதி - விரிஞ்சன் - வேதா, என்பன.

பிர்மாவின் மனைவி பெயர் சரஸ்வதி. பிர்மாவின் ஆயுதம் பாசம். கொடிமறை (வேதம்). வாகனம் அன்னப்பட்சி. ஆயுஷியம் ஒரு கற்பம்.

ஆசனம் தாமரைமலர்.

பிரம்மா ஐந்து தலைகளுடன் பிறந்த காரணத்தால் பஞ்ச முகப்பிர்மாவென்று அழைக்கப்பட்டாராம். பிந்தின காலங்களில் கீழ் விவரிக்கும் காரணத்தால், தன் ஒரு தலையற்றுப் போகவே, சதுர்முகப் பிர்மாவென்று அழைக்கக் காரணமாயிற்றாம். பிர்மாவின் சுரூபத்தை நாலுமுகமும், நாலுகையுமுடைய பொன்னிறச்சுரூபமாய்ச் செய்து, வெண்ணுடை உடுத்தி வைப்பது வழக்கம். பிர்மாவின் சுரூபத்தின் ஒரு கையில் சாவாமைக்கு அடையாளமாய் சக்கரத்தையும் மறு கையில் வல்லமைக் கடையாளமாய் அக்கினியையும், மற்ற இரு கைகளில் வேதத்தையும் பிடித்திருக்கக் காணலாம்.

ஐந்து தலையுடன் பிறந்த பிர்மாவின் ஒரு தலையற்றுப் போனதை சித்தரித்து விளக்க பலகதைகள் உண்டு. தேவர்கள் எல்லாருங்கூடி சிவனுக்கு கலியாணம் முடித்து வைக்க முகூர்த்த வைபவம் நடத்துகையில், சர்வ படைப்புக்கும் சிருஷ்டி கர்த்தாவாகிய பிர்ம்மா, மணவறை மண்டபத்தில் அமர்ந்திருந்த சிவன், பெண்சாதியான பார்வதியின் கால் பெருவிரலை திரைச்சந்திரன் வழியாய்க் கண்டு மோகித்து இச்சித்தார் என்றும், அந்த காம வேட்கையால் பிர்மாவின் விந்து பூமியில் நழுவி விழவே, பிர்மா அதை நீளமாய்த் தேய்க்கவே, அதிலிருந்து கோப்புச்சந்தன பார்ப்பனர்கள் பிறந்தார்களென்றும், அதன்பின் இரண்டு விரலால் ஊன்றித் தேய்க்க; நாமதாரிப் பிராமணர் பிறந்தாரென்றும் மூன்று விரலால் குருக்கித் தேய்க்க, விபூதிப் பிராமணர் பிறந்தார்களென்றும், பின்பு அதையெல்லாம் குழைப்பித்தேய்க்கவே மல்லக்கசட்டிகள் பிறந்தார்களென்றும் பிர்மாவின் இவ்வகைச் செய்கையால் நாலுவிதப் பிராமணர்கள் உண்டானார்கள் என்றும் அப்பொழுது மகா பிராமணர்களுடைய சந்தடிகளைக் கேட்ட சிவன், பிர்ம்மா ஒருவன் தானே இருந்தான், இத்தனை பிராமணர்களும் கூடிக் கொண்டு வேதம் ஓதுகிறதெப்படி என்று யோசிக்க. பிர்மா தன் மனைவி பார்வதியை மோகித்து இச்சித்த காரணம்தான் என்பது தன் அறிவுக் கெட்ட, சிவன் மகா கோபத்துடன் வந்து, பிர்மாவின் ஐந்து தலையில் ஒன்றைக் கிள்ளிவிட்டதாய் தெரிகிறது.

மற்றொரு கதையில், சிவனுக்கும், பிர்மாவுக்கும் ஐந்து தலைகள் இருப்பதால், தன் மனைவி பார்வதிக்குத் தன் புருஷன் யார் என்று குறிப்பு அறிய முடியாமல் வெட்கிப் போனதால், சிவனுக்குக் கடுங்கோபமூண்டு, பிர்மாவின் தலையில் ஒன்றை கிள்ளிவிட்டதாயும் கூறப்பட்டிருக்கிறது. பின்னொரு கதையில், பிர்மா காயத்திரி, சாவுத்திரி, சரஸ்வதி ஆகிய

பெண்களோடு கூடியிருந்ததுமல்லாமல், தன் மகளாகிய ஊர்வசியை,இச்சித்து மோகித்து, அவளைத் துரத்த ஊர்வசி தன் சுய ரூபத்தில், தன் தகப்பன் பிர்மாவை கூடிப்புணர வெட்கி, இருவரும், மான் உருவெடுத்து காட்டில் பலநாள் கூடிப்புணர்ந்து சஞ்சரித்த கோலக் கொடுமையை விவரிக்கவொன்னா முறைகேடான காமக்கிரியை என்று கண்டசிவன், கடுங்கோபமூண்டு பிர்மாவின் தலையில் ஒன்றை கிள்ளி விட்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது. பிர்மாவின் வெட்டுண்ட தலை, குருநாதனாகத் திரிகிறதென்றும், அது தான் மிருக சீரிட நட்சத்திரமென்றும், பலர் பலவகையாய் உறுதியற்ற முறையில் தங்கள் மனத்தோற்றப்படி சொல்லுகிறார்கள். இதன் முழு விவரங்களை கிரியை வாசகத்தில் தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.

பின்னொரு கதையில் பிர்மாவுக்கும், சிவனுக்கும் தர்க்க முண்டாகி பிர்மா சிவனை நோக்கி, நான் உன்னை சிருஷ்டித்த படியால் நானே உன்னிலும் பெரியவன் என்று சொல்ல, சிவன், பிர்மாவைப் பார்த்து, நானே உன்னைவிடப் பெரியவன் என்று தர்க்கிக்க; சிவன் கடுங்கோபங்கொண்டு, பிர்மாவின் தலையில் ஒன்றை கிள்ளிவிட்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வகையிற் பார்த்தாலும், இக்கதை பிர்மா, தன் தலையில் ஒன்றையிழந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது அல்லவா? இதை விளக்கும் ஓர் விருத்தம்.

பேரின்ப மணிமாலை

ஐங்கரன் தலை யிழக்க அரிவனந்தன்னிற் போக
சங்கரன் பிச்சையேற்க சதுர்முகன் எழுதினானோ
அங்கவனெழுதினால் மற்றவன் தலையற்றுப் போக
இங்கெவன் எழுதினான்சொல் இதுவெல்லாம் மையந்தானே.

பொருள் :- எல்லார் தலையிலும் விதியெழுதினவர் பிர்மாவானால், இந்த பிர்மாவின் தலை அற்றுப் போக விதி எழுதினவன் யார்? என்பதே. வாசகரே இதை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

பிர்மா, வைகுண்டத்திற் சென்று, மேற்சொன்ன காரணங்கொண்டு தர்க்கிக்கவே, விஷ்ணுவும், பிர்மாவும் கோபங்கொண்டு, பிர்மா விஷ்ணுவை நோக்கி, உன்னை என்னிலும் பெரியவனாக்கி, நான் உன் உந்தியிற் பிறந்தவனென்று எப்படிச் சொன்னாய்? சுவரில்லாமல் சித்திரம் வரைய முடியுமா? நான் சர்வத்தையும் சிருஷ்டிக்காவிட்டால், நீ அவற்றை இரட்சிப்பது எப்படி? இன்று முதல் உன் இரட்சிப்பின் செருக்கைவிடு

இல்லையேல் உன் இரட்சிப்பின் அலுவலை நடத்த வேறொருவனை உண்டாக்குவேன். உன்னை அசுராதிகள் வந்து சூழந்துகொள்ளுமுன், ஒடி திருப்பாற்கடலில் ஒளித்துக் கொள் என்றார். எனவே இருவருக்கும் கடும் போர் முண்டு ஒருவரையொருவர் ஆகாயத்தில் வீசி எறிந்து சகலரையும் நடுநடுங்கச் செய்து, அதல, குதலம் பண்ணவே, மலைகள் பொடிப்பொடியாக, தடாகங்கள் வெடித்து, சந்திர சூரிய, நட்சத்திர ராசிகள் மறைந்து, பூமியை சுமக்கும் ஆதிசேடன் தாங்க முடியாமல் தன் தலையை நெளிக்க, தேவர்கள் இது கற்ப முடிவோவென பயந்து, தேவேந்திரனோடு போய், சிவனை நோக்கி அபயமிட்டார்களாம். இதை அருணகிரி புராணம். திருமலைச் சுருக்கம் 14 முதல் 40 முடிய பார்க்கவும்.

தேவர்களும், தேவேந்திரனும் இட்ட அபயசத்தம் கேட்ட சிவன், சகல லோகங்களும் உருகத்தக்க அக்கினி மலையாய் நிற்கவே, இருவரும் போரை நிறுத்தி, இம்மலையின் அடிமுடியைக் காண்பவனே பெரியவன் எனத் தீர்மானித்துக் கொண்டு பிர்மா, அன்னப் பட்சிரூபமாயும், விஷ்ணு பன்றி ரூபமாயும் மாறி, அக்கினிமலை உருவில் நின்ற சிவனின் அடிமுடியைக் காணப்போனார்களாம். பன்றி உருவில், சிவன் பாதத்தைக் காணப்போன விஷ்ணு, காணமுடியாது உடன் திரும்பி விட்டாராம். அன்னப்பட்சி உருவில் சிவன் தலையைக் காண வெகு தூரம் பறந்து சென்ற பிர்மா, இனி பறந்து போய் காணமுடியாதென்பதை உணர்ந்து, சிவன் முடியிலிருந்து நழுவி விழுந்து வந்து கொண்டேயிருந்த கேதகி என்னும் தாழம் பூவைப்பார்த்து, அது வந்து கொண்டிருக்கும் வரலாற்றை வினவ, தாழம் பூ பிர்மாவிடம் நான் எவ்வளவோ நாளாய் வந்து கொண்டேயிருக்கிறேன், நீர் சிவன் முடியை பறந்து போய் பார்க்க வைத்துள்ள ஆசையை விட்டு விடும் என்று சொல்லவே, அப்படியானால் நான் சிவன் முடியை நேரில் போய் கண்டதாக விஷ்ணுவிடம் சொல்லி விடு என்க, அப்படியே தாழம்பூவும் சொல்ல, அந்த க்ஷணமே அக்கினி மலைவெடித்து சிவன் அதிலிருந்து புறப்பட்டு பொய் வார்த்தை சொன்ன பிர்மாவையும், தாழம்பூவையும் சபித்து, விஷ்ணு மேல் சந்தோஷப்பட்டதாயும், இந்த அக்கினி மலையே திருவண்ணுமலையாக ஆச்சுதென்றும், அருணுசல புராணம் திருமலைச் சுருக்கம் 40-ம் பாடல் முதல் 70-ம் பாடல்வரை சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றில் பிர்மா வசனித்த பொய்யைக் காட்டும்பாடல் 63 முதல் 68 வரை பார்க்கவும்.

விருத்தம்

சீதரா கேட்டியென வரவின் செய்கையைக்
காத நூறாயிரங் கணத்திலே கடந்
தாதியான் முடியறிந்தனுகி னேனென

ஓதினான் கேதகை யுள்ளதென்றதே.

பொருள் :- சீதரா மகாவிஷ்ணுவே, என் வரவின் செய்கையை கேளாய்; ஒருக்ஷணத்தில் நூறாயிரங் காதம் பறந்து கடந்து போய். ஆதியனாகிய அக்கினி மலையின் முடிவைக் கண்டு வந்தேன் என்கவே, கேதகையாகிய தாழம் பூவும், உண்மையெனச் சாடசிசொல்லிற்று என்பதாம். இப்பொய் வார்த்தையினிமித்தம் பிர்மாவை சிவன் சபித்தல்.

பாட்டு 68

ஆசையா லுருகுமவ்வரி தனன் புகண்
டீசனும் பலவா மினிது நல்கினான்
வாசமாமலர் வரவுனக்கு மண்ணின் மேற்
பூசையுங்கோவிலும் போகவென்றனன்.

பொருள் :- ஆசையால் உருகித் துதி தோத்திரம் பண்ணித் தொழுத விஷ்ணுவுக்கு, சிவன் பலவரங்கள் அளித்தும், பிர்மாவையும், தாழம் பூவையும் பார்த்து உனக்குக் கோயிலும், பூசையுமில்லாமல் போகக் கடவதென்றும் சாபமிடலாயிற்றென்பதாம்.

இதே கதையைப் பற்றி சிவபுராணம் வித்தியேசுவரசம் ஹிதா, 7-ம் அத்தியாயத்தில், எழுதியிருப்பதை பார்க்கவும். அது பின்வருமாறு : - பிர்மாவுக்கு தாழம் பூ பொய்ச்சாட்சி சொன்தைக் கேட்ட சிவன், தன் புருவ மத்தியிலிருந்து வைரவனைச் சிருஷ்டித்து, பிர்மாவின் தலையில் ஒன்றை அறுத்தெரியச்செய்து, பிர்மாவை நோக்கி, ''அடே பிர்ம தேவா! நீ பெருமையை விரும்பும் பொய்யர்களுக்குத் தலைவனானாய், இதனால் உனக்கு உலகத்தில் உபசாரம், ஆலயம் உற்சவம் முதலியன இல்லாமற் போகட்டும்'' என்று சாபம் பெற நேரிட்டதாம். பின்னும் சிவன் தாழம் பூவைப் பார்த்து, 'அடே பொய்யனே! இதை விட்டு எங்கேனும் .தூரத்தில் போய்விடு, நான் இனிமேல் உன்னை விரும்பேன் என் பூஜைக்கு நீ உதவமாட்டாய்'' என்று சிவன் சாபம் இட்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது.

சிவன் தன்மேல் கோப முற்றிருப்பதாகக் கண்ட பிர்மா இனிப்பிழைப்பது அசாத்தியமென்று உணர்ந்து அடியற்ற பனைமரம்போல, சிவன் பாதங்களில் விழுந்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. பின் சிவன், மனதிளகி, பிர்மாவை நோக்கி, இனி பிராமணருக்கு பூலோகத்திலே செய்யும் பூசை தான தர்மம்யாவும் உனக்கு பிரீதியாய் இருக்கக் கடவது. இனி எல்லாவற்றையும் உண்டு பண்ணென்று வரங்கொடுத்துப் போகும் பொழுது, சிவன் லிங்கமாயத் தோன்றி, கார்த்திகை மாதம், கார்த்திகை

நட்சத்திரத்தன்று சதா திருவண்ணுமலையில் நிற்போம். சிகரத்தில் சோதி காட்டுவோம். அதைக் காண்பேோர் பாவமும், தரித்திரமும் நீங்க அவரவர்வம்மிசம் 21 தலைமுறைக்கு முக்தியடையுமென்று சொல்லிப் போனதாய் அருணுசல புராணத்தில் இருப்பதைப் பார்க்கலாம்.

அக்கினிமலை சிவலிங்கமாய் மாறினது உண்மையானால் அருணாசலத்து உண்ணுமலை எண்ணும் பெண்சாதி வந்தது எப்படி? என்பதை கூர்ந்து அறிய வேண்டியது மிக அவசியம்.

பிர்மா, விஷ்ணுவுடன் போர் புரிந்தார் என்றால், வடக்கேயிருந்த வைகுண்டம் தெற்கே, திருவண்ணாமலைக்கு வந்த வகை எப்படி என்பதும் அறிய வேண்டிய விசேஷம். ஒருவேளை ஒருவரையொருவர் வீசி எறியும்போது, வேகத்தில் உருண்டு வந்து திருவண்ணுமலையண்டை விழுந்திருப்பார்களோ என்று எண்ண ஏவுகிறது. பிர்மாவின் நடபடியைப் பற்றி, கந்தப் புராணத்தில் உள்ளது பின்வருமாறு :-

கந்தப் புராணம் - மார்க்கண்ட படலம் 12-ம் பாட்டு

கூன் முகததிங்கணெற்றிக் கோதையர் குழுவுக் கெல்லாந்
தான் முதலிறவியாகத் தன் கையாற் சமைக்கத்தக்க
மான்முகனோக்கி முன்னோர் மலரயன் மையலாகி
நான்முக மானானென்ப நாம் முணராததன்றே

பொருள் :- பிர்மா, தானே படைத்த தன் மகளாகியதிலோர்தமையின் மேல் மோகங்கொண்டு, இச்சித்து துரத்தவே, தன் தகப்பன் பிர்மாவின் மோக இச்சைக்க சம்மதியாது திலோர்தமை ஒட, பிர்மா, தன் நாலுமுகங்களாலும் நாலுபக்கமும் பார்த்து ஒட, பின் திலோர்தமை பெண்கிளியாய் மாறியதும், பிர்மா உடன் ஆண்கிளியாய் உருமாறி காமலீலை புரிந்ததால் ஒரு தலையையிழந்தான். இது நாமறிந்த உண்மையென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வகையில் மோக வேட்கையில் ஈடுபட்டார் அட்டவணையில் சிலதை கீழே காண்கவும்.

பஞ்சாட்சர பசு பாச விளக்கம்

17-ம் பாடல்

காமத்தாலிந்திரன் கலக்க மெய்தினான்
காமத்தாலிராவணன் கருத் தழிந்தனன்
காமத்தாற் கோசிகன் கவலையுற்றனன்
காமத்தாலிறந்தவர் கணக்கில்லார்களே

அருணாசல புராணம் - பாவந் தீர்த்த சருக்கம்

12-ம் பாடல்

வகுத்தனன் திலோர்தமை யென்னும் வஞ்சியை
உகுத்தனன் வலியை நன்மதியை யோட்டினன்
மிகுத்ததோர் விஞ்சையிற் புலியின் வேட்டுவன்
அகத்துடலழித்துட லளிப்ப தென்னவே

13-ம் பாடல்

மன்மதன் கணையினான் மயங்கி வாடுமென்
தன்மையை யறிந்து நான் றனக்குத் தாதையென்
றென்மனம் பொருந்திலா தென துகையுறாள்
மும்பினி னொளிக்க நான் முகமுந் தேடினேன்.

14-ம் பாடல்

கன்னி மானாகச் சென்றாள் கலையதாய் தொடர்ந்தேன் பேட்டு
வன்னியாய் பறந்தாள் சேவல் வடிவமாய் தொடர்ந் தேன் மங்கை
பின்னையோர் பதியுங்காணாள் பிறங்கலாமருணை நாதன்
தன்னை தூரக் கண்டாள் சரணமென்றுரைத்துச் சார்ந்தாள்

12, 13, 14-ம் பாடல்களில், பிர்மா, தன் ஜீவியத்தில் முறைகேடாய் நடந்து கொண்டதை விளக்கிச் சொல்வது :-

பிர்மா, திலோர்தமையை உண்டாக்கி, அவளை மோகித்ததால், தன் புத்தியை இழந்ததாயும், தன் துர் இச்சைக்கு மகள் சம்மதியாதோட, பிர்மா அவளை நாலுபக்கமும் தேடிக் கண்டபொழுது, அவள் பெண்மானாகி ஒடவே, பிர்மா, ஆண் மானுருவில் தொடர்ந்து ஓட, பின் அவள் பெண் கிளியாய் மாறிப் பறக்க, பிர்மா, ஒர் ஆண் கிளியாகிப் பறந்து தொடர, அவள் தப்ப வேறிடம் காணமல், அருணாசலத்தைக் கண்டு நீயே கதி என்று சரண் அடைந்து தப்பினாள், என்பதை விளக்கும் பாடல், இது பிர்மாவின் தெய்வீக லட்சணங்களுக்கு மாறாய் ஜீவியத்தில் கண்ட பழுதுகளை விளக்கி ஒர் ஞானியார் பாடியது.

விருத்தம்

தான் பெற்ற பெண்மேல் விகாரத்தினை கொண்டு தளாவுறு...
மான் பெற்றகான் மத்தகங் காண்கிலாமற் பொய்யுரை சொற்றனன்
கான் பெற்ற முனிவன் கரைத்திட்ட சாபத் திறனி யற்றனன்
தேன் பெற்ற மலர் நான்முகத்தானையுந் தெய்வமெனலாகுமோ?

பொருள் :- தேனினையுடைய தாமரை மலரின் நான் முக சுரூபமாயமைந்துள்ள பிர்மா, தன் மகள் திலோர் தமையை இச்சித்துச் சேர்ந்ததுமன்றி, சிவன் முடியைத் தேடி, காணமுடியாது போயும், கண்டேனென பொய்சொல்லி, சிவன் சாபமிட, தனக்குக் கோயிலும், பூசையுமில்லாமற் போனது. அத்திரி முனி பத்தினியிட்ட சாபத்தால், கல்லாயும் போனான் இவனைத் தேவன் எனலாமோ? என்பதாம்.

இன்னமும் பிர்மாவின் ஜீவியத்தில் காணப்பட்ட தகாத துர்ச் செயல்களை, அருணகிரி புராணம், திருமலைச் சருக்கம், 17முதல், 48-ம், 70-ம் பாடலிலும், பாகவதம், மூன்றாவது ஸகந்தம், கபிலர் தாயாருக்குத் தத்துவமுரைத்த அத்தியாயம் 48-ம் பாட்டிலும், பாகவதம் 10-ம் ஸ்கந்தம் மூன்றாவது பிருகு முனி சென்ற அத்தியாயத்திலும், ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும், அருணாசல புராணம், பாவந் தீர்த்தசருக்கம், 11-ம் பாட்டிலும், கந்தப் புராணம், காம தகன படலத்தில், 11-ம் பாட்டிலும், உத்தரபடலம் 65-ம் பாட்டிலும், பாரதம், ஆதி பருவம் தரும புத்திராபிஷேகச் சருக்கம் 67-ம் 68-ம் பாடலிலும், கர்மகாண்ட படலம் 12-ம் பாட்டிலும், அகத்திய படலம், 2-ம் பாட்டிலும், வாசகர்களே, தேடி வாசித்து திட்டமாய் அறிந்து கொள்ளலாம். பிர்மாவைப் பற்றி ஞானச்சித்தர் கோவையில் காணும் கவி.

சிவ வாக்கியர்

மண்டுவங்கள் போல நீர் மனத்து மாசறுக்கிலீர்
குண்டுவங்கள் போல நீர் குளத்திலே முழுகுவீர்
பண்டு முங்கள் நான்முகன் பறந்து தேடிக் காண்கிலான்
கண்டிருந்து மும்முளே கலந்துணர்ந்து காணுமே

ஆசிரிய விருத்தம் - பேரின்ப மணி மாலை

அன்ன வாகனமுமாகி யரனடி முடிகாணுமற்
தன்னிலே யயர்ந்து பொய்யைச் சாற்றியே தலை வெட்டுண்டு
கன்னல் வில்வேலால் நொந்து, கலைதனைப் புணர்ந்தோன் தன்னை
யுன்னியே கடவுளென்றா லுலகுளோர் நகைத் திடாரோ?

பொருள் :- அன்ன உருவிற் பறந்து சிவன் முடி காணுமலும், பத்தினி பலரின் கற்பழித்தும், பொய்சொல்லி சாபம் பெற்றும், இவ்வகையில் இழிவான லட்சணங்களையுடைய பிர்மாவை தேவன் என்று சொன்னால் உலகத்தோர் நகைக்க மாட்டார்களோ? என்பதாம்.

வேறொரு விருத்தம்

அம்புவியு மாருதமும் புனலுந்தீயு

மாகாயப் பரப்பும் பேரண்டந் தானும்
மும்பருமாய் மாண்டிறந்த காலந்தன்னி
யோங்கு மரி யொருவனுமே யுளனாய் நின்றான்
பம்பியசீர் புனைந்திடுமவ் வரியினாபிப்
பங்கயத்தினான் முக னுற்பவித் தானந்தச்
செம்பது மத்தான் பெற்றான் சிவனையென்று
தெளிவாக வெகுவிருக்கிற் செப்புமன்னோ

பொருள் :- பிர்மாவுஞ் சிவனும், மற்றுள்ள சிருஷ்டிப்புகள் அனைத்திற்கும்; விஷ்ணுவே முதற் காரண கர்த்தன் என்றும், விஷ்ணு புராணத்தில் உள்ளபடி, தொப்புளில் பொற்றாமரை முளைத்து, அதிலிருந்து பிர்மா பிறந்தார், விஷ்ணு தன் வயற்றில் வைத்திருந்த உலகமனைத்தையும் பிர்மாவிற்கு காண்பித்து, நீ கண்ட உலகங்களையெல்லாம், நிர்மிக்க வேண்டுமென்று சொல்ல, அப்படியே பிர்ம்மா உண்டாக்கினாராம். அதாவது, தன் முகம், தோள், நாபி, உரு (லிங்கம்) என்னும் நான்கு இடங்களிலிருந்து, நால்வகை ஜாதிகளான, பிராமணர், ராஜாக்கள், வைசியர், சூத்திரரையும், உண்டாக்கின தாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவரை விளக்கிக் காட்டிய கதைகள், பிரம்மாவின் தெய்வ இலட்சணங்களைக் கறைப்படுத்தும் வகையில், பொருத்தமற்ற பயங்கர அக்கிரம காமலீலைகள் நிறைந்த தாய் காணப்படுகிறதே! ஆத்மீக பக்தி அறிவிற்கு பயன் படுத்தக் கூடிய கடுகத்தனை தூய்மையாவது ஜீவியத்தில் இல்லையே !

சர்வ படைப்புகளுக்கும் சிருஷ்டி கர்த்தாவென்னும் பிர்ம்மா, சிவன், கிள்ளி, எரிந்த தன் சிரசில் ஒன்றை கிள்ள விடாது, காப்பாற்றவோ, அல்லது மற்றொரு சிரசை, தனக்கு சிருஷ்டித்துக் கொள்ளவோ முடியாத வல்லமையற்ற நிலை, பிர்ம்மாவின் தெய்வ லட்சணத்தை முற்றும் மறுக்கச் செய்கிறதே! பிர்ம்மா தான் இழந்து போன தன் சிரசை பெற்றுக் கொள்ள தவஞ்செய்கிறார். என்றால், எந்த தேவனை இவருக்கு மேற் பெரிய தேவனாய் மதித்து தவஞ் செய்கிறார்? என்பது நம் அறிவு ஆராய்ச்சியில் கண்டு தெளிவு பெற வேண்டிய ஓர் விசேஷம். சகல ஜீவகோடிகளுக்கும் விதி எழுதுவது பிர்மாவின் பொறுப்பானால், தன் தலை அறுபடாமலிருக்க நல்ல விதி எழுதாமைக்குக் காரணம் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இதனால் யாவருக்கும் பிர்மா விதி எழுதுகிறவர் என்பதை நம்ப இடமில்லாமற் செய்து விட்டதே!

ஆயிரமாயிரம் ஒரே தலையுள்ள ஆண்களில், தங்கள் புருஷன்மாரைக்

குறிப்புகண்டு அவர்களுடன் கற்புடன் வாழ்க்கை செய்யும் இக்காலத்துப் பெண்கள், இரண்டே ஐந்து தலைகளுடன் இருந்து (சிவன் - பிர்ம்மா) தங்கள், புருஷன்மாரின் குறிப்பு கண்டு வாழ்க்கை செய்ய முடியாமற் கற்பிழந்த தேவிமார்களைவிட, எத்தனையோ ஆயிரமடங்கு கற்பிற் சிறந்த உத்தமிகள் என்ற நாம் புகழ் ஆரமிட்டு போற்றத்தகும்.

பிர்ம்மா, தன் மகள் ஊர்வசி, திலோர் தமைமேல் மோகித்து இச்சித்து, இருவரும் மானாயும், கிளியாயும் உருமாறி முறைகேடாய் நடத்திய காமத் துர்க் கிரியைகள், தேவர்களில் காணும் லட்சணம் ஆகுமா? பிருகு முனி, அத்திரி முனி இவர்களின் பத்தினிமார்களை இச்சித்து, பிரம்மா நிறைவேற்றிய காமச்செயலால் பெற்ற சாபத்தை நிவர்த்தி செய்யமுடியாமற் போனது, பிரம்மா, சிருஷ்டி கர்த்தா என்பதை உறுதிப்படுத்த இடம் தரவில்லையே! இவையனைத்தையும் வாசகர்களே வாசித்தறிந்து நிதானிப்பது மிகச் சிறந்தது.

முன் சொன்னபடி பிர்மாவுக்கு, ஜென்ம நட்சத்திரம் ரோகிணி என்றும் அவரின் ஆயுள் ஒரு கற்பமென்றும் கணக்கிட்டு, உலகில் மனிதர் பிறந்து, இறந்து, அழிந்து போவது போல், தேவர்கள் என்பவர்களும், ஒரு குறிப்பிட்ட ஆயுள் வரையிருந்து பின் மரித்துப் போவதும், மற்றொருவர் பிர்ம்மா பதவிக்கு வருவதென்றால் இவ்வனுபவம் தேவர்கள் பதவிக்கு பொருத்தமாகுமா? இவ்வகையிற் காணும் விபரீத கோட்பாடுகளை, நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டியது மிக அவசியம்.

மனிதர் வாழ்க்கையில் காண அரிதான காமச் சேஷ்டைகள், தேவர்களில் உண்டென்றால், இவர்களை தேவர்களாய் மதித்து தொழுவதால் பலன் ஏதும் உண்டாகுமா? பிர்ம்மாவின் பொய் வசனிப்பால், தனக்கு ஒருகோயிலும், பூசையும், தேரும், திருவிழாவும், தீர்த்தமும், இல்லாமற்போக, சாபத்தை கொண்டு வந்து விட்டதே!

மனிதரைப் போல், பாவகர்மங்களைப் புரிவதில் விடுதலையில்லாது, பாவத்தையே செய்து, கல்லாயும், கன்றுக்குட்டியாயும், குழந்தையாயும் சாபமேற்று நிவர்த்தி செய்து கொள்ள வல்லமையற்றவர்களை, தேவர்களென்று வழிபட்டு வணங்குவோர்க்கு, பாவ விமோசனமளித்து, முக்தி பதவியளிப்பது எவ்வகையில்? வாசகர்களே சிந்தியுங்கள்.

தேவர்கள், ஒருவர் மனைவியை மற்றொருவர் திருடுவதும், தபயோகிகள் வரத்துக்காய் கையேந்தி நிற்கையில், அவர்களை வஞ்சித்து, அவர்களறியாமற்போய், அவர்கள் பத்தினிமார்களின் கற்பிற்

சிதைவுண்டாக்குவதும், அவர்களால், சாபம் பெற்று அனுபவித்தார்கள் என்பதும், தெய்வலட்சணத்தில் எத்தனை பெரும் தூஷணையை உருவாக்கியிருக்கிறது என்பதை விளக்குகிறதே!

அரூபியான, பராபரவஸ்து என்னும் ஒன்றான தெய்வம், தூயமை சிறந்த மாசற்ற சுரூபி என்னும் போது, மும்மூர்த்திகள் ஜவியத்தில், தங்கள் குல ஸ்திரீகளுடனும், பிள்ளைகள், மட்டுமல்லாது, பல பரஸ்திரீகளுடனும், கூடிக் காமிகளாய்த் திரிந்தார்கள் என்னும் கதைகள், தேவர்கள் என்போர், மனிதரிலும், மிருகங்களிலும் காணக்கிடையாத காம சேஷ்டைகளைப் பிரிந்து, இவர்கள் காமிகள் அல்லாது சுவாமிகள் அல்லவென்று, தெய்வ லட்சணத்தின் மேன்மையைச் சிதைத்துப் பாழ்படுத்திவிட்டதே!

தேவர்கள் ரிஷிபத்தினிமார்கள் இட்ட சாபத்தை நிவர்த்தி செய்து கொள்ள வல்லமையற்றிருந்தார்கள் என்னும் கதை. இத்தேவர்களை விட ரிஷிபத்தினிமார் மிகுந்த தெய்வ தூய்மையும் சக்தியும் நிறைந்த கற்புடையோருமாய் இருந்தார்கள் என்று விளக்குவதுமன்றி, இவர்களில், தெய்வீக மகத்துவ லட்சணங்கள் அறவே இல்லை என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியோல் தெளிவுபடுத்துகிறதே!

அல்லாமலும், தேவர்கள் என்போர், வில், வாள், தண்டாயுதம், சக்கரம், சூலாயுதமென்னும் ஆயுதங்களைக் கரத்தில் பிடித்து, ஒருவருடன் ஒருவர் எதிர்த்துப் போர் செய்து கொடுரக் கொலை புரிந்தார்கள் என்பதும், மனிதர்கள் போல் மரித்து, மண்ணில் அடக்கம் பண்ணப்பட்டார்கள் என்பதும் இத்தேவர்களை மனிதர்களுக்குச் சமமாய் மதிக்கும் எண்ணத்தை உள்ளத்தில் உருவாக்குகிறது இது உண்மையென்று விளக்கும் ஓர் பாடல்.

அகஸ்தியர் ஞானம் 30- பாடல் 72

போக ஒரு தடையுண்டோ அந்த நாட்டிற்
போவதற்குப் பொய்கைதனில் முழுகவேண்டாம்
சாகமுண்டு தலைகீழாய் நிற்கவேண்டாம்
சத்தலிங்க மலரெடுத்து சாத்தவேண்டாம்
தாகமுடன் தீ வளர்த்துக் குதிக்க வேண்டாம்
தாரணியிற் பல பேயைத் தொழவும் வேண்டாம்
ஏகனென்று பீர்மாவை நாடவேண்டாம்
இந்த நூல் பார்த்தறிவீரின்பாய்த் தானே.

பொருள் :- பேரின்ப முக்தி சேர, ஒரு தடையுமில்லை, ஆனால் முக்தி சேர புண்ணிய குளங்களென்று தேடிப்போய் முழுகாதே, கந்தமூலங்கள்

என்னும், காய், கனி, இலை, கிழங்குகள் தின்று, தலைகிழாய்த் தொங்கி நின்று யோகப் பியாசம் செய்யாதே, மலர் எடுத்து சாத்தி பலவித லிங்கபூசை செய்யாதே, பல பேய்களைத் தொழுது சேவியாதே, எகபராபர வஸ்துவான சிருஷ்டிகர்த்தன், பிர்மமாவென்று நம்பி தொழாதே, என் அறிவுரைப் போதனைகளை இன்பமாய்ப் பார்த்து அறிந்து கொள் என்பதாம்.

மறுமையில் நீடூழி வாழ மனஏக்கங்கொண்டு முக்தி பதவியைத் தேடியலையும் பக்த சிரோமணிகளே! மண்ணின் கீழ் புதைந்து மறைந்து கிடக்கும் புதைபொருள் போலுள்ள மெய்ஞானத் திருமறை, என்னும் வேத சாஸ்திர நூலை, வாங்கித் தேடி ஆராய்ந்து, ஒன்றான பராபர வஸ்துவாகிய ஜீவனுள்ள சிருஷ்டிகர்த்தனை அதிலிருந்து கண்டு, கடை பிடித்து தொழுது சேவியுங்கள். அவரே சர்வசிருஷ்டிப்பின் கர்த்தரும், ஆண்டவருமானவர். அவர் அல்லாது வேறொரு தேவரும் முக்தி தரமுடியாது. முன்சொன்ன அகஸ்தியர் நூலையும் ஆராய்ச்சி செய்யுங்கள். இம்மையில் மெய்ஞ்ஞான அருளும், ஒளியும் பெற்று வாழுங்கள். மறுமையில் பேரின்பம் நிறைந்த பொன்னாடு என்னும் முக்தியிற் சென்று நீடுழி வாழ்வீர்கள்.

6

விஷ்ணுவின் வரலாறு

முன் உள்ள தேவர்கள் உற்பவ வரலாற்றிலும், மும்மூர்த்திகள் வரலாற்றிலும், பொதுவாய் விஷ்ணுவின் உற்பவ வரலாற்றை விளக்கிக் காட்டியிருந்தாலும், இந்தப் பிரிவில் விஷ்ணுவின் நடபடிகளை தனித்தொகுதியாய் விளக்கிக் காட்டியிருப்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு.

விஷ்ணு மும்மூர்த்திகளில் ஒருவரான தேவன் விஷ்ணு வென்றால் - இரட்சிக்கிறவன் என்பது அர்த்தம். புராண காவியங்களில், விஷ்ணுவை மகாதேவன் என்று சொல்லப்படவில்லை. விஷ்ணுவுக்கும் பல மறுநாமங்களும், பல அவதாரங்களும் உண்டு.

விஷ்ணுவின் - மறுநாமங்கள்

அச்சுதன்- அரவணைச்செல்வன் - அரி - அரிந்தமன் - அரிதுயிலமர்ந்தோன் - அனந்தசயனன் - உந்திபூத்தோன் -

உவணகேதனன் - கடல் வண்ணன் - கமலக்கண்ணன் - கரியன் - கருடகேதனன் - கேசவன் - கொண்டல் வண்ணன் - சக்கரபாணி - சக்கராயுதன் - சக்கிரி - சங்கமேந்தி - சனர்த்தனன் - சம்பு - சலசலோசனன் - சாரங்கபாணி - சீதரன் - சௌரி - திருநாதன் - துளாய்மௌலி - நாராயணன் - நெடியோன் - பச்சை - பஞ்சாயுதன் - பதுமநாபன் - பிரமன்றாதை - பிள்ளைகேள்வன் - பீதாம்பரன் - பூமிகொழுநன் - பெம்மான் - பெருமான் - மாதவன் - மாயன் - மால் - முகுந்தன் - முண்ட காசனைக் கேள்வன் - வலவன் - வனமாலி - விண்டு வேலைற்றுயின்றோன் என்பனவாம்.

இவையல்லாமல் விஷ்ணுவின் தச அவதாரப் பெயர்கள் பல உண்டு.

தச அவதாரப் பெயர்கள்

1. மச்சன் 2. கூர்மன் 3. வராகன் 4. நரசிங்கன் 5. வாமணன் 6. இந்திரவாசன் - உலகளந்தோன் - திரிவிக்கிரமன் - பரசுராமன் 7. இராகவன் - இராமன் - காகுத்தன் 8. பலபத்திரராமன் - குண்டலன் - அலகை முலையுண்டோன் - கண்ணன் - கிருஷ்ணன் - கோவிந்தன் - தமோதரன் - தேவகிமைந்தன் - நந்தநந்தனன் - பஞ்சவர் தூதன் 9. புத்தன் - மதிசூதனன் - முராரி - என்பதாம். பின்னும் கோபாலன் - கோபிநாதன் - பலராமன் என்பதும் விஷ்ணுவின் பெயர்களே.

விஷ்ணுவின் சுரூபத்தை நாலு கையுடையதாய் கறுப்பு நிறத்திற் செய்து, மஞ்சள் நிற வஸ்திரம் தரிப்பித்து வைத்து வணங்குவார்கள். விஷ்ணு பக்திக்காரரில் தத்துவாதிகள், ஸ்ரீ வைணவர், ராமாஞ்சி மதத்தார், எம்பெருமாள் மதத்தார், சாத்தாதிகள், எனப்பல வகுப்பாய் பிரிந்து, பல மந்திரங்கள், சடங்குப் பிரமாணத்துடன், விஷ்ணுவை ஆதிகாரண தெய்வமென்றும், ஸ்ரீமன் நாராயணுவென்றும், சர்வம் விஷ்ணுமயம்ஜெகத் என்றும் துதித்து தோத்தரித்து வணங்கி வருகிறார்கள்.

பிர்மாவுக்கு ஆயுள் கணித்திருப்பது போல், விஷ்ணுவுக்கும் ஆயுள் கணிக்கப்பட்டிருக்கிறது. விஷ்ணுவுக்கு ஆயுள் 144000000 வருஷங்கள். விஷ்ணுவின் ஜென்ம நட்சத்திரம், திருவோணம்.

விஷ்ணுவுக்கு மனைவி - வைப்பாட்டிமாரும் உண்டு விஷ்ணு மனைவியின் பெயர் லட்சுமி. இவள் பிர்மாவின் உடன் பிறந்த சகோதரி. ருக்மணி, ராதை வைப்பாட்டிமார்கள். இவையன்றி இளம் வாலிபப்பெண்களைக் கற்பழித்துக் கறைப்படுத்தி, சீர்கெடச் செய்த காமசேஸ்டைகள் நிறைந்த கதைகள் ஏராளம் உண்டு.

கல்வியறிவும், நாகரீகமும், நாட்டு முன்னேற்றமும் ஓங்கி உச்சம்

பெற்றுள்ள இக்காலத்தில், புராணக் கிரியைகள் உச்சம் பெற்றிருந்த காலங்களில் நடத்திய கிருஷ்ண லீலையைப் போன்றதொன்று நடந்தேறச் சமயம் பெற்றால், கற்பு நிறைந்த இளம் பெண் மக்களைப் பெற்றுச் சீருடன் வளர்க்கும் அரும் பெற்றோரின் கண்ணும், மனமும், இக்காதல் காட்சியைக் கண்டு சகிக்குமா? கொழுந்து விட்டுத் தாவிப்பறந்து, படர்ந்து சுவாலித்து எரியும் அக்கினிமுன் விழுந்த மெழுகு போல் பொங்கி, உருகாதோ? இவ்விதக் காமச்செயல் புரிவோரை இக்காலத்தில் எவரேனும் கண்டால் மனங்கனிய தேவனென்று தலைகுனிந்து கரங்கூப்பி வணங்க, மனம் இடம் தருமா? இத்தனையும் சேர்ந்ததையே கிருஷ்ணலீலை என்கிறார்கள். இக்காமக் கோட்டிக் காட்சி நாடகக் கதையை கண்கூசாது பார்க்கவும், கேட்கவும் கூடும் கூட்டம் அங்கங்கே எண்ணற்ற பல ஆயிரம் என்பது பொருந்துமல்லவா? ஐயையோ! இது அத்தனையும், காமசேஷ்டை நிறைந்த காதல் காட்சி என்று உணர்ந்து அறியாதிருப்பது, எத்தனை பரிதாபமென்பதை சற்று சிந்தியுங்கள்.

ஒருதரம், கிருஷ்ணன் நடத்திய காதற்செயலால், பார்வதியிட்ட சாபம் பலித்துப் பாம்பாய்ப் போன கதையும், மற்றொரு தரம், தனக்கு மனைவியிருந்தும், திருப்தியின்றி ஓர் காட்டு வேடச்சியை இச்சித்து மோகித்துக் கூடிப்புணர்ந்ததை தன் மனைவி லட்சுமி கேள்விப்பட்டு, கிஷ்ணனை வாசல் வழியாய் நுழையவிடாதபடி, வாசல் காவலருக்குக் கட்டளையிட, கிருஷ்ணன் வேறுவழியாய் உட்புகுந்து வந்ததாயும் கதையுண்டு.

விஷ்ணு, கிருஷ்ணவதாரத்தில் நடப்பித்த காமசேஷ்டைகளும், ரிஷி பத்தினிகளில் உண்டாக்கிய கற்பழிவும், நஷ்டமும் கணக்கற்றதாய் தெரிகிறது. இதன் உண்மையனைத்தும், 5-ம் வேதமாகிய பாரதத்தில் மிகத் தெளிவாய் அறியலாம் அவற்றில், சிசுபாலன் அரசர் கூட்டத்தில் கிருஷ்ணவதாரமெடுத்த விஷ்ணுவின், துர்ச்செய்கைகளில், செவி சாய்த்துக் கேட்டு சகிக்க முடியாத வெட்கத்துக்குரிய பெருங்குற்றங்களை அறவே தள்ளிவிட்டு, அதிற்கண்டபடியே, கீழே விளக்கிக் காட்டியுள்ள சிலவற்றை வாசிக்கவும்.

(பாரதம், சபாபர்வம், 27ம் பக்கம்) :- ''சூது வாது, அக்கிரமம், கொலை, களவு, கள், காமம், முதலியவை நிறைந்த பாண்டமாகிய இந்தக் கரியக்கிருஷ்ணனை ஆக்கிரம கண்ணியனாக்கி, பூசை கொடுவென்று வியாசர் சொல்லுவது தகுதியா.''

''தன்னைப் பெற்ற தேவகியிடத்து ஒரு பெண்ணை உண்டாக்கி வைத்தான்.................''

''ஆச்சியர், வெண்ணையைத் திருடித், திருடித் தின்கிற போது, கண்டுபிடித்து அசோதையிடத்து வந்து முறையிட அசோதையிவனைப் பார்த்து, என்னடா கிருஷ்ணு வெண்ணையைத் திருடித் தின்பது தகுதியா என்க. தன் கையிலிருக்கும் வெண்ணயை நக்கித் தின்று கொண்டே, நான் அறியேன் என்று பொய்மை கூறினான்'' **(பாரதம் - சபாபர்வம் 28-ம் பக்கம் பார்க்கவும்)**

''ஆயர் மாதர்கள் இவன் செய்யும் துடுக்கனைத்தும்அசோதைக்குச் சொல்லி, தங்களுக்கு நன்மை கிடையாதிருப்பதை நினைத்து, திருஷ்டாந்தத்துடன் பிடித்துப் போக வேண்டுமென்று தகுந்த முயற்சியோடிருக்கும் போது, பல நாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுக் கொள்வான், என்ற பழமொழி போல (பாரதம் -சபாபர்வம் 29-ம் பக்கம்) வெண்நெய்யைத் திருடித்தின்ற இந்த கிருஷ்ணன், ஒருநாள் அகப்பட்டுக் கொண்டு, பூனை வாயில் எலிபோல கனவருத்தமுற்றிருக்க, ஆயர் மாதர் இவனைப் பிடித்துக் கல்லுரலிற்கட்டி அசோதைக்குத் தெரியப்படுத்த, அசோதை வந்து திருடர்க்குத் தீர்ப்பிடும் தண்டனையை அவ்விடத்தில் தானே செய்யக் கருதி, இவனைத் தன் கையிலிருக்கும் பிரம்பாலும், ஆயர் மாதர் மத்தாலும் அடிக்க, கிருஷ்ணன் அடிபட்டு ஒ வென்று அலறி, இரண்டு கண்ணிலும், அருவிபோல் ஜலம் வர அழுதான்....''தன்னந்தனியாக ஒரு மாது செல்வாளாகில் அவளைப் பின் தொடர்ந்து, தன் கருத்துக்கிசைந்த விடம் சமீபித்தபோது, வேடரைப் போல் மேல் விழுந்து, கற்பழித்துத்திரிந்தான்'' (பாரதம் - சாபபர்வம், 20-ம், 30ம் பக்கம் காண்க)

''தாயோடு பிறந்த அம்மானாகிய கஞ்சனைக் கிஞ்சித்தேனும் இரக்கமில்லாமல் கொன்று போட்டான்''

தன் தந்தையோடு பிறந்தவளை, அத்தையென்று மதிக்காமல், அவளைக் கூடிப் புணர்ந்தான்.

''இந்தக் கிருஷ்ணனுக்கு, ஏழு மனைவிகள் இருக்கிறார்கள். அவர்களிருக்க பதினாராயிரம் கோபிகா ஸ்திரிகளை மனைவிகளாக வைத்திருக்கிறான்'' என்றுசிசுபாலன் சொன்னான், அப்படி வெட்கத்திற்குரிய பற்பல குற்றங்களை விவரித்த பின் கிருஷ்ணனை நோக்கி நானாவித தீண்டனைகளில், அவன் மீளவும் சொன்னதாவது'' ''அடா கொலையாளி, ஸ்திரிகளை கொலைசெய்வது, மகாபாதகமென்று பேதைகளுக்குத் தெரிந்திருக்க, நீ அஃது உணராமல், உனக்குப் பாலூட்டுந் தாயாகிய ஒரு ஸ்திரியை கொலை செய்தாயே....''.

"அடா பாவி உன் செய்கையில் ஒன்றாவது நன்னெறிக் கேதுவாக இருக்கின்றதா? நான் எவ்வளவு எடுத்துரைத்தேன், நல்ல யோக்கிதையுடையவனாய் இருப்பாயாகில், விடை கொடாதிருப்பாயோ, நீ தான் விடை கொடாமலிருந்தாலும், சபையார் மௌனமாக இருப்பார்களோ? நான் கூறுவது உண்மையாய் இருப்பதினால், நீயும் சித்திர பதுமைபோல சற்றும் அசைவின்றி இருக்கின்றனையே என்றான். அவதரித்த விஷ்ணுவாகிய கிருஷ்ணனோவெனில் சினந்து, சிசுபாலனை கொன்று போட்டானே ஒழிய, அதெல்லாம் பொய்யென்று மறுக்க, அவனாற்கூடாமற்போற்று. (பாரதம் - சபாபர்வம் 36ம் - 38ம் பக்கம்) அல்லாமலும் தன் குருவின் மனைவி இரதை என் பவளைக்களவாய்க் கொண்டு போய், கானகத்தில் கூடியிருந்ததாகக் கதையுண்டு. இதல்லாமல், தன் தாயையும் சகோதரியையும் மோகித்து இலச்சையான பற்பல பாவ அக்கிரமங்களைச் செய்ததாயும் தெரிகிறது. கடைசியாய் கிருஷ்ணன், ஓர் ஆலமரத்திலேறி சயனித்திருக்கையில், வேடனொருவன், மிருகமென்றெண்ணி தன் அம்பால் எய்ய, அம்புபட்டுச் செத்து, சரீரம் பட்சிகளால் கொத்தவும், நரிகளால் பிடுங்கப்பட்டதாயும் கதையுண்டு. பின்வரும் பிரிவுகளில் விஷ்ணுவின் தசஅவதாரத்தில் நிறைவேற்றிய நடபடிக்களைப் பார்க்கவும்.



7

விஷ்ணுவின் தச அவதாரம்

1. மச்ச அவதாரம்

கிருஷ்ணன் விஷ்ணுவாய் அவதாரமெடுத்திருந்த காலத்தில், தான் பத்து அவதாரம் எடுத்ததாய்க் கதையுண்டு. அவற்றில் முதல் அவதாரம் மச்சம்.

பூர்வகாலத்தில், பிர்மதேவன் ஆயாசத்தினால் நித்திரை பண்ணும்போது, பிர்மதேவனின் வேதங்கள் பிர்மாவை விட்டுக்கடந்து நடந்து போகவே, அயக்கிரீவன் அல்லது சோமுகாசுரன் என்னும் ராட்சதன் கையில் அகப்பட்டு, வேதங்களை, சமுத்திரத்தில் கொண்டு போய் ஒளித்து வைத்துக் கொண்டதைப் பார்த்த விஷ்ணு, மச்ச அவதாரமெடுத்துப் போய், ரட்சதனைக் கொன்று, வேதத்தை மீட்டுவந்து பிர்மாவினிடம் கொடுத்தாராம். இதை விளக்கும் ஓர் கவி

விருத்தம்

குளத்து மீனாகி ஓட வேண்டியதேன்
கொண்டுபோ யொளித்த காரணத்தாற்
கூடுதலேதாகிலும் மரக்கணுக்குண்டோ
கும்பிடு குலத்து மாணவர்கள்
இசைவிலா துரைத்த புரட்டுகளெல்லா
மிப்படி நிலையிலாதலைய
வீச்சூரன், திருமாலிருவரைப் பணிந்தா
லேகனைத் தொழுவதாயிடுமோ

பொருள் : - விஷ்ணு, நீரில் வாழும் மீன் உருவெடுத்து நீந்தி ஓட வேண்டியதென்ன? ஆழியில், வேதத்தைத் திருடி ஒளித்தால், அசுரனுக்குப் பலன் அதனால் உண்டோ? தொழுதுபோற்றும் மாணவர், இசைவின்றி உரைத்த புரட்டுரை, அஸ்திபாரமன்றிஅலையச்சே, சிவன், விஷ்ணுவெனும் இருமனிதரைப் பணிவது, ஒன்றான பராபரவஸ்துவினைத் தொழுவதற்குச் சமமாகுமோ? என்பதாம். இதையே விளக்கும் மற்றொரு கவி.

விருத்தம்

இமையில்லாவிழி மச்சரூப முதலிவனெடுத்துக் கடலில் வீழ்ந்தான்.
அடுத்துச்சலத்தில் வாழ்ந்தான் தமியாய் மீனானவனைத்
தேவனென வுரைத்தால் சகலருநகையாரா
அகிலமே நம்புவாரா?

பொருள் : - விஷ்ணு இமையிலாக் கண்களையுடைய மீனுருவெடுத்துக் கடலில் விழுந்தான். இம் மீனுருவில் பிர்மா நித்திரை விட்டெழும்வரை துள்ளிப் பாய்ந்து ஒடி விளையாடி தேடித்திரிய ஆசையுற்று மீனுருவெடுத்தோனைத தேவன் என்றால் நகைக்க மாட்டார்களா? இதை உலகோர் நம்புவார்களா என்பதாம்.

பாகவத புராணத்தில் 8ம் ஸ்கந்தத்தில் எழுதியிருப்பது பிர்மாவுக்கு பகல் ஒழிந்து இராத்திரி ஆகச்சே, நித்திரை செய்யும் பொழுது உண்டான தினப்பிரளயத்திற்கு சப்தரிஷிகளும், சத்தியவிரதனும், தப்பிக் கொள்ள ஸ்ரீ ஹரி அனுப்பிய படகை விஷ்ணுவாகிய ஸ்ரீ ஹரியே மச்சமாயிருந்து காத்துக் கொள்ளுகையில், அயக்கிரீவன் என்னும் ராட்சதன் திருட்டுத்தனமாய் வந்து, பிர்மா நித்திரை செய்யச்சே அவன் சுவாசத்துடன் வந்த வேதத்தைத் திருடிக் கடலில் ஒளித்ததை அறிந்து, அதைப்பறித்துக் கொண்டு அவன் உயிரையும் போக்கினான் என்று எழுதியிருப்பதேயல்லாது விஷ்ணு மச்ச

அவதாரம் எடுத்ததாய்க் காணோம். இது விஷ்ணு மச்ச அவதாரமெடுக்க வில்லையென்பதை திட்டமாய் உறுதிப்படுத்துவதுமன்றி, விஷ்ணு தெய்வமல்லவென்பதையும் விளக்குகிறது.

விஷ்ணுவின் மச்ச அவதாரத்தில் நீளம் நூலறுக்க யோசனை தூரமும், மெல்லிய பல்லும்; நீண்ட மீசையும், குட்டைவாலும், பொன்னிறவுடலும், அலங்கார சிறகும் தரையைப் பார்த்த கண்களுமுள்ள உருவமாய்ப் போய் ராட்சதனைக் கொன்று வேதத்தை மீட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. (பாகவதம் -8ம் ஸ்கந்தம், மச்ச அவதார அத்தியாயம். 4 முதல் 12 பாடல்வரை வாசிக்கவும்)

இது உண்மையானால், பூமி சாஸ்திர ஆராய்ச்சிப்படி பூமியும் சமுத்திரமும் சேர்ந்து மூவாயிரம் யோசனை விஸ்தீரணமுள்ளதென்று ஆராய்ச்சி நிபுணர் குறித்திருக்கும் போது விஷ்ணுவின் மச்ச அவதார நீளம் மாத்திரம் நூறுலக்கம் யோசனையென்றால், மீதியான விஷ்ணுவின் மச்ச உருவம், எந்தயிடத்தில் இருந்திருக்கும் என்பதை, வாசகர்களே சிந்தியுங்கள். இவ்வித காரணத்தால், விஷ்ணுவின் மச்ச அவதாரத்தை ஆதாரமற்றதென்று விளக்குகிறது.

2. கூர்ம அவதாரம்

தேவர்கள் அனைவரும், பலி, மற்றுள்ள ராட்சதர் கையில் அகப்பட்டு, பெரும் துன்பமடைந்து அவஸ்தைப்பட்டு ராட்சதர்களை ஜெயிக்கத் திராணியற்றிருந்தார்களாம். இராட்சதர், தேவர்களை ஜெயங்கொள்ளாதிருக்க மந்திரகிரி பர்வதத்தை வெட்டிப் பெயர்த்து, சமுத்திரத்திற்கு எடுத்துச் செல்லும்பொழுது, சிலர் களைத்தும், நொந்தும் சாய்ந்தும், விழுவதைக் கண்ட விஷ்ணுபகவான், கெருடன் மீதேறி வந்து, தேவர்களுக்குச் சகாயமாய், மந்திரகிரி பர்வதத்தை தூக்கி தயிர் சமுத்திரத்தில் வைக்கவே, தேவர்கள் கூடி இப்பர்வத்தை மத்தாக நாட்டி, சந்திரனை தூணாய் (மத்தின் காம்பு) நிறுத்தி, ஆதிசேடனென்னும், வாசுகி பாம்பை அதற்குக் கயிருகச்சுற்றி கடைந்தார்களாம். கயிருய் நின்று அலுவல் புரிந்த ஆதிசேடன், தாங்கமுடியா வருத்தத்தால், தன் நஞ்சைக்கக்க, அமிர்தம் விஷமாய் மாறவே தேவர்கள் மதிமயங்கி நின்றுவிட்டார்களாம். மந்திரகிரியும் சமுத்திரத்தில் முழுகிவிட்டதாம் தேவர்கள் விஷ்ணுவை நோக்கிப் பிரார்த்திக்கவே, ஆமை உருவில் வந்து தன் முதுகின்மேல் மந்திரகிரியை தாங்கி சுமந்து நின்ருராம். தேவர்கள் பின்னும் கடையவே, அதிற், கலந்த விஷத்தை சிவன் தன் நெஞ்சில் நிறுத்திக் கொண்டதால் சிவனுக்கு நீலகண்டனென்னும் பெயர் வந்ததாம் பின் பாற்கடலைக் கடைய அமிர்தம் பிறந்து அதில் ஏழு

தேவிகளும் லட்சுமியும் பிறக்கவே, விஷ்ணு, லட்சுமியை. விவாகம் செய்து கொண்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இதல்லாது விஷ்ணு தேவர்களுக்கு அமிர்தம் பங்கிடும் பொழுது, தேவர்களுக்கும், ராட்சதர்களுக்கும் சண்டை மூண்டு வழக்காடுகையில் ராட்சதர்க்கு அமிர்தமில்லாமற் செய்யும் நோக்கமாய், ராட்சதர் தன்னை மோகித்து இச்சிக்கத்தக்க சௌந்தர்யம் நிறைந்த பெண்ணுருவாய் விஷ்ணு மாறி நிற்கவே, ராட்சதர் அமிர்தத்தை மறந்து, மோகினியை வசப்படுத்த ஒருவரைஒருவர் வெட்டிக்கொன்று மாண்டார்களாம். நாரமுனிவர் கைலாயத்திற்குப் போய் நடந்த வர்த்தமானங்களைச் சொல்லக்கேட்ட சிவன், பார்வதியோடு ரிஷபத்திலேறி வந்திறங்கி, விஷ்ணுவின் மோகினி உருவைப் பார்க்க மிகுந்த ஆசைப்பட்டாராம். உடன் விஷ்ணு, மோகினியாய் மாறி, தாசி,வேசிகள் முதலாய் செய்திராத மோகவிகாரமுண்டாக்கும் காதல் சேஷ்டைகளைக்காட்டவே, பார்வதி பார்க்க, வெட்கத்தையிழந்து, காமச்சுவாலையில் அகப்பட்டசிவன், மோகினியைத் தொடர்ந்து, துரத்திசென்றாராம். இருவரும், புதரில் ஓடி ஒளிந்து கூடிப்புணர்ந்ததில், அங்கே சன்ன தேவனும், வயிரவதேவனும் பிறந்தார்களாம். (இது பாரதம் எட்டாம் சல்லாபத்தில், சுபயோகி என்ற ரிஷி சொன்னது).

இந்த நடப்பில், ஈஸ்வரனான சிவனையும், திருமால் என்னும் விஷ்ணுவையும் பற்றிவிளக்கும் கவி.

விருத்தம்

அதிதியின் மக்கணரர் களுக்கொப்பா
யழிவுருத் தற்கமுதருள
வரிசிவன் பிர்மா னிமையவர் கூட்ட
மருந்தவமிழைத்திடு முனிவர்
திதியினின் மைந்தர சுரருங் கூடி
சிறந்த மந்திரகிரி மத்தாய்த்
திருப்பாற்கடலைக் கடைந்த நாளந்தத்
திகிரியைக் கூர்மமாய்த் திருமால்
முதுகுமேற்சுமந்து காம்பு சந்திரனு
முடிமிசைப் புவியினைத் தாங்கு
முருகுமிழ் சேடன் கயிறுமாயிருந்தால்
மொழியு வீரப் பொழுதுலகம்
இதிபெறச் சுமந்து காத்ததியாரவ
ரெழவிலை யியம்புதற்கென்று

லீச்சுரன் திருமா லிருவரைப் பணிந்தா
லேகனைத் தொழுவதாயிடுமோ

பொருள் :- காசிப ரிஷியின் மக்களான தேவர்கள், மனிதரைப் போல் செத்தழியாது சிரஞ்சீவிகளாய் பிழைக்கவும், பலமாய் யுத்தம் பண்ணவும், எதிரியை வெல்லவும், அவசியமான அமுர்தத்தை தேவர்களுக்குத் தர, திரிமூர்த்திகளும், முப்பத்து மூன்று கோடி தேவர்களும், தவமுனிவர்களும், காசி பரிஷியின் மற்ற மனைவி, திதிக்குப்பிறந்த அசுரரும் கூடி, திருப்பாற்கடலைக் கடைந்த நாளில், மந்திரகிரி பர்வதம் மத்தும், சந்திரன் மத்தின் காம்பும், பூமியைத் தன் தலைமேற் சுமந்து தூக்கிக் கொண்டிருந்த ஆதிசேடன் பாம்பு, அந்த மத்துக்காம்பை சுழற்றும் கயிறுமாயும், விஷ்ணு, ஆமை (கூர்மம்) அவதாரத்தில் மந்திரகிரியை தன் முதுகின் மேல் தாங்கி சுமந்து கொண்டிருந்ததும் உண்மையானால், இவ்வகை உபதேசம் உலகில் உறுதியாய் நீடிக்க, ஆதிசேடனுக்குப் பதிலாய் பூமியைச் சுமந்து, தாங்கிக் கொண்டிருந்தது யார்? அல்லாமலும், விஷ்ணுவிற்குப் பதிலாய், உலகை ரட்சித்துக் கொண்டிருந்தது யார்? இதற்கு விளக்கந்தர முடியாதென்றால், உறுதியற்ற பேச்சை நம்பி, விஷ்ணு, சிவன் என்ற இரு மனிதரை தொழுதால் அது ஒன்ருன பராபர வஸ்துவைத் தொழுதற்கொப்பாகுமோ? என்பதாம்.

விஷ்ணுவின் கூர்ம அவதாரத்தில், கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்க, ஆதிசேடன் பாம்பைக் கயிருயும், சந்திரனை மத்துக்காம்பாயும், மந்திரகிரி மலையை மத்தாயும் ஆக்கியது உண்மைதானா? உருண்டை வடிவாயுள்ள சந்திரன், நீண்டு மத்துக் காம்பாய் ஆனது எவ்விதம்? பூமியைத் தாங்கி சுமந்து நின்ற . பாம்பு, கயிறான துண்மையானால் இதன் இடைக்காலத்தில், பூமியைச் சுமந்து தூக்கிக் கொண்டிருந்தது யார்? அகில உலகத்தையுமே இரட்சிக்கும் விஷ்ணு ஆழ்கடலின் கீழ் மந்திரகிரியை சுமந்து நின்று, தேவர்களுக்கு உதவி செய்த போது, உலகத்தை காத்து இரட்சித்த ரட்சகன் யார்? இவையனைத்தையும் அறிவு பெருக்கத்தின் காலத்தில் வாழும் மக்கள் அஞ்ஞான இருளைவிட்டு, மெஞ்ஞான ஒளியைப் பெற்று வாழ, ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வது அவசியமல்லவா? ஆமையுருவில், தேவர்களுக்கு ஒத்தாசை செய்ய எத்தனித்ததின் விளைவு, தேவனாய் மதிக்கும் சிவனையும், விஷ்ணுவையும் காமக்காதலுக்குள்ளாக்கி இயற்கைக்கு மாருய் இருதேவர்களையும் பிறக்கச் செய்தது என்று எழுதி வைத்துள்ளது நம் முன்னவர்கள் அல்லவா? இது உண்மையானால், தெய்வ லட்சணத்திற்கு இவ்வநுபவம் பொருத்தமாகுமா? இவ்வகை அநுபவம், கூர்ம அவதாரத்தையே நம்பிக்கையற்ற தீர்மானத்திற்கு முற்றுப்புள்ளியிடுகிறதே!

3. வராக அவதாரம்

கனகராட்சசன் என்ற அசுரனான இரணிய ராட்சதனைக் கொல்லுங்காரணமாய், விஷ்ணு நீண்ட பல்லுகளையுடைய பெரும் பன்றி அவதாரத்தில் பிறந்து, அண்டமெல்லாம் நடுங்க நுனி மயிரை சிலுப்பி உதறிக் கொண்டு, முசு முசு வென்றுங், கற கறவென்றும் நெருப்புப் பொறி சிதற, உர்றென்று வாலைச் சுற்றிக்கொண்டு, தன் கொம்பினால் தண்ணீரைக் கிழித்து, பூமியைத்தேட, தேவர்களுக்கு இடுக்கண் செய்த, மகா பராக்கிரமம் நிறைந்த கனக ராட்சச அசுரன், இதைக் கண்டு சிரித்து, ஏ முகுந்தா, முன்னே நான் பாயாய் சுருட்டி ஒளித்து வைத்த பூமியை எடுத்து போக வந்தாயா? என்றானாம் அசுரன். பன்றி உருவில் நின்ற விஷ்ணு தன் வச்சிரம் போன்ற பல்லால் அசுரன் வயிற்றைப் பீறிப்பாதாளத்திலே தள்ளி சங்கரித்து, தேவர்களை இரட்சித்து, பாதாளத்தில் அமிழ்ந்து கிடந்த பூமியையும் மேலே கொண்டு வந்து வைத்து, பூமியிலிருந்த பன்றிகளை மோகித்து கூடிப் புணர்ந்து, குட்டிகளை ஈன்று, எழுதக் கைகூசும் அருவருப்பான செயல்களை நடத்தியதே, வராக அவதாரத்தின் மேன்மை.

விஷ்ணு, பன்றி உருவில் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு பூமியைத் தேடினது உண்மையானால், ராட்சதன் பூமியை சுருட்டி ஒளித்து வைக்கையில், தண்ணீரையும் பூமியோடு சேர்த்து தானே பாயைப் போல் சுருட்டியிருப்பான், பின் எந்தத் தண்ணீரைக் கிழித்து, விஷ்ணு தேடினார் என்பது சிந்திக்கத்தக்கது. பூமியோடு தண்ணீரையும் சேர்த்து சுருட்ட முடியுமா? அது உண்மையானால் பூமியை பாய்போல் சுருட்டியபின், ராட்சதன் எதன் மேல் நின்றிருந்தான்? இது மனிதர் அறிவுக் கெட்டாத பொய்க் கட்டுரை யென்பது பொருத்தமல்லவா? வாசகர்களே சிந்தியுங்கள். ராட்சதன் ஆகாயத்தில் பறந்து கொண்டு சுருட்டினானா? கட்டுரையானாலும், கருத்து இருக்க எழுத வேண்டாமா?

கெருடனை விஷ்ணுவின் வாகனமென்று விஷ்ணுபக்தர் கௌரவித்து இன்றுவரை கெருட தரிசனம் செய்துவரும் போது, விஷ்ணுவின் வராக அவதாரத்தை கௌரவித்து, வராகதரிசனை (பன்றி) செய்யத்தவறியதேன்? இது விஷ்ணு, அவதாரத்தில் வந்ததை மறுக்கிறதல்லவா? பன்றியை தெய்வமாய் மனங்கூசாது கரங்கூப்பி வணங்குவதெப்படி?

4. நரசிம்ம அவதாரம்

இரண்ணியகசிபன் என்னும் அசுரன், பிரம்ம தேவனை நோக்கி பலகாலமாய் அருந்தவஞ்செய்ய, பூமி, பாதாளம், சொர்க்கமென்னும்

மூவுலகத்தையும், ஆளும் அதிகாரத்தையும், ஐஸ்வர்யத்தையும் பெற்று, சகலதேவர்களுக்கு மேலாய் தன் ஆட்சியில் அனைத்தையும் அடக்கி ஆண்டு வருகையில், தன் சகோதரன் இரண்ய அரக்கனைக் கொன்ற காரணத்தால், விஷ்ணுவின் மேல் மன வைராக்கியங்கொண்டு, நாராயணன் என்னும் நாமம், உலகில் எங்கும் வழங்காமல், தன் நாமமே வழங்கவேண்டுமென்று செய்துவருகையில், அவன் மகன் பிரகலாதன், தன் குரு இரண்ணிய நம என்று கற்பித்ததை மறுத்து, ஹரி நம நாராயணு வென்று சொல்லித்துதிப்பதை,இரண்ணியன் கண்டு, மகனைக் கொல்ல எத்தனிக்கையில், விஷ்ணு நரசிங்க அவதாரத்தில் வெடித்து வந்து, இரண்ணியனைக் கொன்றதாய் சொல்லப்பட்டிருக்கிறது. பிர்மலோகம், வைகுண்டம், கைலாயம் ஆகிய மூன்று லோகங்களையும், இரண்ணியனுக்குக் கொடுத்தது. உண்மையானால் மூன்று தேவரும், இரண்ணியன் ஆட்சியில் எங்கே இருந்தார்கள்? அக்காலத்தில் மரித்த சிவபக்தர்க்கும், விஷ்ணு பக்தர்க்கும், வைகுண்டம், கைலாயம் கொடுக்கப் பட்டது எப்படி? எங்கே? சிருஷ்டிக்கர்த்தா, ஒருவனைத தண்டிக்க எண்ணங்கொண்டால், சிருஷ்டிப்படைப்புகளான, மிருகம், பட்சி, மச்சம், ஊர்வனவாகிய தாழ்ந்தயினப் பிறவியின் அவதாரமெடுத்தேயல்லாமல் வேறு வகையில் தண்டிக்க முடியாதா? மனித உலகில் தேவர்கள் இவ்வித அவதாரத்தில் வந்து எவ்வகையில் ஞானத்தைப் போதிக்க முடியும்? வாசகர்களே சிந்தியுங்கள். இதன் முழு விபரமும் பாகவதம் ஏழாவது ஸ்கந்தம், இரண்யனைக் கொன்ற அத்தியாயம் 80, 83, 84-ம் பாடலையும் ; கம்பராமாயணம், யுத்த காண்டம் இரணியவதைப் படலம் 126-ம், 153-ம் பாடலிலும் காண்க.

5. வாமன அவதாரம்

மாவலி என்னும் ஓர் அசுரன், தவமேலீட்டால் சகல வரங்களையும் பெற்று, அதிக பராக்கிரமனாய் பூமி, பாதாளம். சொர்க்கமாகிய, மூவுலகையும், ஆண்டு வருகையில், தேவேந்திரனுக்காகப் பூமியிலே பிரம்மகுலத்தில், வாமணனாய் அவதாரமெடுத்து, மாவலியின் இடப்பாரிசமாய்ப் பேரய், உபாயமாய், மூன்றடிமண் பிச்சைகேட்டு, பின், மகா உன்னதமான விசுவரூபமெடுத்து மூவுலகையும் இரண்டடியில் அளந்து, மூன்றாவதடிக்கு இடமின்றி, மாவலியின் தலைமேல், மிதித்து, அழுத்தி, பாதாளத்தில் தாழ்த்தி, சுவர்க்கத்தை நிலைநிறுத்தியதாய் சொல்லப்பட்டிருக்கிறது.

குள்ள யாசகப் பிராமண வேஷத்தில், மூன்றடி மண் பிச்சை கேட்க,

தர்மத்தைக் கடைபிடித்து வாழ்ந்த மாவலி, இணங்கி வாக்களிக்க, தன் தர்ம சிந்தைக்கு, நேர்மாறாய், மூவுலகையும் ஈரடியில் அளந்து, மூன்றாவதடிக்கு இடமில்லையென்று, மாவலியைத் தலையில் மிதித்துக் கொன்றது தேவ சீலமா? கொள்ளையா? என்பதை வாசகர் சிந்தியுங்கள். இது மாபெரும் வஞ்சிப்பும், பாதகச் செயலுமான கொலை யென்பது பொருந்துமல்லவா? இது தேவ லட்சணங்களில் எப்படிப் பொருந்தும். இதைப் பற்றிய ஓர் கவி.

விருத்தம்

வாமண உருவெடுத்து மாவலிதனையடுத்து
வஞ்சனையான் மண்ணிறந்து கொடுத்தோன் நெஞ்சமுவந்து
ஆடவனைக்கட்டி காலால் மிதித்ததுவு நியாயமோ
அன்னமிட்டார் வீடுதன்னிற் கன்னமிடல் சகாயமோ.

பொருள் :- இந்த விஷ்ணு, வாமண ரூபத்தில் மாவலிச் சக்ரவர்த்தியிடம் வஞ்சனையாய் மூன்றடிமண் பிச்சைகேட்டு, இல்லை என்காது இரங்கி மனமுவந்து கொடுத்தோனை, கயிற்ருற்கட்டி, காலால் மிதித்துக் கொன்ருன். அன்ன மிட்டார் வீட்டில் கன்னம் வைத்துத் திருடுவது சகாயந்தானோ? என்பதாம்.

இதைக் குறித்து பாகவதம், எட்டாவது ஸ்கந்தம், வாமணவதாரமுரைத்த அத்தியாயம் 33, 37, 42, 47, 61, 62, 64, 70, 73-ம் பாடலிலும், கம்பராமாயணம் பாலகாண்டம், வேள்விப்படலத்திலும், 21, 23, 25, 33, 35, 36 பாடலிலும், நன்றாய் இதன் விபரம் தெரிந்து கொள்ளலாம்.

6. பரசுராம அவதாரம்

பரசுராம அவதாரம் என்பது, குருபீட்டகப்பிறவியாகிறது. பூர்வகாலத்தில் சூர்யகுலத்தில் உதித்த க்ஷத்திரியர்கள். சமதக்கினி முதலான பிர்மகுலத்தார்க்கு பல இடுக்கண் செய்து வந்ததுமன்றி, அவர்களுக்குரிய வேத கருமங்களை தாங்களே நடத்தி வந்தும், பிர்மகுல ஆச்சாரங்களை கெடுத்தும், மனச்செருக்குற்றிருந்த படியால், விஷ்ணு சமதக்கினியின் புதல்வன் பரசுராமனாய் பிறந்து, அச்சத்திரியர்களையும், அவர்கள் சந்ததிகளையும், இருபத்தொரு தலைமுறை வரை முள்ளுத்தரிப்பதுபோல், சங்கரித்தாராம். அதாவது கார்த்தாவிரியா சூரன்பேரிற் சண்டைக்குப் போய் அவனைக் கொன்று தன் தகப்பனுக்குக் காமதேனுவைக் கொண்டு வந்தான். அந்த ராஜகுமாரர், இப்பகையை முன்னிட்டு சமதக்கினியின் தலையைத் துண்டித்துவிட்டார்கள். பரசுராமன் தன் தகப்பனைக் கொன்ற பகையால் இருபத்தொரு தரம், தன்னை எதிர்த்த ராஜாக்களைக் கொன்று விட்டான்.

தன்னைப் பெற்ற தாய் ரேணுகையையும், சகோதரர்களையும் கூட கொன்று போட்டான்.

சகல உலகத்தையும் இரட்சிக்கிற விஷ்ணு இருபத்தொரு தலைமுறையாய் முள்ளுத் தரிப்பது போல் தரித்தால், இது இரட்சிக்கும் தொழிலோ? என்பதை வாசகர் நிதானிக்கவும். 21 தலைமுறையாய் கொலை பழி வாங்குவது தெய்வீக சீலமாகுமா? பாகவதம், ஒன்பதாவது ஸ்கந்தம், பரசுராமன், விசுவாமித்திரன் கதையுரைத்த அத்தியாயம் 45, 48, 49-ம் பாடல், பாரதம், ஆரணியபருவம், தீர்த்தயாத்திரை சருக்கம் 165, 167, 168, 170, 171 பாடலிலும், கம்பராமாயணம், பாலகாண்டம், பரசுராமப்படலம், 12, 16, 32, 33 பாடல்களிலும், தெளிவாய் கண்டுகொள்க. இந்நடத்தைகள், தெய்வீக லட்சணத்தை எவ்வளவாய் இழிவுபடுத்துகிறதென்பதைப் பாருங்கள்.

7. ராம அவதாரம்

இலங்காபுரியை ஆண்ட இராவணேஸ்வரன் என்னும் ராட்சதன், தன் தவ வலிவால், மூவுலகிலும் தன் ஆட்சியை நடத்தி, தேவர், முனிவர் யாவரையும் மிகத் துன்புறுத்தி வந்தானாம். இதை முன்னிட்டு இராவணனை அழித்து, நீரே எங்கள் ஆளவேண்டுமென விஷ்ணுவைப் பிரார்த்திக்க, விஷ்ணு ஆயோத்தியாபுரி, தசரதச்சக்ரவத்திக்கும், மனைவி கவுசலைக்கும், புத்திரனாய் பிறந்து, இராமன் என்னும் பெயருடன், மிதிலை, ஜனகமகாராஜன் புத்ரி சீதையை மணஞ்செய்து, கைகேசியின் பாதக சூட்சியால், தகப்பன் கட்டளைக்கிணங்கி மனைவியுடன் வனம்புக, சீதை தனித்திருக்கையில், இராவணன் மாறுவேடமாய் வந்து, சீதையைக் கவர்ந்து போக, ராமன், சீதையிருப்பிடமறியாது, திகைத்துப் புலம்பி, பின், ராமன், அநுமார், சுக்ரீவன், மற்றும் குரங்குக் கூட்டத்தின் உதவியால் சிவாலயத்தை யிடித்து, சமுத்திரத்தில் அணைகட்டிக் கடந்து, குரங்குச் சேனையுடன் இலங்கை சேர்ந்து, இராவணன் துதியேற்று, உன்னைச் சங்கரியேன் என்று வாக்களித்தும், தேவர்கள் அறிந்து செய்யும், ஏவலால் தன்னை இராவணன் நிந்தித்தான் என்று வாக்கு மீறி, இராவணனைச் சங்கரித்து, இதனால் ஏற்பட்ட பிர்மஹத்தியை, சிவபிரதிஷ்டையால் நிவர்த்தி செய்து கொண்டு, சீதையை அக்கினி பிரவேசத்திற்குள்ளாக்கி, கற்பு நிலையைச் சோதித்து, பின் கூடியிருந்து, சிலகாலத்திற்குப் பின் அவளை நம்பாமல், வால்மீகர் வனத்திலிருந்து கற்பு நிலையைத் திரும்ப அழைத்து சோதிக்கவே பூமி பிளந்து சீதையை பூமாதேவி கட்டித் தழுவி இழுத்து இருவருமாய், பூமிக்குள் மறைந்து விட்டார்களாம். இக்கதையை வால்மீகமுனி 24000 சுலோகத்தில்

சொல்லி முடித்ததே இராமாயணம்.

ஒரு சமயம், யமதர்மராசாவுடன், ராமர் பேசிக் கொண்டிருக்கையில், துருவாசமுனியால் அனுப்பபட்டு, உள்ளே தமதிடம் வந்த லட்சுமணனைக் கோபித்து தள்ளிப் போட்டு, கடைசியாய் தான் சரபுநதியில் விழுந்து, அழுந்தி மாண்டு போனான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பின் ஒரு இடத்தில், அக்கினியில் விழுந்து மாண்டுபோனான் என்றும் சொல்லி இருக்கிறது. இராமன் இலங்கை போய் சீதையை சிறைமீட்ட வகையில், தெய்வ வல்லமைக்கேற்ற செயல் ஏதாவது காணப்படுகிறதாவென்று பாருங்கள். கிருஷ்ணன் அவதாரமாய் வந்த ராமசரிதையில் தெய்வ மகத்துவ லட்சணங்களை விளக்கக்கூடிய வல்லமை ஒரு கடுகளவேனும் இல்லையே! இராம அவதாரத்தை வடபொதியையிலிருந்த போகமாமுனிவர் விளக்குவதை கீழ் காண்கவும்.

போகர் ஏழாயிரம் 4-ம் காண்டம் பாடல்

பாடல் 603

பொய்யாகப் பிடாரனவன் பாம்புதன்னை
  பொங்கமுடன் ஆட்டி வைத்த கதையைப்போல
மெய்யாக ஸ்ரீராமர் அநுமார்தன்னை
  மேன்மையுடன் கைப்பழக்கஞ் செய்திருப்பார்
கையுடனே ஆயுதங்கள் தடிகொடுத்து
  காசினியில் யுத்தமது பழக்கஞ் செய்து
பையவே வாரத்தை வசமதாக்கி
  பாருலகில் பழக்கமது செய்தார்ானே

பாடல் 606

தானான ஸ்ரீராமர்க் குதவியாக
  தாரணியில் வெகுயுத்தம் செய்துமென்ன
கோனான ஸ்ரீராமர் மாண்டு போனார்
  குவலயத்தில் வாரங்கள் எல்லாம் மாண்டார
பானான பாருலகில் ஆஞ்சநேயர்
  படைகூட்டந் தன்னுடனே மண்ணுய்ப்போனார்
தேனான எனதையர் காலாங்கி நாதர்
  தெளிவுடனே எந்தனுக்கு உரைத்தார்தாமே

இக்கவியில் பாம்பைப் பிடித்து பிடாரன் பழக்கி, ஆட்டுவது போல், ஸ்ரீ ராமர் குரங்குகளைப் பிடித்து, கையில் தடி, மற்றும் ஆயுதங்கள் கொடுத்துப்

பழக்கி, இராவணனோடு போருக்கழைத்துப் போனார். கடைசியாய், ஸ்ரீராமரும் ஆஞ்சநேயப்படைக் கூட்டம் யாவும் மடிந்து மண்ணுய்ப்போனது, என விளங்குகிறது. இக்காரணத்தால் ராமர் நம்மைப் போன்ற மனிதனேயல்லாது, தேவனோ, தேவ அவதாரமோ அல்லவென்பது பிரத்தியட்சமாய் காண்கிறதே! மனித வர்க்கத்தில், ஓர் அரசபுத்திரன் என்பது மிகத் தெளிவல்லவா? ராமருக்கு விசேஷித்த ஆலயங்கட்டி, தெய்வத்திற்கு சமமாய் மனுமக்கள் வணங்குவதில் ஏதாவது எள்ளளவேனும் பலன் உண்டா? ராமர் தெய்வமானால், மனிதரிலும், கீழான காட்டு வானரங்களைக் கூட்டி உதவி தேடப் போவாரா?

இராவண சம்மார மென்பது, ராமர் பறி கொடுத்த, தன் மனைவி சீதையை, குரங்குப்படையுடன் போய் இராவணனை எதிர்த்துப் போர் புரிந்து, சிறை மீட்டகதையேயல்லாது, வேறென்ன விசேஷமிருக்கிறதென்று பாருங்கள். தன் மனைவியை களவாடிப் போன இராவணனை கண்டு கொள்ள திறமையற்றிருந்ததும், சீதையின் கற்புநிலையை அறியமுடியாமற்போனதுமே, இராமன் தேவன், அல்ல நம்மை போன்ற மனிதன் என்பதை விளக்குகிறதே!

(பாகவதம் 99-ம் ஸ்கந்தம், ராமசாமி கதையுரைத்த அத்தியாயம், 51, 52, 55, 65, 76, 81, 96, 104, 117, 119 பாடலிலும் பாரதம் ஆரணிய பருவம் ராமன் படையெழுச்சி சுருக்கம் 27-ம் பாடலிலும், கம்பராமாயணம் ஆரன்ய காண்டம் சடாயுவதைப் படலம் 74, 75, 46, 158, 159, 165 கிஷ்கிந்த காண்டம், சுக்ரீவநட்புப் படலம் 19, தாணை காண் படலம் 24 நாள் விட்ட படலம் 69, 71 மகேந்திரப் படலம், 144 சுந்தரம் காண்டம் மீட்சிப் படலம் 21, 33, 50, 52 யுத்தகாண்டம், ஒற்றர் கேள்விப்படலம் 13, நாகபாசப்படலம் 192, 217, 223, 224, 251, 265, 266 பிரமாஸ்திரப் படலம் 96, 103, மாயா சீதைப்படலம் 16, 24, 42, 45, 80 நிரும்பலையாகப்படலம் 1. ராவணவதைப்படலம் 35, 191, 196, 198 மீட்சிப்படலம் 11-ம் பாடல்களிலும் பார்க்கவும்.

8. கிருஷ்ண அவதாரம்

பூர்வத்தில், பூமி தேவியானாவன் ஷத்திரியர் முதலானோர்களை தாங்கி சலித்து விஷ்ணுவை நோக்கி முறையிட, விஷ்ணுதுவார காபுரியில், கிருஷ்ண அவதாரத்தில் உதித்து சத்திரியர், அசுரர் முதலானோர்களை கொலை செய்வித்து, சௌந்தர்யமுள்ள ஸ்திரீகளை தன்வசப்படுத்திக் கொண்டு, மோகப்பிரியனாய்க் கூடி லீலாவினோதஞ்செய்து, போகித்து சுகித்து அவர்கள் வயிற்றிலுதித்த புத்திர புத்திரிகளுடனும்,

மற்றவர்களுடனும், பிரபாச கேத்திரை என்னும் இடத்தைச் சேர்ந்து மதுவெறியால் நிறைந்து, ஒருவரையொருவர் அறியாமல் போர் புரிந்து அவர்களில் நாலு, ஐந்துபேர் தவிர மற்ற யாவரையும், கொன்று தம் குருவான இராயன் கோஸ் என்றவரின் மனைவி இரதை எனபவளைக் களவாய் கொண்டு போய், அவளுடன் காட்டில் கூடிப்புணர்ந்தும், பிருந்தாவனத்தில் பல இடைச்சியரை வசப்படுத்தி ஆலிங்கணம் செய்தும், வடமதுரையில் ராசனாகயிருந்து, அங்கிருந்து பதினாருயிரம் பெண்களையும் திருடி இடைவிடாது சுரதலீலை புரிந்தும், அதன் பின் தன் மாமன் கஞ்சனைக் கொல்லப் போகையில், வஸ்திரமின்றி நிர்வாணமாயிருந்ததால் ஒரு வண்ணனை வஸ்திரம் கேட்டு கொடாததால் அவனைக் கொன்று அவன் வஸ்திரங்களை உரிந்து உடுத்திக் கொண்டு இராச சபையில் புகுந்து, தன் மாமனான கஞ்சன் முதலானோரையும் கொன்று, தானும், தன் புத்திரரும், தோழருமாய், மதுக்குடித்து வெறித்தும், தருமரைக் கொண்டு பொய் சொல்லுவித்தும், இன்னும் இவ்வித பல துர்க்கிரித்தியங்களைச் செய்தும் கடைசியில் ஆலா விருட்சத்தில் சயனித்திருக்கையில, வேடனொருவன் மிருகமென்றெண்ணி அம்பால் எய்து மடியச் செய்தான், சரீரத்தைப் பட்சிகளும் நரிகளும் பிடுங்கியது சிலர் இந்த எலும்புகளை கொண்டு வந்து கொடுத்ததும். இந்திரதோமன் என்ற இராசா ஜெகன் நாதன் என்னும் விக்கிரத்தைச் செய்து, விஷ்ணுவின் எலும்பை அதனுள் வைத்து நமஸ்கரித்தார். இந்த விக்கிரகம் ஒரிஸ்ஸாவில் பெரும் புண்ணிய சேத்திரமாய் இன்றும் எண்ணப்பட்டு வருகிறது.

விஷ்ணு கிருஷ்ண அவதாரத்தில் நடத்திய அசுத்தங்களையும் கோபிகா ஸ்திரீகளுடன் செய்த அநேக லீலைகளையும், அவர்களுடன் கூடிச் செய்த அக்கிரமங்களையும், மனிதர் மனதைக் கெடுத்து கறையாக்கி பாவத்தில் அழுத்தும் லட்சை கெட்ட நடத்தைகளையும் இங்கே எழுத கையும் மனமுங் கூசுவதால், அவற்றை நீக்கி சில பாங்கானவற்றை கீழே காண்கவும். பாகவதம் பத்தாவது ஸ்கந்தம் கோபியரைப் புணர்ந்த அத்தியாயம் 22-ம் பாடலைப் பார்க்கவும்.

பாடல்

பொங்கினர் காவுதோறும் புதுமணற் குன்றுதோறும்
பங்கயச் செங்கண்மாயன் பானிலாப்பயன் கொண்டோங்கு
கங்கயந்திரை வாயுற்ற கனியிள வண்ணம் போலும்
கொங்கை வீழ் கோதை மாதர் குழாத்தொடுமாடினானே

பொருள் :- கங்கா ஜலத்தின் அலைவாயில் பொருத்திய இள

அன்னத்தைப் போலிருக்கின்ற ஸ்திரீ கூட்டத்துடன், கிஷ்ணனுனவன் சோலைகள், மணற்குன்றுகள் தோறும் போய் சரசலீலை காட்டி கொங்கையைத் தழுவி விளையாடினான் என்பதாம்.

மேற்படி புராணம் சங்கசூரனைக் கொன்ற அத்தியாயம் பாடல் 15

மேய தோகையினமென மயிலான
சாயலார் முலைதழி விளையாடிப்பின்
மாயன் வைகறையில் வண்டுளர் தண்டார்
ஆயர்பாடியில்லடைந்தனன் மன்னோ.

பொருள் : மயிலின் சாயலொத்த கோபிகா ஸ்திரீகளுடைய ஸ்தனங்களைக் கிருஷ்ணன் தழுவி விளையாடிக் கொண்டிருந்து, காலையில் இடையர் ஊரான ஆயர் பாடியிற்சேர்ந்தான் என்பதாம், வாசகரே! இதுதானா நம்மை ரட்சிக்கும் ரட்சகனாய் கருதப்பட்ட கிருஷ்ண பகவானுக்குரிய அரும் தொழில்? இது காமிகளுக்கேற்றதா? சுவாமிக் கேற்றதா? அப்படியானால் காமிக்கும் சுவாமிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நீங்களே தீர்ப்பிடுங்கள்.

பாகவதம், உத்தவரைக் கோகுலத்தில் விடுத்த அத்தியாயம்

39-ம் பாட்டு

வெள்ளி வெண்முல்லையம் மெல்லினர் துன்றுவிரைக் கோதைக்
கள்ள விழோதியரிற்ரெரும் வெண்ணெய் கவர்ந்துண்டோன்
அள்ளிலை வேல்விழியாரமுதம் யுரையஞ்சாயல்
ஒள்ளிழை பச்சிள வேய்புரை தோணல முண்டானே.

பொருள் : - கோபிகா ஸ்திரீகளுடைய வீடுகளெல்லாம் வெண்ணெய் திருடிச் சாப்பிட்ட கிருஷ்ணன் வேலை யொத்த கண்களையும், அழகான சாயலையும், பிரசாகமான பூஷணங்களையும், இள மூங்கிலுக்கு சமானமான அகண்ட தோள்களையுமுடைய கூனி என்னும் பெண்ணோடே புணர்ச்சி செய்தான் என்பதாம். விஷ்ணுவின் திருட்டைக் குறித்து, பாகவதம் சகடமுரைத்த அத்தியாயம் 17-ம் பாட்டை பார்க்க

பாடல்

கட்டமைந்த சிறு கன்று விடுக்கும்,
தொட்டு வெண்ணெயோடு தோய் தாயிருண்ணும்
நெட்டுறிக்குரலி நின்று கைநீட்டும்
எட்டு கின்றிலாதவையுடைக்குங் கல்லெறிந்தே

பொருள் : - அசோதையே கேள்! உன் மகன் சிறுகன்றுகளை கட்டுத்தறியிலிருந்து அவிழ்த்து விடுகிறான். வெண்ணெயுந் தோய்ந்த தயிரையும் திருடித்தின்கிறான். உயர உறியிலிருப்பதைக் கைநீட்டி எடுக்கிறான். உரலின் மேலேறி, எட்டாத உறியின் மேலிருப்பதை எடுக்க, கல், தடி, கொண்டு வீசி உடைக்கிறான், என்று இடைச்சிகள் தாயிடம் முறையிட்டார்கள், என்பதாம்.

பாகவதம், மருதிடை தவிழ்ந்த அத்தியாயம் 5ம், 8ம் பாடலில், கிருஷ்ணன் தன் தாயில்லா நேரம், பெரும் தயிர்ப் பானையை உடைத்து அவள் மறைத்து வைத்திருந்த வெண்ணெயை வாரிக் கொண்டு போனதால் பிடித்துக்கட்டி உரலோடு பிணைத்து விட்டதைக் காணலாம். மேற்படி புராணம், மதுரை கண்ட அத்தியாயத்தில் 17, 18, 19ம் பாடல்.

17ம் பாடல்

மழை மதம் பொழி மதமகழிறனையவம்மாயன்
நிழலும் வெண்மதி நெற்றிதோய மாடநீண்மறுகில்
அழலும் வேற்படை கஞ்சன் தந்து கிண் மாசு
கழுவான்றனைக் கண்டனன் கலை தருகென்றான்

18-ம் பாடல்

பொன்னந்தூசனி புரவலன் புகன்றமை கேட்டு
மன்னுகானினு மலையினும் வாழ்பவருடுப்ப
தின்ன பூந்துகிலன்று கொலென்னலுமவன்றன்
சென்னி சிந்தினன் செம்முகத்திகிரியஞ் செல்வன்

19-ம் பாடல்

கையினாலவன் கருந்தலை துணிந்த பின் கமழும்
செய்ய தாமரை கருமுகில் பூத்தெனத் திகழ்வோன்
ஐய பூந்துகி லொனறிலாதவ் வழியனைத்தும்
வெய்ய தோழருக்குதவினன் விடையென நடந்தான்

இம்மூன்று பாடலின் பொருள் :- கிருஷ்ணன் வீதியிற் போகும் பொழுது, கஞ்சன் வஸ்திரங்களை சலவை செய்யும் வண்ணானைக் கண்டு வஸ்திரம் கொடுவென்று கேட்க வண்ணன் கிருஷ்ணனைப் பார்த்து காடு, மலையில் வாழ்வோர் உடுப்பது இவ்வழகான வஸ்திரமல்லவே, என். கிருஷ்ணன், வண்ணனை கொலை செய்து, அவன் ராஜவஸ்திரங்கள் அனைத்தையும், தன் சிநேகிதருக்குக் கொடுத்து விட்டு ஓர் ரிஷபத்தை போல் நடந்தான் என்பதாம்.

பாரதம், சபாபருவம், இராசசூயயாகச் சுருக்கம் 149-ம் பாடல்

இரு விழி சிவந்து நுதல் பெயர் வரும்பவிருந்த மன்னவர் முகநோக்கி
அறிவையை வதைத்து பிறர் மனைவிழைவித்தத்தனுக்
கிளையவளை விரும்பிப்
பெருமை மாதுதனைக் கொன்ற பாதகனைப் பெரியவ
னென்றுன்னுதற்தகவோ
தெறிகிலீரெவரு முனிவருமவன்றன் சித்தினுக்குள
ரெனத் தெழித்தான்

இதன் பொருள் : - சிசு பாலன் சபையிலிருந்த ராஜாக்களைப் பார்த்து, ஓ, அரசர்களே, தன் ஸ்திரீயைக் கொன்று, மற்றோர் மனைவியர் மேலாசை கொண்டு, தகப்பனுக்கிளையாளாம் அத்தையை இச்சித்து, மாமனை கொலை செய்த பாவியைப் பெரியவனென்று நினைப்பது என்னபுத்தியோ? நீங்கள் அனைவரும் இவன் துற்செயல்களை யோசிக்கவில்லையே என்பதாம்.

பொதிகையில் வாழ்ந்த போக முனிவர் கிருஷ்ணன் அவதார வரலாற்றை விவரிப்பதை பார்க்கவும்.

கிருஷ்ணன் உற்பவம்

போகர் ஏழாயிரம், 4-ம் காண்டம் பக்கம் 564

கோடியா மின்னமொரு கூத்துக் கேளீர்
கூறுகிறேன் மானிடர்களறிய வென்று
நாடியே கிருஷ்ணுவதார னப்பா
நலமான துவாரகையில் பிறந்தார் கண்டீர்
தேடியே லோகத்து மங்கைமாரை
தேற்றமுடன் சிறையது தானெடுத்தாரென்றும்
பாடியே பண்ணீறு ஆயிரம்பேர்
பட்சமுடன் கற்பழித்த கதை கேட்டோமே.

523 - பாடல்

கதையான மாந்தர்களை சிறையெடுத்து
காசினியிலீலா விநோதஞ் செய்து
கெதையுடனே சத்துரு சங்காரஞ் செய்து
கெவனமுடன் லீலா விகுளிகை கொண்டு
சிதைவுபட தாரணியிலனந்தம் பேரை
சீரழித்துக் கெடுத்துவிட்ட கோபாலன்தான்
வதை செய்யும் கோபாலன் வடிவைப் பற்றி

வையகத்து மாந்தரெல்லாம் மயங்கினரே.

பாடல் - 524

மயங்கினார் கோடான கோடிப் பெண்கள்
மண்டலத்தில் கிருஷ்ணவதாரனுக்கு
தியங்கியே கற்பழித்து தேகந்தன்னை
திகழுடனே தத்தமக்காய் செய்து கொண்டார்
பயங்கமுடன் யிதிகாசங்கள் புராணங்கள்
பல, பலவாம் கிருஷ்ணனது காதை தன்னை
புயங்கமுடன் புலவரெல்லாம் புகழ்ந்துபாடி
பூதலத்தில் கதையுமுண்டாக்கினரே.

பாடல் - 529

பார்த்திட்ட கிருஷ்ணனவர் தெய்வமானால்
பாருலகில் பஞ்சவரை ரட்சித்தாரே?
தீர்த்திட்ட திரேகமது மனிதஜென்மம்
திரளான சேனைகளுமிருந்து மென்ன
கார்த்திடவே கிருஷ்ணனவர் வல்லபத்தால்
காசினியில் வெகுகோடி ஜனங்கள் தம்மை
பூர்த்திட்டமாக வல்லோ புனித பாலன்
புகழுடனே இரட்சிக்க முடியார் தாமே.

பாடல் - 530

முடியாது கோபாலர் தன்னால் அப்பா
மூதுலகில் வல்லமை களிருந்துமென்ன
நெடிதான பாவத்துக்காளுமாகி
நெடுங் காலந்தாமிருந்தார் பூலோகத்தில்
வடிவான தேகமது மடிந்து போச்சு
மண்டலத்தில் கிருஷ்ணனென்னும் பேரும் போச்சு
முடியான முடிவேந்தரெல்லாரும் தான்
முனையான தெய்வமென்று தொழுதார் பாரே

பாடல் - 531

தொழுதாரே ராஜாதி ராசரெல்லாம்
தொல்லுலகில் மாந்தர் முதலனந்தம் கோடி
அழுதாரே தெய்வமென்று காலாகாலம்
அவனியிலே அவருமல்லோ மண்ணாய்போனார்

பழுது வாராதென்றுரைத்த தேகந்தானும்
பாரினிலே மண்ணோடே மடியலாச்சு
முழுதுமேயிவர் தேகமழியாதென்று
முனையான சாத்திரங்கள் சொல்லலாச்சே

பாடல் - 532

ஆச்சென்ற தேகமது அழியலாச்சு
வப்பனே சாஸ்திரமும் பொய்யுமாச்சு
வீச்சலுடன் கிருஷ்ணுவதாரன் தானும்
விண்ணுலகில் மடியவென்ற நாளுமாச்சு
பாச்சலுடன் தேகமது பொய்யே வாழ்வு
பாரினிலேயிருந்தவர்கள் ஒருவரில்லை
ஏச்சலுடன் இவர்கள் எல்லாம் மனிதரல்லால்
எழிலா ன தெய்வமென்று சொல்லொண்ணுதே

போகர் 6-ம் காண்டம் பாடல் - 259

உண்டான சமுசாரிகோடி மாண்பர்
உத்தமர்கள் வேதாந்தி கடந்த ஞானி
செண்டான முறைமைகெட்டு மையல் கொண்டு
ஜெகந்தனிலே மடிந்தவர்கள் கோடாகோடி
அண்டமுடன் ஆகாயந் தன்னளவாய்
அகிலமெல்லாங் கொடிகட்டி வாழ்ந்தார் கோடி
புண்டரீகக் கிருஷ்ணுவதாரனைப் போல்
புகழான கீர்த்தியுடன் மடிந்தார் தாமே.

போக முனிவர், தமது பாடலில், விஷ்ணு துவாரகையில் பிறந்து, லீலாவதிக் குளிகையென்னும் வசிய சக்தியால், எண்ணற்ற பெண்களை மயக்குவித்து, கற்பழித்து, பதினாருயிரம் பெண்களையும் மற்றும் பலரையும், சீர்கெடச் செய்து இருக்க இவ்வித லட்சணம் பொருந்தியவரை தெய்வமென்று, புராண காவியங்களில், புலவர்கள் தங்கள் திறமையால் கட்டிவிட்டார்கள். இந்த விஷ்ணு பஞ்சபாண்டவருக்கு நேரிட்ட இடுக்கண்களில் அவர்களை இரட்சிக்க முடியாத நரஜென்மமெடுத்த மனிதன், உலகத்தோரையும் இரட்சிக்க முடியாதவர், பெரும் கீர்த்தியுடன், உலகில் நீண்டகாலம் வாழ்ந்து, பெரும் பாவியாகவே ஜீவித்து, முடிவில் மற்றுமுள்ள மனிதரைப் போல் மரித்து மண்ணுய்ப் போனவர். இவர் அழியாச் சரீரமுடையோர் என்று பல சாஸ்திரங்களிலும் எழுதி வைத்தயாவும் பொய்யாய்ப்போனது. மெய்தெய்வத்தைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சியில்லாமையால், கோடி, கோடி காலமாய் ராஜ, ராஜாக்களும்,

மனிதர்களும், கிருஷ்ணனை தெய்வமென்று அழுதுபுலம்பி தொழுதுவந்தார்கள். இவர் மற்றுள்ள மனிதரைப் போல் கீர்த்திபெற்று வாழ்ந்து மரித்துப் போன வெறும் மனிதனேயல்லாது, தெய்வமல்லவென்று சொல்லிமுடிக்கிறார்.

பஞ்சாட்சர பசுபதிபாச விளக்கம் 17-ம் பாட்டு

காமத்தாலிந்திரன் கலக்கமெய்தினான்
காமத்தால் ராவணன் கருத்தழிந்தனன்
காமத்தாற் கோசிகள் கவலையுற்றனன்
காமத்தாலிறந்தவர் கணக்கில்லார்களே

பேரின்ப மணிமாலை - விருத்தம்

கற்கோவிற் கோபுரங்கள் கட்டி மீண்டும்
கற்பிழந்த மாதருக்கு வீதங்கட்டி
விற்காமல் நூல் மருட்டர் பாடியாடும்
வேசியர்.வாய் தம்பலத்தை விரும்புவோர் கேள்
சொற்காதி போக மீது தானென்றெண்ணி
சோதி பரஞ்சோதிதனை துதித்திடமற்
பற்காலிமுதற் காவித்தரிப் போரெல்லாம்
பாழ் நரகந்தணில் வீழ்ந்து பதைப்போர்தாமே

இக்கவியினைத்திலும் பாவஞ்செய்வோரின் முடிவு இன்ன நிலையடையச் செய்யுமென விளக்கியிருக்க, தேவர்கள் என்போர் இவ்வித பாவங்களைச் செய்தால் முடிவென்னவாகும் என்பதை வாசகர்கள் யோசிக்கவும். முடிவு நித்திய நரகமேயாகும்

பேரின்ப மணிமாலை விருத்தம்

அரசிழந்து பதியிழந்து மனையிழந்து
ஐயோ கோவென்றலறியழுது கானில்
கருணன் முதலரசருடன் சண்டை செய்து
கடியகொலை பாதகங்கள் புரிவதல்லால்
வரிசையுடன்ருன் பிறந்த குலத்திலுள்ள
வனிதயரைக் கற்பழித்து மதனால் நொந்து
திரியுமவன் தன்னைக் கடவுள் என்று பாரிற்
செப்பினதாற் கதியருளுந் தேவனுமே?

மற்றொரு கவி

விதியால் வருவதல்லால் வேறில்லை யென்று முன்னோர்

மதியிலா துரைத்த சொல்லை மனத்தினுட் கொண்டோர் கேளீர்
பதியெல்லாமிறந்துண்டோனும் பார்வனந்தனிற் சென்றேனும்
கதி தருங்கடவுளாமோ கண்தனைத் திறந்துபாரும்.

பேரின்ப மணிமாலை விருத்தம்

தாட்டிமையாயுலகிலுள்ள சருவசீவ
தயாபரனென்றுணர்ந்து வணங்கிடாமல்
ஓட்டிலிரந்துண்டு பசியாற்றுவோனை
உலகமெல்லாம் படைத்தவனென்றேதலாமோ
காட்டிலுள்ள புனவேடர் வணங்கும் பொல்லா
கானகத்து வனத்தேவர் தம்மையிந்த
நாட்டிலுள்ள அனைவரோடும் வணங்கி மீளா
நரக நெருப்பிற்கிடந்து நலிவார் தாமே

மற்றொரு கவி

தாய்தனைப் பெண்டாய்வைத்து தலைதனிந் சுமந்தோன் தானும்
வாய்தனில்மகளைவைத்துமனைவியாய்ப்புணர்ந்தோன்தானும்
ஆயர்கள் குலத்தைக் கற்பு அழித்தவன் தனையுமிந்தப்
பேயரைத் தெய்வமென்னும் பெயர்களும் பேயராவார்.

பேரின்ப மணி மாலை விருத்தம்

பெற்றவளை பெண்டாக்கிக் கொண்ட சுத்தப்
பித்தனுந்தான் பெற்ற பெண்ணை புணர்ந் தோன்றனும்
மற்றவளை வாழுங் குலந்தனிலுண்டான
வனிதயரைக் கற்பழித்து மயங்கின்றேனும்
சிற்றறிவோர் காட்டு மிருகங்கள் போலத்
திரிந்து நரகெய்து மீளா தீயோரென்று
கற்றறிந்தோர் முதல் ஞானமுணர்ந்தோரெல்லாங்
கடவுள் பராபரமொன்றெனக் கருதுவாரே

இல்லாளையகத்திருத்திப் பிறதாரத்தை
இச்சிப்போரெனுந் தேவர் நரகவீட்டில்
செல்லாமற் போரதெங்கே போனலந்தத்
தேவர்களுக்கிடங் கொடுத்துச் சேர்ப்பாராரோ
பொல்லா தென்றிவை யெல்லாந்தவிரு வென்ற
போதகத்தின் படி நடவாருறவைப் போக்கி
நல்லோர்க்குக் கதியருளுங் கடவுளானை

நாடியவர்க் கடிமையென நடப்பதாமே

பிரிய வாசகரே, மேற்கூறியுள்ள ஞானவான்களின் செய்யுளும், சுலோகங்களும், ஆழ்ந்து பார்க்கும் பொழுது விஷ்ணுவும், மற்றுமுள்ளதேவர்களும், காமிகளாய்த் திரிந்து மனிதர்களைப் போல் சகலபாவங்களையும் செய்து பாவிகளாய் இருப்பதாய், காட்டுகிறதேயொழிய, தேவலட்சணங்கள் கிஞ்சித்தும் இல்லையே!

ஆதலால் இவ்வித துர்க்குண பிறவிகளுக்கு பராபரவஸ்துவானவர், தமது நீதிவழுவா சத்தியவேதத்தில் கட்டளையிட்டிருப்பது: "அநியாயக்காரர் பராபரனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? மோசம் போகாதிருங்கள், வேசிக்கள்ளரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், பராபரனுடைய ராஜ்ஜியத்தை சேர்வதில்லை" என்கிறார்.

இதில் நாம் வாசித்தபடி நமக்கு முன்னுள்ள பலமுனிவர்களும், சித்தர்களும், தங்கள் ஆழ்ந்த ஆராச்சியில், கிருஷ்ணவதாரம் தெய்வமல்லவென்று விளக்கும்பொழுது, மனதில் புத்துயிர்பெற்று மெய்பராபரவஸ்து ஒன்று உண்டு என்று, அறிந்து, அவரை அண்டி ஆராதித்து வணங்கவேண்டியது அவசியமல்லவா? அவரை பற்றிக் கொள்ளுங்கள். பக்தி செய்யுங்கள். முக்தியடைவீர்கள்.

9. பவுத்த அவதாரம்

திவோதாதன், என்ற ஓர் அரசன் தன் யாகாதி தவபலத்தால் சிவனிடத்தில், காசிநகர் முழுவதையும் பெற்று, இராஜ்ஜிய பரிபாலனம் செய்துவருகையில், விஷ்ணு, புத்த அவதாரமெடுத்து, தந்திரமாய் அங்குள்ள சைவர்களுக்கு ஓர் நூதன சாஸ்திரங்களை கற்பித்து, அந்த நகரத்தார் யாவரையும் சைவ சமயத்திலிருந்து விலக்கி, புத்த சமயத்திற்குள்ளாக்கி, திவோதாதனையும், காசிநகரை விட்டப்புறப்படுத்தி, அந்த நகரத்தை, சிவன் ஆளும்படி செய்தாராம்

இதுவல்லாமல், விஷ்ணு, திரிபுரத்தில் இருந்த ஒரு ராட்சதனுடைய கற்புள்ள ஸ்திரியை கற்பழிக்க எத்தனையோ உபாயங்கள் தேடியும், கூடாமற்போனபடியால், விஷ்ணு அரசமரமாய் பிறந்து, அந்த ஸ்திரீயை கற்பழித்ததாய் கதையுண்டு. இதன் காரணமாய் அரசமரமும், தெய்வமாயிற்று. அதற்கு பெண்சாதியாக இன்றும், வேப்பமரத்தை விவாகம் பண்ணிவைத்து, அதைக் சுற்றி வந்து கும்பிடுவதைப் பார்க்கலாம்.

விஷ்ணு தன் புத்த அவதாரத்தில், பூலோகத்தை சிருஷ்டித்து, காத்துநடத்தும் தேவன் இல்லை, தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆத்துமாவுமில்லை, தேவனென்பதும், ஆத்துமாவென்பதும் பொய்யென்று மனிதருக்கு போதித்தது எவ்வளவு வஞ்சிப்பானது என்பதை யோசியுங்கள். இது, மக்களை நரகத்திற்கு கொண்டுபோகும் மார்க்கம். இக்கேடு பாடுகளை, பாகவதம், பிரதமஸ்கந்தம், மாயவன் அங்கிசமுரைத்த அத்தியாயம் 35-ம் பாட்டிலும், சமஸ்கிருத பாகவதத்திலும், புத்தமத சாஸ்திரங்களிலும் விபரமாய் அறியலாம். இதைப்பற்றி விளக்கம் தரும் ஓர் கவி.

மண்ணையாளுந் தேவில்லை யுயிர்களில்லையென்று பொய்
வழக்குரைத்த புத்தவதாரம் - நரரை
வஞ்சித்ததானெறியிலவனினிக்கற்கியானால்
வாய்த்திடு மோவுபகாரம்

இவ்வித அவதாரம் எடுத்து மனுமக்களை விட கேவலமாய் நடந்து பல ஈனமான முறைகேடாய் நடந்தால் இவர்களைக் கரங்கூப்பித் தொழுவோர்க்கு இவர்களால் என்ன நன்மை கிடைக்கும். இவர்களின் கிரியைகள் இவர்களை தேவர்களாய் மதிக்கச் செய்யவில்லையே! இதெல்லாம் சத்திய நெறிமுறைவிதிக்குப் பெரிதும் முரணானது, என்பதிற் பழுதொன்றுமில்லை.

10. கற்கி அவதாரம்

விஷ்ணு உலகத்தை இரட்சிக்க இதுவரை எடுத்த மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமணம், பரசுராமன், இராமன், கிருஷ்ணன், புத்தன் ஆகிய ஒன்பது அவதாரமல்லாது பத்தாவதாக கல்கி - குதிரை, அவதாரத்தில் வரப் போவதாய் எதிர்ப்பார்க்கப்படுகிறது. குதிரை அவதாரத்தில் கட்கத்தையும் கேடகத்தையும், இருகைகளிலும், ஏந்திக் கொண்டு, துன்மார்க்கரை அழிக்கப்போவதாயும், அக்காலத்தில், வானஜோதிகளாகிய சூரியன், சந்திரன், நட்சத்திரங்களும், இருளடைந்து தாழவிழும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுவின்தச (பத்து) அவதாரத்தைத் தெளிவாய் அறியவிரும்புவோர் பாகவதம் முதலிய நூல்களைப் பார்க்கவும், விஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றி போக முனிவர் சொல்வதை கீழே கவனிக்கவும்.

(போகர் ஏழாயிரம், காண்டம் - 7, பக்கம் 1106)

பாடல் 907

பத்தான மகிமையது என்ன சொல்வேன்
பாங்கான புலிப்பாணி பலாகேளீர்

செத்துமே சாகாமல் காயங்கொண்டு
சேனை நெடுங்காலமது வரையியலப்பா
முத்தான மோட்சவழி பெறுவதற்கு
முனையானபத்து மகாரிஷியார்தாமும்
சுத்தமுடன் கிரேதாயின் யுகத்திலப்பா
சுந்தரனே தவசிருந்த சித்துபாரே

பாடல் - 908

பாரே தான் காலங்கி நாதர்தாமும்
பட்சமுடன் எந்தனுக்கு சொன்ன நீதி
நேரே தான் அவர்களுந்தான் மனிதரன்றி
நெடிதான தேவ அவதாரமல்ல
சீரோ தான் கலியுகத்து மாண்பரெல்லாம்
சிறப்புடனே அவதாரக் கடவுளென்றும்
வேரே தானின்ன மொரு தெய்வமுண்டோ
வித்தகனே யென்றல்லோ விதிக்கின்ருரே

பாடல் 909

வித்தகனே இவர்களெல்லாம் தெய்வமல்ல
விண்ணுலகம் பதிப்பதற்கு கூடுமோ தான்
செத்தவர்கள் கோடிமனு மாண்பருண்டு
தேவாதி தேவரிஷியான பேரும்
கைத்தவங்கள் தான் மறந்து மண்ணாய் போனார்
காசினியி லியாவருந்தானிப்படியே போனார்
மெய்த்தவங்கள் செய்துமல்லோ காயமுண்டு
வெகு கோடி மாண்பர்களு மிருக்கின்றாரே.

முன்னுள்ள பாடல்களில், மச்சரிஷி, கூர்மரிஷி, வராக ரிஷி, நரசிங்கரிஷி, வாமரிஷி, பரசுராமரிஷி, பலராமரிஷி, பௌத்தரிஷி, கலிகரிஷி, ஆக பத்து ரிஷிகளும் கிரேதா யுகத்திலிருந்த மனிதரென்றும், இவர்கள் தேவர்கள் அல்ல, பராபரவஸ்துவாகிய ஒரு தெய்வத்தை நோக்கி முக்தி பெற தவசிருந்த நம்மைப் போன்ற மனிதர்கள், என்றும், வியாச மகா ரிஷியார், கலியுகத்தாருக்கு இவர்களை தச (பத்து) அவதாரக் கடவுளாக, புராணக் கட்டுரைத்த படியால், இவர்கள், அவர்களை ரிஷிகள் என நினையாது தெய்வமாய் போற்றி வணங்கிவருவதாய், விளங்குகிறது.

முற்காலங்களிலிருந்து முனிவர்கள், சித்தர்கள், தங்கள் ஆராய்ச்சியில் ஓர் நித்திய பராபர வஸ்துவாகிய தெய்வம் உண்டென்பதை அறிந்து

உணர்ந்திருந்த படியால், விஷ்ணுவின் அவதாரத்தை ஒரு பாவியான மனுஷனுக்கு ஒப்பாய் மதித்து விட்டார்கள். இவ்வகையில் விஷ்ணுவை, தெய்வமாய் ஆராதித்து வணங்க ஒரு ஆதாரமும், நியாயமும் காணோம், பலரும், விஷ்ணுவின் சுரூபத்தை தங்கள் வீடுகளில் வைத்து வணங்கி வந்தாலும், விஷ்ணுவுக்கென்று விசேஷித்தத் தேர் திருவிழாக் கொண்டாட்டங்கள் இல்லை. என்பது உண்மையல்லவா?

விஷ்ணுவின் பத்து அவதாரமுமல்லாமல், கிருஷ்ணவதாரத்தில், பதினாறாயிரம் கோபிகா ஸ்திரீகளை கற்பழித்து, தன் குருவின் பத்தினியான ராயன்கோஸ் மனைவி ரதையையுங், களவாயெடுத்து மோகித்து, போகித்து, கெடுத்ததுமன்றி, அவர்களை பிரபாசகேத்திரையென்னும் ஸ்தலத்திற்குக் கொண்டு போய் ஒருவரோடொருவர் போரிட்டு மடியச் செய்து, தனக்கு வஸ்திரம் தராத வண்ணனையும், கொன்று, மதுவருந்தி, மற்றவருக்கும் கொடுத்து வெறித்து, தருமரைக் கொண்டு பொய் சொல்லுவித்து, பல ராட்சதரோடு, போராடி, அருச்சுனன் ரதத்திற்குச் சாரதியாயிருந்து யுத்தம் நடத்தி, திரள் ஜனங்களைக் கொன்று, தன் மாமன் கஞ்சனையும் கொன்று, காந்தாரியின் சாபத்தால், குறவன் கையில் காயப்பட்டு, குல ஸ்திரீகள் எட்டுப் பெயரோடு வைப்பாட்டிகள் பதினாருயிரத்துடன் பாவியாய் உழன்று திரிந்து, கெருடாசல புராணத்தில் சொல்லியுள்ளபடி, வேட ஸ்திரீயை சேர்ந்ததால் தன் மனைவி லட்சுமி கோபப்பட்டு அரண்மனையுள் பிரவேசியாது, காவலருக்குச் சொல்லி கட்டளையிட்டு, தாழ்ப்பாள்போட, வாசலில் நின்று, பலவிதம் பஞ்சரித்து பங்கப்பட்ட பின், உள் பிரவேசிக்க உத்தரவானதாம். லட்சுமி காலை நீட்டிய நிலையில் படுத்திருக்கையில், விஷ்ணு தன் மனைவி லட்சுமிக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி, நான் கும்பிடுதாதனான தால், நான் உன்னைக் கும்பிட்டு வணங்கினேன் என்று சொல்ல, அதற்கு லட்சுமி, நீ வெட்கத்தோடே கலியாணக் கும்பிடு வேட ஸ்திரீயை விவாகம் செய்ததற்கு, கும்பிட்டதால் அவளோடு கூடி புத்திர சந்தானத்தோடு வாழக்கடவாய் என்று வாழ்த்தினாளாம். இக்காலத்திலும் இச்சடங்கைச் செய்வதைக் காணலாம். பூசாரி முதல் கங்கணங்கட்டி கொடியேற்றி, பின் சடங்கு செய்து, சீரகம், வெல்லம், இருவர் சிரசிலேயும் வைத்து திரைபிடித்து மங்களாஷ்டகம் என்னும் மந்திரம் படித்து சேஷையிட்டு, தாரைவார்த்து, தாலி கட்டி வைத்து, சகலரும் பார்க்க தேரோட்டம், பாருவேட்டை, புஷ்பவசந்தம் முதலான சடங்குகளை விக்கிரகங்களுக்குச் செய்கிறார்கள். விஷ்ணு பார்வதி சாபத்தால் பாம்பானதும், சிவன் முடிகாண, பன்றியானதும், ராம அவதாரத்தில் தன மனைவி சீதையை மீட்க வல்லமையற்று, காட்டு வானரங்கள் உதவி தேடியதுமான இக்கதையை வாசித்தால், என்ன பக்தி உருவாகும்? எப்படி

முக்தி சேர்வோம்? கடுகளவு உண்மையாவது, நன்மையாவது இதில் உண்டா? இந்த நிலையில் நாம் கடைபிடித்து செய்யும் விஷ்ணுபக்தி, நமக்கு விஷ்ணுவிடமிருந்து எதைக் கொடுக்கும் வாய்ப்புள்ளது என்று சற்று ஆழ்ந்து சிந்தியுங்கள்.

ஸ்துதி, தோத்திரங்களுக்குப் பாத்திரராகிய மெய்ப் பராபரவஸ்துவைவிட்டு, வாழ்நாளை வீண்நாளாய், ஆக்கி, மெய்பக்தியின்றி பாவத்தில் உழன்றால், தேவனை சந்திக்கும் போது என்ன சொல்லி தப்பமுடியும்? இன்றைய வாழ்க்கை நிகழ்ச்சியில், முன் விஷ்ணுவின் (ஜீவியத்தில்) அவதாரத்தில் நடந்தேறிய செய்கையில் ஒன்றை ஒருவன் செய்வானாகில், மனிதர் அவனை எவ்வகை யிடையிலிட்டு மதிப்பார்கள்? அவனை பாவி, சண்டாளன், துஷ்டன் என்று நிந்திப் பார்களா? அல்லது சாட்சாத் கடவுளாய் மதித்து, தூப, தீப, நெய் வேத்திய ஆராதனையை துதிபாடிப் போற்றி, வணங்குவார்களா? சற்று நிதானியுங்கள்

நீதிக்கும், அநீதிக்கும், நீருக்கும், நெருப்புக்கும், பகலிற்கும், இரவிற்கும் எவ்வளவு பெரும் வித்தியாசமுண்டோ, அத்தனை பெரும் வித்தியாசம், ஒன்றான பராபரவஸ்துவான தேவனுக்கும், விஷ்ணுவுக்கும் உண்டு என்பது, இதனால் தெளிவாகவில்லையா? என்பதை வாசகர்களே! நிதானித்துப் பாருங்கள். ஓர் பாவி, அநாதி சுயம்பு ஒளிக்கு தன்னைச் சமத்துவமாய் ஒப்பிடமுடியுமா? தேவன் மாசணுகாத பரிசுத்தர். அவரைத் தேடிக் கண்டறிந்து, வழிபட்டு வணங்கி ஆராதித்துப் போற்றுவதே உத்தம பக்திநெறி, முக்தி சேரும் வழியதுவே! அதன் பாக்கியமோ, அளவிடவொண்ணு ஆனந்தம் பொங்கி வழிந்து, நீடூழி மகிழ்விக்கும், பேரானந்தம்.



8

சிவனின் வரலாறு

சிவன் மும்மூர்த்திகளில் ஒருவர். சிவனை, மும்மூர்த்திகளிலும், பஞ்சகர்த்தாக் களிலும், முப்பத்துமுக்கோடி தேவர்களிலும், மற்றுள்ள பிதுர் தேவர்களிலும், தேவிமார்களிலும் மகா பிரதான தேவனாய் மதித்து, ஈஸ்வர பட்டமிட்டு, தொழுது ஆதரித்து, விசேஷித்த ஆலயங்கள் கட்டி, தேர் திருவிழாக் கொண்டாடுகிறார்கள்.

சிவனின் பிறப்பின் வரலாற்றை முன்னுள்ள தேவர்கள் பிறப்பின் வரலாற்றில், வெகு தெளிவாய் விளக்கிக் காண்பித்திருக்கிறது. ஆனால் பின்வரும் பகுதிகளில் சிவனின் நடபடிகளை தெளிவாய் விளங்கிக் கொள்ள வாய்ப்புண்டாகும். சிவனுக்கும் பல மறுநாமங்கள் உண்டு.

சிவனின் மறுநாமங்கள்

சங்கரன் - அந்தகாரி - அந்திவண்ணன் -

அரவணிந்தோன் - அரன் - அழலாடி - அழலேந்தி - ஆலமர்கடவுள் - ஈசானன் - ஈச்சுரன் - ஈமத்தாடி - உமாபதி - உருத்திரன் - எண்டோளன் - ஏறூர்ந்தோன் - ஐம்முகன் - கங்காதரன் - கங்காணன் - கங்கைவேணியன் - கண்ணுதல் - கபாலி - கயிலையாளி - கரியன் - கறைமிடற்றோன் - காமநாசன் - காமாரி - காலாகாலன் - கிரிசன் - கிரீசன் - குன்றவில்லி - கூற்றுதைத்தோன் - கொன்றைசூடி - சடைமுடியோன் - சதாசிவன் - சசிதரன் - சந்திரசேகரன் - சம்பு - சுடலையாடி - சூலபாணியன் - சூலி - தந்தியுரியோன் - தானு - திரிபுரந்தகன் - திரியம்பகன் - நக்கன் - நந்தி - நந்திகேசுரன் - நம்பன் - நீலகண்டன் - நீறணிந்தோன் - பசுபதி - பரசுபாணி - பவன் - பாண்டரங்கன் - பார்வதி கொழுநன் - பிஞ்சகன் - பித்தன் - பிறப்பிலி - பிறைசூடி - பினாகபாணி - புரமூன்றெரித்தோன் - புலித்தோலுடையோன் - பூதநாதன் - பெருமான் - பேயுடனாடி - பங்கைபாகன் - மழுவாளி - மாலயற்கரியோன் - மானிடமேந்தி - முக்கண்ணன் - மூர்த்தி - யானையுரித்தோன் - யோகி - வரன் - வாமதேவன் - விடையோன், என்பனவாம்.

சிவன் பதவி : - கைலாசம்.

ஆயுதங்கள் : - சூலம், பாசம், பிநாகமெனும் வில், சிவனூர்தியுங்கொடியும், இரிஷபம்.

உடை : புலித்தோல்

சிவன், சுரூபத்தை பல சாயலில் செய்து வைத்து ஆராதிக்கிறார்கள்.

பிர்மாவிற்கும், விஷ்ணுவிற்கும், ஆயுள் கணித்திருப்பது போல், சிவனுக்கும் ஆயுள் கணிப்பு உண்டு. தினகற்பங்கள், முந்நூற்றறுபது, பிர்மாவிற்கு ஆயுளாம். அவ்வித வருஷம் இருநூறு, விஷ்ணுவுக்கு ஆயுளாம். இவ்வித வருஷம் முந்நூறு சிவனுக்கு, ஆயுளாம், சிவன், ஜென்ம நட்சத்திரம் திருவாதிரை.

மும்மூர்த்திகளும், தேவிமார்களாகிய தங்கள் மனைவிகளை நம்பாமல், பிர்மா, தன் நாவிலும், விஷ்ணு, தன் மார்பிலும், சிவன், தன் சிரசிலும் வைத்திருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சிவன், தன் சரீரமெங்கும் சாம்பலைப் பூசிக் கொண்டு, நீண்ட சடைகளை வளர்த்து ஆண்டிவேஷத்துடன், சூலாயுதத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு, ஆனைத்தோலை உடுத்தி, சர்ப்பங்களை ஆபரணமாய்ப் போட்டுக் கொண்டு, பிர்ம கபாலத்தை (தலைமண்டைஓடு) கையில் பிடித்துக் கொண்டு, மதுவினால் நிறைந்த, சிவந்த கண்களுடன், வெகுவாய் கூப்பிட்டுக் கூப்பிட்டு, பிச்சையிரந்துண்டு, வெட்டிச்சியுடனே சஞ்சாரஞ்

செய்து பன்னிரண்டு வருஷம் ருத்திர பூமியான சுடுகாட்டில் வாசம் பண்ணியதாய் தெரிகிறது. சிவனுக்கும் ஐந்து சிரசும், மூன்று, கண்களும் உண்டு.

ஒரு சமயம் சிவன பிர்மாவின், தலையில் ஒன்றைச் சங்கரித்ததால், அந்த பிர்மஹத்தி (சாபம்) சிவனைப் பிடித்துக் கொண்டு, பன்னிரண்டு வருஷம் தலையோட்டில் இரந்து உண்டதாயும், தெரிகிறது. இதை விளக்கும் ஓர் வெண்பா

நக்கீரர் வெண்பா

சங்கருப்பதெங்கள் குலம் சங்கரனுர்க்கேதுகுலம்
பங்கமுறச் சொன்னால் பழுதாமோ - சங்கை
யரிந்துண்டு வாழவோ, மரனே நின்போ
லிரந்துண்டு வாழ்வதில்லை.

சிவனுக்கும் மனைவிமார்களும், பிள்ளைகளுமுண்டு. சிவன் தன் மனைவி பார்வதியுடன் வேசிகள் இருக்கிற சிவபுரத்தில் பிச்சையேற் றுண்டுவருகையில், சிவனுக்குப் பல மனைவிகள் இருந்தும், வேசிகளோடு திரிவதைக் கண்ட பார்வதி, காய்மகாரத்துடன் சிவனுடன் பலமுறைச் சச்சரவு செய்தும், மற்றொரு சமயம் பஸ்மாசூரன், நான் யார் சிரசில் கை வைப்பேனோ, அவன் சாம்பலாய்ப் போக வரம் தரவேண்டுமென்று கேட்க, அவனுக்கு, அப்படியே அவ்வரம் கொடுக்கவே, அதை சோதிக்க எத்தனித்து, அவன் சிவனையே துரத்தி ஓட, தான் கொடுத்த வரம் தனக்கே ஆபத்தாய் முடிந்ததென நடுநடுங்கி, நாலு திக்கிலும் ஓடி மறைய இடமில்லாமல், ஓர் ஐவிரலிக்காயினுள் புகுந்து ஒளித்துக் கொண்டதாய் கதையுண்டு. இதை விளக்கும் கவி.

ஓர் கவி

விருகன் தவத்தைக் களித்தானவன்
வேண்டும் வரத்தையளித்தான்
வரத்தை சோதிக்க நினைக்கப் பயந்து
மருண்டைவேலியுட் புகுந்தொழித்தான் சிவன்

பேரின்ப மணிமாலை

மூவரையும் சனியன் தான் பிடித்ததாலே
முதலொருவன் தலையிழந்தான் முக்கண்ணுள்ளோன்
சாவு வருமென முனிவன் தனக்குமஞ்சித்
தானொளித்தான், ஐவேலி தன்னிலே தான்

பாவியென்ற் திருமாலோர், பெண்ணினாலே
பதியிழந்து பாரியுடன் வனத்திற்சென்ருன்
தேவனென்றே, இவர்கள் தம்மை வணங்கிஞலித்
திறமையுள்ள கதியருளுந் தேவனுமோ?

பொருள் : – மும்மூர்த்திகளும், சனியன், பிடித்த சாபத்தால் பிர்மாவின் தலை, சிவனால் கிள்ளப்பட்டு, இழக்க நேரிட்டதாயும், சிவன், பஸ்மாசூரனுக்கு வரம் தந்ததால் அதை சோதிக்க அசுரன், சிவனைத் துரத்த, சிவன் சாவுக்குப் பயந்து ஒடி, ஓர் ஐவிரலிக்காய்க்குள் புகுந்து ஒளித்ததாயும், பாவியான திருமால் என்னும் விஷ்ணு, ராம அவதாரத்தில், தன் தகப்பன் தசரதன் மனைவியின் வேண்டுகோள்படி, தன் மனைவி சீதையுடன் வனவாசம் சென்றதாகவும் காண்கிறதே. இவர்களைத் தேவனாய் வணங்கினால் முக்திபதவியளிக்கும் தேவர்கள் ஆவார்களோ? என்பதாம். இதனால், விஷ்ணு பக்தர், விஷ்ணுவின் மோகதந்திரத்தால் பெண்ணுருவாய் மாரி அசுரனைக் கொன்றதால் சிவன் தப்பிப் பிழைத்தார், என இழிவாய் பேசுகிறார்கள். இதன் முழு விவரத்தையும் கந்த புராணத்திலும், பாகவதம் 10-ம் ஸ்கந்தம், விருகா சூரனை கொன்ற அத்தியாயத்தில் 6 முதல் 16 பாடலிலும் காணலாம்.

ஒரு விருத்தம்

ஆதி வேதாந்த முதலறியா ஞான வஞ்செழுத்தின்
மெய்ப்பொருளை யயன்மால் தேடுஞ்
சோதியே யம்பலத்திற்ருேன்றியாடுஞ்
சுடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே
பாதி மதி சடைகளனிந்தரவம் பூண்டு
பதியிழந்து சுடலைதனிற்பாடியாடி
சாதியினிற் கடைவேடனெச் சிற்தின்றார்
சனியனே காகமேறுந் தம்பிரானே

ஒரு கொச்சகம்

சனியனிந்த மூவரையும் தாரணியிலே பிடித்தால்
சனியன் தனை யனுப்பும் தற்பரனார் வேறலவோ?
விருமாவின் கையெழுத்து மேதினியோர்க் குண்டானால்
விருமா தலையறுக்க, விதியெழுதி வைத்தவரார்?

இப்பாடலின் படி மும்மூர்த்திகளையும், தேவர்களையும் சனிபகவான் ஆட்சி செய்து, நிலைகுலையச் செய்வது உண்மையானால், சிவனோ, சனியனோ, யார் பெரிய தேவன்? மனிதர்க்கு விதியெழுதுவது

பிர்மாவானால், பிர்மா, தலையற்றுப் போக விதியெழுதியது யார்? என்று நீங்களே சொல்லுங்கள்.

முன், சொன்னபடி சிவன் அசுரனுக்குப் பயந்து ஐவிரலிக் காயினுள் ஒளித்துக் கொண்டிருந்ததால், சிவனை, மீட்க விஷ்ணு, மோகினி உருவெடுத்து, ஒரு அழகிய பெண்ணுய் அந்த அசுரன் முன்வர, சிவனை அழிக்க, காத்துப் பார்த்துக் கொண்டிருந்த அசுரன், இந்தப் பெண்ணைப் பார்த்து மயங்கி அவளைக் கிட்டிச் சேர்ந்து ஆலிங்கனம் செய்ய வந்தபோது அவன் நீ போய் முழுகிக் குளித்து உன்னை சுத்தம் செய்து கொண்டு வாவென, அவன் போன இடமெல்லாம் தண்ணீரில்லாமல் செய்து, கடைசியாக மாட்டுக் குளம்பிலிருந்து ஒரு துளித் தண்ணீர் கொண்டாவது தலையில் வைத்து சுத்திகரித்துக் கொண்டு வாவெனவே. அசுரன் அப்படியே செய்ய அக்கினி பற்றியெரிந்து சாம்பலாய்ப் போனானாம்.

பின் விஷ்ணு, தன் பெண்ணுருவை மாற்றி, அசுரன் பற்றி எரிந்து அழிந்த வகையைச் சிவனுக்குச் சொல்லி, ஐவிரலிக் காயினுள்ளிருந்து இரங்கச் சொல்ல, சிவன், இதை உண்மை யென நம்பாமல், விஷ்ணுவைத் திரும்பவும் பெண்ணுருவாய் மாறி, ருசுப்படுத்திக் காண்பிக்கச் சொல்லவே அப்படியே விஷ்ணு பெண்ணுய் மாறியதும், சிவன் அடக்கிக் கொள்ள முடியாத, மோகவிகாரத்தால் தூண்டப்பட்டு, தாவிக் கட்டிப்பிடித்து, விஷ்ணுவோடு கூடிப்புணரவே, அந்த க்ஷணமே அரிஹரபுத்திரன் (விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் பிறந்த பிள்ளை) என்ற ஐயனார் பிறந்து விட்டாராம். இவ்வித காமக்கோட்டி நிறைந்த கதையின் வரலாற்றை வாய் கூசாமல் வெளியிட்டும் சொல்லலாமோ? இவ்வித புணர்ச்சியால் தேவர்கள் பிறப்பது கூடுமா? உண்மையானால் அது நீதியோ? இதை இன்னும் விவரித்து இங்கு எழுத கை கூசுகிறதே!

இரு சமயவிளக்கம் கவுதமர் வீடு சிவ சாப சம்பந்தப் படலத்தில் உள்ள கவி

ஏகுகின்ற தோரளவில் வெள்ளமாயிந்திரியத்து வெள்ளருவியோடலுந்
தேக முள்ள கான்யாறு தானெனுமென்ன வங்கையா லன்னி வேறுகோ
ரூகு புத்தியால் விந்துவென்று தானுன்னியின்ன வாரெழி விலாசம்
போகமெய்துவார் யோனிலிங்கமிப்போது விழவிப் புவியிலென்றனன்.

பொருள் :- ஒருநாள் காலையில் கவுதம ரிஷி, எழும்பி ஸ்நானம் பண்ணி, போகும்போது, எதிரே வெள்ளப்பெருக்கு போல் இந்திரியம்

ஒடுகிறது கண்டு, காட்டு ஆறென்றெண்ணி தன் கையினால் அள்ளிப்பார்த்து, அது இந்திரியம் என்றறிந்து இப்படி ஒழியாது சம்போகம்பண்ணுவோர் லிங்கமும் ஆவடையாரும், அற்றுப் பூமியிலே விழக்கடவதென்று சபித்தார். இதனால் சிவன், பார்வதியின் லிங்கமும் ஆவடையாரும், கவுதமர் சாபத்தால் அறுவுண்டு போயிற்றும். இதை கண்ட ரிஷிகள் எல்லாரும் கவுதமரிடம் வந்து, நீர் குடியிருக்கிற வீட்டில் கொள்ளி வைத்தால் போல், சந்திரசேகரனாகிய சிவனை சபிப்பதற்குப புத்தியற்றுப் போனீர், இனி நீர் அந்தண குலத்திலிருக்க நாங்கள் சம்மதியோம் என்கவே, ரிஷிகளைப் பிரியப்படுத்த, கவுதம ரிஷி, அற்று விழுந்த சிவன், பார்வதியின் லிங்கத்தையும் ஆவடையாரையும் யாவரும் இது முதல் அருச்சனை பண்ணக்கடவர்கள் என்று சொல்லி, அளவில்லாத நூல்களை இன்றே உண்டாக்குவேன் என்று ரிஷிகளுடன் சொலலி ஒப்புரவானதாக, கந்தப்புராணத்தில், உதாரணமெடுத்து இருசமய விளக்கத்தில் எழுதியிருக்கிறது. இதே மாதிரி இன்னொரு சமயம் தாருகாவனத்து ரிஷிகள் சாபத்தால் சிவனுடைய லிங்கம் அற்றுப் போகவில்லையா?

ரிஷி, முனிவர்கள் சாபத்தால் அற்றுவிழுந்த இந்த லிங்கத்தையும், ஆவடையாரையும், கல்லுருவில் செய்து (ஆண் குறி, பெண் குறி) கோயிலுக்கு உள்ளேயும், வெளியேயும் வைத்து வணங்குவதுமன்றி பலவித லோகங்களில் செய்து சிறியதாய், கழுத்திலும் கட்டி, தொங்கவிட்டுக் கொண்டு லிங்க பூசை செய்யவில்லையா? லிங்க பூசையைப் பற்றிய அகஸ்திய முனிவர் பாடல்.

அகஸ்தியர் ஞானம் 30-ல் 20-ம் பாடல்

பாரப்பா இப்படியே தெளிவில்லாமல்
 பராபரத்தை யறியாமல் மோசம் போருா்
ஆரப்பா எதிர்ப்பார்கள் என்னோடே தான்
 அஞ்ஞான மூடர்கள் தான் அதை எண்ணுர்கள்
வேரப்பா சிவலிங்கம் விஷ்ணு லிங்கம்
 வேதாந்த லிங்கமதை விரித்துப் பார்த்தால்
சோரப்ப கசுமால நாற்றம் நாற்றம்
 சிவம் வேண்டுமென்று தினஞ் செபத்தை செய்யே.

பொருள் : (சிவம் - மோட்சம்) மக்களுள்ளத்தில் தெளிவான படி ஒன்றான மெய்பராபர வஸ்துவை அறியும் அறிவில்லாத படியால், அவரை அறியாமல் மோசம் போகிறார்கள். நான் மெய் வேதாந்த விளக்கம் சொல்லும்போது ஞானமில்லாத மூடர்கள் தவிர என்னை யார் எதிர்ப்பவர்கள்; வேதாந்தத்தில் சிவலிங்கம், விஷ்ணுலிங்கம், என்று பூசை செய்வதைப் பற்றி

விவரமாய் ஆராய்ச்சி செய்துபார்த்தால், பெரும் நாற்றத்திலும், நாற்றமாய்க் காண்கிறது. ஆகவே, தினமும் மோட்சம் வேண்டுமென்று ஜெபப் பிரார்த்தனை செய் என்பதாம்.

சிவனைப் பற்றிய தொடர்ந்த ஆராய்ச்சியில் ஜைனமதத்தில் காணும் சில குறிப்புகளை கீழே காண்கவும் : - இக்காலத்திலுள்ள ஜைன பக்தர்களைப் போல், முற்காலத்தில் இருந்த ஜைனர்கள் சிவனை தெய்வமாய்த் தொழுது ஆராதித்து வந்தார்கள் என்பதற்கு யாதொரு ஆதாரமும் இல்லை. ஏன் எனில், ஜைனர் வணங்கும் சிவனுக்கும், சைவர் வணங்கும் சிவனுக்கும் உள்ள பெரும் வித்தியாசத்தை கீழே காணும் சமஸ்கிருத சுலோகத்தால், ஒரு ஜைனன், சைவ, மதத்தைக் கண்டிப்பதைக் காண்கவும்.

சுலோகம்

'தக்தம்யேன புரத்ரயம் சரபுவா தீவ்ராச்சி ஷாவஹ்கினா
யோவந்ருத்யதி மத்தவத் பித்ருவனே யாத்வ யாத்மஜோவாகுஹ
சோயம் கிம்மம சங்கரோ பயத்ருசாரோ ஷார்த்தி மோஹக்ஷயம்
க்ருத்வாய ஸதுர் ஸர்வ வித்தனுப்ருதாம் க்ஷேமங்கர சங்கர'

பொருள் :- சுடுகாட்டிலிருந்தெழும், கடும் ஜுவாலை வீசும் அக்கினியால் எவன் திரிபுர சம்மாரம் செய்தானோ, (விஷ்ணு மாயைக் குட்பட்ட பக்தன் என்று அறியாமையால் சுட்டெரித்தான் என்பது பொருள்) பித்தன் போல், எவன் சுடுகாட்டில் ஆடுகிருனோ, அவன் என் வணக்கத்திற்குரிய சங்கரன் அல்ல என்பதாம்.

சுலோகம்

'ஈசாகிம் சின்ன லிங்கோயதிவிகதபய சூலபாணி கதம்ஸ்யாத்
நாத:கிம் பைக்ஷ சாரீயதிரி ஸகதம் ஸாங்கன ஸாத்ம ஜஙச
ஆர்த்ராஜ:கிம்த்வஜன்மா ஸகல விதிதி கிம்வேந்தி நாத்மாந்த்ராயம்
ஸம்க்ஷோபாத் ஸ்ம்யருக்தம் பசுபதிமபசு : ! கோத்ர தீ பானுபாஸ்தே'

பொருள் : - முறிந்த லிங்கம் (ஆண்குறி) கடவுளாகுமோ? தீரவீரனுனல் சூலம் கரம் தாங்குவதேன்? உலகிற்கே இறைவனுனல், பிச்சையேற்று (யாசித்து) உண்பதேன்? மனைவி புத்திரருடன் கூடியிருப்பவன் துறவி (யதிதி) யாவதெப்படி? பிறப்பு, இறப்பற்றவன் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிறந்தான் என்றால் அர்த்தம் என்ன? • தனக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் இடையூறை அறியும் வகையற்றவன், மூதறிஞன் என்பதெவ்விதம்? என்பதாம். • பத்மாசுரனுக்கு வரமளித்ததில் வந்த துன்பம்.

ஜைனர் வணங்கும் சிவனின் லட்சணங்கள் சுலோகம்

மயாநாஸ்தி ஜடாக பாலமுகுடம் சந்த்ரோர்ண மூர்த்தாவி
கட்வாங்கம் நசவாசுகிர் நசதனு சூலம் நசோக்ரம் முகம் காமோ
யஸ்ய நகாமினி, நசவ்ருஷோகீதம் நந்ருத்யம்புனயோஸ்பான்
பாது நிரஞ்சனே நிருபம் : ஸ்ர்வத்ர ஸுூம சிவ

பொருள் : மாயையற்றவனும், யாசகம் எடுக்கும் பாத்ரம்: ஜடை, தலையோடு இல்லாதவனும், கிரீடம், இளம் பிறை தண்ணீர், கட்வாங்கம், வாசுகி, வில், சூலாயுதம், கடுமுகம் காமம், யௌவனப் பெண், ரிஷபம், பாட்டு கூத்து முதலியன இல்லாதவனும், நிரஞ்சனும், சூக்ஷம சர்வவியாபியும் ஒப்பற்ற சிறப்புடையவனுமாகிய சிவன் எங்களைக் காக்கக் கடவன் என்பதாம்.

ஒரு சைவ சன்னியாசி, ஓர் சமண முனிவரைச் சந்திக்க நேர்ந்தால், சைவனைச் சந்தித்த பாவந்தொலைய, சமண முனிவர், சில குறிப்பிட்ட தினங்கள் விரதமிருக்க வேண்டுமாம். இதன் இடையில் முனிவர் விரதங் காக்கும் வரலாற்றை மற்றொருவன் கேள்விப்பட்டால், கேள்விப் பட்டவன் தன் பாவந்தொலைய, முனிவர் விரதங்காக்கும் நாட்களின் பாதிவரை, இவன் பட்டினி கிடந்து தவசுபுரிய வேண்டுமாம். இங்கு சிவன், என்பது பராபரவஸ்து.

ஜைனர்கள், ஜீன தேவனை வழிபட்டு, வணங்குகிரு்கள், ஜீனன் என்றால், உலகத்தைக் கடந்து முழு முதற் கடவுள் என்று அர்த்தமாம். இதனால் சைவர் வணங்கும் சிவன் மனிதன் என்றும், ஜைனர் வணங்கும் சிவன் இதற்கு முற்றும் வேறுபட்டவர் என்றும் விளங்குகிறது.

சிவனின் பிரதான ஸ்தலங்கள்.

திருவண்ணமலை, திருக்காளாஸ்திரி, திருவெற்றியூர், திருவிடைமருதூர், திருவாரூர், திருவாலங்காடு, திருக்கழுக்குன்றம், திருக்கோணமலை, (இலங்கைத் தீவில் உள்ளது). சீர்காழி, சிதம்பரம், காசி, காஞ்சிபுரம், முதலியனவாம்.

மேற்சொன்ன ஜைனமதத்திலுள்ள சுலோகத்தில் இரண்டு சிவன் உண்டு என்றும், சைவர் வணங்கும் சிவனுக்கும், ஜைனர் வணங்கும் சிவனுக்கும் பெரும் வித்தியாசம் உண்டு என்றும், சொல்லப்பட்டிருப்பது போல், ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்டுள்ள வாக்கியமாகிய, சிவஞான சித்தியாரின் சைவசித்தாந்த நூலாகிய சுபக்கத்திலும் சிவனை விட தனிப் பரம் பொருளாகிய பராபரவஸ்து ஒன்று உண்டு என்று விளக்கிக்

காட்டியிருப்பதை, அதிலிருந்து எடுத்து எழுதியிருப்பதை கீழே ஆங்கில மொழியில் காண்கவும்.

"That Siva is all the three Gods. As it is His Power that shines in them, and that yet He is different from them in essence."

"When the power of the Supreme God is manifest in the person and body of the Tirumurties and other higher powers. Maheswara and Sadasiva, the identity of the two is perceived." "Hence the diffence of the three Gods" (Sivagnana Siddhiyar - Subbakam, Page 34)

மேலுள்ள ஆங்கில வாசகத்தின் பொருள் : சிவனின் சுய சக்தியே மும்மூர்த்திகளிலும் காணப்படுவதால், சிவனே திருமூர்த்தியுமாவார், என்றாலும் சுபாவலட்சணங்களில் இந்த சிவன் அவர்களுக்கு முற்றிலும் வேறுபட்டவர், உன்னத தேவனின் வல்லமை, திருமூர்த்திகளிலும், மேலான சக்திகளாகிய மகேஸ்வரனிலும், சதாசிவனிலும், காட்சியளிக்கும் போது இவ்வித காரணத்தால், மும்மூர்த்திகள் தேவர்களாய் மதிக்கப்படுகிறார்கள். சிவஞான சித்தியார் - சுபக்கம் 34-ம் பக்கம்.

கடவுளும் திருமூர்த்திகளும்

கவி

அயன் தனை ஆதியாக அரனுருவன்ப தென்னை
பயந்திடுஞ் சத்தியாதி பதிலாற் படைப்பு மூலம்
முயன்றனர் இவரேயாயின் முன்னவன் என்னை முற்றும்
நயந்திடும் அவனி வர்க்கு நண்ணுவ தொரோவென்றுமே.

"If it be asked how the Gods Brahama, and the rest are also forms of Hara, it is by the power of His Sakti, that these Gods perform their functions.The objection, that if these Gods perform these functions no other God, as Hara is necessary, is met by the fact, that these Gods can, only perform one, each with the power given by Hara."

"The power of these Gods is confined to and by the respective material plane. in which they exercise their functions. Gods Brahama, and Vishnu, cannot rise above the parakiriti plane of the universe, Rudra and Maheswara above the asuddha maya plane and so on. So that, an all seer, and all worker, is essentially necessary" (Sivagana Siddhiyar Subbakam, Page 53)

ஆங்கில வாசகத்தின் - பொருள் :- பிர்மா முதல் மற்றுள்ள எல்லா தேவர்களும் அரன் (ஒன்ருன பராபரன்) உருவுக்கு சமத்துவமாவதெப்படி என்றால் அந்த தேவர்கள் அனைவரும் அரனின் சக்தி கொண்டே தங்கள் தங்கள் அலுவல்களை நடத்துவதே காரணம். இவ்விதம் இத்தேவர்களே அலுவல்களை நடத்திக் கொள்வதானால், அரன் என்னும் மற்றொரு தெயவ்ம் வேண்டியதில்லையே என்பதற்கு நியாயம் ஏதெனில் இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அலுவலை மட்டுமே, அரனிடத்திலிருந்து பெற்ற சக்தியால் செய்யக் கூடியவர்களாய் இருக்கிறார்கள், என்பதாம். பிரம்மாவும், விஷ்ணுவும் பிரபஞ்ச பரகிருதிக்கு மேல் எழமுடியாமலும், ருத்திரனும் மகேஸ்வரனும அசுத்தா மாயைக்கு மேல் எழமுடியாமலும் உள்ளவர்கள். ஆதலால், சர்வத்தையும் காண வல்லவரும். சர்வத்தையும் செய்யவல்லவருமான ஒரு அரன் (தேவன்) வேண்டியது மிக அவசியம் என்பதாம். (சிவஞான சித்தியார் - சைவ சித்தாந்த நூல், சுபக்கம் 53-ம் பக்கம்.)

இதன் உண்மையை விளக்கும் கவி - திருவாசகத்தில் உள்ளது. சிவஞான சித்தியாரின் சுபக்கம் என்னும் நூலில் 32-ம் பக்கம் பார்க்கவும்.

கவி

மூவரும் முப்பத்திமூவரும் மற்றொழிந்த
தேவரும் காணுச் சிவபெருமான் - மாலேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும்.

பொருள் : - பிர்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூம்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும், மற்றுமுள்ள தேவர்களும், கண்டிராத சிவபெருமான் (பராபரன்) அவதாரமாய் உலகத்தில் வந்துதித்த வரலாற்றை தியானிக்க, உள்ளத்திலிருந்து பேரானந்தம் பொங்கி வழியும் என்பதாம்.

இத்தனை சுலோகங்களின் பொருளையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கையில், அரன் என்னும் (பதம்) வார்த்தை, மும்மூர்த்திகளில் ஒன்றான சிவனைச் சுட்டிக் காண்பிப்பதாக அல்ல, சிவனையல்லாத பராபர வஸ்துவாகிய ஓர் தெய்வத்தையே காட்டுவதாகத் தெரிகிறது. இவ்வித விளக்கம், சிவன், மும்மூர்த்திகளில் ஒருவராய், கடவுள் என்று வணக்கத்திற்குரியவராய் எண்ணப்பட்டாலும், இவரிலும் விசேஷித்த ஓர் உன்னதமான தேவன் உண்டென்பதை இது திட்டவட்டமாய் விளக்குகிறதே. இந்த சிவன் தனிமுதற் கடவுளான தேவன் அல்ல, என்னும் சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது. இதுவன்றி, இம், மும்மூர்த்திகளுக்கும், உலக மனிதரைப் போலவே ஜாதிவேற்றுமை, உண்டென்றும்

இத்தேவர்களின் ஜாதி வகுப்பின்படியே, மனிதஜாதியார், அவர்களை வணங்க வேண்டு மென்ற கட்டளை விதிகளையும், கீழே காண்கவும். இது மகாபாரதத்தில் உள்ளது.

"Siva was the God of the upperclasses, Brahamans, and Kshatriya, and Manu in mentoning the caste of the God's make out that Siva is BRAHAMAN, Vishnu, KSHATRIYA, and Brahama, VAISYA and Indra, SUDRA, and their WORSHIP BY THE RESPECTIVE CASTES are Recommended" (Sivagnana Siddhiyar - Subakkam - Page 48, Found in Mahabarat)

ஆங்கில வாசகத்தின் தமிழாக்கம் : - சிவன், பிராமண சத்திரியரான, மேல் குல மக்களுக்கு தெய்வம், மேலும் மனுவென்பர், ஜாதி வரலாற்றை சொல்லும்போது, சிவனை பிராமண ஜாதி, என்றும் விஷ்ணுவை சத்திரியகுல மென்றும் பிர்மாவை வைசிய குலமென்றும், இந்திரன் சூத்திர குலமென்றும், வகுத்துப் பிரித்து, அந்தந்த குலத்தார் அந்தந்த குலத் தேவர்களையே, வணங்க கட்டளை விதித்திருக்கிறது. (சிவஞான சித்தியார் சுபக்கம் 48-ம் பக்கம்) முழுவிவரங்களுக்கும் மகாபாரதத்தைப் பார்க்கவும்.

ஒரு விருத்தம்

"கிருபையழகு கண்டே நெறிகெட்டு விரகங்கொண்டே
உரை செய்யும்படி நினைத்திடிலெங்கள் உள்ளமிகு
பயங்கொள்ளும் வேலை செய்தான் சிவன்.

பொருள் : - சிவன் துரோணுசாரியார் பெண்ஜாதியாகிய கிருபை, என்பவளுடைய அழகைப் பார்த்த மாத்திரத்தில் அன்னியஸ்திரீயை இச்சிக்கலாகா தென்கிற நீதி நெறியைத் தப்பி, அவள் மேல் ஆசை கொண்டு, அடாத துஷ்ட காரியம் செய்தானே! ஐயோ! அந்த காரியத்தைச் சொல்ல நினைத்தால் என் மனந்திடுக்கிட்டு அதிக பயத்தை கொடுக்கிறதே என்பதாம். இக்கதையை சமஸ்கிருத பாரதத்தில் தெளிவாயறியலாம். இதை ஆதிபருவம், வாரணு வதச் சருக்கம் 41 முதல் 44-ம் பாடல்வரை, பாரதத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். பின்னம் கந்தப் புராணம், கயமுகனுற்பத்தி படலம் 160 முதல் 174-ம் பாடல் வரை உத்திரப்படலம் 30, 33, 34, 37, 38, 40, 43, 45, 53, 66, 89, 91, 92, 94-ம் பாடல்களையும் பார்க்கவும்.

ஓர் சமயம், இலங்கா சூரனாகிய இராவனேஸ்வரன் சிவனின் கைலாயமாகிய வெள்ளிப் பருவதத்தை தன்கையாற் பிடித்துக் குலிக்கினானாம். அதைக் கண்ட சிவன், தன் தேவ வல்லபத்தால், தனக்குத் திரிபுர அரன், என்ற பெயர் சூட்டிக் கொண்டு, யுத்தம் செய்தாராம். அது

பின்வருமாறு :- பூமியை ஓர் ரதமாக்கி, பிரம தேவனை சாரதியாக்கி, வேதங்களை குதிரைகளாக்கி, விஷ்ணுவை அம்பாக்கி, மகாமேருவை வில்லாக்கி, ஆதிசேடனை நாணாக்கி, அந்த ரதத்துக்குத் தாமே எஜமானாயிருந்து பாணத்தைக் கொளுத்தி திரிபுரங்களின் பேரில், எரிந்து அந்த மூன்று கோட்டைகளையும், அதிலிருந்த ராட்சதர்களையும் சுட்டழித்துப் போட்டார், என்று பாகவதம் ஒன்பதாம் சல்லாபத்தில் சொல்லியிருப்பதைக் காணலாம். இது உண்மையானாலும் இன்றைக்கு தேசங்களில் நடந்தேரும் பயங்கர விவரிக்கொண்ணுப் பிரமிப்பளிக்கும் யுத்தங்களுக்கு இது எம்மாத்திரம்? ஆகும் என்பது யோசிக்கத் தக்கது.

அல்லாமலும், சிவன், பூமியை ரதமும், வேதங்களைக் குதிரைகளும், பிர்ம்மாவை சாரதியும், விஷ்ணுவை அம்பு மாக்கி மேருபர்வதத்தை வில்லும், ஆதிசேட பாம்பை வில்நானும் ஆக்கிக் கொண்டு போர்புரிந்து திரிபுரங்களை வென்றது உண்மையானால், சிவன் பூமியை ரதமாக்கிக் கொண்டபோது, சிவன் யுத்தம் செய்யப் போன அந்த மூன்று புரங்களும், எந்த பூமியிலிருந்தது? ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்ததா? அதில் வசித்த ராட்சதர் எங்கேயிருந்தார்கள்? இந்த சந்தர்ப்பத்தில், இந்த திரிபுரங்கள் ரதமாக்கப்பட்ட பூமிக்குள் அடக்க மல்லவா? அதுமெய்யென்றால், குதிரை, வில், அம்பு, மற்றும் ஆயுதம் ஏன்? பூமியே ரதமானால், சிவன், இந்த ரதத்தை எந்த பூமியில் ஒட்டினார்? யுத்தம் நடத்திய இடம் மெங்கே? வேதங்களை குதிரையாக்கிய விந்தைதான் என்ன? விஷ்ணுவைத் தவிர வேறு வகையில் அம்பு செய்யக்கூடாதா? மகாமேரு பர்வதம் வில்லானதெப்படி? அது நின்றபூமி இரதமானபோது? பூமியை சுமந்து கொண்டிருந்த ஆதிசேடனைத் தவிர வேறே வில் நாண் கிடைக்கவில்லையா? அப்போது பூமியைச் சுமந்து கொண்டிந்தது யார்? ஆதிசேசன் பூமியை தன் தலைமீது தாங்கினது என்பது உண்மையானால், அது எதுமேல் நின்று பூமியைத் தாங்கிக் கொண்டிருந்தது என்பதற்கு ஒரு விளக்கமும் இல்லை. இவ்வித பொருத்தமற்ற சிவபராக்கிரமசெய்கைகளை, இக்காலத்தில் உண்மையென்று நம்புவோர் யார்?

இன்று கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும், பார்க்கும் பலவகை சூட்ச ரதங்கள் வாயு வேக, மனோ வேகமாய் பறப்பதைக் கண்காணப் பார்க்கிரோமே! பூமியையே சிவன் ரதமாக்கி ஒட்டியது உண்மையானால், எந்தப் பூமியின் மேல் ஒட்டினார் என்பதை, புராணக்கட்டுக் கூறினோர் ஏன் உணர்ந்து எழுதவில்லை? இதை நினைக்க பெரும் அதிர்ச்சியுரும் அதிசயமாய்க் காண்கிறது.

இந்த சிவனை, ஒரு சமயம் வாணுசூரன் என்னும் அரக்கன் மகா பலத்தவனனபடியால், தனக்கு வாசல்காவலனாக வைத்துக் கொண்டானாம். இவனை மீட்க, விஷ்ணு, விநாயகன், வீரபத்திரன், சுப்பிரமணியன், மற்றம் சேனைகளையனுப்பி வாணுசூரனோடு போர்புரிந்து சண்டையிடும்போது, சூரன் அவர்களுக்கு எதிராய் சிவனை அனுப்பி தேரிலேறி விஷ்ணுவோடு யுத்தம் பண்ணும் போது, சிவன், தேர் அடிப்பட்டு உடையவே, சிவன் விழும் சமயம், விஷ்ணு பார்த்து, இவன் நம்முடையவன் என்று கண்டு ரிஷபமாகத் தாங்கி, தப்பி ஓடச் செய்யவே, ஓடிப்போன சிவனை, வாணுசூரன் தன் சேனைகளோடு போய் எதிர்த்து யுத்தம் செய்ததை திருவரங்கக் கலம்பகம் 36-ம் பாடலில், உள்ளதைப் பார்க்கவும்.

கவி

ஐங்கரன் முடுகியோட, முருகனோட
முக்கனீசன் மக்களைத் தேடியோட
வாணணுயிரம் புயங்கள் குருதி நீர் சிந்தியோட
நேமி தொட்டதிரு வரங்கராசரே.

இவ்வித நடப்புகள் தேவர்களின் தெய்வீக லட்சணங்களை எவ்வளவு இழிவு படுத்துகிறதென்பதை வாசகர்களே பாருங்கள். காள மேகப் புலவன் பாடல்.

கலித்துரை

குண்டக் கழுத்தனை கூத்தாடும் பேயனைக் குண்டணியைக்
கண்டகருத்தனை பிள்ளையைத் தின்ற காணவையன்
மண்டக்கரத்தனை கண்ணப்பனெச்சிலை வாரியுண்ட
பண்டப் பறையனையோ தேவ னென்றெப்படிபாடுவேனே

சிவ வாக்கியர்

தேவர் தேவரென்று நின்று தேடுகின்ற மூடர்காள்
தேவர் யாவரென்றறிந்து தேடவுமறிகிர்
மூவர் தேவர் என்று நீர் மொழிந்ததென்ன நியாயமோ
மேவதாக உம்முளே, விரித்துணர்ந்து கொள்ளுமே.

அரியுமல்ல, அயனுமல்ல, அரனுமல்ல, அப்புறம்
கருமை,செம்மை, வெண்மையும் கடந்து நின்றகாரணம்
பெரியதல்ல, சிறியதல்ல, பெண்ணு மாணுமல்லவே

துரியமுங்கடந்து நின்ற தூர தூர தூரமே

அமரர் புராணச் சுருக்கம்

பலகலைகள் ஓதுவகை நாலுந்தானும்
பண்ணிய தோர் நால்வேத மாறு சாஸ்திரம்
அலையுடனே தத்துவங்கள் தொண்ணூற்றுறும்
அவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்
மலையரசன் சிவன், பிரம்மா, விஷ்ணு, தானும்
மாசில்லா நாதனுட வழியுங்கானார்
நிலைபெருக மோட்சவழி காணுதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே.

பெரிய சித்தர் ஞானக் கோவை

முச்சுடரும் ஒன்ருகும் மும்மூர்த்தி யல்ல
மூவருமே ஆளுருவம் ஒன்யோகும்
அச்சுதா யிவர்களுமே ஆண் பெண் அல்ல
அரனுமல்ல, லிங்கமல்ல, அநாதியான
சட்சி தானந்தனையே வணக்கஞ் செய்து
சற்குருவை தரிசித்துப் பாதம் போற்றி
எச்சரிக்கை கொண்டு நட அப்பா, அப்பா
எண்ணில்லா முக்திவழி யெய்துவாயே.

அகஸ்தியர் ஞானம் - 30

ஓடுகின்ற வகைளெல்லாம் உரைத்துப் போட்டேன்
உலகுதனில் மார்க்கமெல்லாம் உகந்துசொன்னேன்
தேடுகின்ற புராணமெல்லாம், பொய்யே என்றேன்
சிவன், பிரம்மா, விஷ்ணுவெல்லாம் பேயே என்றேன்
ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசத்தி என்றேன்
அஞ்ஞானம்பண்ணுகின்றஅசுந்தைஎன்றேன்
பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்
பரம குரு சொன்னபடி பாடினேனே

அகஸ்தியர் ஞானம் 30-ல் பாடல் 9

கருதினாரிப்படியே சொன்னேனப்பா
கைலாய விடமெங்கே கருவூர் எங்கே
பருதியடா உலகமது பனியின் வாழ்வு
பராபரனுராறு சொயம் பகர்ந்தசோதி!

ஒருவருமே நிகராத வஸ்துவப்பா
ஓ கோ, கோ, மயங்காதே யூன்றிப் பார்த்து
திரிபொருளை யறிவினாலுணர்ந்து பார்த்து
தெரிசிப்பாய் நெறி பத்துந் தெரிசிப்பாயே,

ஔவையார் - வெண்பா

மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் - அவன் மனிதன்
சீலமுடன் உற்று உணர்ந்த உகந்த பெரியார்
கற்றும் அறிந்தார் இல்லை காண்

இப்பாடல்களின் பொருள் அனைத்தும், பிர்மா, விஷ்ணு, சிவன், என்னும் மும்மூர்த்திகளும், எவ்வகையிலும் தெய்வ லட்சணம் பொருந்திய வணக்கத்திற்குரிய மெய்ப்பராபர வஸ்துவாகிய ஒன்ருன தேவனுக்கு நிகரான தேவர்கள் அல்லவே, அல்ல என்று தெளிவுபடுத்துவது மல்லாமல், இவர்கள் நம்மைப் போன்றவெரும் மனிதர்கள், மலைகளிலிருந்து, தேசக் குடிகளை பரிபாலனம் செய்து, அரசர்களாய் ஆட்சி புரிந்தவர்கள் என்றும், இவர்களை அல்லாமல் ஓர் தனிப் பெருஞ்சோதி, ஒன்றிற்கும் ஒப்பற்ற, தனிமுதற் பரம்பொருளாய் முச்சுடர் சுரூபமும், ஒரே சுடருமாகியமைந்த தேவன் ஒன்று உண்டு. அதையே அறிவினாலுணர்ந்து பார்த்து, அவர் தந்த பத்துகட்டளைப் பிரமாண விதிகளையும் கைக்கொண்டு நடக்க வேண்டுமென்று தெளிவுபடுத்துகிறது.

வாசகரே! உமக்கு உண்மையிலேயே ஓர் மெய்பக்தியைத் தேடி ஆராய்ந்து கண்டு கடைபிடித்து தொழும் ஆசையிருந்தால், இவை யனைத்தையும் கவனித்து கிரகித்து, மெய்பராபர வஸ்துவாகிய நற்பொருளை நாடி, பின்வரும் விளக்கங்களை அமர்ந்து வாசித்து, உன்னத தேவனின் அருளைத் தேடுவீராக. இதுவே உமக்கு இகபர நித்தியானந்த பேரின்ப பாக்கிய சந்தோஷத்தை நீடூழி தரும்.



9

பஞ்ச கர்த்தாக்கள் வரலாறு

இதுவரை மும்மூர்த்திகளின் பிறப்பின் வரலாற்றையும், அவர்களின் நடபடிகளையும் பொதுவாயும், தனித்தனியாயும் பார்த்தோம். இதல்லாமல் இந்து சமய வணக்க வழிபாடுகளில் மும்மூர்த்திகளுடன், சதாசிவன், மகேஸ்வரன் என்னும் இருவரையும் சேர்த்து, இவ்வைந்து பேரையும், பஞ்சகர்ததாக்கள் என்று வணங்கி வருகிறார்கள். சதாசிவன், மகேஸ்வரனாகிய இருவரும் மும்மூர்த்திகளைப் போலவே, சுய வல்லமை யற்றவர்களானதால் இவ்விருவரும் அரனிடத்தில் (ஒன்றான தேவன்) இருந்தே, வல்லமைபெற்று தங்கள், தங்கள், அலுவல் களை நடத்த வேண்டுமென்று சைவசித்தாந்த நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் முழு விபரங்களையும் அறிய விரும்புவோர், இதில் காணும் சிவன் வரலாற்றிலிருந்தும், சைவ சித்தாந்த நூலில் (சிவஞானசித்தியார்) சுபக்கம் 34-ம், 48-ம், 53-ம் பக்கம் பார்க்கவும்.

10

முப்பத்துமுக்கோடி தேவர்கள்

இந்துசமய வணக்க வழிபாடுகளில், மும்மூர்த்திகளும், பஞ்சகர்த்தாக்களும் அல்லாமல் முப்பத்துமுக்கோடி தேவர்களின் வரலாற்றையும், மற்றும் காணப்படும் சிருஷ்டிப்புகளின் வரலாற்றையும் யாவரும் எளிதில் அறியும் வண்ணம் அவற்றை இந்து சமய புராணகாவியங்களிலிருந்து அப்படியே எடுத்து எழுதப்பட்டிருப்பதை கீழே காண்க :-

பூர்வத்திலே, தக்ஷப் பிரஜாப்திக்கு ஐம்பது பெண்கள் பிறந்தார்கள், அதிலே பதின்மூன்று பெண்களை காஷிப மகா ரிஷி கலியாணம் பண்ணிக் கொண்டார். ''அதிதி'' என்பவள் முப்பத்துமுக்கோடி தேவர்களையும், வாமனுவ தாரமான விஷ்ணுவையும் பெற்ருள், ''தனு'' என்பவள் தானவர் முதலானவர்களையும் பெற்ருள்.

''மதி'' என்பவள், மனிதர்களையும்,

அவர்கட்கு இயல்பாகிய, வருஷங்களையும் பெற்றாள்.
''சுரபி'' என்பவள் பசுக்களையும், சராசரங்களையும் பெற்றாள்.
''குரோதவசை'' என்பவள், கழுதை, கடம்பை, ஒட்டகம் முதலானவைகளைப் பெற்றாள்.
''வினதை'' என்பவள், காற்று, இடி, மின்னல், அருணன், கருடன், கூகை, பருந்து, பக்ஷி முதலானவைகளையும் பெற்றாள்.
''தாம்பிரை'' என்பவள் ஊர்க்குருவி, கவுதாரி, காடை முதலியவைகளைப் பெற்றாள்.
''கழை'' என்கிறவள் கொடிகளையும் செடிகளையும் பெற்றாள்.
''கத்துருவை'' என்பவள் பல, பல சிரசுகளை உடைய பாம்புகளைப் பெற்றாள்.
''சுதை'' என்பவள் ஓணான், உடும்பு, அணில் முதலியவைகளைப் பெற்றாள்.

''அரிஷ்டை'' என்பவள் ஜலசர முதலியவைகளைப் பெற்ருள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் முழு விவரங்களையும், ராமாயண வசன காவியம், ஆரணிய காண்டம் சடாயுவைக் காணுதல் 144-ம் பக்கம் பார்க்கவும்.

மேற்காணும் விளக்கத்தின்படி, மனித பூர்வோத்திர வரலாற்றைப் பார்க்கும் போது, தக்ஷப்பிரஜாப்திற்கு, மனைவியும், பிள்ளைகளும் இருந்தது உண்மையானால், தக்ஷப்பிர ஜாப்தியையும், ஷேயாரின் மனைவியையும், பெற்றது யார்? என்னும் கேள்வி எழுகிறது. இவர்கள் இருவருக்கும் இரண்டு சந்ததி உண்டாயிருந்து, பின் இவர்கள் ஒருவரை ஒருவர் கல்யாணம் செய்து ஐம்பது பெண்களைப் பெற்று இவர்களை அல்லாத மற்றொரு சந்ததியாகிய காசிபமகாரிஷிவகுப்பார் இதில் பதிமூன்று பெண்களை மணம் செய்து, முதல் மனைவி ''அதிதி'' என்பவளுக்கு, முப்பத்துமுக்கோடி தேவர்களும், வாமனவதாரமான விஷ்ணுவும், பிறந்ததாய் தெளிவுப்படுத்துகின்றது. இதன்றி மும்மூர்த்திகளில், ஒருவரான விஷ்ணுவும், முப்பத்து முக்கோடி தேவர்களும் மனிதர்களுக்குப் பிறந்தவர்களாகவே காண்கிறது. அப்படியே மற்றும் சிருஷ்டிப்படைப்புகளாகிய ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர்வாழ்வனவாகிய, சகல ஜீவராசிகளும் கூட மனிதர் யோனி, வழியாய் பிறந்ததாகத் தெரிகிறது. மதி, என்பவள் மனிதரையும், வருஷங்களையும் பெற்றாள், என்பது கடுகளவேனும் விளங்கிக் கொள்ள முடியாத ஓர் விபரீதமான காட்சி.

உலகத்தில், காற்று இல்லையென்றால், ஜீவன் இல்லை, அப்படியிருக்க காற்றையும் இடிமின்னல்களையும் பெண் யோனி வழியாய் பெறுவதெப்படி? வாசகர்களே, சிந்தியுங்கள்! மழை மிகுதியால், இடி காணும் போது, எவ்வித பயங்கர அதிர்ச்சி, ஆபத்து, மரணம், ஏற்படுகிறது. இதை,

ஒரு பெண் பெற்றாள், என்றால் இதை எவ்வகையில் நம்புவதென்று வாசகர்கள் சிந்திக்கவும். தக்ஷப்பிரஜாப்தி மகள் வினதை காற்றைப் பெற்றாள் என்றாள். இதுவரை தக்ஷப்பிரஜாப்தி தகப்பன், பாட்டன், முதலானோரின் வம்சத்தார், எந்த காற்றை சுவாசித்துக் கொண்டு ஜீவனோடு இருந்தார்கள். இரவு, பகல், மாறி, மாறிக் கழிந்து, நாட்கள் மாதங்கள், வருஷங்கள் கணிக்கும் போது, வருஷங்களை, பெண்கள் கற்பத்தில் உற்பவித்து பெறுவதெப்படி? நீங்களே சற்று யோசியுங்கள். நாம் பார்க்கும் சகல விதை வகையும், விதைத்து, அறுத்து விர்த்திசெய்கிறோம். அப்படியிருக்க, செடி, கொடிகளை பெண்யோனிவழியாய் பெறுவதெப்படி? அப்படியே மற்றுள்ள சகல ஜீவன்களையும் பெண்கள் பெற்றார்கள் என்றால் இதை நம்புவதற்கு ஏதும் ஆதாரம் உண்டா? அது மாத்திரமல்ல, மனிதர்கள் ஆண், பெண்களாய் பிறந்த எவ்வளவு காலத்திற்குப் பின், அவர்கள் வயிற்றில், நாம் வணங்கும் தேவர்கள், பிறந்தார்கள்? வணக்கதிற்குரிய தேவர்களா? அதை வணங்கும் மனிதர்களா? யார் முந்திப் பிறப்பது ஏற்றது, வாசகர் தீர்ப்பிடுங்கள். மனித சந்ததியில் பிறந்தோரை, தேவர்களாக்கி வணங்குவதால் பயன் உண்டாகுமா?

அதிதி, என்பவளுக்கு முப்பத்திமுக்கோடி தேவர்கள் பிறந்தார்கள் என்றால் இவர்களை எத்தனை வருஷத்தில் அல்லது நாட்களில், பெற்றாள், என்பதற்கு விபரம் காணோம். அது மாத்திரமா? மீன் சினையைப் போல் பெற்றாள் என்பது, தேவர்கள் ஆவதெப்படி? இந்த தேவர்கள் பின்னும் பெருகாததற்குக் காரணம் என்ன? அப்படியிருந்தால், இன்று எத்தனையோ கோடித் தேவர்கள் இருப்பார்களே!

பார்வதி, சிவனோடு திரண்ட வருஷகாலமாய் கூடி வாழ்வதைக் கண்ட இந்த தேவர்களே, அவர்கள் இருவரையும் தடுத்துப் பிரித்துவிட்டபடியால், பார்வதி திருப்தியாகாத காமமெழுப்பின கோபத்தினால், அவர்கள் மனைவிகளைச் சபித்து, மலடிகள் ஆனார்களாம். இவர்கள் மெய்யாகவே தேவர்களானால், இவ்வித சாபம் பலிக்கலாமா? இவ்வித நீச சாபங்களை நீக்கிக் கொள்ள வல்லமையற்றோர்களை, தேவர்களாய் மதித்து வணங்கினால், இவர்கள் என்ன முக்திபதவியளிக்க வல்ல தேவர்கள்? இவர்களை நாம் தேவர்களாக்குவதும், வணங்குவதும், பரம்பரைப் பழக்கத்திற்கா, அல்லது பக்தி முற்றி, முக்தி சேரவா? உங்கள் வாஞ்சை என்ன?

பெற்றோர் குலம் பிள்ளைகளுக்கு வழங்குமல்லவா? அப்படியானால் காசிபரிஷிக்கும், அதிதிக்கும், பிறந்த முப்பத்து முக்கோடி மக்கள் தேவர்களாய் மாறினது எப்படி? பெற்றோர் மனிதகுலமென்றால், அவர்கள்

பெற்ற பிள்ளைகள் வணக்கத்திற்குரிய தேவர்களாவதெப்படி? இதை ஆழந்து ஆராய வேண்டாமா? இந்த முப்பத்துமுக்கோடி தேவர்களும், விஷ்ணுவும், அசுரர்களுக்கும் ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர்வாழ்வனவாகிய, கழுதை, கடம்பை, கூகை, கருடன், பருந்து, கௌதாரி, காடை, பாம்பு, ஒணான், உடும்பு, மற்றுள்ள ஜீவன்களாகிய, நீச வர்க்கங்களுக்கு, உடன் பிறந்த ஒரே தகப்பனின் பிள்ளைகளும், சகோதரவர்க்கங்களுமாய் விளங்குகிறதே! இவ்வித லட்சணம் பொருந்திய இவர்களை, வணக்கத்திற்குரிய தேவர்களாய் மதிக்க, யோக்கியதையற்ற, மனிதவர்க்கமாய்க் காண்கிறதே. இந்த மும்மூர்த்திகள், முப்பத்துமூன்று கோடி தேவர்கள், பஞ்சகர்த்தாக்கள் யாவரும் வணக்கத்துக்குரிய தேவர்கள் அல்லவென்று கருவூராரும், அகஸ்தியரும், சொல்வதை கீழுள்ள பாடலில் காண்க :-

அகஸ்தியர் ஞானம் 30 பாடல் 8

சாற்றுதற்கு இதன் நியாயந் தெரியக் கேளு
  தந்திமுகனாரென்று மயனுரென்றும்
பார்த்தா லிவ்வுலகமதின் மயக்கமப்பா
  பலதேவர் முப்பத்து முக்கோடிபேரும்
வேற்றுருவோடு ருத்திரனோடைந்து பேரும்
  வேதாந்தவிருப்பிடத்தின் வெளிச்சமாமோ
காத்திருப்பார் இவர் கதீக்கிடங்கை நாடி
  கருவூரார் இப்படியே கருதினாரே.

மேலுள்ள பாடலின் கருத்து, எவவளவு தெளிவாய் நாம் வணங்கிவரும் தேவர்களனைத்தும் வேதாந்தத் தெளிவு தரும் பரஞ்சுடரொளியல்ல, தீக்கிடங்காகிய நரகத்தில் தண்டனையடைய, காத்திருக்கும், பாவிகள் என்று விளக்குகிறதே! நமக்கு முன்னிருந்த ரிஷிகள் சித்தர், முனிவர்கள் தங்கள் ஆராய்ச்சியில் இவர்களை பாவிகள் என்று தீர்த்திருக்க, நாம் பொருள் அற்ற நிலையில் பிடிவாதமாய் பின்னும் தொடர்ந்து இவர்களை தேவர்களாய் மதித்து தொழுது சேவிப்பது வெறும் வஞ்சிப்பல்லவா? இவ்வித அவபக்தியிலிருந்து மெய் தெய்வ ஆராய்ச்சி அறிவினால், உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கொத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாககிறதினாலே, மறுரூபமாகுங்கள். என்ற சத்திய திருமறைப்படி, உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுங்கள். இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை.

11

விநாயகர் உற்பவம்

விநாயகர், சிவனின் மூத்த குமாரன், விநாயக சுரூபம், யானைத் தலையும், பெருத்த வயிறும், ஒரு தும்பிக்கையும் நாலுகைகளு முடையதாய் கல், மரம், சுண்ணாம்பு, களிமண், சாணி, மற்றும் பஞ்சலோகங்களிலும், செய்து வைத்து சிவ மதத்தார் தொழுவதைக் காணலாம்.

விநாயர்கள் மறு நாமங்கள் :- அங்குசபாசமேந்தி - அம்பிகை தனயன் - அரிமருகன் - ஆகுவாகனன் - இறைமகன் - ஈசன் மைந்தன் - ஏக தந்தன் - ஏரம்பன் - ஐங்கரன் - ஒற்றைக் கொம்பன் - கங்கை பெற்றோன் - கணபதி - கயமுகன் - கரிமுகன்- கவுரிசேயன் - காமன் மைத்துணன் - நால்வாயன் - பாசாங்குசன் - முக்கண்ணன் - முன்னோன் - மூத்தோன் - விக்கினேசுவரன் என்பனவாம்.

விநாயகன் ஒர் சமயம், கெஜமுகா அசுரனை அழிக்க எத்தனித்த போது, அசுரன் எலி

அவதாரமெடுத்து விநாயகனை எதிர்க்கவே, விநாயகன் அந்த எலியின் மேலேறி அதைத் தனக்கு வாகனமாக்கிக் கொண்டதாய் கதையுண்டு.

விநாயகனை பார்வதியென்னும் துர்க்கை, பெற்றபோது சனியீஸ்வரனும் மற்றும் தேவர்களும் பிள்ளையாரைப் பார்க்க வந்திருந்தார்களாம். சனியீஸ்வரனின் திருஷ்டி தோஷம் தாக்கியதால், இவர் தலைசாம்பலாய்ப் போய்விட்டதாம். பிர்மா வடபுறம் நோக்கி நிற்கும் மிருகத்தின் தலையை அறுத்துப் பொருத்த சனிக்குக் கட்டளையிட, சனி யானைத் தலையை அறுத்துப் பொருத்தியதால், யானை முகத்தோன் என்றழைக்கலாயிற்றாம். தன் தாயின் திருஷ்டிபட்டு இப்படி ஆனதாயும், தன் சகோதரன் மகன் வெட்டிப் போட்டதாயும் தக்கன் யாகத்தை அழிக்க சிவன் வீரபுத்திரனை அனுப்பிய போது இச்சம்பவம் நடந்ததாயும் பல கதையுண்டு. மற்றொரு கதையில் சிவனும் பார்வதியும், வனங்களில்திரியும் போது, யானைகளின் புணர்ச்சியைக் கண்டு தாங்களும் யானை உருவாகி, அவ்விதமே புணர்ந்து திரியவே, யானை முகத்தையுடைய விநாயகன் பிறந்தான் என்று சொல்லப் படுகிறது.

பாவமிகப் பண்ணி மற் றேவலனேயவன் புதல்வன்
தேவனோ வச்சிவனுஞன், சிந்துரமாயப் பார்வதி கைம்
மாவுருவாகிப் புணர வந்துதித்தாணைந்துகர
மேவுங்கரிமுகனாய்த் தேவனெனல் விற்பனமோ

சிவன், உனக்கு எந்தப் பெண் வேண்டுமென்று விநாயகனை கேட்க, விநாயகன், தன் தாயைப் போல் ஒத்த ஒர் பெண் வேண்டுமென்று சொல்லவே. ஸ்திரீ ஜாதிகள் நடமாடும் குளக்கரையிலும், வழிகளிலும் நின்று அவ்விதப் பெண்ணைப் பார்த்துக் கொள்ளச் சொன்னதாய் கதையுண்டு.

பேரின்ப மணிமலையின் விருத்தம்

சத்திவயிற் றுதுதித்த சிவன் தன்னை யீன்ற
  தாயாரைத் தாரமெனப் புணர்ந்ததாலே
பித்தனென்று வுலகோர் சொல்வசையைக் கேட்டுப்
  பித்திராச ராந்தவ ரலாகாதென்று
அத்தி முகன்ருயின் மேலாசை யுற்று
  அவடனைப் போய் வணங்கு வரு மவதி மட்டும்
நித்த நெடுந் தெருக்கள், தண்ணீர் துறை, முச்சந்தி
  நேர்வழியிற் காத்திருப்பனிலத் துள்ளோரே.

விநாயகனுக்கு விவாகமேயில்லை. வருஷத்தில் ஒருதரம் களிமண்ணுல் விநாயகர் விக்கிரகம் செய்து விநாயக சதுர்த்தி கொண்டாடி

விக்கிரகத்தைக் கிணற்றில் போட்டு விடுகிறார்கள். இது பூர்வீகமான வழக்கம்.

பிள்ளைகளை கல்வி பயில அனுப்பும்போதும், கலியாணம் முதலிய சுப, அசுப காரியங்களுக்கும், விநாயகனைக் கர்த்தாவென்று பூசித்து தொழுகிறார்கள். புஸ்தகமெழுதத் துவங்கும் பொழுதெல்லாம் விநாயகனை வணங்கி, காப்பிட்டு, ஸ்தோத்திரபாடல் எழுதி, புகழ்துதி பாடுவார்கள். சைவ மதக் கோயில் எதிரில் கணபதியின் உருவச் சிலை வைத்திருக்கக் காணலாம். போக முனிவர் விநாயகர் வரலாறு கூறல்.

போகர் ஏழாயிரம் 4-ம் காண்டம் பாடல் 500

சொன்னாரே இன்னொரு மார்க்கங்கேளு
சொல்லுகிறேன் பாரினிலே கணேசருண்டு
மன்னே கேள் திரே தாயின் யுகத்திலப்பா
மகாதேவ ரானவராம் கணேசர் தாமும்
பன்னவே தும்பிக்கை ரூபங்கொண்டு
பாரினிலே பிறந்தாராம் மனுஷரூபம்
என்னவே வெகுகோடி காலந்தானும்
யெழிலான ஞானிபோலிருந்தார் தாமே.

பாடல் 506

பாருலகில் கணபதியே தேவனென்றும்
பட்சமுடன் மானிடர்கள் தொழுதுபோற்றி
சீருடனே யஷ்டாங்கம் தனை நினைந்து
சிறப்புடனே யஞ்சலிகள் மிகவுஞ் செய்து
ஊருடனே குடிமக்கள் மிகவுங்கூடி
உத்தமராங் கணபதியை கடவுளாக்கி
பேருடனே வையகத்தில் சுவாமியென்றும்
பேரான புகழ் படைத்தா ரதீதமாமே.

பாடல் 507

அதிதமாங் கணபதியு மென்ற நாமம்
அவனிதனில் மனிதரல்லால் வேறொன்றல்ல
துதிதமுள்ள கடவுளாயிருப்பாரானால்
தொல்லுலகில் உயிரோடேயிருக்காரோ தான்
பதிதமுள்ள பாடல்களில் சுவாமியென்றும்
பாடினார் வெகு கோடி மாந்தரப்பா
நிதிதமுள்ள கணபதியின் தேகந்தானும்
நிலையாத அநித்திய மென்னவாச்சே.

பாடல் 508

என்னவே கணபதியு நீனிலத்தில்
　எழிலான தேகத்தை மறந்து போனார்
பன்னவே பாரினிலே தேவனானால்
　பாழான தேகமது மண்ணுக்காமோ
துன்னது வே காயமது நிலைப்பதற்கு
　தொல்லுலகில் கோடான கோடிகற்பம்
முன்னவே காயாதி கற்பமுண்டு
　மூதுலகில் கற்றூணய் இருந்தார்காணே.

பாடல் 509

காணவே அவர் கூட்டந் தன்னிலப்பா
　புதுமையுடனிவருமொரு சித்துமானார்
தோணவே வெகுகோடி காலமப்பா
　தொல்லுலகில் காயாதி கற்பமுண்டு
ஈனவே சமுசார வாழ்க்கை நீக்கி
　யெழிலுடனே காயத்தை யிருத்திக் கொண்டு
பூணவே புவியுளோர்க்கு கவியதாக
　புகழுடனே வெகு காலமிருந்தார் தாமே.

போகமுனிவர் 500-ம் பாடல், திரோதா யுகத்தில், விநாயகர், தும்பிக்கையுடன் மனித ரூபத்தில் பிறந்தவர் என்றும் 505-ல் குடிமக்களனைவருங்கூடியே. யிவரைத் தேவனாக்கினார்கள் என்றும், அதனால் தொழுது புகழுண்டானதென்றும், 508-ம், 509-ம் பாடல் இவர் காய கற்பமுண்டு உலகில் நீண்ட காலம் ஜீவித்து அதிசயப் பிறவியாய்ப் காணப்பட்டு மரித்து மண்ணாய்ப் போன மனிதனேயன்றி தேவன் அல்லவென்றும் திட்டமாய்த் தெளிவு படுத்திக் காட்டுகிறது.

எப்படியும் இவர்தன் தாயைப் போல ஓர் பெண்சாதி வேணுமென்று ஆசைப்பட்டதிலிருந்து இவர் மனிதனேயன்றி தேவன் அல்லவென்பது திட்டமாய் விளங்குகிறது. வாசகர்கள் தெளிவடைந்து ஓர் மெய்பராபரவஸ்துவை தேடி ஆராய்ந்து கண்டு, அவரையே தொழுது ஆராதிக்க போக முனிவர் இவ்வளவாய் விளக்கிக் காண்பித்திருக்கிறார் என்பதை உணர்ந்து அவரை மனக் கண்களால் தரிசித்து தொழுது துதித்துப் போற்றுங்கள். விநாயகரை பற்றி அறிய கந்தப் புராணம் கயமுகனுற்பத்தி படலம் 146ம் 147ம் 148ம் பாடலையும், பிள்ளையார் கதை அகவலையும் பார்க்கவும்.

12

சுப்ரமணியர் உற்பவம்

சிவனின் இரண்டாம் குமாரன், சுப்பிரமணியன், சுப்பிரமணியன் யுத்த தேவன்.

சுப்பிரமணியனின் மறு நாமங்கள் :- முருகன் - அரண்மகன் - அறுமீன் காதலன் - ஆறுமுகன் - ஆசான் - ஆண்டலைக் கொடியோன் - கங்கை மைந்தன் - கடம்பன் - கந்தன் - கலையுணர் புதல்வன் - காங்கேயன் - கார்த்திகேயன் - குகன் - குழகன் - குறிஞ்சி வேந்தன் - குன்றெறித்தோன் - கௌரிநாதன் - சண்முகன் - சரவணபவன் - சிலம்பன் - சூர்ப்பகைவன் - செட்டி - செவ்வேள் - சேந்தன் - சேய் - சேவற்கொடியோன் - தாருகற்சேற்றோன் - தாருகாரி - தெய்வயானைக் காந்தன் - தேவசேனாபதி - பாவகி - மஞ்ஞையூர்த்தி - மாயோன் மருமகன் - முருகு - வரைபகவெறிந்தோன் - வள்ளி மணாளன் - வாகுலேயன் - விசாகன் - வேலன் - வேலிறைவன் - வேல், என்பனவாம்.

சுப்பிரமணிய விக்கிரகம், பன்னிரண்டு கையுள்ள, மஞ்சள் நிறமுள்ளதாய் செய்யப்பட்டிருக்கும். சுப்பிரமணியரின் இரு மனைவிகளையும் மயில் வாகனத்தின் மேல் தன் இரு பக்கத்திலும் இருக்க வைத்து வணங்குகிறார்கள்.

சுப்பிரமணியனின், பிரதான ஸ்தலங்கள் : -

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணி, திருச்செந்தூர், சோலைமலை, பழனி, கதிர்காமம், (இலங்கைத் தீவில்) முதலியனவாம்.

சூரபதுமன் என்னும் ஓர் அசுரனை அழிப்பதற்காய், சிவன் தன் நெற்றிக் கண்ணிலிருந்து சுப்பிரமணியரை உண்டாக்கினாராம். சுப்பிரமணியன் அவ்வசுரனுடன் பத்துநாள் போரிட்டும் முடியாததால் அவனை தன் வேலாயுதத்தால், இரண்டாய்த் துண்டித்து, ஒன்றை மயிலாகவும், மற்றதைச் சேவலாகவும் ஆக்கி, மயிலைத் தனக்கு வாகனமாவும், சேவலைத் தன் கொடியாகவும் ஆக்கிக் கொண்டாராம். சுப்பிரமணியருக்கு தெய்வானை என்ற குலஸ்திரீயும், வள்ளியென்ற வைப்பாட்டியும் உண்டு. திருத்தனியில் சுப்பிரமணியர் தன் இரு மனைவிமார்களோடும் இராத்திரிதோறுஞ் சயனித்திருப்பதாக காலைதோறும் இவர்களை வந்து எழுப்பி கதவுகளைத் திறந்து உட்பிரவேசித்து பூசைப் பண்ணவரும் பூசாரி, ஆண்டிகள், தட்டு முட்டு நாடகக் கோஷ்டியுடன் கோயில் வாசற் படியில் நின்ற சொல்லும் விருத்தம்.

விருத்தம

எண்ணெய் வரவே வாசமெலுமிச்சம் பழச் சாறிள நீரு முக்கனியுமே
இருக்குமொரு சாறுதேன் சர்க்கரைப்பால் தயிரிடைக்
கிடைதிருமஞ்சன
திண்ணிறைய வேதியர், புண்ணிகைத் தேருசெய் பஞ்சகவியஞ்
செய்ய செயன மறையோர்கள் கொடுவந்து நிற்கிறார்
தேவனே பள்ளியுணராய்த்

திருத்தணியில் வாழ்முருக தெய்வானை வள்ளிதன்
தேவனே பள்ளியுணராய்.

சுப்பிரமணிய தேவன் இருமனைவிகளுடன் இரவில் நித்திரை செய்வதாயும் காலைதோறும் பூசாரிகள் எழுப்பி எண்ணெய், புஷ்பம், கரும்புச்சார், பழச்சார், இளநீர், தேன், பால், தயிர் முதலான வஸ்துக்களை உண்ணக் கொடுக்கும் வழக்கம் திருத்தணிக் கோயிலில் உண்டு.

சுப்பிரமணியனுக்கு தெய்வானையென்னும் குலஸ்திரீயிருக்க, குறப் பெண்ணான வள்ளியின் அழகைப்பற்றி கேள்வி பட்டு, அவளைச் சேர மோகங்கொண்டு, பல தந்திரங்கள் செய்தும், அவள் சம்மதியாததால் தன் அண்ணன் பிள்ளையார் உதவியால் யானை உருவாய் மாறி வள்ளியைத் துரத்தவே, வள்ளி ஓடி சுப்பிரமணியனைச் சரண் அடைய, சுப்பிரமணியன் வள்ளியைக் கூடி தன் இச்சையை நிறைவேற்றியதாய் கதையுண்டு. கந்தப்புராணம், வள்ளியம்மன் திருக்கலியாணப் படலம் 62, 64, 65, 67, 68, 69, 71, 72, 84, 87, 104, 106, 107, 110, 111, 112 113, 114, 115, 132, 133, 136, 137, 143, 160, 161, 162, 163, 164, 234-ம் பாடல்களிலும் அறிந்து கொள்ளவும். போகமுனிவர் சுப்பிரமணியர் வரலாறு கூறல்.

போகர் ஏழாயிரம் 4-ம் காண்டம் பக்கம் 576

பாடல் 587

பிழைக்கவே வடிவேலர் தம்மைத் தானும்
பேரானயிவ் வுலகில் தேவனென்றும்
வழக்கமுடன் யிதிகாசங்கள் சாஸ்திரங்கள்
வளமாகப் பாடிவைத்தார் வினயம் யாவும்
முழக்கமுடன் வடிவேலர் முருகன் தானும்
முற்பிறப்பில் பஞ்சதக்கியனாக
தழக்கமுடன் பிறந்ததாய் சாத்திரங்கள்
தாரணியில் கவிவாணர் கட்டினாரே.

பாடல் - 590

இருந்திட்டார் வள்ளிதனை சிறையெடுத்து
யெழிலாக அவனிதனில் இருந்தாரென்றும்
பாருந்தவே உலகுதனில் சுவாமியாக
பொங்கமுடன் வீற்றிருந்தார் சதாகாலந்தான்
வருந்தியே கோடி மனு பேர்களெல்லாம்
வையகத்தில் மகாதேவனென்று சொல்லி
திருந்தியே நமஸ்கரித்து தலைகுனிந்து
திகடனே கோடியுக மிருந்தார் தாமே

பாடல் - 591

தரமான சாத்திர ங்கள் சொன்னதெல்லாம்

தகைமையுடன் பொய்யாச்சு பொன்னுலோகம்
நாமே தான் சொன்னபடி வடிவேலர் தானும்
நாட்டிலேயிருந்தாரே யில்லை கண்டீர்
வேமே தான் பூலோகம் தன்னைவிட்டு
விடுபட்டு தேகமது மண்ணுய் போச்சு
போமேதான் மண்கூறும் மண்ணுய் போச்சு
பூவுலகில் இருந்தாராம் காணேம் பாரே.

போகர் ஏழாயிரம் 6-ம் காண்டம் பக்கம் 900

பாடல் - 622

செப்லாஞ் சுப்பிரமணியர் என்பார் பாரு
சிறப்பான மனிதரல்லால் வேறென்றில்லை
ஒப்புடன் நீ நினைத்த சுப்பிரமணியன்
ஒகோ, கோ, நாதாந்தக் கடவுளாச்சு
எப்படியும் நாதாந்தக் கடவுளுக்கு
எழிலான அவதார புருஷனென்றும்
இப்படியே கோடான கோடி நாமம்
எழிலான சாத்திரங்கள் சொல்லலாச்சே.

பாடல் - 623

சொல்லவே யவரவர்கள் தக்க நேர்மை
சுந்தரனே தன் மனிதிலயிக்கியங் கொண்டு
வெல்லவே பலவிதமாம் தெய்வம் போல
விசாரனை களில்லாமல் பேதை நெஞ்சாய்
புல்லவே கவிவாணர் கட்டும் வாக்கியம்
புகழாகப் பல பலவாம் நாமந்தன்னை
சொல்லவே நற்கடவுளென்று கூறி
செம்மலுடன் மகிகெட்டு துதிப்பார் பாரே.

ஓர் வெண்பா

தம்பியோ பெண் திருடித் தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடி வாமணன் - அம்புவியில்
மூத்தபிள்ளையாரே முடிச்சவிழ்த்துக் கொண்டீரோ
கோத்திரத்திலுள்ள குணம்.

போகமுனிவர் 4-ம் 6-ம் காண்டத்திலுள்ள இவ்வைந்து பாடலால் மனிதர் தங்கள் அறியாமையால் சுப்பிரமணியரை ஓர் சிருஷ்டி கர்த்தாவுக்குச்

சமத்துவமான தேவனாய் வணங்கித் தோத்தரிக்கிறார்களேயொழிய, அவர் தேவன் அல்ல, தேவ அவதாரமும் அல்ல, மனைவிமார்களுடன் குடும்பமாய் சிறப்புடன் வாழ்ந்து பின் மரித்து மண்ணுய்ப்போன மனிதன் என்கிறார். இதனால் இவர் கவிவாணர் திறமையாலும், மனிதர் அறியாமையினாலும் தேவனாய் மதிக்கப்பட்டு வணக்கத்துக் குரியவரானார் என்று விளங்குகிறது. வாசகர்கள் இதனால் தெளிவடைந்து, ஓர் மெய்தேவனைக் கண்டு மெய்ப் பக்தியைக் கடைபிடித்து நடக்கவே போக முனிவரும் விளக்கிக் காட்டியிருக்கிறார். இந்த மெய்ப்பரம்பொருளைத் தேடுங்கள். உங்கள் இருதயம் வாழும்; பேரின்பம் பொங்கிவழியும், பரமன் அருள், நல்வழிகாட்டும்.



13

வைரவன் உற்பவம்

வயிரவன் சிவனின் மூன்றாம குமாரன்.

வைரவனின் மறு நாமங்கள் பின்வருமாறு : - ஆபதோத்தாரணன் - ஆரியைதநயன் - கருங்குதிரையாளி - காரி - குதிரையாளி - குமரன் - கேந்திரபாலன் - சித்தன் - ஞானயூர்தி - தண்டாயுதன் - பச்சைச் சடையன் - பவழ நெடுங்குஞ்சியோன் - பிள்ளை - முத்தமிழ்க்குறியோன் - முத்தலைவேலோன் - முத்தன் - மூர்த்திகன் - வருகன் - வித்தகன் என்பன.

வயிரவன் வாகனம் நாய், பிர்மாவின் அகந்தையையும், தேவர்களின் அகந்தையையும் அடக்க சிவன், தன் நெற்றி கண்ணிலிருந்து வயிரவனை உண்டாக்கினாராம். வயிரவன் பிர்மாவின் தலையில் ஒன்றைக் கிள்ளிவிட்டதாய்க் கதையுண்டு. உலகத்தை அழிக்க வயிரவன் திரும்பி வரப்போவதாய் நம்பி சிவபக்தர்கள் வயிரவனுக்கு பலியிட்டு வருகிறார்கள்.

14

வீரபத்திரன்

வீரபத்திரன், சிவனின் நாலாங் குமாரன்

வீரபத்திரனின் மறுநாமம் : - அழற்கண் வந்தோன் - உக்கிரன் - ஊமைமகன் - ஐங்கரற்கிளையோன் - குரோதன் - சிங்கத் தோலுடையோன் - சிம்புளானோன் - சிறுவிதி மகஞ்சிதைத்தோன் - பத்திரைக்கேள்வன் - யானை முகவற்கிளையோன் - வெஞ்சிலைச் செல்வன் என்பவை.

ஓர் சமயம், சிவன், தக்கனின் யாகத்தை அழிக்க நினைத்து தன் குமாரர்களாகிய, வினாயகன், சுப்பிரமணியன், வயிரவன், ஆகிய மூவரையும் அனுப்ப முதற்போனவினாயகனை இவன் பாட்டன் தக்கன் கண்டு, இவன் போஜன பிரியனாதலால், புசித்து சந்தோஷமடையத்தக்க வண்ணம் யாவையும் சமைத்து எதிரில் வைக்கவே, வினாயகன் தன்னை அனுப்பின நோக்கத்தை மறந்து, சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், இரண்டாங்குமாரன் சுப்பிரமணியன் போகவே, சுப்பிரமணியனையும் தாசிகளைக் கொண்டு வந்து விட்டு மோக

விவகாரத்தில் மயங்கச் செய்து, தக்கன் தடை செய்தான். மூன்றாவது வயிரவன் போக அவனுக்கும் தக்கன் பலவித பலியிட்டு தடைசெய்தான். இம் மூவரும் திரும்பிவராத காரணத்தால் சிவனுக்குக் கோபமூண்டு முகம் வேர்க்க அதை வழித்தெரிந்ததிலிருந்து வீரபத்திரன் உற்பத்தியாகி தகப்பன் சிவன், உத்தரவுப்படி தன் பாட்டன் தக்கன் யாகத்தை அழிக்கப் போகையில் அதிக உக்கிரகத்துடன் வீரபத்திரன் வருவதைக் கண்ட வயிரவனும், சுப்ரமணியனும் ஒடி ஒளித்துக் கொண்டார்களாம். விநாயகன் தன் பெரும் தொந்திவயிற்றை தூக்கிக் கொண்டு ஒடமுடியாமல் அகப்பட்டுக் கொள்ளவே, வீரபத்திரன் உதைத்த உதையால், விநாயகன் வயிறு வெடித்ததாம். விநாயகன் உடன் சந்திரனைப் பிடித்து அதனுள் வைத்து அடைத்துக் கொண்டு பின்னும் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், வீரபத்திரன் யாகத்தை அழித்து அவனையும் கொன்று போட்டானாம். தக்கன் வெட்டுண்டு இறந்ததைக் கண்ட தக்கன் மகள் (பார்வதி) ஈஸ்வரி, துக்கமடைந்திருப்பதை கண்ட ஈஸ்வரன் (சிவன்), தக்கனின் வெட்டுண்ட முண்டத்தின் மேல் ஒர் ஆட்டுத் தலையை அறுத்துப் பொருத்தி உயிரோடெழுப்பினாராம். இக்கதை தேவர்களில் நடக்குங்காரியந் தானா? ஏதாவது நம்பத்தகுந்த பொருத்தமுள்ள சாரம் உண்டா? இவையனைத்தும் கட்டுக்கதையிலும் கேவலமாய் காண்கிறதே! இந்த வீரபத்திரனைப் பற்றி போக முனிவர் சொல்வதை கீழே பார்க்கவும்.

போகர் ஏழாயிரம், 4-ம் காண்டம், பக்கம் - 572

பாடல் - 512

வீரனானந் தக்கனது யாகந்தன்னை
  வீரமுடன் தான் செயித்த வீரபத்திரன்
சூரனாம் பத்மாவின் சூரன் தன்னை
  சுட்டெரித்த சூட்சாதிகியான மாரன்
கோரமாம் டாகினியை கருவருத்த
  கொற்றவனா மென்றிவர்க்குப் பேருண்டாச்சு
பாரமுடன் இதிகாச புராணமெல்லாம்
  பாடி வைத்தார் கவிவாணர் திறமைபாரே

பாடல் 514

உரைத்தாரே வீரபத்திர வீரன் தன்னை
  ஒகோ கோநாதாக்கள் நம்புவாரோ
நிறைத்தாரே சாஸ்திரங்கள் புராணமெல்லாம்
  நிலையான தேவனென்று சொன்னார்பாரு
படைத்ததொகு காயமது தேவனானல்

பாரினிலே மற்றொரு தெய்வமேன் தான்
உரைத்தாரே இவர் தானுந் தெய்வமானால்
எழிலான உலகமதில் இருக்கொண்ணாதோ?

பாடல் - 515

ஒண்ணுன தேமது கூடுவிட்டு
உலகத்தைத் தான் மறந்து மண்ணுய் போச்சு
நண்ணமுடன் ஆத்து மாவுங் காணுதாச்சு
நலமான சடலமது விழலாய்ப் போச்சு
எண்ணமுடன் லோகமதிலிருந்த துண்டோ
யெழிலான தேகத்தால் எடுத்தகாயம்
உண்பதுவும் உடுப்பதுவு மென்னலாகும்
உத்தமனே வீரபத்திரன் நரசென்ம மாச்சே.

பாடல் - 516

ஆச்சப்பா சாஸ்திரங்கள் சொன்னார் கோடி
அவனிதனில் வீரபத்திரன் கடவுளென்று
மூச்சடங்கிப் போனதொரு மனிதன் தன்னை
முசியாமல் தேவனென்று தொழுதார் பாரு
வீச்சலுடன் காசினியில் அவரு மாண்டார்
விண்ணுலகில் ஆத்மாவும் போனதொன்று
ஏச்சான உறுதிமொழி காணலாச்சே
என்மகனே வீரபத்திரன் மண்ணானானே

மேலுள்ள நான்கு பாடல்களிலும் போகமுனிவர் வீரபத்திரனை கடவுள் அல்ல. நரஜென்மமெடுத்த நம்மைப் போன்ற மனிதன், மரித்து மண்ணுய்ப்போனான், முன்னிருந்த கவி வாணர் திறமையால் பல சாஸ்திரங்களிலும், வீரபத்திரனை நிலையான தேவனென்று எழுதி நம்பச் செய்து மனிதர் வணங்கிவருகிறார்கள். இன்றைய உலகில் உள்ள பல தேசத்தின் வீரர்களின் தீரமிக்கச் செயல்களைப் பார்த்தால், வீரபத்திரனின் வீரம் அத்துடன் ஒப்பிடுகில், வீசம் பங்கு நிறை நிற்குமோ? என்பது ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மையல்லவா? இவ்வித நரஜென்மங்களை தேவர்களாக்கி, நாமே வணங்கினால், நமது பொய் நம்பிக்கைக்கு முடிவில் யார்? என்ன பலன் பதவி அளிக்க வல்லவர்? இவ்வித நம்பிக்கையின் முடிவு இலவு காத்த கிளியிலும் கடையாய் இருக்கும் என்பது பொருத்தமான உண்மையல்லவா? இன்றே மெய்பக்தி வழியைத் தேடிக் கண்டடைந்து தனிமுதற்கடவுளை அண்டித் தொழுது தோத்தரிப்பதே நித்திய பேரின்ப முக்தியளிக்கும். அதை இப்பொழுதே, இன்றே தேடுங்கள் !

15

திக்குப் பாலகர்கள் வரலாறு

இந்திரன, அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், ஆகிய எட்டுப் பேரும் திக்குப் பாலகர்களாகிய காவலர்கள் இவர்கள் வரலாற்றை வரிசைக் கிரமமாய், கீழே காண்கவும்.

1. இந்திரன்

இந்திரன் கிழக்கு திசைத்தேவன். இந்திரனுக்கும் பல மறு நாமங்கள் உண்டு.

மறுநாமங்கள்

தேவேந்திரன், அரி; அமராவதியோன் - அயிராவதப்பாகன் ஆகண்டலன் ஆயிரங்கண்ணன் - இடைமயவர்வேந்தன் - கரியவன் - காண்டாவனன் - காரி - கோபதி - கௌசிகன் - சக்கிரி - சக்கிரந்தனன் - சசிமணாளன் - சதக்கிருதன் - சதமகன் - சரேசன் - சுரேந்திரன் - சுனாசீரன் - துச்சவனன் - நாகநாதன் - நான்

மருப்பியானையூர்தி - பலசூதனன் - பலாரி - பாக சாதனன் - புரந்தரன் - புருகூதன் - புரோகிதன் - புலவன் - புனிதன் - பொன்னநகர்க்கிறைவன் - போகி - மகவான் - மருத நிலத்திறைவன் - மருத்துவன் - மால் - மேகவாகனன் - வச்சிரபாணி - வலாரி - வாசவன் - வானோர்கோமான் - விண்முழுதாளி - வெள்ளை வாரணன் - வேந்தன் - வேள்வி வேந்தன் என்பனவாம்.

இந்திரனை ஆயிரங்கண்கள் போன்ற பெண் குறிகளுள்ள வெண் விக்கிரகமாகச் செய்து சிவன்கோயிலில் வைத்து வணங்குகிறார்கள். தேவர்களின் நூருவருஷம் கொண்டது இந்திரனின் ஆட்சி முடிவின் காலமாம்.

தேவேந்திரன் தேவர்களுக்கெல்லாம் தேவனும், இராஜனும், துரையுமாம். தேவேந்திரன் மனைவி பெயர் சேஷி, இந்திராணி என்றும் சொல்லுவர். தேவேந்திரன் சொர்க்க பாக்கியங்கள், தன்போகஸ்திரீகளேயாம். இவர்கள் ரம்பை, ஊர்வசி, திலோர்தமை, மேனகையாகும், மக்கள், தேவேந்திரனே, தேவர்க்கு ராஜனும், பெரிய தேவனுமெனக் கௌரவித்து, போகிப்பண்டிகையன்று, பெரும் விழாக் கொண்டாடி பூசித்து, வணங்குவார்கள்.

இந்திரன் ஆட்சிமுடிவில், புண்ணிய சீலர்கள் யாரேனும் இந்திரப்பட்டத்திற்கு வரக்கூடுமாம், இல்லையேல், நூறு அஸ்வமேதயாகம் முடித்தால் இந்திரன் பதவி பெறலாமாம்.

ஓர் சமயம் இந்திரன், மேகநாதனால் ஜெயிக்கப்பட்டு, இந்திரனை, மேகநாதனின் குதிரை காலில் கட்டியதாயும் கதையுண்டு.

காசிப ரிஷிக்கும் அவர் மனைவி அதிதிக்கும் பிறந்த இவ்விந்திரனை இரண்டாம் அந்தஸ்துக்குள்ள ராஜனாய் சகல தேவர்களும் மதிக்கிறார்கள். இந்திரன் இன்ப ஸ்தலமான சுவர்க்கத்தில், இந்திரன், நடனப் பெண்கள் தேவதாசிகளாம். இப்பெண்களில் ஒருத்தியான ஊர்வசியை ஓர் சமயம், அசுரர்கள் பிடித்துக் கொண்டு போகையில், அவள் ஓலமிட்டு அழும் ஓசையைக் கேட்ட இந்திரன் முதலானோர், அவ்வசுரனோடு போர்புரிந்தார்களாம். இப்போரில், பூரூர சக்கரவர்த்தி அசுரர்களை ஜெயித்து, ஊர்வசியை மீட்டதால், இச்சக்கரவர்த்தி, ஊர்வசியைக் கூடி அனுபவிக்க, இந்திரன் உத்தரவு இட்டாராம், இக்காரணத்தால், ஆய்வுக்குப் பிறந்த நகுஷன், நூறு அஸ்வமேதயாகம் செய்து, இந்திர பட்டத்திற்கு வந்ததாய் (ஆதிபர்வம் 41, 42ம் பக்கத்தில்) சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரன், ஊர்வசியை மீட்டு இரட்சிக்க திராணியற்றுப் போனது மாத்திரமல்ல, மீட்டவனுக்கு கைக் கூலியாக, அவளுடன் கூடிப் பாவஞ் செய்யக்

கையளித்து உத்தரவிட்டது. எத்தனையான பரிதாபக் காட்சியும், அருவருப்பான செயலும் என்பதை கவனியுங்கள். பேரனால் இந்திர பட்டத்தையும் இழந்து, மற்றொருவன் இப்பதவியை ஏற்றானாம்.

இந்த தேவேந்திரன், கௌதம முனிவரின் மனைவி அகலியாளை, மோகவிகாரங்கொண்டு இச்சித்து, அவளைக் கற்பழிக்க வகைதேடி, ஓர் இரவில் சேவல் ரூபங்கொண்டு அவள் அறைக்குள் புகுந்து ஒளித்து உருமாறி நின்று, சேவல் போற்கூவியதும், கௌதம ரிஷி பொழுதுவிடியும் நேரமாயிற்றென எழுந்து, ஸ்நானம் பண்ண போனாராம். இதை ஒளிந்து பார்த்திருந்த தேவேந்திரன்,முனிவர் போனதும் ரிஷி பத்தினி அகலியாளை கற்பழித்தானாம், வீடு திரும்பிய கௌதமர் வீட்டில் நடந்தேறிய துர்நடத்தையையறிந்து, மனைவியைக் கல்லாய் சமைத்தும், தேவேந்திரன் சிசனம் (ஆண்குறி) அற்று விழவும் சாபமிட்டாராம். அச்சணமே தேவேந்திரனுக்கு இட்டசாபம் நிறைவேறியது. அவன் சிசனமும் அற்று விழுந்து, அவன் சரீரமெங்கும் அவலட்சணமான பெண்குறியான, யோனி ரூபமாகமாறிப் போய்விட்டதாம். இந்த துர்ச்சம்பவத்தைக் கண்ட, மற்ற சில்லரைத் தேவர்கள் ஆட்டின் சிசனத்தை அறுத்து வந்து தேவேந்திரனுக்கு ஒட்டினார்களாம். இக்காரணத்தால் தேவேந்திரனுக்கு மேஷாண்டன் என்னும் மற்றொரு பெயர் உண்டாயிற்றாம். இவ்வித மோக விகாரத்தினால் உருவான அவலட்சணமும், ஆபாசமுமான கதையை விஷ்வாமித்திர ரிஷி, ராமருக்குச் சொன்னதை ராமாயணம், பால காண்டத்தில் காண்கவும். அகலிகைப் படலம் 74-ம் பாட்டு முதல் 79-ம் பாட்டு வரையிலும், 89-ம் பாட்டிலும் இதைப் பார்க்கவும். இதைத் திருஷ்டாந்தப் படுத்தும் கவி

விருத்தம்

அகலிகை அழகை நோக்கியுள்ளத்தில்
மிகமயன் மேவியே இரவிற் கள்ளமாய்
புகுதவட்புணர்ந்து கோதமன் சொல்சாபங்கொண்
டகன்றன னந்தவிந்திரனுந் தேவனாகுவானோ

பொருள் :- கவுதமரிஷியின் மனைவியாகிய அகலிகை அழகை இச்சித்து, இரவில் கள்ளத்தனமாய் அவள் வீட்டிற் புகுந்து அவளைக் கூடி கற்பழித்து ரிஷி சாபம் பெற்றனுபவித்த இந்த இந்திரனும் தேவனாவானோ? என்பதேயாம்.

தேவேந்திரனால் கற்பழிந்த இந்த அகழிகையையும், இவ்வகையில் கற்பழிந்த இன்னும் நான்கு ஸ்திரீகளையும் சேர்த்து பஞ்ச கன்னிகைகள் என்று விசேஷப்படுத்தி, பிராமணர்கள் தினம் மூன்று வேளையும் தவறாது மிக

பக்தியாய் பின்வரும் சுலோகங்களைச் சொல்லி ஆராதித்து வருகிறார்கள். இது மதியீனம் நிறைந்த பாவம் என்பதை விளங்கிக் கொள்ளாதிருப்பது, பாவத்திற் சிறந்த பெரும் பாவக்காட்சியும், அஞ்ஞானக் குருட்டு பக்தியும் என்பதிற் சந்தேகமா?

பஞ்ச கண்ணிகை சுலோகம்

அகலியா, துரோபதா, சீத்தா
தாரமண்டோதரி ஸ்முறுதா
பஞ்சகன் யாஸ்மரே நித்தியம்
மகா பாதக நாசனம்

பொருள் : – அகலிகை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி, இந்த ஐவரையும் நிதம்துதிப்போர்க்கு, சகல பாவமும், விமோசனமுமாகும் என்பதாம்.

வாசகரே! இவ்வைந்து ஸ்திரீகளும் யார் என்று தெரியுமா? முன் விளக்கியபடியே அகலிகை கௌதமர் மனைவி, துரோபதை பஞ்சபாண்டவர் மனைவி, சீதை ராமர் மனைவி, தாரகை பிரகஸ்பதிக்கும், சந்திரனுக்கும் மனைவி, மண்டோதரி ராவண ராட்சதன் மனைவி, இவ்வைந்து ஸ்திரீகளும், குடும்பநிலை தவறி தங்கள் புருஷர்களை வஞ்சித்து கற்பிழந்தோர்களான பாவக்கறை பிடித்த காமிகள். இவர்களை கண்ணிகை ஸ்தானத்தில் நிறுத்தி, நித்தம் நினைத்து ஜெபித்தால், சகல பாவங்களிலிருந்தும் விமோசனமடைவது எந்த சக்தியால் என்பதை வாசகர்களே சிந்தியுங்கள்! இவ்வகையில் மக்கள் பாவவிமோசனமடையும் பரிகாரமிருந்தால் கடவுளை வழிபடுவது அவசியமா?

தேவேந்திரனுக்கு குலமகளான சேஷி என்னும், மனைவியிருக்க, ரம்பை, ஊர்வசி, திலோர்த்தமை, மேனகை, என்னும் நடனப் பெண்களையும், கௌதம ரிஷியின் மனைவி அகலிகையையும், வேற்றுருவெடுத்து கற்பழித்துக் கெடுத்து சாபத்ததிற்குள்ளான பாவியான தேவேந்திரன் தேவர்கட்கெல்லாம் தேவனும், ராஜனுமாவது எந்த தூய லட்சணத்திற்காக? பாவியான ஸ்திரீகளை, கண்ணிகைகளாக்கி, மந்திர சுரூபத்திலடைத்து, பிரமாணர் சொல்வது போல் தினம் தியானிப்பதால் பாவ விமோசனமடையலாமென்றால், காசி, கங்கை, குற்றாலம், பாவநாசம், என்ற புண்ணியநதி என்று சொல்லிக் கொள்வதை நோக்கி ஓடி அலைய வேண்டியதில்லையே! இதை வாசகர்கள் ஆழ்ந்து சிந்திக்கவும்!

குலமகளான தன் மனைவி சேஷியை வஞ்சித்து, புறஸ்திரீகளை காதலித்துக் கூடிச்சுகித்து மகிழும் காட்சி, ராஜதேவன் என்றழைக்கும்

தேவேந்திரனில் காணத்தகும் லட்சணந்தானா? நம்மவரில், இக்குணம், குறி, லட்சணங்கள் இன்றைய நடப்பில் உலகம் கண்டால், எந்த எடையிலிட்டு நிறுத்து, என்ன பட்டம் சூட்டுவார்கள் என்பதை இங்கு குறிப்பிடாமலே வாசகர்கள் விளங்கிக் கொள்வீர்கள். இவ்வித நடப்பும், கிரியையும் உள்ளோரைப்பற்றி விளக்கும் ஓர் கவி.

விருத்தம்

இல்லாளை யகத்திருத்தி புரதாரத்தை
இச்சிப்போர் எனும் தேவர் நரகவீட்டிற்
செல்லாமற் போவதெங்கே போனாலந்தத்
தேவர்களுக்கிடங்கொடுத்து சேர்ப்பாராரோ

பொல்லா தென்றிவை யெல்லாந்தவிர வென்ற
போதகத்தின் படிக் கவர்களுறவைப் போக்கி
நல்லோர்க்குக் கதியருளுங் கடவுளானை
நாடியவர்க்கடிமையாய் நடப்பர் தாமே.

மேற்காணும் பாடலின் கருத்து :- தேவர்கள் என்போர் காமிகளாய், மோகயிச்சையிற் சிக்குண்டு, பாவ கர்மங்களைச் செய்து, உலகம் போற்றும் தேவர்களாய் மக்கள் வழிபாட்டில் மதிக்கப்பட்டு இருந்தாலும், இப்படிப்பட்டோர் நரகத்தின் பங்காளராய்ப் போவதேயல்லாது, மோட்சத்தில் இடம் தந்து சேர்ப்பது யார்? பாவம் பொல்லாததென்ற போதனைப்படி பாவிகளுக்கு விலகி, பக்தியிற் பூரணப்பட்டோர்க்கு முக்தியளிக்கும் கடவுளைக் கண்டடைந்து, அவர்க்கடிமையாய் நடப்பார் நல்லோர், என்பது.

யாரேனும் நூறு அஸ்வமேத (குதிரை) யாகம் செய்தால் தன் இந்திரப்பட்டம் பிடுங்கப்பட்டுவிடும் என்ற, சுயநல நோக்கமாய், அவர்களின் யாகக்குதிரைகளைக் களவாடினதாகவும் தெரிகிறது.

விஸ்வாமித்திரர் ஓர் கடும் தவ நிஷ்டை புரிகையில், நிஷ்டையில் அக்கினித்தழலின் வல்லமை தேவேந்திரன் சுவர்க்கத்தை துன்புறுத்தியதால், தன் நடனப் பெண்களையனுப்ப, மேனகைபோய், தவம் புரிந்து கொண்டிருக்கும், முனிவர் எதிரில் நின்று, தன் மோகசேஷ்டையால் மயங்கச் செய்து தவத்தை அழித்து, முனிவரையும் பாவத்தில் அமிழ்த்திய தாயும், பின்னும் பலரின் தவ நிஷ்டைகளை கெடுத்ததாயும் தெரிகிறது. இதன் முழு விபரங்களையும் (ஆதிபர்வம் 62-ம் பக்கம், ஆரண்ய பர்வம் 17-ம் பக்கம் பார்க்க)

தேவேந்திரன், தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவனும், ராஜனும்

என்பது நல்லதே. ஆனால் இதுவரை தேவேந்திரனில் கண்ட நடபடியாவும். ஓர் நித்திய, நிர்மல, பராபரவஸ்துவில் காணக்கூடிய தெய்வப் பண்புகள் தானா? இன்று பல நாடுகளிலும், இதுவரை வாசித்தறிந்த பாவ சந்தோஷங்களில், ஒரு சிறிதும் காணக்கூடாத உத்தம சீலர்களாய், நற்சுபாவ லட்சணங்களோடு எண்ணற்ற பலர், கண்காட்சிபோல், இருக்கப் பார்க்கிறோமே.

அசுரன் கையில் சிக்கிய தன் நடனப்பெண்களை, தான் மீட்க சக்தியின்றி சக்கரவர்த்தி மீட்டார் என்றால், தேவேந்திரனின் தேவ வல்லமைதான் என்ன? ஆதியந்தமில்லாத, அநாதி சுயம்பு ஒளியாகிய ஏகபராபரவஸ்துவின் லட்சணத்தில் எள்ளுமூக்கத்தனை தூய்மையாவது தேவர்களுக்கெல்லாம் ராஜன் என்னும் தேவேந்திரனில் உண்டா? உரைகல்லிலிட்ட செம்பு, பசும்பொன் அல்லவென்று நிரூபித்த பொருத்தம் போல் விளங்கக் காட்டுகிறதே!

வாசகரே! உங்கள் வாழ்க்கை நடபடியை நன்றாய் சோதித்து, இதுவரை உம்மை அடிமைப்படுத்தி, ஆட்கொண்டு வரும் பாவ சந்தோஷங்களின் இன்பங்களுக்கு, விலகித் தப்பி, இன்னும் மோகஇச்சையிற் சிக்குண்ணச்செய்யும், பாவச்சேர் என்னும் காமக்கடலில் மூழ்கி, ஆத்துமாவை நஷ்டப்படுத்தி, முடிவில், பிசாசுக்கும், அவன் தூதர்களுக்கும் தேவனால் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும், நித்திய நரக ஆக்கினையில் பங்காளனாகாதபடி, தேவனைக் கிட்டிச்சேர்ந்து, உம் மீறுதலையும், தவறுதலையும் அறிக்கையிட்டு, மனங்கனிந்த உள்ளத்துடன் அவரை உமது ஆத்மமீட்பரும், ரட்சகருமாய் விசுவாசித்து, மனதில் அவரையே துதித்துப் போற்றுவதே உயர் ஞானம். சாக்குப் போக்கு சொல்லி சுயநீதியிலும், சுயயிஷ்டமான ஆராதனையிலும், விருப்பங் கொண்டிருப்பது, முடிவில் மெய்ப்பலன் தராது. அநியாயக்காரர் முக்திசேர முடியாதென்று அறியீர்களா? மோசம் போகாதேயுங்கள். வேசிக் கள்ளரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், குடி, வெறியரும், உதாசினர், அனைவரும், முக்தி சேரமாட்டார்கள் என்று மெய்ஞான வேத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தெய்வத்தை கண்டடையத்தக்க சமயத்தில், அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாய் இருக்கையில், அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ஆகாதவன் தன் வழியையும் அக்கிரமக் காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரண்டை திரும்பக் கடவன், அப்பொழுது, அவன் மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனண்டைக்கே மனந் திரும்பக் கடவன். ஏனெனில் அவர்

கிருபைமிகுந்திருக்கிறார் என்று வேத சாஸ்திர நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

வாசகர்களுக்கு, இது ஓர் பொன்னான வாய்ப்பு. இச்சந்தர்ப்பதை நெகிழவிடாது, மெய் வேதாந்த நீதிசாரங்களை கூர்ந்து ஆராய்ந்து தெளிவு பெற்று ஜீவனுள்ள தேவனான பராபரவஸ்துவைப் பணிந்து போற்றினால், இகபர இன்பம் நிறைந்து வாழச் செய்வார். முடிவில், முக்திபதவியளித்து நீடூழிகாலம், மறுமையின் பேரின்ப சந்தோஷங்களோடு மகிழச் செய்வார்.

2. அக்கினி பகவான்

அக்கினி, கிழக்குத் திசைத் தேவன், காசிபப் பிராம்மாவின் புதல்வன். மனைவியின் பெயர், சுவாகாதேவி, மண்பாண்டம் செய்யும் குயவர்களுக்கு விசேஷித்த தேவன். பிருகு முனிவர், பிரிசுவையை, அக்கினிதேவன் காக்காமல் போனடியால், ''சர்வத்தையும் சாப்பிடக்கடவன்'' என்று சாபமிட்டாராம். உடனே பிர்மா, ''இவன் சாப்பிடுவதெல்லாம் சுத்தமாகக் கடவது என்று வரமளித்தாராம்'' அக்கினி தேவனுக்கு நைவேந்தியம் செய்து ஆராதித்து வணங்குகிறார்கள். அக்கினி தேவனுக்குக் குறி, புகை.

அக்கினி காசிபப்பிர்மாவின் மகனாகப் பிறந்ததாயும். அக்கினிக்கு மனைவியிருப்பதாயும், அவள் பெயர் சுவாகாதேவி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மனித யோனிவழியாய் அக்கினி, கற்பப்பையிலிருந்து பிறக்கும் வகையும், வழியும் உண்டா? என்பதை வாசகர்களே சீர்தூக்கிப் பாருங்கள். இதெல்லாம் காவல் காக்கும் தெய்வங்கள் ஆவதெப்படி? இதை மனிதர் கட்டுரையென்றால் பழிப்பும், பரிகாசமும், என்னலாமா? ஆ! பாரதத்தின் புரட்சிகரமான வணக்க வழிபாடுகளை, நம்பி ஆராதித்து, நரகத்திற்குப் பங்காளர் ஆக்கலாமா? கூர்ந்து ஆராயுங்கள். உண்மை வழியைக் கடைப்பிடியுங்கள். முக்தி சேர்வீர்கள்.

3.இயமன்

இயமன், தென்திசை தேவன். இவனுக்குக் குறி சீயம் (சிங்கம்) இந்தச்சுரூபம் மூவுலகத்தோரும், பயப்படத்தக்க பயங்கரமான விகாரரூபமாய், காவிவேஷ்டி கட்டி, சிவந்த கண்ணுடன், பச்சை நிறமாய் செய்து வைத்திருக்கும். இயமன் மனைவியின் பெயர் விஷபீ, இயமன் வாகனம் எருமைக் கடா.

மரணத்தை நடத்தி மரித்தோரை நியாயந் தீர்த்து, நன்மை தீமைக்கேற்ற பலன் அளிப்பதே இயமன் தொழில். சித்திரகுப்தன், இவனுக்கு குமஸ்தாவாம், இவன் தொழில் மனிதரின் தினசரி கிரியைகளை, நன்மை

தீமை இன்னது செய்தார்கள் என்று குறித்து வைப்பதாம். சரீரத்தை விட்டுப் பிரியும் ஆத்துமாக்கள் வென்னீருள்ள, வதரணி, ஆற்றைக் கடந்து யமலோகத்திற்கு நாலுமணிநேரமும், நாற்பது நிமிஷம் சென்று சேருமாம். அதற்குமுன் சரீரத்தை அடக்கம் செய்யவோ, எரிக்கவோ கூடாதென்பது இந்து சமய சாஸ்திர விதி.

4. நிருதி

நிருதி தென்மேற்குத் திசை தேவனாய் வணங்கி வருகிறார்கள். இவன் சகல பேய்க்கணங்களுக்கும் இராஜனாம். இவனுக்குக் குறி நாய். இதன் காரணமாய், நாய் வீட்டில் இருந்தால் பேய்வராது என்ற நம்பிக்கை பலரில் உண்டு.

5. வருணன்

வருணனை, மேற்கு திசைத் தேவனாக்கி வணங்குகிறார்கள் இவன் புனலுக்கு (தண்ணீர்) அரசன். வருணன் குறி, இரிஷிபம், வாகனம், மகரம்.

வருண லோகத்தில், சிற்றின்பமன்றி, மற்றொன்றும் இல்லையாம். ஒர் சமயம் வருண லோகத்தில் நேமி என்றும் ஒர் அரசன். வசிஷ்டரைக் கொண்டு ஒர் காரியத்தை நடத்த அழைத்த போது, அவர் வேறு அலுவலாய் போயிருந்தபடியால், ராஜா தான் காரியத்தை மற்றொரு ஆசாரியனைக் கெண்டு நடப்பித்ததைக் கண்ட வஷிஸ்டர், நேமிராஜனை சாம்பலாய்ப் போக சாபமிட்டாராம். இச்சாப காரணத்தால், வஷிஸ்டர், ஆத்துமா, பிர்மாவிடம் போய் நான் மறுபடி என்ன ஜென்மத்தில் பிறக்க வேண்டுமென்று கேட்கவே, பிர்மா, வருணதேவனிடத்திற்கும், சூரியதேவனிடத்திற்கும் போவென்றாராம். அப்பொழுது சூரியதேவன், தேவலோகத்திலுள்ள, ஊர்வசியை, மோகத்தால் தன் வீட்டுக்கழைக்க, அவளை வருணதேவன் கண்டு, மோகிக்க, இவ்விருவருவரின் மோகத்தால், அகஸ்தியர், வஷிஸ்டர் என்று இரு முனிவர்களும் பிறந்தார்களாம்.

நல் அறிவில் தேறியவர்கள், இக்கதையை நம்ப எவ்வித ஆதாரமும் உண்டா? இதை வாசிக்கும் போதே பெருங் குழப்பமாய் தெரிகிறதே! வருணனும், சூரியனும், உலகத்தோருக்குச் சேமத்தை உண்டாக்கப்பட்ட சிருஷ்டிகளாகிய மழையும், வெய்யிலும் அல்லவா? இவற்றைத் திக்குப் பாலகர்கள் என்பதும், காவலர், தேவர்கள், என்பதும் முற்றும் அபத்தமல்லவா? மழையும்,வெயிலும் கூடிய தேவலோகத்தில் இருந்த ஊர்வசியென்னும் தேவதாசியோடு மோகித்துக் கூடியதால் அகஸ்தியர், வசிஷ்டராகிய இரு முனிவர்கள் பிறந்தார்கள் என்பது பெரும்

மதியீனமல்லவா? வாசகர்களே! சிந்தியுங்கள். இது நம்பக்கூடிய சாதகமான கிரியையாகுமா? இது வாசகர்களுக்கு எவ்வகை விளக்கம் தருகிறது என்று பாருங்கள். இவ்வித தாறுமாறான குசமசக்குகளை கூட்டி வைத்து தேவர்களென்று மதித்து. நாம் கரங்கூப்பி தொழுது வணங்கினால் என்ன முக்தி பேரு கிடைக்குமென்று நீங்களே தீர்ப்பிடுங்கள்.

6. வாயு

வாயு (காற்று) வடமேற்குத் திசைத் தேவன். இவனுக்குக் குறி, கழுதை, வாகனம், மான், இவன் கையில் வெள்ளிக் கொடி உண்டு. இவன் காற்றுக்குத் தேவனும், தேவர்களுக்குத் தூதனுமாம். இவன் தாய் காசிப மகாரிஷியின் மனைவி, அதிதி என்பவள். தன் மகன் வாயு பவனன், இந்திரனைப் பார்க்கிலும் வல்லவனாயிருக்க வேண்டுமென்று எண்ணி, அப்படியே வரம் பெற்றாளாம். இதைக் கேள்வியுற்ற இந்திரன் அதிதியின் கர்ப்பத்தில் பிரவேசித்து, அந்தச் சிசுவை ஏழுபங்காக்கி, அதை பின்னும் ஏழு பங்காக்கினானாம். இக்காரணத்தால், வாயுபகவானுக்கு நாற்பத்தொன்பது உருக்கள் ஏற்பட்டதாம். இந்த வாயு தேவன் கேசரி என்னும் மந்திரி பெண்சாதி அஞ்சனை யோடு விபசாரஞ் செய்தபடியால், அநுமந்தன் (குரங்கு) பிறந்தானாம். இவனுக்கும் பலி செலுத்தி வணங்குகிறார்கள்.

மனிதர் சுவாசித்து, ஜீவனோடு இருக்க சிருஷ்டிகர்த்தா உண்டாக்கிய காற்று, மனிதரைப் போல, மந்திரி பெண்சாதியோடு விபசார பாவத்தில், கூடி ஈடுபட்டு குரங்குப் பிள்ளையைப் பெற்றதாகக் சொல்வது எத்தனை விந்தையென்று வாசகரே பார்க்கவும். இவற்றை எல்லாம் தெய்வமென மனங்கனிந்த நம்பிக்கையுடன் நம்பித் தொழும் மக்கள், ஓர் மெய்தெய்வத்தைக் கண்டடைந்து தொழுதால், எவ்வளவாய், மனம்மலர்ந்து, மகிழ்ந்து சந்தோஷமடையுமென்பதை இங்கு எழுதவும், அவசியந்தானா? இல்லையே! சிருஷ்டிப்புக்களைவிடடு சிருஷ்டிகர்கத்தாவாகிய மெய்தேவனைத் தேடி வணங்குங்கள். வீணானதை நம்பி முடிவில் மோசம் போகாது ஆத்துமா சாந்தி பெற மெய்பக்தியை கடைபிடியுங்கள். இது முடிவில் முக்தி சேர்க்கும். அதன் நீடூழி பாக்கியங்களை விவரிக்க நாவில்லை, காலமும் போதாதே!

7. குபேரன்

குபேரனை வடதிசை தேவனாய் வணங்குகிறார்கள். இவன் விக்கிரகக்குறி,யானை, இவன் அனைவரையும் திரவிய சம்பன்னன் ஆக்கும் தேவனாம். ''தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன், ஐஸ்வரியமும், மகிமையும், ஜீவனுமாம்'' என்பது. சத்திய சாஸ்த்திரத்தில்

இதற்கு மாறாய், நீதி செய்து நடவாப் பாவிகளுக்கு குபேரன் திரவிய சகாயம் செய்து எந்த நியாயத்தால் பெருஞ் செல்வனாக்க முடியும்? ஒருக்காலும் ஆக்க முடியாதே? இது வீண்பொய். நம்பிக்கையே யல்லாது வேறல்ல, "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும், என்பது", வாழ்க்கை அனுபவம், இவை இரண்டு மின்றி குபேர தேவன் எவரையும் குபேரனாக்குவது கூடாத காரியம். சத்தியத்தை தேடிக் கடைப்பிடியுங்கள்.

8. ஈசானன்

ஈசானனை வடகிழக்குத் தேவனாக வணங்குகிறார்கள். இவன் குறி காகம், இந்தத் தேவனைப் பற்றி விரிவாய் ஒன்றும் காவியங்களில் சொல்லபடக் காணோம். அதனால் விடப்பட்டது.

16

விசுவகர்மன் வரலாறு

விசுவகர்மன் உலக சிருஷ்டிகர்த்தா வாகிய பிர்மாவின் மகன். இவனைத் தெய்வலோகத் தச்சன், என்றும் சொல்கிறார்கள். இது சரித்திர வரலாற்றுச் சிதை வெண்பதிற் சந்தேகம் இல்லை. பொன், வெள்ளி, செம்பு, பித்தளை இரும்பு முதலான உலோகங்களைக் கொண்டும், மரத்தைக் கொண்டும், தொழிற் செய்வோர், தாங்கள் தெய்வ கம்மாளனாகிய விசுவகர்மன் வம்சம் என்கிறார்கள். ஆனால் எவ்வகையில் பார்த்தாலும், மனுதர்ம சாஸ்திரப்படி இவர்கள் சூத்திரர் என்று அழைக்கப்பட்டுவருவதே உண்மை. இல்லையென்றால், நான்கு ஜாதியும், பிர்மாவும் நான்கு தனிப்பட்ட இடத்தில் பிறந்த உண்மை பழுதாகுமே!

17

மன்னார்சாமி வரலாறு

மன்னார் சாமியைப் பற்றி அறிய விஸ்தாரமான ஆதார மில்லாவிட்டாலும், இதையும் தேவனாய் மதித்து இதன் விக்கிரகத்தை வணங்கி வருகிறார்கள். இதுவும் ஓர் தெய்மேயாகும்.

18

தருமதீலி வரலாறு

தருமதீலி புண்ணியத்தை நடத்தும் தேவனாய் எண்ணுகிறார்கள். இதன் விக்கிரகத்தை ரிஷபசாயலில் செய்து வணங்குகிறார்கள். சகல வித பாவ அதர்மங்களும், நிறைந்து பெரும் பட்டம் பதவியோடு கீர்த்தியாய் வாழும் ஒருவன், தன்னைப் பாவியென்றுணர்ந்து, ஒன்றான மெய்த்தேவனை அறிந்து, பரம ஞானத்தாலும், அருளாலும், தான் செய்யும் பாவங்களுக்கு விலகி, நீதிவழியில் நிலைத்து வாழாதவரையில் பாவியாகவேயிருந்து மாளுவான்.

இவ்விதமாபெரும் பாவியொருவனில், தருமதீலித் தேவன் புண்ணியத்தை நடத்துவதெப்படி? இவையெல்லாம் ஆழ்ந்த தெய்வ அறிவில்லாத, அஞ்ஞான பக்தி வளர்ச்சியால் ஏற்பட்ட, பொய் நம்பிக்கையின் பிரதி பிம்பங்கள். ஆழ்ந்த வழியைக் கண்டு, அதில் நடப்பதே உத்தமபக்தி, இதுவே புண்ணிய கிரியைகளில் பூரணமடைவித்து முக்தி சேர்க்கும்.

19

மன்மதன் வரலாறு

மன்மதன் விஷ்ணுவின் மகன். மன்மதனுக்கு பல மறு நாமங்கள் உண்டு. மறுநாமங்கள் : - அங்கசன் - அனங்கன் - ஆழிமுரசோன் - இரதிகாதலன் - உருவிலி - ஐங்கனைக் கிழவன் - கந்தர்ப்பன் - கருப்பு வில்லி - காமன் - சம்பாரி - சித்தசன் - சுகும்பரவன் - திங்கட்குடையோன் - திருமகன் மைந்தன் - தென்றற்றேரோன் - பஞ்சபாணன் - பூவம்பன் - பூவாணி - மகரகேதனன் - மதன் - மதுசகன் - மனோசன் - மனேற்பவன் - மாமகன் - மாரன் - மான் மகன் - மீனக் கொடியோன் - மோகன் - வசந்தன்வேள் - வேனிளாளி என்பன.

புராணங்களிலும் மற்றும் காவியங்களிலும் மன்மதனைப் பற்றிய சரிதைகள் ஏராளம் உண்டு. மன்மதனின் மற்றொரு பெயர், காமன்; காமம் என்ற வார்த்தைக்குப் பொருள் தீயகுணம் என்பதே. அது மூன்று குற்றங்களில் ஒன்றும், ஆறு பகைகளில் ஒன்றும், அஷ்டவிகாரங்களில்

ஒன்றும் ஆகும். காமக் கோட்டியின் சேஷ்டையால், மனித ஜாதிகளிடையில் ஏற்பட்டுள்ள பிராணச்சேதங்களும், நஷ்டங்களும், நிந்தை, அவமானங்களும், எண்ணற்றது. அவையாவும், விளக்கியெழுத ஏடு போதா தென விடப்பட்டது.

காமன் என்னும் மன்மதனை,மக்கள் தேவனாக்கி அப்பெயரால, எங்கும், திருவிழா, கூத்து ஏற்படுத்தி, இந்து ஆபாச தீயச் செய்கையை எங்கும் பரவிப் பெருகச் செய்ய ஊர்ஜிதப்படுத்தும் பழக்கம், எத்தனை பேதமையும், தீமையுமானதென்பதை சற்று சிந்தியுங்கள்.

இந்தக் காமனின், 'இடைவிடா உத்தியோகம், மனிதரில் காமச் சேஷ்டைக்கிரியைகளை உண்டாக்குவதே.' காமனின் மனைவி பெயர் இரதி. இரதியென்றால் சகல ஆபாசமும், அசுசியுமான துர்ச்செய்கைகளின் குறிப்புப் பெயராகும். காமன் திருநாளை, வருஷத்தில் ஒருதரம், கொட்டு முளக்கு, கும்மாளத்துடன்,வெகு ஆர்ப்பாட்டமாய் கொண்டாடுகிறார்கள். ஞானமார்க்கத்தை தழுவி நடக்கும் பக்தர்களானால், இவ்வித துர்க்கிரிகைகள் நிறைந்த திருநாளை, ஒரு தேவ நாமத்தில் கொண்டாடுவது நியாயமோ? என்று வாசகர்களே நிதானியுங்கள்.

காமனுக்கு உருவிலி என்றும் பெயர். சிவன் தவம் புரிகையில், காமன் ஏதோ ஒரு தந்திரம் செய்ய நினைக்கவே, சிவன், காமன் உடலைச் சுட்டெரித்ததாகக் கதையுண்டு.

இவ்வித காமக்குரோதர் சேஷ்டைகள் நிறைந்தவர்கள் தேவர்களின் புத்திரராயும், தேவர்களாயுமிருந்து, வணக்கத்திற்குரிய ஆராதனை, பூசை, காணிக்கை, அர்ச்சனை ஏற்பது தகுதியும், நியாயமுமாகுமா? இவ்வித லட்சணமுடையோரை, தேவர்களாய் வணங்குவோர்க்கு, இவர்கள் என்ன வரமும், பதவியும் கொடுக்க வல்லவர்கள் என்பதை வாசகர்கள் சிந்தியுங்கள். அஞ்ஞானத்தை ஆழ்ந்து ஆராய்ந்து கண்டு, அகற்றுங்கள், மெய்ஞ்ஞானத்தைக் கூர்ந்து தேடிக் கண்டடையுங்கள்.

மெய் வேதாகமத்தில் பாவஞ்செய்வோர் எவரும் முக்தி சேரமுடியாதென்றும், மறுமையில் நரகத்தில் நித்திய தண்டனையான வாதையே அவர்கள் பங்கென்றும், சொல்லுகிறது. வாசித்தறிந்த அளவில் எல்லாத் தேவர்களும் பாவங்களையே செய்வதாய்க் காணப்படுவதால் இவர்கள் தங்கள் பக்தர்களுக்கு, பாவ விமோசனம் அளித்து நற்பதவி அளிப்பதெவ்விதம்? மெய் பராபர வஸ்துவைத் தேடி நீதியின் வழியில் நின்று, அவரைத் துதியுங்கள். இதுவே மெய்பக்தி தேவனுக்குப் பயப்படுவதே ஞானம் என்று அறியுங்கள்.

20

தேவிமார்கள் வரலாறு

இதுவரை தேவர்கள் வரலாறு சுருக்கமாய் விளக்கிக் காட்டப்பட்டது. இந்தப் பிரிவில், தேவிமார்கள் வரலாற்றையும் சுருக்கமாய் அறிவது நல்லதே! மேலும் தேவர்களைப் பார்க்கிலும் தேவிமார்களும் எண்ணிக்கையில் பெருகியிருப்பது புதுமையல்லவே. சிலதேவர்களுக்கு, பலமனைவிகளும், வைப்பாட்டிகளும் இருந்ததாய் வேத காவியங்கள் விளக்குவதால் தேவிமார் எண்ணிக்கையில் அதிகம் இருப்பது அவசியமே!

1. பார்வதி வரலாறு

பார்வதி சிவன் பெண்சாதி. பார்வதிக்கும் தேவர்களைப் போல் பல மறுநாமங்கள் உண்டு.

பார்வதியின் மறுநாமங்கள்

அந்திரி - அமலை - அம்பிகை - அம்மை - அயிராளி - அரனிடத்தவள் ஆரியை - இமயவல்லி - உமை - உமையவள் - உருத்திரை

ஐயை - கௌரி - காமக்கோட்டி - சங்கரி - சத்தி - சாம்பவி - சிவை - தேவி - நாயகி - நாரி - பகவதி - பருப்பதி - பரைபவாணி - மரகவல்லி - மலைமடந்தை - மாதா - முக்கண்ணி - துர்க்கை - அமரி - அம்ணத்தி - அரியேரி - ஆளியூர்தி - எண்டோளி - கலையானத்தி - கலை - யூர்தி - கன்னி - கார்த்திகை - குமரி - கொற்றவை - கொற்றி - சக்கரபாணி சக்கராயுதத்தி - சண்டிகை - சமரி - சயமகள் - சுந்தரி - சூலி - தேவி - நாரணி - நாராயணி - நீலி - பாலைக் கிழத்தி - மயிடற் சென்றாள் - மாலினையாள் - மேதிச்சென்னி மிதித்தாள் - வாழ்க்கைக் கொண்டாள் - விசயை - விந்தை - விமலை - வீரச் செல்வி - வீரி - காளி - அய்யை - அலகைக் கொடியாள் - ஆரணி - கங்காளி - சாமுண்டி - சூரி - தருக விநாசனி - தாருகற்செற்றாள் -பதுமை - பத்யு திரி - பயிரவி - மனுபதி - மாதாங்கி மாதா - மாயை - மாயையுற்றாள் - யோகினி - வல்லனங்கு - வேதாளி என்பவை.

தக்கனுக்கு பார்வதி தன் வீட்டில் பிறந்த முதல் பெண்ணும். பார்வதி, துர்க்கை என்னும் ஓர் ராட்சதனை சங்கரித்த காரணத்தால், துர்க்கை என்னும் பெயர் வந்ததாம். பசுமாடு துர்க்கையின் ரூபமாம். பார்வதியும் பத்து அவதாரமெடுத்ததாய்க் கதையுண்டு. சிவன், பார்வதியைக் கலியாணம் செய்யும்போது, சக்தி யென்றழைக்கப் பட்டாளாம். ஒரு சமயம் தன் கணவன் சிவனைத் தன் தகப்பன், தக்கன் தூஷித்த காரணத்தால் பார்வதி தன்னை மாய்த்துக் கொண்டாளாம். இமயமலையின் புத்திரியாகப் பிறந்து, பார்வதி என்று அழைக்கப்பட்டு, பிள்ளையாரையும், சுப்பிரமணியரையும் பெற்றதாய்க் கதையுண்டு. யமுனை என்னும் ஆற்றைக் கடக்க, தான் கழுதை ரூபம் எடுத்ததாயும் கதையுண்டு சக்தி பூசையின் இரகசியத்தை இங்கு எழுதவே கூடாது என்ற பரந்த, நோக்கத்துடன் விடப்பட்டது. சில இடங்களில் சக்திக்கு, நரபலி கொடுக்கிறார்கள்.

2. லட்சுமி வரலாறு

லட்சுமி விஷ்ணுவின் மனைவி.

லட்சுமியின் மறு நாமங்கள் :

இலக்குமி - அரிப்பிரியை - ஆக்கம் - இந்திரை - இணையாள் - கமலை - கோகனகை - சீதேவி - செல்வி - திரு - நளினி - பதுமை - பார்க்கவி - பாற்கடற்பிறந்தாள் - பிள்ளை - பொருட் செல்வி - பொறி - பொன் - மாமுண்டகாசனை - விமலை என்பவை.

லட்சுமி, விஷ்ணுவுக்கு, மன்மதன், சந்திரவல்லி, அமிர்தவல்லி, என்னும் பிள்ளைகளைப் பெற்ருளாம். இவள் செல்வத்திற்கும், மோகத்திற்கும், தேவியென்றும், உலகத்திற்கே தாய், என்றும் வணங்குகிறார்கள்.

3. சரஸ்வதி வரலாறு.

சரஸ்வதி, பிரம்மாவின் மனைவி.

சரஸ்வதியின் மறு பெயர்கள் :-

அயன் - இசைமடந்தை - உலகமாதா - கலைமகள் காயத்திரி - சாவித்திரி - ஞானமூர்த்தி - தண்டாச்சிறப்பினள் - தூயாள் - நாமகள் - நான்முகன் கிழத்தி - பனுவாலாட்டி பாமகள் - பாமுதல்வி - பாரதி - பிராமி - பூரவாகினி - வாக்காள் - வாணி - வெண்டாமரையாள் - வெண்சாமுற்றாள் - வெள்ளை நிறத்தாள் - மெய்யாள், என்பவை.

சரஸ்வதியின் கடாட்சத்தால் தான், யாவரும் கல்வி யறிவாளர் ஆகிறார்கள் என்றும் சகல பாஷைக்கும் தானே ஆதிக்கமுடையவள் என்றும் படிக்கத்துவங்கும் போதெல்லாம், சரஸ்வதியை துதிசெய்து வணங்குவதுமல்லாமல், உலகிற்கே மாதாவாயும் நம்புகிறார்கள்.

4. மாரியம்மன் வரலாறு

மாரியம்மனைத் தமிழ் நாட்டின் கிராம தேவியாக பெரிதும் மதித்து, அம்மனின் பூர்வீக வரலாறு தெரியாவிட்டாலும், கரகம் எடுத்து ஆடிப்பாடி வெகு ஆர்ப்பாட்டமாக திருவிழாக் கொண்டாடி வருவதை எங்கும் காணலாம்.

மாரியம்மனின் பூர்வ வரலாற்றை பலவிதமாய் சொல்வதில் இதுவும் ஒன்று. கரூவூர் பெரும் பறையன் மகள் ஆதி என்பவளை, பேராழிமாமுனியின் குமாரனான பகவர், பெண்சாதியாக எடுத்துக் கொண்டாராம். பகவர், ஜாதியில் பார்ப்பானும், ஆதி என்பவள் பறைச்சியுமாகையால் இவ்விருவரும் மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டு, ஊரிலே பிச்சையிரந்துண்டு காட்டிலே சஞ்சரித்தார்களாம். இவர்களுக்கு நாலு பெண்களும், மூன்று ஆண்களும் பிறந்தார்கள். இவர்கள் பெயர் உப்பை, உருவை, ஔவை, வள்ளி, அதிகமான், கபிலர், வள்ளுவர் என்றழைக்கப்பட்டது.

1. உப்பை : ஊற்றுக் காட்டிலே வண்ணார், வளர்த்தார்களாம். இவளே, எங்கும் கிராம தேவதையாய் போற்றி வணங்கப்படும் தற்கால மாரியம்மன், தேவி.

2. உறுவை : இவளை சானார் வளர்த்தார்களாம்.

3. ஔவை : இவள் நரப்புச் சேரியில், அல்லது சேரியர் நரப்பில்,

அஃதாவது, நரப்புக்கரிவியோர், சேரி பாணரிடத்தில் வளர்ந்தாளாம்.

4. **வள்ளி :** இவள் மலைச் சாரலில், குறவனிடத்தில் வளர்ந்தாளாம்.

5. **அதிகமான் :** ஆரூரிலே அரசனாயிருந்த அதிகமான் வீட்டிலே வளர்த்தார்களாம்.

6. **கபிலன் :** ஆரூரிலே, அந்தணர் வீட்டில் வளர்ந்தாராம்.

7. **வள்ளுவர் :** தொண்ட மண்டலத்து மயிலாப் பூரிலே பறையரிடத்தில் வளர்க்கப்பட்டாராம்.

இவ்வேழு பேரில் ஆதி, என்னும் பறைச்சி, வயற்றில் முதல் பிறந்ததும், வண்ணார் வீட்டில் வளர்ந்த வளுமாகிய உப்பை என்பவள், பறைச்சி வயிற்றில் பிறந்த படியால் வெட்டியாரப் பறையனுக்கே விவாக முடித்து கொடுத்தார்களாம். அக்காலத்தில் உப்பைக்கு வைசூரி வியாதிகண்டு திரேகமெங்கும் ரணமாகி, துர் நாற்றமெடுத்து, ஈக்கள் மொய்த்த படியால் அவள் புருஷனான வெட்டியான் மிகத்தரித்திரனும் வஸ்திரமில்லாதவனானதால், வேப்பந்தழைகளை இவளுக்குக் கீழும் பரப்பி, மேலும் இதையே போர்வையாய் இட்டு மூடி ஈக்கள் மொய்த்துக் கடித்து, வதைக்காதபடிப் பாதுகாத்து இவன் ஊரில் போய் இரந்து வந்து போஷிப்பானாம். இவள் வியாதி தெளிந்த பின், இருவரும் பிச்சைக்குப் போகையில், இவள் புண்களில் மொய்க்கிற ஈக்களின் உபத்திரவம் பொறுக்க முடியாமல், அந்த வேப்பந் தழைகளாலேயே அவைகளை ஒட்டி, விசிறிக் கொண்டே வீடு, வீடாகப் போய் பிச்சை இரந்து, உண்டு காலத்தைக் கழித்தார்கள். முடிவில் இவள் மரித்ததும், ஊரார் பெரும் மரியாதையுடன், அம்மை (வைசூரி நோய்) கண்டவளானதால், உப்பை என்னும் பேரை மாற்றி மாரியம்மன், என்னும் பேரால் சமாதி கட்டி விளக்கேற்றி வைத்து தங்கள் கிராம தேவதையாக வணங்கினார்களாம். இப்பழக்கம் இன்றைய வரையில் எங்கும் மாரியம்மன் திருவிழாவென்று வெகு ஆர்வமாய்க் கொண்டாடப்பட்டு வருவதை காணலாம்.

முன் விளக்கிக் காட்டியுள்ள உப்பை என்ற மாரியம்மனின் வரலாறு உண்மையென்றால் எக்காரணம் கொண்டும். நம்மைப் போல் நோய்வாய்ப்பட்டு மரித்துப் போன ஒரு மனிதப் பிறவியை தேவியாக்கி வணங்குவதால் எந்த சிறிய நன்மையாவது கிடைக்குமா? இவ்விதம் தேவியாக்கி வணங்க என்ன நியாயம் உண்டு? என்பதை சற்று யோசியுங்கள். இது அத்தனையும் நமது அஞ்ஞானமும், அறியாமையும் அல்லவா? கடந்த காலங்களில் மனிதர்க்குள் கண்ட பயங்கர நோய்களை எல்லாம் தெய்வமாகவே நம்பி இவை பின்னும் தொடர்ந்து வாதிக்காமலிருக்க

வணங்கினார்கள் மக்கள். வாந்தி, பேதி, கால்ரா நோயை யாவையும் காளிகாதேவி என நம்பினார்கள். ஏற்றகாலத்தில் ஆங்கில மருத்துவ நிபுணரின் தீவிரப் பிரயாசை இவை நோய் யல்லாது. தேவிமார் அல்ல வென்று தெளிவாக்கி விட்டது

இதல்லாமல், மகேஸ்வரி, மகேஸ்வரன் மனைவி மனோன்மணி சதாசிவன் மனைவி, சீதை இராமன் மனைவி ருக்மணி கிருஷ்ணன் மனைவி, ராதை க்ருஷ்ணன் வைப்பாட்டி காமாட்சி ஏகாம்பரன் மனைவி, அழகம்மை கச்சாலை மனைவி, விசாலாச்சி, விசுவநாதன் மனைவி, உண்ணாமுலை அருணாசலம் மனைவி, மீனாட்சி சொக்கநாதன் மனைவி தயிலி வைத்தி மனைவி, அலுமேலு வெங்கடாசலம் மனைவி, பெருந்தேவி வரதராஜன் மனைவி, கனவல்லி, வீரராகவன் மனைவி, இவையுமல்லாமல், பொன்னி, குண்ணி, சஸ்தி, வீரிநாகி, ஏகி, காளி, பாலி; கோலி, சீயாள், முதலிய புது தேவதைகளையும், கன்னிமார் என்னும் தேவிமார்களையும் மக்கள் வணங்குகிறார்கள். இதைப் பற்றி அகஸ்தியர் சொல்வதைக் கீழே காண்கவும் :-

அகஸ்தியர் ஞானம்

முகிலாகச் செய்துவிட்டேன் மைந்தா, மைந்தா
  முப்பதுக்குள்ளடக்கிவிட்டேன் முன்னூல் பார்த்து
அகிலமதில் விரித்துவிட்டேன் இந்த நூலை
  யார் தானு மெந்தனைப் போலறையமாட்டார்.
பகிரதியுங்கலை மகளும் வாணிதானும்
  பார்வதியு மறுமுகஅம் பலபேர் தானும்
சகியாத மூர்த்திகளாயிவர் கடானும்
  சத்தி சிவனிருப்பிடமோ சாற்றுவீரே?

மேற்கூறிய தேவர்களும், தேவிமார்களும் வணக்கத்திற்குரிய தேவர்கள் அல்லவென்கிறார். அகஸ்தியர், மெஞ்ஞான வணக்க வழிபாடுகளை சத்திய வேத நூலில் ஆராய்ந்து தேடி ஒரு பரம்பொருளை தொழுது சேவியுங்கள்.

21

சாமானிய தேவர்கள் வரலாறு

இதுவரைச் சொன்ன தேவர்களும், தேவிமார்களுமல்லாது, சாமானிய தேவர்கள் என்னும் ஒரு கூட்டம் தேவர்களும் உண்டு. இவர்கள் அனைவரும் காசிபமகாரிஷிக்குப் பிறந்தோரேயல்லாது, அநாதி நித்யவஸ்துவுக்கு நிகரானவர்கள் அல்லவென்பது ஆராய்ந்தறிந்த உண்மை. அவை பின்வருமாறு :-

1. இராட்சதர்

இராட்சதர்க்குரிய பொதுப் பெயர்கள் : - இரட்சதர் - அரக்கர் - இடும்பர் - சாலகடங்கடர் - நிருதர் - பிசிதானர் -யாதுதானவர் - வானோர் மாற்றலர், என்பன.

மாலி - சுமாலி - இராவணன் - கும்பகர்ணன் - விபீஷணன் - இந்திரசித்தன் - அதிகாயன் - ஆகியோர் பிரதான இராட்சதர்கள். இவர்கள் இருப்பிடம் தென்மேற்கில், என்பது காதவழி சுற்றளவான இலங்கைத் தீவாம். இங்கு இருந்த கும்பகர்ணன் படுக்கை இரண்டாயிரம் காத வழி நீளமிருந்ததாம். ஒரு காதம் சுமார் 10

மைல்.

2. கந்தருவர் - கின்னரர்

கந்தருவரும், கிண்ணரரும், ஆண் பெண்ணுகிய பாடகரும், வீணை வல்லவருமாம்.

3. வித்யாதரர் - விஞ்சையர்

வித்தியாதரர், விஞ்சையரான இரு வகுப்பாகும் கூத்தாடுகிறவர்கள்.

4. அப்சரர்

அப்சரர் என்போர், சௌந்தர்யவதிகளான, நடனஞ் செய்யும், பெண்கள். இவ்வழகிய பெண்களில், ஐந்துபேர், தேவலோகத்து தாசிகளும், தேவர்களின் வைப்பாட்டிகளுமாம்.

5. அஷ்ட தசாகணங்கள்

அஷ்டதசாகணங்களானோர் பிரிவுகள் பின்வருமாறு :-

1. அமரர், வானவர் 2. சித்தர் 3. அசுரர் 4. தைத்தியர் 5. கருடர் 6. கின்னரர் 7. நிருதர், 8. கிம்புருடர் 9. கந்தருவர், தேவபாடகர், 10. இயக்கர் 11. விஞ்சையர், வித்தியாதரர் 12. பூதர் 13. பிசாசர் 14. அந்தரர் 15. முனிவர் 16. உரக்கர், நாகர் 17. ஆகாயவாசிகள் 18. போகபூமியர் என்போர்.

இவர்களையல்லாமல், காத்தவராயன், கறுப்பன், மன்னார், மாடன், வீரங்கன், ரங்கன், முத்தையன், சபாபதி போத்துராஜன், என்னும், பல புதுத் தேவர்களும், பிதுர் தேவர்களும், தேவிமார்களும் வணக்கத்துக்குரிய தேவர்களாய் இருக்கிறார்கள்.



22

சர்வத்தையும் தெய்வமாய் வணங்குதல்

மக்கள் மனதில் மெய்பக்தி ஆராய்ச்சி அறிவு நாளுக்கு நான் மெலிந்து, தீய்ந்து, அஞ்ஞான மென்னும் அவபக்தியின் அறிவு, அநுதினமும், மலர்ந்து, மலிந்து, பெருகுவதால், எதை வெறுப்பது, எதை விரும்பிப்பிடித்து, நடப்பதென்னும் தெளிவில்லாமல், சிருஷ்டிப் படைப்பில் காணும், சர்வத்தையும் மெய்ப்பராபரவஸ்துவுக்குச் சமமாய் மதித்து, தேவன் ஒன்றென்போரைப் பழித்துப், பகைத்துத் தங்களையே ஞானவான்களாய் மதித்து, சர்வத்தையும் தெய்வம் என்று வணங்குகிறார்கள்.

கன்னான் ஒருவன், தன் செய்வண்மையாலும், வாக்குத் திறமையாலும், செப்புப்பாத்திரம் ஒன்றை வெள்ளி, அல்லது

பொன், பாத்திரமென சாதித்து விற்றால், வாங்குவோர் அதைச் சோதித்தறிந்து வாங்கவேண்டியது பொறுப்பல்லவா? இதை, இவ்விதம் ஏமாற்றி விற்பவனையும், எத்தன், என்பதை விட வஞ்சகன், என்பது பொருத்தமல்லவா? அப்படியே இதை நம்பி வாங்குவோரையும், வஞ்சிக்கப்பட்டோர், என்பதும் நீதியல்லவா? மெய்பக்தியிலும், இப்படியே வஞ்சகக் குருக்கள், மாறாட்டமாய், வழிகாட்டியதால், அல்லவா மக்கள் தம் பக்தியில், வீட்டு, காட்டு, விலங்கினங்களையும், பறவைகளையும், நீரில் வாழும் ஜீவன்களையும், சூரியன், சந்திரன், நட்சத்திரமென்னும், விண் வீதியில் காணும் படைப்புகளையும், காற்று, இடி, மின்னல், மேகம், எருது, பசு, குரங்கு, நாய், நரி, யானை, சிங்கம், பாம்பு, பல்லி, காகம், பருந்து, மச்சம், புல், பூண்டு, விருட்சம், ஆறு, குளம் முதலானவைகளையும், கள்ளர், கொலைஞர், கையாடும் தீய ஆயுதங்களான சர்வத்தையும், தெய்வமென்று நம்பவும், வணங்கவும் காரணம்? ஐயோ இது எத்தனை பெரும் பாவமும், மீட்பில்லா பரிதாபமும் என நம்புவார் இல்லையே! இது அத்தனைக்கும் யாதொரு தெய்வலட்சணமுண்டா? இவற்றில் ஒன்றாவது மாசற்ற பரம்பொருளுக்கு சமத்வமான, ஒப்பு உவமையானது உண்டா? இல்லையே! தன் நம்பிக்கைப்படி பக்தன், ஒரு பக்கம் பாம்பையும், கெருடனையும், தெய்வமென பணிவுடன் தொழுது வணங்கும்பொழுது, மறுபக்கம் ஓர் பாம்பைக் கெருடன், பற்றிப் பிடித்துக் கொத்தியிழுத்துத் தின்னும் காட்சியைக் கண்ட பின்னாவது, இவை வணங்கும் தெய்வம் அல்ல, வானில் பறக்கும் கெருடனும், ஊரி, ஒடிப் புற்றில் மறையும் பாம்பு என்று அறிவார் இல்லையே! ஓர் பக்தன் பாதரட்சையயைக் கீழ் விட்டு, மேல்நோக்கித் தாடையிலடித்துப் பக்தியுடன், அரிகிஷ்டா, கெருடாவென, மனங்குளிரத் தொழுது வணங்குகையில், மறுபக்கம், கெருடன், கோழிக் குஞ்சைப் பற்றித் தூக்கிப் பறந்து போவதைக் கண்ட மக்கள், மனந்துடிக்கத் தொடர்ந்தோடித் துரத்துவதைப் பார்த்தாவது இது, தெய்வமல்ல, குஞ்சைத் திருடும் பறவை, என்று உணர்ந்து அறியவேண்டாமா? பாம்பு பல, கீரியின் வாயில் கண்ட,

துண்டமாய்த், தறிபட்டு மாளும்போது, இக்காட்சியைக் கண்டு மனிதக் கண்களும், வாயும் அதை தெய்வமென நம்பித்தொழுவது விந்தையிலும் விந்தையல்லவா?

சர்வத்தையும் தெய்வமாய் வணங்குவதிற் தோஷமில்லையென்றால், கள்ளிப்பாலும், பசும்பாலும், போல் காணுதென்று கரந்து குடிப்போமா? தண்ணீரும், சீமை (மண்எண்ணையும்) ஒன்றென மதித்துக் குடிக்கலாமா? தோற்றத்தில் ஒன்று போல் காண்பதற்கெல்லாம், ஒரே பெயரிடல் பொருந்துமா? மணத்திலும், குணத்திலும், வித்தியாசப்பட்ட லட்சணமுடையதை, ஒன்றென சாதிப்பதை நியாயக்கேடு, அல்லது அறிவீனமான அஞ்ஞானம், என்பது பொருத்தமல்லவா? சைவம், வைஷ்ணவம், ஜைனம், பௌத்தம், சார்வாகம். உலகாயுதம் என்னும் ஆறு சமயங்களில், ஒன்றாகிய சார்வாக சமயத்தார் தன் புத்தியையே தெய்வமாக வணங்குகிறார்கள். தன் புத்தியைத் தெய்வமென்பதும், சர்வத்தையும், தெய்மென்பதும் இரண்டும் ஒன்றே. இதுவே அஞ்ஞானமும், அவபக்தியும் ஆகும். மெய் பராபரவஸ்து ஒன்றென ஆராய்ந்து அறிந்து வாழ்வதே மெய்ஞான பக்தியும், வேதாந்த முக்தி வழியுமாகும். இதுவேமெய்பக்தியறிவின் மேன்மை. இதை கடைபிடித்து நடப்போனே மெய்பக்தன்.

23

பலவித வணக்க வழிபாடுகள்

1. பசு வணக்கம்

பிரம்மா, பிராமணர்களையும், பசுக்களையும், ஏககாலத்தில் உண்டாக் கினார் என்னும் நம்பிக்கையால், மிருகங்களில் பசுவை விசேஷப்படுத்தி, அதன் சாணம், கோமயம் முதலானவை களை சுத்திகரிப்பதற்கு முக்கிய வஸ்துக்களாய் மதித்து, பசுவையும் வணக்கத்திற்குரியதாய் மதிக்கிறார்கள்.

2. எருது வணக்கம்

சிவனின் வாகனம், எருது, என்னும் காரணத்தால், சிவக்ஷேத்திரங் களில், எருதை, கற்சுரூபங்களில் செய்து வைத்திருக்கிறார்கள். வருஷத்திற்கு ஒரு தரம் மாடுகளுக்கும், கன்றுகளுக்கும், பொங்கல் இட்டு, பண்டிகை கொண்டா டப்பட்டு வருகிறது. இக்காரணத்தால் பசு, எருதை, வணக்கத்திற்குரிய தெய்வமாய் மதிக்கிறார்கள்.

3. அநுமார் வணக்கம்

வானரம், (குரங்கு) என்னும், அநுமான் வாயுபகவானுக்கு புத்திரனும், சிவ, அவதாரங்களில் ஒன்றுமென, மதிக்கப்படுகிறது. சேஷ்டைபுரியும், இக்குரங்கை கோவிலில் வைத்திருக்கிறார்கள். அநுமார் வரலாற்றை, போகமுனிவர், விளக்குவதைக் காண்கவும்.

போகர் சத்த காண்டம் பக்கம் 578

பாடல் 601

உரைத்தாரே முன்னோர் சொல் நூல்களெல்லாம்
உத்தமர்கள் பாடிவிட்டார் அநுமாரைத் தான்
நிரைத்தாரே தேவனென்றும் கர்த்தனென்றும்
நிலையான இதிகாச புராணமெல்லாம்
பரைத்தாரே சிரஞ்சீவிப் பட்டமென்றும்
பாருலகில் வரம் பெற்ற ஆஞ்சனென்றும்
உரைத்தாரே மிருகமென்ற கூட்டந்தன்னை
வலுவான மிருகமென்று வசனித்தாரே.

பாடல் 602

வசனித்தார் மிருகமென்ற அநுமார்தானும்
வண்மையுள்ள வானரமாங் கூட்டந்தன்னில்
புசவீர பராக்கிரம வீரனான
புனிதமுள்ள ஆஞ்சநேய ஜாதிகண்டீர்
சதகோடி வானரமாய் ஆஞ்சநேயன்
தாரணியில் தேவனாய் இருப்பாரானால
குசமுடைய ஸ்ரீராமர் பக்கல் நின்று
குவலயத்தில் மிகயுத்தஞ் செய்தார் தானே

பொருள் :- அநுமார், தேவன் அல்ல, அது வானரமென்னும், மிருகக் கூட்டம், அது தேவன் ஆனால், ஸ்ரீராமர்க்கு உதவியாய், இராவணனை எதிர்த்து யுத்தம் செய்யப் போயிராது என்கிறார். இப்பாடல் மூலம் இன்னொருபக்கம், அநுமார் வரலாற்றை பார்க்கையில் காசிபமகாரிஷியின் புத்திரன் வாயு (காற்று) பவனனுக்குப் பிறந்த பிள்ளையாய் தெரிகிறது?

வாயுபவனன், கேசரி, என்னும் மந்திரி மனைவியோடு விபசாரத்தில் ஈடுபட்டு பெற்ற பிள்ளைதான், அநுமந்தன், காற்றை ரிஷிகள் தங்களுக்கு மக்களாக பெறுவதும், காற்றும் தான் ஒரு பெண்ணைச் சேர்ந்து மிருக

(குரங்கு) மக்களைப் பெறுவதும், பின் மனுமக்கள் இந்தக் குரங்கை, தேவனாய் எண்ணித் துதித்து வணங்குவதும், எத்தனை பெரும் வஞ்சிப்பும், பாதகமும், நீதிகேடும் அஞ்ஞானமும், என்று பாருங்கள்!

மா, கொய்யா, புளி முதலான தோப்புகளை குத்தகைக்கு எடுப்போர், அதை நாசப்படுத்தும் குரங்குகளுக்கு காவலர்களை வைத்து, இம்சித்து, துரத்தி, தோப்பைக் காத்துப் பலனைச் சேர்த்துப் பலன் காணவில்லையா? அநுமார் தேவன் என்றால், அதை இப்படி வதைத்து, இம்சிப்பதேன்? தங்கள் வணக்கத்துக்குரிய தேவனை இப்படி இம்சித்தால் பாவமல்லவா?

குரங்கை, சிலை உருவாய்ச் செய்து, அநுமார்க்குக் கோயில் கட்டி சிறப்புடன், தேர், திருவிழாக்கள், நடத்தி ஆராதித்து கடவுளாய் வணங்கி, மறுபக்கம் ஜீவனோடு இருக்கும் குரங்கைக் கல்லாலடித்துத் துரத்தி வதைத்து, வாதிப்பது, தேவர்களுக்குக் காட்டும் மரியாதை வணக்கமா? இது, பக்தியாவது எப்படி? ஆழ்ந்து சிந்திப்பது மிகப் பிரயோஜனமளித்து ஞானபாதை காட்டும்.

''கனம் பொருந்தியவனாயிருந்தாலும், அறிவில்லாத மனிதன், அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்'' என்று சத்திய திருமறை சொல்லும்போது, அறிவில்லா மிருகமென்னும், குரங்கைத் தெய்வமாய் வணங்குவதெப்படி? இப்பழக்கவழக்கங்களை விட்டு விலகுவதே, ஞானமும், மெய் பக்தியும் ஆகும்.

4. நாய் வணக்கம்

நாய் வயிரவனின் வாகனம். இதையும் வணங்கும் தேவர்களில், ஒன்ருய் மதிக்கிறார்கள். வயிரவ சாமி என்பது பெயர். நரி, யானை, சிங்கம், எருமை, பெருச்சாளி, மான், ஆட்டுக்கடா, முதலான மிருகங்களையும், பார்வதியின் அவதாரமாய் மதித்து, தேவர்கள் கூட்டத்தில் சேர்த்து வணங்குகிறார்கள். ஐயோ! எத்தனை பரிதாபமும், தேவதுரோகமும் என்று உணர்வாரில்லையே!

5. பட்சி வணக்கம்

பட்சிகளில், மனித ரூபத்தையும், பட்சிரூபத்தையும் கொண்ட காசிபப்பிர்மாவின் பெண்சாதி, இட்ட முட்டையிற் பிறந்து குசதிவிப்பா ஸ்தலத்தில், விஷ்ணுவுக்கு வாகனமாகிய கருடனும், அன்னமும், மயிலும், சூரியனின் ரதத்தை ஒட்டுகிற கருடனுடைய அண்ணனாகிய அருணனும், ராமன் மனைவி சீதைக்காக சிறைமீட்க இராவணனுடன் போர் புரிந்த கழுகு சடாயுவும், மற்றும் பருந்தினங்களும் தேவர்களும் கூட்டத்திற் சேர்ந்தது.

இதையும் தெய்வமாய் வணங்குகிறார்கள். மயில், சுப்ரமணியரோடு, வள்ளி, தெய்வானை, மூவரையும், ஒன்றாய் தூக்கும் சக்தி உள்ளதோ? என்பதை, நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

6. மட்ச வணக்கம்

மச்சங்களில், மகரமும், ஆமையும் விசேஷித்தவைகளாய மதித்து, விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாய் வணங்குகிறார்கள்.

7. விருட்ச வணக்கம்

விருட்சங்களில், வில்வம், உருத்திராடசம்,. சிவனுக்குப் பிரீதி, அசோகம், அருகனுக்குப் பிரீதி

துளசி, என்னும் ஸ்திரீ, விஷ்ணுவுக்குத் தான் மனைவி யாக வேண்டுமென்று ஆசைப்பட்டு, வெகுநாள் தபசுபுரிந்து பிரார்த்தித்தாளாம். இதையறிந்த விஷ்ணுவின் மனைவி லட்சுமி, அவளை துளசிச் செடியாய், போக சாபமிட்டாளாம். இந்தத் துளசியே, விஷ்ணுவின் மார்பில், மாலையாகத் தரிக்கப் படுபவள், இக்காரணத்தால் இச்செடியை விஷ்ணு துளசி, என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

அரசு, வேம்பு, கொன்றை, அலரி, ஆத்தி, வன்னி, ஆல அறுகு, தருப்பை, மா, முதலான மரஞ்செடிகளையும், வணங்குகிறார்கள். இது அஞ்ஞானம் எனும் விளக்கம்.

கவி

வில்வம், துளசி, கொன்றை, கொல்லும், அலரி, ஆத்தி
வேம்போ, டரசு, வன்னி, ஒம்பால் பனையறுகம்,
புல், ஓதிதருப்பை, மாவும் நல்கும் கதியென்றெண்ணி
பொருளைக் காணாமற் போனீர் இருளின் மக்களே நீங்கள்.

இவற்றை தெய்வமாய் மதித்து வணங்குவோரை மெயப் பொருள் (நிலையான தெய்வம்) காணு இருளின் மக்கள், என்று தெளிவாய் விளங்குகிறதல்லவா?

சிருஷ்டிகர்த்தாவால் உண்டாக்கப்பட்டுள்ள சகல தாவர வர்க்கங்களும், மனிதருக்கு பிரயோசனமான உணவாய் கையளிக்கப்பட்டது. அவற்றை தெய்வமாய் மதித்து ஆராதிப்பது அஞ்ஞானம், அதற்கு நன்மை, தீமை, என்னும் உணர்வோடு, ஒன்றும் செய்ய வல்லமையற்றது. பராபரமாகிய தேவனே, எல்லா நன்மையும் செய்ய வல்லவர்.

8. கற்கள் வணக்கம்

விஷ்ணு, மனிதர்களின் விதி கருமங்களை நடத்த, நவக்கிரகங்களைப் படைத்த பின், சனிய பகவான் பிரம்ம தேவனை நோக்கி விஷ்ணுதன் ஆளுகைக்குள் பன்னிரண்டு வருஷம் இருக்கக் கேட்டதால், பிரம்மா, சனிபகவானை, விஷ்ணுவினிடத்தில் அனுப்ப, இருவரும் சந்தித்தபோது, சனி பகவான் விஷ்ணுவைப் பார்த்து தன் ஆட்சியில் பன்னிரண்டு வருஷம் இருக்கக் கேட்கவே, விஷ்ணு பயந்து ஓர் கண்டகி என்னும் மலையாய் மாறிநிற்க, அதையறிந்த சனியானவர், வச்சிர கேத்தாய், என்கிற புழுவாய் மாறி விஷ்ணுவை பன்னிரண்டு வருஷம் வதைக்கவே, சனியன் செய்யும் வாதை பொறுக்க முடியாமல் விஷ்ணு தன் சுயஉருவெடுத்து, இந்த மலையின் கற்களை நமஸ்கரிக்க கட்டளை கொடுத்தாராம். இந்த கல் இருக்கும் இடமெல்லாம் சுத்தமாம். இவற்றில் சிலது இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்குமாம். வணக்கத்திற்குறிய கற்களில் சாலிக்கிராமம், மகா முக்கியமானதாம். இவ்விதம் மனிதர் கல் உருவச்சிலைகளை மட்டுமல்ல, இவ்வித கற்களையும் வணங்குகிறார்கள்.

9. நதி வணக்கம்

ஆறுகளில் விஷேசித்த புண்ணிய நதிகள் என்றழைக்கப்படும் கங்கை, யமுனை, சரஸ்வதி, திருவேணி, கோதாவரி, நர்மதை, காவேரி, தாமிரபரணி, துங்கபத்திரி, கிருஷ்ணை, பிரமபுத்திரி, வைதரணி என்பவைகளில் ஸ்நானம் செய்தால் தாங்கள் செய்த எல்லா பாவமும் தீர்ந்து போம் என்னும் மூடநம்பிக்கையால் போய் மூழ்கி முக்தி பதவி சேரலாமென்று. இன்று வரை எண்ணற்ற மக்கள் தீர்த்தமாடி வருகின்றனர். இந்த நதிகளை தெய்வமாய் எண்ணி பூசை பலியிட்டு ஆராதித்து வணங்குகிறார்கள். இவ் அஞ்ஞானத்தை அகற்ற வல்லது, மெய்ஞ்ஞான ஆராய்ச்சி ஒன்றே என்பது, உத்தம பக்தர் கண்ட, உண்மை.

10. ஆயுத வணக்கம்.

ஆயுத வணக்கத்தை சர்வ தொளிலாளிகளும் ஆதரிக்கிறார்கள். வருஷத்திற்கு ஒரு தரம் ஐப்பசி மாதம், சுக்கில பட்சத்தில், பிரதமை துவங்கி நவமி வரையில், நவராத்திரி தினங்களில், தொழிலாளிகள் தங்கள் ஆயுதங்களையும், சுவடிகளையும் கொலுவில் வைத்து ஆராதித்து வணங்குகிறார்கள். கோவில்களிலும் கூட நவராத்திரி தினங்களில் கொலு நிறுத்தி, விசேஷ உற்சவம் நடத்தி வணங்கி வருகிறார்கள். இந்த வழிபாட்டிற்கு அர்த்தமேயில்லை. இது பக்தி சிதைவும் அஞ்ஞானமுமாகும்.

11. நவக்கிரக வணக்கம்

வானஜோதிகளும், நட்சத்திரங்களுமான ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கிரகங்களும், இருபத்தெழு நட்சத்திரங்களும், மக்களுக்கு நன்மை, தீமையை உண்டாக்கும் வல்லமை உள்ளதென்று பெரிதும் நம்பி, தெய்வங்களுக்குச் சமமாய் மதித்து, தங்கள் சுப, அசுப காலங்களில் மேற்படி கிரகங்களுக்கு, கிரக தேஷ நிவாரண பூசை செய்து ஆராதித்து வணங்குகிறார்கள். இவ்விதம் வணங்கும் பக்தி பழக்கம் முற்றும் மெய்ஞ்ஞானபக்திக்கு மாறானதென்பதை விளக்கும்.

திருமூலர் விருத்தம்

கழுதை மாடாடு பன்றி கடூரமாம் பாம்பு பல்லி
பழுதுள்ள மிருகந்தன்னை பாரபர மதுவேயென்று
முழுதுமே மதிகளற்ற மூடராம் மனிதர் கூடி
தொழுதிடுந் தெய்வமென்று சொல்லுவதெந்த நீதம்.

பேரின்ப மணி மாலை விருத்தம்

தனுகரண புவண போகங்களெல்லாந்
    தாழ்மைக்குப் பரஞ்ஜோதிதனை யுட்கொண்டு
அனுதினமும் போற்றி பேரின்பவீட்டை
    யடைய விரும்பாமலே யவனியுள்ள
மனு மிருகபட்சிதா பரசெந்துக்கள்
    மற்று முள பலப் பொருளை வஸ்த்து வென்று
தினமுமதை வணங்கின தாற் கதியுண்டாமோ
    சிறுவர் விளையாட்டி தெல்லாஞ் செப்புங்காலே

மக்கள் உள்ளத்தில் ஆழ்ந்து வேர் கொண்டிருக்கும். பக்தியின் ஆவல் மிகுதியால், பகுத்தறிவின்றி பொய் குருக்களின் வஞ்சகமான போதனைகளை நம்பி, மேலே வாசித்தபடி அழிந்து போகும் ஜீவன்களாகிய மனிதர், விலங்கினமான காட்டு, நாட்டு மிருகங்கள், பட்சிகள், மச்சங்கள் காலக்குறி காட்டும் விண்ஜோதிகள், நட்சத்திரங்கள், ஆறுகள், காற்று, இடி, மின்னல், மழை, கை ஆயுதங்கள், வாசிக்கும் சுவடி புஸ்தகங்கள் அனைத்தையும் ஓர் பராபர வஸ்துவுக்குச் சமமாய் மதித்து சிரம் குனிந்து, கரங்குவித்து, வணங்குகிறார்கள். இவை முற்றும் தெய்வநீதிக்கு மாறான பாவமும் தேவதுரோகமும் அஞ்ஞானமென்னும் அவ பக்தியும் ஆகும். மெய் ஞானத்தை சத்திய வேத நூலில் சொல்லுவது போல், ஆவலுடன் ஏற்று பரம்

பொருளை பக்தி செய்து வாழ்வதே மெய் அறிவின் மேன்மை. இப்பொழுதே இவ்வழியை கடைப் பிடிப்போர் வாழ்வு பேரின்பமும், நித்தியானந்தமும் நிறைந்துப் பிரகாசிக்கும்.

12. விக்கிரக வணக்கம்

பராபரவஸ்துவான தேவன், மனித ஜாதிகள், அவர் ஒருவரையே தொழுது சேவித்து முக்தி பெற பக்தி வழிபாட்டிற்கு ஆதாரமான, பத்து கற்பனைகள் (Ten Commandments) அடங்கிய கட்டளைப் பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கும்படி தந்தருளினார். இதன் உண்மையை விளக்கி, அகஸ்தியர் சொல்லியது.

அகஸ்தியர் ஞானம்

தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
  தெரிசிப்பாய் நெரிபத்தும் தெரிசிப்பாயே
பாடுவாய் பதினெட்டுப் புராணங்கட்டு
  பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்
நாடு தனிற் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
  நவக்கிரக கட்டப்பா நம்பவேண்டாம்.
ஓடுவாய் யருள் பாத பூசை செய்து
  உத்தமனே கண்ணீரால் கழுவாயே.

இப்பாடல், பதினெட்டுப் புராணமும், பாரதமும், பிராமணா, தங்கள் பிழைப்பின் மார்க்கமாய் செய்த பரிகாசங்கள் நிறைந்த வெறும் கட்டுரைகள், பத்து கட்டளைகள் உண்டு அதைகைக் கொண்டு, மனம் உணர்ந்து அறிவுடன் கர்த்தனை தொழுது பக்திசெய், என விளங்குகிறது.

தேவன் திருவுளம் பற்றின இந்த பத்து கட்டளைகளையும் சத்திய சாஸ்திரத்தில், காணலாம். இவற்றுள் முதல் கற்பனை :-

"உன் தேவனாகிய கர்த்தர் நானே என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாயிருக்கிற கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராய் இருக்கிறேன்.

''என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கோ, ஆயிரந் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராய் இருக்கிறேன், என்பது.

ஞான மார்க்கத்தின் பக்தி வழிபாட்டை வயிர் பிழைப்பின் ஆதாயத தொழிலாய்க் கருதினர், வஞ்சக் குருக்கள் பக்தி சுவாலை வீசும் உள்ளம் படைத்த, உத்தம ஆன்மாக்களை தம் வசப்படுத்தி, தேவன் அருளிய மெய் வேதாந்த நெறிமுறை விதிகளை முற்றும் மாற்றி, மெய் பராபரவஸ்துவாகிய பரம் பொருளை மக்களுக்கு மறைத்து, பஞ்சலோகங்களிலும் மரம், கல், சாந்து, முதலானவைகளிலும், ஜீவனற்ற பதுமைகளை உண்டாக்கி, வணங்கி வழிபடச் செய்தனர். இவ்வித மூட நம்பிக்கையை வழிபடும் பக்தி மார்க்கமாய்க் கொண்டோர், மக்களில் முக்காலே மூன்று வீசம் பங்காயிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இன்று மெய்ஞ் ஞானத்தை முற்றும் மறைத்து, எங்கும் வியாபித்துப் பெருகி வளரும் அஞ்ஞான மார்க்கமே இது. இவ்வித விக்கிரக வணக்க வழிபாடுகள் ஞானமார்க்கத்திற்கு முற்றும் முரணான வீண் பக்தி நிறைந்த அஞ்ஞான மார்க்கம் என்பதாய்க் கண்டு உணர்ந்த பூர்வ பக்தர்களாகிய ஞானிகள் இதை எதிர்த்துக் கண்டித்து, விரிவும், தெளிவுமாய், விளக்கிக் காட்டியுள்ள ஞான மார்க்க விரிவுரைகளை தொடர்ந்து கூர்ந்து கவனிக்கவும்.

குதம்பைச் சித்தர், 147-ம் பாட்டு

கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல்
புல்லறி வாகு மேடி குதம்பாய் புல்லறி வாகுமேடி

வேறு பாட்டு

பொய்ப் பொருளை விட்டு, புலமறிய வொண்ணுத
மெய்ப் பொருளை நாளும், விருப்புற்றுப் போற்றீரே
மெய்த் தேவனொன் றென்று வேண்டாத பன்மதம்
பொய் தேவைப் போற்று மேடி குதம்பாய் பொய்
தேவை போற்றுமடி

சிவவாக்கியர்

ஒசைப் பெற்றகல்லை நீர் உடைத்துருக்கள் செய்கிறீர்
பூசை பெற்ற கல்லிலே பூவும் நீறுஞ் சாற்றீர்
வாசலிற் பதிந்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
ஈசனுக் குகந்தகல்லிரண்டு கல்லு மல்லவே

ஈரமான பூவினோடிலை பறித்து வீணிலே
நீரை மொண்டு கல்லிலே நித்தம் விட்டு மாய்கிறீர்
காலமூல நாடியுட் கருத் தொடுங்க வல்லிராயச்
சீலமாக நாதனுஞ், சிறந்திருப்பானும் முளே.

நட்டு வைத்த தேவரும் நடாது வைத்த தேவரும்
சுட்டு வைத்த தேவரும் சுடாது வைத்த தேவரும்
இட்டு வைத்திடத்தை விட்டெழுந்திராத தேவரை
வட்டமிட்டு மாந்தர்கள் வணங்குமாறு யெங்கனே

நட்ட கல்லை தெய்வமென்று நாடி புஷ்ப பஞ் சாத்துறீர்
சுத்தி வந்து முணுமுணுனென்று சொல்லு மந்திரமேதடா
நட்டக் கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்டச் சட்டி சட்டுவங்கறிச் சுவையறியுமோ?

மாறுபட்ட மணி கிலுக்கி மலரிறைந்த வீணிலே
ஊறுபட்ட கல்லிலேயுருக்கள் செய்யு மூடரே
வேறுபட்ட தேவரும் விரும்புகின்ற உண்மையுங்
கூறுபட்ட தேது காண் குருக்கள் பூசை பண்ணுறீர்

சாவாதான தத்துவச் சடங்கு செய்யு மூடர்காள்
தேவர்கல்லு மாவாரோ சிரிப்பதன்றி யென்சொல்வேன்
மூவராலு மறியொனாத முற்றெழிற் பகாப் பொருள்
காவலாக வும்முளே கலந்திருப்பதுண்மையே

பாவானந்த சுவாமியின் ஞானக்கும்மி பாடல் 182

சொல்லினுங் கல்லினு நில்லாதே பிர்ம சோதியை
யாதியைத் தூய் வெளியை
வல்லதைத் தற்பிரகாச மவுனத்தை வகையறிந்து
கொள் ஞானப்பெண்ணே

சிவ வாக்கியர்

கருக், குவைப் பிடித்து வார்த்துக் கண்ட பஞ்சலோகமும்
உருக்கி வார்த்த நாத னென்றுலாவி விட்ட ரூபு தான்
உருக்கினாலுருக்கினு நருக்கினா னருக்கினும்
நருக்கினானருக்குமோ நாதமான சோதியை

செங்கல்லுக் கருங் கல்லுஞ் சிவந்த சாதிலிங்கமுஞ்
செம்மையுந்துருவையுந் தெய்வமென்று கூறுநீர்
உம்பரம் புகுந்த போதுவுமக்குணர் வறிகிலீர்
எம்பரம் புகுந்த நாதர் எங்குமாகி நிற்குமே.

சுட்டு வைத்த தேவருஞ் சுடாது வைத்த தேவரும்
நட்டுவைத்த தேவரும் நடாது வைத்த தேவருங்
கட்டிவைத்த தேவரும் கட்டவிழ்க்க வல்லவரோ
இட்டுவைத் திடத்திலே யிருப்பதன்றி யென்செய்வார்.

ஒருவ ஞேரிரும்பு கொண்டுருதறித்து வைத்ததில்
பெரிய பாவை பேசுமோ அறிவிலாத பேதைகாள்
கரியமாலு, அயனுமின்னுங் காஞெத கடவுளை
உரிமையாக உம்முளே உணர்ந்துணர்ந்து கொள்ளுமே.

பட்டினத்தார்

குருமார்க்கமில்லா குருடருடன் கூடி
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேனே

பட்டிணத்தார் குருமார்க்கமில்லாமல், கருமார்க்கமான விக்கிரக ஆராதனை பக்தியால், மெய்பக்தியறிவு கெட்டு அழிந்து போனதாய் அங்கலாய்க்கிறார்.

சிவ வாக்கியர்

பண்ணிவைத்த தேவரை பரப்பிவைத்திருந்து நீர்
எண்ணி யெண்ணி யென்ன நின்றுரைக்கிறீர்கள் யேழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்துவைத்தழிக்கவு
மொண்ணுமோ வுலகனைத்துமான சோதியொன்றலோ.

பத்திரகிரியார் புலம்பல் 13-ம் பாட்டு

உளியிட்டகல்லு முருப்பிடித்தச் செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவதெக்கலாம்.
கல்லிலேயும்,செம்பிலேயும்,
என் கருத்தை வைத்துப் போற்றாமல்,

சொல்லிறந்த பாழ்வெளியிற்
றூங்குவது மெக்காலம்.

அகஸ்தியர் ஞானம் 56-ம் பாட்டு

அண்டரண்டங் கடந்து நின்ற ஜோதி தானு
மவனி தனிலுடைந்த கல்லிலமருமோ சொல்
எண்டிசையும் எவ்வுயிருமான சோதி
ஈனமரங் கல்லுகளிலிருப்பாரோ தான்?
தொண்டர்களே யுங்களுக்கேனிந்த வார்த்தை
சொன்னவர்க்குங் கேட்டவர்க்குஞ் சொர்க்கமில்லை.
மண்டலத்தில் சற்குருவை வணங்கிநின்றால்
மாறாத பெருவாழ்வு வாழலாமே.

சங்கராச்சாரியார்

எத்தனை தான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன் தலைமுழுகித் தவஞ் செய்தாலுஞ்
சொல்லறிய பேரின்பந் தோன்றுமோ சொல்
பித்தர்களே கல்லுகளை விலைக்குவாங்கிப்
பிரானென்றே சீலையிலே முடித்துகொண்டு
செத்தபின்பு கயிலாசஞ் சேர்வோமென்றால்
சேர்வதில்லை எரிநரகஞ் சேர்வீர்தானே.

சற்குருவை யறியாமலுலகிலே தான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்ன புத்தி தன்னைக் கேட்டு
பூசை செய்து கற்களையே போற்றி செய்வார்
சொற்குருக்கள் தங்களுட செய்திகேட்டால்
சொற்கமுண்டோ நரகமல்லாற் சொல்லும் போது
சற்குருவையறிந்தவருக்குடனே மோட்சம்
சார்வரென்றே முன்னோர்கள் சாற்றினாரே.

சற்குருவை வணங்காமற்றள்ளிவைத்து
தனையறியா குருக்களையே சார்ந்துகொண்டு

பொய்க்குழியாம் நரகத்தில் வீழ்ந்து போகும்
புருடருக்குப் பொருளுரைத்தாற் புகழுண்டாமோ
கற்கருவாம் கல்லுகளைத் தொழுது நின்று
கைகட்டி வாய்புதைத்து கள்ளர்போல
வற்குருவாஞ்சமய மதஞ்சார்ந்து கொண்ட
வகையறியாப் புல்லருக்கு வண்மையுண்டோ.

சங்கராச்சாரியார் வேறு விருத்தம்

மண்ணிலே பிறந்தகல்லை வகை வகை தெரிந்தெடுத்து
எண்ணிலா லிங்கமாக்கியியல்புடன் கோவிற்கட்டிப்
பண்ணியேவைத்துப் பின்னும் பலபல பூசைசெய்தும்
விண்ணினிற் சேர்வதில்லை வீணிலே நரகில் வீழ்வார்.

சங்கராச்சாரியார் உடலறிவிளக்கம் 97-ம் பாடல்

வட்டமதியிரவிதன்னைப் பூசிப்போரும்
மண்ணை லிங்கமாகவைத்துப் பூசிப்போரும்
சுட்டவுரு மரச்சிலைகள் பூசிப்போருந்
தூய செம்பு கல்லுருவைப் பூசிப்போருந்
திட்டமுடனெட்டெழுத்துப் பொருளென்போரும்
சிறந்த வெழுத்தைந்துமே பொருளென்போரும்
விட்டவிடந்தனை யறியாரிவர் தாமெல்லாம்
விஷ்ணுவென்றுஞ் சிவனென்றும் விளம்புவாரே

சங்கராச்சாரியார் நாதாந்த விளக்கம் பாடல் - 95

கல்லுகளைத் தெய்வமென்றே சொன்ன பேருங்
காசியென்றும் சேதுவென்றும் முழுகினோரும்
தொல்லையாம் பூசைகளைச் செய்தபேரும்
சூதுகொலை பொய்களவு செய்தபேரும்
எல்லையில்லா எழுநரகந்தன்னில் வீழ்ந்து
எழுபிறப்புங் கல்லுகளாய் யிருப்பார்தாமே

பாடல் - 98

பண்ணிவைத்த கல்லுகளைப் பிரானுரென்று

பணிந்து வரும் பித்தர்களே பாவிகாணீர்
எண்ணி வைத்த படியாலே வருவதுண்டோ
எப்படியுமிப்படியு மிருப்பாரோ தான்
விண்ணில்வைத்த பொருளாலு முடலைக் கண்டு
வீஞன சற்குருவை விரும்பிப்போற்றி
ஒன்றி வைத்த சோதியுடன் கலந்துப் பின்னும்
ஓங்கார வீட்டிலே யொடுங்குவாரே

கல்லுகளைச் செம்புகளைத் திராக்கடம்மைக்
கனமான மரங்களையுந் தெய்வமென்று
சொல்லுகின்ற குருக்களுக்குஞ் சீஷர்மார்க்குஞ்
சொர்க்கமில்லை எழுநரகந்தானாய் நிற்பர்

பராபரன் மாலை 11-ம் பாடல்

வானுலகும் பூவுலகும் மற்றுலகுங் கொள்ளாமற்
ருனதாய் நின்றசருவ வியாபியுனை
ஈனமரங் கல்லி லிருப்பாயென்றெண்ணுவதுதஞ்
ஞான மூடர்களி னாட்டம் பராபரனே.

பட்டணத்துப்பிள்ளை பொது 6-ம் பாட்டு

உளியிட்டகல்லையு மொப்பிட்ட சாந்தையும் ஊத்தையற
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருத்துவதுண்மையென்று
வெளியிட்டுடைத்து வைத்தேனினிமேலொன்றும் வேண்டிலனே.

பேரின்ப மணி மாலை

அந்தரவான் கதிபுவணங்கீழ் மேலெங்கு
மடுக்கடுக்காய் நிறுத்தின வருரென்றெண்ணிச்
சிந்தையிலேயுணராமற் புவியிலுள்ள
சிலையதனைச் சுயம்புலிங்கத் தேவனென்று
புத்தியற்று பற்பல பூவெடுத்து நித்தம்
பூசை செய்து பலவிதமாய்ப் புகழ்வதெல்லாம்
எந்தை பரா பரர்க்கிவைகள் ஏர்க்குமோ தான்
எரி நரகப் பேய்க்கிணங்கு மென்பதாமே.

செம்பினால் மரத்தால் மண்ஞல்
சிலையினால் செங்கல் தன்ஞல்
பைம் பொன்ஞல், மெழுகால் நீற்றால்

படிகத்தாலுருப் படுத்தி
நம்பியே தெய்வமென்று
நாடோறுந் தொழுவோரெல்லலாம்
உம்பர் கோண் பதியிழந்து
உழலுவார் நரகில் தானே.

சிவ வாக்கியர்

தொழுமாதவத்துக் குறியோனை
சுருதி மறைக்குள் முடியோனே
நழுக விட்டால் நலமாமோ
நடுகனுனக்குத் துணையாமோ
கழுவிச் சிலைக்குப் பணியூட்டி
கர்த்தரிதுவே மெய்யென்று
இழவு மரத்தை திரள் கூடி
யாவருமினக் கெட்டிழுப்பானேன்.

சிவ வாக்கியர்

ஊரிலுள்ள மாந்தர்கள் ஒன்றதாகக் கூடியே
நேரிலே வடத்தைப் பூட்டி செம்பைவைத்திழுக்கிறார்
ஆரிலுமறியொண்ணுத ஆதிநாதகர்த்தரைப்
பேரில்லாத மாந்தர் பண்ணும் பித்தைப் பாரும் பாருமே.

முத்தானந்த சுவாமிகள் - ஞானமதியுள்ளான்
25-ம் தரு

கல்லைப் பிளந்து இரு சிலையாக்கிக் கண்ணுளர்
செய்து வைத்திருந்ததைக் கண்டிருந்தும்
எல்லைப் பிடாரி இது சிவலிங்கமென்று
ஏற்றித் தொழுவணல் லோபேயன் - நாஞடாபேயன்.

ஔவை வாக்கு வெண்பா

கூவியழையுங்கோ கூப்பிட்டு சொல்லுங்கோ
ஆவியுள்ள நாளெல்லாமாற் பரித்துப் - பாவிகாள்
கல்லோ தொழுகிறீர், கர்த்தாவொருவரை
யல்லோ தொழுவதடுக்கும்.

மேற்கண்ட பாடல்களின் உட்கருத்தை கூர்ந்து கவனித்தால், நமக்குமுன்னிருந்த தபசிகளும், ஞானிகளும், முனிவர்களும், நாம் அஞ்ஞானத்தில் மூழ்கி, நித்திய நரகில் வீழ்ந்து அழிவடையாது, மெய்ஞான

வழி சென்று, பராபரவஸ்து ஒன்றெனத் துதித்துத், தொழுதேற்றி, முக்தி சேரவே இவ்விதம் விளக்கிக் காட்டி யிருக்கிறார்கள், என்பது தெளிவு. இதைக் கருத்தில் கொண்டு, மெஞ்ஞானத்தை பொன், வெள்ளி, புதையல் தேடுவதிலும் மேலாய்த்தேடி, பரம்பொருளின் அருள் பெற்று வாழ வேண்டும்.

மக்களோ, மனதில் மாற்றமின்றி, அஞ்ஞானத்தையே தொடர்ந்து, வஞ்சகக் குருக்களின் மாருட்டமான வார்த்தைகளை நம்பி, மோசம் போகிறார்கள். சிருஷ்டிகர்த்தாவான, பரம்பொருள், ஒன்றிருக்க, பஞ்சலோகங்களாலும் மரம், கல், சாந்தினாலும் உருவாக்கிய சிலைகளைத் தெய்வமென்று பல பெயரிட்டு, அவைகளுக்குப் பொய்க்குருக்கள், கண்திறந்து ஜீவன் உண்டாக்குகிறோமென்று, பொய்பிதற்றி, எண்ணெய், சீயக்காய், இளநீர், எலுமிச்சைச்சார், தேன், கருப்பஞ்சார், தயிர், பால், தண்ணீர் கொண்டு கும்பாபிஷேகஞ்செய்து, ஆண், பெண், உருக்களுக்கு, ஆண்டி, குருக்களே குளிப்பாட்டி, தாதிபோல் வஸ்திரமும் உடுத்தி விடுகிறார்களே இவ்விக்கிரகங்களுக்கு ஜீவன் இல்லாமையால், இப்படி செய்யத் துணிகிறார்கள். இவ்வித ஜீவனில்லாத பதுமைக்கு சந்தனம், புனுகு, சவ்வாது, கந்தவர்கம் பூசி, மல்லிகை, முல்லை, மாலையிட்டு, கிரீடம், கலிக்தூரா, பதக்கம், சரப்பளி, குண்டலம், கங்கணம், அஸ்தகடையம், தோல்வளை, மேல்வளை, ஒட்டியாணஞ், சதங்கை, தண்டை, பாடகம். முதலிய, சகலவித ஆபரணதிகளையெல்லாந் தரித்து பரிசை, பட்டியம். அம்பு, வில், நேரிசம், கத்தி, கட்டாரி, ஈட்டி என்னும் ஆயுதங்களை அதன் கையிலும், இடையிலும் கட்டி, தூபதீபங்காட்டி சாஷ்டாங்க தெண்டனிட்டு, பொங்கல், புளியோதரை, எள்ளோதரை, ததியோதரை முதலான நைவேத்தியமிட்டு, யானை, குதிரை, சிங்கம், யாளி, புலி, ரிஷபம், பெருச்சாளி, சர்ப்பம், முதலை, கருடன், அன்னம், முதலிய வாகனங்களில் ஏற்றி, அவை ஆடி, அசைந்து விழுந்து, உடைந்து, பிண்டு, பிளந்து, போகாமல் இறுகக் கட்டி, தேர், மகமேரு, பரிவட்டந், தண்டிகை, என்னும் சப்பரங்களிலும் இருக்க வைத்து, தோட்களிலும் தலையிலும் சுமந்து கொண்டு சகல நடன உல்லாசத்துடன், மேள, தாளம், பேரிகை, டமை, கனகதப்பு, பம்பை, கைத்தாளம், மத்தாளம், பறை, பெருந்தப்பட்டை முழங்க, ஒத்து, நாதசுரம், தாளம், பூரிகை, எக்காளம், சங்கீத கோஷ்டியுடன் தேவதாசிகள், ஆடல் பாடல் நடனத்துடன், தீவட்டி, மத்தாப்பு, பாணம், வெடியுடன், வீதிவலம்வருகையில், தேவர், தேவிகட்குக் குடைபிடித்து, வெஞ்சாமரம், பலவித கொடி, விருந்துடன், வர வேடிக்கையாய் ஜனங்கள் கும்பல் கூடி தீவார்த்தனையிட்டு கும்பிடுகிறார்கள். ஐயோ! இதெத்தனை பரிதாபம், இந்தச்சிலைக்கு இட்ட இத்தனை சிறப்பையும், வேடிக்கை

நடனத்தையும், இந்த சிலை உருவுக்கு பார்க்க கண்ணுண்டா? பாடல் சங்கீத இசையைக் கேட்கக் காதுண்டா? சூடிய மலர்மாலை, வாசனையை மணந்தறிய மூக்கில் ஜீவசுவாசம் உண்டா? இத்தனை பெரும் செலவு செய்து, கண்விழித்து, உச்சவஞ் செய்யும் பக்தர்களைப் பார்த்து தம் கரங்களை நீட்டி ஆசீர்வதித்ததுண்டா? இல்லையே! இவைகளைக் குறித்து ஒரு வேதாந்த சாஸ்திரியார் சொன்ன கவி.

கழிநெடில்

வாயிருந்தாலும் பேசிடாதுமை

வலிய கண்ணிருந்து நோக்காது

வண்குருடதற்குச் செவியிருந்தாலும்

வார்த்தைக் கேட்டறிந்து கொள்ளாது

காயமோடிருகை உண்டெனுந்தொடாது

காலிருக்கினு நடவாது

கடிய மூக்கிருந்தும் முகர்ந்திடாதனின்

கண்டமும் ஓசை காட்டாது

தீயினிற் போட்டால் எரிந்தபோம் வைது

திட்டினும் பொறுமையாயிருக்குஞ்

செத்ததோர் பிணம் போல் வைத்திடங் கிடக்குந்

திருடன் வந்தெடுக்கினு மெடுப்பான்

நீயெனை விடுவி என்றறிவழிந்து

நீச வச்சிலைகளைப் பணியேன்

நின்னையே பணிவேன் என்னை யாண்டருள்வாய்

நித்தனே யேக நாயகனே

பக்த சிரோமணிகளே! அஞ்ஞானத்தை ஆராய்ந்து, உங்களைவிட்டு அகற்றுங்கள், மெய்ஞ்ஞானத்தையடைந்து ஜீவனற்ற பதுமைகளை, சுவாமியென்று மதித்து வணங்காது, பரம்பொருள் ஒன்றையே பணிந்து போற்றுங்கள். அதுவே என்றும் அழியா பேரின்ப செல்வமும், முக்தியிற் பெற்றனுபவிக்கும் பாக்கியமும் ஆகும்.

24

உலக சிருஷ்டியின் வரலாறு

இந்து சமயப் புராண காவியங்களில், உலக உற்பவம், மனிதர் உற்பவம், மற்றுள்ள ஜீவன்களின் உற்பவ வரலாற்றை தெளிவாய் அறிய முடியவில்லை. ஆனால் தத்துவத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது :- ''பராபரமாகிய பரமேசுரன் தராதலம் படைக்கத்தாம் நினைத்தருளிப் பராபரத்தில் பரந்தோன்றி, பரத்தில் சிவன் தோன்றி, சிவனில் சக்தி தோன்றி, சக்தியில் நாதந் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்துவில் சதாசிவன் தோன்றி, சதாசிவத்தில் மயேசுவரன் தோன்றி, மயேசுவரனில் ருத்திரன், தோன்றி, ருத்திரனில் விஷ்ணு தோன்றி, விஷ்ணுவில் பிர்மா தோன்றி, பிர்மாவில் ஆகாயம் தோன்றி, ஆகாயத்தில் வாயு தோன்றி, வாயுவில் அக்கினி தோன்றி, அக்கினியில் அப்பு தோன்றி, அப்புவில் பிருதுவி தோன்றி, பிருதிவியில் அன்னந் தோன்றி, அன்னத்தில் நாய், மிருகம், பட்சி, தாபர சங்கம், அனைத்தும் தோன்றிற்று''

பொருள் :- பராபரவஸ்துவான தேவன், உலகத்தை உண்டாக்க நினைத்து, தேவனால் உலகம் உண்டாக்கப்பட்டு, அதில் சிவன் உண்டாக்கப்பட்டு, சிவனிலிருந்து சக்தி என்றவள் உண்டாக்கப்பட்டாள் என்பதாம்.

சக்தியில் நாதந் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்துவில் சதாசிவன் தோன்றி, சதாசிவனில் மயேசுரன் தோன்றி, மயேசுரனில் ருத்திரன் தோன்றி, ருத்திரனில் விஷ்ணு தோன்றி, விஷ்ணுவில் பிர்மா தோன்றி, என்பதற்கு அர்த்தமேதென்றால் (சிவன் - சக்தி) புருஷனும், பெண்சாதியும் இருவரும் கூடினதே நாதமாம்; அந்த நாதமென்கிற வித்தாகிய விந்து விழுந்து, கர்பந்தரித்து, அந்த விந்து விழுந்த கர்ப்பத்திலிருந்து சதாசிவன் பிறந்தான். சதாசிவனுக்கு மயேசுரன் பிறந்தான், மயேசுரனுக்கு ருத்திரன் பிறந்தான், ருத்திரனுக்கு விஷ்ணு பிறந்தான், விஷ்ணுவுக்கு பிர்மா பிறந்தான் என்பதாம். இப்படியே ஆதியில் மனித சந்ததியை, தேவன் சிருஷ்டித்தார் என்பது தெளிவாகிறது.

இதை எடுத்துக் கொண்டால், தத்துவத்தின்படி, ஐந்து, தலைமுறைகளை மாத்திரம் காட்டியிருக்கிறது, அதுவுமல்லாமல், பராபரத்தில் (தெய்வத்தால்) பரந்தோன்றி (வானமும், பூமியும் உண்டாகி) பரத்தில் சிவன்தோன்றி, சிவனில் சக்தி தோன்றி, என்பதில், சிவனை, ஆதியில் உண்டான மனிதனாய் எண்ணுது, பராபரமாகவும், (தேவனாகவும்) சக்தியை ஆதி மனுஷியாய் எண்ணுது, தேவியாகவும், அர்த்தப்படுத்தியிருக்கிறது. இவ்வித மாறுபாடான அர்த்தத்தைப் பார்த்தால், இது முற்றும் தப்பிதமான தத்துவச் சிதைவெனச் சொல்லலாம். அதுவுமல்லாமல், மற்றுள்ள சிருஷ்டிப் படைப்புகளும் கூட நம்பத் தகுதியற்ற பொருத்தமில்லா முறையில் படைத்துள்ளதாய் காணப்படுகிறது. மற்றொரு இடத்தில் காசிபப் பிர்மாவின் பதின்மூன்று மனைவிகளில் முதல் மனைவியான அதிதி, முப்பத்து முக்கோடி தேவர்களையும், விஷ்ணுவையும் பெற்றதாகவும், மூன்றாவது மனைவி, மதி, மனிதர்களைப் பெற்றதாகவும், அப்படியே பதின் மூன்று மனைவிகளும், காணும் சகல சிருஷ்டிப் படைப்புகளையும் தங்கள் யோனிவழியாய் பெற்றதாகவும் காணப்படுகிறது. (ராமாயண வசன காவியம்) ஆரணிய காண்டம் சடாயுவைக்காணுதல். 114-ம் பக்கம்.

பிர்மாவின் முகத்தினின்று பிராமணனும், தோளினின்று க்ஷத்திரியனும், துடையினின்று வைசியனும், பாதங்களினின்று சூத்திரனும், பிறந்ததாய் யசுர் வேதம் அத். 31 : 11லும் அதர்வண வேதம் அத் 19 : 66லும்

எழுதப் பட்டிருக்கிறது. இவையல்லாது ரிக் வேதத்தில் மனித சிருஷ்டிப்பை பலவகையாய்ச் சொல்லுகிறது, அவற்றில் ஒன்று :

சுலோகம்

"வேதா நானுபயம் ஜனாப்ரவோ சாமவி, பன்னியா..

…. …. … …. …. … … அமிர்த பந்தவ

(ரிக் மண்டலம் 10. சூதகம் 72) காண்க.

பொருள் :- பிரமஸ்பதியாகிய தச்சன், தேவதைகளைச் செய்தான். தேவதைகளுடைய முன் யுகத்தில் இம்மையினின்றும், உண்மை தோன்றின. அவ்வுண்மையினின்றும், திசைகளும், பிறகு உத்தானபதமும் தோன்றின. அதினின்று பூமி உண்டாயிற்று. தக்ஷன் என்பவன் தோன்றினான். அவனிடத்திலிருந்து அதிதி, தோன்றினாள். அதிதியினின்றும் இறவாத் தேவர்கள் பிறந்தார்கள் என்பதாம்.

இவை அனைத்தையும் வாசித்துப் பார்க்கையில் இயற்கையின் அநுபவத்திற்கு மாறாய், நம்பத்தகாத பெருங் குழப்பத்தையுண்டாக்கும் மனித கட்டுரை போல் காணப்படுகிறது. இவற்றையே, வேதாந்த தத்துவமாய் பெரிதும் போற்றுகிறார்கள். இதில் எதை கடைபிடிப்பது, எதைக் கைவிடுவதென்று விளங்கவில்லை.

ஒருநாள் சிவன், தன் பெருவிரலின் நகத்தால் சக்தியின் துடையில் கீற, சக்தி வலிபொறுக்க முடியாது ஓ, என்றாளாம் அதற்குச் சிவன் அ - என்கவே, பின்னையும் சக்தி உ, என்றாளாம் இவ்விதமாய், இம் மூன்றெழுத்தும் பிறந்ததாம்.

இந்த (ஓ!) என்கிற எழுத்திற்கு, ஓம்பு, ரதமென்றும், அண்டமென்றும், உடல் மேல் தோலென்றும், விநாயகனென்றும், மூலமென்றும், ஊமை எழுத்து, சக்தி எழுத்தென்றும், விந்தெழுத்தென்றும் பொருள், அ, என்னும் எழுத்து சிவனைக் குறிக்கும், உ, எழுத்து, சக்தியைக் குறிக்கும், பின் ஒரு அர்த்தத்தில், (அ) லக்கம் எட்டும், (உ) லக்கம் இரண்டும், ஆகும். ஆக எட்டும், இரண்டும் பத்தாகும், இதுவே திருமந்திரமாம்.

வெணபா

ஓ, வெழுத்தே வித்தாய் உகாரமதில் வேரோடி
ஆ, வெழுத்திலே முளைத்து - அஞ்சு கப்பாய்
பூத்ததே வானம் புவனம் பதினாலுகங்
காய்த்ததே பஞ்சாட்சரம்.

முன் விளக்கியபடி ஓ, எழுத்தான, சக்தியே, வித்தாகி, உ, எழுத்தான சிவனில் கலந்து கூடி, ஆ, எழுத்தான சக்தியில் பஞ்சகர்த்தாக்கள் என்னும், ஐவரும் உண்டாகி, இவ்வைவராலும், மனு மக்கள் பெருகினார்கள் என்பதாம். தெளிவான நடையின்றி, மனிதர் விளங்கிக் கொள்ளமுடியாத வகையில், விபரீதமான அர்த்தத்துடன், இங்கும் அங்குமாய் சிருஷ்டிப்பைப் பற்றி எழுதியிருப்பதாய்த் தெரிகிறது.



25

ஐம்பத்தோர் அட்சர விளக்கம்

முந்தின பிரிவுகளில் விளக்கிக் காட்டியுள்ள பஞ்சகர்த்தாக்கள் என்பவர்களோடு, பின்னும் விக்கினேஸ்வரன், குரு என்னும் இருவரையும் சேர்த்து, இந்த ஏழு பேருக்கும் இந்த சரீரத்தில் ஏழு இடங்களைக் குறித்து, அத்துடன் தொன்னூற்றாறு தத்துவங்களும், ஐம்பத்தோர் அட்சரங்களும் உருவாக்கி, அவற்றை ஸ்தாபித்து வணங்கிவரும் கிரம வரிசையைக் கீழே காண்கவும் :-

51. அட்சர விளக்கக் கவி

நன்னிலஞ் சதிரம் நான்கு நாளிரு நாளிற் சோமம்

வென்னிய மூன்று கோணம், வாய்வுமே ஆறு கோணம்

மின்னிய வெளியே வட்டம் மெய் யென்பதிதுவே காணுந்

தன்னிலே பிறந்து பின்னுந் தன்னிலே யொடுங்குந் தானே.

பொருள் :- நன்னிலஞ் சதிரம் நான்கென்பது, புட்டம் நாளிரு நாளிற் சோமமென்பது, இரண்டாம் பிறை போலிருக்குந் தொப்புள், வண்ணிய மூன்று கோண மென்பது, நெருப்பு, வாய்வுமே ஆறு கோணமென்பது, காற்று, இது நெஞ்சென்றும் சொல்லப்படுகிறது. மின்னிய வெளியே வட்டம், மெய்யென்பதிதுவேகாணுந், தன்னிலே பிறந்து பின்னும், தன்னிலேயொடுங்குந் தானே என்பது, சிரசு என்று சொல்லப்படும்.

ஈறு செய்த மூலமதில் நாலதாகும்

மெண்ணரிய லிங்க மதில்லாறதாகுங்

கூறரிய நாபியிலே பத்ததாகுங்

குறிப் பெனுமுக் கோணமதிற் பனிரண்டாகும்

பேறு செய்த காலதனிற் பதினாறாகும்

பேசரிய லாடத்தே யிரண்டதாகும்

மாறிரியதோர் குருபதத்தி லொன்ற தாகும்

மன்னிய சீரட்சரங்களைம்பத் தொன்றே.

இதன் பொருள் :- ஈறு செய்த மூலமாகிறது மலம் வரும் வாய், இதுவே விக்கினேச்சுரன் இருக்கிற ஸ்தானம். இதற்கு நாலு எழுத்துக்களில் பூசை மந்திரம்.

எண்ணறியலிங்கமாவது, மூத்திரம் வரும் இடம், இது பிர்மா விருக்குமிடம். இதற்கு ஆறு எழுத்தில் பூசை மந்திரம்.

கூறறிய நாபியாவது தொப்புள், அது விஷ்ணு விருக்குமிடம். இதற்கு பத்து எழுத்தில் மந்திரம்.

குறிப்பெனு முக்கோணமாவது, மார்பு, இது ருத்திரன் இருக்குமிடம், இதற்கு பன்னிரண்டு எழுத்தில் மந்திரம்.

பேறு செய்தகாலாவது நெஞ்சு, மயேசுரன் இருக்குமிடம் இதற்கு பதினாறு எழுத்தில் மந்திரம், பேசறியலாடமாவது, நெற்றி இது சதாசிவன் இருக்குமிடம், இதற்கு இரண்டெழுத்தில் மந்திரம். மாறிரியதோர் குருபதமென்பது, உச்சி இது குரு இருக்குமிடம். இவருக்கு, ஒரு எழுத்தில் பூசை மந்திரம். ஆக ஏழு, ஸ்தானங்களிலிருக்கும், எழுவருக்கும் பூசை மந்திரத்திற்கு ஐம்பத் தோர் அட்சரமாயிற்று.

வாசகரே ! வாசிக்கையில் இவ்விளக்கங்கள், மக்களின் பக்தி வழிபாட்டில் அதை நம்பியவர்க்கு, என்ன தெளிவுண்டாக்குமோ? என அதிர்ச்சியும் அங்கலாய்ப்பும் உண்டாக்குகிறது. பரிசுத்த தேவர்களுக்கு தங்கும் ஸ்தானம் மனித சரீரத்தில் எங்கெல்லாம் நியமித்திருக்கிறார்கள் என்பதை கவனிக்கவும். இனி உள்ள தொண்ணூற்ரூறு தத்துவங்களையும் கவனிக்கவும். இவை மனிதனில் பக்தி உருவாக்கவே இப்படி எழுதப்பட்டுள்ளது.



26

தொண்ணூற்றாறு தத்துவ விளக்கம்

மனித சரீரத்தில் உள்ள தொண்ணூற்ருறு தத்துவங்களும் பின்வருமாறு :- பூதம் 5, தன் மாத்திரை 5, ஞானேந்திரியம் 5, கர்மேந்திரியம் 5, கரணம் 4, நாடி 10, அவஸ்தை 5, மலம் 5, குணம் 3, மண்டலம் 3, பிணி 3, விகாரம் 6, ஆதாரம் 6, தாது 7, வாய்வு 10, கோசம் 5, வாசல் 9, ஆகதத்துவங்கள் தொண்ணூற்ருறு ஆகும்.

இவற்றின் விபரம் பின்வருமாறு :-

பிருதிவி, அப்பு, தேயு, வாயு. ஆகாயம் 5-ம் பூதங்களாம்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் 4லும் கரணங்களாம்.

இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிருவி, அலம்புடை, புருஷன், குரு, சங்கினி 10ம் நாடிகளாம்.

சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், 5-ம் அவஸ்தைகளாம்.

ஆணவம், காமியம், மாயை, திரோதாயி, மயோயம் 5-ம் மலங்கலாம், சத்துவ, ரசோ, தமோ, 3-ம் குணங்களாம்.

அக்கினி, ஆதித்த, சந்திர, 3-ம் மண்டலங்களாம்.

வாதம், பித்தம், சிலேத்மம் (சைத்தியம்) 3-ம் பிணிகளாம்.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், 6-ம் விகாரங்களாம்.

மூலாதாரம், சுவாதிஷ்டாதானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி. ஆக்கினை, இவ்வாறும் ஆதாரங்களாம்.

இரதம், உதிரம், எலும்பு, தோள், தசை, மூளை, சுக்கிலம், 7-ம் தாதுக்களாம்.

பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் 10-ம் வாயுக்களாம்.

செவி 2, கண் 2, நாசி 2, வாய் 1, குதம் 1, குய்யம் 1, ஆக 9-ம் வாசல்களாம்.

இதற்கு திருஷ்டாந்தம் ஞானவெட்டி 49-ம் பாட்டு

மும்மலமுந்தரித்த தொரு வாசலொன்று
முடிகாணுலிங்கமொரு வாசலொன்று
நன்மையது சுவையறியும் வாசலொன்று
நலமான கேள்வி கொண்ட வாசல் ரண்டு
வண்மையுள்ள வாசமறி வாசல் ரண்டு
வளமான ரூபமறி வாசல் ரண்டு
அன்னமெனும் அம்பிகைப் பெண்ணருளினாலே
யறிவாலே யெடுத்தறிந்தக் காயமாண்டோ.

மேலும் இவைகளின் பொறிகளாவது :-

சுரோத்திரம், தொக்கு, கட்சு, சிங்குவை, அக்கிராணம் 5-ம் ஞானேந்திரியங்களாம்.

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் 5-ம் கர்மேந்திரியங்களாம்.

சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் 5ம் தன் மாத்திரைகளாம் இவையே

ஞானேந்திரியப்புலன்கள்.

வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் 5-ம் கர்மேந்திரியப் புலன்கள், கோசங்கள் என்றும் சொல்லப்படும்.

மேற்காட்டியுள்ள விளக்கம் யாவும் தொண்ணூற்றாறு தத்துவங்களினுள்ளடங்கியது.

இவைகளல்லாமல், தத்துவ சாஸ்திரத்தில், பின்னுமொரு விசேஷம், உலக சிருஷ்டிப்பைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அவை பின்வருமாறு :-

ஆதியிலே கடவுள் சகலதத்துவங்களையும் கடந்து, தனித்து நின்றபோது, அவருக்குள் ஓர் இச்சை உண்டாகி, அந்த இச்சையில் மாய்கையும், மாய்கையில் மகுத்துவமும், மகுத்து வத்தில், ஆங்காரத்துவமும் பிறந்ததாம். இவற்றில் நின்ற முறையே சாத்வீகம், ராசதம், தாமதம் பிறந்தது. இவை மூன்றும் குணங்கள்.

இம் மூன்று குணங்களிலிருந்து சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஐந்தும் பிறந்ததாம். சப்தத்தினாலே ஆகாசம் பிறந்தது. அதுதான் சதாசிவம். சதாசிவத்தில் வாயு பிறந்தது. அதுதான் மயேசுரன், மயேசுரனில் அக்கினி பிறந்தது. அதுவே விஷ்ணு, விஷ்ணுவில் பூமி பிறந்தது அதுதான் பிர்மா.

இவ்விதம் பஞ்சகர்த்தாக்களாகிய, பஞ்ச பூதங்களினாலே, விஷ்ணுவின் உந்திக் கமலத்தில் பிர்மா பிறந்து, பிர்மாவின் சரீரத்திலிருந்து சகல ஜீவராசிகளும் பிறந்தன, வென்றுஞ் சொல்லி இருக்கிறது. இதற்கு விளக்கம் தரும்கவி.

இருக்கின்ற வெளியது தான் சிவமதாகு
மியல்புள்ள வாய்வதுமே மயேசனாகுஞ்
சுருக்கி நின்ற ரவியதுவே ருத்தினாகுஞ்
சுருக்கமுள வப்பதுவே மாலதாகும்
குருக்கின்ற பிரிதிவியே பிர்மா வாகிக்
கோடிமறை வேதமதாய்ப் பிரிந்தநாதன்
பெருக்குகின்ற வுலகமெல்லாந்தானே தானாய்ப்
பிர்மாவாய் நின்றவகை பேணிப்பாரே

மேலும் இவ்வைந்து பூதியங்களையும் ஐந்து லிங்கங்களாக்கி,

காஞ்சியில் பிருதிவிலிங்கம், திருவானை காவலில் அம்புலிங்கம், திருவண்ணாமலையில் தேயுலிங்கம், சீகாதையில் வாயுலிங்கம், சிலம்பரத்தில் ஆகாயலிங்கத்தையும் வைத்து வணங்கி வருகிறார்கள்.

மனித சரீரத்தில் மலங்கழியும் வாயில் விக்கினேசுரனையும், மூத்திரம் கழிக்கும் வாயில் பிர்மாவையும், தொப்புளில் விஷ்ணுவையும், மார்பில் ருத்திரனையும், நெஞ்சில் மயேசுரன், நெற்றியில் சதாசிவன், உச்சியில் குருவுக்கும் ஸ்தானமிருப்பதாய் மாருட்டமாய் போதித்ததுமன்றி, சரீரத்தின் ஐந்து பஞ்சபூதங்களையும் ஐந்து லிங்க உருவாக்கி வெவ்வேறு ஐந்து க்ஷேத்திரங்களில் வைத்து வணங்கவும் செய்திருப்பது தெய்வ ஞானத்திற்கு பொருந்தியதா? வாசகர்களே உணர்ந்து அறியுங்கள். இதெல்லாம் பராபரவஸ்துவாகிய தெய்வம் தங்கும் ஸ்தலமாக ஆக்குவது மெய்ஞானமாகுமா? லிங்கபூசையைப் பற்றி சங்கராச்சாரியார் விளக்கம் கீழே காண்க.

உடலறிவிளக்கம் 37, 38-ம் பாட்டு

வட்டமதி யிரவித்னைப் பூசிப்போரும்
மண்ணை லிங்கமாக வைத்துப் பூசிப்போருஞ்
சுட்டவுரு மரச்சிலைகள் பூசிப்போருந்
தூய செம்புக் கல்லுருவைப் பூசிப்போருந்
திட்டமுடனெட்டெழுத்துப் பொருளென்போரும்
சிறந்த வெழுத்தைந்துமே பொருளென்போரும்,
விட்ட விடந்தனை யறியாரிவர் தாமெல்லாம்
விஷ்ணுவென்றுஞ் சிவனென்றும் விளம்புவாரே.

கருவிருந்த தலமறியார் புரவியொன்று
கால்கள் பனிரண்டறியார் கருத்தினுள்ளே
அருவியெழுங் குளமறியார்க் குளத்தி
லாயிரத் தெட்டிதமறியார் அவ்வும் உவ்வும்
உருகியடி முடியாகியஞ் செழித்து
முணர்த்தி நிற்கும் வாறறியார் ஒடுங்கும் போது
வெருவியெழுங் கனவொடுக்க மறியாரெல்லாம்

விஷ்ணுவென்றுஞ் சிவனென்றும் விளம்புவாரே.

இவ்விதம் பகுத்தறிவின்றி சகலத்தையும் பரம்பொருளாய் மதித்து ஒன்றான தெய்வத்திற்குச் செலுத்த வேண்டிய கனம் மகிமை, துதி தோத்திரங்களை பஞ்சபூதங்களுக்கும், அவைகள்பேரால் ஆக்கப்பட்ட ஊமை விக்கிரகங்களுக்கும் செலுத்தக்கூடாது. அது தேவனுக்கு மாறான அருவருப்பும், அஞ்ஞானமும் ஆகும்.

நீதிவழுவாத சத்தியவேத சாஸ்திரத்தில் பராபரவஸ்துவாகிய ஒன்ருன சிருஷ்டிகர்த்தா உலகத்தையும், அதிலுள்ள சகல ஜீவன்களையும், மனிதர்களையும், மற்றும் காணப்படும். சகல படைப்புகளையும், ஆறுநாளுக்குள் உண்டாக்கியதாய் எழுதப்பட்டிருப்பது; சர்வமும் பொருத்தமாய் இருக்கிறது. அதாவது, பராபரவஸ்துவே மனிதனை மண்ணினால் உருவாக்கி தமது ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலூதினார். மனிதன் ஜீவாத்துமாவானான். பின் மனிதனுக்கு அயர்ந்த நித்திரை வரப் பண்ணி அவன் விலாவெலும்பில் ஒன்றை எடுத்து ஒரு பெண்ணுருவை உண்டாக்கி, இவர்கள் இருவரையும், புருஷன் மனைவியான குடும்பமாய், (இந்த ஆதித் தகப்பனையும், தாயையும்) பராபரவஸ்துவானவர் ஒரு சிங்காரமான பூந்தோட்டத்தில் வைத்து சில நிபந்தனைகளைக் கைக்கொள்ளக் கட்டளையாக் கொடுத்தார்.

ஆதியில் பராபரனுக்கு ஏவல் சேவை புரிந்து வந்த அரூபிகளாகிய தேவதூதர்களில் பலர் அவருக்குப் பிரீதியற்ற நிலையில் பெருமைக்கிடங்கொடுத்து ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாததால், அவரால் சாபத்துக்குள்ளாகி, பிசாசாய் அலைந்து கொண்டிருந்தார்கள். திருஷ்டாந்தம். (அகஸ்தியர் ஞானம் 30-ல் 5-ம் பாட்டு)

அகஸ்தியர் ஞானம் 30-ல் பாடல் 5

அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று
ஆங்காரந் தானெடுத்து வகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக்குளிக்குனின்று
நித்தியமு மானிடரை மோசம் போக்கிப்
பலகலையுமுணராதிவை மயக்கித் தங்கள்
பாதாளவிடத்திலே பதங்கச் செய்யு
நிலையதையே யறியாமற் போருர் போருர்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாயத் தானே.

இப்படித் தங்கள் பராபரனால் சாபம்பெற்று, கெட்டு பிசாசான அரூபிகள், பூங்காவிலிருந்த ஆதி மனிதரையும் தம் நயவஞ்சகவார்த்தையால், தேவன் அவர்களுக்குச் சொன்னதற்கு மாறாய், பொய்யாய்ச் சொல்லி, நம்பவைத்த காரணத்தால், ஆதிமனிதரும் தேவனுக்குத் துரோகிகளும், பாவிகளுமாய்ப் போனார்கள். தேவன் இவ்விரு ஆதி மனிதரையும் கூட சபித்ததால், இவர்களும், இவர்களால் ஏற்பட்ட உலகத்தில் உள்ள மனித சந்ததிகள் யாவும் பாவிகளாகி, சாவுக்கும், சகல நோய்க்கும், நரகத்திற்கும் தங்களை பாத்திரர்களாக்கிக் கொண்டார்கள். அதுமுதல், தேவகோபமும், பாவமும், பிசாசின் வல்லமையும், மரணமும், தொடர்ந்து மனித ஜாதிகளை நரகத்தின் மக்களாக்கக் காரணமாயிற்று. மனிதன் தேவசாயலையும், நீதி, தூய்மை, யாவுமிழந்து, மெய்ப்பக்தி யற்று அஞ்ஞானத்திற்கு அடிமையாகி பாவியானான். இரக்க மிகுந்த தேவன் பாவ உலகத்திற்கு, மீட்பு உண்டாக்கி இரட்சிக்க, பரிகாரியாக ஒரு இரட்சகனை அனுப்ப வாக்களித்திருந்தார்.



27

ஞானநூல் மறைவு

உலகிலே பிறந்த முன்னோர் ஓதிய கலைகளெல்லாம்
நிலையதாம் சோதிதன்னை நிசமதாய் சொன்னதில்லை
பல பல பேதமாகப் பங்கமாய்க் கூறுசெய்தே
அலகைபோல் பொய்யைப் பேசி அருநரகழுந்திப் போனார்.

பொருள் :- உலகில் உள்ள முன்னோர்கள், போதித்த உபதேசங்களில் நித்திய பராபரவஸ்துவான தேவன் ஒன்று உண்டென்று உண்மையான முறையிற் போதியாமல், பழிப்பு, பரிகாசங்களுக்கேற்ப பலவகை மாறாட்டமாய்ப் பிசாசைப் போல், பொய் உபதேசங்களைச் சொல்லி, நரகில் வீழ்ந்து மூழ்கினார் என்பது.

கவி

கல்வியைப் பெருமையாகக் கதறியே திரிவார் புல்லர்
சொல்லிய ஞான நூலின் சூட்சத்தையறிய மாட்டார்

வல்லவர் நாங்களென்று வாதுகள் மிகவே பேசி
எல்லையில்லாத கன்மத் தெய்தியே மூழ்குவாரே.

பொருள் :- சிற்றறிவுபடைத்தோர், கட்டுரையும், பலனற்ற புராண காவியங்களுமான மற்றக் கதைகளைப் பெரிதும் போற்றிப், பெருமையாய்ப் பேசி, மெய்ஞ்ஞானநூலின் மெய்க் கருத்தறியாது, நாங்களே, வேதாந்தத் தெளிவு கண்டவர்கள் என தர்க்கவாதந் தொடுத்துப் பேசி, பல கர்ம பாவங்களையும் செய்து நரகில் ஆழ்ந்து மூழ்கிப் போவார்கள் என்பது.

கவி

சத்திய ஞான நூலின் சாடையை யறியாமூடர்
வித்தைகள் மிகவுங்கற்று வீணரா யிறந்து போனார்.
அத்தனை பெருமையாக யவனியிலறியச் சொல்லி
முக்தியை யறிவார் இல்லை மூடர்க்கு மோட்சமுண்டோ?

பொருள் :- எத்தனையோ தெளிவாக ஞானநூலின் சத்தியத்தை, விவரித்துச் சொன்னாலும், உலகபரம்பரை, பழக்க வழக்க, முன்னேற்ற கல்வி, வித்தைகளைக் கற்று, வீண் காலம் கழித்து, புத்தியற்றவர்களாய் முக்தி வழியறியாமல் மூடராய்ப் போனார்கள். இவர்கட்கு மோட்சம் உண்டோ? என்பதாம்.

நீதி வழுவாத சத்திய வேத விதிமுறைகளைத் தேடி ஆராய்ந்து சதத்திய ஞான நூலாகிய மெய் வேதாகம வெளிச்சத்தில் நடந்து, முக்தியைத் தேடாவிட்டால் முடிவு பரிதாபமே! ஞானநூலாகிய வேதாகம ஞான வெளிச்சமில்லாது, மறைவுபட்டால், அஞ்ஞான இருள் மூடும். மெய்ஞ்ஞானத்தைக் கண்டு, நீதியின் கிரியைகளைச் செய்து, பக்தியைப் பூரணப்படுத்துங்கள்.

நீதி வழுவா சத்தியவேதத்தில் : ஞானமே, முக்கியம் ஞானத்தைச் சம்பாதி, என்றும், ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள், அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது. முத்துக்களைப் பார்க்கிலும், அது விலையேறப்பெற்றது. நீ இச்சிக்கத்தக்க தொன்றும் அதற்கு நிகரல்ல. அதின் வலதுகையில் தீர்க்காயுசும். அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது. அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகள் எல்லாம் சமாதானம், என்று சொல்லப்பட்டிருக்கிறது. சத்திய ஞான நூலாகிய சத்திய வேதாகமத்தை வாங்கிக்கருத்துடன் வாசித்து, பரம்பொருளான ஒன்றான பராபரவஸ்துவைத் தொழுது சேவியுங்கள்.

28

சொற்குருக்கள் லட்சணம்

மெய்பக்தி வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ளது குரு உபதேசம். முன்னிருந்த ஞானிகள், தவசிகள், வேதாந்திகள், மெய்ஞ்ஞான வழிகாணுது, பொய்க் குருக்களின் மாயமான போதனையில் சிக்குண்டு, ஒன்ருன பராபரவஸ்துவின் நிலை காணுது, போனோமே என்று அங்கலாய்த்து, அலைந்து தேடி பரமனருளால் ஞானத்தைக் கண்டபின், பின் சந்ததியாராகிய நாம் நமது பக்தி வளர்ச்சியில், சிதறுண்டு அவர்களைப் போல் அலையாது, பூரணமடைந்து நிலைத்தோங்கி வாழ பொய்க் குருக்களின் லட்சணங்களை திட்டந்தெளிவாய் விவரித்து எச்சரிப்பதைக் கீழேயுள்ள பிரிவுகளின் பாடல் மூலம் விளங்கிக் கொள்ளவும்.

பட்டினத்தார் பாடல்

குருமார்க்க மில்லா குருடருடன் கூடி
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்து
கெட்டேனே.

பக்தியைப் போதிக்க பல சமயங்களும், போதனைகளும் போதக கர்த்தாக்களுமிருந்தாலும், மெய்ப்பக்தர்கள் தங்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியால் இரண்டே மார்க்கங்களென தெளிவாய் விளக்கியிருக்கிறார்கள். ஒன்று குருமார்க்கம், இது ஆதிமுதற்கொண்டு ஞானத்தின் ஆவியால் நிறைந்த தெய்வத் தொண்டர்கள் பராபரவஸ்துவின் திருவாய் மொழிந்த உத்தம ஞானபோதனைகளையும், நீதி நியாயங்களையும் கேட்டு, சாதித்து, மக்களுக்குப் போதிக்கும் மார்க்கம். இது பரம் பொருளையே தங்களுக்கு ஞானகுருவாய் கொண்ட குரு மார்க்கம்.

மற்றொன்று, **கருமார்க்கம்**, இது மனக்குருடரான, பொய்க்குருக்கள், மெய்ஞ்ஞான குருவான பராபரவஸ்துவின் ஞானபோதனைகளுக்கும், நீதி நியாயங்களுக்கும், மாறாட்டமாய், ஜீவனற்ற உருவங்களை தெய்வமாக்கி, மக்களை நம்பச் செய்து, போதிக்கும் மார்க்கம். ஆகவே மக்கள் சற்குருவின் போதனையிலும், பொய்க்குருக்களென்றும், சொற்குருக்கள் அல்லது, கற்குருக்கள் போதனையிலும், இருபிரிவாய் பக்தியில் வளர்ந்து வருகிறார்கள்.

பொய்க் குருக்களான சொற்குருக்கள் போதனை, சுய இஷ்டமான ஆராதனையை, அடிபீடமாய்க் கொண்டிருப்பதால், அதன் கூட்டம் பெரிதும் அவபக்தி மலிந்து, நிறைந்து, காணப்படும்.

சற்குருவின் போதனாசாரங்கள், நால்வகை லட்சணம் பொருந்தியதாய், 1-வது மீனைப் போலும், 2-வது ஆமையைப் போலும், 3-வது பறவையைப் போலும், 4-வது குளவியைப் போலும், குணசீலம் அமைந்து வளரும்.

உலகக் குருக்களான பொய்க்குருக்கள் போதனாசாரங்கள். வித்வானைப் போலும், வேசியைப் போலும், வியாபாரியைப் போலும், ராஜாக்களைப் போலும், சீலமற்ற, நால்வகை லட்சணம் பொருந்தியதாய் இருக்கும்.

அவை : 1-வது, வித்வானைப் போல், தங்கள் பை, நிரம்பப் பணங்கொடுப்போரை உலகக் குருக்கள், தேவனுக்கும், ராஜனுக்கும், சமமாய்ப் புகழ்வர், பணம் கொடாதோரை நாயென்றும், பேயென்றும், லோபியென்றும், பாவியென்றும் நிந்தித்துப் பழிப்பார்.

2-வது வேசிகளோ, பணம் கொடுக்கும் எந்த இழிகுலத்தானையும் நேசிப்பார், பணம் கொடாத எந்த உயர்குலத்தானையும் பகைப்பார். **இவ்விதமே உலககுருக்களும் செய்வார்.**

3-வது வியாபாரிகள், கால்காசு ஆதாயந்தரும் சரக்கென்றால், காதவழி என்றாலும், போய் நடந்து வாங்கிவருவார். உலகக் குருக்களும் ஆதாயமென்றால் எண் காதமென்றாலும், எட்டடி நடந்து போய்ப் பார்ப்பார்.

4-வது ராஜாக்களைக் காண காணிக்கை வைத்துக் கண்டு கொள்வது போல், உலக குருக்களையும், பலவித காணிக்கை வரிசைகளுடன் காண வேண்டும். இவ்வித லட்சணம் பொருந்தியோர் எப்படி மக்களுக்கு உண்மை நிலை கண்டு வாழ, மெய்ஞ்ஞானத்தைப் போதிக்க முடியும். தன்னையும், தன்னை உண்டாக்கின பரம்பொருளையும் அறியாத குரு, மாற்றானுக்கு குரு உபதேசமளித்து, சிருஷ்டி கர்த்தன் ஒருவன் என்று எப்படி காண்பிக்கக்கூடும்? இராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும், தீட்சை தரும்போது, நீங்கள் குடிகளை நீதியாய் ஆண்டு, நாட்டை சேமமும், சிறப்பும், சந்தோஷமுமாய் நடத்துங்கள் என்று போதியாமல், தங்களுக்குப் பல்லக்கு, பதஷ்டை, காணி பூமி, நாடு, நகரம், ஊர், உம்பளிக்கை, ஏர், பயிர், வசதி உண்டாக்கி வைக்க முதல் அடிகோலுவர். நீங்கள் பாவத்தை வெறுத்து, புண்ணியம் செய்து, சிருஷ்டி கர்த்தா ஒன்றை அறிந்து வணங்குங்கள் என்று சொல்வதுமில்லை. கள்ளருக்குத் தீட்சை தந்தாலும், கொலை, கொள்ளை, தீமை செய்யப் போகாதே என்று போதியாது, கொள்ளையிற் பாதி நல்ல வஸ்துக்களை காணிக்கையாய்க் கொண்டுவர மறவாதே, இல்லையேல், கொள்ளை சிக்காதென்பார். இவ்வித ஞானமில்லாத தந்திரமார்க்கங்களை தன் மனதில் வைத்து வேஷத்தில் குருக்களைப் போல் காண்போர் பலர். இவர்கள் லட்சணக்குருக்களைப் போல் காண்போர் பலர். இவர்கள் லட்சணக்குறிகளைக் கண்டு, விலகி, மெய்ஞ்ஞானத்தைக் கடைப்பிடிப்பதே அறிவின் மேன்மையும், மெய்ப்பக்தியின் உண்மையுமாகும்.

பட்டணத்துப் பிள்ளை கவி

கழுதை மதந்தனிலுழன்று கவடுகளை மிகவோதி
உழுது பிழைக்க வறியாத ஊமைகளைக் குருவென்றும்
புழு நரகு சக்திதனிற் புழுக்கூடாய் விழுந்தது போல்
இழுதை மதியாயிருந்தும் இவர்கள் வலைப் புகுந்தேனே.

பட்டனத்தார், தமது முந்தின பாடலில், குருமார்க்கமில்லாத குருடர்களான விக்கிரக ஆராதனைக் காரருடன் கூடி என் மெய்ப்பக்தியழிந்து கெட்டுப் போனேன் என்றார். இந்தப் பாடலில், காமிகளாய் மதத்து விகாரங்கொண்டு, வஞ்சகப் போதனைகளையும் உபதேசித்து உழுது

பிழைக்கும் வழியறியாத ஊமைகளைக் குருவென்று நம்பி புழுநரக சேற்றில் புழுக்கூடு விழுந்தது போல், பொய்க்குருக்கள் வலையில் சிக்கிக் கொண்டேனே என்று பரிதாபத்துடன் அங்கலாய்க்கிறார். வாசகரே! உமது அநுபவத்தில் இவ்வித ஆராய்ச்சி செய்து அங்கலாய்த்தது உண்டா? உடன் ஆராய்ந்து சற்குருவைக் கண்டு பொய்க்குருக்களை விட்டு விலக இதுவே ஏற்ற தருணம்.

நாதாந்த சாரத்தில் விருத்தம்

உலகிலே குருக்களென்றே உவமைகள் மிகவுங் கற்றுப்
பலபல பேர்களுக்குப் பதவிகள் கொடுப்போமென்றும்
அலகை போற் பொய்யைப் பேசியரு நரகழுந்திப் போவார்
நலமிகும் பரம வீட்டினாதனைக் காணமாட்டார்.

அஞ்செழுத்தென்று சொல்லி யவனியிற் போதிப்பார்கள்,
வஞ்சகக் குருக்கள் மார்கள் வகையையானென்ன சொல்வேன்
அஞ்செலுத் தனை காணுரதனுட சுருபங்காணு
இன்சொலாற் பொருட் பறிக்கு மிப்பந்தி மூடர்தாமே.

பூசிய நீறு தானும் புரிசடை வேடந்தானும்
பாசியல் மெத்த பூண்டு பாதத்திற்குரடுந்தொட்டு
நேசமாய் சிரசிற் சீலை நிறையவே சுற்றிப் பின்னும்
மாசில்லா குருக்களென்றே மயங்குவார் மூடர்தாமே.

வேறு விருத்தம்

எட்டெழுத்தும் இரண்டெழுத்துமறியா மூடர்
யாங்கள் முன்னுங் குருக்களென்று பெயருஞ் சொல்லி
சட்டமிட்டு வுலகிற் குற்றந் தீர்போமென்று
சாற்றறியார் பேர்களுக்குச் சாரமேது
வட்டமிட்டு வுலகு தனிற்றிரிந்து பின்னும்
வாய்க்கரிசி கிடையாமல் வறுமையாகி
சீஷர்கள் தம் வாசலிற் போய்த் தூங்குவார்கள்
செகந்தனிலே குருப்பேய்கள் செயலிதாமே.

கருப் பேய்கள், கரப் பேய்கள் காமப் பேய்கள்
கன தனத்து பொருட்பேய்கள் கருணையில்லா
மருட் பேய்கள், மனப்பேய்கள், வசனப் பேய்கள்
வண்மையில்லா குலப் பேய்கள் 'வாது கூறும்

இருட் பேய்கள் சமயமத மேத்தும் பேய்கள்
இயல்பிலா மந்திரங்களியம்பும் பேய்கள்
குருப் பேய்கள்' தங்களுட பெருமை தன்னை
குவலயத்தில் கூறுவது குற்றந்தானே.

குருக்கள் மாரென்றுரைப்பார் பொருளுங் காணர்
குவலயத்திலுப தேசங் கூறிநிற்பார்
மருட்களாய் சீஷனுக்கும் பொருளைச் சொல்வார்
மாசற்ற ஜோதியுட வடிவைத் தேற்றார்
பொருட்களாம் போத மொரு சற்றுமில்லை
பொய்களே மிகப் பேசி பொருள் பறிப்பார்
அருட்களா யாகமதத்தினடைவு காணர்
அறிவில்லா குருக்களென்றே யறியலாமே.

அகஸ்தியர் ஞானம்

பாட்டு - 85

கொள்ளாமற் பூதலத்தின் ஞானியெல்லாங்
கூறுடனே ஞானமெல்லாம் வந்தாற் போல
உள்ளான உதரத்தின் பசியாலார்க்கு
முச்சிதமாய் பேசியவர்க் குண்மையாகக்
கள்ளாண்மையே யுரைத்துப் பசியைத் தீர்த்துக்
காலிலே குறடிட்டு நடப்பான் மட்டை
யள்ளிய தோரன்னமே தான மென்பான்
னதினாலே சொற்கம் வருமெனச் சொல்வானே.

பாட்டு - 86

சொல்வதற்குப் பயந்து பக்தர் சோறு போடத்
துணிந்திருந்து தின்பான் காண் சவத்தைப்போலே
வெல்வது போற் புலித்தோலை விரித்துக் கொள்வான்
வேடங்கள் காதிலிட்டு வெறும் பிலுக்குச் சொல்லி
கல்மனதோர் தமைக் கரைத்து வுதர சீவன்
கட்டாக வளர்ப்பனென்றே யலைவானாய் போற்
சொல்வதொரு மெஞ்ஞானக் குருவைத் தேடான்
தெருக்கடோறு நாய் போலே திரிவான் பாரே.

பாட்டு - 87.

திரியாமல் ஞானியருக் கிவிடமென்று
தெருப்பிரித்தங் கிருக்கிறதோ யில்லை யில்லை
நரியினுட கொம்பு வைத்து மழுப்பிப் பேசி
நாட்டரச - நா னென்ற பெயருமிட்டு
குருவென்றே வுப தேசங்கற்ஞோர் போலக்
குருடாகச் செத்தெழுத்தை யுபதேசிப்பான்
அருளான பேர் போல தீட்சை என்பான்
அம்பரத்தைக் காணுத அசடன் தானே

பாட்டு - 88

தானே தான் குருக்களென்பான் பணங்கள் வாங்க
சதாசிவன் தான் வந்தாற் போற் பூசை செய்வான்
ஊணுள்ளோர் தங்களைத் தான் மயக்கிப் பூசை
ஒரு மணி போலெட்டு மணி யடிப்பான் மட்டை
மானார்கள் தங்களைத் தான் கழுத்தைக் கட்டி
மாழுவான் பாழ்குளியை நம்பிக் கொண்டே
ஏன் காணு மிதினாலே வருவதேதோ
எட்டு மிரண்டறியாத முகடன் தானே.

பாட்டு - 89

முகடனென்று சொன்னாக்காற் கோவிப்பான் கேள்
மூதேவியின் பேச்சை மொழிய வேண்டாம்
அகடிதங்கள் அவன் தானுஞ் சொல்லாவிட்டால்
அவனுக்குசீவனெங்கே நடக்குமப்பா
விகடிதமாய் மொழிந்தாக் கா லவர்க்கு மப்போ
மென்மேலும் பணங்கள் வரும் பெண்டீர் பிள்ளை
சுகமாக வாழ்வதாய் மாண்டு போவான்
துறைகாணு மடையனென்னுஞ் சொக டன்ருனே.

சங்கராச்சாரியார் நாதாந்த விளக்கம்

பெற்றவரைக் கற்றவரைப் புறம்பு பேசி
பெரியவர்கள் நாங்களென்று பெருமை சொல்லி
உற்ற பொருளறியாமலூமை போலே
யுலகு தனிற் தன்னை சொல்லி யுழல் வார் சாலக்
கற்ற குரு பொருளறிந்து சீடனுக்குக்
கரையேற்றங் கொடுப்பதுண்டோ - கசடனாரே

உற்ற குரு வறியா மலுலகிலேதா
முழன்று திரியுலுத்தர் களுக்குண்மை யுண்டோ.

வேறு விருத்தம்

ஞானிமார் என்று சொல்வார் நாதாந்த வீட்டைக் காணார்
ஞானிமார் தாங்கள் போலே நலமுடன் பூசை செய்வார்
யோனிமார் தங்கள் முன்னே யுழலு வாருளுலுத்தரெல்லாம்
ஞானிமாரென்ற பெயரேன் நரகிற் போவோர்க்கு வீடேன்
ஞானிமாரென்று சொல்வீர் நாய்களே வணங்கிக் கேளீர்
ஞானிமாரென்று சொல்வீர் நாதாந்த வீடு காணீர்
ஞானியாம் நாதன் பாதம் நலமுடன் வணங்கிக் கேட்டால்
ஞானியாம் பெயருமுண்டாம் நாதாந்த வீட்டிற் சேர்வீர்.
நாதாந்த வீட்டைக் கண்டோர் ஞானியென்றுரைக்க லாகும்
நாதாந்த வீட்டைக் காணோர் நலமிலாப் பேயராகும்
நாதாந்த வீட்டைத் தானே நற் குரு வருளாற் கண்டு
நாதாந்த வீட்டைத் தானே நாடுவீர் ஞானிமாரே.

அகஸ்தியர் வாக்கு விருத்தம்

தன்னைத் தானறியாத மூடரெல்லாந்
தானுலகிற் குருக்களென்று பெயருஞ் சொல்வார்
பின்னைத் தான் பிறவாத நெறியுங் காணார்
பேசாதே மந்திரத்தின் பெருமை காணார்
முன்னைத் தான் பெரியோர்கள் சொன்ன நூலின்
முறைமையறியாதார் வீண் மூடரெல்லாம்
என்னைத் தாற் சீசனுக்கு முக்தி காட்டி
யீடேற்றங் கொடுப்பதுவு மியல்பிலாரே.
சாதி குரு சமைய குரு வென்று சொல்லி
தானுலகிற் திரிவார்க்குத் தவங்களேது
வாது செய்து நூல்கள் கற்றுத் திரிவதல்லால்
வன் பிறவியறுவதற்கு வகையிங் கேது
நீதியென்று தவமறியார் நிலையுங் காணார்
நிலையில்லாக் குருக்களுக்கு நிலையங்கேது
சோதி யென்னுங் குரு நாதன் தன்னையன்றி
தொல் புவியிற் குருக்களென்று சொல் வொண்ணுதே

ஞானவெட்டி பாட்டு - 436

நீரினில் முழுகும் போது பொருள் மேலாசை
நிலையான கரையில் வந்தால் நில மேலாசை
கூர்ந்து நெற்றிதனில் வெண்ணீறணியும் போது
குறிப்பான மக்கள் பெண்டீர் சுற்றத்தாசை
ஊர்தனிலும் மந்திரங்கள் ஓதும் போதும்
உற்ற பசியாகு மன மதின் மேலோசை
பார்தனிலே தேவரா மோதும் போது
பல விதமாய் மனமோடிப் பார்த்து தாண்டே

பாட்டு - 437

சித்தமுடன் செய்த பங்கள் செய்தோமென்பார்
செப்புகிறேனவர்களுட செய்தியெல்லாங்
கர்த்தனுட பாதமலர் நினைக்கமாட்டார்
காடு சுற்றி யோடி பின் கலங்குவார்கள்
நித்தியமுடன் நிஷ்டையிலு நிற்கமாட்டார்
நிலத்திலுள்ள வாசையெல்லா நினைந்து கொள்வார்
சுத்தமுடன் றேவராங் கூகை போலுஞ்
சதா நித்திய மோதிகுடி கெடுப்பாராண்டே.

பாட்டு - 438

மறவாம லனுதினமும் பூசை செய்வார்
மாந்தர்களுங் காணு தந்து கோடி வாங்க
இறவாமற் புவிதனிலே யிருப்போ மென்று
இடும்பரெல்லாந் தலை கீழாயிறந்து போனார்
உறவான காயமிது வொடுங்கும் போது
உலுத்தர்கள் தன் பின்னவரைக் காசும் போகா
அறிவாலே யறியாமற் புவியிலுள்ளோர்
அலகையெனத் திரிந்துலக மலைந்தாராண்டே.

பாட்டு - 522

மண்டலத்திற் குருக்களென்று பெயரும் பெற்று
மகத்தான தூளிதமு மணிந்து கொண்டு
குண்டலங்கள் செவியிலிட்டுக் குல்லாசாற்றி
கோகரணங்கி சகரண மிரண்டுங்கற்று

தெண்டிரவிற் பலவிதமாய்ப் பொய்கள் சொல்லி
சீஷருக்கு உபதேசந் தெளியச் சொல்வார்
ஒன்றுமில்லை யிவர்கள் கையில் வித்தையாச்சு
உள்ளவர்த்த மானயிதை யுரை செய்வேனே

பாட்டு - 523

நேத்திரத்தில் துயில்வாங்கி யுடுத்திக் கொள்வார்
நின்ற வரை லவ்வியன்றுத் துரத்திக் கொள்வார்
கோத்திரங்கள் விளங்கமுத்தி தருவோமென்று
கூறுசொல்லி நீரதனைக் குழைத்துச் சாற்றி
சாத்திரத்தைச் செவிதனிலு மாண்டே கேளீர்
தவமாகு மஞ்செழுத்தைச் சாற்றுவார்கள்
சூத்திரத்தை யின்னதென் றறிந்து பார்க்கச்
சொல்லறிய வைம்பூத மாச்சுதாண்டே.

பாட்டு - 524

உற்று நின்ற சாத்திரத்தைப் பார்த்துப் பார்த்து
ஊணுகிடையா மலுந்தான் மிரட்டிப் பேசி
பத்தரென்றுங் குருக்களென்றும் பகுத்துச் சொல்வார்
பரகதியும் தருவமென்று பணம் பறிப்பார்
வித்து நின்ற விடங்காணர் வேருங்காணர்
விளங்குபரந் துலங்குகின்ற வீடுங்காணர்
ஏத்தவமுந் தருவமென் றுலகஞ்சுற்றி
எளியோர்கள் பாவமெல்லா மினிகொள்வாரே.

பாட்டு - 527

ஓதுகின்ற வேதமது பிறந்ததெங்கே
உன்னிய நீரிறைக்குமிட முயிருமெங்கே
வாதுகள் செய் மந்திரமும் பிறந்ததெங்கே
மறைவேத சைவர்களும் பிறந்ததெங்கே
சூதுகள் கண் டிவையறிந்தால் குருக்களாகுந்
தொல்லுலகி லறியாதார் நம்மிலொன்று
ஏதுமிலாப் பொய்களவு கொள்ளா ராகும்
இவை ராஜயோகி யென்றே யியம்பலாமே.

பாட்டு - 526

நரகமதைத் தவிர்த்து சொர்க்கம் தருவோமென்பார்

நாட்டிலுள்ள காரியமாங் குருக்கள் வந்து
நரகமது நின்றதற்கு நிறந்தானென்ன
நமனான யெமனைவெல்ல நானே யென்பார்
இறப்பிறப்பு மறிந்துணர்ந்து யுரைத்தானாகில்
யெம்பிரா னென்றவரைப் பணிவேன் காணும்
மறுபிறவி யுண்டென்பார் உலகத்தாசான்
மதியெனது கருத்தினாலு காணேனுண்டே.

தண்டலையார் சதகம் 12-ம் பாட்டு

காதிலே குண்டலங்கள் கையிலே செபமாலை கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கள் மனதிலே காவடமாய் வேடம் பூண்போன்
வாதிலே பயன்றெடுக்க தண்டலைநீ னெறியாரே மனிதர்காணும்
போதிலே மௌனியிராப் போதிலே ருத்திராட்சப் பூனைதானே

திருமூலர் விருத்தம்

காவிதனைச் சீலையிலே தோய்த்துக் கொண்டு
களிம்படையுஞ் செம்புகளைக் காதிற்போட்டு
மேவியதோ ருத்திராட்ச மேலே பூண்டு
மேனியெலா மேனிறைந்த விபூதி சாற்றி
ஆவுடைய மலமதனை திருநீறென்று
மதனுடைய நீரதனைத் தீர்த்தமென்றும்
பாவிகளா யுலகுதனிற் றிரியவேண்டாம்
பராபரத்தைப் புத்தியினாற் பகர்ந்துபாரே.

மற்றொரு ஞானியின் கவித்துறை

பாடித்தா னென்ன பலன் பாவினையா லென்னபலன்
வேஷத்தா லென்ன பலன் வெண்பூச்சா லென்ன பலன்
மூடத்தே கண்திறக்கா முழுக்குருடரைக் குருவென்
றேடக்கோ லில்லாம லொழுக்க மறப்பட்டோமே.

திருப்பி நடத்த சுக்கானும், தள்ளக் கோலுமில்லா ஓடத்தில் ஏறினோர் கெட்டது போல், அறிவின் கண்இல்லாக் குருடரைக் குருவென்று நம்பி, பக்தி வேஷமிட்டு, விபூதியிட்டு, பாடிப் பலன் என்ன, கெட்டுப் போனோமே என்பது

ஞானவெட்டி கொச்சகம்

பொய்க்குருவினாலெனதுப் பொக்கிஷமெலாஞ் சிதைந்து
கைப் பொருளெலா மிழந்ததேன் காரியக்குருக்களினால்
இப்படியாய் மேதினியில் யான்சிலநாள் போனபின்பு

மெய்க்குரு முனியருளால் மெஞ்ஞானம் பெற்றேனே.

ஞானவெட்டியாரும் பக்தியைத் தேடி நடந்த காலத்தில் பொய்க்குருக்களான காரியகுருக்கள் கையில் சிக்கி, தன் எல்லாப் பொக்கிஷங்களையும் கைப் பொருள்களையும் இழந்து பின் பராபர வஸ்துவின் அருளால் மெஞ்ஞானம் பெற்றேன் என்கிறார்.

அகஸ்தியர் ஞானம் 16-ல் பாடல் 5.

கத்துவார் பெருநூலைப் பார்த்துப் பார்த்து
தூஷிப்பார் உலகத்தில் சிறிது பேர்கள்
தெத்துவார் அவர்பிழைக்க வனேகவேஷம்
தேகத்திலணிந்து கொண்டு திரிகுவார்கள்
பத்துவார் குருக்களென்பார் சீஷரென்பார்
பையவே தீக்ஷை வைப்பார் தீமையென்றும்
கத்துவார் திருமூர்த்தி தாமேயென்று
காரணத்தை யறியாத கசடர்தானே.

வால்மீகர் 16ல் 6-ம் பாட்டு

தானென்ற உலகத்தில் சிறிதுபேர்கள்
சடைப்புலித் தோல்காஷாயம் தாவடம் பூண்டு
ஊனென்ற உடம்பெல்லாம் சாம்பல்பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானியென்பார்
தேனென்ற சிவபூசை தீட்சையென்பார்
திருமாலைக் கண்ணுலே கண்டேன் என்பார்
கானென்ற காட்டுக்குள் ளலைவார் தேடி
காரணத்தை யறியாமல் கதறுவாரே.

கருவூரால் பூஜா விதி 16 -ல்

புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசி சாஸ்திரங்கள் மிகவுங்கற்று
அகலுவார் பெண்ணுசை விட்டோமென்று
அறிவுகெட்டு ஊர்தோறும் சுற்றிச் சுற்றி
சகலமுமே வந்தாற்போல் வேடம் பூண்டு
சடைமுடியும் கஷாயம் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நடக்கைவேறாய்
எண்ணமெல்லாம் பெண்ணுசை பூசைதானே.

அகஸ்தியர் 16ல் 3.

பாடிஞரிப்படியே கதை சொல்லாவிட்டால்

பரிபாஷை யறியார்களுலக மூடர்
சாடுவார் சிலபேர்கள் பல நூல் பார்த்து
தனை மறந்து படுகுழியில் விழுவார் சாவார்
வாடுவார், நாமமென்றும் ரூபமென்றும்
வையத்திற் கற்செம்பைத் தெய்வமென்றும்
நாடுவார் பூரணத்தை யறியாமூடர்
நாய்போல குலைத்தல்லோ ஒளிவார் தானே.

வால்மீகர் 16-ல் 4-ம் பாட்டு

ஆமப்பா உலகத்தில் பெருநூல் பார்த்தோர்
அவரவர்கள் கண்டதெல்லாம் சரியை யென்பார்
ஓமப்பா கல்லை செம்பை தெய்வமென்று
உருகுவார் பூசிப்பார் கிரியையென்பார்
வாமப்பா யோகமென்று காய்கனியைத் தின்று
வாய்பேசா ஊமையைப் போல் திரிகுவார்கள்
காமப்பா ஞானமென விண்டு மேலும்
காக்கைபித்தன் மிருகம் போல் கத்துவாரே.

சங்கராசாரியார் விருத்தம்

சற்குருவை யறியாமலுலகிலே தான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்ன புத்திதனைக் கேட்டு
பூசை செய்து கற்களையே போற்றி செய்வார்
சொற்குருக்கள் தங்களுட செய்திகேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமல்லால் சொல்லும்போது
சற்குருவை யறிந்தவருக்குடனே மோட்சம்
சார்வதென்று முன்னோர்கள் சாற்றினாரே

சற்குருவை வணங்காமற் றள்ளி வைத்து
தன்னையறியா குருக்களையே சார்ந்து கொண்டு
பொய்க்குழியாம் நரகத்தில் வீழ்ந்து போகும்
புருடருக்குப் பொருளுரைத்தாற் புகழுண்டாமோ
கற்குருவாங் கல்லுகளைத் தொழுதுநின்று
கை கட்டி வாய்புதைத்து கள்ளர்போல
வற்குருவாஞ் சமயமதஞ் சார்ந்து கொண்ட
வகையறியாப் புல்லருக்கு வண்மையுண்டோ

வால்மீகர் ஞானம் - 7.

கதறுகின்ற பேர்களையா கோடா கோடி
காரணத்தைக் கண்டவர்கள் கொஞ்சம் கொஞ்சம்
பதறுகின்ற பேர்களெல்லாம் பராபரத்தை
பத்திநின்று பார்த்தவர்கள் கொஞ்சமப்பா
உதறுகின்ற பேர்களெல்லாம் உலகத்துள்ளே
உதித்தகலை தன்னுள்ளே யறியமாட்டார்
சிதறுகின்ற பேர்களைப் போல் சிதறிடாமல்
சிவசுத்தி வரும் போதே தன்னில்நில்லே

அகஸ்தியர் ஞானம் 6 -ல் பாடல் 4

உத்தாரந் தானிப்படியே புராணங் காட்டி
லோகத்தில் பாரதம்போல் கதையுண்டாக்கி
கர்த்தாவைத் தானென்று தோணெட்டாமல்
கபடநாடகமாக மேதஞ் சேர்த்து
சித்தாக வழியாக சேர்ந்தோர்க்கெல்லாஞ்
சதியுடனே வெகு தர்க்கம் பொருள் போல் காட்டி
பத்தாக சைவர்க்கு ஒப்பனையும் செய்து
பாடினார் சாத்திரத்தைப் பாடினாரே.

வேறு விருத்தம்

குருக்கள்மார் என்றுரைப்பார் பொருளுங்காணர்
குவலயத்திலுப தேசங் கூறிநிற்பார்
மருட்களாய்ச் சீடனுக்குப் பொருளைச் சொல்வார்
மாசற்ற ஜோதியுட வடிவைத் தேற்றார்.
பொருட்களாம் போதமொருசற்றுமில்லை
பொய்களே மிகப்பேசி பொருள் பரிப்போர்
அருட்களாய் யாகமத்தினடைவுகாணர்
அறிவில்லாக் குருக்களென்றறையலாமே.

இப்பாடல்களின் உட்கருத்து, மெய்பக்தி வழிபாட்டை விட்டு மக்களை விலக்கி, சிதை வுண்டாக்கி, மாறாட்டமாய் போதித்து, குறுக்குவழியில் நடத்தும், குருட்டு வழிகாட்டிகளான பொய்க்குருக்களின் லட்சணங்களை மிகத் திட்டந் தெளிவாய்க் காட்டுகிறது. ஒன்றான பராபரவஸ்துவின் நிலை காணாமல், பொய்வேடம் தரித்து, தாங்களும் மெஞ்ஞான மடைந்து முக்தி சேராது, அதைத் தேடுவோரையும், பாழ் நரகில் விழ வழிக்காட்டும், காரியக் குருக்களும், கற்குருக்களும், சொற்

குருக்களுமான, பொய்க் குருக்களை நம்பாது, இன்றே, இப்பொழுதே, கூர்ந்து ஆராய்ந்து, சற்குருவான பரம்பொருளைக் கண்டு, களித்து, மகிழுங்கள் என விளக்குகிறது.

பேரின்ப மணி மாலையில் விருத்தம்

விலைமகளைப் புணர்வதற்குப் பொருள் கொடுத்து
மெய்யுடலைத் தான் கெடுக்கு மிலேச்சர் போல்
அலைவேடக் குருவினுப தேசங் கேட்டு
ஆத்துமத்தைக் கெடுக்கப் பொருளளிப்போர் கேளிர்
குலமகள் கற்புடமை தன்னைக் காக்கத் தன்றன்
கொழிணனையே தெய்மென்று குறிக்கும் போல
நிலைமை தவறாதவர் சர்க்குருவைப் போற்றி
நீடுழி காலமும் வாழ்ந்திருப்பார் தாமே.

பொருள் : வேசிகளைக் கூடி இன்பமனுபவித்து உடலைக் கெடுக்க, காமிகளான மிலேச்சர் பணம் கொடுப்பதுபோல, வேஷமிட்டு அலைந்து திரிந்து பொய் போதனை கூறி ஆத்துமத்தைக் கெடுக்கும் கள்ளக்குருக்களுக்கு பொருள் கொடுப் போரே கேளும், விவாக மனைவி தன் கற்பைக் காக்கத் தன் புருஷனையே என்றும் தெய்வமென மதிப்பதுபோல், நிலை தவறாதோர், பராபரவஸ்துவைத் தொழுது, என்றும் அவரில் நிலைத்து வாழ்வார் என்பதாம்.

ஞான சிந்தாமணி விருத்தம்

குருட்டெருதைக் குருடன் பிடித்திழுத்தாப்போலும்
கொக்குத் தலை பித்த மஞ்சள் என்ருப்போலும்
மருட்டி வரும் யானை கண்ட குருடர் போலும்
வழிக்குடர் ஒன்றுக் கொன்று காட்டுபோலும்
இருட்டறையிற் பொருள் எடுக்க வலைந்தாற் போலும்
இரு மடயக் குருடர்களைக் குருவென்றெண்ணி
பிரட்டி யெரித் தீ நரகில் வேகுதற்கு
பேய் மனுவைத் தேவரென்று துதிக்கின்றாரே.

திருமூலர் விருத்தம்

கைம்பெண்டீர் தாலிதனைக் கூழங் கையன்
கண்டறுத்துக் கொண்டோடக் கண்ணில்லா தான்
அன்புடனே செவிடன் கேட்ட பயமென்ன

அதை ஊமையன் கேட்டு பிடியுமென்ன
இன்பமுடன் காலில்லான் ரெுடர்ந்தேயோடி
இவன் கள்ளனெனவே பிடித்திழுத்ததொக்கும்
தென்பயலும் பரமகுரு வருளில்லாதான்
சீஷனுக்குக் கொடுக்கின்ற தீட்சைதானே

பொருள் : குருட்டுக் குருக்களின் தீட்சையும், உபதேசமும், கும்பிடுந் தெய்வமும், எதற்கொப்பென்றால், கைம்பெண்கழுத்திலே தாலியிருந்ததென்றும், அதைக்கையில்லாதான் அறுத்துக் கொண்டு ஓடுவதைக் கண்ணில்லாதவன் கண்டானென்றும், அதைக் காதில்லாச் செவிடன் கேட்டு அங்கலாய்த்தானென்றும், அதை வாயில்லாத ஊமை பிடிக்கச் சொல்லிக் கூப்பிட்டான் என்றும், இவனைக் காலில்லா முடவன் ஒடிக் கள்ளனென்று சொன்னானென்பதை யொக்கும் என்பது பரமகுருவின் அருள் உபதேசத்தை அறியாத பொய்க்குருக்கள் தெய்வமும், தீட்சையும், இதற்கு சமம் என்கிறார் திருமூலர்.

பேரின்ப மணியில் மாலை விருத்தம்

வேதமறியாத தவரைக் குருவென்றெண்ணி
வீணிலே யவர் பாதம் பணிந்து ஞானப்
போகத்தை யருளுமென்று தலைகுனிந்து
புல்லறிவாற் பலசமையத் துழல்வோர் தம்மைப்
பாதகங்கள் தவிர்க்கும் பராபர வஸ்தானோர்
பாருலகிற் காரண சற்குருவாய் வந்து
மா தவங்கள் செய்து கதிபெறவே சத்திய
மறைநெறி யிதென்று மதி வழுத்துவாரே

பொருள் : மெய்ஞ்ஞான வேத வெளிச்சமற்ற சொற்குருக்களைக் குருவென்று நம்பி, இவர் பாதம் பணிந்து தலைகுனிந்து ஞான போதகங்கள் கேட்டு, பல சமயத்திலும் உழல்வோரின், பாவங்களைப் போக்க பராபரவஸ்துவானர், உலகில் காரண சற்குருவாய் வந்து, பக்தி செய்து முக்தி சேர சத்தியவேதக் கட்டளைப் பிராமணம் தந்து புத்தி போதனை தருவார் என்பது.

பாம்பாட்டிச் சித்தர் பாடல்

பொய் மதங்கள் போதனை செய் பொய்க்குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியிற் போகவிருக்கும்
மெய் மதந்தான் யின்னதென்று மேவவிளம்பும்
மெய்குருவின் பாதம் போற்றி யாடாய் பாம்பே.

பாம்பாட்டிச் சித்தரும் தமது பாடலில், பொய் மதப் போதனை செய்யும், பொய்க்குருக்களை விட்டு நற்போதனை தந்து மெய்ஞ்ஞானத்தில் நடத்தும் சற்குருவின் பாதத்தை தொழுதுகொள் என்கிறார். முன்னுள்ள பேரின்ப மணிமாலையின் விருத்த விளக்கப்படி, பராபரவஸ்துவே உலகில் வந்து பாவம் நீக்கிப் பரகதியடைய சத்தியவேதப் போதனையைத் தருவார் என்ற வகைவழியையே நாம் தேடியடைய வேண்டும்.

முன்னிருந்த ஞானிகள், பக்தர்களாகிய தவசிகள் முனிவர்கள், சித்தர்களான பட்டிணத்தார், பத்திரகிரியார், பாம்பாடிச் சித்தர், யிடைகாட்டார், கடுவெளியார், அகப் பைச் சித்தர், அகஸ்தியர், வால்மீகர், அழுகணிச்சித்தர், புலிப்பாணி, சிவவாக்கியர், குதம்பைச் சித்தர், ஞான வெட்டியான், திருமூலர் இன்னும் பல ஞானிகளும், தாங்கள் மெய்ப்பராபர வஸ்துவைத் தேடி ஆராய்ந்து, பல சமய நூல்களையும், குருக்களையும் பார்த்ததில், அவையனைத்தும் மெய்ப்போதனை நிறைந்த மனித கட்டுரைகளாய்க் கண்டார்கள். குருக்கள்மாரையும், பரம்பொருளின் நிலை காணுத வேஷதாரிகளான வயிற்றுப் பிழைப்பின் கூட்டத்தாராகக் கண்டு, இவ்விதம் எச்சரித்தார்கள். இவர்கள் ஒன்றான பரம்பொருளை மறைத்து, ஜீவனற்ற பதுமைகளைத் தெய்வங்களாகக் காட்டி, பொய்ப்போதனையால் நிரப்பி, புராணக் கட்டுரைகளையும், பல சாஸ்திரக் குப்பைகளையும், ஞான நூல்களெனப் போதித்து, தாங்களும் கெட்டு, அடுத்தோரும் அக்கினிக் குழிக்குச் செல்ல மாருட்டமான வழி காட்டிவிட்டார்கள்.

இவ்வித பொய்க்குருக்களின் கூட்டமிகுதியால், அஞ்ஞானமென்னும் அவபக்தி ஓங்கி, மெய்ஞ்ஞானம் நாளுக்கு நாள் மங்கி மறைந்து, அஞ்ஞானம் உயர்ஞானம் போல் வேர் ஊன்றிக் கொண்டது. உயர் ஞானத்தால் பூரணமடைந்து, முக்தி சேர பொய்க்குருக்களையும், அவர்கள் சார்ந்து நிற்கும் பொய்ப் போதனைகளையும், அவர்கள் சார்ந்து நிற்கும் பொய்ப் போதனைகளையும் ஆராய்ந்து அறிந்து, அதை அறவே முற்றும் வெறுத்து, மெய்ஞ்ஞான நூல் என்னும் வழுவாத சத்திய வேத சாஸ்திரத்தை ஆராய்ந்து, ஒன்ருன பராபரவஸ்துவை நம்பித் தொழுது கொள்ள வேண்டும். இதுவே முக்தி சேர்க்கும் வழிகாட்டியும், ஞானவெளிச்சமும் ஆகும்.

ஞானியின் லட்சணம்

ஞானிமார் என்று சொல்வார் நாதாந்த வீட்டைக்காணுர்
ஞானிமார் தாங்கள் போலே நலமுடன் பூசை செய்வார்
யோனிமார் தங்கள் முன்னே யுழலுமாளுளுலுத்தர்க் கெல்லாம்
ஞானிமாரென்ற பெயரேன் நரகிற்போவார்க்கு வீடேன்

ஞானிமாரென்று சொல்லும் நாய்களே வணங்கிக் கேளீர்
ஞானிமார் என்று சொல்வீர் நாதாந்த வீடு காணீர்
ஞானியாம் நாதன் பாதம் நலமுடன் வணங்கிக் கேட்டால்
ஞானியாம் பெயருமுண்டாம் நாதாந்த வீட்டிற் சேர்வீர்

நாதாந்த வீட்டைக் கண்டோன் ஞானியென்றுரைக்கலாகும்
நாதாந்த வீட்டைக்காணார் நலமிலாப் பேயராகும்
நாதாந்த வீட்டைத்தானே நற்குரு வருளாற்கண்டு
நாதாந்த வீட்டைத்தானே நாடுவீர் ஞானிமாரே.

முன்னால் வரிசைக் கிரமமாய் ஆராய்ந்தபடியே, ஞான யென்னும் பெயர் கீர்த்தி வெளிவேஷ பக்தியாலும், பூச்சுகளாலும், சடங்காச்சார கிரியைகள், பூசைகளைச் செய்து முடிப்பதாலும் கிடைப்பதல்ல. சத்திய வேதத்தில் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானம் என்று சொல்லுகிறது. ஞானி என்போன் சிருஷ்டி கர்த்தாவான பரம்பொருள் ஒன்றென நம்பவேண்டும். ஞானி, மெய்ஞ்ஞான நூல் ஆன சத்திய வேத சுருதிகளை ஆராய்ந்து அதன் கட்டளைப் பிரமாணங்களைத் தேவ அருள் கொண்டு கைக்கொண்டு அனுசரிக்க வேண்டும். அவன் ஆவி, ஆத்துமா சரீரம் முற்றும் பரம் பொருளால் பாவத்துக்கு விலகி காக்கப்பட வேண்டும். பக்தியில் பூரணமடைந்து, நீதியென்னும், தூய வழியைக் கடைப்பிடித்தோர்க்கு, முக்தி என்னும் பரகதியும், அஞ்ஞானத்தில் ஆழ்ந்த பாவிக்கு நித்திய எரிநரகமும் உண்டென்பதை நம்பி அந்த முக்தி பதவியைப் பெற, பரம ஞானியும், சற்குருவும், நற்குருவுமான பராபரவஸ்துவின் அருளால் அதைத் தேட வேண்டும். இவ்வித அநுபவ லட்சணமில்லாதோர், அஞ்ஞானம் நிறைந்த அவபக்தர் தேடும் உலகஞானியேயாவார்கள். ஞானகுருவாகிய பராபர வஸ்துவைத் தேடிக்கண்டு, தொழுது சேவித்து முக்தியை சாதகப்படுத்துங்கள். அதுவே மெய்ப்பக்தர் தேடும் மறுமையின் நித்திய வாசஸ்தலம்.



29

முனிவர்கள்

முனிவர்களான தவரிஷிகளில், அகஸ்தியமுனி, அத்திரி முனி, ஆங்கீரசர், இரணியவன் மாமுனி, ஏரண்ட மாமுனி, கலைக்கோட்டுமுனி, காசிபமுனி, கௌதம முனி, சத்தகூண் முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனற்குமாரன், சுகன், ததிமகாமுனி, துருவாசமுனி, நாரதமுனி, பதஞ்சலி, பரத்து வாசன், பராசரன், பற்பமாமுனி, பிருகுமாமுனி, பினாகிமாமுனி, புலஸ்தியன், மார்க்கண்டன், வஷிஷ்டன், வால்மீகமாமுனி, விசுவாமித்திரமுனி, வியாக்கிரபாதன், வியாசமாமுனி, ஆகியோர் விசேஷித்தவர்கள்.

பிர்மா, ருத்திரன், விஷ்ணுவென்னும் திரிமூர்த்திகளும் பஞ்சகர்த்தாக்கள், முப்பத்துமுக்கோடி தேவர்களும் தேவிமார்களும் சாமானிய தேவர்களும் மற்றுள்ள சில்லரைத் தேவர்களும் வணக்கத்துக்குரிய தேவர்களாயும், நாலு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்கியானம், தொண்ணூற்றாறு தத்துவம்,

பதினெண்புராணம் யாவும் நடைமுறையில் உச்சம் பெற்று, அதற்குரிய சடங்காச்சார விதிமுறைகள், பூசைகள், பலி தவனிஷ்டைகள், யோக சாதனைமுறைகள், பலுகிப் பெருகின காலம் இம்முனிவர்கள் காலமே.

இம்முனிவர் சித்தர், ஞானிகளில் பலர், தேவ அருள்பெற்று, பரம்பொருளாகிய பராபரவஸ்துவென்னும் சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் ஒன்றே, என வெட்டவெளியாக விளக்கிக் காட்டி, அப்பரம்பொருளின் ஞானமார்க்கப் போதனைகளையும், பூரணப் பதவி நிலைகளையும் போதித்து, வேதாந்த ஒளி வீசச்செய்து, ஞானமார்க்க வழியறியா பொய்க்குருக்களையும், ஆன்மாக்களை மாறாட்டமான வழியில் நடத்தும் அவர்களின் வஞ்சிப்பான போதனைகளையும் எச்சரித்து, எதிர்த்துக் கண்டித்து, பரம்பொருளை விளக்கிக் காட்டும் மெஞ்ஞானம் துளிர்த்து வளர, அவர்களின் அரும்பொன்னுரைகளைப் பின்னுள்ளோருக்கு வைத்துப் போயிருக்கிறார்கள்.



30

தமிழ்ச் சங்கத் தலைவர்கள்

தமிழ்ச் சங்கத் தலைவர்களின் பெயர்கள் பின்வருமாறு :- 1. இறையவனார், 2. உக்கிரப் பெருவழுதியார், 3. கபிலர், 4. பரணர், 5. நக்கீரர், 6. மாமூலனார், 7.கல்லாடர், 8.சீத்தலைச் சாத்தனார், 9. மருத்துவன்ருமோதரனார், 10. நாகன்றேவனார், 11. அரசிற் கிழார், 12. பொன்முடியார், 13. கோமதனார், 14. நத்தத்தனார், 15. முகையலூர், 16. சிறுகருதும்பியார், 17. ஆசிரியர் நல்லந்துவனார், 18.கீரந்தையார், 19. சிறுமேதாவியார், 20. நல்கூர் வேள்வியார், 21. தொடித்தலை விழுத்தண்டினார், 22. வெள்ளி வீதியார், 23. மாங்குடி மருதனார், 24. எரிச்சலூர் மலாடனார், 25. போக்கியன்

மோசிகீரனார், 26. காவிரிப் பூம்பட்டிணத்துக்காரிக் கண்ணனார், 27. மதுரைத் தமிழ்நாயகனார், 28. பாரதம் பாடிய பெருந் தேவனார், 29. உருத்திரசன் மகண்ணர், 30. பெருஞ் சித்திரனார், 31. நரிவெருத் தலையார், 32. மதுரைத் தமிழாசிரியர், 33. செங்குன்றூர்க் கிழார், 34. மதுரை யறுவை வாணிகரின் வேட்டனார், 35. கவிசாகரப் பெருந்தேவனார் மதுரைப் பெருமதனார், 36 . கோவூர்க் கிழார், 37. உறையூர் முதுகூற்றனார், 38. இழிகட்பெருங் கண்ணனுர், 39. செயிர்க்காவிரியார், 40. மகனார் சாத்தனார், 41. செயலூர்க்கொடுஞ் செங்கண்ணனுர், 42. வண்ணக்கஞ்சாத்தனார், 43. களத்தூர்கிழார், 44. நச்சுமனார், 45. அக்காரணக்கனி நச்சுமனார், 46. நம்பாலத்தனார், 47. குலபதி நாயகனார், 48. தேனீக் குடிகீரனார், 49. கொடிஞாழன் மாளிபூதனார், 50.கவுனியனார், 51. மதுரைப் பாலாசிரியனார், 52. ஆலங்குடி வங்கனார் ஆவர்.

இவர்கள் நம் விசேஷித்த தமிழ் நூற்காவியப் பிரதிகளின் சிறந்த கர்த்தாக்களும், அதன் விரிவுரை, கருத்துரை, பதவுரை, முதலான கல்விச் சிறப்பிற்கு, அரும்பெரும் சேவை புரிந்த கர்த்தாக்களும், செயல் வீரருமாய், சிறப்புற்று ஒளி வீசி விளங்கிய பெரியவர்களான தமிழ்ச் சங்கத் தலைவர்கள்



31

கலைகள் அறுபத்து நான்கின் விளக்கம்

1. அக்கரவிலக்கணம் 2. இலிகிதம் 3. கணிதம் 4.வேதம் 5. புராணம் 6. வியாகரணம் 7. நீதி சாஸ்திரம் 8. சோதிட சாஸ்திரம் 9. தர்ம சாஸ்திரம், 10. யோகசாஸ்திரம் 11. மந்திர சாஸ்திரம் 12. வைத்திய சாஸ்திரம் 13. உருவ சாஸ்திரம் 14. இதிகாசம் 15 காவியம் 16. அலங்காரம் 17. மதுரபாடனம் 18. நாடகம் 19. நிருத்தம் 20. சத்தப்பிரமம் 21. வீணை 22. வேணு 23. மிருதங்கம் 24. தாளம் 25. அத்திரப் பரீட்சை 26. கனகப்பரீட்சை 27. இரதப் பரீட்சை 28. கஜப்பரீட்சை 29. அசுவப் பரீட்சை 30. இரத்தினப் பரீட்சை 31. பூமி பரீட்சை 32. சங்கிராமவிலக்கணம் 33. மல்யுத்தம் 34. ஆகருடனம் 35. உச்சாடனம் 36. வித்து

வேடனம் 37. மதன சாஸ்திரம் 38.மோகனம் 39. வசீகரணம் 40. இரசவாதம் 41. காந்தருவவாதம் 42. பைபீல் வாதம் 43. கவுத்துகவாதம் 44. தாது வாதம் 45. காருடம் 46. நட்டம் 47. முட்டி 48. ஆகாயப் பிரவேசம் 49. ஆகாயகமனம் 50. பரகாயப்பிரவேசம் 51. அதிரிசயம் 52. இந்திரசாலம் 53. மகேந்திரசாலம் 54. அக்கினி ஸ்தம்பம் 55. ஜலத்தம்பம் 56. வாயு ஸ்தம்பம் 57. திட்டி ஸ்தம்பம் 58. வாக்கு ஸ்தம்பம் 59. சுக்கில ஸ்தம்பம் 60. கனனஸ்தம்பம் 61. கட்கஸ்தம்பம் 62. அவஸ்தைப் பிரயோகம் 63. சகுண சாஸ்திரம் 64. சிற்ப சாஸ்திரம் ஆக கலைகள் ஆறுபத்து நான்கு.

இக்காலத்தில் இவற்றிற் பல கலைகள் பயிற்சிப் பழக்கமின்றி கைவிடப்பட்டபடியால், சிறப்பற்றுக் காணப்படுகிறது.



32

வேதம் நான்கின் விளக்கம்

இந்து சமய வளர்ச்சிக்கு ஆதாரமும், அநுகூலமுமாயுள்ள வேதங்கள் நான்கு. அவை : இருக்கு, யசுர் (எதுர்) சாமம், அதர்வணம் என்பவை. இந்த நான்கு வேதங்களும் பிர்மாவின் நான்கு முகங்களிலிருந்து வந்ததாய்க் கதை உண்டு. இவைகள் ஸ்தோத்தரிப்புக்குரியவைகள். இவைகள் சமஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது.

முன் ஒரு காலத்தில் ஜலப்பிரளயம் உண்டான பொழுது பிர்மாவின் மகன் சுவயம்புமனு, இந்த வேதங்களைக் காப்பாற்றி, வேதாந்தத்தை உண்டு பண்ணினாராம். மனுவின் காலத்தில் உள்ள பல வித்வான்கள் அக்காலத்தின் பாரம்பரிய நியாயங்களை சூத்திரங்களாகக் கட்டி, வேதங்களை உண்டாக்கின தாய்த் தெரிகிறது.

இவைகளை எழுதினவர்களில்

விசேஷித்தவர்கள் : மனு, அலர்க்கன், மார்க்கண்டன், விசுவாமித்திரன், பரத்து வாசன், தன் நூறு குமாரர்களைச் சபித்துச் சண்டாளர் ஆக்கின வஷிஸ்டர், வாமதேவன், அகஸ்தியன், தன் தாயின் தலையை அறுத்த பிருகுமுனி, சமதக்கினி, கௌதமர், பிரகஸ்பதி, நாரதன் முதலானவர்கள். இவர்கள் விஸ்தாரமாக எழுதி வைத்தவைகளைத் தன் சகோதரன் மனைவியைச் சேர்ந்து இரண்டு பிள்ளைகளைப் பெற்ற வியாச ரிஷி, வேதத்தை எல்லாம் சேர்த்து, இருக்கு வேதத்தை, பாலி என்னும் பைலன் ரிஷிக்கும், யசுர் வேதத்தை வைசம்பாயன ரிஷிக்கும், சாம வேதத்தை சயமுனி ரிஷிக்கும், அதர்வண வேதத்தை சோமன் என்னும் ரிஷிக்கும் போதிக்க, இவர்கள் மற்றவர்களுக்குப் போதித்தார்களாம்.

வியாசரிடம், யசுர் வேதத்தைப் பெற்ற வைசம்பாயன ரிஷி, தன் சீஷன் யாஞ்ஞுவல்லியருக்குப் போதித்தாராம். ஒரு சமயம் இவ்விருவருக்கும் கடும் சண்டை ஏற்பட்ட போது தன் குரு வைசம்பாயனரிடம் கற்றறிந்த வேதம் முழுவதையும் வாந்தி செய்து விட்டாரம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த தித்திரி என்னும் பறவை அதை எடுத்து விழுங்கியபின் பாட ஆரம்பித்ததாம். இதன் காரணமாய் இதற்குத் தைத்தரீயம் என்னும், கிருஷ்ண யசுர்வேதம், என்ற பெயர் உண்டாயிற்றாம் பின் யாஜ்ஞுவல்கியரிஷி சூரியனை வணங்கி, சுக்கில யசுர்வேதம் என்னும் ஓர் புது வேதத்தைக் கற்றுக் கொண்டாராம். இதற்கு வாஜஸ்னேயீ என்று பெயராம்.

வேதத்தில், பிராமணே, என்னும் உபதேசப் பிரமாணங்களும், சங்கீத்தா என்னப்பட்ட மந்திரங்களும் உண்டு. இந்த மந்திரங்களில் சிலது சூரியன், சந்திரன், பூமி, ஜலம், காற்று, அக்கினி, ஆகாசம், புல், பூண்டு, விருட்சங்கள் முதலியவற்றை நோக்கிச் செய்யும் மந்திரம். சிலது பல இராஜாக்களைப் பற்றிச் செய்யும் மந்திரம். இவைகளைப் பல ரிஷிகள் உண்டாக்கின தாய்த் தெரிகிறது.

உபதேசப் பிரமாணங்களோ, பிராமணர்கள் செய்யும் பூசைகளின் விபரங்களைக் குறித்தும், மந்திர உபதேசங்களைக் குறித்தும், சடங்காச்சார விதி நியமங்களைக் குறித்தும் போதிக்கிறது?

இந்த வேதங்களில் பராபர வஸ்துவாகிய மகத்தான பரப்பிரம்மத்தைக் குறித்துப் பல விகற்பமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது பரப்பிரமம் எங்கும் நிறைந்திருக்கிறதென்றும், அது உலகத்தின் மாயை என்றும், எந்தப் பொருளும் அதன் தோற்றம் என்றும், இவ்வுலகத்தை உண்டாக்கி, அதை ரட்சிக்க மும்மூர்த்திகளைப் படைத்தாரென்றும், அந்த மகாத்துமாவாகிற கடவுளைத் தியானிப்பதே உயர்ந்த ஞானமென்றும்,

மனிதர் அவரை பிரத்தியட்சமாய் அறிந்து கொள்ளக் கூடாமையால், மும்மூர்த்திகளையும், முப்பத்துமுக்கோடி தேவர்களையும், அக்கினி முதலிய பஞ்ச பூதங்களையும், விக்கிரகங்களையும் நமஸ்கரிக்கவேண்டுமென்று கற்பித்திருக்கிறது. இதில் கடவுளுக்குப் பிரம்மம் என்னும் நாமம் உண்டு என்றுஞ் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தப் பெயர், வேதத்தில் வாயுக்கும், மனதுக்கும் புசிப்புக்கும், ஊழியனுக்கும், துர்ச்சனனுக்கும் வழங்கும் பொதுப் பெயராயும் இருக்கிறது.

ஆத்துமாவை ஓரிடத்தில் நித்தியமென்றும், மற்றொரு விடத்தில் மகாத்துமாவில் (கடவுளில்) ஒரு பங்கு என்றும், ஆத்துமாக்கள் தாம் செய்த பாவ, புண்ணியத்தின்படி உடலை விட்டபின். மற்றொரு உடலிற் பாய்கிறதென்றும் சொல்லுகிறது. சிருஷ்டிப்பைப்பற்றி மேலே, பூலோகம், வலோகம், சுவலோகம்,சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்ற ஏழும் ; கீழே அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதளம், பாதாளம், என ஏழும் ஆக பதினாலு லோகங்கள் உண்டாம். இதன் விபரங்களை சாங்கிய சாஸ்திரத்தில் தெளிவாய்க் காணலாம். இதுவல்லாமல், அக்கினியிற் சூரியன் பிறந்தானென்றும் சூரியனிற் சந்திரனும், சந்திரனில் மழையும், மழையால் மின்னலும் உண்டாவதாய் சொல்லுகிறது. இதன்றி பகைவரைக் கொல்லவும், தேவர்களுக்குஞ் சில மந்திரங்கள் உண்டு. மனுவின் தர்மசாஸ்திரத்தில், இருக்கு வேத முழுவதும் கற்றறிந்த ஆசாரியன் மூன்று உலகத்திலுள்ள குடிகளையெல்லாம் கொலை செய்தபின் சண்டாளரோடு இருந்து புசித்தாலும் அவனுக்குப் பாவமில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வாசகர்களுக்கு இதைப் பின்னும் விளக்கி வர்ணிக்க அவசியமில்லை. வேதம் இவ்விதக் கருத்துள்ள நடையிலிருந்தால் பக்தியில் பூரணப்பட்டு முக்தி சேர்வதெவ்விதம்? என்பதைத் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். ஞானமார்க்கத்தைப் போதிக்கும் வேதத்தில் மாற்றானைக் கொலை செய்யும் வாசல்வழி திறப்பது நீதியா?

இந்த நாலு வேதங்களுக்கும். நாலு உபவேதங்களும் உண்டு. முந்தின நாலு வேதங்களின் உபதேசப் பிரமாணங்களிலிருந்து, வேத நுட்பங்கள், என்னும் 32 உபநிடதங்களும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இவற்றைக் கிரமமாய் பின்வரும் பிரிவுகளில் காணலாம்.

மகா ஞானியாகிய கபிலமா முனிவர், தமது அகவலில், இந்த, நாலு வேதங்களும் வந்த வரலாற்றை விஸ்தரித்து எழுதியிருப்பது எப்படி என்றால், பிர்மாவின் பேரனாகிய மனுவிற்குப் பின் பிர்மாவுக்கு, வைப்பாட்டி அல்லது கூத்தியாகிய ஊர்வசி, வயிற்றில், விபசாரத்திலீடுபட்டு பிறந்த

வஷிஸ்டர், முதலாவதாக இம்மண்டலத்திற்கு வேதத்தைக் கொண்டு வந்தாராம். அவர் தம் போதனையில், பராபர வஸ்து ஒன்றையே அரூபத்தில் வணங்கவும், சர்வமனிதரும் ஜாதி பேதமின்றி ஒன்றாயிருந்து சகல மாமிசங்களைச் சாப்பிடவும், மச்சங்களைப் புசிக்கவும், போதித்தாராம். இவ்வழிபாடுகளைக் குறித்து சில ராஜாக்களும், பிரபுக்களும், தர்க்கிக்கவே சகல ஜனங்களும் வாழ்வதற்கு முன் மாதிரியாக வஷிஸ்டர் அருந்ததி, என்ற சக்கிலிச்சியை விவாகம் பண்ணி, தன் வேதத்தை நிலை நாட்ட எத்தனித்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சக்கிலிச்சி சாதிபரைப் பெற்று, இருவரும் தன் தகப்பன் வஷிஸ்டரைப் போல், அதே வேதத்தைப் போதித்து ஜாதி வித்தியாசமின்றியிருக்க முன் மாதிரியாக ஒரு பறைச்சியை விவாகம் பண்ணி, அவளிடத்தில் பராசர் பிறந்தாராம். பராசரும், தம் பிதாக்களைப் போல், அதே வேதத்தைப் போதிக்கையில், ராஜாக்களும் பிரபுக்களும், அவருடன் நீர் சொன்னப்படியெல்லாம் கேட்கிறோம். ஆனால் மச்சம் மிக கவுச்சானதால் அதை மாத்திரம் புசியோம் என்று சொன்னதால், பராசர், தம் தபோ பலத்தால், மச்சகந்தி என்னும் பெண்ணை விபசார வழியில் ஈடுபடுத்திச் சேர்ந்து, மச்ச ராஜாக்களையும் மச்ச குருக்களையும் உண்டாக்க அவளிடத்தில்வேதவியாசரைப் பெற்ருராம். அதெப்படியெனில் பூர்வத்தில் பிர்மாவின் சாபத்தால் ஒரு ஸ்திரீ மீனாக மாறி யமுனை ஆற்றிலிருந்தாளாம்.வசு ராஜன் நித்திரையில் தன் இந்திரியம் கழிந்து விட, விழித்ததும், வீரியத்தை விணுக்கினால் குற்றமென்று, இலைத் தொண்ணையில் வைத்து தன் வல்லூறு பட்சி வசம் அரண்மணையிலிருக்கும் கிரிகை, என்னும் தன் மனைவியிடம் கொடுக்கச் சொன்னதால், வல்லூறு அதை மூக்கில் கொத்திக் கொண்டுபோகும், வழியில், ஓர் ராஜாளி கண்டு, இரு பட்சியும் எதிர்த்து சண்டையிட்டதில் இலை கிழிந்து அதிலிருந்த விந்து யமுனையாற்றில் விழுந்து மிதக்கவே, மீனாய்ச் சாபம் பெற்ற ஸ்திரீ, இரு பிரிவாக்கிப் புசித்து கர்ப்பவதியானாளாம். இந்த மீனான ஸ்திரீ வலையர், வலையிற் சிக்கி, தாச ராஜனிடம் கொடுக்க, அவன், அதன் வயிற்றைக் கீறவே, ஆண், பெண்ணுன இரு பிள்ளைகள் வெளிப்பட்டதாக, வசு ராஜன், ஆண் பிள்ளையை மச்சராஜன் என்று பெயர் சூட்டி வளர்த்தானாம். பெண் பிள்ளைக்கு மச்சகெந்தி என்று பெயரிட்டு தாசராஜன் வளர்த்தான். பெண் பருவ மடைந்ததும் தான் விரும்பியப்படியே தந்தையான தாசராஜன் படகு ஒன்றைச் செய்து கொடுக்க, அவள் யமுனை ஆற்றில் போவார் வருவாருக்கு விட்டுக் கொண்டிருந்தாளாம்.

பராச மகா முனியோ, இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரம் உச்சமாகும் பொழுது. ஒரு ஸ்திரீயைக் கூடி ஒரு புத்திரனைப் பெற்றால்,

உலகத்திற்கு நன்மை உண்டாகுமென்று யோசித்து, அந்தக் காலம் கூடி வரும் வரை தவத்தில் இருந்தாராம். காலம் கூடி வருவதைக் கண்டு தவத்தை விட்டெழுந்து நகரத்திற்கு வேகமாய்ப் போகும் போது, யமுனை வெள்ளப் பெருக்குடன் குறுக்கிடவே, பராசர், ஆற்றில் படகு விடும் மச்சகெந்தியைப் பார்த்து, நேரத்தோடு போய் என் கோரிக்கையை முடிக்க என்னைப் படகிலேற்றி அக்கரையில், விடு என்க, தான் சமபாரம் படகுக்குண்டாக்க, ஜனங்களுக்குக் காத்திருக்கையில், தன் பாரம் ஒன்றே சமமாய்க் காணும் பழுதின்றி, கரை சேரும், என்று பாரசர் வாக்களித்துப் படகிலேறி, நடு ஆற்றில் வருகையில், நட்சத்திரங்கள் உச்சம் பெறும் சமயம் ஆகிவிட்டதால், காலந்தப் பாமல் படகோட்டும் பெண்ணிடத்திலாவது சேர வேண்டுமென்று யோசித்து மச்சகந்தியைப் பார்த்து, என் கோரிக்கை நிறைவேறாது, காலந்தப்பும் போல் காண்பதால், நீ கிருபை கூர்ந்து திரண்டு பரந்து, நிமிர்ந்து வளர்ந்து வருகிற முலையை என் மார்பில் அழுத்தி அணைவாயாகில், என் கோரிக்கை நிறைவேறும். நீயும் உலகில் அழிவில்லாப் புகழ் அடைவாயென்று சொல்ல, மச்சகெந்தி வெட்கமுற்று, பெரியாரான இவர், தம்மைப் புணர அழைக்கிறார் என்று நினைத்து, ஐயா நீரோ மகா தவயோகி. நானோ பருவம் அடையா இளம் கன்னிகை. நீர் என்னைச் சேர விரும்புவது தகுதியா? அரும்பைக் கசக்கி முகர்ந்தால் பரிமளிக்குமா? பருவகாலமில்லா என்னைக் கூடலாமா? என் மேலெங்கும் மச்சகந்தம் வீசுவதையும் எப்படிச் சகிப்பீர்? என்கவே பராசர், இது முதல் உன்பெயர் பரிமளகந்தியாயிருக்கக் கடவது, உன் மச்சகந்தம், நீங்கும் எனச் சொல்லி, ஆற்றின் மத்தியில் திட்டு தோன்றச் செய்து, இருவரும் அந்தத் திட்டில் இறங்கி கூடிக்கலந்து சேர்ந்திருந்து, உடனே பராசர் எழுந்து யாதொன்றும் சொல்லாமல் போய்விட்டாராம். மச்சகந்தி உடன் கருப்பவதியாகி, மூன்றேமுக்கால் நாழிகைக்குள், வேதவியாசர் பிறந்தாராம். அவர் பிறக்கும் பொழுதே, மான் தோல் புலித்தோலுடன் சடாவிரதராகி காவி, காம்பராய், வேதத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு உதயமானாராம். உடனே வேதவியாசர் தாயை வணங்கி, என் தந்தை எங்கே என்று கேட்க, தாய் அதோ போகிறார் என, தன் தந்தையைப் பின் தொடர்ந்து போய், தவஞ் செய்து, தன் தகப்பன் காலஞ்சென்ற பின், உலகத்தில் வேதங்கள் கருத்து வேற்றுமையாய் மாறுபட்டுக் கிடந்ததை சிக்கறுத்து, ருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என நான்காய்ப் பிரித்துக் கொடுத்ததுமல்லாமல், ஐந்தாம் வேதமாகப் பதிணெண் புராணத்தோடு, பாரதமும், வெளிப்பட்டது, பாரதம், ஆதிபர்வம், வேதவியாசர் உற்பவத்தில் இதைத் தெளிவாய்ப்பார்க்கலாம்.

மச்சகெந்தி, பரிமளகந்தியாகி, பராசரைப் பெற்றபின் சூரியவமிச

ராஜாவான சந்தனராஜனுக்கு வாழ்க்கைப்பட்டு, மூன்று பிள்ளைகளைப் பெற்று, அவர்கள் மூவருக்கும் பெண் கொண்டு, வாழும் சமயம், அம் மூவரும் செத்து, தன் புருஷனும் செத்து தானும் தன் மருமகள் மூவரும், விதவைகளாயிருக்கையில், தன் முந்தின புருஷனுக்கு விபசாரத்தில் பெற்ற முதல் மகன் வியாசரை அழைத்து தன் பிந்தின புருஷனுக்குப் பிறந்த மக்களுக்குக் கட்டி விதவையான தன் மருமக்களோடு சேர்ந்து சந்தானம் உண்டாக்கக் கேட்க, அவர்கள் மூவர்களையும் வேதவியாசர்கூடி, மச்சராஜாக்கள் ஆகிற குருகுலத்து அரசர் பிறந்தார்களாம்.

இவ்விதமாய் அந்த ஒரே வேதத்தையே, முதல் வசிஷ்டரும், இரண்டாவது சாத்திபரும், மூன்றாவது பராசரும், நான்காவது வேத வியாசரும், போதித்துக் கொண்டு வந்தார்களாம். வேதவியாசர் பிரமாசாரியானதால், பிள்ளையில்லை என்ற காரணத்தால், அதைப் பார்ப்பனருக்கு கையளித்தாராம். நாலு தலைமுறையிலும், மேற்சொன்ன நாலு பெயரால் வேதம் வந்தபடியால், அந்த ஒரே வேதத்தையே நாலு வேதமென பேதமாய்ச் சொல்லுகிறார்கள்.

வேதம் ஒன்றென்பதற்குச் சிவவாக்கியரும், திருமூலரும் சொன்ன வாக்கு :-

சிவவாக்கியர்

ஐம்பத்தொன் றிலக்கர மடங்கவோ ரெழுத்துளே
விண்பரந்த மந்திரமும் "வேதநான்கு மொன்றலோ"

திருமூலர்

"கடவுளோனொருவனுண்டே வேத மொன்றே" என்ற கவியில் பார்க்கவும் இது நிற்க, வேத வியாசரிடமிருந்து பிராமணர் அந்த ஒரே வேதத்தைப் பெற்றுக் கொண்ட போது விசேக்ஷித்த நாலு காரியங்களை வேத வியாசர் கட்டளையிட்டார்.

அவை யாதெனில் :-

1. எல்லோரும், தங்கள் ஆத்துமாவையுஞ், சரீரத்தையும், சுத்திண்பணிக்கொள்வதும்.

2. ஒரே பராபர வஸ்துவை, அரூபத்தில் மாத்திரம் ஸ்துதிப்பதும்.

3. சாதி வேற்றுமையின்றி, நீச்சர் முதலான சக்கிலியர் வீட்டிலுஞ் சாப்பிடலாமென்பதும்.

4. ஆடு, மாடு, முதலான சகல மிருகங்களையும், கோழி, கொக்கு, முதலிய சகல பட்சிகளையும், சகலவித மச்சங்களையும், புசிக்கலாம் என்றும், இந்த வேதப் பிரமாணத்தை உடையவர்கள் இவ்விதம் செய்யாவிட்டால் சாபம் சித்திக்கும் என்பதுவுமாம்.

பிந்தின காலத்தில் பிராமணர்கள்; இதற்கு மாறாய், பல பல சொந்தச் சடங்குமுறை விதிகளையும், பழக்க வழக்கங்களையும் பக்தி வழிபாட்டில் கொண்டு வந்து கலந்து விட்டார்கள். தாங்கள் அந்த வேதங்களைப் படித்து அதன் படி நடப்பதுமில்லை. மற்ற மூன்று ஜாதியாரும். அதைத் தொட்டுப் படித்தால் அநர்த்தப் பாவம் ஏற்படும் என்று, மறைத்துப் புதைத்து விட்டார்கள் என்பதிற் சந்தேகமே இல்லை.

இவ்விதம் பிர்மா, வசிஷ்டர், சாதிபர், பராசர், வேதவியாசரின் பிறப்பு, இழிகுல ஸ்திரிகளான, சக்கிலிச்சி, பறைச்சி, செம்படத்திகளைச் சேர்ந்த காரணத்தால் உண்டானது கொண்டு, இவர்கள் வேதத்தைப் போதிக்கத் தகாதவர்கள் என்று வேமையர் சொன்ன தெலுங்கு வாக்கியம்.

தெலுங்கு சுலோகம்

''தல்லி யூர்வசிலஞ்ஜ, தனயாலிமாதிக, தானுபிராமுண்டன

தகுணு சக்தி, வசிஷ்ட மாட்டலந்த வசுமாத்தியருகா,

விஸ்வதா பிராம வினரவேமா.''

இவர்க்கு உபதுணையாய் ஞானசாஸ்திரியார் சொன்ன விருத்தம். 3 முதல் 7 பாடல்.

வேத நாயக சாஸ்திரியார்

ஒப்பில்லாத பிர்மருக் கூர்வசி
யென்ற கூத்தி வயிற்றிற் பிறந்த
தப்பில்லாத வசிஷ்டருடைய
சாதி பேதக மான தில்லையோ.

அதட்டியதட்டி வேதங்களோதி
யாகம் சாஸ்திரம் படிக்கின்றீர்களே
வசிஷ்டருக்கு சண்டாளி வயிற்றினில்

வந்தவர் சாத்திபர் என்றறியீர்களோ

சங்கை யறவே புலச்சியோடு
சாத்திபர் கூடி சேர்ந்ததினாலே
புங்கனூரின் மரபில் முளைத்துப்
போதகஞ் சொன்னவர் பராசரல்லவோ

உச்சமாகிய பராசர் தானென்று
மச்சகந்தி யென்ற மீன் வாணிச்சியை
மிச்சமாக வைத்திருந்தல்லவோ
வேத வியாசரும் பிறந்த காரணம்

வசிஷ்டர், சாத்திபர், பராசருடனே
வளமை வேத வியாசரினால் வருங்
குதட்டிக்கு தட்டி, வேதங்களோதியே
குலத்தின் வேதியர்க் குயர்த்தியாயினர்

இப்படி ஆதிபூர்வமாய் வேதத்தைக் கொண்டு வந்த

வேதாந்த போதகத் தலைவர்களே, தங்கள் பிறப்பு வழிகளில் உயர்வு தாழ்வு என்ற வகையன்றி வழி நடந்திருக்கையில், அதின் அடியில் வாழையடி வாழையைப்போல் வருவோர், இடையில் நுழைந்து, இழி குலம் உயர் குலமென ஆழ்ந்து அமிழ்த்தி, ஒம்பிப் பேசுவது, ஒட்டைப் படகிலேறி, கோட்டையைப் பிடிக்கப் போகும். கபோதிக்குச் சமம் என்பதின் சந்தேகமா?

இதுவரையில் வேதம் நான்கும் உலகத்திற்கு எப்படி எப்படி? யார்? யார்? மூலமாய், கொண்டு வந்து போதிக்க பட்டதென்பதைப் பார்த்தோம். இனி, பின்வரும் பிரிவுகளில், நான்கு வேதங்களிலுள்ள சடங்குப் பிரமாண விதிமுறைகளைத் தனிப்பட்ட வகையில், சுருக்கமாய், பார்க்கவும்.

இருக்கு வேதச் சுருக்கம்

இருக்கு என்பதற்கு, பெருமை, ஸ்துதி என்று அர்த்தமாம். இதில் தேந்ர்கள் ஸ்துதியும் மற்றவர்கள் ஸ்துதியும் உண்டு. இருக்கு வேதத்தில், வசிஷ்டர் திருடப்போன போது, நாய் குலைத்ததால், நாய் வாயைக் கட்டி அடக்கும் மந்திரங்களும் அடங்கியிருக்கிறது.

இருக்கு வேதத்தில் ஐத்ரேய ப்ராஹ்மணம் என்னும் நூலுல் காணும்

யாக சம்பந்தமான விவரங்கள் பின்வருமாறு:-

நான்கு அக்கினிகள்

1. கார்ஹபத்தியம் 3. தட்க்ஷிணாக்கினி

2. ஆகவனியம் 4. சமித்ராக்கினி

என்ற நான்கு அக்கினிகளுமாம்.

யாகப் புரோகிதர்களின் பிரிவு

அத்வாயு, பிரதிப்ரஸ்தாதா, அக்நீத்ர, உன்னேதா, ஹோதா, மைத்ராவருண, ப்ராஹ்மணாசசம்ஸ, நேஷ்டா-போதா - அஷ்டாவாக - உத்காதா - ப்ரஸ்தோதா - ப்ரதிஹர்த்தா - சுப்ரஹ்மண்ணிய - க்ராவஷ்தோதா, ப்ரஹ்மா - ஸதஸ்ய - சமிதா - ஸோமக்ரயீ - ஆக புரோகிதர்கள் பத்தொன்பது பெயர் ஆவர்.

யாகத்திற்குரிய பாத்திரங்கள்

இத்மா - பர்ஹி - த்ரூணீ - ஸ்ருசா - சமஸ் - க்ரா வண - ஸ்வகு - உபவரத்ரோணகலச - வாய்வ்யகலச - கரஹ் - இடாசூறு - ஸ்வதீதி - புரோடாசபுதப்ருதா, என்பவர்கள் ஆவர்.

யாகசாலையின் பிரிவுகள்

யஜ்குசாலா - மஹாவேதி - அந்தர் வேதி பஹிர் - வேதி - சமித்ராசாலா - சாத்வால - ஸஞ்சார - பராக் வம்ச - ஸத - மார்ஜாலியா - அக்நீத்ரியாகார - பத்நீசாலா - த்வார - ப்ரதிக்வர - யூப - ஹவிர்தான - ஸாவாமுகி - தர்ம - என்பவைகளாம்.

யாகானுஷ்டானங்களின் பெயர்

தீக்ஷணீயா இஷ்டி - ப்ராயணீய இஷ்டி - ஆதித்தப இஷ்டி - தர்ம - அக்நி ஷோமீயா - பசு - ஸுத்யா - ப்ராதஸ - வன - மத்யான்ன ஸவன - த்ரூதீய ஸவன - சோமபான - ஆச்வீன பசு - ஐந்ராக்ன பசு - அவ்பருத - வருளோஷ்டி - வபாயாக - பசு உபாகரண - பசு வாலம் பணம்.

ஐத்ரேய ப்ரா- மணம், இரண்டாம் சஞ்சிகையில் உள்ளதைப் பார்க்கவும்:-

யாகாதி கர்மங்களை ஊர்ஜ்ஜிதப்படுத்தும் சுலோகங்கள்

சுலோகம்

யஞ்ஞேனவை தேவா; ஊர்த்வம் ஸ்வர்க்கம், லோக மாயம் ஸ்தே பியுரஸ்மின், நோத் குஷ்ட்வா மனுஷ்யாக ரிஷ்யஸ் சானுப் (ஐத்ரேயப்ராஹ் :

மணம் த்விதீய பஞ்சிகா பிரதமகண்டம் பார்க்கவும்)

பொருள்:– தேவர்கள் யாகஞ் செய்து சொர்க்கத்தையடைந்தார்கள். ஆதலால் மனிதர்களும், ரிஷிகளும் யாகம் செய்யக்கடவர்கள் என்பது.

யாகத்திற்குரிய ஜீவன்களை தூண்களில் பிணைத்துக்கட்டி, மந்திரமுச்சரித்த பின், தலைமைப் புரோகிதனான அத்வாயுவின் கட்டளைப் பெற்றபின், யாகப் பசுவை, சமித்ர சாலா, என்றும் பசுவை கொலை புரியும் இடத்திற்குக் கொண்டுபோய், பசுவைக் கொல்லும், சமிதா என்னும் புரோகிதன், முஷ்ட்டி என்னும் குறுந்தடியால் பசுவின் கழுத்தில் அடித்துக் கொலை செய்வான். அதன்பின் சுரா, இடா, ஸுனு, ஸவதீதி என்னும் மரப்பலகையில், பசுவைக் கிடத்தி, தோல் உரித்து, சதையை அரிந்து எடுத்து, சிறிது நெருப்பிலிட்டு மீதி மாமிசத்தைப் புரோகிதர்கள் யாவரும் பங்குபோட்டு எடுத்துக்கொள்வார்கள. யாகப் பசுவை மந்திரம் சொல்லிக் கொன்றபின், அதை அறுத்தெடுக்கும் முறை மந்திரம் பின்வருமாறு:–

மந்திரம்

அந்தரே வோஷ்மாணம் வாரயத் வாதிதி பசுஷ் வேதத் பராணான், ததாதி ஸ்யேனமஸ் யவக்ஷ க்குரு ணுதாத் ப்ரதஸா பாஹீசலா தோஷணீகஸ்யலேவாம், ஸாச்சித்ரே ஸ்ரோணீக வஷோரூஸ் ரேகர்ணாஷ்டி வந்தா ஷட்விம்சதி ரஷ்ய வங்காயஸ்தா அனுஷ்டயோச்ய வயதாத் : காத்ரம் காத்ரமஸ் யானூனம். (ஐத்ரேய பஞ்சிக 3 – காண்டம் 6 பார்க்கவும்.)

இதன் பொருள் :– மார்பிலிருந்து பருந்தின் வடிவில் சதையை அறுத்தெடுக்க வேண்டும். பின் காலிலிருந்து இரண்டு துண்டுகளை அறுத்தெடுக்க வேண்டும். முன்கால்களிலிருந்து, அம்புவடிவாக இரண்டு துண்டு அறுத்தெடுக்க வேண்டும். தோளிலிருந்து ஆமை வடிவமாக இரண்டு துண்டுகளை அறுத்து எடுக்க வேண்டும். இவ்வாறே அந்தந்த அவையவங்களிலிருந்து, இருபத்தாறு துண்டுகளை அறுத்து எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் இவ்விதம் அறுத்து எடுத்துக் கொள்க என்பது.

பக்தியைக் கடைப்பிடிப்போர், முக்தி பதவியடைய இவ்வித பலவித யாகங்களைச் செய்து முடித்தேயல்லாது, வேறு வழியில் முக்தி சேர முடியாதென்பதை, உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் காட்டுவதே இருக்கு வேதத்தின் சுருக்கமான விளக்கம். நூற்றுக்கு எத்தனை பேர் இவ்வித யாகாதிக்கருமங்களையும், சடங்குப் பிரமாணங்களையும் நிறைவேற்றி முக்தி பேறு பெறமுடியும் என்பதை வாசகர்களே விளங்கிக் கொள்ளவும்.

புலால் தின்போரை, புலையர், தீண்டாதார் என்னும் பொய்க்குருக்களான

கள்ளக்குருக்கள், பசுக்களைக் கொன்று யாகம் செய்து மந்திரம் உச்சரித்து. யாவரும் பங்கிட்டு இறைச்சியைச் சமைத்து புசிக்கும் போது, தீட்டு எவ்விதம் மறைந்ததென்பதை கேட்பார் இல்லையே!

மச்சய புராணத்தில், சொல்லியுள்ளபடி; யாகத்தில் பொதுவாய் பசுவை மட்டும் அல்ல; ஆடு, மாடு, குதிரை, பாம்பு, மனிதன் ஆகிய சர்வத்தையும் கொன்று யாகம் செய்வதே முறையாய்க் காண்கிறது.

2. யசுர் வேதச் சுருக்கம்

யசுர் என்பதற்கு ஸ்தோத்திரம் என்று அர்த்தமாம். யசுர் என்றால், யாகாதி கருமங்களைச் செவ்வையாய் விவரித்து உணர்த்தும் நூல் என்பது பொருள். யசுர் வேதத்தைப் படித்தவன்தான் அத்வர்யு என்னும் யாக புரோகித பதவிக்கு ஏற்றவனாம். இப்பதவியை ஏற்றவனே புரோகிதர்க்கெல்லாம் தலைமைப் புரோகிதனாம்.

முன்னே விவரித்துள்ளபடியே, யசுர் வேதம், இரு பிரிவாய் கிருஷ்ண யசுர் வேதம், சுக்கில யசுர் வேதம் எனப்பெயர் கொண்டது. கிருஷ்ண யசுர் வேதத்தின், பிராஹ்மணம், தைத்திரீயம், சுக்கில யசுர் வேதத்தின் பிராஹ்மணம் வாஜஸ்நேயம்.

கிருஷ்ண யசுர் வேதத்தில் விவரித்துள்ள யாகக் கொலைகளுக்கு கணக்கேயில்லை. சில யாகங்களில் நாய், தித்திரி என்னும் பறவை, வெள்ளை கொக்கு, கருந்தவளை முதலான பிராணிகளையும் கொன்று யாகபலி செலுத்த வேண்டும்.

பிராஹ்ம தேவனுக்கு பிராஹ்மணரையும் யாகச் செய்ய வேண்டும். (தைத்திரீயம், 3–ம் கண்டம், 4–ம் அத்தியாயம் 1–ம் அனுவாகத்தைப் பார்க்கவும்)

வேதத்தில், நரமேதம் (நரபலி யாகம்) செய்யும் போது பல வகுப்பினிலும்; பல தொழில்காரர் 20 பேரைத் தூண்களில் பிணைத்துக்கட்டி புருஷஸூக்தம் என்னும் மந்திரத்தை உச்சரித்து நீர் தெளித்து யாகம் முடிக்கச் சொல்லியிருக்கிறது.

1. கிருஷ்ண யசுர் வேத விளக்கம்

கிருஷ்ண யசுர் வேத தைத்தரீய ஆரண்யம் என்னும் நூல், பத்து அதிகாரங்களையுடையது. இதன் 6–ம் அத்தியாயம், பித்ருமேதம் என்பதை விவரித்துக் காட்டுகிறது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், இறந்தால் இவர்களைத் தகனிக்கும் விதி, முறைப் பிரமாணங்களும் இதில் அடங்கியிருக்கிறது.

கிருஷ்ண யசுர் வேதத்தில் காணப்படும் யாகங்களில் சிலவற்றை கீழே காண்கவும்.

யாகங்களின் விபரம்

1. ஸௌத்ராமணி – மதுவருந்தும் யாகம்
2. சுராக்ரஹா மந்திரம் – லாகிரியருந்தும் யாகம்
3. ஐந்த்ரபர – இந்திரனுக்கு காட்டுபலியாகம்
4. கோஸவம் – பசு, காளை யாகம்
5. அத்யுர்யாம – ஒருவித (கொலை) யாகத்தின் பெயர்
6. வாயுவியஸ்வேத பசு – வாயுதேவனுக்கு வெண்பசு யாகம்
7. காம்ய பசு – எண்ணம் ஈடேற யாகம்
8. வத்ஸோபகரணம் – இளங்கன்று யாகம்
9. பௌர்ணமா ஸேஷ்டி – பௌர்ணமைதின யாகம்
10. நக்ஷத்ரேஷ்டி – நக்ஷத்ர தேவதை யாகம்
11. புருஷயஜ்ரு – நரயாகம்
12. வைஷ்ணபசு – விஷ்ணுவுக்கு ஆட்டு பலி
13. ஐந்த்ராக்கபசு – இந்திரன், அக்நிக்கு ஆட்டுப்பலி!
14. ஸவித்ரபசு – சூரியனுக்கு ஆட்டுபலி
15. அஸ்வமேதம் – குதிரை பலியாகம்
16. ரோஹிதாதி பஸ்வாலம் பணம் – செந்கிற ஆட்டுபலி
17. அஷ்டதச பசுவிதானம் – பதினென் பசுயாகம்
18. சாதுர் மாஸ பசு – மழை காலத்தில் ஆட்டுபலி
19. ஏகாத சீன பசுவிதானம் – பதினொரு பசுயாகம்
20. க்ராமாரண்ய பசுப்ரசம்ஸா –நாட்டு; காட்டு பசுபலி
21. உபகரண மந்தரம் – யாகப்பசு சுத்திகரிப்பு மந்தரம்
22. கவ்விய பசுவிதானம் – பசுயாகம்
23. ஸத்ரம் – தொடர்ந்து செய்யும் யாகம்
24. ரிஷிபாலம் பனவிதானம் – எருதுயாகவிதி
25. அஸ்வாலம்பன மந்திரம் – குதிரைப்பலி மந்திரம்
26. அஸ்வஸம்ஜிஞபனம் – குதிரைப்பலிவிதி
27. அஸ்வ, மனுஸ்ய, அஜகோ – குதிரை, மனிதன், ஆடு, மாடு, கொல்லவிதி
28. ஆதித்ய தேவதர்க பசு – சூர்யனுக்கு பசுயாகம்
29. ஸொபிபசு – ஸோமதேவதை யாகம்
30. பருஹஸ்பதிவை பிரகாஸ்பதி தேவதை பலி.

கிருஷ்ண யசுர்வேத யாகங்களில் இங்கு காண்பித்த யாகங்கள் அல்லாமல், இன்னும் பலவித யாகங்கள் உண்டு. அவை எல்லாம் எழுத ஏடு குறைவு கண்டு, இத்துடன் நிறுத்தலாயிற்று. முக்திசேர இவை எல்லாம் செய்து முடித்தே பக்தியை பூரணமாக்க வேண்டுமென்பது வேதத்தின் உட் கருத்து.

2. சுக்கில யசுர் வேத விளக்கம்

யசுர் வேதத்தில் 2-ம் பிரிவாகிய சுக்கில யசுர் வேதம், நாற்பது அதிகாரங்களைக் கொண்டது. யாகக் கொலை உபதேசத்தில் இது கிருஷ்ண யசுர் வேதத்திற்கு சமத்வமானது. இதன் பொருள் அட்டவணைகள் பின்வருமாறு. அவற்றை அந்த அந்த அத்தியாயங்களில் ஒத்திட்டு பார்த்து விளங்கிக் கொள்ளவும்.

1. தர்ச பௌர்மாசை	1-ம் 2-ம்	அத்தியாயம்
2. அக்திஷ்டோம்	4-ம்	,,
3. உபாகம் சுக்ரஹமந்த்ரம்	7-ம்	,,
4. ராஜஸூயஸெத்ராமணியாகம்	10-ம்	,,
5. சிதி	12, 15-ம்	,,
6. ஆதானம்	3, 1-ம்	,,
7. ஆதிபயேஷ்டி	5, 6-ம்	,,
8. ஆதித்யக்ரஹ மந்த்ரம்	8-ம்	,,
9. சயனம்	11-ம்	,,
10. சதருத்ரீய மந்த்ரம்	16-ம்	,,
11. சிதிவ ஸோர்தாரா	17, 18-ம்	,,
12. அஸ்வ மேதம்	22-ம்	,,
13. பசுப்ரகரணம்	24-ம்	,,
14. புருஷ மேதம்	30, 31-ம்	,,
15. பித்ரு மேதம்	34, 35-ம்	,,
16. ப்ராயசித்தம்	37-39-ம்	,,
17. ஸௌத்ராமணி	19-21ம்	,,
18. அஸ்வலீலா பாஷானம்	23-ம்	,,
19. அஸ்வ மேதம்	25-29-ம்	,,
20. ஸர்வ மேதம்	32, 33-ம்	,,
21. சாந்தி பாடம்	36-ம்	,,
22. ஜ்ஞான காண்டம்	40-ம்	,,

★ அஸ்வலீலா பாஷாணம் என்பது மிக அருவருப்பான கிரியை நடத்தல்.

இது அஸ்வமேத யாகத்தில் புரோகிதர்களுக்கும், பெண்களுக்கும் சம்பந்தப்பட்டது. இங்கு இதை எழுதவே கூடாதென விடப்பட்டது.

அஸ்வமேத யாகத்திற்கு இருபத்தொரு தூண்கள் நட்டு, மத்தியிலுள்ள தூணில், பதினேழு பசுக்களைக் கட்டவேண்டும். மற்ற தூண்களில், தூண் ஒன்றுக்கு பதினைந்து பசுக்கள் வீதம், முன்னூறு பசுக்களைக் கட்டவேண்டும். இத்துடன் காட்டுப்பசுக்கள் இருநூற்றறுபதும் சேர்த்து யாகம் செய்யவேண்டும். காட்டுப்பசுக்களைக் கொல்லாது அவிழ்த்துவிட வேண்டும்.

இந்த யாகத்தில், அன்னம், எலி, ஓர்வகை மான், யானை, தவளை, அட்டை முதலான ஜீவன்களும் பலியிடப்படுகிறது.

யசுர் வேதத்தில், வாஜஸ்னேயம் முப்பதாம் அதிகாரத்தில் சொல்லியிருப்பதேதெனில், நரமேதம், சைத்ரசுக்கில தசமி தினம் ஆரம்பம். இங்கு பதினொரு தூண் நட்டு, பதினொரு ஆடும், இருநூறு மனிதர்களையும், கட்டவேண்டும். அதில் கட்டியிருக்கும், ஜீவன்களுக்கு ஜலம் தெளித்து மனிதர்களை அவிழ்த்துவிட்டு, ஆடுகளை மாத்திரம் அறுத்து யாகம் செய்யவேண்டும். அஸ்வமேதயாகம் செய்வதால், மனிதருக்கு ஆடு, மாடு, குதிரை, நல்மனைவி, புத்திரர், சரீரவண்மை முதலியன உண்டாகுமென்பது நம்பிக்கை.

3. ஸாம வேதச் சுருக்கம்

ஸாமம் என்பதற்கு சங்காரம் என்றர்த்தமாம். இந்த வேதத்தில், பாவ விமோசனத்தைப்பற்றி, விசேஷமாய் சொல்லப்பட்ட பல் சடங்குப் பிராமணங்கள் உண்டு. இதுவும் யாகக் கொலைகளை அதிக விரிவாய் விளக்குகிறது. இதைச் சேர்ந்த தாண்ட மகாப்ராஹ் மணத்தில், யாகச்சடங்குகளைத் தெளிவாய் அறியலாம்.

இதிலுள்ள யாகங்களில் விசேஷித்தவை பின்வருமாறு:-

1. அக்நிஷ்டோமாதி ஸப்தக்ரது
2. ஔபஸதக்ரது
3. சதுஷ்டோ மக்ரது
4. உத்பாவத் வலபிதக்ரது
5. இந்தரஸ்தோ மக்ரது
6. நிதனக்ரது
7. வஷிஷ்டக்ரது
8. சதுராத்ர
9. விஸ்வாமித்ர ஸஞ்சய சதுராத்ர

10. சஞ்ச சாரதீய பஞ்சராதிய பஞ்சராத்ர
11. விஸ்வஜித் ஏகாதசராத்ர
12. ப்ரக்ஷயாக் யக்ரது
13. சைராதக்ரது
14. காக்தக்ரது
15. அங்கிரஸாமயனக்ரது
16. சதராத்ரக்ரது
17. திவாதஸமிவத்ஸரஸத்ர
18. ஷட்த்ரிம் சத்ஸம்வத்ஸ
19. ஸாஸ்வத ஸத்ர
20. ராடக்ரது
21. ஜியோதிக்ரது
22. ரிஷபாக்ய யக்ரது
23. குலயாக் யக்ரது
24. த்ரிகத்துருகஷ்ட்ராத்ர
25. ப்ரஜாபதி ஸபதராத்ர
26. ஐந்த்ர ஸப்ராத்ர
27. ஜனகஸப்தராத்ர
28. தேவநவராத்ர
29. விம்சதிராத்ர
30. த்ரயஸித்ரிம்சதிராத்ர
31. சத்வாரிம்சத்ராத்ர
32. ஏகஷஷ்டிராத்ரக்ரது
33. ஸகஹஸ்ரஸம்வத்ஸரஸத்ர
34. ஸர்ப்பஸித்ர
35. விஸ்வஸ்குஜமயரைத்து
36. ஆதித்யப்ருஷ்டயமனக்ரது
37. ஸிம்வத்ஸரஸத்ர

இந்த தாண்டமஹாப்ராஹ் மணத்தில், உள்ள யாகங்கள் பல, பல வருடங்கள் தொடர்ந்து செய்யவேண்டியவைகள். இதில் வைசியனையும், யாகபலி செய்யவேண்டும். இதைச் செய்வோருக்கு, செல்வம், பசு, சந்ததி இவைகள் விர்த்தியாகுமாம். அத்துடன் சுவர்க்கலோக பிரம்மபதவியும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

4. அதர்வண வேத சுருக்கம்

அதர்வணம் என்பதற்கு அழித்தல் என்பது அர்த்தம். இந்த வேதத்தில், தேவர்களுக்குரிய சிலமந்திரங்களும், பகைவர்களைக் கொல்ல உள்ள மந்திரங்களுமாக பல கர்ப்பனை மந்திரங்கள் உண்டு. இது நான்காம் வேதம் என்று சொல்லப்படும்.

இதைச்சேர்ந்த ப்ராஹ்மணம் கோபதம் எனப்படும் யாகம்செய்த பசுவைப் பங்கிடுமுறை (கோபதப் பிராஹ்மணம், பிரபாடகம், 3–ம் காண்டம் 10–) சொல்லப்பட்டிருக்கிறது. சடங்குப் பிராமணங்களில் உள்ள சில மாறுதல்களேயன்றி மற்றப்படி எல்லாம், முன்னுள்ள மூன்று வேதங்களில் கண்டுள்ளபடியே இருக்கிறது.

பிராமணரை, மற்றவர்கள் நம்பத்தக்க விதமாய் வேதம், கடவுளால் ஆக்கப்பட்டது என்று பிராமணர்கள் சொன்னாலும், அது அவ்விதம் உண்மையே அல்ல.

"வேதங்களை ரிஷிகளே உண்டாக்கினார்கள். அவர்கள் சொன்னது எதுவோ, அதுவே தேவதை," என்பது இதற்குப் பிரமாணம்.

சுலோகம் : யஸ்ய வாக்கியம் ஸரிஷி : யாதேனோச்யதேஸா தேவதாயதக்ஷர பரிமாணம் தச்சந்த........

"யசுர்வேதம் தைத்தீரிய ஆரண்யகம், ப்ரபாடகம் 1, அனுவாகம் 1." இம்மாதிரியே ருக்வேதத்திலும், பலவிடங்களில் காணலாம்.

உதாரணம் :– "ரிஷேர் மந்த்ரக்ருதாஸ் தோணம் : கஸ்யபோத்தர்த்தயன்கிர"

கீதையிலும் இவ்வித சுலோகங்கள் உண்டு:– "ரிஷிபிர், பகுதாகீதம் சந்தோபீர் விவிதை : ப்ருதக்." (கீதா அத் 13 : சூ 14)

பொருள் : பலரிஷிகள் பல காலங்களில் பாடினதே வேதம்.

மேல் காணும் சுலோகங்களின் பொருள் அத்தனையும், வேதங்களை கடவுள் உண்டாக்காமல், ரிஷிகளே உண்டாக்கினார்கள் என்று விளக்குகிறது.

வேதங்களை, ரிஷிகளே உண்டாக்கிபிருக்க, அவைகளைக் கடவுளே உண்டாக்கினார் என்பதற்கு நியாயம் எப்படியென்றால் நிகண்டில், பிராமணர்களையும், ப்ரஹ்மா என்று குறித்துக்காட்டக்கூடிய சொல்லும் இருப்பதால்தான். பிராமணர்களாகிய ப்ரஹ்மாக்கள் தங்களை சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மாவுக்குச் சமமாக்கி, அவர் வாயினின்று வேதம் வந்ததாய்ச் மாறாட்டமாய்ச் சொல்லக் காரணமாயிற்று.

கீழ்க்காணும் சுலோகத்தில், பவபூதி என்னும் கவி, தன்னையே ப்ரஹ்மாவென்று சொல்லிக் கொள்கிறார். இதைக் கூர்ந்து கவனிக்கவும். இதனால் பிராமணர்கள், ப்ரஹ்மாக்களாய் அழைக்கப்பட்டு, ரிஷிகளாகிய பிராமணர்களால் வேதம் வெளிப்பட்டது உண்மை என்றும் கடவுளால் இந்த வேதம் உண்டாக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. இதை ஆழ்ந்து, ஆராய்ந்து அறியமுடியாத, பார்ப்பனரல்லாத மற்றவர்கள், ப்ரஹ்மாவென்ற தப்பர்த்தத்தைக் குறியாய்க்கொண்டு, கடவுளால் உண்டாக்கப்பட்டதே வேதம், என்று இன்னும் பொய்நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

சுலோகம்

"யாம்", "ப்ரஹ்மா" ணமியம் தேவி வாக்வஸ்யே வான்ய வர்த்தத உத்தரம் ராம சரிதம் தத்பரணீதம் ப்ரஷதோ

இது உண்மையானாலும், வேதம் முகத்திலிருந்து வந்ததென்பதை; வியாக்கியான சிதைவு வார்த்தையேயன்றி, உண்மையல்ல.

இவற்றுள் ஆஸ்வலாயனரால் செய்யப்பட்ட சிரௌத சூத்திரங்களை இங்கு பார்க்கவும்.

சிரௌத சூத்திரமென்பது, யாகம் செய்யும் விதிமுறைகளைத் தெரிவிப்பது. அவையாவன:-

1. இராஜீயம் 2. கவாமயணம் 3. கோஸவம் 4. அஸ்வமேதம்
5. அங்கிரசக்ரது 6. சாகமேதம் 7. பஞ்சசாகரதீய 8.விஸ்வஜித்
9.பௌண்டரீகம் 10. பரதத்வாதசஹாகம் 11. ஸம்பத்ஸரஸத்ரம்

12.மஹாவ்ரதம் 13. ராத்திரிஸத்ரம் 14. சதாரத்ரம் 15. ஸ்தோமம்

16. த்வாதசஸீம்வத்ஸரம் 17. ஸகஸ்ரஸம்வத்ஸரம் என்பவைகளாகும். இந்த யாகங்களையும், இதைப்போன்ற மற்றுள்ள யாகங்களையும், முன்சொன்ன நான்கு அக்கினிகளில் (கார்ஹபத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணாக்கினி என்னும் மூன்று அக்கினியை ஆராதிக்கும் அக்கினி கோத்திரத்தாரே) செய்யவேண்டுமாம்.

அக்கினி தோத்திர வழிபாடுகள், ஒருவனின் கலியாண முடிந்த மறுநாளிலிருந்து ஆரம்பமாக வேண்டுமாம். இவ்விதம், அக்கினி தோத்திர வழிபாடுகளில் ஈடுபட்டவன் தொடர்ந்து மூன்று நாள் வரை அக்கினிதோத்திரம் செய்யாமலே விட்டுவிட்டால், அவன் தானாகவே சூத்திரனாய் விடுவானாம். இதனால் பிரம்மாவின் பாதத்திலிருந்து பிறந்த சூத்திரனின் தாழ்ந்த நிலையை, சுத்தப்பிராமணரும் அடையலாம் என்பதை விளக்குகிறது. இது உண்மையென்றால், வேதமென்பதும், துதிதோத்திர ஒழுக்கம் இன்னதென்பதும், அறியாமல் பலதுறைகளிலும் பிழைப்புத் தொழில் அலுவலில் சிக்குண்டு, ஈடுபட்டிருக்கும் பார்ப்பனரில் நூற்றுக்கு எத்தனை பேர் இதைக் கைக்கொண்டு நடப்போர் உண்டு என்பதை இடைபோட்டால், நூற்றுக்கு வீசமாவது இருப்பாரோ? இல்லையே! அக்கினி தோத்திரத்தை மேற்படி சொன்னபடி தொடர்ந்து செய்து, சூத்திரர் ஆகாத, சுத்தப்பிராமணர் எத்தனை பேர் உண்டு என்பதை விவரிக்க அவசியமில்லையே! முக்திசேர உள்ள இடுக்கமான வாசலை, வாசகர்களே கவனிக்கவும். இவ்வித யாகங்களை செய்து ஒருவன் முக்திசேர முடியுமென்றால், இது சூரியனை ஏணிப்படியிட்டு ஏறிப்பிடித்து சிமிளில் அடைத்த கதையையொக்குமென்பது பொருத்தமல்லவா?



33

மதுபர்க்கம் வழங்கல்

மதுபர்க்கம் கொடுப்பது ஓர் விசேஷித்த பழக்கம். குரு, அரசன், சிற்றப்பன், மாமனார், மருமகன் வீட்டுக்கு வரும்போது, மதுபர்க்கம் கொடுக்க வேண்டுமாம். மதுபர்க்கம் கொடுக்கும் முறையைப்பற்றி "க்ருஹய சூத்திரம்", முதல் அத்தியாயம், நான்காவது கண்டிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. (சூத்திரம் : 26)

மதுபர்க்கம் என்பது, பசு, எருதுகளின் இறைச்சியை நெய்யில் பொரித்து தேன்விட்டு பிசைந்து, விருந்தினர்க்குப் படைப்பதாம். மாமிசம் இல்லாமல் மதுபர்க்கம் செய்ய முடியவே முடியாதாம்.

"ஆபஸ் தம்பீய தர்மசூத்திரம்", என்னும் நூல், ஆபஸ் தம்ப ரிஷியால், தன் ஜகாக்களைச் சேர்ந்த பிராமணர்களுக்காய் எழுதப்பட்டது;

அதிலுள்ள சுலோகத்தில், ஒன்று பின்வருமாறு:-

"தேன் வனடு ஹோ, பக்ஷயம் மேத்ய" "மனடுஹம் கோமது பர்கார் ஹோ வேதாத்யாய."

இதன் பொருள்:- 1. தேன் வனடு ஹோ = பசுமாடும் எருதும். பக்ஷயம் = உணவுக்குரியவை 2. மேத்யமானடு ஹம். மேத்யம் = புத்திக்கு நல்லது. ஆனடுஹம் = எருதின் இறைச்சி. இரண்டும் சேர்த்தால், எருதின் இறைச்சி, புத்தியை வளர்க்கும் எனப்பொருள். இவ்விரண்டின் முழுஅர்த்தம், பசுமாடும், எருதும் உணவுக்குரியவை, எருதின் இறைச்சி புத்தியை வளர்க்கும் என்பதாம்.

நவ காண்டிகா சிராத்த சூத்திரத்தில் பல பறவைகள், மீன்கள், விலங்குகளைக் கொன்று, சிராத்தத்தில், பிராமணர்களுக்கு ஊட்ட வேண்டுமென்று, விதியிருக்கிறது. ஆசாரியர், ரித்விக், அரசன் முதலியோர், வீட்டுக்கு வந்தால், மதுபர்க்கம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வனைத்தும் நாம் எழுதியதா? இவ்வகை பழக்க வழக்க, அனுபவமுடைய மேன்குலத்தவர் நம் போன்றவரை, இழிகுலத்தோர், தாழ்ந்த குலத்தோர் என்பதில் ஏதும் நீதியுண்டா?



34

அஸ்வமேதயாகம்

அஸ்வமேதயாகத்தின் அருவருப்பை இங்கு எழுதவே கூடாது. இதை எழுத கை கூசும். மகா பாதகச் செயல் நிறைந்த அருவருப்பு. சுருக்கிச் சொன்னால், அஸ்வம் = குதிரை, மேதம் = சேர்க்கை. அதாவது, குதிரையுடன் சேர்தல் என்று அர்த்தம்.

அஸ்வமேதயாகத்தில், யாக பசுவாகிய குதிரையை, எஜமான் மனைவியாகிய, மஹிஷியோடு, இயர்கைக்கு மாறான வகையில், புணர்ச்சி செய்யவிடுதலாம். இதைப்போன்ற மற்ற பௌண்டரீகம் முதலிய அருவருப்பான பல யாகங்கள் வேதத்தில் இருக்கிறது. இவ்வித பல யாகங்களை, தேவர்களும், ரிஷிகளும், மனிதர்களும் செய்து முடித்தாலன்றி வேறு வகையில் முக்தி பதவியடைய முடியவே முடியாது என்பது வேதாந்த இரகசியம். ஐயையோ, இது எத்தனை பரிதாபக் காட்சியும், பாவமுமென உணர வேண்டாமா?

இவ்வித யாகபலிகளை பராபரவஸ்துவாகிய

தேவன் மனிதரிடத்தில் தமக்குச் செய்யும்படி எதிர்பார்த்து, இவ்வித யாகங்கள் பலிகளுக்கு பலனாக முக்தியளிப்பார் என்று நம்புகிறீர்களா? இவ்வித அருவருப்பான யாக பலிகள் பரிசுத்த தேவன் ஏர்வை கொள்ளும் யாகமாகுமா? இவ்வித யாக பலிகளைச் செய்வோர் இன்று எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? அல்லது இவ்வித யாகபலியால் முக்தி சேர்வோர் எத்தனை பேர் உண்டு என்றாவது சொல்ல முடியுமா? இதெல்லாம் கள்ளக்குருக்களின் வஞ்சிப்பான போதனை என்பதை கண் விழித்துப் பார்த்து அறிந்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியம். இன்றே! இப்பொழுதே!

புலால் தின்போரை சூத்திரர், தீண்டாதார் என்று சொல்லும் கள்ளக் குருக்கள். மறைமுகமாய் விருந்தினருக்கு பசு, எருது மாமிசத்தை நெய்யில் பொரித்துத் தேனிட்டு புசிக்கக் கொடுப்பதும், யாகப்பலிகளில் கொன்ற ஜீவன்களின் இறைச்சியை பங்கு போட்டுக்கொண்டு சாப்பிடுவதும் நியாயந்தானா? இவ்வித இரகசிய விதிமுறைகள் உண்டு என்பதை அறியாதோர், எத்தனையோ பேர் இருக்கிறார்களே! மற்றோரை இழிகுலத்தோர் என்று இகழ்ச்சியாய்ப் பேசி, குருக்கள்மார் வேதம் சொல்லி, யாகபலியின் இறைச்சியைப் புசிக்கும் போது தீட்டில்லை என்பதுதானே நினைவு? இப்போது தீட்டு எவ்வகையில் மறைந்து போனது? என்பதை விளக்கிச் சொல்வார் இல்லையே! இதெல்லாம் அடங்கியதே யாகமாகுமென்று யாரும் இதை மறக்கமுடியாதே! இது எப்படி முக்தியளிக்க முடியும்? அந்தோ பரிதாபமே! இதன் காட்சியின் முடிவென்னவாகுமென்பதை வாசகரே சிந்தியுங்கள்.

35

உபவேதங்கள் நான்கின் விளக்கம்

முன்சொன்ன நான்கு வேதங்களாகிய இருக்கு, யசுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கிற்கும், நான்கு உபவேதங்கள் உண்டு.

அவையாவன:-

1. ஆயுள்வேதம் 2. அருத்தவேதம் 3. தனுர்வேதம் 4. காந்தருவவேதம் என்பவைகள். இவையனைத்தின் பொருளை இச்சிறிய புஸ்தகத்தில் விவரிக்க முடியாதாகையால் அதை அவைகளில் வாசித்து அறிந்து கொள்ளவும்.

36

முப்பத்திரண்டு உபநிடதங்கள்

உபநிடதம் என்றால், வேத நுட்பம் என்பது அர்த்தம். இந்த முப்பத்திரண்டு உபநிடதங்களும், இருக்கு, யசுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதத்தின் உபதேச பிரமாணங்களிலிருந்து உண்டானவை. அவைகளின் பெயர்களாவன:-

1. இருக்கு
2. யசுர்
3. ஸாமம்
4. அதர்வணம்
5. தைத்திரீயம்
6. மிருகதாரணியம்
7. இலிங்கம்
8. சாரீரம்
9. நாரசிங்கம்
10. சத்பதப்பிரமாணம்
11. காருடம்
12. கருப்பம்
13. சாந்தோக்கியம்
14. கடவல்லி
15. முண்டம்
16. முற்கலம்
17. பிரமலிந்து
18. தாபநீயம்
19. சுபாவம்
20. யாக்கியவல்கியம்
21. மைத்திராவருணம்
22. சிற்குணாலயம்
23. மந்திரம்
24. மானதீபம்
25. மகோபநிடதம்
26. காலாக்கினியுருத்ரம்
27. சாபாலம்
28. நாராயணம்
29. சுவேதாச்
30. சுபாலம்
31. பரமாத்துமியம்
32. அதருவச்சிரம்

என்பவைகளாம். இந்த முப்பத்திரண்டு உபநிடதங்களின் உட்பொருட் களையும் அந்தந்த பிரிவுகளில் வாசித்து அறிந்து கொள்ளவும். இந்த நான்கு வேதங்களிலும், அதன் உபவேதம் நான்கிலும், பின் உள்ள உபநிடதம் முப்பத்திரண்டிலும், அடங்கினதே, வேத உபதேச ரகசியங்களும் யாகப் பலிகளுமாம். இந்த வேதத்தை பிராமணர் தவிர, மற்ற க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்கள் ஆகிய மூன்று வகுப்பாரும் தொடவும், வாசிக்கவும் கூடாது. தோஷம் எனக்கட்டுப்பாடுகள் கூறி இருக்கிறது. முன் இருந்த தபசிகள், ஞானிகள், முனிவர்கள் இவ்வேதங்கள் அனைத்தையும் உண்மையற்றதென்று கண்டிருப்பதைக் கீழே காண்கவும்.

அகஸ்தியர் ஞானம் பாடல் 13

இன்பமாய் நால் வேதம் வந்த வாறு
  மெழுதினார் வேதவியாசர் சாத்தான் போல
அன்பாகப் பல விகத்திற் கட்டிப்போட்டா
  ரதனாலே மானிடர்கள் கெட்டுப்போறார்
முன் போல சித்தரெல்லாங் கொஞ்சங் கொஞ்சம்
  மூடினதைத் திறந்துவிட்டார் முடுகி நானும்
அன்பாகத் திறந்து விட்டேன் வெளிச்சமாக
  அரனார் உத்தாரப் படியறிவித்தேனே

பாட்டு 16

நிசமான நால் வேதமாறு சாஸ்திரம்
  நினைவதனை மயக்கிவைக்கும் புராண சாத்திரம்
வசமாக நால்மதத்தில் வந்த சாஸ்திரம்
  மற்ற மற்ற சாத்திரத்தின் வசமிதெல்லாங்
குசமசக்கு குசமசக்கு அப்பா அப்பா
  கூறுகிறேன் சுய வேத சாஸ்திரந்தன்னை
நிசமாய் நம்பினபோர்க்கீடேற்றமுண்டு

நிலைஞானக் கண்ணொளியு நிற்குந்தானே

பாட்டு 27

தேடுவாய் புலத்தியனே நன்றாய்க்கேளு
தீங்கி டங்கைத் தேடாதே தெளியச்சொன்னேன்
பாடுவாய் பதினெட்டுப் புராணங்கட்டுப்
பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனிற் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரகக் கட்டப்பா நம்பவேண்டாம்
ஓடு வாயருள்பாதம் பூசை செய்து
உத்தமனே கண்ணீராற் கழுவுவாயே.

பாலானந்த சுவாமிகள் ஞானக்கும்மி 146-ம் பாட்டு

தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி
வேதசாத்திரப் பொத்தலை மூடுங்கடி
முத்திதருஞானவஸ்துவை வாவென்று
மூட்டி கும்மியடியுங்கடி

ஞானவெட்டியான் விருத்தம் பாட்டு 465

வியாசர் சொல்லும் பாரதத்தில் வெகு பொய் வீணாம்
மேதினியோர் மாய்கையினில் விரும்பச் சொன்னார்
ஆய்ந்து கவி பாடிவிட்டான் கம்பன் வம்பன்
அதீத ராமாயணத்திலனேகம் பொய்தான்
சாயாம லதிவீர பாண்டியன் சொல்லுந்
தமையேந்தி சரித்திர நைடதமுஞ் சொன்னார்
சுயமாகா திது கவிகள் சுத்தப் பொய்தான்
தொடுகவி மாணிக்க வாசகர் சொன்னாரே

பாட்டு 466

தேவாரமான திருவாசகத்தைச்
செகத்தோர்கள் படித்து மெத்த தியங்கினார்காண்
பேயான ஆண்டிகட்குப் பிழைப்புக்காக
பேசி வைத்தார் மற்றொன்றோ பிசகேயில்லை
சாவாதார் மாய்கை தனிலடி பட்டோர்க்குத்
தளர்ந்த பின்பு ஞானவிதி சாராதென்னில்
தூவாத சாந்த வெளியறிந்தோரல்ல
சுக்கிலமுமழிந்த பின்பு துலங்கார்தானே.

குதும்பைச் சித்தர் பாட்டு 152

பற்பல மார்க்கங்கள் பகர்ந்திடும் வேதங்கள் கற்பனையாகுமோடி–
குதம்பாய், கற்பனையாகுமோடி
அந்தணர்க்காவை யளித்தோர்க்களாவுக்குச் சொந்தமோ முத்தியடி–
குதம்பாய் சொந்தமோ முத்தியடி

பாட்டு 199

வேதியர் காட்டிய வீணாண வேதத்தைச்
சோதித்துத் தள்ளேடி–குதம்பாய்–சோதித்து தள்ளேடி

பாட்டு 202

வேதம், புராணம், விளங்கிய சாஸ்திரம்
போதனையாகு மோடி – குதம்பாய் போதனை யாகுமோடி

பட்டணத்துப்பிள்ளை கலித்துறை

நேமங்கள் நிஷ்டைகள் வேதங்களாகமநீதி நெறி
ஒமங்கடற்ப ணஞ்சந்தி செபமந்திர யோக நிலை
நாமங்கள் சந்தணம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர் செய்யும் சதி சற்பனையே

பத்திரகிரியார் புலம்பல் 156

சாத்திரத்தைச் சுட்டு சதுர் மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்

திருமூலர் விருத்தம்

பலகலைகளோது வகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால்வேதமாறு சாஸ்திரம்
அலையுடனே தத்துவங்கள் தொன்னூற்றாறும்
யவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்
மலையரசன் சிவன் பிரம்மா விஷ்ணுதானும்
மாசில்லா நாதனுடவழியுங் காணார்
நிலை பெருக மோட்சவழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினேமே

அகஸ்தியர் ஞானம் 6–ல், 4–ம் பாடல்

உத்தராந்தானிப் படியே புராணங்கட்டி
யுலகத்திற் பாரதம்போற் கதையுண்டாக்கி

கர்த்தாவை இன்னதென்று காணொட்டாமாற்
கபட நாடகமாக மேதஞ் சேர்த்து
சித்தாக வழியாக சேர்ந்தோர்க்கெல்லாஞ்
சதியுடனே வெகு தர்க்கம் பொருள் போற்பாடி
பத்தாசை வைப்பதற்கு ஒப்பனையுஞ் செய்து
பாடினார் சாத்திரத்தைப் பாடினாரே.

வால்மீகர் ஞானம் – 8

நில்லென்ற பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தன்னுக்குள் நாலு வேதம்
வல்லமையாய் சாஸ்திரங்கள் இரு மூன்றாக
வயிர் பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பதுபோல் வேதாந்தங்கள்
கட்டினாரவரவர்கள் பாஷையாலே
தொல்லுலகில் நால் சாதியனே கஞ்சாதி
தொடுத்தார்களவரவர்கள் பிழைக்கத்தானே

ஞானவெட்டி – 513

அண்டர்களு முனிவர்களுமறியாத
வெகு சூட்ச மறியலானேன்
துண்டர்கள் தான் கூடி வெகு மத பேதமுணர்ந்து
மொழி தொடுப்புண்டாக்கி
கண்ட கண்டபடியெல்லாம் நூல் வசனமாய
குறித்துக் கவிகள் பாடி
எண்டிசை மாணாக்கரிவை யுண்மையென்று
மயங்க வைத்து யிறந்திட்டாரே

பாட்டு 257

ஓதுகின்ற வேதமது பிறந்ததெங்கே
உன்னிய நீரிறைக்குமிட முயிருமெங்கே
வாதுகள் செய் மந்திரமும் பிறந்ததெங்கே
மறைவேத சைவர்களும் பிறந்ததெங்கே
சூதுகள்கண் டிவை யறிந்தால் குருக்களாகுந்
தொல்லுலகி லறியாதார் நம்மிலொன்று
ஏதுமில்லாப்பொய்க் களவு சொல்வார்தானும்
இவை ராஜ யோகியென்று யியம்பலாமே

பாச்சலூர் பத்து – 6–ம் பாடல்

குலம்குல மென்ப தெல்லாம்
குடுமியும் பூணு நூலுஞ்
சிலந்தியு நூலும் போலச்
சிறப்புடன் பிறப்பதுண்டோ
நலந்தரு நாலு வேதம்
நாள்முகன் படைத்த துண்டோ
பலன்தரா பொருளு முண்டோ
பாச்சலூர் கிராமத் தாரே

சிவ வாக்கியர்

இருக்குநாலு வேதமு மெழுத்தை யறவோதினும்
பெருக்கநீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான்
உருக்கிநெஞ்சை யுட்கலந்து உண்மைகூற வல்லீராய்
சுருக்கமற்ற சோதியைத் துடர்ந்துகூட லாகுமோ

சாமநாலு வேதமுஞ் சகலசாஸ்தி ரங்களுஞ்
சேமமாக வோதினும் அரனைநீர் அறிகிலீர்
காமநோயை விட்டுளங் கடந்துநோக்கி வல்லீராய்
சுருக்கமற்ற சோதியை துடர்ந்துகூட லாகுமோ

இட்டகுண்ட மேதடா யிருக்கவேத மேதடா
முட்டிநின்ற தேதடா முளைத்தெழுந்த தேதடா
சுட்டமண் கலத்திலே சுற்றுநூல்க ளேதடா
பட்டுபட் டுடுத்தபாடு பாழ்த்தபா டறிவீர்காள்.

வேதமாவ தேதடா விரித்துரைத்த தேதடா
போதமாவ தேதடா புரம்புநின்ற தேதடா
பாதமான தேதடா பகுத்துரைத்த தேதடா
ஓதியோதி யுன்னுளே யுணர்ந்துரைக்க வேண்டுமே.

சீஷரோது நூல்களுஞ் சிறந்துகற்ற கல்வியும்
நட்டதா பரங்களு நவிலுநாலு வேதமுங்
கட்டிவைத்த புத்தகக் கதகுதப் பிதற்றெல்லாங்
கெட்ட தாய் முடிந்ததேயான் கர்த்தனைக்கண்கண்டபின்

சாத்திரங்க ளோதியே சடங்கியற்றும் பட்டரே
வேற்றுறக்கம் வந்தபோதிவ் வேதம்வந் துதவுமோ

மாத்திரப்போ தும்மிலே மரித்து நோக்க வல்லிரேற்
சாத்திரப்பேய் நோய்கொளாது சத்திமுத்தி சித்தியே

புத்தகங்கள் கொண்டுநீர் பொய்களைப் பிதற்றுறீர்
எத்தனை பிதற்றினு மிருந்தநாட்க ளெத்தனை
அத்தனை யகண்டனை யநாதிமுன் னநாதியாங்
கர்த்தனை யறிந்தபேர் கடந்தஞானி யாவாரே

கொடுத்தநாலு வேதமுங் குசப்பலுங் குடிமியும்
பிடித்ததண்டு மாகவாழ் பிராமணப் புரட்டரே
நடித்தகோல மிங்குவிட்டு ஞானமோத வல்லிராய்
அடுத்திருந்த சோதியோ டமர்ந்திருக்க லாகுமே

பிறந்தபோது பூணுநூற் குடுமியும் பிறந்ததோ
பிறந்துடன் பிறந்ததோ பிறங்குநூற் சடங்கெல்லாம்
மறந்துநாலு வேதமு மனத்துலே யுதித்ததோ
நிரம்பிவந்து வானிழந்து நின்றதென்ன வல்லிரே

சதுர்வேத மாறுவகை சாத்திரம் பல
தந்திர புராணங்களை சாற்றுமாகமம்
விதம்வித மானதான வேதநூற்களும்
வீணான நூற்கலென் றாடாய் பாம்பே

வாசகர்களே, இதுவரையில் வாசித்த இந்தப் பாடல்களின் பொருள், எவ்வளவு தெளிவாய் சித்தர்கள், ஞானிகள், இந்த நாலு வேதங்களையும், மனிதர் முக்தி சேர, வழிகாட்டும் ஞானபோதனைகள் நிறைந்த மெய் வேதாந்தம் அல்ல, என்கிறார்கள் என விளக்குகிறதே, இன்னமும் எவ்வளவு நாளைக்கு இவ்வித பொய்க்குருக்கள் உரைத்த பொய்போதனைகளை நம்பி, காலத்தை வீணாய்க் கழிப்பதென்பதை யோசித்து, உணர்ந்து மெஞ்ஞான வேத போதகத்தைக் கண்டு, கற்றறிந்து பராபரவஸ்துவின் அருளால் முக்தியடையும்படி நாடுங்கள்.

மெய்பராபர வஸ்துவின் அருள்பெரும் வழியைக் காட்டாமல், மனித பாரம்பரை சடங்கு பிரமாணங்கள், பலி, நைவேத்திய பூசைகள் ஒருக்காலும் பூரணத்தையடைய வழிகாட்டவே காட்டாது, என்பதே பக்தர், ஞானிகள் தம் அனுபவத்தில் கண்ட பக்தியின் இரகசிய விளக்கம்.

வேதம் என்பது, ஞானக்கண்ணாடி. நம் முகத்தின் தன்மையை கண்ணாடியில் காண்பதுபோல் நம் அகத்தின் பகத்தி நிலைமையை மெய்வேத நூலில் காணலாம். பின்னும் வேதம் என்பது ஓர் மெய் பராபரவஸ்துவையும்,

அவரை வழிபடும் விதிமுறைகளைக் காட்டுவதும் மனிதன் தன் நாட்களின் முடிவில் மறுமையில் நித்திய காலமாய் தெய்வலோகத்தில் தேவனோடு அடையப்போகிற பரலோக இன்ப சுகபாக்கியங்களை விவரித்து வெளிப்படுத்தும் நூல் ஆகும். பின்னும் வேதம் என்பது அரூபியாகிய பராபர வஸ்துவாகிய தேவன். தாம் சிருஷ்டித்த மனுமக்களுக்கு அவர் உரைத்த களங்கமில்லாத கட்டளைப் பிரமாணங்களும், விதிமுறைகளும் ஆகும்.

ஆதியில் தேவன் மனித சிருஷ்டிப்பை உண்டாக்கி, அவர்களுக்கு கைக்கொண்டு நடக்கும் சில விதிமுறைகளைக் கொடுத்தார். அவர்கள் அதைக் காத்து நடவாமல் மீறியதால் சாபத்தைப் பெற்றார்கள். அந்த சாபம் அவர்களையும் மனித சந்ததிகள் அனைத்தையும் பிடித்துக்கொண்டது. பின் குறித்த காலத்தில் தேவன் தாமே தன் கைவிரலால் எழுதின பத்து கட்டளைகளை இரண்டு கற்பலகைகளில் கைக்கொள்ளும்படி எழுதித் தந்தார். அதுவுமல்லாம் குறித்த காலத்தில் பாவ உலகம் இரட்சிப்படைய ஓர் இரட்சகனையும் உலகத்திற்கு அனுப்புவதாய் வாக்களித்தார். அவர் அவதாரத்தில் வந்து ஞான உபதேசம் அளித்தார் என்ற வரலாற்றை பல சித்தர், முனிவர்கள், ஞானிகள் ஆராய்ந்து கண்டு உணர்ந்து வெட்ட வெளியாய் காண்பித்து, வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவர் போதனையனைத்தும் மெய்ப் பராபர வஸ்துவின் களங்கமற்ற ஞானம் நிறைந்ததாகும். இந்த வேதத்திற்கு சத்திய வேதாகமம் என்பது பெயராகும். இதைத் தேடி வாங்கி வாசித்தால் மனிதன் இம்மையிலும், மறுமையிலும் தேவனை வழிபட்டு நடக்கவேண்டிய சகல விதிமுறைகளும் தெளிவாய் அறியலாம். இது பக்தர்கள் வேத ஆவியின் அருளால் ஏவப்பட்டு எழுதியது ஆகும்.

"சாஸ்திரத்தைச் சுட்டு சதுர்மறையைப் பொய்யாக்கி சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்" என்று பக்தர்கள் ஏங்கித் தவிக்கும் காலம் இப்பொழுதே வந்துவிட்டது என்று உணர்ந்து, சத்தியவேதாகமத்தை வாங்கி கற்று ஞான மார்க்கத்தைக் கண்டு மராபர வஸ்துவைப் பற்றிக் கொள்ளுங்கள்.

விருத்தம்

கடவுளோ னொருவனுண் டேவேத மொன்றே
காரணசற குருதீட்சை தானு மொன்றே
அடைவுடனே அவரருளும் பதவி ஒன்றே
அம்புவியில் மனுப்பிறவி யான தொன்றே
நடைவழியும் பலமனுவோர்க் கொன்றேயல்லால்
நால்வேத மறுசமய நடக்கை வேராய்
திடமுடனே தேவர்பலர் உண்டென் போர்கள்

திடமுடனே தேவர்பலர் உண்டென் போர்கள்
தீ நரகிற் காளாவார் திண்ணந் தானே.

இப்பாடலின் பொருள்:– கடவுள் ஒன்று, வேதம் ஒன்று, சற்குருவும், தீட்சையும் ஒன்று, அவர்தரும் பதவி ஒன்று, உலகிலுள்ள மனிதர்களெல்லாம் வித்தியாசமில்லாமல் ஒன்றே, எல்லா மனிதருக்கும் பக்திவழி நடையும் ஒன்று, இதை அல்லாமல், நாலுவேதமும், ஆறு சமயங்களும் (மதங்கள்) பலவகை வழிபாடுகளும், பல தேவர்கள் உண்டென்போரும் எரிகிற நரகத்திற்குப் பங்காளி ஆவார்கள் உண்மை என்பதாம். வாசகர்கள மெஞ்ஞான வழிகண்டு, பக்தியில் நிலைத்தோங்கி வளர சித்தர், ஞானிகள வாக்கையும் மனங்குளிர வாசித்து உணர்ந்து, விசுவாசித்து நீதிவழுவாத திருமறை என்னும் சத்திய வேதாகமத்தை ஆராய்ந்து அறிந்து மெய்பக்தியை பூரணப்படுத்தினால், முக்தியடைவீர்கள்.



37

ஓம் என்னும் அட்சர விளக்கம்

பிராமணர்கள் தவிர சூத்திரர்கள், வேதத்தை தொடவும் அதை வாசிக்கவும் கூடாது. ஓம் என்னும் அட்சரம் பிரம்மாவின் அடையாளம். பிரம்மா சுய ரூபமேயாகும். ஆதலால் பிராமணர்கள் வேதத்தை ஓதத் துவங்கும் போதும், ஓதி முடிக்கும் போதும் ஓம் என்னும் அட்சரத்தைச் சொல்ல வேண்டியது கற்பனையாகும்.

★ ★ ★ ★

38

சாஸ்திரங்கள் ஆறின் சுருக்கம்

இந்து சமயத்தின் சாஸ்திரங்கள் ஆறு

இந்து சமயத்தின் சாஸ்திரங்கள் ஆறையும் இரு பிரிவாக்கி ஒன்றில் மூன்று சாஸ்திரங்களும், மற்றொன்றில் ஆறு சாஸ்திரங்களுமாக, எழுதப்பட்டிருக்கிறது.

முதற்பிரிவின் மூன்று சாஸ்திரங்கள் ஆவன:– 1. சாங்கியம் 2. பதஞ்சலியம் 3. வேதாந்தம் என்பன.

முதற்பிரிவு

1. சாங்கிய சாஸ்திர சுருக்கம்

சாங்கிய சஸ்திரம், கபிலரால் எழுதப்பட்டது. இது படைத்தல், காத்தல் அழித்தலாகிய முத்தொழிலும் மூலப்பிரகிருதியாகிய மாயையினிடத்திலே உண்டாயினதென்கிறது.

"சுவையொளியூறோசை நாற்மென்றைந்தின்
வகை தெளிவான் கட்டேயுலகு"

என்ற குறளுக்குப் பரிமேளழகர் உரை செய்யில், சாங்கிய சாஸ்திரத்தில் தொகுப்பாய் சொல்லியிருப்பது, சுவையு, மொளியு, மூறு, மோசையு, நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகள் ஐந்தினது கூறுபாட்டை மாறாய் வான்றிவின் கண்ணதேயுலகம் என்றவாறு.

அவற்றின் கூறுபாடான : "பூதங்கட்கு முதலாகிய அவை தாமைந்தும், அவற்றின்கட் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரங்களைந்தும், கருமேந்திரியங்களைந்துமாகிய இருபதுமாம்." வகைதெறிவான் கட்டென, உடம்பொடு புணர்ந்ததனால் தெரிகின்ற புருடனும், அவன் தெறிவதற்கருவியாகியமான், அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும், பெற்றால் தத்துவம் இருபத்தைந்தினையும் தெரிதலாவது, மூலப்பகுதியிற்றோன்றிய தன்மையிற் பகுதியே ஆவது அல்லது விகுதியாகாவெனவும், அதின் கட்டோன்றிய மானும் அதன் கட்டோன்றிய அகங்காரமும், அதன் கட்டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும், உடையவெனவும், அவற்றின்கட்டோன்றிய மனமும் ஞானேந்திரியக்களும் ஆகிய பதினாறும், தங்கட்றோன்றுவன. இன்மையின், விகுதியேயாவதல்லது, பகுதியாகவெனவும், புருடனொன்றிற் றோன்றிற் றோன்றாமையாலும், தங்கட்றோன்றுவன, இன்மையானுமிரண்டும், அல்லெனவுஞ், சாங்கிய நூலில், ஓதியவாற்றானாராய்தல் இவ்விருபத்தைந்தும் அல்லது, உலகெனப்பிறிதொன்றில்லை, யென வுலகின் உண்மையறிதலின், அவனறிவின்கண்ணதாயிற்று, என்பதாம்.

2. பதஞ்சலிய சாஸ்திரச் சுருக்கம்

இது பதஞ்சலி முனிவரேற்படுத்திய அஷ்ட அங்கயோகங்களைக் குறித்துச் சொல்லியது.

அங்கயோகம் 8 ஆவன:– "1. இயமம் 2. நியமம் 3. ஆதனம் 4. பிராணாயாமம் 5. பிரத்தியாகரம் 6. தாரணை 7. தியானம் 8. சமாதி" என்பவை.

1. இயமம் என்பது:– "கொல்லாமை, மெய்மை கூறல், கள்ளாமை, பிறர் பொருள் இச்சியாமை, இந்திரிய மடக்கல்" முதலியன.

2. நியமமாவது :– "தூய்மை, தத்துவ நூல் ஓதல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல்", முதலானவை.

3. ஆதனமாவது:– "சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி. பத்திரம், முத்தம், மயூரம், சுகம் ஆகிய ஒன்பதுமாம்." இவ்வொன்பதின் சுருக்க விளக்கம் பின்வருமாறு:–

1. சுவத்திகமாவது:– "துடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்காலையும் செலுத்தி இருமாந்திருத்தலாம்."

2. கோமுகமாவது:– "சகன பக்கத்திலிரு காற்பரட்டையுமாற வைத்தவ்விருகால் பெருவிரலை கைபிடித்திருத்தியிருத்தல்."

3. பதுமமாவது:– "இரு துடை மேலும் இரண்டு உள்ளங்காலையும் மாறித் தோன்ற வைத்தல்."

4. வீரமாவது:– "வலத்துடையில் இடைக்காற்பரட்டை சேர்ந்து இருமாப்புற இருத்தல்."

5. கேசரியாவது:– "பீசத்துக்குக் கீழ்ச் சீவனியிடத்தில் பரட்டை வைத்து இட முழங்கையை, முழங்காலில் வைத்து அங்குலி விரித்து நாசியைப் பார்த்திருத்தல்."

6. பத்திரமாவது:– "பீசத்தின் கீழ்ச் சீவனிடத்து, இருகாற்பரட்டையும் வைத்து, அவ்விரு பாதத்தையும் இருகையால் இறுகப்பிடித்தசையாதிருத்தல்."

7. முத்தமாவது:– "இடைக்காற்பரட்டாற் சீவனியை அழுத்தி வலக்காற்படர, பரட்டின் கீழுந்த விருத்தல்"

8. மயூரமாவது:– "முழங்கையிரண்டும் முந்தி புரத்திலழுந்தப் புவிற்கையூன்றிக்கால் நீட்டித் தலை நிமிர்ந்திருத்தல்."

9. சுகமாவது:– "சுகமும், திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ, அவ்வாறிருத்தல்."

4. பிராணாயாமம் ஆவது:– "பிராண வாயுவை ரேசக பூரக, கும்பஞ் செய்தல்."

5. பிரத்தியாகாரமாவது:– "உபாதியை உண்ணோக்கல்"

6. தாரணையாவது:– "கண்டம், இதயம், நெற்றி கபாலம், நாடி இவற்றில் ஒன்றில் சந்ததம் சிந்தைவைத்தல்."

7. தியானமாவது:– "ஐம்புலமடக்கிச் சிவலோகம் சேர்தல்."

8. சமாதியாவது:– "இந்திரிய முதலிய தத்துவ சேட்டை கட்கேதுவாய் ஆக்கையுனின்றவற்றோடு கூடினும், அவற்றிற் பற்றின்றிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் கண்டறிதல்."

3. வேதாந்த சாஸ்திர சுருக்கம்

வேதாந்தம் என்றால் வேதத்தின் முடிவு என்பது பொருள் இது வியாசரால்

எழுதப்பட்டது. உபநிடதங்களில் இருக்கிற உபதேசப் பிரமாணங்களை மாத்திரம், ஒழுங்காய் சொல்லுவது இது.

சங்கராச்சாரியார், இதிலே பரப்பிர்மம், சர்வலோகத்திற்கும் ஆத்மாவென்றும், இவர் சகல வஸ்துக்களோடும், ஐக்கியமாயிருக்கிறாரென்றும், பல தேவர்கள் உண்டென்றும் பூலோகம் பஞ்ச பூதங்களால் உண்டாக்கப் பட்டதென்றும், சொல்லியிருக்கிறார்.

இரண்டாம் பிரிவு

இரண்டாம் பிரிவின் ஆறு சாஸ்திரங்களின் பெயர்களாவன:– 1. வேதாந்தம் 2. வைசேஷிகம் 3. பாட்டம் 4. பிராபாகரம் 5. பூருவமீமாஞ்சை 6. உத்தரமீமாஞ்சை என்பனவாகும்.

1. **வேதாந்தம்** (Theology) :– முன் கூறியதை காண்க.
2. **வைசேஷகிகம்** (Ethic) :– இது கணாதர் என்பவரால் எழுதப் பட்ட சாஸ்திரம்.
3. **பாட்டம்** (Epic Poems) :– பாட்டர் என்பவரால் உண்டாக்கப்பட்ட சாஸ்திரம்.
4. **பிராபாகரம்** (Cermonial law) :– பிராபாகர் என்பவரால் உண்டாக்கப்பட்ட சாஸ்திரம்.
5. **பூர்வ மீமாஞ்சை** (Antiquity - Hoistry) :– இது செயமுனி என்பவரால், வேதத்திலுள்ள கர்ம காண்டத்தின் சடங்குகளையும், பிரமணங்களையும் குறித்து எழுதப் பட்ட சாஸ்திரம்.
6. **உத்திரமீமாஞ்சை** (Logic) :– இது வியாசரால் வேதத்திலுள்ள ஞானகாண்டத்திலடங்கிய உபதேசப் பிரமாணங்களையம், மகாத்மாவையுங் குறித்து எழுதப்பட்ட சாஸ்திரம்.

இதுவரை விளக்கிக்காட்டியுள்ள சாஸ்திர சுருக்கங்களில் முதற்பிரிவில் உள்ள பதஞ்சலியம், விசேஷித்தது. மனிதர் முத்தி பெறும் வழி இதுவேயென்று, பொய்க் குருக்களின் மாறாட்டமான பேச்சை நம்பி, இதிற் கூறியுள்ள அஷ்ட அங்கயோகங்களை, அநேகர் இன்றுவரை அப்பியாசிக்கிறார்கள். இவ்வித யோகங்களை, அப்பியாசித்தோர் அதிற்சித்தி பெறாது மாண்டு, மடிந்து மண்ணுக்கிரையான காட்சியை புலஸ்தியர் பாடலிலிருந்து விளக்குவதை, பின்வரும் பாடலில் காண்க.

39

அஷ்டாங்க யோகாப்பியாச பலன்

புலஸ்தியர் 100

காணுமூச்சடக்கி விழியதுமுருட்டி
கபாலமும் திறந்தனர் கோடி
கனத்தவாய்வதனால் குன்மநோய்யணுகி
ஏங்கினோரவரொரு கோடி
தானு மெய்மறந்து சுழன்றுடனெழும்பி
சொக்கினோரவரொரு கோடி
குலைவாய் வனுகி சிவாலையுமெழும்பி
சுரமதாலிறந்தவர் கோடி
உள்ள உண்ணாக்கிளண்ணாக்கை உள் தூக்கி
யுள்ளடக்கி மாண்டவர் கோடி
உயர சாணீள முழுவது மெழும்பி
யேங்கியே யொடுங்கினோர் கோடி
பேணதிசார பேதி வந்தணுகி
பிரவியு மிழந்தவர் கோடி
பெருமையாய் கர்ப்பந்தனையறியாது
பிராணனு மழிந்து மாண்டனரே
இடமறியாமலிருத்தியே வாயுவை
யிறந்தனரவரொரு கோடி

இனிய தம்பனஞ் செய் தெழும்பியே
கும்பித்தேங்கினோரவரொரு கோடி
கனமறியாமல் காற்றை வாயினால்
கருதியே இறந்தனர் கோடி
கண்டு வாசியினி லொன்றை விட்டொன்று
கலங்கியே மாண்டனர் கோடி
தினமொரு நாழி வாசி கொண்டொழித்து
சிவபுர மேகினோர் கோடி
தன் பெருவிரலாற் அண்ணாக்கை யேந்தி
தயங்கினரவரொரு கோடி
சலமதில் மூழ்கி சாதனைபதீத
சாக்காடு வந்தெய்தினாரறிந்தே.

மக்கள் மனதில் மறுமையில், எப்படியாவது முக்தியடைய வேண்டுமென்று கொண்டுள்ள வாஞ்சையால், அஷ்டாங்கயோக அப்பியாசத்தை அதற்கு ஆதாரபோதனையாகக் காட்டின பொய்க் குருக்கள் பேச்சை நம்பி, அதைச் சாதித்து சித்தி பெற்று முத்தி பெற எழும்பிய கோடி, கோடிபேர், மாண்டு, மறைந்துவிட்டார்கள் என்று புலஸ்த்தியர்தம் இரு பாடலிலும் விளக்கிக் கூறுகிறார். இதை விளங்கிக் கொண்டீர்களா? ஐயோ! பரிதாபமான மரணத்திற்கு வழிகாட்டி இப்பலனற்ற பயங்கர அழிவுண்டாக்கும் யோகாப்பியாசம், எத்தனை பேரை முக்தியடைய பூரணப்படுத்து மென்று முன் பாடல் மூலம் நீங்களே அறிந்து நிதானியுங்கள்.

இவ்வித மாறாட்ட பக்தி, விளக்கை ஏந்திக்கொண்டு கிணற்றில் விழுந்திறந்தவனுக்கும், குளிக்கப் போய் சேற்றை பூசிக்கொண்டு வந்தவனுக்கும் ஒப்பான கதையைப் போல் தெரிகிறதல்லவா? இதைமுக்தி பெறும் வழியென்றும், மெய்பக்தி மார்க்கம் என்றும், வாய் கூசாமல் சொல்லி விவரிப்பதைவிட, மனித கொலை பாதக மார்க்கம் என்பது மிகப் பொருந்துமல்லவா? இதத்தனையும் பராபரவஸ்துவின் அருள் ஒளி காணாத அஞ்ஞானமெனும் அவபக்தியல்லவா? இதுமட்டும் தானா? இதன் உடன் தோழியாய், விளங்கும், சோதிடம், சகுனம், சாஸ்திரம் முதலானதும், நற்பலன் தருமென மாறாட்டமாய் மனதில் வேரூன்றச் செய்து, மக்களை வழிபிசகச் செய்துள்ளதை, போக முனிவர் கவியில் வரிசை கிரமமாய் கீழே காண்க.

40

சோதிடம், சகுனம் முதலான சாஸ்திரம்

போகர் ஏழாயிரம் 6–ம் காண்டம் 255–ம் பாட்டு

பேசியே வெகு கோடி மாண்பரெல்லாம்
பினத்தினார் சாஸ்திரத்தின் குப்பல் தன்னை
பூசிதங்கள் கொண்டல்லோ பகுடுகாட்டி
புகழுடனே சாஸ்திரத்தை மெய்போற் சொல்லி
ஊசிதமாந்தத்துவங்கள் தியான மார்க்கம்
உறுதியுடன் நாதாக்கள் சொன்னதில்லை
வாசித்து நால் வேத மாறு சாஸ்திரம்
வகையுடனே கதைகட்டி உரைத்திட்டாரே

பாட்டு 256

உரைத்திட்ட கதையெல்லாம் பொய்யேயாகும்
உத்தமனே சாஸ்திரங்களதர் வணம் தான்
கரைத்திட்ட மாகவல்லோ மாந்தருக்கு
காசினியில் தாமுரைத்தார் சாத்திரங்கள்
நிரைத்திட்ட மாகவல்லோ யானுஞ் சென்று
நீடாழியுலகுபதி சுத்திவந்தேன்.

மரித்தோர்க்கு சாஸ்திரம் பாட்டு 261

காணவென்றால் மடிந்தவர்க்கு சாத்திரங்கள்
கைலாயஞ் சென்றவர்க்குப் பார்க்கலாமோ
தோணவேயுடல் பொருளாவி யெல்லாம்
தோற்றாமல் மண்ணோடே மண்ணாய்போச்சு
வேணதொரு சத்திரங்கள் பார்த்தாலென்ன
பார்த்தாலும் வையகத்திலிருப்பாருண்டா
பூணவேயாகாத நாளில் மாண்டோர்
புகழான வாத்துமமு மிருந்ததுண்டோ

பாட்டு 262

இருந்து மேவையகத்தில் மாளி விட்டு
பெழிலான கிரகமது போவதுண்டோ
திருந்தவே வருடமது ஆறுதிங்கள்
திறமான மனிதனிலிருந்து கொண்டு
பொருந்தவே பெற்றோர்கள் குடும்பத்தாரை
பொங்கமுடன் வம்புகளும் கூர்வதுண்டோ
வருந்தியே மாண்டதொரு கிரகந்தன்னை
வளமுடனே தானடைப்பார் பாரு, பாரே.

பாட்டு 263

பாரப்பா நலமான நாளில் மாண்டோர்
பாருலகில் கிரகத்தை விட்டு மல்லோ
நேரம்பாசமுதாயங் கைலாயத்தில்
நேர்மையுடன்னடைக்கலமாய் சென்ற தென்றும்
சீரப்பா வாத்துமமுங் கைலாயத்தில்
சிறப்புடனே சென்ற தென்பார் மாண்பரெல்லாம்
ஆரப்பா கண்டவர்கள் வையகத்தில்
யாருமில்லை உண்மையிது பாரு, பாரே.

41

நல்ல நாள் – தீய நாள் பார்த்தல்

போகர் பெருநூல் 6-ம் காண்டம்

பாட்டு 266

உண்டான கட்டளை களமைந்திருக்க
ஓகோ, கோ, சாஸ்திரங்கள் வேதமென்ன
திண்டான நல்ல நாள் தீயநாளும்
திகழுடனே மகா தேவர் படைப்பதுண்டோ
சண்டாள மாண்பரெல்லாம் சாத்திரத்தை
தக்கப்படி யுணராமல் மதியீனத்தால்
கொண்டபடி யவரவர்கள் தியானத்தாலே
குறிப்புடனே தீய நாளென்றிட்டாரே

பாட்டு 167

இட்டாரே தீயநாள் நல்ல நாளாய்
யெழிலான சாஸ்திரங்கள் கூறுவதுண்டோ
விட்டகுறை யமைந்தபடி மாண்பர்க் கெல்லாம்
மேதினியில் சாஸ்திரங்கள் மெய்யதாச்சு
கஷ்டமுடன் நஷ்டமது மாண்பர் தன்னால்
நாதாக்கள் சாஸ்திரங்களேதுக் காச்சு
பட்டமது தான் பறந்த பாவனை போல்

பாருலகில் சாஸ்திரமும் பொய்யதாச்சு

பாட்டு 270

ஆமேதான் கெட்ட்நாள் நல்லநாளாய்
ஆகவைக்க வுன்னாலே யாகு மோதான்
போமேதான் கதிரோனின் நாளை யெல்லாம்
பொங்கமுடன் நல்ல நாளென்றிருக்க
வேமேதான் நாளெட்டும் நல்ல நாளாய்
வேதாந்தத் தாயினது கிருபையாலே
ஆமேதான் நாதராவர் செய்திருக்க
அப்பனே நம்மாலே யாவதென்ன?

பாட்டு 271

என்னவோ தேவனது எட்டு நாளும்
எழிலாக மாண்பருக்கு வமைத்திருக்க
பன்னவே வெள்ளிதனில் திரவியங்கள்
பாருலகிலீவதுமே தருமமல்ல
சொன்னபடி காரிதனில் சவளமாகா
துப்புரவாய் அருக்கனில் விருந்துமாக
நன்மையாய் திங்களது வார சூலை
நலமுடனே மாண்பருக்குக் காட்டினாரே

பாட்டு 272

நாட்டமுடன் செவ்வாய்க்கு மேற்கு தானும்
நலமுடனே பயணமது வாகாதென்றும்
நீட்டமுடன் குருவாரம் ஸ்நானமாக
நிலையான நாளெல்லாம் தீய நாளாய்
தேட்டமுடன் புதனுக்கு வடக்கேதானும்
செம்மலுடன் பயணமதுவாகாதென்றும்
வாட்டமுடன் சாஸ்திரங் கூறிருக்க
வளமுடனே நாளெந்த பலன்தான் காணே

பாட்டு 273

காணவே நாளெல்லாம் முறைப்பாடாக
காசினியில் சாத்திரங்கள் பார்த்ததானால்
தோணவே எந்த நாள் நல்ல நாளென்று
துப்புரவாய் தன் மனதில் எண்ணலாகும்
வேணவே நாளெட்டும் நல்ல நாளாய்
விருப்பமுடன் உம்பரனார் செய்திருக்க
நீணவே மதியீன மாண்பரெல்லாம்

நிலை கெட்டுப் பதிகெட்டு நின்றிட்டாரே

போக முனிவர், இப்பாடல்களால், நாலுவேதம், ஆறு சாஸ்திரம், தத்துவங்கள், தியான மார்க்கங்கள் யாவையும், மெய்ஞ்ஞானமற்ற, உலக மனிதர், அஞ்ஞான குப்பைபோல் கட்டுக் கதையாய் எழுதி வைத்துவிட்டார்கள் என்றும், தேவன் உண்டாக்கிய நாளெல்லாம் நல்ல நாட்களே, இதில் தப்பு அர்த்தங்கொண்டு, விருந்துண்ணவும், தலைமுழுவுகம், கொடுக்கல் வாங்கல் செய்யவும் கூடாதென்பது, தப்பென்கிறார்.

நீதிவழுவாத சத்தியஞான நூலில், உலக சிருஷ்டிப்பின் வரலாற்றில் தேவன் சிருஷ்டித்த படைப்புக்கள் யாவையும் பார்த்தபோது, எல்லாம் நல்லதாகவே தேவன் கண்டார் என்று எழுதியிருக்கிறது. அவ்விதமிருக்க மனிதர் அதை குறைகூறி விகற்பமாய் பேசுவது சரியல்ல.

முன்னிருந்த ஞானிகள் நான்கு வேதங்களையும் ஆராய்ந்து பார்த்து அதின் உண்மைநிலை காணாததுகண்டு, வேதங்களையும் சாஸ்திரங்களையும் அதிலுள்ள தப்பரைகளையும் வெளிப்படையாய்க் கண்டித்து உணர்த்தியிருக்கிறார்கள். அதை கீழே காண்க.

அகஸ்தியர் ஞானம் 11–ல், 3–ம் பாடல்

தயங்காமற் பிழைப்பதற் குயிந்த ஞானம்
சார்வாகப் பாராட்டி யின்னம் வேறே
மயங்குதற்கு ஞானம் பார் முன்னோர் கூடி
மாட்டினார் கதை காவிய புராண மென்றும்
இயலான ரசம்தனிலே ஈப்புகுந்தாற்போலும்
இசைத்திட்டார் சாஸ்திரங்கள் ஆறென்றேதான்
வரையான பயன் பெறவே வியாசர் தானும்
மாட்டினார் அரனார் உத்தரவினாலே

பத்திரகிரியார் 156

சாஸ்திரத்தைச் சுட்டு சதுர் மறையை பொய்யாக்கி
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்

என்றும் இவ்விதமாய் மெய்ஞ்ஞானத் தெளிவில்லாமல் எல்லா கதை, காவிய, புராணங்கள், சாஸ்திரங்களை அரனார் உத்தரவுப்படி வியாசர் முதல் பலரும் கட்டிப்போட்டார்கள் என்றும், இந்த நாலு வேதங்களையும் பொய்யென்று சுட்டெரித்து ஆத்ம சுகம் பெறுவதெக்காலமென்று, ஞானிகள் புலம்புகிறார்கள் வாசிப்போர் ஆழ்ந்து கிரகித்து நீதி வழுவாத சத்திய வேதாகமத்தை தேடி வாசித்து மெய்பக்தியைக் கடைப்பிடியுங்கள். அதுவே பக்தர் தேடிய மெய்ஞ்ஞான சூத்திரம்.

42

புராணம் பதினெட்டின் சுருக்க விளக்கம்

புராணங்கள், மும்மூர்த்திகளின் சரித்திர வரலாற்றையுடையது. புராணங்களை வியாசர், வால்மீகர், கம்பர் முதலானோர்கள் எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொரு தேவனுக்கும் அவ்வாறு புராணங்களாக பதினெட்டு புராணங்கள் எழுதப்பட்டிருக்கிறது. புராணங்கள், மகா புராணம், உபபுராணம் என இருவகைப்படும். புராணம் பதினெட்டின் பெயர்களாவன:-

1. பிராமம்	10. பிரமனவ வர்த்தம்
2. பதுமம்	11. இலைங்கம்
3. வைணவம்	12. வராகம்
4. சைவம்	13. வாமனம்
5. பாகவதம்	14. கூர்மம்
6. பௌடிகம்	15. மச்சியம்
7. நாரதீயம்	16. காருடம்
8. மார்க்கண்டேயம்	17. காந்தம்
9. ஆக்கினேயம்	18. பிரமாண்டம்

என்பவைகளாம். இவற்றில் விசேஷித்தவை மகாபாரதம், இராமாயணம், பாகவதம், விஷ்ணுபுராணம் என்பவைகள். இவற்றில் பத்து புராணங்களை சிவபுராணம் என்றும், நாலு புராணங்களை விஷ்ணு புராணமென்றும், இரண்டு புராணங்களை பிரம்ம புராணமென்றும், ஒரு புராணத்தை சூரிய புராணமென்றும், மற்றொரு புராணத்தை அக்கினி புராணமென்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் பின்வருமாறு:–

சிவபுராணம்:– 1. சைவம், 2. காந்தம், 3. இலைங்கம், 4. கூர்மம், 5. வாமனம், 6. வராகம், 7. பௌடிகம், 8. மச்சியம், 9. மார்க்கண்டேயம், 10. பிரமாண்டம், ஆகிய பத்துமாம்.

விஷ்ணு புராணம்:– 1. நாரதீயம் 2. பாகவதம் 3. காரூடம் 4. வைணவம் ஆகிய நான்குமாம்.

பிரம்ம புராணம்:– பிரமம், பதுமம், ஆகிய இரண்டும்.

சூரிய புராணம்:– பிரமவைவர்த்தம்.

அக்கினி புராணம்:– ஆக்கி நேயம் என்பவைகளாம்.

43

உபபுராணம் பதினெட்டின் விளக்கம்

உபபுராணம் 18.

அவற்றின் பெயர்கள்

1. உசளம், 2. கபிலம், 3. காளி, 4. சனற்குமாரம், 5. சாம்பவம், 6. சிவதன்மம், 7. சௌரம், 8. துருவாசம், 9. நந்தி, 10. நாரசிங்கம், 11. நாரதீயம், 12. பராசரம், 13. பார்க்கவம், 14. ஆங்கீரம், 15. மாரீசம், 16. மாணவம், 17. வசிட்டலைங்கம், 18. வாருணம். என்பவைகள்

சில புராணங்களில் சிவனை உயர்த்தியும் விஷ்ணுவை தாழ்த்தியும், சில புராணங்களில் விஷ்ணுவை உயர்த்தியும், சிவனை தாழ்த்தியும் எழுதப்பட்டிருக்கிறது.

அண்டகோச வரலாற்றை அறிய விரும்புவோர் கந்தப்புராணத்தை வாசித்துப் பார்க்கவும். இதிலுள்ள சாரம்ச கருத்துக்கள் யாவும் மனித அறிவிற்கும் ஞானத்திற்கும் விளங்கிக்கொள்ளாத

பொருத்தமற்ற முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

பன்னிரண்டு சம்ஹிதையோடு லட்சம் கிரந்தங்கள் கொண்ட சிவ புராணத்தை ஏழு சம்ஹிதை கொண்ட இருபத்து நாலாயிரம் சுலோகங்களோடு வியாசமுனிவர் சுருக்கி எழுதியிருக்கிறார். இதன் பிரிவுகள் பின்வருமாறு:–

1. வித்தியேசுவர	சம்ஹிகிதா சுலோகம்	2000
2. ருத்ரா	,,	10500
3. சதருத்ரா	,,	2180
4. கோடி ருத்ரா	,,	2240
5. உமா	,,	1840
6. கைலாசா	,,	1240
7. வாயு	,,	4000
ஆக சம்ஹித ஏழுக்கு சுலோகங்கள்		24000

தற்சமயம் தேவநாகர எழுத்தில் அச்சிட்டு வந்திருக்கும் புஸ்தகத்தில் 24,178 சுலோகங்கள் காணப்படுகின்றன. அவைகள் விபரம் பின்வருமாறு:–

			அச்சுப் புத்தகப் படி சுலோகங்கள்	புராணப்படி குறைவு	அதிகம்
1. வித்தியேசுர சம்ஹித சுலோகங்கள்		2000	1540	460	–
2. ருத்ர	,,	10500	10275	225	–
3. சதருத்ர	,,	2180	2188	–	8
4. கோடிருத்ர	,,	2240	2086	154	–
5. உமா	,,	1840	2676	–	836
6. கைலாச	,,	1240	1285	–	45
7. வாயு	,,	4000	4128	–	128
			24178	839	1017

இதுவே சிவபுராணமென்னும், மஹாபுராணம். தற்சமயம் தேவநாகர எழுத்தில் அச்சிட்டிருக்கும் புராண புஸ்தகத்தில் இருபத்துநாலாயிரத்து நூற்று எழுபத்தெட்டு சுலோகங்கள் இருக்கிறது.

வித்தியேசுவரசம்ஹிதயில் சுலோகங்கள் 460, ருத்ரசம் ஹிதயில் 225, கோடி ருத்ரசம் ஹிதயில் 154 ஆக 839 சுலோகங்கள் புராணப்படி குறைவாய் காணப்படுகிறது. அப்படியே சதுருத்ரசம்ஹிதயில் 8-ம் உமாசம்ஹிதயில் 836-ம் கைலாச சம்ஹிதயில் 45-ம் வாயு சம்ஹிதயில் 128-ம் ஆக 1017 சுலோகங்கள் அதிகமாய் காணப்படுகின்றன. இராமாயண நாடகம் பாலகண்டம் பாயிரத்தில் உள்ளது.

விருத்தம்

சதிர்பெரும் ராமர்காதை சதகோடி பிரபந்தமாகும்
அதிலோரட் சாஞ்சொன்னாலும் அருவினை போகுமென்றே
விதியினான் முனிவான் மீகிவிளம்பிய உறுதிகொண்டு
மதியினால் அறிந்தமாத்திரம் வகுத்துநாடகஞ் சொல்வேனே

பொருள்:- வளமை பொருந்திய ராமர் சரித்திரம் நூறுகோடி நூல்களாய் எழுதப்பட்டுள்ளது. அதில் ஓர் அட்சரம் சொன்னால் கொடிய துன்பங்கள் எல்லாம் போகுமென்று வால்மீகமுனி வாக்குப்படி நாடகம் சொன்னேன் என்பது.

இராமர் சரிதையில் இவ்வளவு நன்மை கிடைப்பது உண்மையானால் இராமர் தனக்குவந்த துன்பங்களை நீக்கிக்கொள்ள காட்டுக்குரங்கினங்களைத் தேடி ஓடியதேன் என்று விளங்கிக்கொள்வாரில்லை.

அதல்லாமல், தெய்வ அவதாரமாய் குரங்கை எண்ணி வணங்கும் வகையை மிருக வணக்கத்தில் அநுமார் தொழுகையில் விவரித்திருப்பதையும் பார்க்கவும். உபதேச காண்டம் 27-ம் சருக்கம் சிவகாசிப்பேறு. 91-ம் பாட்டு.

எண்ணிய புராணங் கேட்போர்
இருக்குநால் உணர்ந்தோர் பெற்ற
புண்ணிய மதனிற் கோடி
புண்ணியம் பெறுவார் மற்றும்
மண்ணிடை யாக முற்றும்
வளப்பவர் பெறும் பேரெல்லாம்
நண்ணுவர் தான மெல்லாம்
புரிபய னனுகு வாரால்.

இதன் பொருள்:- இருக்கு முதல் நாலு வேதங்களையும் கற்றோர், பெரும் புண்ணியத்திலும், புராணங் கேட்போர் கோடி பங்க புண்ணியத்தை பெறுவதன்றி, பல யாகங்களையும், தானங்களையும் செய்தோர் அடையும் பலன்களையும், பெறுவார்கள் என்பது.

பிரிய வாசகர்களே, இராமர் சரித்திரம் இராவண சம்மாரம் என்பது யாவரும் அறிந்ததே. இராமரின் குடும்ப நஷ்டத்தை நூறுகோடி கதையாக்கி, அதைப் படித்து தியானிப்போர்க்கு இவ்வித கோடிகோடிப் புண்ணியங்களை பெற்று அனுபவிப்பது எந்த நியாயத்தால்? என்பதை யோசியுங்கள். இவ்வகையில் புண்ணியம் சம்பாதித்து முக்தியடைய காத்திருப்பது இலவு பழுக்கக் காத்திருந்த கிளியின் கதையையொக்கும் என்பதை மறவாதீர்கள்! இதைப் பற்றி ஞானிகள் சொல்லும் விருத்தம்.

அகஸ்தியர் 30–ல் பாடல் 16

நிசமான நால்வேத மாறுசாஸ்திரம்
நினைவதுவை மயக்கிவைக்கும் புராணசாஸ்திரம்
வசமாக நான்மதத்தில் வந்தசாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமிதெல்லாம்
குசமசக்கு, குசமசக்கு அப்பா, அப்பா,
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை
நிசமதாய் நம்பினோர்க் கீடேற்றமுண்டு
நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே.

பொருள்:– நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம் மற்றுள்ள காவிய நூல்கள் அனைத்தும், குசமசக்கென்னும், தந்திரமும் வஞ்சிப்புமான வழியாகும். கட்டுக்கதைகள், மனித கற்பனையற்ற பராபர வஸ்து அருளிய களங்கமற்ற சத்திய ஞானநூலை நம்பினோர்க்கு, பத்தி முன்னேற்றமும், நிலையான ஞான வெளிச்சமும் கிடைக்கும் என்பது.

ஞானிகள் இவ்விதம் தெளிவு உண்டாக்கி இருக்கும் போது, நாம் இன்னும் காலத்தை வீண் போக்காது ஞான மார்க்கத்தையும், மெய் பக்தியையும் கண்டு பூரணப்பட்டு முக்தி அடைய சகல வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்களை முற்றிலும் பலன்தர வகையற்ற நூல்களென தள்ளிவிட்டு மெய் வேதாகமத்தை வாங்கி வாசித்து பரம் பொருளின் நீதிநெறி விதிகளை கைக்கொண்டு நடக்கவும். அதுவே பூரணத்தில், சேர்க்கும் மெய்வழி, முக்தியடைய மூலாதாரமான ஞான சூத்திரம்.

44

இந்து சமய விளக்கம்

பொதுவாய் மக்கள் பக்தி வளர்ச்சிக்கு ஆதாரமாக, பல மார்க்கங்களிலும், பலவித சடங்குப் பிரமாணங்கள், விதிமுறைகள், பூசை, பலிகள், வணக்க வழிபாடுகள் காணப்பட்டாலும், புறச்சமயங்கள் நீங்கலாக, இந்துச்சமயத்தில் மாத்திரம் ஆறுவகையான பிரிவுகள் உண்டு.

அவைகளாவன:– 1. சைவம், 2. வைணவம், 3. ஜைனம், 4. பௌத்தம், 5. சார்வாகம், 6. உலகாயுதம் என்ற ஆறுமாம்.

இவ்வகை தெளிவான மதப்பிரிவால் அதைத் தழுவி பக்தி செய்யும் பக்தர்களும் அதன்பேரால் தனிப்பட பிரிந்து அதற்குரிய மார்க்கச் சின்னங்களை யணிந்தவர்களாய் சில சடங்கு பிரமாண விதிகளை அனுசரித்து வந்தாலும், இவர்களிடம் சைவத்திற்கும், வைஷ்ணவத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று கேட்டால், அரியும், சிவனும் ஒன்று, ஆகவே எல்லாம் ஒன்றே என்பர். இது உண்மையானால் மார்க்கத்தை

பலவாய் பிளந்து மார்க்கச் சின்னங்களைப் பலவாய்க் காட்டி, பக்தர்கள் தங்களைக் கூறுபோட்டுப் பரா பரவஸ்துவைவிட்டு, பல தெய்வங்களைத் தங்களுக்கு உண்டாக்கித் தொழவேண்டியது அவசியமில்லையே!

சங்கராச்சாரியார் விருத்தம்

உலகிலே பிறந்த முன்னோ
ரோதிய கலைகளெல்லாம்
நிலையதாஞ்சோதி தன்னை
நிசமதாய்ச் சொன்னதில்லை
பல பல பேதகமாகப்
பங்கமாய்க் கூறு செய்து
அலகை போற் பொய்யைப் பேசி
யரு நரகழுந்திப் போனார்.
கல்வியைப் பெருமையாகக்
கதரியே திரிவார் புல்லர்
சொல்லிய ஞான நூலின்
சூட்சத்தை யறிய மாட்டார்
வல்லவர் நாங்கள் என்று
வாதுகள் மிகவும் பேசி
எல்லையில்லாத கன்மத்
தெய்தியே மூழ்குவாரே
சத்திய ஞான நூலின்
சாடையை யறியா மூடர்
வித்தைகள் மிகவும் கற்று
வீணராயிறந்து போனார்
அத்தனை பெருமையாக
வவணியிலறியச் சொல்லி
முத்தியை யறிவாரில்லை
மூடர்க்கு மோட்ச முண்டோ

வால்மீகர் ஞானம் 16–ல் 8–ம் பாடல்

நில்லென்ற பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாய் சாத்திரங்கள் இருமூன்றாக
வயிர் பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பது போல் வேதாந்தங்கள்
கட்டினாரவரவர்கள் பாஷையாலே

தொல்லுலகில் நால் சாதிய நேகஞ்சாதி
தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே.

மேல்கண்ட நாலு பாடல்களின் பொருளின்படியே, உலகிலிருந்த முன்னோர் சத்திய ஞான நூலாகிய மெய் வேதாகமத்திலுள்ள விதிப்பிரமாணங்களை கற்றறிந்து, நிலையான பராபரவஸ்துவை வணங்கும் விதிமுறைகளை மக்களுக்கு போதியாமல், பிழைப்புண்டாவதற்கு ஆதாரமாய், ஜாதி, குலமென்னும் வேறுபாட்டையும், நாலுவேதம், ஆறுசாஸ்திரமென்றும், புராணம் பதினெட்டென்றும் மற்றும் பலசுய நலநோக்கங்கள் கொண்ட வேதாந்த விதிமுறைகளை உண்டாக்கி புகுத்ததாலேயே, இவ்வித பெரும் பிளவுபட்ட பக்திச் சிதைவு ஏற்பட காரணமாயிற்று. இதன் காரணமாய் ஒன்றையொன்று உயர்த்தித் தாழ்த்தி பேசும் தர்க்கவாதங்கள் பெருகினதேயன்றி முக்தியறிவைப் பெறும் வழியில்லை முற்றும் இல்லை, இல்லையே!

45

சைவ சமய விளக்கம்

சைவ சமயம், முன்சொன்ன ஆறுசமயங்களிலும், முற்றிலும் வேறு பட்ட முதற் சமயமாகும். சைவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்வோர், சைவம் என்னும் வார்த்தையின் அர்த்தம் இன்னதென்று புரிந்துகொள்ளாமலேயே தாங்கள் பலதலைமுறை சைவர்கள் என்று, பெரிதும் போற்றிப் பேசுவார்கள். சைவம் எத்தனை வகைப்படும் என்றால், அதற்கேற்ற தகுந்த பதிலளிப்பாரில்லை.

வாழைக்காய், பூசனிக்காய், வெண்டைக்காய், பாவற்காய், அவரை, புடலை, முருங்கை, கத்தரி, கொத்தவரை, யான மரக்கறி வகைகளைச் சமைத்து காலையில் முழுகி, பூச்சிட்டு, பொட்டிட்டு பூனூலிட்டு சாப்பிடுவதால் பலர் தங்களைச் சைவர்கள் என்று எண்ணுகிறார்கள். சில சைவக் குடும்பங்களில், அரைச்சைவசமும் உண்டு. அதாவது மனைவி பிள்ளைகளை புலால் புசிக்கவிட்டுத் தான் மாத்திரம் மரக்கறி புசிப்பதால், தன்னைச் சைவர்

என்று சொல்வர். வைஷ்ணவர் மரக்கறி புசிப்பதால் தங்களைச் சைவர்கள் என்று சொல்வது அர்த்தமற்ற ஓர் காரியம். ஆனால், இவர், தம் மனைவியுடன் குடும்ப வாழ்க்கை அனுபவிக்கையில், இவரின் சைவம் தீட்டுப்படாது, எப்படி நிலைக்கும் என்பதை இவர் இன்னும் அறியவில்லை. விஷ்ணு மதத்தினரும் சிலர், தாங்கள் மரக்கறி வகைகளைப் புசிப்பதால் தங்களைச் சைவர் என்று சொல்வர் இவையனைத்தும் குருமார்க்கமற்ற பரம்பரை வழக்கத்தால் ஏற்பட்ட பக்திச்சிதைவென்பதில் சந்தேகமில்லை.

ஜைனமத நூல்களில், முதல் தீர்த்தங்கரரான விருஷப சுவாமி காலத்தில்தான் சைவ மதம் உண்டாயிற்றென்றும், இருபதாம் தீர்த்தங்கரர் காலத்தில் மகா காளேஸ்வரன் என்ற அசுரனால் பலவித யாகங்கள் உண்டாக்கப்பட்டதென்றும், இதன்பின் தான், சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஆலயமும் வணக்கமும் ஏற்பட்டதாயும் தெரிகிறது.

மும்மூர்த்திகளில், ஒருவரான சிவனைத் தங்கள் தெய்வமாகக் கொண்டு வணங்குவோர்களே சைவர்கள். சைவர்களுக்குச் சாம்பலும் உருத்திராட்சமும், தங்கள் மதச்சின்னமாகும்.

1. சைவம் பதினாறின் சுருக்கம்

1. ஊர்த்த சைவம் 2. அநாதி சைவம் 3. ஆதிசைவம் 4. மகாசைவம் 5. பேத சைவம் 6. அபேத சைவம் 7. அந்தர சைவம் 8. குண சைவம் 9. நிற்குண சைவம் 10. அத்துவாசைவம் 11. யோக சைவம் 12. ஞான சைவம் 13. அனுச்சைவம் 14. கிரியா சைவம் 15. நாலுபாதச் சைவம் 16. சுத்த சைவம் என்பவைகளாம். இப்பதினாறு சைவத்திற்கு ஆறு உட்சமயங்களும் உண்டு.

2. சைவத்தின் ஆறு உட்ச்சமயங்கள்

அவைகள் பெயர்களாவன:– 1. வைரவம் 2. வாமம் (சக்தி பூசை) 3. காளா முகம் 4. மாவிரதம் 5. பாசுவதம் 6. சைவம் என்பவைகள் வேறு தத்துவங்களும் உண்டு.

3. சிவ தத்துவம் ஐந்தின் விளக்கம்

சிவதத்துவம் ஐந்தாவன:– 1. சுத்தவித்தை 2. ஈச்சுரம் 3. சாதாக்கியம் 4. சக்தி 5. சிவம் என்பவை இவற்றின் பொருளாவது.

1. ஞானம் ஏரி கிரியை குறைந்தது, சுத்த வித்தையாகும்
2. ஞானம் குன்றிக் கிரியையுயர்ந்தது, ஈச்சுரமாகும்
3. ஞானம் கிரியையை யொத்தது, சாதாக்கியமாகும்
4. கிரியை நாடல், பக்தியாகும்

5. ஞான மென்றால் சிவம் ஆகும்

சைவத்திற்கு வேறு, புறச்சமயங்களும் உண்டு.

4. சைவத்தின் ஆறு புறச்சமயங்கள்

அவைகள் பெயர்களாவன:– 1. உலகாயதம், 2. பௌத்தம், 3. சமணம், 4. மீமாஞ்சை, 5. பாஞ்சராத்திரம், 6. பாட்டாசாரியம், என்பவைகள். இவையல்லாமல் பல ஆகமங்களும் உண்டு.

5. சிவாகமம் இருபத் தெட்டின் விளக்கம்

அவைகளின் பெயர்களாவன:–

1. காமிகம்
2. யோகசம்
3. சிந்தியம்
4. காரணம்
5. அரிதம்
6. தீப்பம்
7. சூக்குமம்
8. சுகத்திரம்
9. அஞ்சுமான்
10. சுப்பிர போதகம்
11. விசயம்
12. நிசுவாசம்
13. சுவாயாம்புவர்
14. வாதுனம்
15. அனலம்
16. வீரம்
17. இரௌரம்
18. மகுடம்
19. விமலம்
20. சந்திர ஞானம்
21. விம்பரம்
22. புரோற் கீதம்
23. இலளிதம்
24. சித்தம்
25. சந்தன சருவோத்தம்
26. பரமேச்சுரம்
27. கீரணம்
28. பேதம்

என்பவைகளாம். இவையன்றி சிவ பூசையியல்புக்கள், பதவிகளும் சொல்லப்பட்டிருக்கிறது.

6. சிவ பூசையின் விளக்கம்

சிவபூசை யியல்பாவது:– 1. சரிதை, 2. கிரியை, 3. யோகம், 4. ஞானம், என்ற நான்குமாகுமாம்.

7. சரியையின் விளக்கம்

விளக்கிடந் தீர்த்தம் வெண்ணீறுத் திராட்சம்
புத்திரன் பார்ப்பான் புராணங் கீர்த்தனை
அருச்சனை யட்சரம் அறங்கள் பலவே

சைவர்கள் திருக்கோயில்களுக்கு விளக்கேற்றி வைத்தல் புண்ணியச் சேத்திரங்களை வலம் வருதல், புண்ணிய ஆறு, குளங்களில் போய் தீர்த்தமாடல், விபூதியணிதல், உருத்திராட்சமணிதல் நற்புத்திரனை பெறல், பிராமணரை மிகுதியும் உபசரித்தல், புராணகவிதை கதைகளில் விசுவாசம் வைத்தல், நாமசங்கீதம் பாடல், சிவார்ச்சனை செய்தல், பஞ்சாட்சரம் ஓதல், அறம் (தர்மம்) முப்பத்திரண்டும் செய்து முடிப்பதே சரியையாகும்.

8. சரியை மார்க்க பலன்

சைவ சமயத்தில் காணும், சிவபூசையின் இயல்பாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கில் முதலாவதான: சரியை, பன்னிரண்டு, புண்ணிய கிரியைகளாகிய, திருவிளக்கேற்றல், க்ஷேத்திர வலம்வரல், தீர்த்தமாடல், விபூதியணிதல், ருத்திராக்ஷமணிதல், நற்புத்திரனைப் பெறல், பிராமணரை உபசரித்தல், புராண விசுவாசம் வைத்தல் நாமசங்கீதம் பாடல், சிவார்ச்சனை செய்தல், பஞ்சாட்சரம் ஓதல், அறம் (தர்மம்) முப்பத்திரண்டும் செய்தல், முதலானவைகளைக் கொண்டதாகும்.

மேற்சொன்ன நான்கில் சரியை மார்க்கமொன்றே யாவரும், இலகுவில் அனுசரித்து கைக்கொண்டு, முக்திசேரக் கூடிய மார்க்கம் என்பது, சைவசமயத்தோர், நம்பிக்கை இதைச்சார்ந்து, பலன்பெற இமயம் முதல் குமரிவரை பல கோவில்கள் இருந்தாலும், அவற்றில் விசேஷித்தவை காசி, காஷ்மீரம், காளேஸ்திரி, அயோத்தி, பிரயாகை, பண்டரிபுரம், காஞ்சி, அருணாசலம் (திருவண்ணாமலை), தில்லை (சிதம்பரம்), ஸ்ரீ ரங்கம், ராமேஸ்வரம், அரிச்சேத்திரம், குருச்சேத்திரம் என்பவையாகும்.

தீர்த்தமாடும் புண்ணிய நதி என்பவைகளில், விசேஷித்தவை கங்கை, பிரமபுத்திரா, சரஸ்வதி, யமுனை, நருமதை, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி, குமரி, தாமிரபர்ணி, துங்க பத்திரை முதலானவை.

இவையல்லாது, அருணாசலபுராணம், தீர்த்த சருக்கம், 9 முதல் 29 வரை உள்ள பாடல்களில் அருணாசல மலையைச் சுற்றி பல தீர்த்தங்கள் இருப்பதாய்ச் சொல்லுகிறது. அவை பின்வருமாறு.

இந்திரதீர்த்தம், அக்கினி தீர்த்தம், எம தீர்த்தம், நிருதித் தீர்த்தம், வருண தீர்த்தம், சங்கர தீர்த்தம், பிர்ம தீர்த்தம் என்பவை.

சிவநெறி மாலை 7–ம் பாட்டில், விஷ்ணு, பிர்மாவிற்கும் எட்டாத சிவன் ஆலயத்தில் திருவிளக்கேற்றினால் சகல பாவங்களும் நீங்கி, மெய்ஞ்ஞானம் பெற்று, கைலாயம் சேர்வாரென்று எழுதியிருக்கிறது. இதற்க திருஷ்டாந்தமாய், காசிகாண்டம், குபேரனுக்கு கண்ட அத்தியாயத்திலுள்ள 32, 34, 36, 42,

43, 47–ம் பாடலின் பொருள் என்வென்றால், சுவாமிக்கு வைத்திருந்த பிரசாதத்தை திருடப்புகுந்தவன் மங்கி எரிந்த திரியை வெளிச்சம் தெரியும்படி தூண்டிவிட்டுத் திருடுகையில், அறியாமல் அங்கே படுத்திருந்தவன் காலை மிதிக்கவே, அவன் எழுந்து திருடனை வெட்டிக்கொன்றான். இறந்த இத்திருடன் கலிங்கராஜன் குமாரனாய் திரும்பப்பிறந்து, பேரறிவுண்டாகி, சிவாலயங்களுக்கு விளக்கேற்றியதால் மரித்து, சிவன் தோழனாயும் அஷ்டதிக்குபாலகரில் ஒருவனாயும் அழகாபுரிக்கு அரசனாகி, குபேரனாய் மேன்மையபடைந்தானம். மூஷகம் (எலி) ஒன்று ஆகாரத்துக்காய் கோவில் மூலையைக் கிளர ஒரு ரத்தினந்தோன்றி ஒளி வீசவே, ஆலயத்திற்குப் பெருச்சாளி திருவிளக்கேற்றிற்று என்று, சிவன், அதற்கு சாலோக பதவி தந்தார் என்று எழுதி இருக்கிறது.

பாட்டு – 74

மூஷிகமொன்று கோயில் மூலையினைக் கிளறும்போது
தேடரு மணியொன்றங்கே சிதறியோர் விளக்கங்காட்ட
ஆடிய பெருமான் தீப மளித்த தென்றதற்கு நல்ல
வீடுயர் நெறியுங்காட்டி விரைந்து சாலோக மீந்தான்.

தன் பசிப்பிணியைத் தீர்க்கும் நோக்கமாய் விளக்கைத் தூண்டி அதன் வெளிச்சத்தில் திருட எத்தனித்த திருடனுக்கும், ஆகாரந் தேடி பூமியை கிளறின, பெருச்சாளிக்கும், தங்கள் எண்ணத்திலும், சிந்தையிலும் என்றும் நினைத்திராத முக்தி பதவி எவ்வளவு இலகுவாய் கிடைத்திருக்கிற வகையை நீங்களே கண்டு விளங்கிக் கொள்ளுங்கள். இதுவல்லாமல் தாமரை நூல் திரியிட்டு நெய்விளக்கேற்றுவோருக்கு பிறப்பு, இறப்பில்லா, முக்திபதவி கிடைப்பதாய் சொல்லியிருக்கிறது. இது முந்தினதைவிட எவ்வளவு இலகுவான வழிமுக்தி பெற என்பதை ஆழ்ந்து யோசியுங்கள். உடலரி விளக்கம், 54–ம் பாட்டிலும், சிவபுண்ணியத்தெளிவு 91–ம், 121–ம் பாட்டிலும் பார்க்கவும்.

இதற்குள்ள திருஷ்டாந்தத்தின் பொருள்:– மறைசைப் பதிற்றுப் பத்தந்தாதி 27–ம் பாட்டிலிருக்கிறது. அதாவது வேதாரணியத்திலுள்ள சிவன் கோவில் விளக்கு மங்கும்போது அதின் நெய்யைக் குடிக்கப்போன எலி, காலால் திரியை இழுத்துவிட விளக்கு பிரகாசித்து எரிந்ததால், சிவன் காட்சியளித்து, நீ இதுமுதல், மாவெலி சக்கரவர்த்தியாய்ப் பிறந்து, பரலோகம், நரலோகம், பாதாள லோகம், மூன்றையும், ஆளக்கடவாய் என வரங்கொடுத்தாராம்.

அப்படியே, மாவெலிச் சக்கரவர்த்தியாய் பிறந்து ஆண்டதற்கு அத்தாட்சியாய் வருஷந்தோறும், சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்தில் செல்லும் தினத்தில், நாடு, நகர், கிராமங்களில், எண்ணற்ற தீப அலங்காரம் செய்து

கார்த்திகைத் தீபப் பண்டிகையன்று மாவெலிப்பேரால் கொண்டாடி வருகிறார்கள். விளக்கிலுள்ள நெய்யைத் திருடிக்குடிக்கப் போன எலிக்கு எண்ணத்திலும், சிந்தையிலும், எதிர்பாராத மூவுலகையும் ஆளும் சக்கரவர்த்திப் பதவி கொடுத்தது உண்மையானால், இதற்கு மூலகாரணமாய் திருவிளக்கேற்றி வைத்த ஏழை பக்தனுக்கு ஒரு சிறு வரமேனும் கொடாது மறந்து கைவிட்டது, மிக மிக வருந்தத்தக்கதல்லவா? இவனுக்கு ஒன்றுமே இல்லையென்றால் எலிக்கு சக்கரவர்த்தியாக வரங் கொடுத்ததை நம்புவது எந்த ஆதாரத்தைக் கொண்டு என்று புரியவில்லை. பின்னும், பிறப்பினாலும் இறப்பினாலும் கண்காட்சி நினைப்பினாலும், முக்திபெற, இதிலும் இலகுவான வழிகளிருப்பதைக் கீழே காண்கவும்.

விருத்தம்

காசியிலிறக்க முக்தி, கமலையிற் பிறக்கமுக்தி
தேசமர்தில்லை தன்னிற் திருநடனங் காணமுக்தி
நேசமோடருணை வெற்மை நினைத்திட முக்தியாகும்.

பொருள்:- காசியிற்போய் மரித்தாலும், கமலாலயமென்னும், திருவாரூரிலே போய்ப் பிறந்தாலும், சிதம்பரத்தைப் போய் தரிசித்தாலும், அருணாசலத்தை மனதில் நினைத்தாலும், முக்தியடையலாம் என்பதாம். சிதம்பரபுராணம், துன்மதச் சருக்கம், 121-ம் பாடலிலும், அருணாசலபுராணம், திருநகர்ச்சருக்கம், 45-ம் பாடலிலும், கமலாலய புராணத்திலும், காசிகாண்டத்திலும், மிகச்சுலபமான வகையில் முக்திசேரும் வழிகளைக் காணலாம். இவ்வகையில் முக்திபெற்றதின் திருஷ்டாந்த மொன்றை காசி காண்டம் 28-ம் அத்தியாயம், 3 முதல் 10 பாடலில் விளக்கியிருப்பதன் பொருளைக் கீழே காண்கவும்.

கலிங்கநாட்டில் ஓர் பிராமணன், வேத விதிமுறைக்குமாறாய் தன் குல ஒழுக்கங்கள் யாவையும் விட்டு, துன்மார்க்கனாய் திரிகையில , வறுமையும் சிறுமையும் நிறைந்து திரிந்த ஒரு கைக்கோளன் மனைவியை இவன் கவர்ந்துபோய் காட்டில் வசித்தான். நித்திரையில் இவனைப் புலிபாய்ந்து கொன்றது. யமகணங்கள், இவனைக் கொண்டு போய், யமன் முன்விட, சித்திரபுத்திரன், இவன் கணக்கைப் பார்த்து, இவன் மாபெரும் பாதகனெனத் தீர்த்து, வாயில் ரத்தங்கொப்பிளித்து வடிய, ரௌர, நரகத்திலே தள்ளி வதைத்தான். இறந்தபின் இவன் இடக்காலெலும்பை கழுகொன்று கௌவிக் கொத்தித் தூக்கி பறந்து காசியைச் சேர, அங்கொரு கழுகு இதை எதிர்த்துச் சண்டையிட்டு வாதாட, தன் வாயிலிருந்த காலெலும்பு, நழுவித் தவறி கங்கையாற்றில் விழுந்ததால் சிவன் தனது சிவகணங்களை அனுப்பி அவனைப்

புஷ்ப்ப விமானத்தில் ஏற்றி நாகலோக பதவி முக்தியளித்தார் என்று சொல்லியிருக்கிறது.

பெரிய புராணத்தில் திருநாளைப் போவான் என்னும் புலைமகனும் கொடும் பாதகரான துன்மதன், துச்சதன் முதலானோர், சிதம்பர தரிசனையால் முக்திபெற்றதாயும் அருணாகிரி புராணத்தில் வச்சிராங்கத பாண்டியன் முக்தி பெற்றதையும் கமலாலய புராணத்திலும் இன்னின்னார் முக்திப் பெற்றோர் என்பதையும் மிகத் தெளிவாய்க் காணலாம்.

முன்சொன்ன சுலோகத்தை யொத்த சமஸ்கிருத சுலோகமானது:-

தரிசனா பிரதரிசி ஜனனாகமலாலயே
காசி யாந்துமரணாமுக்திஸ் மரணா
அருணாசலம் அதவாபுத்திர சந்நிதே

முன்சொன்னதுபோல, சிதம்பரத்தை தரிசிக்க, கமலாலயமாகிய திருவாரூரிலே பிறக்க, காசியினிலிறக்க, அருணாசலத்தை மனதில் நினைக்க முக்தி கிடைக்கும் என்பதிது. புத்திரன் மூலமாய் முக்தி பெறலாம் என்பது இன்னுமொரு நம்பிக்கை, இவ்வித நம்பிக்கை கொண்ட பலர், பிரசவ காலத்திற்கு முன்பே, பெரும் பிரயாசையுடன் திருவாரூரைச் சோந்து தங்கள் பிரசவ நாளின் நிறைவேறுதலுக்காக பொறுமையுடன் நாட்களை எண்ணிக்கொண்டிருப்பார்கள். இவர்கள் இவ்விடத்தில் புத்திர, புத்திரிகளைப் பெற்றால் மோட்சம் சேரலாம் என்பதே அவர்கள் நம்பிக்கை. அருணாகிரி புராணம், அருணைமா நகரச் சருக்கம் 11-ம் பாட்டில் சிறு சிதம்பரமொன்று விராடபுருடனென்னும் தளத்தை தரிசிப்போர்க்கு, விஷ்ணுவும் பிர்மாவும் கண்டிராத முக்தி பதவி கிடைக்குமாம்.

12-ம் பாட்டில் விருத்தாசலத்தில்லிறந்தோர் சடல மழியாது, பிரகாசம் கெடாது, வீங்கிவுதியாது, பின்னும் பிறவிஜெனனமிராது, தலைவெடிக்காது, துர்நாற்றமிராது, பூச்சி, புழுயிராது சிவன் வலச்செவி வழியாய் பேசி ரட்சிப்பார் என்று சொல்லியிருக்கிறது.

சிவபுண்ணியத்தெளிவு 43-ம் பாடலில் ஆலயத்தருகிலுள்ள ஆற்றுநீரை, கங்கை நதித் தீர்த்தமென நம்பி, ஸ்நானஞ் செய்வோர், ஏழு பிறப்பிலும் செய்த பாவங்கள் யாவும் தீர்ந்த திருஷ்டாந்தமொன்றின் பொருளை, திருவிளையாடற் புராணம் மகா பாதகந்தீர்த்த படலம், 1, 10, 12, 40-ம் பாடலிலிருந்து காணவும். அதாவது ஒருவன் காமவிகாரத்தால் மதிகெட்டு தாயைப்புணர்ந்தான். தகப்பன் வெட்கத்துக்கஞ்சி மறைத்துவைத்தும், மகன் பின்னும் பகிரங்கமாய் நடப்பது கண்டு, புத்திசொல்லி கேளாது, தன் தகப்பனை கொல்ல எத்தனித்தபோது, தன் மாதா குறுக்கிட்டு மரித்ததையும் பாராது,

மண்வெட்டியால் வெட்டி தகப்பனை கொன்று போட்டான். இத்தீர்த்தம் தாயைப் புணர்ந்து, தகப்பனை கொன்ற மகா பாதகத்தையும் தீர்த்து அவனுக்கு முக்தி கொடுத்ததென்று சொல்லுகிறது.

அருணாகிரி புராணம், அருணை நகர் சருக்கம் 9–ம் பாடலின் பொருளாவது காசியென்ற விசேஷித்த ஸ்தலம் கைலாயத்திலும் சிறப்புடையது. அங்குள்ள கங்கை நதியின் அலைபரகதிக்குள் வேரோடியிருக்கிறது. இங்குபோய் பிறந்ததால், மனிதர், மிருகம், மரம் மற்றும் சீவராசிகளுக்கும், சிவன் எழுந்தருளி செவியின் வழி உபதேசித்து ரட்சிப்பார். அதனால் சகல சீவராசிகளுக்கும், இறைவனைப்போல், சொரூபத்தையும், சாரூபத்தையும் அடைந்து வாழ்ந்துகொண்டிருக்குமென்று சொல்லியிருக்கிறது. மரம், மிருகம் சாரூபமடைவதெப்படி?

விருத்தாசலபுராணம், தீர்க்த சருக்கம் 3–ம் பாடலின் பொருளாவது, மணிமுத்தா நதியென்னும், வெள்ளாற்றில் வீசும் காற்றுபட்ட மனிதர், பறவை, மிருகம், பூச்சி, புழு, மரங்கள் புல்லுகள், கொடிகள், சராசரங்கள், அனைத்தும் தேவலோகம் ஆளும், அவ்வாற்றிற்பட்டால் அன்பு, துணிவு, தவம், ஞானம் உண்டாகுமெனச் சொல்லுகிறது.

தாம்பிரவர்ணி மகத்துவத்தில், தாம்பிரவர்ணி ஆற்றில் மூழ்கினால் சகல பாவங்களும் நாசமாகிவிடுமாம் இதன் காரணமாகவே இதற்கு பாவநாசம் என்னும் பெயர் உண்டாயிற்று. இதன்றி இவ்வாற்றின் தீர்த்தத்தில் பத்துப் பணவிடையளவு தீர்த்தம் சாப்பிட்டால் சகல பாவமும் நாசமாய் போகுமாம். அத்தீர்த்தம் கிடையாத எல்லையில் உள்ளவர். அந்த ஆற்றின் ஜலத்தால் விளைந்த நெல் முதலான உணவுத்தானியங்கள் கிடைத்துச் சாப்பிட்டால் சகல பாவங்களும் நாசமாகிவிடுமென்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்குத் திருஷ்டாந்தமாயுள்ள கதை பின்வருமாறு:– வேடனொருவன் பன்றியை விரட் ட, அது பயந்துஒடி, சித்திர நதிக்குள் தவறி விழுந்து இறந்தது. அப்பன்றியை துரத்தி ஓடின வேடனும், அந்த நதியில் விழுந்து இறந்து போனான். இந்த இரண்டு ஆத்துமாக்களும் கைலாயம் சேர்ந்தார்கள் என்று தாம்பிரவர்ணி மகத்துவத்தில் எழுதியிருக்கிறது.

திருவையாற்றுப் புராணத்தில் எழுதியிருப்பதாவது: ஒருவன் தன் தகப்பன் மனைவியை தனக்குப் பெண்ஜாதியாய் வைத்திருந்ததை தகப்பன் கண்டு புத்தி சொல்லியும் கேளாது, தன் தகப்பனைக் கொன்றுவிட்டு, அவளைப் பகிரங்கமாய் வைத்துக்கொண்டான். தன் சகோதரன் இத்துர்ச் செயலைத் தவறு என்று கண்டித்தான் என்று அவனையும் வெட்டிக் கொன்றான். இதனால், அவன் பைத்தியங்கொண்டு அலைந்து திரிந்தான். அவன் காவேரி ஆற்றின்

படித்துறையில் மதிமபங்கி கிடக்கையில், தூர ஸ்திரி ஒருவள் தீட்டுச் சீலையைத் துறையில் துவைக்கையில், சில திவலைகள் அவன் மேற்பட்டதால் புத்தி தெளிந்து, காவேரியாற்றுத் தன்ணீரின் மகிமையிதுவென்று அதிசயப்பட்டு, காவேரியாற்றில் போய் முழுகவே, சிவன் எழுந்தருளிவந்து அவனுக்கு கைலாய பதவி அளித்தார் என்று எழுதியிருக்கிறது.

உபதேசகாண்டம் 15-ம் பாடலின் பொருளாவது: திருநீற்றைமாத்திரம் உச்சரித்தோ, உச்சரிக்காமலோ, எப்படிப் பூசினாலும், பூசியவர்களை பிர்மா, ருத்திரன், விஷ்ணு என்னும் மும்மூர்த்திகளாகவே வணங்கலாமென உபநிஷத்தில் சொல்லியிருப்பதாய் எழுதியிருப்பதுமின்றி திருநீரணிந்தோர்க்கு முக்தியும் கிடைக்குமென்று எழுதியிருக்கிறது. இதற்கு திருஷ்டாந்தமாக பிரமோத்திரகாண்டம் விபூதி மா மகிமை 34-42-ம் பாடல் வரைக்கும் உள்ள பொருள் பின்வருமாறு:-

துன்மார்க்கமான, சூது, பொய், களவு நிறைந்த பிராமணன் ஒருவன் பாண்டிய நாட்டில் இடைவிடாது திருடி காலம் கழித்து வந்தான். தன் திருட்டு சம்பாத்தியத்தை வேசிகளுக்குக் கொடுத்து, காமதூர்த்தனாய்த் திரிகையில், ஒருநாள் இரவில் ஒரு புலைச்சியுடன் விபசாரத்தில் ஈடுபட்டிருக்கையில் அவள் புருஷன் கண்டு இப்பிராமணனை வெட்டிக்கொன்று வேலிக்கப்பால் எறிந்தான். பசி வேதனையால் மிக மெலிந்து, வருந்தி, குப்பைச்சாம்பலின்மேல் படுத்துக்கிடந்த நாய் ஒன்று பிணத்தைக்கண்டு அதன்மேலேறி, காலால் மிதித்துக்கொண்டு சதையைக் கடித்து இழுத்துத் தின்றது. நாய் காலில் ஒட்டியிருந்த சாம்பல் அப்பிணத்தின்மேற்படவே, சிவகணங்கள் அப்பாதகப் பிராமணனைப் பிடித்து, நரகத்திற்கு கொண்டு போகவந்த யமகணங்களைத் துரத்திவிட்டு, அவனைப் புஷ்ப விமானத்தில் ஏற்றிக்கொண்டு போய் சிவலோகத்தில் விட்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது.

உபதேச காண்டம், ருத்திராச்ச மான்மியம். 3-ம் பாட்டின் பொருளாவது:- ருத்திராட்சமணியை பக்தியோடு தரித்தாலும், பக்தியின்றி தரித்தாலும், அதையணிந்தோர்க்கு, சிவன் முத்திபளிப்பார் என்பதாம். இது நிறைவேறினதற்கு திருஷ்டாந்தமாய் உபதேசகாண்டம், ருத்திராட்சமான்மியம், 118, 119, 125, 126 பாடலில் உள்ள பொருளாவது:-

சிறு வயது முதல் ஒரு நற்கிரியையும் செய்யாது பாதகனாய் திரிந்த ஒருவன், ஓர் இரவில் பிறத்தியான் மனைவியைக் கனவாய்க் கொண்டுபோகையில், நகர காவலாளர் கண்டுபிடித்து, மழுவாயுதத்தால் வெட்டிக் கொலை செய்தார்கள். இவன் இறந்த நான்காம் நாள். இராசகுமாரத்தி ஒருத்தி, தான் அணிந்திருந்த ருத்ராட்ச வடத்தைத் கழற்றி வைத்துவிட்டு

தீர்த்தமாடினாள். காகம் ஒன்று ருத்ராட்ச மணிக்கிடையில் கோர்த்திருந்த, வெண்மணிகளைக் சோறு என்று நினைத்து கொத்திப் பறந்துபோகையில், வாயினின்று நழுவி பிணத்தின்மேல் விழுந்தது. அதனால் அவன் பாதங்கள் தீர்ந்து, கைலாயம் சேர்ந்தான் என்பதாம்.

நற்புத்திரனைப் பெறுவதால் உள்ள பலன்களைப் பற்றி குறள் 1–ம், 2–ம் பாட்டில் விளக்கியிருக்கிறது. இவ்விதம் நிறைவேறின திருஷ்டாந்தமொன்றுக்கு உபதேசகாண்டம், சிவபுண்ய மான்மியம் 205, 206, 209–ம் பாடலின் பொருளாவது:–

வேதாரண்யத்தில் பாவ, புண்ணியமென்னும் பகுத்தறிவில்லாது, தன் குடைநிழற்குட்பட்ட குடிகளை ஒடுக்கி மிஞ்சின யிறைவாங்கி, கொடுங்கோல் ஆட்சி புரிந்த அரசனொருவன் இவ்வித பாதகங்களையே செய்து மரித்தபின், யமதூதர் இவனை பயங்கர நரகத்திலே போட்டு வதைத்தார்கள். ஒருநாள் பூலோகத்தில் உள்ள அவன் மகன் மண்ணைக்கூட்டி, சிவலிங்கமென்று பூசை பண்ணி விளையாடிக் கொண்டிருந்ததை சிவன் கண்டு, சந்தோஷப்பட்டு நரகத்தில் வாதையுற்றுக்கிடந்த பிதாவை, மகன் விளையாட்டில் செய்த பூசைக்கு கைலாயங் கொடுத்தார் என்பதாம்.

உபதேசகாண்டம், சிவபுராண மான்மியம், 42–ம் பாடலில், சிவபுராணம் படிப்பதைக் கேட்டுக்கொண்டிருக்குமிடத்திலிருக்கும் பட்சி மிருகங்களும், மரம், புல், பூண்டு முதலியனவும், முக்தி பதவி அடையும் என்று எழுதியிருக்கிறது. இப்படி நிறைவேறியதற்கு ஓர் திருஷ்டாந்தம்; திருவிளையாடற் புராணம், நாரைக்கு முக்தி கொடுத்த படலத்தின் 13, 18, 21, 22–ம் பாடலின் பொருளாவது:–

ஓர் மடத்தில் பலர் கூடி, சிவபுராண மகத்துவத்தைப் படிக்கக் கேட் டுக்கொண்டிருந்தனர். அச்சமயம் நாரை ஒன்றும் இதைக்கேட்டு சிந்தித்து தியானம் செய்துக்கொண்டிருந்தது. அதைப்பார்த்த சிவன், காட்சியளித்து கேட்ட வரம் தந்தார். நாரையும் பஞ்சவாத்திய முழங்க, புஷ்ப விமானத்திலேறி, நான்கு புயங்களும், மூன்று கண்களும் பெற்று தேவர்கள் புஷ்பாஞ்சலி செய்ய, சிவலோகம் சோந்து நந்தி கணங்களுடன் இருந்தது என்பதாம்.

வாசகர்களே! சைவசமய விவரிப்பின்படி மரித்தவன் ஒருவன் தன் பாவகர்மந்தீர்ந்து, கைலாயம் சேர்ந்து, முக்தியடைய, எண்பத்து நாலு லட்சம் யோனி வழியாய், மாறி, மாறிப் பிறந்து யிறந்து, அப்பிறவியில் தான் செய்யும் புண்ணிய பலத்தால், கடைசியில் கைலாயம் சேர்வது உண்மையான வேதாந்த முறை என்றால், இதுவரை விளக்கிக்காட்டியுள்ளதில் இச்சரியைமார்க்கக் கிரியைகளிற் சிலதைக் கொண்டு மாபெரும் பாதகங்களைச் செய்தோர், மிகச்

சுளுவான முறையை அனுசரித்து கைலாயஞ் சேர்ந்தார்கள் என்று திருஷ்டாந்தம் கூறி இருப்பதால், இவற்றில் எதைத்தான் வேதாந்த சத்திய விதிமுறை என்று நம்புவதென, நீங்களே தீர்ப்பிடுங்கள்.

பக்தி என்பதும், சத்திய மார்க்கமென்பதும், மனிதன் அறிந்தும், அறியாமலும், செய்யும், பாவகர்மங்களில் தேவகடாட்சத்தால், அறவே நிவர்த்தி (பாவமன்னிப்பு) அடைந்து, தீய கர்மங்களை பின்னும் தொடர்ந்து செய்யாது, தூயமணம், கிரியைகளுடன், நித்தமும் நடந்து, பூரணத்தையடைந்து முக்தி சேர்வதல்லவா?

முன்சொன்னபடி காணும், எண்பத்து நாலு லட்சம் யோனியுள்ள சீவராசிகளில், மனிதன் ஒருவன் மட்டுமே, தெய்வ நம்பிக்கையும், பயபக்தியும் நிறைந்த உள்ளமுடையோனாயும், மறுமையில், நித்திய பேரின்ப சந்தோஷ பாக்கியங்களை அனுபவிக்கும், வாஞ்சையும், நம்பிக்கையுமுடையவனாயும் இருப்பதைக் காண்கிறோம். அப்பதவியைப் பெற, தேவ கட்டளை, விதி பிரமாணங்களும், கைக்கொண்டு நடக்கவேண்டிய நியமங்களும் உண்டு. ஆனால் இங்கு காணும் விளக்க திருஷ்டாந்தங்களில், சுவாமி, பிரசாதத்தை திருடப்போனவன். தனக்குப் போதுமான வெளிச்சமில்லையென, விளக்குத்திரியைத் தூண்ட, சிவனுக்கும் வெளிச்சம் கிடைத்ததென்று சிவன் அவனை தனக்குத் தோழனும், அழகாபுரிக்கு அரசனும், திக்குப்பாலகரில் ஒருவனும், குபேரனுமாக்கி, மேன்மைபடுத்தி முக்தியளித்தது எத்தனை விபரீதமாய் தெரிகிறது பாருங்கள்.

அவ்விதமே, ஆகாரந்தேடி பூமியைக் கிண்டிக் கிளரின எலிக்கும் முக்தி கிடைத்திருக்கிறது. தாமரை நூலால் திரியிட்டு, நெய்விளக்கேற்றுவோர்க்கு, இறப்பு, பிறப்பு இல்லாத முக்தி கிடைக்குமாம். நெய்யைத் திருடிக் குடிக்கவந்த எலிக்கு, மூவுலகையும் ஆளும் சக்ரவர்த்தியாக்கி, முக்தியும் பெற்றிருக்கிறது. ஆனால் இதற்கு மூலகாரணமாய், நெய் விளக்கேற்றி வைத்த பக்தனுக்கு, ஒரு வரமும் கொடுத்ததாய்க் காணோம். எத்தனை பரிதாபம்! பாருங்கள், முதலாவது யாருக்கு முக்தியளிக்க வேண்டியது நியாயமென்று பாருங்கள். பாதகனான பிராமணனை, புலிக்கொல்ல, அவன் மரித்து நரகத்தில் வாதைப்படுகையில், அவன் இடக்காலெலும்பை கழுகு கவ்வித் தூக்கிக் காசிக்குச் கொண்டு போய் கங்கை நதியிற் போட்டதால், பிராமணன் நரகத்தை விட்டெழும்பி, புஷ்ப விமானத்திலேறி நாகலோகப் பதவி பெற்றானென்பது உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? இத்தனை லகுவில் முக்தி கிடைப்பதுண்மையானால், மற்றுள்ள பூசைகள், பலிகள், நேமநிஷ்டைகள் எதுக்கு? இவ்வகையில் முக்தி சேர முடியுமென்றால் அவையொன்றும் அவசியமில்லையே! சிறு சிதம்பரமென்னும் விராட புருடஸ்தல தரிசனை

செய்வோர்க்கு பிர்மா, விஷ்ணு காணா மோட்சம் கிடைக்குமாம். மும்மூர்த்திகளில் சிரேஷ்ட பதவி வகுத்து விதி எழுதும் பிர்மாவுக்கும், ரட்சிக்கும் விஷ்ணுவுக்கும், தெரியாத மோட்சம் எங்கேயிருக்கும், நீங்களே சற்று யோசித்துப்பாருங்கள். விருத்தாசலத்திலிறந்தோர், வீங்கி, வெடிக்காது, பூச்சி, புழுச்சேராது நாற்றமின்றியிருப்பதோடு, செத்த பிணத்தின் வலச்செவியில் சிவன் வந்து பேசி ரட்சிப்பாராம். செத்த பிணத்துடன் சிவன் பேசுவது உண்மையென்றால் யாரோடு, எப்படிப் பேச முடியும் அதற்கு ஆத்மா இல்லையே. இதல்லாது, சிதம்பரத் தரிசனையும், காசியில் இறப்பதும், திருவாரூரில் பிறப்பதும், அருணாசலத்தை நினைப்பதும் முக்தி தரும் என்பது, முன்னுள்ள எல்லாவற்றிலும், மிக மிக லேசான வழியல்லவா? எங்கிருப்போரும், திருவாரூரில் போய் பிரசவித்து பிள்ளைகளைப் பெறுவதாலும் சிதம்பரத்தை தரிசிப்பதாலும், காசியிற் போய் இறப்பதாலும், அல்லது இலகுவாய் அருணாசலத்தை நினைப்பதாலும், முக்தியடைந்துவிடலாமல்லவா? கால முழுதுமே பஞ்சமா பாதகங்களைச் செய்து கடைசியில் ஷ சொன்ன வகையில் முக்தி பெற வழியுண்டென்றால், பாவத்தை செய்வோரெல்லாம், புண்ணியம் செய்வோர் போலவே தங்களைத் திடப்படுத்திக் கொள்வார்களல்லவா? இவ்வகையில் முக்தி பெறுவது முற்றும் சாத்தியமானதுதானா? தாயைப் புணர்ந்து, தகப்பனைக் கொன்றேன், சகோதரனைக் கொன்றேன், தீர்த்தமாடி முக்தி சேர்ந்தான் என்றால், இவ்வகையில் பாதகம் புரிவோரை பின்னும் எவ்வளவு பலப்படுத்திவிடுகிறதென்று பாருங்கள். தாம்பிரவர்ணி மகத்துவ மகிமை, அதில பத்து பணவிடை தண்ணீர் சாப்பிட்டால் சகல பாவங்களும் நாசமாகுமென்றால், அந்த ஆற்று ஜலத்தை பிரயோசனப்படுத்தும், வாய்ப்புடையோர் அனைவரும் தாங்கள் செய்த பாவம், நாசமாக்கப்பட்டு, தூயர்களாகவே காட்சியளிப்பார்கள் போல் தெரிகிறதே. இந்த ஜலம் கிடையாத எல்லையில், இந்த ஜலத்தால் விளைந்த உணவு தானியங்களைப் புசித்து பாவம் தீர்ந்து முக்தி பெறலாமென்பது, எத்தனை சுருக்கமான வழியென்று பாருங்கள். அந்த தானியங்களைப் புசிப்போர், மாசற்ற தூயர்களாய் காண்பதுமன்றி அந்தத் தானியங்களைச் சேமித்து வைத்து, பாதகர்களுக்கு, பரிமாறி பாவங்களை நாசமாக்கி, சொர்க்கலோகத்திற்கு அனுப்பிக் கொண்டேயிருக்கலாமே! இவை அத்தனையும், பச்சைப் பொய்யும், தப்பான நம்பிக்கையை ஊட்டும் மாறாட்டமான வழியென்று இன்னும் உணர்வாரில்லையே! அப்படியே காவிரியாற்றுத் தீர்த்தமும், கட்டுரையை நம்ப இடமளிக்கிறது. இவ்விதமே நாய்காலில் ஒட்டிய சாம்பல், பிணத்தை மிதித்துக்கொண்டு கடித்துயிழுத்துத் தின்னும்போது பிணத்தின்மேல் பட்டதால், புஷ்ப விமானத்திலேறி முக்தி சேர்ந்தான் என்றால் பஞ்சமா பாதகங்களைச் செய்தோர்க்கு, தங்கள் மதஅனுஷ்ட்டான விதிமுறைகள் ஒன்றையுமே கைக்கொள்ளாது எத்தனை

சுளுவில் மோட்ச பதவி சேர வழியுண்டு பண்ணியிருக்கிறதென்று பாருங்கள்.

அப்படியே, பிறத்தியான் மனைவியை களவாய்க்கொண்டு போய் மனைவியாக்கி கொண்டவன், கொலையுண்டு பிணமாய் கிடக்கையில், காகம் ருத்ராட்சமணி வடத்தைக் கொத்திப் பறந்து போகையில் தவறி பிணத்தின்மேல் விழ, அவன் பாதங்கள், அனைத்தும் தீர்ந்து, கைலாசம் சேர்ந்தான் என்பதும், முக்திமார்க்க விதிமுறைகளுக்கு ஏற்றதுதானாவென்று பாருங்கள். முக்திசேர விரும்புவோர்க்கு, இவ்வழிகள், எவ்வளவு சுலபத்தில் சேரும் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறதென்பதைப் பாருங்கள்.

இப்படியே நரகத்தில் வெந்து வேதனையை யனுபவிக்கும் பாதகன், தன்மகன் மண்ணைச் சிவலிங்கமாய்க் கூட்டி, விளையாடியதால் நரகத்தை விட்டெழும்பிக் கைலாயம் போய்ச் சேர்ந்தானென்பதும், மாபெரும் விபரீத முறையல்லவா?

இதத்தனையும் விட: சிவ புராணம் கேட்ட நாரைக்கு வரமீந்து, நாலு புயமும் மூன்று கண்களுமளித்து, பஞ்ச வாத்தியம் முழங்க தேவர்கள அஞ்சலி செலுத்த புஷ்ப விமானத்திலேறி கைலாயம் சேர்ந்த காட்சி, மெய் வேதாந்த முக்திநெறி வழிதானா? யோசித்து பாருங்கள்.

மனிதரின் பிரயாண வசதிக்கேற்றவைகள், தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும், செல்லும் புகைவண்டி, கப்பல், ஆகாயவிமானம் முதலானவைகளில் அமைந்திருக்கும் விசேஷித்த வசதிகளை, தகுந்த கட்டணம் செலுத்திப் பயன்படுத்திக் கொள்ள முடியாது, வறுமையின் காரத்தால், உயர்குலத்தோர் என்போரும், கடை வகுப்புப் பிரயாணிகளின் கட்டணத்தைச் செலுத்திப் போக்குவரத்து செய்வதை நாம் பார்க்கவில்லையா? இது பூரண உண்மையானல், பின்னை எப்படி? பெருச்சாளியும், நாரையும், பன்றியும், மரமும், புல்லும், பூண்டும் கொடியும், செடியும், சேர்ந்து போய் முன்விவரித்துள்ளபடி, கைலாயம் சேர்ந்து வாழமுடியும்? இதென்ன விபரீதம்! மோட்சமென்றால் ஜனதா, புளு மவுண்டென், திருவனந்தபுரம், துரித புகைவண்டிகளா? அல்லது, பாம்பே, கல்கத்தா, மதராஸ் துரித வண்டிகளா? அல்லது இந்து, சிலோன் போட் மெயில் வண்டிகளா? இதிற் பிரயாணம் செய்வோர்க்கு உள்ள வசதிகள், கட்டணங்கள் மற்றுள்ள சட்டங்கள், நமக்கு நன்றாய்த் தெரியும் என்ற காரணத்தால், அதைப் பெரிதும், விஸ்தரித்து விவரிக்காது நிறுத்தலாயிற்று. இப்படியிருக்க முக்தியடைவதென்பது மேற்சொன்ன வூர்திகள் மூலம் செல்லுவதிலும், மிகச் சுலபமாய் நினைக்கிறீர்களா? இதல்லாது, நாரை, பன்றி, பெருச்சாளி, மரம், செடி, கொடி, புல், பூண்டும் பேரின்பம் நிறைந்த கைலாசத்தில் சேர்ந்து, பங்கனுபவிக்க, இவைகட்கு ஆத்துமா உண்டா? நன்மை, தீமை, மோட்சம், நரகம், பாவம்,

புண்ணியம் என்பதைப்பற்றி ஏதாவது தெரியுமா? இதெல்லாம் சாத்தியமானவைதானா? என்று நீங்களே தீர்ப்பிடுங்கள்.

முன் விவரித்துள்ள முப்பத்து முக்கோடி தேவர்கள் பிறப்பின் வரலாற்று விளக்கத்தில் தக்ஷப் பிரஜாப்தி மகனும் காசிப மகா ரிஷியின் மனைவிமார்களுமான பதிமூன்ற ஸ்திரிகள். முப்பத்து முக்கோடி தேவர்களையும், வாமண அவதாரமான விஷ்ணுவையும், மனிதர் முதல் ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வனவாகிய ஜீவன்களையும், மரம், செடி, கொடிகளையும் தங்கள் யோனி வழியாய்ப் பெற்றார்கள் என்ற விளக்கத்தின்படி இவைகட்கு மோட்சமும் உண்டுபண்ணியிருக்கிறார்கள் போல் தெரிகிறதே! இல்லையென்றால் வேதாந்த விதிப்படி முன்சொன்ன ஆத்துமாவற்றவைகளுக்கு எவ்வகையில் மோட்ச பேரின்பம் கிடைக்க முடியும்?

ஒன்று விசேஷித்து கவனிக்க வேண்டியது. பிரயாணச் சீட்டு வாங்காது, பிரயாணம் செய்வோர் படும்பாட்டை இங்கு விஸ்தரித்து விவரிப்பது அவசியமா? சிர மொட்டையிட்டு சின்னங்கள் அணிந்து, காவியுடுத்தி, பயணச்சீட்டில்லாமற் போகும் சுவாமிகள் என்போர் மலஜலம், உபாதை கழிக்கும் அறையில் (கக்கூசில்) புகுந்து கதவடைத்துக் கொண்டாலும், சீட்டுப் பரிசோதனை செய்வோர் விட்டுக்கொடுப்பதைக் கண்டீர்களா? சோதனை செய்வோர், இவரைச் சுவாமி என்று கரங்கூப்புவதற்கு மாறாய், அவர் இவர் மேல் அடிபோடும்போது, இவரல்லவோ சீட்டுப் பரிசோதகரை சுவாமி, சுவாமியென்று கரங்கூப்பிக் கையெடுக்கிறார். புகைவண்டிப் பிரயாணமே மனித உலகத்தில் இவ்வளவு சட்டதிட்டங்களுடன், கண்டிப்பாயிருந்தால் தெய்வலோகமாகிய மோட்சம் செல்வது, இதைவிட, மிக மிக, சுலபமென்று நினைக்கிறீர்களா?

தாம்பிரவர்ணி ஜலத்தில் பத்துப் பணவிடை உட்கொண்டால் சகல பாவங்களும் நாசமாகுமென்பதும், ஜலம் இல்லாத இடத்தில் இந்த ஜலத்தில் விளைந்த உணவுத் தானியங்களைச் சாப்பிட்டால், சர்வ பாவங்களும் தீரும் என்பதும், கங்கை முதல் பதினொரு புண்ணிய நதிகளில் மூழ்கினால், பஞ்ச மா பாதகங்களும் நீங்கி, முக்தி சேர்வார்களென்பது உண்மையானால், வேதம், சாஸ்திரம், புராண விசுவாசம், மற்றுள்ளச் சடங்குப் பிரமாணங்கள் அவசியமில்லையே! பூசை, பலி, ஆலயம் தொழல், அவசியமில்லையே! இவை அத்தனையும், வீண் பிரயாசையும், வேதாந்த வழிபாடுகளுக்குப் பொருந்தாத அஞ்ஞான கிரியையும் பொய், நம்பிக்கையுமென்று கண்டறிந்த ஞானிகளின் விளக்க உரையை கீழே கவனியுங்கள்.

அகப்பேய் சித்தர் பாடல்

தீர்த்தமாடினாலும் அகப்பேய் தீவினை போகாதே
ஊத்தை போனாலுமகப் பேய் யுள்வினை போகாதே

ஆறுகண்டாயே யகப்பேய் அந்தவினை தீர
தேரித் தெளிவ தெல்லா மகப்பேய் தீர்த்த மாமடியோ

காசிக்குப் போனாலு மகப்பேய் கன்மந்துலையாதே
பூசித்து வந்தாலு மகப்பேய் புண்ணியங்கிட்டாதே

சிவ வாக்கியர்

காண வேணுமென்று நீர் கடல் மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ அறிவில்லாத மூடர்காள்
வேணுமென்றே ஈசர்பாத மெய்யுளே விளங்கினால்
காணலாகும் நாதனை கலந்து நின்ற ஜோதியை

தூர, தூர, தூரமென்று சொல்லியோடும் வீணரே
பாரும் விண்ணு மெங்குமாய் பரந்த மெய்பராபரம்
ஊருகாடு போயுழன்று நின்றுதேட வேண்டுமோ
நேரதாக உம்முளே நினைத்தறிந்து கொள்ளுமே

பாம்பாட்டிச்சித்தர் பாடல்

நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினு மதன்நாற்றம் போமோ
கூறுமுடல் பலநதி யாடிக்கொண்டதால்
கொண்டமலம் நீங்காதென்றாடாய் பாம்பே

வேறு விருத்தம்

ஒரு நாள் கடல் மூழ்கி உள்ள பாவமெல்லாம் தீருமென்றால்
பல நாள் கடல் மூழ்கும் செம்படவர்க்கு பாவமுண்டோ நயினாரே

சிவ வாக்கியர்

காலை, மாலை நீரிலே முழுகுகின்ற மூடர்கள்
ஊழிகாலம் நீரிலே யுதிக்கும் தேரைக்கென் பலன்
காலமே யெழுந்திருந்து கண்கள் மூன்று தோன்றிலே
மூல, மூல மென்பீராகில் முக்திசேரலாகுமே

இப்பாடலின் கருத்தனைத்தும், இவ்வித தீர்த்தமாடல் க்ஷேத்திர வலம் வரல், புண்ய நதிகளில் மூழ்கி, பூசை, பலியிடல் யாவும் வீண் என்று காட்

கிறதே! மனிதன் முக்தி பெற, பராபரவஸ்துவின் திருவருளால், வேதாகம சத்திய ஞானநூலை ஆராய்ந்து மெஞ்ஞானத்தைக் கடைபிடித்து பாவக்கிரியைகளை, முற்றும் வெறுத்து, தேவ இரக்கத்தால் பாவ விமோசனம் பெற்று நீதியின் கிரியைகளைச் செய்து பரம்பொருளைப் போற்றி துதிப்பதால் அல்லாது வேறு வழியில்லையே!

பின்னும் தொடர்ந்து சகல பாவங்களுக்கும் அடிமைப்பட்டு, வெளிச்சடங்காச்சாரமான புண்ணியத் தீர்த்தமாடி முக்திசேரும் நம்பிக்கையை அறவே வெறுத்துவிட்டு, பொய் போதனைக்குச் செவிகொடாது, பராபரவஸ்துவின் அருள் ஒளி பெற்று, முத்திமார்க்க நெறிமுறையைக் கடைப்பிடித்து, பூரணமடைய மெஞ்ஞான பக்தியை ஒருமனப்பட்ட உள்ளத்தில் உருவாக்குங்கள், இதுவே உத்தம பக்தர்கள் கண்டானந்தித்த முக்தி மார்க்கமாகும்.

9. கிரியையின் விளக்கம்

யாகம்பலியே யாத்திரை காவடி
அரிகண்டம் விரதம் அங்கப் பிரதட்சணந்
தீவிளையாடல் செடில் குத்தி யாடல்
சிரமொட்டை முத்திரை தண்டனை பலவே

முந்தின பிரிவுகளில் காட்டியபடி பல யாகங்களை செய்தல், பலவித பலி செலுத்தல், காசி, காஞ்சி, ராமேசுவரம் முதலான இடங்களுக்கு தீர்த்த யாத்திரை போதல், காவடி சுமத்தல், அரிகண்டமிடல், விரதங்காத்தல், அங்கப் பிரத்தட்சணம் வரல், தீகுதித்தாடல், செடில் குத்தியாடல், சிரமொட்டையிடுதல், முத்திரை தானமிடல், பலவித ஆக்கினைகளையனுபவித்தல் யாவும் சேர்ந்தது கிரியையாகும்.

10. யோகத்தின் விளக்கம்

சன்னியாசம் வேடஞ்சடை நிறுவாணம்
மவுனச் சாகரம் பூவலஞ் செய்தல்
யோகம் சமாதி உபவாசங் கற்பம்
வனவாசம் புற்கலம் வழங்கள் பலவே

அதாவது பிரமாச்சாரியாய் விரதத்துவமிருத்தல், தவவேடம் பூணல், சடை முடிதரித்தல், நிருவாணமாயிருத்தல், மவுனஞ் சாதித்தல், நித்திரையின்றி இருத்தல், பூமியை சுற்றி வலம் வருதல், யோக நிஷ்டையிலிருத்தல், உணவொழித்திருத்தல், கற்பமுறை கொள்ளல், சகலத்தையும் விட்டு வெறுத்து வனவாசம் போதல், சரீரத்தில் பலவித தண்டனையடைதல், யாவும் சேர்ந்தது யோகமாகும்.

11. ஞானத்தின் விளக்கம்

சன்மார்க் முற்ற நல் வேதாகமங்களும்
சார்ந்து மயல்
பன் மார்க்கம் முற்ற சமயம் விட்டபதி
பாசம் பசுத்
தன் மார்க்கம் முக்தியித்தத்துவ நீக்கித்
தனைபறிந்த
நன் மார்க்கந்தான் சிவனோ
டங்கழுந்துதல் ஞானமன்றே

அதாவது சன்மார்க்க சத்தியம் நிறைந்த வேதாகமங்களைக் கற்றுணர்ந்து, தன்னையுணர்ந்து, பக்தியற்ற பல மார்க்கங்களையும், அதன் தத்துவங்களையும், பாவங்களையும், விட்டு விலகி நன்மார்க்கத்தில் நிலைப்பதே ஞானம்.

ஞானம், துவைதம், அத்துவைதம் என இருவகைப்படும். கடவுளும், ஆத்துமாவும் வேறு என்பது துவைதம் என்றும் சமஸ்தமும் பிரம்மமேயன்றி வேறில்லையென்பது அத்துவைதம் என்றும் சொல்லப்படும். வைஷ்ணவத்தில் விஷ்டாத்துவைதமென்று பேர். இது ஒன்றாயும் வேறாயுமிருக்கிறது.

46

முக்தி பதவிகள் நான்கின் விளக்கம்

முன் விவரித்துச் சொன்ன சிவாகமநூல்கள், சிவபூசை தத்துவங்கள், புண்ணிய விதிகள், சரிதை, கிரியை, யோகம், ஞானம் என்றவைகளில் சொல்லப்பட்ட விதிமுறைகள் யாவையம் கைக்கொண்டு நடப்போர்க்கு சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கு பதவிகள் உண்டென்பதாய் நம்பிக்கை உண்டு. அவையாவன:

1. கடவுளின் உலகத்தில் வாழ்தல், சாலோகம்
2. கடவுளுடன் சமீபித்து வாழ்தல் சாமீபம்
3. கடவுளைப் போன்று வாழ்தல் சாரூபம்
4. கடவுளோடு ஒன்றாய் வாழ்தல் சாயுச்சியம்

பக்தர்கள் முக்தி பெற, இத்தனை வேதங்களும், சாஸ்திரங்களும், புராணங்களும், யாகங்கள், பலி பூசைகள், விதிமுறைகளும் இருந்தாலும், இதை முற்றும் காணாதோரும், கேளாதோரும், படித்து அறியாதோருமாய், பிறவிச் சைவப் பெருமை பேசித்திரிந்தால் முக்தி பெறுவதெப்படி? அதல்லாமல் இவ்வித

விதிமுறைகளைக் கைக்கொண்டு, எத்தனை பேர் சாயுச்சய பதவியை அடையமுடியுமென்று வாசகர்கள் கவனியுங்கள்.

வாசகரே, உண்மையாகவே நீர் ஒரு சைவர் என்றால் இதுவரையில் உமது நாட்களில் சைவத்தைப்பற்றி தெளிவாய் அறிந்ததுண்டா? அப்படியானால் சைவம் பதினாறில் நீர் எந்தச்சைவம் என்று சொல்லுவீரா? அல்லது உட் சமயம் ஆறில் நீர் எந்த சமயத்தவர்? அல்லது சிவதத்துவம் ஐந்தில் எந்த தத்துவத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறீர்? அல்லது புறச்சமயம் ஆறில் ஒன்றான, சைவத்தை வசைகூறும் புத்த சமயத்தை நீர் ஆதரித்துப் போற்றிப்பேச நியாயம் என்ன? அல்லது, சிவாகமம் இருபத்தெட்டில் நீர் வாகித்துள்ள ஒரு ஆகமத்தின் பெயர் சொல்ல முடியுமா? அல்லது சிவபூசையில் உள்ள சரியை, கிரியை யோகம் ஞானத்தில் எவைகளைக் கைக்கெகண்டிருக்கிறீர்? சொல்ல முடியுமானால், இந்த நாலு பதவியில் எந்தப்பதவி உமக்கு லபிக்கும் பதவி என்று சொல்ல முடியுமா? வெளிச்சடங்காச்சாரப் பழக்க வழக்கத்தினாலும், புசிப்பு, குடிப்பினாலும் மோட்ச பதவியளிப்பவரும், அதைப் பெறுவோரும் யார்?

இதெல்லாம் மனிதர் மதியீனத்தைக்கண்டு கள்ளக் குருக்கள் போட்ட முள்வேலிகள். இதைக்கண்ட பட்டிணத்தடிகளின் அங்கலாய்ப்பைக் கவனிக்கவும்.

குரு மார்க்கமில்லா குருடருடன் கூடி
கரு மார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேனே

என்கிறார். மற்றொரு ஞானியார் சொல்வது,

இருக்கு நாலு வேதமும் எழுத்தறிவே யோதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான்

மனமொன்றி நின்ற விடம் சரிதையாகும்
மன்னியதோர் சுத்தியிலே மாய வேண்டாம்
மனமொன்றி நின்ற விடம் கிரியை யாகும்
மன்னு சிவ பூசையிலே மயங்க வேண்டாம்
மனமொன்றி நின்றவிடம் யோக மாகும்
மன்னியதோர் உடல் தன்னை மாய்க்க வேண்டாம்
மனமொன்றி நின்ற விடம் ஞானமாகும்
மனமொன்றி நினை பரத்தை மன்னலாமே

என்கிறார். வாசகரே, மெஞ்ஞானிகள் கண்டறிந்த ஞானத்தைப் பார்த்தீரா? இப்பாடல் சகல பாவகர்மங்களையும் செய்ய அடிபீடமாயுள்ள,

பொல்லாத மனதை மாற்றி ஒருமைப்பட்ட மனதுடன், பராபரனைத் தியானிக்கையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் யாவும் இதுவேயாகும். வீணான பூசை, பலி, சடங்குகளை செய்யாதே, அப்போது முக்தி பெறுவாய் என்கிறது. இதையே உலக சற்குருவாய் வந்த இயேசு கிறிஸ்துவும் "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபமாய் இருக்கிறது," என்று தமது ஞான போதனையில் சொன்னார். ஆகவே பராபர வஸ்துவைத் தொழுது பாவக்கிரியைகளை வெறுத்து நீதிசெய்து தூய வழியில் நடப்பதே மெய் வேதாந்த பக்தி ஆகும். இதுவே முக்தி சேர்க்கும் மெய் வழி.



47

வைஷ்ணவ மதச் சுருக்கம்

மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவை வணங்குவோரே வைஷ்ணவர்கள். இவர்கள் மதம், வைஷ்ணவ மதம். நாமமும், துளசிமாலையும், வைஷ்ணவ மதச் சின்னம். இவர்களில் வேதாந்திகள் சருவகிகள் என்பவர்களும் உண்டு. இவர்களுள், பல சடங்குப் பிரமாணங்களின் உட் பிரிவுகள் உண்டு.

வைஷ்ணவ மதத்தின் ஆறு உட்சயம்

அவையாவன:– 1. யாதவம், 2. மாயாதவம், 3. இரண்ய கர்ப்பம், 4. இராமானுசீயம், 5. பாஸ்கரம், 6. தத்துவவாதம் முதலானவை.

இரு வைஷ்ணவ ஆகமங்கள்:– 1. பஞ்சாராத்திரம், 2. வைகாநாசம்

யாதவம், மாயாதவம், சங்கராச்சாரியருடையது. இரணியகர்ப்பம்,

ராமானுசீயம், பாஸ்கரம், தத்துவவாதம், மாதவாச்சாரியருடையது.

ஜைன மதத்தைப் பார்க்கும்பொழுது, முதல் தீர்த்தங்கரராகிய விருஷபசுவாமி முதல், பதின்மூன்றாம் தீர்த்தங்கரராகிய விமலசுவாமி காலம் வரையில், வைஷ்ணவ மதமோ, விஷ்ணுவுக்கு ஆலயமோ வணக்கமோ இருந்ததாகக் காணோம். அதன்பின்னேதான், வைஷ்ணவ மதமும், விஷ்ணுவுக்கு ஆலயமும், வணக்கமும் உண்டாயிற்று. வைஷ்ணவ மத வணக்கத்திற்குரிய தேவனாகிய விஷ்ணுவின் வரலாற்றைப் பார்த்து, முழுவிவரம் தெரிந்து கொள்ளவும்.



48

ஜைன மதச் சுருக்கம்

ஜைனர்கள் தங்கள் மதமே சகல மதங்களுக்கும் முன்னுள்ள மதமென்றும், மற்றவையனைத்தும் இதிலிருந்து உண்டானவை என்கிறார்கள். இவர்கள், காலதோஷத்தால் பலர், பல மதங்களை ஸ்தாபித்தார்கள் என்றும், மற்றுள்ள சமயங்கள் யாவும் பொய்யை மெய்யென நம்பின சமயங்கள் என்கிறார்கள். இது இவர்கள், நம்பிக்கை.

ஆர்கதம், என்றால் அருகனை வணங்கல் என்றர்த்தம். ஜைனர், அருகதேவனை, தங்களுக்குப் பிரதான தெய்வமாக வணங்குகிறார்கள. இந்த தேவனுக்கு, ஜைனன், என்பது பிரசித்தமான பெயர். இதனால், இவர்கள் ஜைனர் என்று அழைக்கப்படுகிறார்கள். இத்தேவனுக்கு ஆயிரத்தெட்டு மறுநாமங்கள் உண்டு. உலகம் சிருஷ்டிகர்த்தாவாகிய தேவனால் உண்டாக்கப்பட்டதல்ல என்பதும், பாவ கர்மத்தால் ஆத்துமாக்கள் திரும்பத் திரும்ப, பல பிறவிகள்

அடைகிறார்கள் என்பதும், ஜைனர் நம்பிக்கை.

போகர் பூமியில், 14 மனுக்கள் தோன்றியிருக்கிறார்கள். 14–ம் மனுவின் காலத்தில் தோன்றியவர் நாபி மகாராஜா.

இவர்க்குப்பின் இருபத்துநாலு தீர்த்தங்கரர், அவதார புருஷர்களாய் தோன்றியிருக்கிறார்கள். ஜைனர்கள், இவர்களை கடவுளின் தன்மை பொருந்திய, அருக தேவராகிய சுவாமிகளென்று நம்பி இருக்கிறார்கள். இவர்கட்கு சிலையும், கோயிலும் உண்டாக்கி வைத்து அருகதேவனாய் பாவித்து வணங்குகிறார்கள்.

விருஷப தீர்த்தங்கரர் காலத்தில் பரதேசுவரன் என்ற முதல் சக்ரவர்த்தியினால்தான் பிராமணர்கள், ராஜாக்கள், வைசியர், சூத்திரர் முதலானோர் உண்டாக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. இது உண்மையானால், இக்காலம் வரையில் மனித ஜாதிகள் பிரிவினையின்றி, ஒரேயினமாய் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என, நம்ப இடமிருக்கிறது.

மேலும், முதல் தீர்த்தங்கரரான விருஷப சுவாமி காலத்தில்தான், சைவமதம் உண்டாயிற்றென்றும், பதின்மூன்றும் தீர்த்தங்கரரான விமலசுவாமி காலத்தில், வைஷ்ணவமதம் உண்டாயிற்றென்றும் தெரிகிறது.

இருபதாம் தீர்த்தங்கரர் காலத்தில் மகா காளேசுரன் என்ற அரசனால், பல யாகங்கள் உண்டாக்கப்பட்டதென்றும், இதன்பின்தான் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், ஆலயமும், வணக்கமும் ஏற்படுத்தப்பட்டதாயும் தெரிகிறது.

மற்ற மதத்தினர் வணங்கும் சிவன், பிர்மா, விஷ்ணு, கணபதி, சுப்ரமணியர் முதலான தேவர்கள் யாவரும், அக்காலத்தில் முன்சொன்ன தீர்த்தங்கரரை நெருங்கித் தொழுது வந்த பெரும் பக்தர்களென்று ஜைன வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இக்காரணத்தால், மேற்சொன்ன தேவர்களை, ஜைனர்கள், முற்றும் விலக்காமல், பூர்வ முதல் இவர்கள் அருகதேவனின் அடியார்களாய் மதிக்கப்பட்டபடியால், தங்கள் தேவனைப்போல் வணங்கி வருகிறார்கள். அக்காலத்து ஜைனர்கள், சிவனை தங்கள் தெய்வமாக வணங்கவில்லை என்ற உண்மையின் முழு விபரத்தை, தேவர்கள் பூர்வோத்திரத்தில், சிவன் வரலாற்றில் பார்க்கவும்.

ஜைன சமயத்தில் இருவகுப்பினர் உண்டு. ஒருவர் சுவேதாம்பரிகள், மற்றொருவர் திகம்பரிகள். இவ்விரு வகுப்பினருக்கும் வேதம் ஒன்றானாலும், உபதேசங்களில் சில வித்தியாசம் உண்டு. இவர்கள் இல்லறத்தில் மோட்சமில்லை, துறவறத்தில் மோட்சம் என்கிறார்கள்.

ஸ்திரீ ஜென்மத்தில் மோட்சமில்லை என்றும், சூத்திரர்களுக்கு மோட்சமில்லை என்றும், இவர்கள் நம்புகிறார்கள். இவ்வைந்தாங் காலத்திலும் ஆறாங் காலத்திலும், யாவருக்கும் மோட்சமில்லை என்பதும், மோட்சமடைய காலமே காரணமென்பதும் இவர்கள் நம்பிக்கை.

இப்போது வழங்கிவரும், இவர்கள் பக்திக்கு ஆதாரமான நூல்கள், மகாபுராணம், திரிலோகசாரம், கோமடசாரம், பாதாந்தசாரம், ரத்தினகரண்டகம், தரும பரீட்டை, சிந்தாமணி, சூடாமணி, நீலகேசிவாதம், அமரம், சகடாயணம், நயாசக்கரம், சத்தபங்கிதவனம், விசயதவனம், மகாதவனம், சுகபோதினி முதலியனவாகும்.

தமிழ் நூல்களில் சிந்தாமணி, சூடாமணி, நீலகேசிவாதம், மணிமேகலை, நாலடி, குறள், நிகண்டு, நன்நூல், மேருமந்திர புராணம் ஆகியவை இவர்கள் பக்திக்குரியவை.

இவர்கள் வடக்கே அதிகம். இவர்கள் பிரதான ஸ்தலங்கள், தெற்கே திருநருங்கொண்டை, தீபங்கொடி, சிற்றாமூர், பெருமாண்டூர், ராஜமகேந்திரபுரம், திருப்பருத்திக்குன்றம், பெனிகுளம், மூடுபத்திரை, ஸ்ரீ ரங்கபட்டணம், கனக்கிரி, ரத்னகிரி, வடக்கே, சமமேதகிரி, விபுலாசலம், காசி, பாபாபுரி, சம்பாபுரி, ஊற்சயந்தகிரி, வடாணா, செயபுரம், சோதிபுரம், டில்லி, கொல்லாபுரம் முதலானவை.

ஜைனர்கள் வேதத்தை துறவறம் (சன்னியாசம்) பூண்டோர் தவிர, இல்லறத்தார் வாசிக்கக் கூடாதென்பது நம்பிக்கை. மோட்சத்தைப் பெறுவதும், நரகத்தையடைவதும் உயிர்கள் செயலென்றும், பாவத்தை யொழிக்கவும், புண்ணியத்தை உண்டாக்கவும் உயிர்களுக்கே வல்லமை உண்டென்றும், இதுவே உறுதியான தத்துவமென்று இவர்கள் நம்பியிருக்கிறார்கள்.

வாசகரே, இம்மதத்தின் விளக்கத்தில் காணும் தெளிவு, ஆத்துமா நற்பதவியடைய, எத்தனைப் பெருங்குழப்பத்தில் விடுகிறதென்பதை பாருங்கள். இவ்வித நம்பிக்கையும் போதனையும், எவ்வகையிலாவது ஒரு ஆத்துமாவை நற்கதி சேர்க்க சாதகமானதாவென்று யோசியுங்கள். இதெல்லாம் கற்பசுவில், பொன் செம்புகொண்டு பால் கறக்க எத்தனிப்பது போல் தெரிகிறது என்பது உண்மையல்லவா? சத்திய வேதத்தை ஆராய்ந்து, உண்மையை கடைபிடித்து, பூரணத்தை அடையுங்கள. இது ஒன்றே முக்தி சேர்க்கும்.

49

பௌத்த மதச் சுருக்கம்

புத்தரை தேவனாய் வணங்குவோர், பௌத்த மதத்தினர். இவர்களும், ஜைனர்களைப்போல், தங்கள் மதமே இந்து தேசத்தின் பூர்வீக மதம் என்கிறார்கள்.

கிறிஸ்து பிறப்பிற்கு 700 வருஷத்திற்கு முன்னிருந்த வீரவாகு என்னும் கௌதம வம்சத்தான், பத்து மல்லன் என்ற டில்லிராஜனை கொலை செய்து, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். இன்னும், இவனுக்குப் பின்வந்த மூன்று ராஜாக்களும், நூற்றெண்பது வருஷம் ஆண்டதாகத் தெரிகிறது. இம்மூவரில் கடைசியில் ஆண்டவனின் பெயர், மகாபக்தி பவுத்தன், இவனே இவனுக்குப் பிறந்திருக்க வேண்டும்.

இந்த பவுத்தன், ரிஷிவேஷம் தரித்து ராஜ்ய பரிபாலனத்தை வெறுத்து இக்காலத்தின் சாஸ்திரக் கொள்கைகளைத் தானும் அனுசரித்து, மதப் பிரச்சாரப் பிரியனாய் எங்கும் சுற்றி நடந்து, தான் ஏற்றுக்கொண்ட மத அனுஷ்டான விதிகருமங்களை,

துரைத்தன பலத்தால் ஸ்தாபித்து, மற்றுள்ள மதங்களை நிர்மூலப்படுத்தினதாய்த் தெரிகிறது. கிறிஸ்து பிறப்பிற்கு முன்னூறு வருஷத்திற்கு முன்னிருந்த ஆதித்தன் என்னும் பவுத்தராஜனை, துரந்தரன் என்போன் ஜெயித்து, பவத்தர்களை சங்காரம் பண்ணினான். கூன்பாண்டியனும், பவுத்தர்களை அழித்ததாகத் தெரிகிறது. இக்காரணத்தால் பவுத்தர்கள் இந்துஸ்தானைவிட்டு ஓடி இலங்கை தீவு, பர்மா, சீனா முதலிய தேசங்களில் சேர்ந்து தங்கள் மதத்தை ஸ்தாபித்து பெலப்படுத்தினார்கள் எனத் தெரிகிறது.

1. பவுத்தர் விசுவாசமும், விதிவிலக்குகளும்

பவுத்தர், உலகமும், அதிலுள்ள படைப்புகள் அனைத்தும் தானாகவே உண்டானதென்றும், சிருஷ்டி கர்த்தாயென்ற ஓர் தேவன் இல்லையென்றும், ஒருவன் தன் புண்ணிய பலத்தால் மேன்மை பெற்று தேவன் ஆகலாம் என்றும், உதாரணமாக, முன் ரிஷியாய் இருந்த பவுத்தன், தேவன் ஆனான் என்றும், ஓர் கற்பகாலத்தில், ஐந்து தேவர்கள் உண்டென்றும், இவர்களில் பவுத்தன் நாலாம் தேவன் என்றும், அவன் மட்டுமே சாஸ்வதமாய் தேவனாயிராமல், புண்ணிய சாலிகள் யாவரும் தேவர்கள் ஆவார்கள் என்றும் ஒவ்வொரு தேவனும் நாலாயிர வருஷம் ஆளுவார்கள என்றும், கி.பி.1840–ம் வருஷத்தில், பவுத்தன் ஆண்ட வருஷம் 2382–ம் வருஷமென்றும், ஒரு கற்பகால முடிவில் உலகம் அழிந்துவிடும் என்றும் விசுவாசிக்கிறார்கள்.

சர்வத்தையும் வெறுத்து, தானே, தேவனாகிறதே, உன்னத பதவியென்பது இவர்கள் பிரதான நம்பிக்கை.

புத்த சமயத்தார், ஐந்து நல்லொழுக்க விதிகளைக் கைக்கொண்டு நடக்க வேண்டும். இந்த பிரமாணத்திற்கு பஞ்சசீல சரணம் என்பது பெயர். இவ்வழிப்பாட்டிற்குட்பட்டவர்களுக்கு உபாசகர்கள் என்று பெயர்.

எட்டுப் பிரிவாயும், பத்துப் பிரிவாயும் உள்ள நியமங்களை தங்கள் யோக்கியதைக்கேற்றபடி, அதிகப்படியாய் கைக்கொள்வோர்க்கு பிச்சுக்கள் என்று பெயர்.

பஞ்ச சீலம் என்னும் ஐந்து நல்லொழுக்க விதிகள், பாலி, சிங்களம், சமஸ்கிருதமாகிய பாஷைகளில் எழுதப்பட்டிருக்கிறது. அவைகள் பின்வருமாறு:–

2. பஞ்ச சீலம் – ஐந்து நல்லொழுக்கம்

1. பாணாதி பாதா வேரமணி சிக்கா பதம் சமாதியாமி
1. ப்ராணாதிபாதத் விரமானி சிக்ஷாபதம் ஸமாத்ரியே

பொருள்:– நான் கொல்லாமையினின்றும் விலகி நடக்கிறேன். இன் நல் நடக்கையை ஏற்றுக் கொள்கிறேன்.

2. அதின்னாதானா வேரமணி சிக்காபதம் சமாதியாமி

2. அதத்தாதாணாத் விரமாணி சிக்ஷாபதம் ஸமாத்ரியே

பொருள்:– பிறர் பொருளை இச்சிப்பதிலிருந்து விலகியிருக்கிறேன். இன் நல் நடக்கையை ஏற்றுக் கொள்கிறேன்.

3. காமேஸு மிச்சாசாரா வேரமணி சிக்காபதம் சமாதியாமி

3. காமேஸு மத்தியாசாரத் விரமாணி சிக்ஷாபதம் ஸமாத்திரியே

பொருள்:– பிறர் மனைவியை இச்சிக்கும் துர்நடப்பிலிருந்து விலகியிருக்கிறேன். இன் நல் நடக்கையை ஏற்றுக் கொள்கிறேன்.

4. மூஸாவாதா வேரமணி சிக்காபதம் சமாதியாமி

4. மருஷவாதாத் விரமாணி சிக்ஷாபதம் ஸ்மாத்ரியே

பொருள்:– பொய் மொழி கூறுவதில் விலகியிருக்கிறேன். இன்நல்நடக்கையை ஏற்றுக்கொள்கிறேன்.

5. ஸுராமேரேய மத்யயமா தட்டாணா வேரமணி சிக்காபதம் ஸமாதி யாமி

5. ஸுராமைரேய மத்யப்ர மாதஸ் தானாத் விரமாணி சிக்ஷா பதம் ஸமாத்ரியே

பொருள்:– அறிவை மயக்கும் லாகிரியான கள், சாராய, குடி பழக்கத்திலிருந்து விலகியிருக்கிறேன். இன் நன் நடக்கையை ஏற்றுக் கொள்கிறேன் என்பவைகளே.

இவ்வைந்து சுலோகங்களின் பொருளை சுருக்கிச் சொன்னால், கொலை, களவு, விபசாரம், பொய் பேசல், மது உண்ணல் என்ற பஞ்சமா பாவங்களுக்கு விலகி நடக்கிறேன் என்பதாம்.

பவுத்தர்கள், 26 மோட்ச பதவிகளும், 120 மட்டான வேதனையுள்ள நரகங்களும் உண்டென்றும் பின்னும் கற்பலோகங்களும் உண்டென்றும் நம்புகிறார்கள். ஜாதி, பேதம் கூடாதென்னும் உபதேசமும் இவர்களுக்கு உண்டு, இவர்கள் புத்த சிலையை வைத்து வணங்குகிறார்கள்.

பௌத்த மத வேதப்பிரமாண போதனையின்படி, சிருஷ்டி, கர்த்தன் யில்லையென்று மறுதலித்து, உலகம் இயற்கையுருவென்று, போதிக்கிறார்கள். அப்படியானால் இவர்கள பக்தர்களுக்கு முக்தி பதவி எப்படி கிடைக்கும்? இதன் பக்தர்கள் தங்கள் சுய நீதியை நம்பி பலன் பெற விரும்புவோர் ஆவர்.

50

சார்வாக மதச்சுருக்கம்

முன்சொன்ன ஆறு சமயங்களில் சார்வாகம், ஐந்தாவது சமயம், சார்வாக சமயத்தார் தன்புத்தியே தெய்வமென வணங்குகிறவர்கள். அதாவது இவர்கள் புத்திக்கு இணக்கமாய்த் தெரிகிறதத்தனையும் வணக்கத்திற்குரிய தெய்வம் என்று வணங்குகிறார்கள். இது மகா பரிதாபமான நம்பிக்கையும், விசுவாசமும் ஆகும். இதை எல்லாவிதத்திலும் மெய் பக்திக்கு மாறான, அவபக்தியும், அஞ்ஞானமும் என்பது பொருத்தமாகும். இதன் முழு விபரங்களை அறிய முன்னுள்ள சர்வத்தையும் தெய்வமாய் வணங்குதல் என்னும் பிரிவை வாசிக்கவும்.

51

உலகாயுத மதச் சுருக்கம்

உலகாயுத மதம், முன்னுள்ள ஐந்து மதங்களுக்கும் முற்றும் மாறான பயங்கர நம்பிக்கையும் கொள்கையும் உடையது.

உலகம் சிருஷ்டி கர்த்தாவால் உண்டாக்கப்பட் டதல்லவென்பதும், சிருஷ்டி கர்த்தாவென்னும் தேவன் ஒருவர் இல்லையென்றும், மோட்சம், நரகம், இல்லையென்றும், ஆத்துமா என்பது இல்லையென்றும், நம்பும் மதம் இது. இதுவே நாஸ்தீகம் என்னும் மதம். இம்மதத்தார் இந்த நாஸ்தீக நம்பிக்கையை தீவிரமாய் உலக முழுமையும் பரவச் செய்து தங்களுக்கு நித்திய அழிவை சுதந்தரமாகப் பெற்றுக்கொள்ள வெகுவாய்ப் பாடுபடுகிறார்கள்.

இவர்களுக்கு நல்லொழுக்கமும், நீதியும், தெய்வ பக்தியும் அவசியமில்லாததால் எல்லா பயங்கர பாவங்களிலும் மனத்துணிவாய் ஈடுபட்டு அமிழ்ந்து கிடக்கிறார்கள். இவர்களுக்கு எவ்வித பிரமாணங்களோ, நீதி நூல்களோ,

பக்திக்குரிய எண்ணம். பிரயாசையோ இல்லை, இம்மையில் இவர்கள் மேன்மைக்கும், பட்டம் பதவிக்கும் ஒரு குறைவுமில்லை. சுட்டெரிக்கப்படுவதே இவர்கள் முடிவு. நித்திய நரகமே மறுமையில் இவர்கள பங்கென்று, மெய் வேதாகம சத்தியத்தில் தெளிவாய் சொல்லியிருக்கிறது.

இம்மட்டாய், மும்மூர்த்திகள், பஞ்சகர்த்தாக்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள் சாமானிய தேவர்கள், தேவிமார்கள், நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதிணென் புராணம், அறுபத்து நாலு கலைக்கியானம், தொண்ணூற்றாறு தத்துவம், ஆறு சமயங்களான சைவம், வைஷ்ணவம், ஜைனம், பௌத்தம், சார்வாகம், உலகாயுதம், அத்தனையின் போதனா சாரங்களையும் சுருக்கமாய் ஆராய்ச்சி செய்தும், ஒன்றான சிருஷ்டி கர்த்தாவான பராபரவஸ்துவை, அறிய வேண்டிய விதிமுறைப்படி அறிந்து அரூபியாகிய அவரால் மனித உள்ளம் மாசறக்கழுவப்பட்டு, பாவ விமோசனம் பெற்று தூய நிலையில், நீதியின் வழியைக் கடைப்பிடித்து பூரணமடையும் மெய்ஞ்ஞான வழியைக் கடைப்பிடித்து பூரணமடையும் மெஞ்ஞான வழியைக் காணக்கூடாதிருப்பது எத்தனை பெரும் நஷ்டமென்பதை வாசகர்கள் நன்றாய்ச் சிந்தியுங்கள். இப்பெரும் நஷ்டத்திற்கு காரணங்கள் பொய்யை மெய்யாக்கிப் போதனை தந்து, வழி நடத்திய கள்ளக்குருக்கள் என்பது பொருத்தமல்லவா? இன்னும் இவர்களால் ஏற்பட் டுள்ள பக்திச் சிதைவுகளைப் பின்வரும் பிரிவுகளில் தொடர்ந்து கவனிக்கவும்.



52

மறு பிறப்பு

இந்து சமயப் போதனைப்படி மனிதர் மரித்தபின், அவரவர் செய் பாவக்கர்மத்தின் காரணமாய் ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வனவாகிய பல பிறவிகளாய் பிறந்து, இறந்து, இந்தப் பிறவிகளில் அவரவர்கள செய்யும் புண்ணியத்தால், கடைசியில் முக்தி பதவியடைவதாக நம்புகிறார்கள்.

இந்து வேதத்தில் சில இடங்களில் ஆத்துமாவை நித்தியமென்றும், சில இடங்களில் மகாத்துமாவில் ஒரு பங்கென்றும் சொல்லுகிறது. ஆத்துமாக்கள் செய்யும் பாவ புண்ணியத்தின்படி முடிவில் உடலைவிட்டு, மற்றொரு உடலில் பாய்கிறதென்றும் சொல்லுகிறது.

இன்று காணும் சிருஷ்டிப் படைப்பில் உள்ள ஜீவன்கள் அனைத்தும், ஜோடி ஜோடியாய் ஆண், பெண் இனமாய் காணப்பட்டு, இவைகள் மூலமாய், மனிதர் முதல் சர்வ ஜீவன்களிலும் இனவிருத்தி உண்டாவதைப் பார்க்கிறோம். அப்படியிருக்க,

மனிதன் செய்த பாவத்தால், அவன் மரித்தபின், மாடாய், நாயாய், கோழியாய், பாம்பாய் பிறக்கிறான் என்பதை நம்புவது எந்த நியாயத்தால்? நீதி வழுவாத சத்திய வேதத்தில், மனிதன் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதென்றும் சொல்லியிருக்கிறது. இதுவே தேவ நீதியும், தேவன் மனிதர்க்கு விதித்துள்ள மாறாப் பிரமாணமும் ஆகும்.

ஒரு மனிதன் மரித்து, அவன் செய்த பாவ காரணத்தால், பலவித இனங்களும் விருத்தியாவது உண்மையானால் பார்க்கும் பலவித ஜீவ இனங்களும், ஆண் பெண்ணாய் ஜோடி அமைப்பாய் இருக்க வேண்டியதில்லையே! இவ்வித மறுபிறவியைப் பற்றி விவரிக்கும் ஒரு விருத்தம்.

சைவ சித்தாந்த நூல், சிவஞான சித்தியார் சுபக்கம் பக்கம் 102

பாட்டு 89

அண்டசம், சுவேதசங்கள், உட்பிச்சம், சராயுசத்தோடு
எண்தரு நாலெண்பத்து நான்கு நூறாயிரத்தால்
உண்டு, பல்யோனியெல்லாம் ஒழித்து மானிடநுதித்தல்
கண்டிடில் கடலைக்கையால் நீந்தினன் காரியங்காண்.

பொருள்:– அண்டசம், சுவேதசம், உட்பிச்சம் சாரயுசத்தோடு என்னும் ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வனவாகிய நான்கு வகை குணதத்துவமுள்ள ஜீவன்கள எண்பத்து நாலு லட்சம், யோனி வழியாய்ப் பிறந்து, முடிவில் மானிடப்பிறவியடைவதை யோசிக்குமிடத்து, மகா சமுத்திரத்தை ஏகாந்தி ஒருவன் தன் சுயகைகளால் நீந்திக்கரையேறியதற்கு ஒப்பிடலாம், என்பது.

வாசகர்களே! சற்று ஆழ்ந்து யோசியுங்கள், ஒருவன் எண்பத்து நாலு லட்சம் யோனிவாசல் வழியாய்ப் பிறந்து அவன் எடுக்கும் பலவகை பிறப்பிலும் செய்யும் புண்ணிய கர்மத்தால் கடைசியி மனிதப் பிறவி அடைகிறான் என்றால், இது சாத்தியமான காரியமா? இந்த நிலையடைய எத்தனை நூறு வருஷங்களாகுமென்பதை சற்று சிந்தியுங்கள். இது, மனிதன் தன் சுயப்பிரயாசையின் புண்ணிய பலன்களால் முக்தி பதவியடையத் தேடும் கள்ளக்குருக்கள் மார்க்கம் அல்லவா? மனிதன் இவ்விதம் பிறந்து, இறந்து, அப்பிறப்பில் செய்யும் புண்ணியத்தால் முக்தி பெறுவதுண்மையானால், இவன் முந்தின பிறவி இன்னதென்று இப்பிறவியில் இலகுவாய் சொல்லலாமே! பலதரம் சிறைபுகுந்து வந்தவன், அங்கு அனுபவித்த விவரங்களைச் சொல்லுவது போல், தன் கர்ம பாவங்களுக்கு, நிவாரணமாக, பல பிறவியெடுத்த ஒரே ஆத்தமா தான் முன்னேயின்ன பிறவியிலிருந்தேனென்று ஏன் சொல்ல முடியாது?

இதைச் சொல்ல சக்தியில்லையானால், பின்னை எப்படி அது உணர்வடைந்து, எச்சரிப்புடன் பாவகர்மங்களுக்கு விலகி, புண்ணியம் புரிந்து, முடிவில் நற்பிறவியும், பதவியும் அடைய முடியும்?

ஞானம், புத்தி, அறிவு, ஆண்மை உள்ள மனிதப் பிறவியில், ஒருவன் நீதி செய்து, புண்ணியந்தேடி நற்பதவியடைய முடியாமல், பாவமேசெய்து அதற்குத் தண்டனையாய் பல பிறவிகளை எடுக்கப்போகிறவன், தான் எடுக்கும் எலி, பாம்பு, அரணை, பல்லி, ஓணான், உடும்பு, எறும்பு, யானை, புலி, கரடி, மற்றும் பறவைகள், நீர்வாழும் ஜீவன்களான பிறவியில், என்ன புண்ணியங்களைச்செய்து கடைசியில் மறு பிறவுயும், நற்பதவியும் அடையக்கூடும் என்று நீங்களே யோசியுங்கள். இவ்வகையில் ஒரு முக்தி பதவி பெறக்கூடுமென்றால், அது நீரில் முளையாதது, நெருப்பில் முளைக்குமென்று நம்புவதை யொக்கும், சந்தேகமில்லை.

மனித ஆத்துமாக்களுக்கு மரித்தபின், மறுபிறப்பு இல்லை என்று விளக்கும், ஞானிகளின் சில பாடல்களைக் கீழே காண்கவும்.

ஞான வெட்டியான்

பாடல் – 529

இறப்பு பிறப்பு மறிந்துணர்ந்து உரைத்தானாகில்
எம்பிரான் என்றவரைப் பணிவேன் காணும்
மறுபிறவி உண்டென்பார் உலகத்தாசான்
மதியென்று கருத்தினிலும் காணேன் ஆண்டே.

பாட்டு – 530

இறந்தவுடன் விழுந்தாவி பிரிந்த பின்பு
மறு ஜனனமாகி வந்துடலெடுத்து
அறிவிலார் மறுபிறவி பிறப்பார் என்றும்
அமட்டி வெகு பொருட்களெல்லாம் பரிப்பாராண்டே

பாடல் – 531

வித்திருந்தால் விளைவுண்டு மரந்தானுண்டு
வேரற்றால் மரமதுவுந் துளிர்க்குமோ சொல்
சத்தியமா மொழியவுங் காணுண்டே கேளிா
சாத்திரத்தை மெய்யென்று நம்பொணுது
யித்தையினி யறியாத உலகத்தாசான்
இறந்தவுடல் பிறக்கமென்று இயம்புவாரே.

சிவ வாக்கியர்

பல்லுயிர்களாய் மனு பிறக்குமென்று பாரிலே
சொல்லும் வேதமோ துகின்ற துஷ்டர்காளறி கிளீர்
வல்லதோர் சுரைவித்திட மாரிப்பாகலாகுமோ
இல்லையே இறந்த பேரினிப்பிறப்பதில்லையே.

சிவ வாக்கியர்

கறந்த பால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர் புகா
உடைந்த சங்கினோசையும் உயிர்களும் உடல் புகா
விழுந்த பூவு முதிர்ந்த காயு மீண்டுபோய் மரம்புகா
இறந்து போன மானிடர் இனிப்பிறப்பதில்லையே.

அகஸ்கியர் ஞானம் 6–ல் பாடல் 6

அழிந்திடுவார் பாவத்தால் என்று சொல்லும்
கட்டிய நால் வேதமாறு சாஸ்திரமும்
அழிந்திடவே சொன்ன தல்லால் வேறொன்று மில்லை
யதர்மமென்றும் தர்மமென்றும் இரண்டுண்டாக்கி
யொழிந்திடுவாரென்று சொல்லி பிறப்புண்டென்றும்
உத்தமணாய்ப் பிறப்பனென்று முலகத்தோர்கள்
தெளிந்திடுவார் சீஷரென்றும் குருக்களென்றும்
ஜீவனத்துக் கேயல்லோ தெளிந்து காணே.

மேலுள்ள பாடல்களில் ஞானவெட்டி உலக குருக்களான பொய்க்குருக்கள், மனிதர் செத்தபின் மறுபிறவியடைவார்கள் என்று பயமுறுத்தி, பொருள் பறிப்பார்கள். அவர்களின் சாஸ்திரத்தை நம்பக்கூடாது, அவை பொய்யென்றும், சிவ வாக்கியரும், மனிதர் மரித்தபின் பல்வகை உயிர் இனங்களாய் மறுபிறப்படைவாரென போதகம் செய்யும் துஷ்டரே கேளும், சுரை வித்து நட, பாவை செடி முளைக்குமோ, அவ்விதமாகாததுபோல், மறுபிறவி இல்லையென்றும், கறந்த பால்முலைக் கேறாதது போலும், வெண்ணெய் மோரினுள் போகாதது போலும், உடைந்த சங்கினோசையும், உயிர்களும், உடலுள் போகாது, விழுந்த பூ, பழுத்தகாய் மரத்தில் சேராது, மானிடரும், மரித்து மறுபிறவியடைவதில்லை என்கிறார். பின்னுமொரு ஞானியார் விருத்தம்.

விருத்தம்

இறக்கும் போதுடலான் மாக்களெங் குறுமெனிற் சரீரந்
திறப்பட வழியுமான் மார்ச்சிதையாது நரகத்தேனும்
அறத்துறை மோட்சத்தேனுமடைவது திண்ணமப்பால்
மறுத்துறையுடலான் மாக்கள் மற்றொன்றியெழல் சொல்வோமே

பாச்சலூர் மங்கை விருத்தம்

வித்தது மரத்தையினும் மரமது வித்தையீனும்
பெற்றதாய் பிள்ளையீனும் பிள்ளையும துவேயீனும்
மற்றொரு பிறப்புண்டன்று மானிடப் பசுக்களெல்லாம்
பற்றி நின்றலைவதேதோ பாச்சலூர் கிராமத்தாரே.

இப்பாடல்களின் கருத்தெல்லாம் மனித ஆத்துமாவுக்கு மரித்தபின் பிறவில்லை யென்றே திருஷ்டாந்தப் படுத்துகிறது.

இருசமய விளக்கம், சிவயோக படலம், விருத்தம்

ஆகிய மாயைத்துவக்கி லாறமாயுற் காசையு மோகமுஞ்
சோகமுந்துயருங் கோவமுமிகு சந்தோடமுஞ் சகசமாய்த்துடரு
நாகவல்குலினாய வைகளெண்பத்து, நான்கு நூறாயிரபேதப்
பாகுபாடான யோனியில் வந்துற்பவிப்பதும் மரிப்பதுமாமே

குறள் 7–ம் அதி 2–ம் பாட்டு

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பொருள் – வினைப்பயனாற் பிறக்கின்ற ஏழு வகைப் பிறப்பிலும், ஒருவனை தீவினைப் பயன்களாகிய துன்பங்கள் தொடர தொழியும், நல் வினைகளை செய்வதற்குச் காரணமாகிய புதல் வரைப் பெறுவானானால் என்றவாறு.

இப்பாடல்கள், இந்துமதத்தில், மரித்தோருக்கு ஏழுவகைப் பதவி உண்டென்றும் இவ்வேழுவகைப் பிறவியிலும் எண்பத்துநாலு நூறாயிரம் யோனிவழியாய் பிறந்து, இறந்து வரவேண்டுமென்றும், அதில தேவர்களாய் பதினான்கு நூறாயிரமும், மனிதராய் ஒன்பது நூறாயிரமும், விலங்கினமாய் பத்து, நூறாயிரமும், ஊர்வன வகுப்பில் பதினொரு நூறாயிரமும், பறவையினமாய் பத்து நூறாயிரமும், நீர்வாழ்யினத்தில் பத்து நூறாயிரமும், தாபரயினத்தில் (மரம், செடி) இருபது நூறாயிரமும், அல்லது தேவர் பதினாறு நூறாயிரமும், தாபரம் பதினெட்டு நூறாயிரமாக, எண்பத்து நாலுலட்சம் பிறவி உண்டென்று நம்பச் செய்கிறது. இதை முன்னமே சைவ சித்தாந்த நூல், சுபக்கத்தின் கவியிலும் விளக்கியிருக்கிறது.

இவ்விதம் மரித்தோர்க்கு மறுபிறவி உண்டென்பது உண்மையானால், மரித்தோர்க்கு மோட்ச விளக்கெடுப்பதில் பியோஜனமென்ன? அவர்கள் நாயாய்,

மாடாய், பூனையாய், மரமாய், பாம்பாய், அல்லது பறவைகளாகத் தானே போய் இருப்பார்கள். 2–வது நல்ல நாட்களில் படையல் போட்டு வணங்கவும் இடமில்லையே! 3–வது செத்தோர் பெயரால் தானதருமந் திதி, திவசம் கொடுப்பதிலும் அர்த்தமில்லையே!

ஆகையால் ஒன்றான பராபர வஸ்துவின்மேல், நம்பிக்கைகொண்டு, சற்குருவினால் பாவமன்னிப்படைந்து செத்தோர்க்கு மோட்சமும், பராபரனையும், அவர் சத்திய வேதாக மத்தையும் நம்பாது. அவர் அனுப்பிய சற்குரு இயேசு மூலம் பாவ மன்னிப்படையாது செத்தவனுக்கு, நரகமுமேயல்லாது, அவன் அடிக்கடிசெத்து, மறுபடியும் இறந்து, பிறந்து, அடிக்கடி புது ஜனனமெடுக்கிறான் என்பது, மெய்யான போதனை அல்ல, என்பது ஞானிகள் விளக்கத்தால், தெளிவாய்த் தெரிகிறது. ஆகவே, பராபரனில் நம்பிக்கை, வைத்து, சற்குரு இயேசுவால் பாவமன்னிப்படைந்து, சத்திய வேதாமாகநீதி வழியில் நடந்து, தேவநியாயத்தீர்ப்புக்கு விலகி, ஞானமார்க்கத்தைச் சார்ந்து நில்லுங்கள். அது பூரணபாதையில் வழி நடத்தி முடிவில் முக்தியில் சேர்க்கும்.



53

ஆலயம் தொழுதல்

சொற்குருக்கள் போதனையால் மதிமயங்கியமக்கள், தங்கள் மனத்திலுள்ள தேவ வாஞ்சையால், மெய்ப்பொருள் இன்னதென்று தெளிவில்லாமல் இமயமுதல், குமரிமுனைவரையுள்ள எல்லா ஆலயங்களையும் புண்ணிய க்ஷேத்திர மென்றெண்ணி, ஓய்வின்றி தங்கள் வாழ்நாளெல்லாம் சுற்றி ஓடி அங்கு பொய்க்குருக்கள்யிருத்தி வைத்திருக்கும் ஜீவனற்ற சிலைகளை பூயிைட்டு அர்ச்சனை செய்து, ஒரு பாவத்திலும் விடுதலையின்றி வீண் விரயம் செய்து வீடு திரும்புவார்கள். இது சாதாரண பழக்கமாகி விட்டது. இவ்விதபக்தியை ஞானிகள் தவறென்று விளக்குவதைக் கீழ்கண்ட பாடல்களில் காணவும்.

குதம்பைச் சித்தர்

கோயில் பலதேடிக் கும்பிட்டதாலுனக்கேதும் பலன்வருமோ

குதம்பாய் – ஏதும் பலன் வருமோ,

சித்தத்தலம் போல தெய்வமிருக்கின்ற சுத்தத் தலங்களுண்டோ
குதம்பாய் சுத்ததலங்கள் உண்டோ.

மெய்தலத்தில்லாத மெய்ப்பெருளானவர்
பொய்த்தலத் தெய்வதுண்டோ குதம்பாய் - பொய்தலத்

சிற்பர்கள் கட்டுந்திருக் கோயிலுள்ளாகத் தற்பரம்
வாழ்வதுண்டோ குதம்பாய் - தற்பரம் வாழ்வதுண்டோ

தன்னாலுண்டாஞ் சிஷ்டி தன்னாலே சிருஷ்டித்த
புல் கோயிலுள்ளவன் யார் - குதம்பாய்

தன்னுள் விளங்கிய சுவாமியைக் காணாது மன்னுந்
தலத்தெய்வதேன் - இருந்தவிடத்திலிருந்தே யறியாமல்
வருந்தித் திரிவதென்றோ - குதம்பாய்,

காசி ராமேசுரங்கால் நோவச் சென்றாலும் ஈசனை
காணுவையோ - குதம்பாய், ஈசனை

பூவுள்ள நாளும் பொருந்தி திரியினுந் தேவனை காணுவையோ
குதம்பாய் - தேவனை காணுவையோ.

உள்ளங்கால் வெள்ளெலும் பாகவுலாவினும்
வள்ளனைக் காணுவையோ - குதம்பாய்

போரினில் ஊசி பொறுக்கத் திரிதல் போல்
ஆரியர் தேடுதலே - குதம்பாய்,

சிவ வாக்கியர்

காணவேணு மென்றுநீர் கடல்மலைக ளேறுவீர்
ஆணவம தல்லவோ அறிவில்லாத மாந்தரே
வேணுமென்றவ் வீசர்பாத மெய்யுளே தரிப்பிரே
றாணுவாக நின்றசிவன் றான்சிவம தாகுமே.

ஓடியோடி யோடியோடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களுங் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மானிடர்
கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே

இருப்புநெஞ்ச வஞ்சர்க்கு மெட்டொணாத ஈசனை
பொறுப்பிலும், புனலிலும் புணர்ந்து தேடும் பொய்யர்காள்
கருக்கலந்து கொண்டுநின்ற கால கால சோதியை
குருப்பிரானை யல்லதிங்கு கூடொணாது காணுமே

தூரதூர தூரமென்று சொல்லியோடும் வீணரே
பாரும்விண்ணு மெங்குமாய் பறந்ததேவன் றன்னை நீ
ஊருநாடு காடுபோ யுழன்றுதேட வேண்டுமோ
நேரதாக மும்முளே நினைத்தறிந்து கொள்ளுமே

தாயுமானவர் புலம்பல்

எங்கெனுநீ யென்றா லிருந்தபடி யெய்தாமல்
அங்குமிங்கு மென்றலைய லாமோ பராபரமே
எட்டுதிசையு மொன்றாய் யின்பமாய் நின்றவுன்னை
விட்டுபிரியவிடம் வேறோ பராபரமே

சிவ வாக்கியர்

கோவ்லாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலுங் குளங்களும் கும்பிடுங் குலாமரே
கோயிலும் மனத்துள்ளே குளங்களு மனத்துள்ளே
ஆவது மழிவது இல்லைஇல்லை இல்லையே

அண்டர்கோ னிருப்பிட மறிதுணர்ந்த ஞானிகள்
பண்டறிந்த பான்மைதனை யாரறிய வல்லரே
விண்டவேத பொருளையன்றி வேறுகூறு வகையிலார்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே

இப்பாடல்களைப் பாடிய ஞானிகள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணகாவியங்கள், தத்துவ சாஸ்திரங்கள் யாவையும் ஆராய்ந்து பார்த்து அவைமுற்றும் அஞ்ஞானக்குப்பையென்றுதறித்தள்ளி, ஒரு பரம்பொருள் உண்டென்பதை உணர்ந்து விசுவாசித்து, அவரை நோக்கிக் கதறிப் புலம்பி

அங்கலாய்த்து, மன்றாடி அப்பேரொளியின் மெய்ஞ்ஞானத்தைப்பெற்று, பட்டப்பகல்போல் அஞ்ஞானத்தைக் கண்டித்து, மக்கள் ஞானவொளியடைந்து, மெஞ்ஞானத்தில் வளர இப்பாடல்களைப் பாடி, பராபரவஸ்து ஒன்று என்றும், அவரை நம் இதயத்தில் கண்டு தரிசிக்க முடியும், ஓடி, நாடி தேடியலைய வேண்டியதில்லை என்று உறுதிபடுத்தியுள்ளார்கள்.

சத்திய ஞானநூல், என்னும் வேதாமத்தில், பரம்பொருளைத் தவிர சிலைகளை வணங்குவது தவறென்றும் விளக்கியுள்ளதைக் கீழே காண்கவும்.

"நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும், உருவாக்கின. பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நினைக்கலாகாது," என்றும், உன்னதமானவர் கைகளால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிறார் என்றும், "நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயமென்றும், உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர், வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவரா யிருக்கிறபடியால், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும், ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல் மனுஷர் கைகளில் பணிவிடை கொள்வதுமில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"என் மகிமையை (பராபரனின்) வேறொருவனுக்கும் என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" என்றும், "தேவன் ஆவியாய் (அரூபி) இருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும்," என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

இன்னமும் மெஞ்ஞான ஒளி கண்டு நடக்கவிரும்பாமல், வீணாய் காலத்தைக் கழித்து பரம்பரைப் பழக்கவழக்கமான தேர் திருவிழா உற்சவங்களில் கூடி, கூத்து வேடிக்கை பார்த்து, குடித்து, வெறித்து, துர்இச்சைகளை நிறைவேற்றி, பின்னும் பாவம் தொடர்ந்து பிடிக்கும் நிலையில், தெய்வ சமாதானமற்ற அவபக்தியில் உழலாமல், பரம்பொருளை நோக்கி சற்குருவருளால் பாவமறக் கழுவப்பட்ட பரிசுத்த நிலையும், பதவியும் பெற, தொழுது துதித்துச் சேவியுங்கள். இதுவே பராபரன் விரும்பும் மெய் பக்தி வழி. இது முடிவில் முக்தி பதவியில் சேர்க்கும்.

54

எச்சில் தீட்டு

பொய்க் குருக்களாகிய சொற்குருக்கள் தங்கள மாறாட்டமான வஞ்சகப் போதனையால், ஒரே சாயல் சுரூபத்தில் காணும் மக்களில், உயர்குலம் தாழ்குலமென பிளவு உண்டாக்கி, அதை நிலைத்தோங்கி நிற்கும் வகையில் உறுதிப்படுத்த உயிர்த்துணையும், உபதுணையுமாக ருது (கன்னி)த்தீட்டு, பிரசவத்தீட்டு, சவத்தீட்டு, சவரத்தீட்டு, போசனத்தீட்டு, ஜாதித்தீட்டு, எச்சில்தீட்டு என்று சொல்லி, அதற்கு சடங்குப் பரிகாரங்கள். சுத்திகரணப் பூசைகள் உண்டுபண்ணியிருக்கிறார்கள. இவை அனைத்தும், மனிதர் கற்பனையாலாக்கிய பொய்மார்க்கம் என்பதை ஞானிகள் பலர் எச்சரித்துக் கண்டித்திருப்பதைக் கீழே காண்கவும்.

பட்டணத்துப்பிள்ளை வெண்பா 35-ம் பாட்டு

எச்சிலென்று சொல்லியித மகிழ்ந்து பேசாதே
எச்சிலிருக்குமிடமறியீர் - எச்சிதனை
உய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்

சுத்த நிராமயமாமே.

சிவ வாக்கியர் பாட்டு 41

வாயிலே குடித்தநீரை யெச்சிலென்று சொல்கிறீர்
வாயிலே குதப்பும்வேத மெனப்படக் கடவதோ
வாயிலெக்சில் போகவென்று நீர்தனை குடிப்பீர்கள்
வாயிலெக்சில் போனவெண்ணம் வந்திருந்து சொல்லுமே

பாட்டு 42

ஒதுகின்ற வேதமெச்சில் உள்ளமந்தி ரங்கள்எச்சில்
மோதங்க ளானதெச்சில் பூதங்க ளேழுமெச்சில்
மாதிருந்த விந்துவெச்சில் மதியுமெச்சில் ஒளியுமெச்சில்
எதிலெச்சி லில்லதில்லை யில்லையில்லை யில்லையே.

சரீர சாஸ்திர ஆராய்ச்சியின்படி மனித சரீரத்தில் நூற்றுக்கு எண்பது பங்கு தண்ணீர் இருப்பதாய் வகுத்திருக்கிறார்கள். இந்த அளவுள்ள தண்ணீர் மனித சரீரத்தின் பல பாகங்களிலிருந்தும் சரீரத்தை இயங்கவைத்து நடத்துகிறது. அவற்றில் வியர்வையாயும், கண்ணீராயும், சிறுநீராயும், போனதுபோக, எப்போதும் மனிதர் நாக்கினால் இடையூறின்றிப் பேசுவதற்கேதுவாக, வாயினுள் ஊற்றுப்பெருக்குபோல் நீர் பொங்கப் புரளும் அதிசயமின்னதென்று அறிந்தீர்களா? வாயில் ஜலம் இல்லையேல், மனிதன் பேசும் வழி இல்லை.

நோயாளி வாயில் உமிழ் நீர் ஊற்றுநின்று வறட்சி காணும் போது, ஜன்னி மேலிட்டுவிட்டதென கடும் சிகிச்சையல்லவோ செய்கிறார்கள்! சைவர், பக்தர் என்று சொல்லிக் கொள்வோர், ஓதும் வேதம், மந்திரம், மற்றும் யாவுமே எச்சிலென்றும், எச்சில் இல்லாத தொன்றுமே இல்லை என்கிறார் ஞானி. வாயினுள் எப்போதும் எச்சில் உமிழ்நீர் ஊறிக்கொண்டிருக்க, ஜலத்தால் வாய் கொப்பளிப்பதால் எச்சில் போன தெவ்விதம் சொல்லுங்கள் என்கிறார்.

ஞான சாஸ்திரியார் ஞானக்கும்மி

சாணானெச்சி கருப்புக்கட்டி பல சர்க்கரை வெல்லம் உழவனெச்சில்
வீணோ ஈயெச்சி தேனாகும் அதை வேட னெச்சாக்கினான் ஞானப் - பெண்ணே
முட்டாய் யாவும் துலுக்கனெச்சி தயிர்மோர் பால் யாவும் யிடையர் - ரெச்சி
சட்டாய் கள்ளு சாராயப் பல சாதியோர் எச்சடி – ஞானப் பெண்ணே
ஈளன் பள்ளன் பறையன் புதறையன் எச்சிமிகும் கரும் பாலையிலே

தாளியிற் கண்டவரெல்லாந் தின்று சைவ மானியே – ஞானப் பெண்ணே
எச்சி கொட்டைபனங்கிழங்கல்லவோ இத்தனை சைவரும் தின்றார்கள்
மெச்சி மெச்சி ஆசாரம் பேசும் வீறாப்பேதடி – ஞானப் பெண்ணே
கோடிச் சீலை நூல்களெல்லாம் பறைக் கோலியன் சாலியன் கைக்களவன்
சேடன் சேனியன் பட்டு நூற்காரரின் திரண்ட எச்சல்லோ – ஞானப் பெண்ணே

எள்ளு புண்ணாக்கு நல்லெண்ணை முத்தெண்ணை எல்லாம் வாணிய னெச்சல்லவோ

வள்ளிய சேலைக்கு கஞ்சி போட்டதும் வண்ணானெச் சல்லோ – ஞானப் பெண்ணே

எந்த ஆறு குளம் கிணற்றி லெச்சிலில்லை யென்று நீ சொல்லுவாய்
தந்திரமாய் பல மந்திரஞ் சொல்லியே தானஞ் செய்வதேன் ஞானப் பெண்ணே

இவ்விதம் ஞானகள் எச்சில்லாத தொன்றும் மில்லையேயென்று விளக்கிக் காட்டியும், யாதொருவர் இழிகுலத்தாருடன் புசித்து குடித்து கலந்தார்கள் என்று கண்டால், போஜனத் தீட்டு, எச்சிகலப்பு தீட்டாய் விட்டார்கள் என்று கள்ளக் குருக்களைவிட்டு நாக்கை சுட்டு சுத்திகரிக்கிறார்கள். இல்லையேல் சேர்க்க முடியாதென்கிறார்கள் இதெல்லாம் மெய்ஞ் ஞானமா? அஞ்ஞானமா? என்பதை ஆழ்ந்து கவனியுங்கள். இவ்வித மூடநம்பிக்கையும், பழக்க வழக்கங்களும், நம்மையும், நம் தேசத்தாரையும் விட்டு குடிபெயர்ந்து போகாத வரைக்கும், அஞ்ஞான கடல் கடந்து, மெஞ்ஞான ஒளிபெற்று பரமனோடு ஒன்றித்து வாழ முடியாதென்ற உறுதி கொண்டு மெய்ஞ்ஞானத்தை பரமன் அருளிய சத்திய ஞான நூலில் தேடிக் கண்டடைந்து பூரணமடையுங்கள்.



55

பலவகைத் தீட்டுகள்

முன்பிரிவில் சொன்னபடியே, கன்னித் தீட்டு, சூதகத்தட்டு, பிரசவ தீட்டு, சவத்தீட்டு, சவரத் தீட்டு, ஒவ்வொன்றுக்கும் சுத்திகரிப்பு உண்டாக்க பல சடங்குப் பிரமாணங்களையும் பூசை, காணிக்கைகளையும் கொண்டது இது. இவை ஞான மார்க்கத்திற்கு மாறானதென்று ஞானிகள் கண்டிருப்பதைக் கீழே காண்கவும்.

குதம்பைச் சித்தர் பாடல் 192

தீட்டாலும் புத்திறங் கொண்டிருக்கையிற்
தீட்டென்று சொல்வதென்ன – குதம்பாய்
தீட்டென்று

சிவ வாக்கியர் பாடல் 50

தூமை தூமை என்று நீர் துவண்டலையும் பேதைகாள்
தூமையான பெண்ணிருக்க துமை போன தெவ்விதம்
ஆமைபோல் முழுகி வந்தநேக வேதமோதுகிறீர்

தூமை யுந்திரண்டுறுண்டு சொற்குருக் காலனதே

பாடல் 51

சொற் குருக்களானதும் சோதி மேனியானதும்
மெய்குருக்களாயினும் வேண பூசை செய்யினும்
சற்குருக்களாயினும் சாத்திரங்கள் சொல்லினும்
மெய்க்குருக்களாயினும் திரண்டுருண்ட தூமையே

போகர் பெருநூல் 6–ம் காண்டம்

பாடல் 275

அறிந்தேனே சாஸ்திரங்க ளனேகமுண்டு
அவர்களது பேதமைகள் சொல்லொண்ணாது
முனிந்துமே முழுகு நாள் தன்னிலப்பா
கூறான சாத்திரங்கள் மெத்தவுண்டு
முறிந்ததொரு உதிரமது திட்டேயென்று
முனையான சங்கநதி முழுகவென்று
தெரிந்துமே ஸ்நானமது செய்யவென்று
நேரானவாற்றோரஞ் செல்வார் பாரே

பாடல் 277

காணாரே சூதகங்கள் நேர்ந்த போதும்
கடிதான வேலை முகஞ்செய்யும் போதும்
நீளவே மண்பாண்டந்தனை யெடுத்து
நீதியுடன் ஜலக் கரைக்குப் போகும் போதும்
வேணபடியன்னமது சமைக்கும் போதும்
வேண்டியே விருந்தமுர்தம் கொள்ளும்போதும்
ஆணவங்கள் தானடங்கி தீட்டே கண்டால்
அவனிதனில் விட்டெரிந்து போட்டார் தாமே.

பாட்டு 278

போட்டாரே பாண்டமது வன்னந்தானும்
பொங்க முடன்காய் பதார்த்தங்கள் பேதம்
நீட்டமுடன் சமைத்ததுவும் போட்டிட்டாரோ
நிலையான தீட்டதுவு மெய்யேயாகும்
தேட்டமுடன் அவர்போட்ட வேஷமெல்லாம்
தெளிவான வேஷமென்று செப்பலாகும்

வாட்டமுடன் தீட்டதனில் பிறந்தோர் தாமும்
வன்மையுடன் தீட்டது மெய்யென்பாரே

பாட்டு 279

மெய்யான தீட்டதுவுந் தங்கியல்லோ
மேதினியில் தேகமென்ற வுருவு மாச்சு
கையுடனே கருவி கரணாதியோடும்
காசினியில் மாதர்களின் கெற்பக் கோளில்
பையுடனே வந்துதித்த சற்பாத்திரந்தான்
பாலகனே திரண்டுருவாய வடிவங் கொண்டு
எய்யவே கடவுளது வரத்தினாலே
எழிலான சடலமது பிறக்கலாச்சே

பாட்டு 281

தீட்டென்று சொல்லுவது தருமமாமோ
திகழான லோகபதி மாண்பருக்கு
வாட்டமுடன் லோக மதிவையகங்கள்
மானிலத்திலெல்லாரும் மதியே கெட்டு
தேட்டமுடன் சாத்திரத்தில் தீட்டே சொல்லி
தெளிவான மத பேதங் கூறியல்லோ
நீட்டமுடன் மாந்தரெல்லா மிந்தப்பாகம்
நீடுழி நிதி கெட்டு மதிகெட்டாரே

ஞான சாஸ்திரியார் ஞானக் கும்மி

வீட்டுக்குலல்லோ நீயிருந்தாயிந்த வீட்டுலல்லோ தீட்டானாய்
வீட்டுக்கு தூரமானேனென்று வீட்டைவிட்டேன் வந்தாய் – ஞான

வீட்டில் தூரமாய்ப் போனவுடனுந்தன் வீட்டுப் பானை சட்டியெல்லாந்
கூட்ட வெளியிலெடுத்தெறிந்தால் நீ போட்டது வேஷந்தான் – ஞான

பிள்ளை பெற்ற வீட்டறையில் பெருந் தீட்டிருக்கு தெனப்பிதற்றி
கள்ளத்தனமல்லோ பானைசட்டியெல்லாங் கழித்த தென்னடி –ஞான

தீட்டில் பிறந்த பிள்ளையையணைத்து செல்வ மகனென யேந்திக் கொண்டு
வீட்டிலிருந்த பானைசட்டி யெல்லாம் வீணாயெறிந்ததேன் – ஞான

தீட்டிலேவந்தது பானைசட்டியோ தீட்டிலேவந்தது பாலகனோ
தீட்டிலே பிறந்தது தீட்டற்றுப் போனால் வீட்டிலே தீட்டுண்டோ – ஞான

திரண்டு தீட்டுஉருவாகி செகமெங்குமனு உயிர்பிறந்தார்கள்
தீட்டு தானல்லோ வேதியராரியர் சேனைமனுக்களும் – ஞானப் பெண்ணே

இன்றைக்குன் வீட்டிலே விழுந்த இழவை எடுத்தடக்கஞ் செய்தப்பாலே
சென்று குளத்திலே தானம் பண்ணிப்பின் தீட்டில்லை யென்றாய் – ஞான
செத்தவன் தீட்டோ நீ தீட்டோ அந்த செத்தவன் தானே தீட்டானால்
செத்தவனப்பாலே பேனானேயவன் தீட்டுணக் கேதடி – ஞான

செத்த சவமது தீட்டானாலிங்கு செத்துப்போகாத சவங்களெல்லாஞ்
செத்த சவத்தின் பின்னே போனதாற் தீட்டொட்டிக் கொள்ளுமோ – ஞான
செத்துப்போகாத சவங்களுக்கு அந்த செத்த சவத் தீட்டு ஒட்டிக்கொண்டு
கத்தியலறி விழுந்து முழுக கழிந்தோடிப்போமோ – ஞான

இவ்விதமாய் ஞானிகள் பலர், தங்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியில் இவ்வித வகையில் பரம்பரை பழக்கவழக்கங்களை பலமாய் இறுகப் பிடித்துக்கொண்டு தீட்டு தீட்டென்று கண்மூடித்தனமாய் அதற்குச் சடங்குப் பரிகாரம் செய்யக்கூடாதென விளக்கிக் காட்டியும், இன்னும் அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது அஞ்ஞானம். அதைப் பெரிதனவெண்ணிச் செலவிடுவதும் வீண் விரயமேயன்றி அதனால் ஒரு பலனும் புண்ணியமும் உண்மையில் கிடையாது. அதைவிட்டு அஞ்ஞானக் கரையேறவும் மெஞ்ஞானத்தை ஆராய்ந்து தெளிவு பெறவும் இதுவே ஏற்ற சமயம். பெண்கள் வீட்டுக்கு விலக்கமானார்கள் என்று சூதகம் கண்டதும், வீட்டுக்குப் புறத்திருத்தி மூன்றாம் நாள் குளித்து முழுகிய பின் வீட்டில் சேர்த்தல் ஒரு பழக்கம். சூதகம் தங்கித் திரண்டுருவானதல்லவா? பக்தர்கள், குருக்கள், அரசர், மந்திரி, பிரதானிகள், மக்கள் என்பவர். சூதகம் கண்ட பெண் வீட்டுக்கு புறம்பானாளே யொழிய, அவள் கொண்டு வந்து வைத்தத் தண்ணீர், சமைத்த சோறு, கறி பதார்தங்களையும், பாத்திரங்களையம், கூட எறிந்துவிட்டார்களா? இல்லையே தீட்டிலுருவாகிப் பிறந்த பிள்ளையைக் கையில் ஏந்திக் கொண்டு இரண்டொரு மண்பாண்டங்களை மாத்திரம் தீட்டுக் கழிக்கிறோமென்று வெளியிலெறிவார்கள். ஏன் தீட்டு செம்பு, பித்தளை வெண்கலப் பாத்திரங்களைக் கண்டால் பயந்து கொண்டு, அதைப்போய் தொடுவதில்லையோ? பின்னை ஏன் அவ்வித பாத்திரங்களை வெளியே எறிவதில்லை? விலையுயர்ந்ததென்றோ? அப்படித்தான் போலும்? மண்ணுக்குள்ளிருந்து வந்த செம்பு, பித்தளை, வெண்கலத்தில் தீட்டு ஏறுவதில்லை, மண்ணில் செய்த பாத்திரங்களில் மாத்திரம்

தீட்டுண்டு என்றால், இது கள்ளக்குருக்களின் தந்திரப் போதனைகளல்லவா? யோசியுங்கள், எந்த நாட்டில், எந்த தேசத்தில், இவ்வித எத்தான காரியங்களை இந்து தேசத்தை தவிர, காணமுடியும் என்று கவனியுங்கள். அவ்வளவும் குருக்கள் தந்திரமும், ஏமாற்றமேயல்லாது வேறில்லை. குழந்தைப் பருவமாறி, ருதுப்பருவமடைந்தால் அது கன்னித்தீட்டாம். ஐயோ பரிதாபம். தேவன், படைப்பில் தீமையானதொன்றைச் செய்வாரா? மனிதன் செத்தால் அதிலொரு தீட்டு, மனிதன் தலை சிரைத்தால் அதிலொரு தீட்டு, மாதவிடாய் கண்டாலொரு தீட்டு, குழந்தை பிரசவித்தால் ஒரு தீட்டு, இந்தத் தீட்டு கருப்போ, வெள்ளையோ, மஞ்சளோ, சிவப்போ மற்ற எந்த நிறமாயிருக்குமோ கண்ணால் பார்க்கவென்று, அந்தத் தீட்டை கழிக்கவரும் குருவுக்கே தெரியாது! இதத்தனையும் உண்மையென்று நம்பும் ஏழை மனத்தினர் படும் பரிதாபப் பாடுகள் விவரிக்க முடியாதது. இன்னும் இதை நம்பி மோசம் போகாதீர்கள். இது நற்பலன் அளிக்காத பொய் போதனையின் மார்க்கம் என்று விட்டு விலகுங்கள். மெஞ்ஞான மார்க்க வழியைக் கண்டு, அதை சாதகப்படுத்தி பராபர வஸ்துவினருளால் முக்தி சேருங்கள்.



56

கள்ளச் சைவம்

முந்தின பிரிவில் சைவமத விளக்கத்தில் சைவத்தைப் பற்றி மிகத் தெளிவாயும் சுருக்கமாயும் விவரிக்கப்பட்டிருக்கிறது. சைவ, வைஷ்ண, மதத்தாரில் தங்கள் மார்க்க ஆகம விதிமுறைகளை கற்றுணர்ந்து, கைக்கொண்டு நடவாத பலர் பால், தயிர், மோர், நெய், மரக்கறி முதலியன புசிப்பதால் தங்களைச் சைவர் என்று சொல்லுகிறார்கள்.

சில குடும்பங்களில், ஒரு சிலர் மாத்திரம் புலால் புசியாது, பால், தயிர், மோர், நெய், மரக்கறிவகை புசிப்பதால், தங்களைச் சைவர் என்றும், மற்றவரை அசைவர் என்றும் சொல்லுவர். இதன்றி ஒரே குடும்பத்தில் புருஷன் புலால் நீக்கி மரக்கறி சாப்பிடுவதால் தன்னை சைவமென்றும், தன் மனைவி பிள்ளைகளை அசைவமென்றும் சொல்வர். இப்பிள்ளை பெரிதானதும், புலாலை விலக்கி மரக்கறியைத் தொடர்ந்து, சாப்பிடுவதால் தங்களைச் சைவர் என்று சொல்லிக் கொள்வாரும் உண்டு. ஆகவே; பூனூல் போட்டு, பூச்சிட்டு,

நெய், பால், தயிர், மோர், கீரை, காய் வகைகளையும் புசித்து, புலாலை நீக்கிய உணவுச் சைவர்களேயன்றி, ஆகம விதிப்படி நடக்கும் கிரியைச் சைவர்களைக் காண்பது அறிதென்பதிற் சந்தேகமில்லை. இருக்கு, யசூர், சாமம், அதர்வனமாகிய, நான்கு வேதங்களையும் ஆராய்ந்து பார்க்கையில், ஆதியில் வேதத்தை உண்டாக்கிப் போதித்த பிர்மாவின் மகனாகிய, வசிஷ்டர், சாத்திபர், பராசர், வேதவியாசர் ஆகியோர் பராபரவஸ்து ஒன்றை மாத்திரம் வணங்க வேண்டுமென்றும், ஜாதி குல வித்தியாசமின்றி சகலமும் ஒருமித்திருந்து புலால் மீன் வகைகள் புசிக்க வேண்டுமென்றும் போதித்ததுமின்றி, ஜாதி குல, சமத்துவ தர்மத்தை நிலைநாட்ட முன்மாதிரியாக இழிகுலத்தவர் என்று சொல்லும் சக்கிலியர், பறையர், மீன் வாணிபர் ஆகிய தாழ்ந்த இனத்தவரில் தங்களுக்கு, மனைவிமார்களை ஷ சொன்ன மூவரும் எடுத்துப் பிள்ளைகளைப் பெற்று இவ்வகையில் ஆதியில் வேதகுருக்கள் வந்ததாய்த் தெரிகிறது. இவர்களனைவரும் ஒரு வித்தியாசமின்றி இறைச்சி வகைகளைப் புசித்தவர்களே! இவர்கள் காலத்திற்குப்பின் வந்த கள்ளக் குருக்கள்மாரே, சைவமென்னும் மாறாட்டமும், வஞ்சிப்புமான போதனையை மக்கள் மனதில் நுழைத்து பால், தயிர், நெய், மோர், காய், கீரை, மரக்கறி பதார்த்தங்களைச் சாப்பிடுவதே சைவமென்ற கதை கட்டிவிட்டனர். ஞானமார்க்க ஆராட்சியின்மையால், மக்கள் அதைப் பெரிதும் நம்பிப் போற்றினர். இவ்வித மாறாட்ட வழிகளைப் பொய்ப் போதனையென்று; கண்டறிந்த ஞானிகள் பலர் இதற்குக் கள்ளச்சைவமெனப் பெயரிட்டு தெளிவாய் விளக்கிக் காண்பித்திருப்பதை கீழே காண்கவும்.

ஞான சாஸ்திரியார் சாஸ்திர கும்மி 5906–ம் பாடல்

மாமிசம் தின்பது சைவமோ, மரக்கறி தின்பத சைவமோ, மாமிசம் தின்பது
சைவமென்றோதிய வளமை யேதடி

–ஞானப்பெண்ணே

மாமிசத்திலிருந்து பிறந்ததோ, மரக்கறியிலிருந்து பிறந்ததோ
ஓங்கிய பால், தயிர், வெண்ணெயும் நெய்யும் உண்டான தெவ்விடம்

–ஞானப்பெண்ணே

மாட்டை யெக்கியம் செய்து தின்றே கலிகாலம் வந்த பின் பார்ப்பார்கள்
ஆட்டை யெக்கியம் செய்து தின்றாரினியாரடி சைவம்

–ஞானப்பெண்ணே

மீனும், நத்தையும், நண்டும் தின்னாத நீ மேன்மை மிக்க சைவமென்றால்
ஸ்நானம் பண்ணிப் பின்னந்தக் குளத்திலே தண்ணீர் குடிப்பதேன்

– ஞானப்பெண்ணே

தீட்டுக்காரி பள்ளு பறையெல்லாம், சேர்ந்துகுளத்தில் முழுகையிலே

சைவருஞ் சேர்ந்து முழுகினாரே, இப்போ தீட்டெங்கே போச்ச
– ஞானப்பெண்ணே
மான் தோலல்லோ ஆசனங்கள், பல மாட்டுத் தோலல்லோ பாதரக்ஷை
ஏன்தான் பின்னே சைவமென்றே சொல்லி எத்துப் பேசுகிறார்
– ஞானப்பெண்ணே

போகர் பெருநூல் 6–ம் காண்டம்

பாட்டு – 237

கோடியாம் சாதியிலே யனந்தம் சாதி
கொற்றவனே பதினெட்டு சாதியுண்டு
பேடிகளுஞ் சூரர்களு மெத்தவுண்டு
பேரானபதிதனிலே லக்கோயில்லை
தேடியே பல தேசங்கண்டாறாய்ந்ததேன்
தேசத்தில் சைவமது காணவில்லை
நீடீரே வெகு மாண்பார் தேச மெல்லாம்
நிலையான சைவமென்று சொல்வார் பாரே

பாட்டு 238

சொல்லுவது வாக்கியத்தைக் கேட்டதுண்டு
சொற்பமுள்ள சைவர்களை கண்டதில்லை
பல்லவே யிறைச்சிவகை புசியோ மென்றும்
புலால் வகைகள் புசிப்பதில்லை யென்று கூறி
வெல்லவே மதாச்சார பேதா பேதம்
வெகு சாகப் பினத்தி யல்லோ திரிவார்பாரு
சொல்லவே நித்தியமும் புலாலே தின்று
கூசாமல் சைவமென்று கூறுவாரே

பாட்டு 239

கூறுவார் பலதேச ஜாதி தன்னில்
குறிப்புடனே பிரம்ம மென்ற ஜாதியப்பா
மாறுதலாம் சைவத்தைக் கூறியல்லோ
மகத்துவங்களாக மங்கள் மிகவும் சொல்லி
தாறு மாறாக வல்லோ வேதங்கள் கூறி
தாரணியில் வெகுமாந்தர் பிழைப்பாரப்பா
ஆறுதலம் கரை கண்ட யோக நிஷ்டை
அப்பனே செய்வார்கள மட்டிமாடே

பாட்டு 240

மாடான மாடல்லோ மாண்பரப்பா
வையகத்தில் சாதி கெட்ட சைவரப்பா
கோடான கோடிபேர் சைவமென்று
கூறிய தோர் மொழியதனைக் காதிற் கேட்டேன்
தாடான மாமிசத்தைத் தின்பார் பாதி
சட்டமுடன் நெய் தன்னைக் குடிப்பார் பாதி
நீடான தயிர், பாலில் சைவமுண்டோ
நிட்சயமாய்ச் சைவமென்று நம்புவாரே

பாட்டு 241

நம்பவென்றால் சைவங்களில்லை யப்பா
நாதாந்த சித்துகளும் சொல்லவில்லை
வம்பென்று மறைத்து வைத்தார் சைவந்தன்னை
வளமுடனே புலால் தின்னா ரெவருமில்லை
வெம்பிய தோர் ரோகமென்ற செம்மரி தானப்பா
விருப்பமுடன் புசிக்கிறார் சூத்திரருமப்பா
தும்பியுடன் பிர்மகுல, ஷத்திரியர், தானும்
துகளகற்றி நெய்மோரைக் குடிப்பார் தாமே

பாட்டு 242

குடிப்பாரே பால், தயிர்கள், நெய்குடிப்பார்
குற்றமென்று யிரைச்சிதனை நீக்கிவிட்டார்
நடிப்புடனே சைவமென்று சொல்லலாமோ
நாதாக்கள் கைமறைப்பாய்க் காட்டவில்லை
துடிப்புடனே மற்றதோர் ஜாதியெல்லாம்
துப்புரவாய் புலால் வகைகள் மிகவுந்தின்பார்
அடிப்படைதான் மாமிசங்க ளென்னலாகும்
அப்பனே மேல் மிதக்கும் நெய்யுமாமே

பாட்டு 243

நெய்யான வகை களெல்லாம் கொஞ்ச மல்ல
நிச்சயமாய் சேருக்கு எட்டி லொன்று
துய்யதொரு மாமிசங்கள் தின்போன் சைவன்
துப்புரவாய் நெய்தின்போன் சைவனல்ல
வெய்ய தொரு மாமிசத்தில் நெய்யேயில்லை
விருப்பமுடன் ரத்தமது சுண்டியல்லோ
பய்யவே பாலாகி வந்த நெய்தான்

பாலகனே யிறைச்சிக்கு அதிகமாமே

பாட்டு 244

அதிகமாய் காய்கறியில் புழுவேயுண்டு
அப்பனே யிலைவகையில் புழுவுமுண்டு
கதிதமுடன் தண்ணீரில் புழுவுமுண்டு
கண்காணா யெச்சலது மலமு முண்டு
துதிதமுடன் சுத்தமது யெதிலேயுண்டு
சுகமுண்டோ சைவத்தி லதிகமுண்டோ
பதிதமுடன் பொய் சைவமல்லா லப்பா
பாரினிலே மெய்ச் சைவமுண்டோ பாரே

பாட்டு 246

கெட்டாரே யிப்படியே வையகத்தார்
கேடழிந்து சீரழிந்து சைவங்கெட்டு
இஷ்டபடி பிரவியென்ற சைவமாக
யெழிழுடனே மாண்பரெல்லாம் நம்புறார்கள்
தொட்டதொரு பொருளெல்லாம் சைவமில்லை
தோராமல் மாண்பரெல்லாம் புலாலே தின்பார்
சட்டமுடன் எந்தன் குருகாலாங்கி நாதர்
சாங்கமுடன் எந்தனுக்கு வுரைத்த நூலே

சிவ வாக்கியர் பாடல்

மாட்டிறைச்சி தின்பதில்லை யென்றுறைப்பார் வேதியர்
மாட்டிறைச்சி யிங்குவே மரக்கறிக் குகந்தது
ஆட்டிறைச்சி தின்பதில்லை யென்றுரைப்பா ராரியர்
ஆட்டிறைச்சி யல்லவோ யாகத்தினுண்டியாவதே

மீனிறைச்சி தின்பதில்லை யென்றுறைப்பார் வேதியர்
மீனிறைச்சி யல்லவோ முழுகி நீர் குடிப்பது
மானிறைச்சி தின்பதில்லை யென்றுறைப்பார் வேதியர்
மானிறைச்சி தந்த தோல் தம் மார்பிநூலணிவாரே

கர்த்தரின் மாறாத சிருஷ்ட்டிப் பிரமாண இயக்கப்படி மாட்டின் சரீரத்திலுள்ள இறைச்சியில், சோரிக் கிடக்கும் பச்சை ரத்தம், பாலாய் மாறுகிறதென்பது உண்மைபல்லவா? பாலாய் மாறின மாட்டின் ரத்தத்திலிருந்து பிறந்ததல்லவா? தயிர், மோர், வெண்ணெய், நெய்யென்னும், சைவப்

புசிப்புகளெல்லாம் காய், கீரை வகைகளில் கணக்கற்ற புழுக்களிருப்பதைப் பார்க்கவில்லையா? இவற்றை வயிர் புடைக்கச் சாப்பிட்டு, நான் புலால் புசியாச் சைவன் என்றால் இது எவ்வகையில் சைவமாகும். இவ்வித மாட்டின் உயிருக்கு ஆதாரமாய் நின்ற ரத்தம் முறிந்து பாலாகி தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகி இதைச் சாப்பிட்டவர், உயர் குலச் சைவமும் பசையற்ற அடிப்படையான இறச்சியைப் புசித்தவன் இழிகுல பறையனுமாவதெந்த வகையில்? நிதானித்து தீர்ப்பிடுங்கள்.

பதினெண் சித்தர்களுக்கும் மேலாய் சிறந்து விளங்கிய போகமா முனிவர், தமது 243–ம் பாட்டில் "துய்யதொரு மாமிசங்கள தின்போன் சைவன் துப்புரவாய் நெய் தின்போன் சைவன் அல்ல" என்கிறாரே! இதற்கு காரணம் காட்டுவதைப் பார்த்தீர்களா? நெய்யான வகைகளெல்லாம் கொஞ்சமல்ல, நிச்சயமாய் சேருக்கு எட்டிலொன்று," என்கிறாரே, இந்தக் குறிப்பின்படி, ஒரு சேர் நெய் சாப்பிடுவோர், ஏழு சேர் கறி தின்றவருக்கு சரியொத்தவர்கள் என்பது சரியல்லவா? "வெய்ய தொரு மாமிசத்தில் நெய்யேயில்லை," என்றும் "பையவே பாலாகி வந்த நெய்தான், பாலகனே யிறைச்சிக்கும் அதிகமாமே" என்றும் அடிப்படைதான் "மாமிசங்கள எண்ணலாகும்" என்கிறார், 244–ம் பாட்டில், பொய்ச் சைவமேயல்லாது மெய்ச்சைவம் உண்டோ? என்கிறார். ஒரு சேர் நெய் தின்னும் குடும்பத்தைப் பார்க்கலாம்.

ஏழு சேர் இறைச்சியை ஒரே நேரத்தில் தின்னும் குடும்பத்தைப் பார்ப்பது அபூர்வம். இவ்வகையில், ஒரு சேர் கொழுமையான நெய் தின்னும் சைவர், ஏழு சேர் இறைச்சி தின்னும் சூத்திரர் பஞ்சமர்க்கு, ஒப்பானவர்கள அல்லவா? இவ்விதப் போலித்தன நடிப்பைச் சைவமென்றால் பொருந்துமா? முன்சொன்னபடி நாலு வேதங்களிலும் காணும் யாக பலிகளிட்ட, பசு, எருது, ஆடு, மற்ற ஜீவன்களைச் சாப்பிடுவோர், யாகக் குருக்களாகிய பார்ப்பனச் சைவரென்றே எழுதியிருக்கிறது. அனுதினம் யாகத்தின் புலாலைத் தின்று ஒரு நாள் புலால் புசிப்போரை சூத்திரர், பறையர் என்பது நீதி, நியாத்திற்கு பொருந்துமா? இவ்வனுபவம், வேதாந்த முறைக்கேற்ற அனுபவமல்லவென்று ஞானிகள் பலர் விளக்கங்காட்டி, எச்சரித்திருக்க, இன்னும் கள்ளச் சைவ வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டு, நம்பி, மோசம் போகாதேயுங்கள், ஞானமார்க்கத்தைத் தேடுங்கள். பொய்ச் சைவத்தைவிட்டு விலங்குகள். பராபரன் அருளிய சத்திய வேதாகமத்தை ஆராய்ந்து மெய்பக்தியில் வாழ்ந்து பெருகுங்கள். புசிப்பும் குடிப்பும் நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாதென்று உணர்ந்து, நீதி செய்து பராபரனை பணிந்து துதித்துப் போற்றுங்கள். இதுவே தேவனுக்கு ஏற்ற உயர்ஞானச் சைவம் ஆகும்.

57

பலவித பொருத்தனைகள் பலிகள்

ரத யாத்திரை

பெரும் பட்டணங்கள் நகரங்களில் உள்ள விசேஷித்த புண்ணிய க்ஷேத்திரங்களில் "ரத உற்சவம்" என்னும் தேர்த்திருவிழா கொண்டாடுவது இந்து சமய பக்தியில் ஓர் பழக்கம்.

ஜகன்னாதத்தில் இவ்வித ரத உற்சவ காலங்களில் தேர் வீதி வலம் வருகையில், இவ்விழாவில் கலந்து கொள்ளும் பக்தரிற் பலர் தங்களில் உள்ள, பரம்பரைச் சொற்குருக்கள், போதித்த மாறாட்டமான, பாதக, குருட்டு நம்பிக்கையின்படி, கைலாய பதவி சேரலாமெனும் ஆசை மிகுதியால், போய்க்கொண்டிருக்கும் தேர்ச்சக்கரத்தினடியில் குறுக்கிட்டு விழுந்து, அரை பட்டு நசுங்கி உயிர் இழப்பார்கள்.

கைலாய பதவி சேர, இந்து சமயத்தில் காணும் சரியை, துரியை, யோகம், ஞானம் என்னும் வழிப்பாட்டைவிட இது அவர்களுக்கு மிக இலகுவான பாதையாய் நினைத்து, இந்த பயங்கர

தற்கொலை புரிந்து, இத்துணிகர கொலைச் செயலால் முக்தி சேரப் பக்தியைப் பழகிக்கொண்டார்கள். இவ்வித கோரப் பொய் நம்பிக்கையால் உயிர்விட்டு மாய்ந்த, பயங்கர காட்சியைக்கண்ட, அரசாங்கத்தார் சட்டமியற்றி இத்துர்ப்பழக்கத்தை அறவே நிறுத்திவிட்டார்க்ள.

இவ்வித பொய் நம்பிக்கைகொண்டு முக்தி சேரப் பார்ப்போரைப் பற்றி ஞானிகள் சொல்வதைக் கீழே காண்கவும்.

அகஸ்தியர் ஞானம் 10, 15–ம் படல்

போகவொரு தடையுண்டோ அந்த நாட்டில்
போவதற்குப் பொய்கைதனில் முழுகவேண்டாம்
சாகமுண்டு தலைகீழாய் நிற்கவேண்டாஞ்,
சத்தலிங்க மலரெடுத்துச் சாத்தவேண்டாம்
தாகமுடன் தீவளர்த்துக் குதிக்கவேண்டாந்
தாரணியிற் பல பேயைத் தொழவும் வேண்டாம்
ஏகனென்று பிர்மாவைத் தேடவேண்டாம்
இந்தநூல் பார்த்திறவீரின்பாய்த் தானே.

அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று
ஆங்காரந் தானெடுத்து அகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குனின்று
நித்தியமு மானிடரை மோசம்போக்கிப்
பலகலையு முணரரிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச்செய்யு
நிலையதனை யறியாமற் போருர், போருர்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாயத்தானே.

இவ்விரண்டு பாடலிலும் சுவர்க்கப் பதவியடைய புண்யதீர்த்த குளங்களில் முழுகி, மரக்கறி வகைகளையே புசித்து தலைகீழாய்த் தொங்கித் தவம்புரியாதே, லிங்க பூசை செய்து மலரிட்டு அர்ச்சிக்காதே, தீ வளர்த்துக் குதிக்காதே, பல பேயையும் தொழாது, பிர்மாவை ஏகபராபரவஸ்துவென்று தேடாதே. என்னூலின் விளக்கத்தின்படி நட, பிசாசு தன்னை வணங்கும்படி, மோசம் பண்ணி, தன் வீடாகிய நரக பாதாளத்தில் சேர்க்க, மாருட்ட வழிபாடுகளால் எத்தனிக்கிறதை மக்கள் அறியாமல் மோசம் போகிறார்கள் என்று அகஸ்தியர் சொல்லுகிறார்.

தேவன் மனிதனிடத்தில் காணிக்கையை விரும்புகிறவர் அல்ல. "தேவனுக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்."

மனிதன் தேவனை நோக்கி உண்மையாய் நொறுங்கிய இருதயத்தோடு, பாவியாகிய என்னை இரட்சியும் என்று கதறித் தொழுதால் மெய்யாகவே அவனுக்கு இரங்கி அவனைச் சேர்த்து அரவணைத்துக் காப்பார். இதற்கு தற்கொலை புரிந்து மடிந்து மாயவேண்டியதில்லை. இதுவே தேவனுக்குகந்த மெய்யான பலி என்று அறிந்து கொள்ளுங்கள்.

சரக பூஜா

இப்பொருத்தனைப் பலியின் பழக்கம் முதல் முதல் வட இந்தியாவில் தான் பழக்கத்திலிருந்தது. பிந்தின காலங்களில் இது தென்னிந்தியாவின் பல பாகங்களிலும் பழக்கத்தில் வந்து விட்டது.

அம்மனுக்குப் பூந்தேர் இழுத்தல் முதலிய திருவிழாக்களில் பொருத்தனை பண்ணிக் கொண்டோரில் உள்ள தெய்வ அனுக்கிரகத்தைச் சோதித்து அறிய இவ்விதம் செய்கிறார்கள்.

சுமார் இருபத்தைந்து அல்லது முப்பது அடி மரக்கம்பமொன்றில், கூர் முனையுள்ள ஊசி ஒன்றைச் சொருகி, பின் இக்கம்பைத் தரையில் நாட்டியிருக்கும், தூணில் கயிறு கட்டி சக்கரம் போல் சுழலச் செய்து விட்டிருக்கும், கயற்றின் நுனியில் இரண்டு கொக்கிகள் தொடுத்து பூமியைத் தொடும் அளவில் நீண்டு தொங்கும், பொருத்தனைக்காரர் கம்பத்தடியில் சேர்ந்து அம்மனை நமஸ்கரித்து, கம்பத்தின் கயிற்றின் நுனியில் தொடுத்துக் தொங்கும், இரு கொக்கிகளையும் எடுத்துத் தன் முதுகில் அல்லது விலாப்பக்கத்தில் சதையோடு ஊடுருவ மாட்டிக் குத்திக் கொள்வார்கள். உடனே இவர்களை இப்படியே உயரத் தூக்கி மேலிருந்து கிருகிரென்று சுழற்றுவார்கள்.

எவ்வளவுக்கு அதிகநேரம், வேதனையைச் சகித்திருக்கிறானோ அவனே அம்மனுக்கு மிகப் பிரீதி உள்ளவனாய் போற்றப்படுவான். இக்கொடும் வேதனையைச் சகிக்க முடியாது சிலர், அந்நேரத்திலேயும் சிலர், சில நாட் கழித்தும் மரித்துப் போவார்கள். மற்றவர்களோ, இவ்வகையில் மரித்தோரை முக்தி சேர்ந்து விட்டார்களெனப் போற்றுவார்கள்.

ஐயோ! இது எத்தனை குரூரமும், பாதகமுமான பயங்கர காட்சி இதை முக்திபெறும் ஞானமார்க்க பக்தி வழிபாடென்று வாய்கூசாமல் சொல்வது எந்த நாவால்

இது கொடும் பாதகக் கொலைச் செயலன்றி முக்தி சேர்க்கும் பக்தி வழிபாடல் அல்ல வென்று கூர்ந்து கவனித்த அரசாங்கத்தார்,

இதற்கோர் புதுச் சட்டமியற்றி 1863 -ம் ஆண்டில் அறவே நிறுத்திவிட்டார்கள்.

ஹரி போல்

"ஹரி போல்" என்னும் இவ்வக்கிரமச் செயல் சில விடங்களுல, சிறிது மாறுதலுடன் வழக்கத்திலிருந்தாலும், வங்காள நாட்டில் மிகுதியுடன் பழக்கதிலிருந்தது. ஒருவன் நோய் வாய்ப்பட்டு மரிக்கும் தருணத்திலிருக்கும் பொழுது அவனை கங்கை ஆற்றிற்குள் தூக்கிக் கொண்டு போய் வைத்து, "ஹரிபோல்" "ஹரிபோல்" "போல்ஹரி" அதாவது (அரி என்று சொல், அரி என்று சொல், சொல் அரி என்று வற்புறுத்திச் சொல்லச் செய்து, குளிப்பாட்டுவார்கள் இவ்வித செயலால் சிலருக்கு தண்ணீரிலேயே உயிர் பிரிந்து விடும். சிலர் கரையேறிய சிறிது நேரத்தில் மரித்து போவார்கள். பின்னும் சிலர் மரியாமல் கஷ்ட வேதனைக் குள்ளிருந்தால், அவர்களை வீட்டுக்குக் கொண்டு போகும் வழக்கமில்லாததால், அவ்விடத்திலேயே கிடக்கச் செய்து மரிப்பார்கள். இக்கொடும் பாதகச் செயல் அரசாங்கச் சட்ட பலத்தால் திட்டமிட்டு 1831-ம் ஆண்டில் அறவே நிறுத்தப்பட்டது.

மஹா ப்ரஸ்தானம்

நீரிலாவது, நெருப்பிலாவது தானாகவே விழுந்து உயிரையிழப்பதே "மஹா ப்ரஸ்தானம்" என்னும் பலி. இவ்வித நிலையில் உயிர் இழப்போர் முக்தி சேர்வார்கள் என்ற பொய் நம்பிக்கையால் இவ்வகைப் பாதகக் கொலைச் செயல் புரிந்து மரிப்பது வழக்கமாயிருந்தது. "மிருச்சகடிக' மென்ற நாடகத்தை எழுதிய சூத்திரகன் என்னும் அரசன் இவ்வித மஹாப்ர ஸ்தானத்தினாலேயே, உயிரையிழந்தான். "சூத்ரகோக் நிம்ப்ரவிஷ்ட" என்னும் வார்த்தை மிருச் சகடிகம் என்னும் நாடக புத்தகத்திலிருக்கிறது. இப்பாழ்நம்பிக்கையும் அரசாங்கச் சட்டத்தால் நிறுத்தப்பட்டது. சிதம்பர நடராஜ க்ஷேத்திரத்தில், நந்தனார் நெருப்பிற்குதித்து உயிர் இழந்தும், மஹா ப்ரஸ்தானம் என்னும் ஏமாற்ற வழியால் நிறைவேற்றி முடித்த கொலை யாகம் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

சதீ தகனம்

சதீ தகனம் என்பது உடன் கட்டையேறுதல் என்பதாம். புருஷன் மரித்ததும் அவன் சுவர்க்கஞ்சேர, அவன் மனைவியையும் அவனோடு சேர்த்து தீயிலிட்டு தகனிப்பது, இது இப்பயங்கர பாதகச் செயல், பாரத நாடெங்கும், பஞ்சிற் தீ

பட்டதுபோல், தீவிரமாய்ப்பரவி எண்ணற்ற சௌந்தர்யம் நிறைந்த இளம்பெண்களைக் கொலை புரிந்து அழித்தது. மனு முதலானோர் எழுதிய ஸ்மிருதிகளிலோ, இந்து சமய வேதங்களிலோ, இப்பாதகச் செயலிற்கு ஆதாரமில்லாததால், பௌத்தர்கள் அழிவிற்குப்பின் இது கள்ளக்குருக்கள் சூட்சியால், ஏற்பட்ட கழுமரமாய்த் தெரிகிறதென்று கருதினர்.

இவ்வித தீ, தகனிப்பிற்குள்ளான பெண்கள், கற்புடன் தன் புருஷனோடு சொர்க்கலோகம் சேர்வாள், என்று ஏற்படுத்திய வஞ்சகக்குருக்கள் கட்டுக்கதையால், ஆயிரமாயிரமான பெண்கள் தீக்கிரையாக்கப்பட்டு மண்ணறைக்குச் சென்றார்கள்.

இவ்வித பயங்கர தீ சுவாலையில் தள்ளப்பட்டு தகனிக்கப்படும் பெண், தீ சுவாலையின் வேதனை சகிக்க முடியாது அலறி, கூவிக் குதித்து, வெளியேற வகை பார்த்து அங்கும் இங்குமாய் அலையும்பொழுது, சுற்றிலும் சூழ்ந்து வளைந்து நின்று தகனிப்போர், கொஞ்சமும் இரக்கமின்றி தங்கள் கையிலுள்ள ஈட்டி போன்ற கூர்த்தடியால் தாவி, அப்பெண்ணைக் குத்திப் புரட்டி, சுவாலித்து எரிகிற தீயின் மத்தியில் திரும்பத் தள்ளுவார்களாம்.

இக்கொடும்பாதகக் கொலைச் செயலை தன் கண்ணிற்கெதிரே காட்சியாய் கண்ட திரு. இராஜாராம் மோகன்ராய் என்னும் பேரறிஞர், தன் மதத்தை விட்டு பிரம சமாஜம் என்னும் தனி மதத்தை ஸ்தாபித்தார். இவர் தன் சகோதரன் மனைவிக்கு இவ்விதம் ஏற்பட்ட அநீதியான மரணத்தைப் பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார் :-

என் சகோதரன் இறந்து போனார். இந்துக்களின் மத வழக்கப்படி உடன்கட்டை ஏறுவதற்கு இளம் பெண்ணான அவர் மனைவி முதலில் ஒப்புக்கொள்ளவேயில்லை. புரோகிதர்களின் பிடிவாதத்தினால், ஒரு வகையில் அவள் ஒப்புக்கொண்டு சுடுகாட்டிற்குச் சென்றாள். எரிகிற நெருப்பைப் பார்த்ததும், அவ்வேழை இளம்பெண் தன் உயிர்போய் விடுமே என அஞ்சி அழத்தொடங்கினாள். ஆனால் அவள் புரோகிதர் கூட்டத்திற்குப் பின்னும் கீழ்படிந்து நெருப்பில் குதித்தாள். அங்கு அவள்பட்டபாடு என்னால் சொல்ல இயலாது. பொறுக்க முடியாத சூட்டினால் அவ்வேழைப் பெண் எரிகிற நெருப்பில் புரண்டு கூவும் போது, புரோகிதர்களின் கட்டளைக்கேற்ப, யம, கிங்கிலியர்களைப் போன்ற சிலவேலைக்காரர்கள் கூர்மையான மூங்கிற்தடியால் குற்றுயிருடன் நெருப்பிற்கிடந்து பரிதவிக்கும் அவ்விளம் பெண்ணை, பலதரம் குத்திக்குத்தி, நெருப்பில் தள்ளி வதைத்து எரித்தார்கள் என்பதே. இப்பெரும் பாதகச் செயலையும் 1841-ம் ஆண்டில் அரசாங்கத்தார் சட்டமியற்றி நிறுத்தினார்கள்.

வாசகர்களே! இக்கொடும் கொலைச் செயலால் முக்தி சேரமுடியும் என்று நினைப்பது மெய்ஞ்ஞான பக்தி மார்க்கத்திற்கேற்ற வேதாந்த உபதேசந்தானா? ஐயோ பரிதாபம்! இவற்றை வேதாந்த விதிமுறை என்று எப்படி நம்புவது? புருஷன்

மரித்தால், பெண்சாதியையும் சேர்த்துக் கூடத் தீயிட்டு தகனித்த சுவர்க்கத்திற்கனுப்பும் புரோகிதர்கள், மனைவி மரிக்கும்போது புருஷனையும் மனைவியோடு கூட்டிச் சேர்த்து தீயிட்டு தகனியாததற்குக் காரணமென்ன? இதெல்லாம் எத்தனை பெரும் நீதிகேடும், பாதகக் கொலைச் செயலும் என்பதை வாசகர்களே அறிந்து கொள்ளுங்கள். மனுமக்கள் சுவர்க்கம் சேர, இவ்வகையிலா தேவன் வழிகாட்டுவார்? இவையனைத்தும் சேர்ந்ததா முக்தி மார்க்கம்? மெய் வேதாகம சத்தியத்தைக் கற்று, பராபரனை தொழுது முக்தி சேருங்கள். அதுவே மெய்வழி.

பருகூத் பன்னம்

பருகூத் பன்னம் என்பது கங்காப் பிரவாகத்தில் சுவாமிக்கு அர்ப்பணமாக தங்கள் அரும் குழந்தைகளை எறிந்து விடும் பிரார்த்தனை, பெற்றோர் தங்களுக்கு சந்தானவிருத்தி உண்டாக தெய்வ பிரார்த்தனை செய்து கொண்டு பிள்ளை பிறந்து யௌவன பருவமடைந்ததும், பெற்றோர் தம் பிள்ளைகளிடம், இப்பிள்ளைகள் பிறக்குமுன் செய்துகொண்ட தெய்வ பிரார்த்தனைக் கட்டளைகளை இப்பொழுது நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுவார்கள். பெற்றோர் ஆணைக்குக் கட்டுப்பட்டு வளரும் அப்பிள்ளைகளும், தெய்வ நாமத்தில் பழிசுமத்தி கிரநார் சதுபுடா முதலிய மலையுச்சியின் மேலேறி அங்கிருந்து தாழக்குதித்து, பெற்றோர் பிரார்த்தனையை நிறைவேற்ற, தங்கள் ஜீவனையிழந்து மாண்டு மடிவார்கள். இதையும் அரசாங்கத்தார் பின்னும் தலைகாட்டாவண்ணம், சட்டமிட்டு அறவே ஒழித்தனர். சுமார் நூற்று இருபது வருஷங்களுக்கு முன் பாரதத்தின் முக்தி வழி காட்டும் பக்திநிலை எவ்வளவு பயங்கர கொலைக்காட்சிக்குள் போய்க்கொண்டிருக்கிற தென்பதை தெளிவாய் விளங்கிக்கொள்ளுங்கள். மெய்ஞ்ஞான மார்க்கத்தை தேடுங்கள்.

நரமேதம்

பரந்த இப்பாரத நாடெங்கும், பக்தியின் பேரால், இப்படுகொலை நடந்தேறி வந்தது. இது இந்து சமய வேதங்களில் நியமிக்கப்பட்ட பல யாகங்களில் ஒன்று. இதற்குக் கட்டளை பிரமாணமாக ரிக் வேதத்தில் உள்ள கனச் சேப சூக்தம் காட்டப்பட்டு வந்தது, யாக காலங்களில், வெளியூரிலிருந்து வந்த, அந்நியனாயினும், ஏழையாயினும், அகப்பட்டால், அவனை இலகுவாய் வசப்படுத்தி, உள்ளே அழைத்துக்கொண்டுபோய், யாகத்தில் பசுவாக்கி, தூணில் கட்டிக் கொலை செய்து, யாகத்தை முடிப்பது வழக்கம், இந்த அநியாயக் கொலைச் செயலையும், அரசாங்கம், 1845-ம் வருஷம். 21வது ஆக்ட்படி அறவே நிறுத்திவிட்டது.

கங்காப்ரவாஹபாதனம்

பெற்றோர் தங்கள் சந்ததி பெருகிவாழ, தங்கள் இஷ்ட தேவதைக்கு பிரார்த்தனை செய்துகொள்வார்கள். தங்களுக்குப் பிறக்கும் தலைப்பிள்ளை,

ஆணாயினும், பெண்ணாயினும், சுவாமிக்கு பலியாக அர்ப்பணம் செய்துவிடுவோம் என்பது பொருத்தனை. குழந்தை பிறந்ததும், தாம் செய்து கொண்ட பிரார்த்தனைப்படி, தலைச்சன் பிள்ளையை சுவாமிக்கு காணிக்கையாக கொடுத்து விடுவார்கள். தங்கள் மதபோதக விசுவாசத்தின்படி, தங்கள் தெய்வங்கள்யாவும், கங்கை நதியில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில், கங்கைமதி, கடலில் சேரும் இடமாகிய கங்கா சாஹர சங்கமம், என்னுமிடத்தில், நீர் பெருகி நிற்கும் ஆழத்தில், தங்கள் அரும், இளங் குழந்தைகளை தங்கள் தேவதைக்கு காணிக்கையாக கடலில் எறிந்து விடுவார்கள். பக்தியின் பேரால் நடத்திவந்த இந்த இரக்கமற்ற கொலைச் செயலை, அரசாங்கம் சட்டமியற்றி, இது கொடும் கொலை என்று விளக்கிக்காட்டி, இவ்வகை மூடபக்தியை 1835ம் ஆண்டில், அறவே நிறுத்தி விட்டது.

அம்மனுக்கு விடுதல்

பெண் தேவதைகளின் பேரால், அம்மனுக்கு விடுதலை என்று குடும்பங்களில் ஒரு பெண் பிள்ளையை மாரியம்மனுக்கு நேர்ந்து விடுவார்கள். இவ்வித பழக்கத்தை தென் இந்தியாவின் பல பாகங்களில் காணலாம். இப்பெண்கள் பருவமடைந்ததும், சில சடங்குமுறைகளைச் செய்து, பொட்டுத்தாலிகட்டி அம்மனுக்கு கோவில் பொதுமகளாய் விட்டு விடுவார்கள். இப்பெண் தனக்கோர் புருஷனை மணந்து, தனிக்குடும்ப வாழ்க்கை செய்தால், விர்த்தியாகாதென்ற பொய் நம்பிக்கையால், கண்டகண்ட அனைவர்க்கும் பொது மகளாய் பாவத்தில் ஈடுபட்டு பிள்ளைகள் பலபெற்று நாட்களை முடிப்பாள்.

நற்புருஷனை மணம்செய்து வாழவேண்டிய கற்புநிலையிலுள்ள பெண்மக்களை, தேவதைகள் பெயரால் பகிரங்க விபசாரியாக்கி, தேவன் வெறுக்கும் பாவத்திற்குள்ளாக்குவது, தேவன் ஏர்வை கொள்ளும் பலி, காணிக்கையாகுமோ? இது சரியென்றால், தேவன் பாவிகளை நரக தண்டனைக்குள்ளாக்குகிறவர் என்ற நம்பிக்கைக்கு இடமில்லையே! இது பகிரங்க விபசாரபாவம், பக்தி மார்க்கத்திற்கு அருவருப்பானது என்று போதித்து எச்சரித்து, மெய்பக்தியில் திருப்ப மெய் குருக்கள் உண்டா? இல்லையே! இவ்வித கொடும்பாவச் செயலை பக்தி, பிரார்த்தனை, பலி, புண்ணிய கிரியையாய் நினைத்தால், மக்களில் மெய்பக்தி விளைவதெப்படி?

பக்தியின் பேராலும், தெய்வத்தின் பேராலும், பல ஆபாசச் செயல்களை நடத்தி, ஆயிரமாயிரம், கோடி, கோடியான மக்களை சொற்குருக்களான பொய் குருக்கள், தங்கள் மாறாட்ட பாதகச் செயலால் பழிவாங்கியதை அரசின் சட்டமல்லவா? மீட்டு விட்டிருக்கிறது. இல்லையேல், இன்றுவரை எத்தனைகோடி மக்கள் பொய்தெய்வ நம்பிக்கையால் மடிந்து மண்ணரையிற் சென்றிருப்பார்கள்? பலனற்ற பொய்வழியைப் போதிக்கும் கள்ளக்

குருக்களைப்பற்றி ஞானிகள் தரும் விளக்கம்.

பாம்பாட்டி சித்தர் பாடல்

பொய் மதங்கள் போதனைசெய் பொய் குருக்களைப்
புத்திசொல்லி நன்னெறியிற் போக விருக்கும்
மெய் மதந்தான் இன்னதென்று மேவவிளம்பும்
மெய்க்குருவின் பாதம் போற்றி ஆடாய் பாம்பே.

பொருள் :- பொய்யான மதப்பிரச்சாரம் செய்யும், பொய்க்குருக்களைத் திருத்தி நற்போதனைத் தந்து இன்னது தான் மெய்ஞ்ஞானமார்க்க மென்று விளக்கிக்காட்டி, மெய் வழியில் நடத்தும் சற்குருவாகிய பராபர வஸ்துவின் பாதத்தைத் தொழுகொள் என்பது.

பேரின்பமணிமாலை

வேதமறியாதவரை குருவென்றெண்ணி
வீணிலேயவர் பாதம்பணிந்து ஞான
போதகத்தை யருளுமென்று தலைகுனிந்து
புல்லறிவாற் பலசமயத்துழல்வோர் தம்மை
பாதகங்கள் தவிர்க்கும் பராபர வஸ்தானோர்
பாருலகில் காரணசற்குருவாய் வந்து
மாதவங்கள் செய்து கதிபெறவே சத்திய
மறைநெறியிதென்று மதிவழுத்துவாரே...

பொருள் :- மெய்ஞ்ஞான போதகத் தெளிவில்லாத சொற்குருக்களைக் குருவென்று நம்பி, மெய்ஞ்ஞான மில்லாமல், இவர்பாதம்பணிந்து தலைகுனிந்து, ஞானபோதகம் கேட்டு, பலசமயத்திலும் உழல்வோரை பாவங்களைப் போக்கும் பராபரவஸ்துவானவர், உலகத்தில் காரண சற்குருவாய் அவதரித்து வந்து, பக்திசெய்து, முக்திசேர, சத்திய கட்டளைப் பிரமாணம் இதுதான் என்று, புத்திபோதனைத் தருவார் என்பது. இவ்விரண்டு பாடலின் கருத்துப்படி, பொய்க் குருக்கள் மாறாட்டமும், வஞ்சகமும் நிறைந்த போதனைக்கு விலகி பாவ உலகின் பாவம் போக்க இயேசு என்னும் நாமத்தில் அவதார சற்குருவும், உலக இரட்சகருமாய்வந்த பராபரவஸ்துவையே பற்றிக் கொண்டு அவர் நீதி பிரமாணங்களைக்கை கொண்டு முக்தியடையும், ஞான மார்க்கத்தில் நடவுங்கள். இதுவே விசேஷித்த தேவனுக்குப் பிரீதியான காணிக்கையும் பலியுமாகும்.

58

பஞ்சாட்சர விளக்கம்

பஞ்சாட்சரம் என்பது, சிவபக்தர்களின் ஓர் விசேஷித்த மந்திரம். ஸ்கந்தப்புராணத்திலும், திருவிளையாடல் முதலானவைகளிலும், சத்தகோடி மந்திரங்களுக்கும் பஞ்சாட்சரமே விசேஷித்ததென்று எழுதியிருக்கிறது.

பஞ்சாட்சரம் என்பதற்கு ஐந்து எழுத்து என்பது பொருள். அந்த ஐந்து எழுத்தும், ந-ம-சி-வ-ய அல்லது நமசிவாய என்பதாகும்.

சைவ பக்தர்கள் இவ்வைந்து எழுத்துக்களையும், பஞ்சலோகத்தகட்டில் மாறி, மாறி, எழுதி அதை மகாப்புனிதப் பொருளாய் மதித்து, காலை, மாலை வேளையில் குறிப்பிட்ட புஷ்பம் அல்லது செபமாலை கொண்டு நூற்றெற்று உருசெபித்து பூசிக்கிறார்கள்.

மற்றும் சிலர், இதற்கு இலட்சம் உருசெபித்து, தாயத்துக்குள்ளும், லிங்கத்திற்குள்ளும் வைத்துப் பூசித்து, சகல காரியமும் சித்தியாகுமென்றும், மறுபிறவி ஒழிந்து போகுமென்றும், முக்தியடையலாமென்றும் நம்புகிறார்கள்.

பஞ்சாட்சரத்தைப் பற்றி பலர் பலவகையில் பொருள்படுத்திப் பேசுகிறார்கள். பிரமோத்திர காண்டம், பஞ்சாட்சர மகிமையுரைத்த அத்தியாயத்தில் 7-ம் பாடலில் பஞ்சாட்சரத்தை, வாக்குக் கடங்கா சிவசுரூபமென்று சொல்லியிருக்கிறது. அதன் 9-ம் பாட்டில் முக்கண்களையுடைய பரமசிவனானவர், சகல தேவர்களுக்கும் தலைவனாய் இருப்பதுபோல் தகுதியான, சகல மந்திரங்களிலும், பஞ்சாட்சாரமே முதன்மையானதால், வியாசமுனிவர், இதை நான்கு வேதங்களிலும், பிரணவம், ஆதியாகத் தொகுத்துச் சேர்த்து ஓதியதால், அனந்தம் பெயர், பரகதியடைந்தார்களென்றும் 10-ம் பாட்டில் இப்பஞ்சாட்சரத்தின் ஒரு அட்சரத்தின் பலனையாவது, பிர்மதேவனும், திருமாலும் (விஷ்ணு) கூட அறியமாட்டார்களென்றும் இதுவே அண்ட பிண்டமெங்குமாய் நிலைபெற்று விளங்குமென்றும் 11-ம் பாட்டில் இப்பஞ்சாட்சர அதிசூட்ச முறையின் உண்மையைப் பரப்பிர்மம் என்று சொல்லப்படுகிறதென்றும், 14-ம் பாட்டில் பஞ்சாட்சரமானது மோட்ச வழி காட்ட ஒப்பற்ற துணையென்றும் 15-ம் பாட்டில் சிவ என்பதின் முன்னில், நம, என்பதைச் சேர்த்துச் செபித்தோர்க்கெல்லாம் ஞான பாதங்கிடைக்குமென்றும், அவர்கள் விரும்பிய யாவையும் பெறத்தக்கதான அஷ்டமாசித்துகளும், பரகதியும், அப்பொழுதே கிடைக்குமென்றும் சொல்லியிருக்கிறது.

36-ம், 37-ம் பாட்டில் கர்க்கமுனி என்பவர், ஒரு ராஜனுக்கு, பஞ்சாட்சரத்தை உபதேசித்ததால், அந்த ராஜனுடைய பாவங்களெல்லாம் அவன் ரோமத் துவாரங்களிலிருந்து, நூறுகோடி காகங்களின் ரூபமாய் மாறி புறப்பட்டுப் பறந்துவிட்டதென்றுஞ் சொல்லியிருக்கிறது. 12-ம் பாட்டில் உள்ள மற்றொரு விசேஷத்தையும் கீழே காண்கவும் :

கருப்ப யோனியிற் சுழிப்படு பலக்கடல் கலப்பப்
பொருப்பினெம்பிரானுயிர்க்கெல்லாம் புனையெனப்புகற்று
விருப்பஞான வஞ்செழுத்தினை யுளத்திடை வித்திற்
தருப்பைச் சுட்டிடும் வேள்வியேன்? றானமேன்றவமேன்?

இதன் பொருளாவது :- கருத்தங்கும் எண்பத்துநான்கு லட்ச யோனிபேதமாகிய இருவினை சுழி பொருந்திய ஜெனன சாகரத்தைக் கடக்கத் தெப்பம்போல், உயிர்க்கெல்லாங், கையிலாயகிரியில், அமர்ந்திருக்கும், பரமசிவன், அருளிச் செய்த, விருப்பமுள்ள ஞானவடிவான பஞ்சாட்சரமென்னும் விதையை மனமெனும் நிலத்தில் விதைத்தால், மோட்ச பதவி கிடைக்கும். ஆதலால் தருப்பைப் புல்லைச் சுட்டு, செய்யும் வேள்வியேன்? தானமேன்? தவமேன்? என்பதாம்.

இப்பாடல்களில் சொல்லியபடி பஞ்சாட்சரத்திற்கு நூற்றெட்டு உரு, லட்சம், உரு செபித்து, இதில் விவரித்துக் காட்டியுள்ள நன்மைகளைப் பெற்றார்கள் என்பது உண்மையானால் 10-ம் பாட்டில், இந்தப் பஞ்சாட்சரத்தின் ஒரு அட்சரத்தின் பலனையாவது, சிருஷ்டிகர்த்தாவான பிர்மாவும், இரட்சிக்கும் (விஷ்ணுவும்)

திருமாலும் கூட அறியமாட்டார்கள் என்றால், இது அண்டபிண்டமெங்கும் நிலைபெற்று, திருவிளமாய் விளங்குமென்றதற்கு அர்த்தம் தான் என்ன? இது எங்கும் நிலைபெற்று விளங்குவது உண்மை என்றால், பிர்மா விஷ்ணு இருவரும் இதன் ஒரு அட்சர பலனையும் அறியக் கூடாததற்குக் காரணமென்ன?

இவ்விருவருமே அறியக்கூடாததை சாதாரண மனிதர் அறிந்து நற்பெலன் பெற்றார்கள் என்பதை நம்புவதெப்படி? இதல்லாமல் 36-ம், 37-ம் பாட்டில் கர்க்க முனிவர் ராஜனுக்கு பஞ்சாட்சர உபதேசம் ஓதியதால், ராஜனின் பாவங்களெல்லாம், அவன் ரோமத்துவாரங்கள் வழியாய் நூறுகோடி காகங்களின் ரூபமாய் மாறிப் புறப்பட்டு பறந்து போய்விட்டது என்பது வேதாந்த உபதேசத்திற்குப் பொருத்தமான பாவ விமோசன பரிகார முறைதானா? வாசகர்களே தீர்ப்பிடுங்கள்.

பின்னும் 12-ம் பாடலின், பொருள்படி பஞ்சாட்சரத்தை மனதில், மனனம் செய்தாலே மோட்சமடையலாம், தருப்பைப்புல்லைச்சுட்டு வேள்விவேன்? தானம், தவஞ்செய்வதேன்? என்பது உண்மையானால், பக்தர்கள் பின்னும் வேள்விச்சடங்கு முறைகளையும், தானந், தவமுறைகளையும் தொடர்ந்து செய்வது அவசியமா?

பஞ்சாட்சரத்தை உருப்போட்டு உச்சரிப்பதால், லகுவாய் முக்திசேர வழிகாட்டியிருக்க, பிந்தின மூன்று புண்ணிய சடங்குகளை தொடர்ந்து செய்வதால் பஞ்சாட்சர உபதேசத்தால் பலனொன்றும் சிந்திக்காது என்பதற்கு. இது அறிகுறியல்லவா? இவ்வித நம்பிக்கையற்ற உதாரணங்களை ஆதாரங்காட்டி, பஞ்சாட்சார மகிமையை உயர்த்திப் பேசுவதால் அதனால் பலனடைவோம் என்கிறதற்கு, என்ன ஆதாரம் இருக்கிறது? பஞ்சாட்சரத்தைப் பெரிதும் போற்றிப் பேசும் குருக்களைப் பற்றி நாதாந்தசாரத்தில் உள்ளது.

விருத்தம்

அஞ்செழு த்தென்று சொல்லி
அவனியிற் போதிப்பார்கள்
வஞ்சகக் குருக்கள்மார்கள்
வகையை யானென்ன சொல்வேன்
அஞ்செழுத்ததனைக் காணார்
ததனுட சுரூபங் காணார்
இன்சொலாற் பொருள்பரிக்கு
மிப்பந்த மூடயதாமே.

பொருள் :- அஞ்செழித்தின்னதென்றும், அதன் உட்பொருள் இன்னதென்றும் அறியாது, தங்கள் மதுரமிக்க சொற்களால் பொருள் பறிக்கும் நோக்கமாய் அஞ்செழுத்தை போற்றிப் பேசும் வஞ்சகக்குருக்களின் மாறாட்ட வழிகளைப் பற்றி நான் என்ன சொல்லுவது, இவர்கள் போஜனப் பிரியரான மூடர் என்பதாம்.

பஞ்சாட்சரம் உருவாகிய வகையின் விளக்கம்

வெண்பா

ஓவெழுத்தே வித்தாய் உகாரமதில் வேரோடி
ஆவெழுத்திலே முளைத்து அஞ்சுகப்பாய் - ஆவெழுத்து
பூத்ததே வானம் பதினாலுகங்
காய்த்ததே பஞ்சாட்சரம்

ஒருநாள் சிவன், தன் பெருவிரல் நகத்தால் சத்தியின் துடையில் கீறவே, சத்தி வலிபொறுக்க முடியாமல், ஓவென்றாளாம். அதற்கு சிவன், அ என்கவே, பின்னும் பராசத்தி உ வென்றாளாம். இம்மூன்றுமே திருமந்திரமாம். ஓவென்ற எழுத்திற்கு அர்த்தம் என்னவென்றால், அது ஓம்புரதமென்றும், அண்டமென்றும், உடலின் மேல், தோல், என்றும் சகல வஸ்துக்களின் புரோணி என்றும், ஜெந்துக்களுடைய தோலென்றும், விநாயகமென்றும், மூலமென்றும், ஊமை எழுத்தென்றும், சக்தி எழுத்தென்றும், விந்தெழுத்தென்றும் சொல்லப்படும்.

பின் உள்ள அ, என்னும் எழுத்தை லக்கவகையால் மாற்றி (அ) எட்டு என்றும், அப்படியே உ, என்னும் எழுத்தை (உ)ரண்டு என்றும் பொருள்படுத்தி, ஆக எட்டும் இரண்டும் பத்தாயிற்று. இதன் விளக்கம் காட்டுகிற கவி.

எட்டு மிரண்டு மறியாத வேழையை
எட்டு மிரண்டு மறிவித்தானென்னந்தி
எட்டு மிரண்டு மறிவாலறிந்தபின்
எட்டு மிரண்டு விங்கமதாகுமே.

முந்தின வெண்பாவின் விளக்கபடி ஓ,அ,உ ஆகிய மூன்று எழுத்தும் திருமந்திரமாகி, பின் அ,உ எழுத்து இரண்டும் லக்கவகையில் எட்டும் ரண்டும் பத்தெனப் பொருள் உண்டாக்கி இந்த வெண்பாவில் இந்தப் பத்தென்பது, சிவன் சத்தியின், லிங்கமாய் பொருள் உருவாக்கிச் சொல்லியிருக்கிறது.

முன்பிரிவுகளில், தத்துவத்தின் பொருளை விளக்கிக்காட்டியதில் சிவனும், சத்தியும் கூடிப்பெற்ற பின்சந்ததிகளாகிய மயேசுரன், சதாசிவன், ருத்திரன், விஷ்ணு, பிர்மா வென்னும் பஞ்ச கர்த்தாக்கள் என்பவர்களையே, பஞ்சாட்சரம் என்று; முந்தின பாடல் விளக்கிக் காட்டுகிறது.

சங்கராச்சாரியார் - உடலறி விளக்கம் 23-ம் பாட்டு

ஓங்காரமுதலூமை தனிற் பிறக்கும்
ஓவெழுத்திலீரெழுத்து முதித்து நிற்கும்
பாங்கான உவ்வெழுத்தில் வவ்வுந் தோன்று
பகர்ந்த அவ்வில் யவ்வெழுத்தும் வவ்வுந தோன்றும்

நீங்காத சிவவெழுத்தில் மவ்வுந் தோன்றும்
நின்ற மவ்வில் நவ்வெழுத்து நேராய்த் தோன்றும்
தீங்கான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
சிவாயநம வஞ்செழுத்தில் செனித்தவாறே.

பொருள் :- முன் சொன்னபடியே சிவன், கால் பெருவிரல் நகத்தால் சத்தியின் துடையில் கீற, சத்தி வலிபொறுக்க முடியாமல், ஓ வென்றலறிய சத்தத்தின் முதல்ஒலி ஓ, என்பது இதுவே ஊமை எழுத்தாம். அதுவே ஓங்காரமுமாம். இந்த ஓ, என்றதில் இரண்டு எழுத்து உதித்து நிற்கும் என்பது, சத்தி ஓ, என்றதற்கு சிவன் அ, என்றதும் அதற்கு சத்தி பின்னும் உ, என்றாளாம் இவ்விரு சத்தத்தின் முன் ஒலியாகிய அ.உ., என்னும் இரண்டுமே அவ்வும் உவ்வும் என்பது, பின்னும் அவ், வென்பது சிவனும், உவ், வென்பது சத்தியுமாம். அதாவது, முன்சொன்னபடி அவர்கள் இருவரிட்ட சத்தமாகும். உவ்வெழித்தில் அவ்வுந்தோன்றுமென்பது சத்தியும், சிவனும் கூடியிருக்கிறார்கள் என்பது. அவ்வில் யவ்வும், வவ்வும் தோன்றும் என்பது, ய, என்பது சதாசிவனும், வ, என்பது மயேசனும் ஆகும். சிவ்வெழுத்தில், மவ் வுந் தோன்றும் என்பது, சி, என்பது ருத்திரனும், ம, என்பது (திருமால்) விஷ்ணுவுமாகும். மவ் வெழுத்தில் நவ், வெழுத்து நேராய்த் தோன்றுமென்பது ம, என்ற விஷ்ணுவிலிருந்து ந, என்ற பிர்மா பிறந்தார் என்பது, தீங்கான தத்துவங்கள் தொண்ணூற்றாறும் சிவாய நமவென்னும் அஞ்செழுத்தில் செனித்தவாரே என்பது, சிவாய நம வென்னும் ருத்திரன் மயேசுரன், சதாசிவன், பிர்மா, விஷ்ணு வாகிய ஐவரும், தொண்ணூற்றாறு தத்துவத்தையுமுடைய அழிந்து போகும் சரீரத்தில் பிறந்தவர்கள் என்பதாம்.

இந்த விளக்கத்தின் உண்மையை கீழ்க்கண்ட பாடலில் விளங்கிக் கொள்ளவும்.

31-ம் பாடல்

ந, வ்வெழுத்து தெய்வ மாணாக்கனே கேள்
நான்முகனுமாகு மவ், வெழுத் மோலாஞ்
சிவ், வெழுத்து ருத்திரனுமாகுமென்றே
செப்புமயேசுரனும் வவ் வெழுத்தேயாகும்.
யவ், வெழுத்துச் சதாசிவனுமாகுமென்றே
யரைந்திடு உவ்வெழுத்து விந்து நாதம் அவ்வாம்
ஓ.வ், வெழுத்து மகாமேரு ஊமை யெழுத்தானை
யொரு நான்கு வேதமறியாத பரமாமே

பொருள் :- ந. எழுத்து நான்கு முகனாகிய பிர்மா, மவ்வெழுத்து மால், என்னும், விஷ்ணு, சிவ், வெழுத்து ருத்திரன், மயேசுரன், வவ், வெழுத்து, யவ், வெழுத்து சதாசிவன், உ,வ், வெழுத்து, விந்து, நாதம், அவ் வெழுத்து என்பதாம். இதைச் சுருக்கிச்சொன்னால், உ, வெழுத்தாகிய சக்தியின் விந்தும், அ,

வெழுத்தாகிய சிவனின் நாதமும் சேர்ந்து அதிலிருந்து ருத்திரன், மயேசுரன், சதாசிவன், பிர்மா, விஷ்ணு ஆகிய அழிவுக்குரிய தொண்ணூற்றாறு தத்துவங்கொண்ட சரீரத்தையுடைய ஐவரும் பிறந்தார்கள் என்பதே பொருள்.

ந. நான்முகன் - பிர்மா

ம. மால் - விஷ்ணு

சி. ருத்திரன்

வ. மயேசுரன்

ய. சதாசிவன்

சங்கராச்சாரியார், தமது பாடலில் நமசிவாய என்பதற்கு, பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மயேசுரன், சதாசிவன் இவர்கள் சத்தி சிவனிலிருந்து வந்தவர்கள், அழிந்துபோகும் தொண்ணூற்றாறு தத்துவங்களையுடைய சரீரத்தில், இவர்கள் செனித்தார்கள். அல்லது உற்பவித்தார்கள் என்கிறார். இதனால் இவர்கள் மூலம் மனித சந்ததி உற்பத்தியாயிற்று என்றும் இவர்கள் பராபரவஷ்துவாகிய தெய்வம் அல்லவென்றும் உறுதிப்படுகிறது. இந்த ஐந்து எழுத்தை அர்த்தமின்றி நூற்றெட்டு உரு, லட்சம் உரு, செபித்தால் எப்படி முக்தி சேர முடியும்? இவ்வைந்து எழுத்தை சிவ வாக்கியர் விளக்கிக் காட்டுவதை கீழே காண்கவும். பஞ்சகர்த்தாக்கள் ஐவரையுமே பஞ்சாட்சரம் என்று முந்தின பாடல் விளக்கிக் காட்டுகிறது.

பஞ்சாட்சரம் என்னும் வார்த்தைக்குப் பலர் பலவகையாய் பொருள் கூறுவர். பஞ்சாட்சரம் என்னும் ஐந்தெழுத்தாகிய ந-ம-சி-வ-ய என்பது சிவனை (பராபரவஸ்துவை) பொருள் படுத்தும் வார்த்தை அல்லவென்பதைக் கீழே காண்கவும்.

சிவ வாக்கியர்

அஞ்செழுத்துமூன்றெழுத்து மென்றுரைக்குமன்பர்காள்
அஞ்செழுத்து மூன்றெழுத்துமல்ல காணுமப்பொருள்
அஞ்செழுத்தை நெஞ்சமுத்தி யவ்வெழுத்தறிந்தபின்
அஞ்செழுத்து நின்றவண்ணமானதே சிவாயமே.

அஞ்சுமஞ்சு மஞ்சுளே யாநாதியான தஞ்சுளே
பிஞ்சு பிஞ்சு போகுதே பிதற்றுகின்ற பித்தர்காள்
பஞ்ச பாதகருரைத்த பாழ் வழியைத் தேடுறீர்
அஞ்சுமில்லை யாறுமில்லை யநாதியான தொன்றுமே

அஞ்செழுத்துயிருமல்ல, அரி சிவன் - பிர்மனல்ல
விஞ்சிய சத்தியோடு விந்துட நாதமல்ல
தஞ்சமாஞ் சிவனுமல்ல சாரூபந்தானுமல்ல
அஞ்செலாம் பரமசோதியப் புரங்கடந்தவாறே

இம்மூன்று பாடல்களிலும் இந்த ஐந்து எழுத்தாகிய, பஞ்சாட்சரம் என்பது, விஷ்ணு, சிவன், பிர்மாவும் அல்ல, சத்தி, விந்து, நாதமும், அல்ல, பஞ்ச கர்த்தாக்களும், பேரின்ப முக்தி பதவியெனும், மோட்ச பாக்கியங்களும் அல்ல, அது, அனாதியான ஒன்று என்றும், அப்புறம் எட்டாது கடந்து நிற்கும் - பரம சோதி என்றும், சிவ வாக்கியர் சொல்லுகிறார். அருணகிரி அந்தாதி வெண்பா.

நம சிவாயர்

இருந்து நினைப்பார் தம் யிரு வினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு மருந்தன்றோ
தம்பிரான் எவ்வுயிர்க்குந் தானுமருணேசர்
எம்பிரானோரஞ்செழுத்து.

மேலே, சிவ வாக்கியருரைத்தது போல், எம்பிரான், தம்பிரான் என்பதுவே அந்த அஞ்செழுத்து என்கிறார். இதைப் பற்றி பின்னும் சொல்லுவது.

சிவ வாக்கியர்

அரியதோர் நமசிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுகோடி யளவிடாத மந்திரம்
சரியை நாலுவேத மாறு சாஸ்திர புராணமுந்
தெரியுமாலு மயனுமல்ல சீவ தேவதேவனே

இந்தப் பாடலில், நமசிவாய என்ற அஞ்செழுத்து ஆதியந்தமெனும், பராபர வஸ்துவானதும், நூறுகோடி மந்திரங்களும், சரியை மார்க்கங்களும் நாலு வேதங்களும், ஆறு சாஸ்திரங்களும் புராணங்களும் போற்றிப் பேசும், திருமாலு(விஷ்ணு)மல்ல, பிர்மாவுமல்ல. அது ஜீவனுள்ள தேவனாகிய தேவன் என்கிறார். சிவவாக்கியர், மீளவும் சொல்லுவது.

சிவ வாக்கியர்

சாவதான தத்துவச்சடங்குருக்கும் மூடர்காள்
தேவர் கல்லு மாவரோ சிப்பதன்றியென் சொல்வேன்
மூவராலுமறியொணாத முத்தொழிற் பகாப் பொருள்
காவலாகியும் முளே கலந்திருப்பர் காணுமே

பொருள்:- ஜீவனில்லாத தத்துவச் சடங்கு செய்யும் மூடர்களே! கல்லினால் உண்டாக்கிய உரு தேவனாகுமா? இவ்வழிபாட்டைக்

கண்டு சிரிப்பதல்லாது, வேறென்ன செய்வேன் மூவரெனும், சிவன், பிர்மா, விஷ்ணுவாலும் அறியக்கூடாத, படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் தத்துவம் நிறைந்த ஏக பராபரம், உனக்குள் பாதுகாவலனாக கலந்திருப்பார் அதை கண்டுகொள் என்பதாம்.

சிவ வாக்கியர்

அண்ணலாம் பரமசோதி யற்புத மறியதாலே
கண்ணிலே கண்டதெல்லாங் கதிதருங் கடவுளென்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான் முறைப்படி யிதென்ன
எண்ணியே நடந்து மோட்சமிழந் தெரிநரகில் வீழ்வார்.

பொருள்:- பராபர வஸ்துவாகிய இந்தப் பரம்பொருளின் மகத்துவமிகும் குண லட்சணங்களை அறியாததால் உலகத்தோர், கண்டதை யெல்லாங் கதிதருங் கடவுளாயெண்ணி வணங்கினார்கள். இவ்வித நம்பிக்கையுடன், நடப்போர், மோட்சமிழந்து, எரியும் நரகத்தில் வீழ்வார்கள் என்பதாம்.

பஞ்சாட்சரத்தைப் பற்றி, பூர்வ ஞானிகளின் பாடல்கள், மிகத் தெளிவாய் விளக்கிக் காட்டியதிலிருந்து, பஞ்சாட்சரம் என்பது மும்மூர்த்திகளாகிய சிவன், பிர்மா, விஷ்ணுவைக் குறித்துக் காட்டுவதோ, பஞ்ச கர்த்தாக்களை, மோட்ச பேரின்ப பாக்கியங்களைக் குறிப்பிடுவதோ அல்லவென்பதும் அது எம்பிரான், தம்பிரான், பராபரன், பராபரம், கர்த்தன், கர்த்தர் என்னும் ஆதியந்தமில்லாத, அநாதியான தொன்றான, பராபர வஸ்துவாகிய கர்த்தனை, பரமசோதியை, ஜீவனுள்ள தேவனாகிய தேவனைக் குறித்துக் காட்டுவதே என்பது தெளிவான விளக்கம்.

பஞ்சாட்சரத்தின் உட்கருத்தைத் தெளிவாய் புரிந்து கொள்ளாமல் பஞ்ச உலோகத்தகடுகளில் முன் விவரித்துள்ளபடி, மாறி, மாறி வரைந்து நூற்றெட்டுஉரு, லட்சம் உரு செபித்துப் பூசை செய்து, காரியசித்தி பெறவும், பாவங்களையொழிக்கவும், மறுபிறவியை யொழிக்கவும், முக்தி பதவியடையவும், நம்புவது, இலவுகாத்த கிளியின் அனுபவமாய் முடியும் என்பது வேதாந்த விதி நெறியில் காணும் விளக்கம். இவ்வித பொய் நம்பிக்கையை தங்களுக்கு ஆதாரமாய்க் கொண்டு, இவ்வழிபாட்டை விடாது கடைபிடிப்போரைப் பார்த்து, "பஞ்ச பாதகருரைத்த பாழ் வழியைத் தேடுறீர்", என்று சிவவாக்கியர்

முன்னுள்ள பாடல்கள் மூலம் எச்சரித்திருப்பதைக் கருத்தில் வைக்க வேண்டியது மிக, மிக அவசியம்.

ஆகவே பஞ்சாட்சரம் என்னும் இவ்வைந்தெழுத்தும், மேற்கூறிய விளக்கத்தின்படி, எம்பிரான், தம்பிரான், பரஞ்சோதி, பராபரம் என்ற வான் பொருள் ஒன்றையே குறிக்கும் என்று உள்ளத்தில் உணர்ந்து, அறிந்து, பஞ்சமா பாதகங்களுக்கு விலகி, பராபரவஸ்து ஒன்றையே போற்றித் துதித்து பக்தியைப் பூரணப்படுத்தி முக்தி சேர்வதே மெய் பக்தியின் உரிமையும், சிறப்பும், மெய் வேதாந்த விளக்கமும் இதை கடைப்பிடித்து பரம்பொருளைத் தொழுது போற்றி முக்தியடையுங்கள்.



59

ஜாதி உற்பவ வரலாறு

இமய முதல் குமரி வரை இந்து தேசத்தின் சர்வ எல்லையிலும், ஒரே சுரூப சாயலில் காணும் மக்களின் பாஷைகளும், ஜாதிப்பிரிவினையும் ஒரு தேசத்திலும் காணக் கூடாத அளவு பலவாய் காணப்படுகிறது.

கல்வி, செல்வம், பட்டம், பதவிச் சிறப்பால், புகழ் மணம், வீசி வாழ்வோர், ஒரு சாரார் இருக்க, வறுமையும், சிறுமையும் வாதை நோய் போல் வாட்டி வதைத்தாலும், பெரிதும் குலப் பெருமை, குடும்பப் பெருமை பேசி தாங்களே உயர் குலத்தவரென பிறவிப் பெருமை பேசுவோர் எண்ணற்றோர் உள்.

மக்கள், பிறப்பை உயர்வு தாழ்வென பிரித்துப் பெருமை பாராட்டும் துர்ப்பழக்கம் மனித சமுதாயத்தைப் பெரிதும் பிளந்து. சமத்வமின்மையை யும், சமாதானக் கேட்டையும் உண்டாக்கி, அன்பற்ற மனப்பான்மையை மக்கள் உள்ளத்தில் உருவாக்கி, தம்மைப் போன்ற

பிறரை, இழி குலத்தவரென யிகழ்ந்து, ஏளனம் பேசக் காரணமாயிற்று. இதல்லாது, பிறரை நாயினும் கடையாய் மதித்து, தங்களைப் பொன் கட்டியும், பிறரை, மண் கட்டியுமாய் நிறையிட்டு, நரகலை நக்கித் தின்னும், நாய், பன்றியைத் தொட்டாலும், தொடுவர், பிறரைத் தொட்டால், தீட்டெனக் கூறி தலை முழுகுவர். இந்து தேசத்தின் எல்லை சமூலமும் இப்பழக்கம் ஓர் பயங்கர பரம்பரைத் தொத்து நோய் போல் வேரூன்றிப் பரவிப் படர்ந்து ஈடுசெலுத்த முடியாத சமத்துவமின்மையையும், இழிவையும் மனித சமுதாயத்தில் உருவாக்கியிருக்கிறது.

இந்து சாஸ்திர வேத புராண காவியங்களில் மனிதரின் ஜாதி உற்பவ வரலாற்றை விபரீதமான பொருத்தமற்ற நடையில் எழுதியிருப்பதைக் காணலாம். மனிதரின் ஜாதிப் பிரிவினையின் வரலாறு, முதல், முதல், தேவர்களிலிருந்தே, பிரிந்ததாக இந்து வேதங்கள், ஆதாரப் பூர்வமாய் விளக்கிக் காட்டுகிறது.

அதன் சுலோகங்கள் பின்வருமாறு :
ப்ராஹ்மனோஸ்ய முகமாஸீத் பரஹுராஜ்ய க்ருத: 1
ஊருததஸ்ய யத்வைஸ்ய பத்பயாம் சூத்ரோ அஜாயத: 4
(யசுர்வேதம் அத்தியாயம் 31 : 11)
ப்ராஹ் மனோஸ்ய முகமாஸீத் பரஹுராஜன் யோபத் : 1
மத்யம் ததஸ்ய யத்வைஸ்ய: பத்ப்யாம் சூத்ரோ அஜாயத:
(அதர்வண வேதம் அத்தியாயம் 19, 6, 6)

பொருள் : - கடவுளின் (பிர்மா) முகத்தினின்று பிராமணனும், தோளில் க்ஷத்திரியனும், துடையில் வைசியனும், பாதங்களில் சூத்ரனும் ஆக நால்வர் பிறந்தார்கள் என்பதாம்.

பிர்மாவின் சரீரத்தின் நான்கு வித்தியாசப்பட்ட இடங்களில். வித்தியாசங்காட்டத்தக்க விகற்பமற்ற சரீர அமைப்பும், சுரூப சாயலுமுள்ளவர்களாய், இந்நால்வரும் பிறந்திருக்க இவர்கள் ஒரு தகப்பனுடைய சரீரத்தினின்று பிறந்த காரணத்தால், இவர்களை, ஒருவரோடு ஒருவர், சம்பந்தங்கலந்து ஒற்றுமையாய் வாழும் தகுதியற்று, பிரிந்து உயர்குலத் தாழ்குல நான்கு ஜாதியினர் என்று சொல்லுவது எந்த ஆதாரத்தால் என்பது விளங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படிச் சொல்ல நியாயந்தான் என்ன? பிர்மாவின் சரீரத்தின் நான்கு வித்தியாசப்பட்ட இடத்திலும், இந்நாலுஜாதியினரும் பிறக்க நான்கு யோனிவாய்கள் யிருந்ததென்று வேதத்தில் எழுதப்படக் காணோமே! இந்தப் பிறப்பின் காட்சியே இயற்கைக்கு மாறாய்த் தெரிகிறது. ஒரு வேளை அப்படியே

பிறந்திருந்தாலும் இந்நால்வரும் ஒரே வேளையில் பிறந்தவர்களா? அல்லது வித்தியாசப்பட்ட கால, நாட்களில் பிறந்தவர்களா? வென்ற தெளிவைக் காணோம்.

இன்று இந்த ஊரில் ஓர் அந்தணர் குடும்பத்தில் நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்ததாக வைத்துக் கொள்வோம். அதில் முதல் பையனை, இவன் பிராமணன் என்றும், இரண்டாவதானை க்ஷத்திரியன் என்றும், மூன்றாவதானை வைஸ்யன் என்றும், நான்காவதானை சூத்திரன் என்றும் பிரித்து, நான்கு பேரும் அந்த நான்கு இனத்தவரோடேயே சம்பந்தம் கலந்து, வாழவேண்டும். இனி பெற்றோரோடாவது, உடன் பிறந்த சகோதரர்களோடாவது கலந்து உறவு கொண்டாட நியாயமில்லை என்றால், பிராமணன் தவிர பிந்தின மூவரும் இவ்வித வேறுபாட்டின் நடைமுறையை ஒத்துக் கொள்வார்களா? அல்லது பெற்றோர் அப்படிச் செய்ய பிரியப்படுவார்களா? இது சாத்தியமற்றக்காரியம் என்றால், ஒரே பிர்மாவின் சரீரத்திலிருந்து பிறந்த நால்வரில், மூவரை, ஒருவரின் கீழ், ஒருவர், கீழ்குலத்தோராய் வாழ்ந்து பெருக நான்கு ஜாதியாய்ப் பிரிக்க, காரணமும், நியாயமுந்தான் என்ன? ஒரே ரெட்டிக்குப் பிறந்தவனே தன்னை ரெட்டி என்று சொல்லலாம். நாய்க்கனுக்குப் பிறந்தவனே தன்னை நாய்க்கன் என்று சொல்லலாம் பார்பனனுக்குப் பிறந்தவனே தன்னை பார்ப்பனன் எனலாம் பின் எப்படி ஒரே பிர்மாவிற்குப் பிறந்தோரை நான்கு வித்தயாசப்பட்ட கீழ்குல, மேல்குலத்தவராய் ஆக்குவது. ஓர் மரத்தில் பழுக்கும் பழம், உச்சியில் பழுப்பதும், அதன்கீழ் பழுப்பதும், நடுவில் பழுப்பதும், கடைசியில் பழுப்பதும், ஒரே வர்க்கமான பழமேயல்லாது, பிராமண, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்ரப் பழமென்றால் உலகம் ஒத்துக் கொள்ளுமா? ஞானமார்க்க ஆராய்ச்சியற்ற அந்த கார உள்ளம் உடையோர் இசைந்து இதை ஒத்துக் கொண்டார்கள் என்பதே உண்மை.

இதில் ஒரு காரியம் விசேஷித்து கவனிக்கத்தக்கது. பிர்மாவிற்குப் பிறந்த நான்கு புத்திரர்களும், இந்து வேத ஆதாரப்படி நான்கு தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். முதல்வன் வேதம் ஓதும் மறையோனாயும், இரண்டாவதான் தேச பரிபாலன அரசுத் தொழில் செய்வோனாயும், மூன்றாவதான் வணிகத் தொழில் செய்யும் வியாபாரியாயும், நான்காவதான் உழவுத் தொழில் செய்யும் விவசாயியாயும் செயலாற்றியதால், இவர்கள் நான்கு வித்தியாசப்பட்ட தொழில் அலுவலரேயன்றி, ஜாதி, நால்வருக்கும் ஒன்றேயாகும். இவ்வுண்மையின் அனுபவத்தை, பல பார்ப்பனக் குடும்பங்களில் இன்றும் காணலாம் சில பார்ப்பன குடும்பங்களிலுள்ள பிள்ளைகளில் ஒருவர் கோவில் பூசாரியாயும், மற்றவர் மருத்துவத் துறையில்

மருத்துவராயும், மற்றவர் கல்வித்துறையில் ஆசிரியராயும், மற்றவர் விவசாயத் துறையில் பெரும் பண்ணைக்காரராயும், மற்றொருவர் ஆட்சி பீடமேறி மந்திர யாயும் பணிபுரிகிறார்கள். இதனால் ஜாதிமாற்றம் ஏற்பட்டு உயர்குலம், இழிகுலமெனப் பிரியக் காரணமேயில்லையே ! இவ்வகையில் இன்று எல்லா ஜாதியிலும் காணலாமே.

இவ் உதாரணத்தை முன்வைத்து, பிர்மாவுக்குப் பிறந்த நான்கு புத்திரரும், நான்கு விதத் தொழில் செய்தபடியால், அவரவர் தம், தம், தொழிலை விடாது தொடர்ந்து செய்து தம் தொழிலை ஜாதி என்னும் வேலியிட்டுப் பிரித்து வாழ்ந்த, ஒரு தகப்பன் (பிர்மா) பிள்ளைகளென்றே சொல்வது நியாய மல்லவா? ஆகவே, மனிதரின் ஜாதி, குல வரலாறு, பிர்மாவின் நான்கு புத்திரரின் செய்தொழிலால் ஏற்பட்டது என்று சொல்வதே பொருத்தமான நியாயமாகும். ஜாதிப் பிரிவினை என்பது பிறப்பினால் அல்ல. அவனவன் செய்தெழிலால் ஏற்பட்டதென்பதே இதன் அடிப்படை உண்மை. அக்காலத்திலிருந்தோர், தொழில் மாற்றம் செய்யக் கூடாத நிலையில், தொழிலாளிகள் மேல் சுமத்தப்பட்ட கொடும் ஜாதியாய் மாறி, ஜாதி என்னும் வெறியால், ஒருவர்க்கொருவர் சம்மந்தத் தொடர்பின்றி, வேறு பிரித்து, ஒவ்வொரு தொழிலாளியையும், ஒவ்வொரு தனிச்சாதியாய் நிலைக்கச் செய்து விட்டது.

பிர்மாவுக்குப் பிறந்த நாலு புத்திரர்களாலும், பிர்ம்மா க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திரர் என்ற நால்வகை ஜாதியும் முதல், முதலாய் உலகத்தில் உண்டானது வேதாந்தத்திற்கேற்ற உண்மை என்றால், இந்த நால்வரும், தங்கள் நாலவகை ஜாதியையும், உலகத்தில் விருத்தியாக்க, இவர்களுக்கு மனைவியாகப் பெண் கொடுக்க, மக்களைப் பெற்று வளர்த்து வைத்திருந்த பிராமண, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திர குடும்பங்கள் யாவர்? அப்படியில்லை என்றால், இந்த நாலு ஜாதியாரும், தங்கள் ஜாதியை நிலை நாட்ட, எந்த ஜாதியிலிருந்து தங்கள் மனைவிமாரைத் தேடிக் கொண்டார்கள்? அப்படியில்லை என்றால் இவர்களும் தங்கள் தகப்பன் பிர்மாவைப் போல், சரீரத்தில் பெண்களைப் பெற்று, தங்களுக்கு மனைவிமார்களைக் கொண்டார்களா? இல்லாவிடில் இவர்களின் தனிப்பட்ட ஜாதி, நிலைத்தோங்க வழியில்லையே! இதைப் பற்றி வேதங்களில் ஒன்றுமே சொல்லப்படக் காணோம். இதனால் இவையனைத்தும், மனிதன் கட்டுரையால் ஏற்பட்ட கட்டுப்பாட்டின் விளைவு என்று தெளிவாகிறதல்லவா?

மனிதகுல வரலாற்றை, ஜைனர் வேதத்தில் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, விருஷப் தீர்த்தங்கரர் காலத்தில், பரதேசுவரன் என்ற முதல்

சக்ரவர்த்தியினால், பிராமண, க்ஷத்ரிய வைஸ்ய, சூத்திரர் ஆகியோர் உண்டாக்கப்பட்டதாய் தெரிகிறது. "ஓர் சக்ரவர்த்தியால் நான்கு வித ஜாதியார் உண்டாக்கப்பட்டார்கள்" என்னும் வார்த்தையை பார்க்கும் போது, அதுவரையில், மனிதர் உயர்வு, தாழ்வு என பிரிக்கப்படாது, ஒரே ஜாதியினமாய், இருந்ததாய்த் தெரிகிறதல்லவா?

இது மாத்திரமல்லாது அக்காலம் வரையில் சிவன், பிர்மா, விஷ்ணுவையும், தேவர்களில், வணக்கத்திற்குரியவர்களில் ஒருவராய் எண்ணுமல். இம்மூவரும் ஜீனதேவரின் அடியார்களாய் இருந்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. பல வருஷங்களுக்குப் பின்னால் தான். சிவனுக்கம், விஷ்ணுவுக்கும் கோவில்கள் கட்டியதாய் ஆதாரப்பூர்வமாய்த் தெரிகிறது.

இதுவரை பிர்மாவுக்குப் பிறந்த நான்கு புத்திரர்களாலும் முதல், முதல் ஜாதி உண்டாக்கப்பட்டதாய் தெளிவு படுத்தப்பட்டது. ஜாதி உற்பவ வரலாற்றை, பின் ஒரு பிரிவில் பார்க்கும் போது, இந்து வேத ஆதாரப்படி, ஜாதி, உற்பவம், முதலாவது மும்மூர்த்திகளிலும் மற்றும் தேவர்களிலுமே உண்டாயிருந்தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு தேவனும், ஒவ்வொரு ஜாதியைச் சேர்ந்தவராய்த் தெரிகிறது. சித்தர், முனிவர்கள், ஞானிகளைப் போலவே, பல தேவர்களும் பல ஜாதியைச் சேர்ந்தவர்களாய் காணப்படுகிறது. அவை பின்வருமாறு :-

இரு சமய விளக்கம் வேள்விபடலத்தில்

சிவசமயத்தான் வினா?

விருத்தம்

சாமவேதந் தனிற் பிற பதப்போமா மந்திரத்தினிடை
யேமமேரு விலியை அந் தணனென்று யியம்பிடலாலுஞ்
தூமமேவுங் கருங்குழல் பைந்தொடியே யிந்தசொற்கேற்கப்
பூமிபோற்றும் பிரமாண்ட புராணம் கந்தப் புராணத்தும்,

மாலையரசர் மரபென்றும் மரபோன் வணிககுலமென்றும்
சீலமுடைய புரந்திரனைத் திரமாகிய சூத்திரனென்றுஞ்
சாலுமிமையோர் தங்களைச் சங்கரசாதி யென்றுஞ் சாற்றி
யாலமிடத்திற் பெருமாளை யந்தணான னெனலாலும்,

உயருங்குலதிமா மறையோனுக்கு வணக்கொடியானும்பர் பிரான்
அயலென்றுரைக்குந் தாழ்குலத்தோ ரானாதிக்க வருகமலாற்
செயலின் முறைமை யதனாலுஞ் சிவன் தன் குலத்தின் பெருமையினாற்
கயிலைகிரி வாழுமையாள் பங்கயனும் பாசிக்கையினாலும்,

இதற்கு ஸ்ரீ அரிசமயத்தான் பிரதியுத்தரவு 147-ம் பாட்டு

வேலெய் விழியாயிதுநிற்க விரிஞ்சன் வணிக குலமென்றும்
மாலே அரசர் மரபென்றும் வளர் இந்திரன் சூத்திரனென்றும்
கோலாகலவான தீசூடுங்குளிர் செஞ்சடிலக் கோமானை
மேலாங்குலத் தந்தணனென்று மெய்போலொன்று விதித்திட்டாய்

மைடொங்கிய சுந்தரத்தானை வளமான பிராமணனென்றுஞ்
செப்பும் பிரபந்தப் பெயர்மாத்திர மேயவனைத் திசைமுகர்க்கு
மெய்ப்பண்புள புத்திரரென்று விளம்புமந்த விரிஞ்சன் தான்
தப்பின்றி வைசியனானல் தனையன் தாணந்தணனாகுமோ.

அது தானிற்க தேவர்க்குளாங் கீசுரனை அந்தணனென்று
முதிராவதிதி புத்திரர்கள் முனைவேலரசர் குலமென்று
மதிமேதை ராமருத்துவர்கள் வணிகரென்றும் ருத்துவர்க்குப்
பதியாமச்சுவினி தேவர் பண்பாகிய சூத்திரரென்றும்

சாதி நிலைமை யிவ்வாறு சாற்றிடும் பாரத நூலில்
மாதவனையும் பிர்மானையும் மரபுபிரித்து வகுத்துளதால்
தீதில்மருந்துக் களையதுவைசியனென் றிடலாலவருக்குள்
ஓதவுரியனாங் கண் மூன்றுடைய யாறுயர் அந்தணனாமோ
ஏந்துமழு வாளியைமறை யோனென்று பகர்ந்த பிர்மாண்டங்
காந்தமென்னும் புராணமிரா சத்தாமாதமாங் கற்பினதால்
பூந்தான் குழாய் பிறபதத்தில் புராரி தன்னைப் பிராமணனென்
ருய்ந்ததன்மை பிர்மத்தை யறிவரனென்ற தத்தனையே

பிர்மன் தன்னைச் சிவனறிந்து பேறும்முன்னும் பகர்ந் திட்டேன்
திருவின்பதியே யந்தணனத் திறமும்பகர்வேன் தெளியக்கேள்
விரியும் பொருள் சேர்தருவ மாம்வோசிரத் திறதேவகிபுத்
திரனை மது சூதனனைச் செய்யுஞ்சிறப்பான பிராமணனென்றே

இளையதான மறைபொருளுக் கேற்கவைஞ்சாம் பியல்வேதந்
தனிலச்சுவ மேதகவென்றுந் தழைத்தவேழ் விச்சமயத்தில்
வனையுமம்போற் கழல்வாசு தேவன் தன்னை வணங்கிமகா
சனமெல்லாரும் பிராமணிய தெய்வமென்ற திரஞ் சொலுமால்

சாற்றும்பா ரதக்கதையில் சத்தமுனி சங்கவர்தத்து
மாற்றந்தனிலு நாரணனை வளமான பிராமணனேறு

மாற்றேற்றம் பேரியவிண்டு சகத்திர நாமத்துந் திருமால்
ஆற்றலுடைய பிராமணணென்றனே கவிதமாய புகழுந் திருமால்

தகுபாருலகோர் புகழ்பாரா சாரியச்சிற்ப முதலான
மிகுசீர்சிற்ப நன்னூல்கள் விமானத்தியல்பு சொலுமிடத்தில்
திகழ்மாதவன் அந்தணன் முக் கட்சிவானாமூர்த்தி சீர் வாணிகன்
முகநாலுடை யான் அரசனென மொழிந்ததனை முன் மொழிந்தேனே.

சைவ, வைஷ்ணவ இருசமய விளக்க வேள்வி படலத்திலுள்ள இப்பாடல்கள், மும்மூர்த்திகள், தேவர்களின் ஜாதி பூர்வோத்ர வரலாற்றை, சாமவேதத்திலும், மகாபுராணத்திலும், 'கந்தபுராணத்திலும், விவரித்துக் காட்டியிருக்கிற படி தெளிவுபடுத்துகிறது. இப்பாடலின் உட்கருத்தை கவனிக்கவும். முதற்பிரிவில் சிவனை அந்தணர் குலமென்றும், ஸ்ரீ அரியென்னும், விஷ்ணுவை அரசர் (க்ஷத்ரியர்)குலமென்றும், பிர்மாவை (வைஸ்ய) வணிகர் குலமென்றும், தேவேந்திரனைச் சூத்திரகுலமென்றும், தக்ஷப்பிரஜாப்தியின் மகளும் காசிப மகாரிஷியின் பதிமூன்று மனைவிகளில் ஒருத்தியுமாகி அதிதியின் புத்திராராகிய முப்பத்து முக்கோடி தேவர்களை க்ஷத்திரிய குலமென்றும், அசுவினி தேவர்களை சூத்திர குலமென்றும், ஜாதிவகுப்பால் பிரித்துக் காட்டியிருக்கிறது. பிந்தின பிரிவில், ஸ்ரீ அரியை, பிரமாணகுலமென்றும், சிவனை வணிக குலமென்றும் இப்படியாக ஒவ்வொரு தேவர்களும் தனித்தனி ஜாதியைச் சேர்ந்தவர்களென்று வரிசையாய் பிரித்துக் காட்டியிருப்பதைக் காணலாம். ஆனால் ஒரு இடத்தில் ஒரு தேவனைக் குறிப்பிட்டுக் காட்டிய ஜாதியை மாற்றி, மற்றொரு இடத்தில் அதே தேவனை வேறுரு ஜாதியாய்ச் சொல்லுவது பெரும் விபரீதமும், குழப்பமுமாய்த் தெரிகிறது. இதில் எதை உண்மையான ஜாதியென்று ஒத்துக் கொள்வதெனத் தெரியவில்லை.

இதல்லாமல் அந்தந்த குலத்தவர், அந்தந்த குலத்தவர்களையே வணங்கி ஆராதிக்க வேணுமென்பது மற்றெரு மாறாத பிரமாணம். ஆனால் இந்த வகையில் பலர் மீறி, ஒரே குடும்பத்தில் ஒரு சிலர் சிவனையும், மற்றவர் விஷ்ணுவையும் ஆராதிக்கிறார்கள். வேதாந்த விதிமுறைப் படி, இவர்கள் ஆராதிக்கும் தேவனை இன்ன ஜாதியென்று சரியாய் அறிந்து கொள்ளாததால் இப்படிச் சொல்கிறார்கள் எனத் தெரிகிறது.

சிவஞான சித்தியாரின் சுபக்கமென்னும், சைவசித்தாந்த நூலில், தேவர்களின் பூர்வீக ஜாதி வரலாற்றை விவரித்துள்ளதை ஆங்கிலத்திலும் தமிழிலும் பின்வருமாறு கீழே காண்கவும் :-

"சிவன், மேல் குலமக்களென்னும், பிரமாணர் க்ஷத்திரியர்களுக்குத்

தேவன். மேலும் மனு என்பவர் தேவர்களின் ஜாதி வரலாற்றைப் பிரித்துக் கூறும் போது சிவன் பிராமண குலம் என்றும், விஷ்ணு க்ஷத்ரிய குலமென்றும், பிர்மாவை வைஸ்யகுலமென்றும், இந்திரன் சூத்திர குலமென்றும் வகுத்ததுமன்றி, அந்தந்த குலத்தார் அவரவர் குலத்தைக் கொண்ட தேவனையே ஆராதிக்க வேண்டுமென்றும், விதிக்கப்பட்டிருக்கிறது. (முழு விபரமும் மகாபாரதத்தில் காணலாம்.)

இந்து சாஸ்திரப்படி வடதேசத்தில் பாஷையும் ஜாதியும் பிரிந்த காலத்தில், மலையரசன் என்னும் வேடன் ஒருவன் இருந்தானாம். அவன் வம்சத்தில் சிவன் பிறந்து, பதினெட்டு சித்தர்களுடன் தானுமொரு சித்தாயிருந்தாராம். இந்த மலையரசன் மகள் பெயர் சக்தி, சக்தியின் புருஷன் சேஷன் என்பவன். சேஷன் மக்கள் சிவன், பெருமான் என்போர். பெருமான் மகன் பிர்மன் அல்லது பிர்மா, பிர்மாவின் மகன் ஆதித்தன், அவன் மகன் மனுவேம்பன் அவன் மகன் மதந்தன் அவன் மகன் முசுகுந்தன், அவன் மகன் நளன், அவன் மகன் நகுடராயன், அவன் மகன் இந்திரசேனன், அவன் மகன் திசரதன், அவன் மகன் ராமன் அவன் மகன் குசலன், அவன் மகன் வேள்வண்ணன், அவன் மகன் இவ்வண்ணன், அவன் மகன் இசைவல்லியன் அவன் மகன் சேரன், சோழன், பாண்டியன், அரசர்களாய் ஆண்டவர்கள் என்றொரு பிரிவுக் கதையும் உண்டு. இந்தக் கிளை வழியில் பிறந்தவர் சிவன் என்று இது விளங்குகிறது. இதற்கு உதாரணம்.

விருத்தம்

சக்தியின் புருஷன் சேஷன் தாரணியில் மாண்டுபோனான்,
சித்திரு, ராமருத்திரன், திசரதன், தவசுசெய்தான்,
மெத்தவே தபசுசெய்த விதத்தினாற் பொருள் தான்வேறே
செத்திட்டான் குசனால் ராமன் செயமுனி யெழுப்பினானே.

Sivan was the God of the upper classes, Brahaman and Kshatriya, and Manu in mentioning the cast of the Gods, make out that Siva is BRAHAMAN, VISUNU KSHSTRIYA and Brahama, VAISYA and Indra Sudra and their WORSHIP BY THE RESPECTIVE CASTES are recommended:-
Sivagnanasiddhiar Subakkam - Page 48 (Found in Mahabarat).

ஜாதி உற்பவத்தைப் பற்றி பார்க்கையில், ஜாதிப் பிரிவினையை, பிர்மா, தான் பெற்ற நாலு பிள்ளைகள் மூலம் நான்கு ஜாதிகளையும், உண்டாக்கியதாய்த் தெரிகிறது. பிர்மாவின் மகன், மனு, மகாபாரதத்தில் எழுதியுள்ளதை சுபக்கம் 48-ம் பக்கம், விளக்கியிருப்பதும், ஒன்றிற்கொன்று

பொருத்தமில்லாது பெருங்குழப்பமாய்த் தெரிகிறது. ஆகவே இந்தத் தேவர்களெல்லாம் உண்மையான ஆதியந்தமில்லாத அநாதியான அரூபியும், சோதிச் சுயம்பு ஒளியாய் விளங்கும் பராபரவஸ்துவேயானால், மக்கள், சித்தர் முனிவர் ஞானிகளைப் போல் ஜாதி வகுப்பு வாத பிரிவினைக் கூட்டத்தாராய் யிருக்கக் காரணம் ஏதும் இல்லையே! இவர்கள் குடும்ப வரலாற்றின் அட்டவணையும், இவர்களில் காணும் வித்தியாசப்பட்ட ஜாதி குலவேறுபாடும் இவர்களைப் பூர்வத்திலிருந்த நம்மைப் போன்ற மனிதவர்க்கமாக வேறுபடுத்துகிறது. இத்தேவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் வல்லமையுடைய சாட்சாத் பரம்பொருளானால், பிராமண, க்ஷத்ரிய, வைஸ்ய, சூத்திரர், என்ற ஜாதி குலதொடர்பை இவர்களில் காண்பது அவசியமா? இதனால் தான் இதன் உண்மையை விளக்க ஒளவையாரும், மற்றும் ஞானிகளும் இவர்கள் பொய்தேவர்கள் என்று காண்பித்து உணர்த்தினார்கள், அவை பின்வருமாறு :-

ஒளவை

மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் அவன் மனிதன் - சீல முடன்
உற்று உணர்ந்த உகந்த பெரியோர்
கற்று மறிந்தாரில்லை காண்

திருமூலர் விருத்தம்

பலகலைகளோ துவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமாறு சாஸ்திரம்
அலையுடனே தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
அவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேறும்
மலையரசன் சிவன், பிர்மா, விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங் காணா்
நிலைபெருக மோட்சவழி காணுதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே

அகஸ்தியர் பாடல்

முச்சுடரு மொன்றாகு மும்மூர்த்தியல்ல
மூவருமே யாளுருவ மொன்றேயாகும்
அச்சு தாயிவர்களுமே ஆண் பெண்ணல்ல
அரனுமல்ல லிங்கமல்ல அநாதியான
சச்சிதானந்தனையே வணக்கஞ் செய்து

சற்குருவைத் தரிசித்துப் பாதம் போற்றி
எச்சரிக்கை கொண்டு நடவப்பா வப்பா
எண்ணில்லா முத்தி வழி எய்தலாமே

ஞான வெட்டியான் ஜாதி பேத கண்டனையில் :- சிவன், நம்மைப் போல், **சுக்கில சுரோணி**தக் கூறுல் வந்தவர் என்று விளக்குவதைக் கீழே காணவும்.

நல்ல மூலக்கருக் குழியில் நாதமும் விந்தும் - நல்ல
முன்னும் பின்னும் கூட்டியுருவாகி வெளியில் - விந்து
ஓலமுள்ள பாலரமைத் துதித்த பின்பு - ஆண்டே
உங்கள் ஜென்மம் எங்கள் ஜென்மம் வெவ்வேறோ சொல்லும் - பேதம்

ஞாலமுள்ள தேகமெல்லாம் நாத விந்தின் கூறு - பின்னும்
நம்முடைய உம்முடைய தேகம் வேறோ - சொல்லும்
ருத்திரன் ஆல விஷமுண்ட சிவனாருமிந்தக் கூறு - ஆண்டே
ளாதியு மந்தமு மிந்தக் கூறதுவு மாண்டே
உங்களுக்கும் எங்களுக்கும் பேதமாமோ - ஆண்டே
உள்ளுணர்ந்து பார்க்க ஒரு எள்ளளவில்லை.

இப்பாடலின் படி, சிவன் முதலாய தேவர்களும் சுக்கில சுரோணி தத்தால் உண்டான மனிதக்கூறு படைத்தோர் என்று விளங்குகிறது. ஜாதிப்பிரிவினை, இவ்விதமாய் உருவாக்கப்பட்ட தேவர்களாலும், மனிதர்களாலும், உண்டாக்கப்பட்ட வேதாந்த ஆதாரமற்ற, மனித சமுதாயத்தைப் பிளவு படுத்தும் அஞ்ஞான தடை வேலியென்பதை கண்டறிந்த ஞானிகள்; இடை தவறு என்று பெரிதும் கண்டித்து விளக்கியுள்ளதைக் கீழே காண்கவும்.

குதம்பைச் சித்தர் பாடல்

ஆதிப் பரப்பிர்மமாக்கள் மக்காலையில் சாதிகளில்லையேடி
குதம்பாய் சாதிகள் இல்லையேடி
பார்ப்பார்க்கள் மேலென்றும் பறையோர்கள் கீழென்றுஞ்
தீர்ப்பாய்ச் சொல்வதென்ன - குதம்பாய், தீர்ப்பாய் சொல்வதென்ன
பார்ப்பாரைக் கர்த்தர் பறையோரைப் போலவே தீர்ப்பாய் -
படைத்தாரோடி.
குதம்பாய் தீர்ப்பாய் படைத்தாரோடி

பற்பல ஜாதியாய் பாரிற் பகுத்தது கற்பனையாகுமேடி
குதம்பாய் கற்பனையாகுமேடி
சாதி வேறென்றே தரம் பிரிப்போருக்கு சோதி வேறாகு மோடி
குதம்பாய் சாதி வேறாகுமோடி
சாதியொன்றில்லை சமயமொன்றில்லை யென்
யோதி யுணர்ந்தறி நீ குதம்பாய் ஓதி யுணர்ந்தறி நீ
ஆண் சாதி பெண்சாதி யாகுமிருசாதி வீண்சாதி
மற்றதெல்லாங் குதம்பாய் வீண்சாதி மற்றதெல்லாம்.

ஔவை வெண்பா

சாதி யிரண்டொழிய வேறில்லை தாரணியில்
நீதி வழுவா நெறிமுறைமை - மேதினியில்
இட்டார் பெரியோரிடாதாரிழி குலத்தோர்
பட்டாங்கிலுள்ள படி.

கௌதம நாயனார் கவி

சாதியே பெருமையாக சாற்றின பேர்களுக்கு
வாதைகள் மெத்தவுண்டு மறுமையிம்மை யொன்றில்லைச்
சோதியைப் பெருமையாகச் சொல்லிய ஞானிகட்கு
நீதியாம் பெயருமுண்டாம் நிகரில்லா முத்தி சேர்வார்

கடு வெளிச்சித்தர் 33-ம் பாடல்

எவ்வகையான நன்னீதி அவையெல்லாமறிந்தே யெடுத்து நீ போதி
ஒவ்வாதென்றே பல சாதியாவும் ஒன்றென்றறிந்தே யுணர்ந்து நீ போதி

சிவ வாக்கியர் 47-ம் பாடல்

ஜாதியாவதேதடா சலந்திரண்ட நீரெல்லாம்
பூதவாச லொன்றல்லோ பூதமைந்து மொன்றல்லோ
காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன்னொன்றல்லோ
ஜாதி பேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சி தோலெலும்பினு மிலக்கமிட்டிருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியு பகுத்துகப் பாருமும்முளே

திருவள்ளுவர் ஞானவெட்டி 452-ம் பாட்டு

முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்
முதலான யிந்திரர் நாரதர் கின்னரர்
உற்பத்தியாவு நாத விந்தாலே
யுதித்தவாரெல்லா மாதித்தன் குலங்காணும்
அம்புவி யாவும் தேக உயிர்களும்
அண்ட பிண்ட முதலாச்சுதனேகமும்
அண்ட பிண்ட முதலாச்தனேகமும்
தப்பில்லையே பறையம்பிகை தன் குலஞ்
சாம்ப சதாசிவன் தந்தை காணாண்டையே

ஞானவெட்டியாரின் இப்பாடல் திட்டத் தெளிவாய் முப்பத்து முக்கோடி தேவர் முதல் தேவேந்திரன், கின்னரர் முதலான தேவர்கள் யாவரும் சுக்கில சுரோனிதத் தொடர் பாலுருவான மனுப்பிறவிகளான காரணத் தேவர்களே யன்றி பராபர வஸ்து அல்லவென்று விளக்குகிறது.

ஞானவெட்டி ஜாதிபேதக் கண்டனைத் தரு

உங்களுக்கும் எங்களுக்கும் பேதமாமோ - ஆண்டே
உள்ளுணர்ந்து பார்க்கவொரு எள்ளளவில்லை

பாட்டு - 1

அங்கம் அந்தரங்கமனு போகஞ் செயிலாண்டே
அவரவர்க்கு ரதி கேளி வேறேயுண்டோ - விந்து
திங்களுஞ் செய்ரதி கேளியுங்களுக்காண்டே - அது
செகப்பாமோ எங்கள் வித்து கறுப்பாமோ - பின்னு
மங்களஞ் சேரம்புவியிலமைந்த விந்து - புவியில்
மாதர்கருக்குழி தனிலமைந்த விந்து - பிர்ம
இங்கிதமுளை யெழும்ப அங்கமாச்சு - ரண்டும்
எந்தன் வித்தும் தந்தை வித்தும் ஒன்றாய்போச்சே -உங்க

பாட்டு - 2

ஊற்றுக்கால் மாறாத மங்கை ஓடக்கரையில் - நல்ல
உள்ளறிய நாதவிந்து தங்குகையிலும் - மனு
வேற்றுமையாயுங்கள் விந்து பெருத்ததென்ன - பேதம்
விளங்கவுமெங்கள் விந்து சிறுத்ததென்ன - சொல்லும்
மாற்ற தீதமுண்டோ யிந்த ஊத்தைக் குழியில் - வேறு

மனிதர்களோ பிறப்பார் மாதர் குழியில் - உடல்
பார்த்துக் கரையேறினவர் கொன்றே சாதி - ஜெகம்
படைத்த ரட்சகன் சொன்னப் பாதையி தாண்டே - உங்க

பாட்டு - 3

மூலக்கருக்குழியில் நாதமும் விந்தும் - நல்ல
முன்னும் பின்னும் கூடியுருவாகி வெளியில் - விந்து
ஓலமுள்ள பாலரமைந்து தித்த பின்பு - ஆண்டே
உங்கள் சென்மம் எங்கள் சென்மம்
வெவ்வேரூ சொல்லும் - பேதம்
ஞாலமுள்ள தேகமெல்லா நாதவிந்தின் கூறு - பின்னும்
நம்முடைய உம்முடைய தேகம் வேரூ - சொல்லும்
ருத்திரன் ஆலவிஷமுண்ட சிவனாருமிந்தக் கூறு - அரு
ளாதி மந்தமுமிந்தக் கூறதுவுமாண்டே - உங்க

பாட்டு - 19

பள்ளியாடு செம்மறியின் குட்டியாமோ -நல்ல
பசுவை கிடா மருவக்கிடாதரியாமோ -பின்னு
முள்ளமதிலென் குலத்திலுன் குலஞ் சேர்த்தால் - புத்திரன்
உன்னு தொன்றோ என்னுதொன்றோ உணர்வீர் காணும் - இனி
துள்ளுஞ் சேவல் கொக்கைச் சேர அண்டமாமோ - செழும்
நாரைக் கோழியைச் சேர குஞ்சதாமோ - நல்ல
பள்ளப் பாகல் வித்ததுவுஞ் சுரையாமோ -யிந்தப்
பட்சியிலும் பேதா பேதம் தோன்றுமாண்டே - உங்

பாட்டு - 10

எள்ளளவும் பிழையில்லை என்னூல் காணும் - எந்தன்
குருவான அகத்தீசரருள் தான் காணும் - வேறு
கள்ளர்கள் வெவ்வேறு பிரித்துக் கருத்திலெண்ணி ஞானங்
கண்ட, கண்டது சொல்லிக்கலங்கினார் காண் - பின்னுந்
துள்ளித் துள்ளிவாய் பினத்தி துக்கிப்பார் கிலேசஞ் - செய்தி
சொன்னாலுஞ் செவிகேளாது துன்மார்க்கர் காணும் - மாது
வள்ளலெனு நம்பிகைப் பெண் வரத்தால் வந்த - திரு
வள்ளுவ சாம்புவ மூர்த்தி வமிசமாண்டே - உங்க

ஞானவெட்டி கொச்சகம் - 514

கொத்திப் பறப்பிலது கொப்பிலிளம் பாவையிட்டு
பத்தி முளைத் ததுவு மீதி பாவலது மாகு மோதான்
சுத்தியுடன் பூசை செய்யஞ் சுந்தரரே என் மனையின்
சத்தியை நீ சேர்ந்ததனாற் றறியாதோ கற்பமது

பாட்டு 515

இஞ்சியட மஞ்சளுண்டோ ஏலமிட சுக்காமோ
நஞ்சுகந்த எட்டியிலு நல்ல எலுமிச்யையுண்டோ
துஞ்சுபுகழ் பூசை செய்யுஞ் சுந்தரரே என் குலத்தில்
வஞ்சியை நீர் சேர்ந்ததனால் மைந்தன் தரியாதோ

பாட்டு - 516

அம்புவியின் மானதனை யரியவராகம் புணர
கும்பிலுருவாகியதுங், குட்டி யளிக்கு மோதான்
நம்பிறவி யந்தணரே நியாயமுள்ள சுந்திரரே
வம்புரைத்தீ ரென்குலத்தை மருவ வுருவாகாதோ

கவித் துறை 517

குட்டிக் கிடாவும் பசுமேல் மருவக் குறியென்ன காண்
முட்டியெருது உதிப்பதுண்டோ ஜெக மூடர்களே
மட்டிக் கிடாவுக் கும்மாவின் பிறவிக்கும் வாறறிந்தால்
எட்டிக்கனி வந்தெலுமிச்சை யாகுமோ ஈனர்களே

வெண்பா

மச்சமதைக் கூர்மம் மருவிக் கலவி செய்தால்
உச்சிதமாய் நாதவிந்து வுருவாமோ - நிச்சயமாய்
எந்தன் குலத்திலியல் வான வேதியரே
வந்தனைந்தால் விந்து வுருவாகும்.

முல்லை மலர் கொம்புநட்டு முக்காலு நீர் தெளித்தால்
மல்லிகைப் பூவாசம் வருமோ தான் - தொல்லுலகில்
சோதி விந்து நாதந் துளியில் உயிராம் அவர்க்கு
சாதி குல பேதமில்லைத் தான்.

சிவவாக்கியர்

ஆதியான சாதியொன்றனே கனேக ரூபமாய்க்
காதில்வாளி காரைகம்பி சூடகம் பொன்னென்றல்லோ
சாடிபானை மூடிதோண்டி சட்டிமண்ண தொன்றல்லோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே

ஞான சாஸ்திரியார் விருத்தம்

வல்லமையரசர் தொட்டுவரி மையோரளவதாக
எல்லையில்லாத சீவ செந்துக்க லினெங்களெல்லாம்
சொல்லு மெக் குலத்தோர் வாழ்வுஞ் சுக்கிலமொன் றதாமே.

ஞான சாஸ்திரியார் சரணம்

உன்னைப்போல மனுஷனானவன் உன்னுட ரூபஞ்சரியானோ
உன்னைபபோலாத்துமா கொண்டுள்ளவன் என்னமாய்
தீட்டானான் - ஞானப் பெண்ணே

மாட்டைத்தொட்டுத் தலைமுழுகாத நீ மனிதனைத் தொட்டு ஸ்நானஞ் செய்தாய்

மாட்டைப்பார்க்க மனிதனிளப்பமோ மறுமொழி கூறு - ஞானப்பெண்ணே

நாயைத் தொட்டுத் தலைமுழுகாத நீ நரணைத் தொட்டு தலைமுழுக

பேயைக் கும்பிட்ட புத்தியினால் வந்த பேதை புத்தியோ - ஞானப்பெண்ணே

வால்மீகர் சூத்திர ஞானம் 116

நில்லென்ற பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாய் சாஸ்திரங்களிருமூன்றாக
வயிர்பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பது போல் வேதாந்தங்கள்
கட்டினாரவரவர்கள் பாஷையாலே
தொல்லுலகில் நால் ஜாதிய நேஞ்சாதி
தொடுத்தார் களவரவர்கள் பிழைக்கத்தானே

அகஸ்தியர் ஞானம் 6-ல்

பாட்டு - 3

தானென்ற பெரியோர்கள் உலகத்துள்ளே

தாயான பூரணத்தை யறிந்த பின்பு
தேனென்ற வமுதமதைப் பானஞ் செய்து
தெவிட்டாத மவுன சிவ யோகஞ் செய்வார்
ஊனென்ற உடலை நம்பியிருந்த பேர்க்கு
ஒரு நான்கு வேத மென்றும் நூலாரென்றும
நானென்றும், நீதியென்றும் பல ஜாதியென்றும்
நாட்டினார் உலகத்தோர் பிழைக்கத் தானே

பத்திரகிரியார் புலப்பல் 126 - பாடல்

ஆதிக்கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதி வகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம்

ஓர் ஞானியின் விருத்தம்

அச்செல்லாமொன்றே யதிலே யிருவகையாய்
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே - இச்சையிலே
வாழ்ந்துசில பெயரிருக்க வாய்புதைத்து கைகட்டித்
தாழ்ந்து சில பெயரிருக்கத்தான்.

ஒன்றான பராபரவஸ்தான சிருஷ்டிகர்த்தரால், சுக்கில சுரோனித விர்த்தியால் உருவாகி, ஒரே சொரூப சாயலில் காணும் மனிதரைப் பல ஜாதியாய்ப் பிரித்து ஒரு பகுதியினர் உயர் குலத்தவரென சமுதாய சமத்வ மேன்மையுடன் வாழ்ந்து சுகிக்கவும், மற்றும் பகுதியனர் இழிகுலத்தவர் எனத் தாழ்ந்திருக்கவும் செய்தது, தெய்வம் அல்லவென்று, இத்தனை பாடல்களிலும் ஞானிகள் விளக்கி காட்டியிருக்கிறார்கள்.

மக்களின் சரீரத்தோற்றங்களும், ராசதந், தாமதந் சாத்வீகம், என்னும் முக்குணங்களும், கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்னும் ஆறு சுவைகளும் யாவர்க்கும் வேறுபாடின்றி ஒத்திருப்பதால், ஒருவனை பறையோன் என்றும், ஒருவனை மறையோன் என்றும் மனித இனத்தைக் கூறுபோடுவது மாபெரும் தோஷம் ஆகும்.

மாடு, ஆடுகள் சிங்கத்தையும், சிங்கம், மாடு, ஆடுகளையும் கூடி புணர்வதை வெறுப்பது போல், உயர்குலத்தவர், இழி குலத்தவரை கூடிப் புணர இன்பமற்றிருந்தால் அல்லவோ, மனித இனத்தைப் பல ஜாதிகளாய் பகுத்துப் பிரிக்கலாம். இன்றைய அனுபவத்தில், மறையோர் முதல் பறையோர் வரை கல்வித் தேர்ச்சியால், பட்டம், பதவி வகுத்து, ஆட்சி பீடத்திலமர்ந்து குல வித்தியாசம் பாராது குல உயர்வுற்ற கீழ்தர

சிப்பந்தியாயினும், தன்னிலும் உச்ச பதவியில உள்ளவரை அவமதியாது சகல கன்னி மரியாதை செலுத்தி அவருக்கு அடங்கி பணிபுரிந்து, சமத்துவ சேவை செய்வதை நாம் பார்க்கிறோம் அல்லவா?

பலர் கலப்பு மணத்தில் விருப்பமுற்று, பல ஜாதியினரிலும் பெண் கொண்டும், கொடுத்தும், தமிழர், வெள்ளையர், ஜெர்மானியர், ஜப்பானியர், துலுக்கர் என்னும் வித்தியாசமின்றி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுடன், பெருங் குடும்பமும், சந்ததியுமுள்ளவர்களாய், வாழ்வதைப் பார்க்கவில்லையா? இவ்வனுபவத்தை இங்கும், அங்குமாய் இருக்கக் காணும் போது, ''ஆதிக் கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே, சாதிவகை யில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம்'' என்று அங்கலாய்த்துப் புலம்பின பத்திரகிரியின் நோக்கத்தின் எல்லையில் கால் வைத்துள்ளோம் என்பதை மறக்கக் கூடாதே மனித வாழ்க்கையில் சமத்வமின்மையை உண்டாக்கிக் கூறுபோடும் அஞ்ஞானத்தை, அறவே அகற்றி ஒழிக்கத்தானே பிர்மாவின், கூத்தி வயிற்றில் பிறந்த வசிஷ்ட முனிவர் முதல் வேதத்தை முதல் போதித்த போது, தான் முன்மாதிரியை காண்பிக்க அருந்ததி என்னும் : சக்கிலிச்சியையும், அவள் மகன் சாத்திப்பர் பறைச்சியையும், அவள் மகன் பராசர் மீன் வாணிச்சியாகிய செம்படவச்சி, மச்சகெந்தியையும், தங்களுக்கு மனைவிகளாக்கிக் கொண்டு வேதவியாசரையும் பெற்று, சகலமும், வித்தியாசமின்றி ஒருமித்திருக்கவும், புலால் இறைச்சி மச்சவகைகள் புசிக்கவும் பராபர வஸ்து ஒருவரை மாத்திரம் துதித்துப் போற்ற வேண்டு மென்றும் போதித்தது இப்போதனையைத் தானே, முன் சொன்னபடி கபிலரும், அதையே பத்திரகிரியாரும் மற்றும் பல ஞானிகளும், இன்றையவரைக் கண்டித்து, எச்சரித்து வருவதாகவும் மறையோரும் மற்றவர்களும் எத்தனையாய் தங்களை உயர்குலத்தவரென்று, பெரிதும் போற்றிப் பேசினாலும், தீட்டுப் பட்ட ஒருவனை சுத்திகரித்து அவன் தீட்டகற்ற பஞ்சகௌவியமென்னும், பசுவின், மலம், மூத்திரம், பால், மோர், நெய் என்னும் இவ்வைந்துமில்லாது வேறொருவகையிலும், ஒன்றும் செய்யமுடியாதென்பது பொருத்தமான உண்மையல்லவா? இதைத்தானே குருக்கள்மார், தாங்கள் குடியாவிட்டாலும் சுத்திகரிப்பை விரும்புகிறவனுக்குக் குடிக்கக் கொடுக்கிறார்கள். இவ்வைந்தில் பசுவின் மலமும் மூத்திரமும் மாட்டின் தசையிலிருந்து ஊறி, வெளியான கழிவுகள் என்று, அறிந்திருந்தும், அதைக் குடித்தால் தீட்டு நீங்கும் என்று சொன்னால். இவையிரண்டும், ஊறிக்கிடந்த மாட்டின் யிறைச்சி ஏன் மனிதனைச் சுத்திகரியாது அதைத்தின்போன் எப்படி பறையோனும், இழிகுலத்தோனும் ஆவான்? இவையெல்லாம் கூர்ந்து பார்க்கும் போது இது மனிதரின்

பேதமையல்லாது வேறென்றுமில்லை யென்றால் பொய்யாகுமோ?

இத்தனை ஆழ்ந்தக் கருத்துக்களைக் கொண்ட பொருள் அமைந்த பாடல்களைப் பாடின அத்தனை ஞானிகளும் படிப்போர்க்கு தாள, ராக, சங்கீத, இசை, இன்பம் ஊட்டவா, பாடினார்கள் அல்லது மக்களிடம் பரிசுப் பெற்று பசியாற்றப் பாடினார்களா? இல்லை, இல்லை மெய்ஞ்ஞானத்தைப் மக்கள் உள்ளத்தில் வேர்ஊன்றச் செய்து, சகலருக்கும் சமத்வமளிக்கும், சமதர்ம சாஸ்திரத்தை நீடுழி நிலைத்தோங்கச் செய்யவே இப்பாடல்களனைத்தையும் பாடினார்கள். ஆகவே இப்பாடல்களனைத்தும் அஞ்ஞானத்தை அறவே அகற்ற எதிர்த்துப் போராடும் ஞானப் போராயுதங்கள் என்பது பொருத்தமல்லவா? ஜாதி என்பது அவனவன் செய்கர்மத்தால் (தொழிலால்) ஏற்பட்டதேயன்றி பிறவியினால் ஒருவன் உயர்குலமாயும், ஒருவன் இழிகுலமாயும் பிறக்கிறான் என்பதும் சுத்தப் பொய். ஒருவகையிலும் சாதிக்க முடியாத கள்ளக்குருக்களின் வஞ்சிப்பான போதனை என்பதை மறவாதீர்கள். ஆண், பெண் ஆகிய இரு ஜாதியே அன்றி, வேறு பெரிய ஜாதி யென்பதே கிடையாது. அப்படியிருப்பின் ஔவையார் வாக்குப் போல், யாசகர்க்கு தர்மமிட்டுண்ட பேர் மேல்குலத்தவரும், இடாத லோபிகளே இழிகுலத்தவருமாவர், என்பதே உண்மை. சத்திய வேதத்தில் பூமியெங்கும் ஒரே ஜாதியும், ஒரே பாஷையுமிருந்தது என்று சொல்லியிருக்கிறது. மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடவாதலால் அவன் பாஷைகள் பலவாய் மாற்றப்பட்டு, அதனால் பல வகுப்புகள் ஏற்பட்டு, அவன் செய் தொழிலால், ஜாதி என்பது தோன்றியதும் உண்மை. அப்படியே மனுச ஜாதியனைத்தையும் தேவன் ஒரே ரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் சகல எல்லையிலும் குடியிருக்கச் செய்தார் என்று சொல்லியிருக்கிறது. அதாவது, தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆதிமனித சந்ததியிலிருந்து சகல மனித வர்க்கங்களும் உண்டாயிற்றென்பதாம்.

ஆகவே ஞான நூலாகிய சத்திய வேதாமகத்தை ஆராய்ந்து அறிந்து பராபரவஸ்து ஒன்றையே ஆராதித்துப் பணிந்து போற்றி, ஒரே சுரூப சாயலில் காணும் மனிதர்களை இழிவுபடுத்தி ஏளனம் பேசாது, உன்னை போல் பிறனையும் நேசி என்று உபதேசித்த சற்குருவும், உலகரட்கருமான இயேசுவின் ஞானபோதனையின் படி நாமனைவரும் ஒரு சிருஷ்டி கர்த்தாவின் மக்களென்று சமத்துவம்பாராட்டி, ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசிப்பதும் ஒருதாயின் மக்களைப் போல் சகோதர உரிமை பாராட்டுவதும் நம் கடமையாகும். இதுவே மெய்பக்தியின் அறிவின் சிறப்பு.

60

பராபர வஸ்துவின் இலட்சணம்

ஆதிப் பரம்பொருளாகிய பராபரனின் லட்சணம், அவர் தன்மை, குணம், வல்லமை, மகத்துவ மகிமையின்னதென்று திட்டந்தெளிவாய் அறியாத காரணத்தால் மக்கள் அஞ்ஞானம் என்னும் அவபக்தியை, மெய்ஞ்ஞான பக்தி விதிமுறைகளுக்குச் சமமாய்க் கருதி, தங்கள் பக்திக்குரிய ஆராதனை வழிபாடுகளில், எண்ணற்ற தேவர்கள், தேவிமார்கள் என்னும் ஜீவனற்ற பதுமைகளையும் வைத்து வணங்கக் காரணமாயிற்று.

மறுமையின் நித்திய பேரின்ப சந்தோஷ பாக்கியங்களை தங்கள் ஆதாயமாக்கிப் பயன்படுத்திக் கொள்ள ஞானப்பசிதாகங் கொண்டு தேடி அலைந்த பூர்வ ஞானிகள் தங்களின் ஆழ்ந்த சத்திய ஞான நூல் ஆராய்ச்சியின் தெளிவால், பராபரவஸ்துவென்பது, ஆதியந்தமில்லாத,

அரூபியும் திருத்துவ ஞான சோதிச் சுடராயிலங்கும். அநாதி நித்ய ஜீவனும் நாம் காணும் சர்வபடைப்புகளின் சிருஷ்டிகர்த்தாவும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மகத்துவ முத்தொழிற் கர்த்தனும், பரம், புவி, பாதாளமாகிய மூன்றின் ஆட்சிக் கோமானும், ஒப்பு உவமையற்று, தானே தானாய் சர்வ வல்லமையுடைய சர்வ வியாபகராய், சிறியோர்க்கும், பெரியோர்க்கும், ஏகபரம்பொருளாய் காட்சியளிக்கும் தூய்மை நிறைந்த பராபரன் என்று கண்டறிந்தனர். இப்பராபரனையே பரப்பிரம்மம் என்றுங் கூறுவர்.

போகமுனிவர், இந்தப் பராபரவஸ்துவையே பூலோகக் கர்த்தனெனக் கூறி, இவருக்கு பிர்மா, விஷ்ணு, சிவன் என்று மூன்று பெயர் வகுத்து சாஸ்திரங்களிலும், வேதங்களிலும், பல நூல்களிலும் சொல்லியிருக்கிறார்கள் என்கிறார்.

போகர் நூல் 6-ம் காண்டம் பாடல் 624

பாரப்பா பூலோக கர்த்தனுக்கு
பாங்கான மூன்று பெயர் வகுக்கலாச்சு
நேரப்பா ஹரியயனும் பிர்மாவென்று
நெடிதான சாஸ்திரங்கள் கூறலாச்சு
சீரப்பா நாமமது மூன்றுமல்லோ
சிறப்பான கடவுளுக்குப் பேருமாச்சு
நேரப்பா தேசாதி தேசமெல்லாஞ்
செப்பினார் பல நூலுஞ் சொன்னார் தாமே.

இந்து வேதங்களில் இம்மகத்தான சிருஷ்டி கர்த்தனான பரப்பிர்மத்தைப் பற்றி பல விபரீதமான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பரப்பிரமம் எங்கும் நிறைந்தவர் என்றும், உலகத்தின் மாயையென்றும் காணும் எந்த பொருளும் அதின் தோற்றம் என்றும் அவர் இந்த உலகத்தை உண்டாக்கியபின் அதை இரட்சிக்க மும்மூர்த்திகளைப் படைத்தார் என்றும், அந்த மகாத்துமாவை, தியானிப்பதே உயர்ந்த ஞானமென்றும், அந்த மகாத்துமாவை அறிந்து கொள்ள முடியாமையால், மும்மூர்த்திகளையும், முப்பத்து முக்கோடி தேவர்களையும் அக்கினி முதலிய பஞ்ச பூதங்களையும், விக்கிரகங்களையும் நமஸ்கரிக்க வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறது. இப்பராபரவஸ்து ஒன்றே மனிதரின் வணக்கத்திற்குரிய பரம்பொருள் என்று, தெளிவுபடுத்தியிருப்பதை சிவன் பிறப்பின்

வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளவும்.

ஒன்றான பராபரனையும், அவரின் நீதிநியமக் கட்டளைப் பரமாணங்களையும், கைக்கொண்டு ஞான வழியைக் கடைபிடித்து, தூயமனத்துடன் அவரைத் துதித்துப் போற்றி பக்தியில் வளர்ந்து பெருக நாடு, கடல், கடந்து போய், பட்டம், பதவி பெற்று, படித்துப் பயிற்சி பெற வேண்டிய அவசியம் ஒன்றுமில்லையே!

''சிருஷ்டிக்குப் பின் சிருஷ்டிகரைக் கண்டேன்" என்றுரைத்த ஓர் ஞானியின் விளக்கத்தைப் போல், காணக்கிடைக்கும், சகல சிருஷ்டிப்புகளையும் கூர்ந்து பார்க்கையில், மனித அறிவிற்கும், வல்லமைக்கும் அப்பால் தாண்டி நிற்கும் இம்மகத்துவ கிரியைகள், சிருஷ்டிகர்த்தர் ஒருவர் உண்டென்பதை உறுதிப்படுத்துகிறதல்லவா?

வேதங்களில் ''அந்த மகாத்துமாவை அறிந்து கொள்ள முடியாமையால்'' வணக்கத்திற்குத் தகுதியற்ற, தேவர்களையும், பஞ்ச பூதங்களையும், சிருஷ்டிப் பொருள்களையும், சிலைகளையும், வணங்க வழிகாட்டுதல், வேதாந்தத்திற்குப் பொருத்தமான விதிநெறியாகுமா?

மதக்குருக்கள், சூரிய, சந்திர, கிரகண, நாட்களில் தொர்ப்பைப்புல்லைக் கையில் கிள்ளித்தந்து, இதைச் சோற்றுப் பானையிலும், குழம்புச் சட்டியிலும் போடுங்கள், இன்று கிராணமென்றும், சூரியனை, சந்திரனை ராகு, கேது என்னும் பாம்பு விழுங்குகிறதென்றும், போதித்த, போதனைகளும், இக்காலங்களில், கர்பிணிகள், வெற்றிலையைக் கிழிக்கவோ, துணியைத் தைக்கவோ கூடாது, மூளிக்காதுடன், மூளி உதட்டுடன் பிள்ளைகள் பிறக்குமென்று கொண்டிருந்த நம்பிக்கை என்னவாயிற்று?

அதே மறையோர் குடும்பத்தில் பிறந்து, விஞ்ஞான அறிவில் முதிர்ந்து பயிற்சி பெற்ற பின் சந்ததிகளான பலர், தேவர்கள் என்று நம்பி, சாஸ்திரம் கணித்துக் கொண்டிருந்த கிரகங்களாகிய, சந்திரன், சுக்கிரன், செவ்வாய், புதன், மண்டலங்களை, சோதனையிட ராக்கெட், சூத்திரங்களை அனுப்புவதையும் பூமிக்கும், சந்திரனுக்கும் 2,03,800 மைல் இடைவெளி யென்றும், சுக்கிரனுக்கும், பூமிக்கும் 17.5 கோடி மைல் இடைவெளி உண்டு என்பதையும் 'இவை தேவர் அல்ல' இங்கும் மலைகள், ஆறுகள் உள்ள பூமி, இங்கு குடியேற்ற வசதி யுண்டாக்கவேண்டுமென்றும் விஞ்ஞான அறிவாளிகள் கொண்டுள்ள நோக்கத்தை உண்மையென்று, ஒத்துக் கொள்ளவில்லையா?

மனிதன், தன் அறிவுவிருத்தியால் ஆச்சரியப்படத்தக்க அரும் பெரும் சாதனைகளை செய்து காட்டினும் அவற்றைச் சிருஷ்டிப் பொருளினின்று செய்வதே யல்லாது, தான் சுயவல்லமையால் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டாக்கி அதில் நின்று தனக்கு வேண்டியதைச் சாதித்துக் காட்டும் திறமையற்றவனாகவே இருக்கிறான் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளும் உண்மையல்லவா? இதுவும் சிருஷ்டிக்கர்த்தன் ஒருவன் உண்டென்பதை உறுதிப்படுத்துகிறதே!

மனிதன் முதல் சர்வஜீவகோடிகளையும் கண்ணிற்காணும், சர்வ படைப்புகளையும் ஒரு பராபர வஸ்துவென்னும் சிருஷ்டிகர்த்தர் உண்டாக்கினார் என்று விளக்கிக் காட்டக் கூடிய சத்திய ஞான நூல் என்னும் வேதாகமம் ஒன்று தங்களுக்கு இல்லாத காரணத்தால் அல்லவா? தக்ஷப் பிரஜாப்தியின் குமாரத்தியும், காசிப மகாரிஷியின், பதின் மூன்று மனைவிமார்களும், தங்கள் யோனிவாய் வழியாய், கண் காணும் சர்வ படைப்புகளையும்,தேவர்களையும், காற்று, இடி மின்னல், வருஷங்களையும் பெற்றதாகச் சொல்லவும் அதை நம்பவும் காரணமாயிற்று.

சத்திய வேதாகமத்தில், ஆதியாகமம் முதல் மூன்று அதிகாரங்களில், பராபர வஸ்துவென்னும் தேவன் உலகத்தையும் அதில் காணும், மனிதர்களையும், எறும்பு முதல் யானை வரையுள்ள சகல ஜீவகோடிகளையும் உண்டாக்கி, மனிதருடன் நெருங்கி உறவாடிப் பேசி, அவர்களுக்கு கட்டளை விதி நியமங்களைத் தந்தார் என்றும் திட்டந் தெளிவாய் விளக்குகிறதே!

இப்பெரும் மகாத்துமாவின் தன்மை, குணலட்சணங்களையும் மனிதர் பால் அவருக்குள்ள நெருங்கிய அன்பின் ஐக்கியத்தையும் சுயநலச்சிந்தை நிறைந்த உள்ளமுடைய, கள்ளக்குருக்கள் மக்களுக்கு, அவபக்தியென்னும், அஞ்ஞான திரையிட்டு மறைத்து விட்டார்கள், என்பதை தங்கள் ஆராய்ச்சியால் கற்றறிந்து உணர்ந்த ஞானிகள், வணக்கத்திற்குகந்த பராபர வஸ்துவென்னும், தேவன், ஒன்றே, உண்டு, என்று விளக்கிக் காட்டுவதை கீழே காண்கவும்.

ஔவையார் வெண்பா

கூவி அழையுங்கோ, கூப்பிட்டுச் சொல்லுங்கோ
ஆவியுள்ள நாளெல்லாம் மாறப்பரித்துப் - பாவிகாள்
கல்லோ தொழுகிறீர், கர்த்தா வொருவரை
அல்லோ தொழுவதடுக்கும்!

திருவள்ளுவர் குறள் வெண்பா

ஒன்றிற் பிறந்தது ஒரு கோடி சங்கம்
மண்ணிற் பிறந்தார்க்கு வான் பொருள் - ஒன்று உண்டு
ஒன்றாகக் காண்பதே காட்சி போரைந்தும்
வென்றான் தன் வீரமே வீரம்

ஈதலறந்தீவினை விட்டீடு பொருளிஞ்ஞான்று
காதலிருவர் கருத்துத்து - ஆதரவு
பட்டதே யின்பம்பரனை யறிந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

கொங்கணவர்

கடவுளோன் ஒருவனுண்டே வேதமொன்றே
காரண சற்குரு தீட்சைதானு மொன்றே
அடைவுடனே அவர் அருளும் பதவியொன்றே
அம்புவியில் மனுப்பிறவி யான தொன்றே
நடைவழியும் பலமனுவோர்க் கொன்றேயல்லால்
நால்வேத யறுசமய நடக்கைவேறாய்
திடமுடனே தேவர் பலர் உண்டென்போர்கள்
தீ நரகுக் காளாவார் திண்ணந்தானே.

இப்பாடல்களில், ஔவையார் ''கர்த்தா ஒருவரை யல்லோ தொழுவதடுக்கும், கல்லையோ தெழுகிறீர்'' என்றும், திருவள்ளுவர் ''மண்ணிற் பிறந்தார்க்கு வான் பொருள் ஒன்று உண்டு. அதை ஒன்றென்று காண்பதே காட்சி'' என்றும், பஞ்சமா பாதகங்கள் ஐந்தும் தன்னை ஆளவெட்டாது, வெற்றி சிறந்து வாழ்வோன் வீரமே வீரமென்றும் கொங்கணவர், கடவுள் ஒன்று, வேதம் ஒன்று, சற்குருவின் தீட்சை ஒன்று, பராபரன் அருளும் பதவி ஒன்று, சற்குருவின் தீட்சை ஒன்று, பராபரன் அருளும் பதவி ஒன்று, உலகின் மனிதர் யாவரும் ஒன்று, மனிதர் யாவருக்கும் பக்திக்குரிய நடையும், வழியும் ஒன்று, என்றும் இவ்வித மல்லாமல் நாலு வேதங்களும், ஆறு சமயங்களும், அதன் பக்திக்குரிய

நடை வழியும் வெவ்வேறுண்டு என்போரும், அதன் வணக்கத்திற்குரிய தேவர் பலர் உண்டென்போரும், எரிநாகத்திற்கு ஆளாவார்கள். என்பது உண்மையென்றும் சொல்லுவது, வணக்கத்திற்குரிய தேவன் ஒன்றே உண்டு என்பதை, எவ்வளவு திட்டமாய்த் தெளிவு படுத்துகிறதென்று பாருங்கள். வணக்கத்திற்குரிய பரம்பொருள், ஒன்றென விளக்குவதைத் தொடர்ந்து கீழே காண்கவும்.

பத்திர கிரியார் புலம்பல்

பாட்டு - 143

வாசித்தும், காணுமல் வாய் விட்டும் பேசாமல்
பூசித்துந் தோன்றாப் பொருட்காண்ப தெக்காலம்

பாட்டு - 152

அஷ்டாங்க யோகமதற் கப்பாலுக் கப்பாலாய்க்
கிட்டாப் பொருலதனைக் கிட்டுவது மெக்கலாம்.

பட்டிணத்தார் அருட் புலம்பல்

பாட்டு - 57

காட்சிக் கெளியான் காண் கண்டாலுங் காணுன் காண்
மாட்சி மனம் வைத்தோர்க்கு மாணிக்கத் துள்ளொளி காண்

பாட்டு - 63

பேசாப்பிரம்மமடி பேச்சிறந்த பேரொளி காண்
ஆசா பசாங்களணுகாத பேரொளி காண்

பாட்டு - 64

ஒப்புவமையு மற்றோத வரிதாம் பொருள் காண்
யிப்புவியிற் குருவே யென்ன வந்தோன்வழி

பாட்டு - 65

தூருந் தலையுமில்லான் ரேற்ற மொடுக்கமில்லான்
ஆருமறியாமலகண்டமாய் நின்ருண்டி.

பாட்டு - 82

நீரொளி போலெங்கு நிறைத்த நிராமயன் காண்
பாரொளி போலெங்கும் பரந்த பராபரன் காண்

பாட்டு - 83

நூலாலுணர்வறிய நுண்மையினு நுண்மையன் காண்
பாலாறு சர்க்கரை போற் பரந்த பரிபூரணன் காண்

பாட்டு - 115

ஆதியாய் நின்றவ கண்ட பரிபூரணத்தைச்
சாதியாய் நின்றவிடஞ் சார்புற்ருய் நெஞ்சமே

இடைகாட்டுச் சித்தர் - 33

எங்கு நிறைபொருளை பசுவே எண்ணிப் பணிவாயே
தங்கும் பரகதியில் பசுவே சந்ததஞ் சாருவையே

வேத சாஸ்திரியார் வெண்பா

ஆதியந்த மில்லாதான் மாறாதான் சர்வவல்லோன்
ஏது மறிந்தோனளவிலா ஞானன் ஓத
வெங்கு நிறைந்தோன் பரிசுத்தன் கூர்நீதன்
நங்கிருபையான நமலன்

வேத சாஸ்திரியார் ஆசிரியர் விருத்தம்

ஒரு தெய்வ நீயுன் சுவாபமோ தானாயனாதி யாயுடலில்லாமை
ஓங்கும் பிதாச் சுதன் பரிசுத்த ரூபியென்றுனது திரியேக மகிமை
அறியவுன் திருலட்சணத் தாதி யந்தமில்லாதவன் மாருதவ
னனைய சருவத்திற்கும் வல்லவனெல்லா மறிந்த அளவற்ற ஞானன்
பரவியெங்கு நிறைந்தோன் மிக்கசத்தியன் பரிசுத்த நீதி யுடையோன்
பங்கிஷமுங் கிருபையு முள்ளவன் ரெழிலோ படைத்தளித்து வனிப்பவன்

வேத சாஸ்திரியார் வெண்பா

பஞ்சாட் சரமல்ல பஞ்ச கர்த்தாக்களல்ல
பஞ்சாளர் செய் பாழுருவல்ல - வஞ்சகரே
கண்டப் பொருளல்லக் கணங்களல்ல மாக்களல்ல
அண்ட பிண்ட மல்லவனாதி

வேத சாஸ்திரியார் சரணம்

சமய மீராறேறு சாஸ்திரங்கள் வேத நான்கும்
அமையுந் தத்துவம் தொண்ணூற்ருறுமாறுங் கடந்த அமலா
காணப்படா அரூப கருணைச் சுயசுரூப
தோணப்படாவீயாப சுகிர்தத் திருத்தயாப அமலா

மேற்படி சாஸ்திரியாரர் பேரின்ப காதல்

பாட்டு - 39

தோற்ற முடிவற்ற சுயம்பாயஞதியுமாய்
மாற்றமிலாப் பேரொளியாய் வந்த திருவுருவான்

எல்லாமறிந்திருப்போன் னெங்கு நிறைந்திருப்போன்
நல்லார் பொல்லார் கிரிகையாவு நடுத்தீர்ப்போன்

ஞானத்தளவில்லா நன்மை வானோன்
வானத்தமலர் வணங்கி நிற்குமா வேந்தன்

எல்லையில்லா மெஞ்ஞானத்தின்பக் கடல் சறுவ
வல்லமைக்கு மெல்லா மகுத்துவப் பிரகாசன்

அகப்பேய் சித்தர்

இறைவனென்ற தெல்லாம் அகப்பேய் எந்த விதமாகும்
அதையும் நீ கேளாய் அகப்பேய் ஆனந்தமான தடி

குதம்பைச் சித்தர்

எங்கும் நிறைந்தேயிருக்கின்ற சோதியை
அங்கத்துட்காணேடி குதம்பாய் யங்கத்துட் காணேடி
ஆதியுமந்தமுமான வொருவனே
சோதி யாநின்ருனேடி குதம்பாய் சோதியாநின்ருனேடி

சுத்தஞ் சுயம்பு சுகுணஞ் சம்பூரணஞ்
சத்திய முள்ளானேடி குதம்பாய் சததியமுள்ளானேடி
அண்ட முன்ஞகு முன்னாக வனாதியாய்க்
கண்டது பிர்மமேடி குதம்பாய் கண்டது பிர்மமேடி

ஞான சாஸ்திரியார் பராபரன் மாலை

தானேயிருந்தாய் தனக்குவமை யற்றிருந்தாய்
வானேயிருந்தாய் இவ்வையகமெல்லாமிருந்தாய்
கோனேயிருந்தாய் குருவாய் நீ யெந்தனுக்குத்
தேனேயிருந்தாய் தெளிவே பராபரமே

பத்திர கிரியார் புலம்பல்

பாட்டு - 46

கூறறிய நால்வேதங் கூப்பிட்டுங்காணுத
பரம ரகசியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம்

பாட்டு 106

என்னையறிந்து கொண்டே னெங்கோமோ னேடிருக்குந்
தன்மையறிந்து சமைந்திருப்ப தெக்காலம்

பாட்டு 107

ஆராதாரங்கடந்த வானந்தப் போரொளியைப்
பேருகக் கண்டுதயை பெற்றிருப்ப தெக்காலம்

சிவ வாக்கியர்

விண்ணிலுள்ள தேவர்களறி யொணுத மெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே கலந்திருந்த தம்பிரான்
மண்ணில் வாழ்விறப்பறுத்து விண்ணில் வாழ்வைத் தந்தபின்
அண்ணலாரு மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே

எங்கள் தெய்வமுங்கள் தெய்வமென்றிண்டு தெய்வமோ
அங்குமிங்குமாகி நின்ற ஆதிமூல மொன்றல்லோ
அங்குமிங்கு மாகி ரண்டு தெய் மாயிருக்குமோ
வங்கவாரம் பேசுவார்கள் வாய் புழுந்து மாள்வாரே

இப்பாடலில் சிவ வாக்கியர் : - உங்கள் தெய்வம் எங்கள் தெய்வமென்று இரண்டு தெய்வம் உண்டோ. யாவரும் வணங்கத்தக்க தெய்வம், ஆதிமூலம் என்ற ஒரு தெய்வம் அல்லவா. அவ்விதம்

வணக்கத்திற்குரிய தேவர்கள் பலர் என் போர் வாய்புழுத்துச் சாவார்கள் என்கிறாரே.

இடைகாட்டு சித்தர்

ஆதி பகவனையே பசுவேயன்பாய் நினைப்பாயேல்
சோதி பரகதிதான் பசுவே சொந்தமதாகாதோ
அல்லும் பகலும் முற்றும் பசுவே ஆதி பாதந்தேடில்
புல்லுமே மோட்சநிலை, பசுவே பூரணங் காண்பாயே
ஒன்றைப் பிடித்தோர்க்கே பசுவே யுண்மை வசப்படுமே
நின்ற நிலை தனிலே பசுவே நேர்மை யறிவாயே
எல்லாப் பொருட்களையு எண்ணப்படி படைத்த
வல்லாளன் தன்னை வகுத்தறி நீ புல்லறிவே
கட்புலனுக் கெவ்வளவுங் காணுதிருந் தெங்கும்
உட்பலனாய் நின்ற தொன்றையுய்த்தறி நீ புல்லறிவே
அன்னையைப் போல் எவ்வுயிரு அன்புடனே காத்துவரும்
முன்னவனைக் கண்டு முக்தியடை புல்லறிவே

குதம்பைச் சித்தர்

சீவனும் புத்தியுஞ் சித்தமுந் தந்தவன்
தேவனவனாமேடி குதம்பாய் தேவனவனாமேடி
எல்லார்க்கு மேலான ஏகனைப் பற்றிய
வல்லார்க்கு முத்தியேடி குதம்பாய் வல்லார்க்கு முத்தியேடி
நித்திய வஸ்துவை நீக்காது நாடினால்
முத்திதான் சித்திக்குமே குதம்பாய் முத்திதான் சித்திக்குமே
மெய்த்தேவனென்றென்று வேண்டாத பன்மதம்
பொய்த் தேவைபோற்று மேடி குதம்பாய் பொய்த் தேவை

சிவவாக்கியர்

செங்கல்லுங் கருங்கல்லுஞ் சிவந்த சாதி லிங்கமுஞ்
செம்பையுந் துருவையுந் தெய்வமென்று கூறினீர்
உம்பரம் புகுந்தபோது வுமக்குணர் வறிகிலீர்
எம்பரம் புகுந்தநாதர் எங்குமாகி நிற்குமே.

ஞானவெட்டி கொச்சகம் 51ம் பாட்டு

உங்கள் தெய்வ மெங்கள் தெய்வம் உண்டெனவும் வேறு செய்து
அங்கங்கள் வேறுளதாய் ஆகமங்களுற் பவித்தார்
பங்கமதாய் வேறு செய்யும் பாதகரே யங்குமிங்கும்
எங்கெங்குமாய் நிறைந்த ஈசனென்றறிகிலீரே

பராபரன் மாலை 1ம் பங். 13ம் பாட்டு

அண்டமெல்லாங் கொள்ளாது அனைத்திட முந்தாங்காது
மண்டலங்கள் கொள்ளாது வானமுங் கொள்ளா துணைத்தான்
கண்டவுருவிற் கலந்திருப்பா யென்று சொன்னால்
துண்டரிக்கமான பெருந்தோஷம் பராபரனே.

பராபரன் மாலை 2-ம் பங். 23ம் பாட்டு

கண்டதிசை யெட்டும் காணுவெளியுங் கடந்து பர
மண்டலம் யாவையுந் தாண்டியப்பால் நிற்கும் வல்லவனெம்
அண்ட பிரானுமக் கொப்பனை செய்யு மகந்தை யுருப்
பண்டறிவற்றப் பறையர் தொழிலென் பராபரன்.

இந்தப் பாடலில், எட்டு திசையையும், காணும் வெளியையும், கடந்து, பரமண்டலத்தையும் தாண்டி நிற்கும் வல்லமையுள்ள அண்டபிரானுக்கு ஒப்பாய் சிலையுருக்களைச் செய்து வணங்குவது பக்தியறிவற்ற பறையர் தொழில் என்கிறார். அதை உண்மையென்று ஏற்று, இதைக் கைக்கொள்பவர் யார்? நீங்களே சிந்தியுங்கள்.

சிவவாக்கியர்

மிண்டணுய்த் திரிந்த போதிறைத்த நீர்களெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சூழ வந்த தெத்தனை
அண்டர் கோனிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகள்
கண்ட கோயிற் தெய்வமென்று கையெடுப்பதில்லையே.

சங்கராச்சாரியார்

செக வாழ்வை மெய்யென்று நம்ப வேண்டாம்
தேசத்தை பொருளென் றுந்திரிய வேண்டாம்

பகை வாழ்வு சமயமதம் பார்க்க வேண்டாம்
பலகலையைப்பொருளென்று படிக்க வேண்டாம்
மிகையாளப் பூசைகளைச் செய்ய வேண்டாம்.
வேதாந்தத் தோர்கள் மொழி விரும்ப வேண்டாம்
தொகை யேக பராபரத்தை வணங்கி நின்றுற்
சுகமாகப் பரம பதஞ்சுகிக்கலாமே.

அடியற்ற பனை போலே தெண்டனேது
அரகரா வென்ற மொழிக்கர்த்தமேது
பிடிப்பட்ட கள்ளரைப் போல் கும்பிடேது
பேசாமற் பற்பலவாய் பிதற்றலேது
கொடியிட்ட மரத்துக்குச் சுற்றங்கேது
கும்பிட்டுக் கோவிலென்று குறிப்பங்கேது
வடிவற்ற திருவருளை மனதில் வைத்தால்
வன்மையுடன் பரமபதம் வாழ்கலாமே.

இத்தனைப் பாடல்களையும் பாடிய ஞானிகளும், சித்தர்களும் பராபரவஸ்து என்னும் சிருஷ்டி கர்த்தாவாகிய பரம்பொருள் ஒன்றென்றுதானே தங்கள் ஆராய்ச்சியில் கற்றறிந்து உணர்ந்து திட்டந்தெளிவாய் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். பராபரவஸ்து ஒன்றென்பதை ஒருமையில் காட்டியிருக்கிறார்களேயன்றி பன்மைபடுத்தி, மும்மூர்த்திகளும், பஞ்சகர்த்தாக்களும், முப்பத்து முக்கோடி தேவர்களாகிய பல தேவர்கள் வணக்கத்திற்குரிய தேவர்கள் என்று, ஒரு ஞானியாவது ஒரு சித்தனாவது ஒப்புக் கொள்ளவில்லையே! இந்த உண்மையின் விளக்கத்தை இன்னும் கீழே காண்கவும்.

சிவவாக்கியர்

அரியுமல்ல, அயனுமல்ல அரனுமல்ல வப்புறங்
கருமை செம்மை வெண்மையுங் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணு மாணுமல்லவே
அரியதாகி நின்ற நேர்மை யாவர் காணவல்லரே

வேறு ஞானி

முச்சுடராகி யொன்றாய் முடிந்ததோர் சோதி பாதம்
அச்சுதனயனுங் காணுவ கண்ட மாயளவில்லாத
சச்சிதானந்த ஞான சதாசிவ குருவைப் பாட
மெய்ச் சுடருதயமான விளக்கொளி யுண்மை சேர்வோம்.

திருமூலர் விருத்தம்

ஆறறிவார்களெங்களையர் பெருமையை
ஆறறிவார்களவரகலமு நீளமும்
பாரறியாத பரஞ்சட ரொன்றுண்டு
வேறறியாதே விளம்புகின்றோமே.

குதம்பைச் சித்தர்

தேவருஞ் சித்தருந்தேடு முதல்வர்
மூவருமாவாரோடி குதம்பாய் மூவருமாவாரோடி

இப்பாடலில் தேவருஞ் சித்தரும் தேடும் ஏகபராபரவஸ்துவாகிய தேவன், மும்மூர்த்திகளுமாவாரோடி குதம்பாய் என்கிறார். இதனால் மும்மூர்த்திகள் தேவர்கள் அல்லவென்பதும், **அதற்கு முந்தின பாடல்களிலும் மும்மூர்த்திகள் தேவர்கள்** அல்லவென்றே விளக்குகிறதும் உண்மையல்லவா?

சிவ வாக்கியர்

தேவர் தேவரென்று நின்று தேடுகின்ற மூடர்காள்
தேவர் யாவரென்றறிந்து தேடவுமறகிலீர்
மூவர் தேவரென்று நீர் மொழிந்ததென்ன நியாயமோ
தேமவதாகவும்முளே விரித்துணர்ந்து கொள்ளுமே.

கழுதை கட்டியோ மஞ்செய்தாற் கழுதையன்னமாகுமோ
பழுது கற்ற மாந்தர் கேளும் பரமசிவன் கர்த்தனோ
முழுதுமான ஞான ரூப மூர்த்தி நின்ற தப்புற
மெழுது மாதியந்தமு மிதயமுங் கடந்ததே

அகஸ்தியர் ஞானம் 56

அண்டரண்டங் கடந்து நின்ற சோதி தானு
மவனி தனிலுடைந்த கல்லில மருமோ சொல்
எண்டிசையு மெவ்வுயிருமான சோதி
ஈன மரங் கல்லுகளிலிருப்பாரோ தான்
தொண்டர்களே யுங்களுக் கேனிந்த வார்த்தை
சொன்னவர்க்குங் கேட்டவர்க்குஞ் சொர்க்கமில்லை
மண்டலத்தில் சற்குருவை வணங்கி நின்றால்
மாறாத பெருவாழ்வு வாழலாமே.

சிவ வாக்கியர்

சாவதான தத்துவச் சடங்கு செய்யு மூடர்காள்
தேவர் கல்லுமாவரோ சிரிப்பதன்றி யென் சொல்வேன்
மூவராலு மறியொணுத முற்றொழிற் பகாப் பொருள்
காவலாகவு முளே கலந்திருப்பதுண்மையே

செங்கல்லுங் கருங்கல்லுஞ் சிவந்த சாதி லிங்கமும்
செம்பையுந் துருவையுந் தெய்வமென்று கூறுநீர்
உம்பரம் புகுந்த போது வுமக்குணர்வறிகிலீர்
எம்பரம் புகுந்த நாதர் எங்குமாகி நிற்குமே.

சங்கராச்சாரியார் உடலறி விளக்கம் 67

வட்டமதி யிரவிதனைப் பூசிப் போரும்
மண்ணை லிங்கமாக வைத்துப் பூசிப்போரும்
சுட்டவுரு மரச்சிலைகள் பூசிப்போரும்
தூயசெம்புக் கல்லுருவைப் பூசிப்போரும்
திட்டமுடன் எட்டெழுத்துப் பொருளென்போரும்
சிறந்து வெழுத்தைந்துமே பொருளென்போரும்
விட்ட விடந்தனை யறியாமிவர் தாமெல்லாம்
விஷ்ணு வென்றுஞ் சிவனென்றும் விளம்புவாரே.

கடவுளந்தாதி கலித்துறை பாட்டு - 10

சற்குருவென்னும் பொருளைந் தெழுத்துஞ் சடாட்சரமுஞ்
சொற்குருவென்னுந் திருவெட்டெழுத்துஞ் சுழியுமன்று

கற்குரு செம்புக் களிம்புக்குப் பூசனை காட்டுகின்ற
மற்குரு மற்றக் குருவென்று சொல்லவும் வாயில்லையே.

சிவ வாக்கியர்

ஒருவனோரிரும்பு கொண்டுரு தறித்து வைத்ததில்
பெரிய பாவை பேசுமே அறிவிலாத பேதைகாள்
காரியமாலு அயனுமின்னுங் காணொத கடவுளை
உரிமையாகவும் முளே உணர்ந்துணர்ந்து கொள்ளுமே

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கு மன்பர்காள்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மல்ல காணுமப் பொருள்
அஞ்செழுத்தை நெஞ்சழுத்தியவ் வெழுத்தறிந்த பின்
அஞ்செழுத்து நின்ற வண்ணமானதே சிவாயமே.

அஞ்சு மஞ்சு மஞ்சுளே யநாதியான தஞ்சுளே
பிஞ்சு, பிஞ்சுப் போகுதே பிதற்றுகின்ற பித்தர்காள்
பஞ்ச பாதகருரைத்த பாழ்வழியைத் தேடுறீர்
அஞ்சுமில்லை யாறுமில்லை யநாதியான தொன்றுமே.

அஞ்செழுத்துயிருமல்ல அரிசிவன் பிர்மனல்ல
விஞ்சிய சக்தியோடு விந்துடனாதமல்ல
தஞ்சமாஞ் சிவனுமல்ல சாரூபந்தானுமல்ல
அஞ்செலாம் பரமசோதியப் புறங் கடந்தவாறே

அண்ணலாம் பரமசோதி யற்புத மறியாதாலே
கண்ணிலே கண்ட தெல்லாங் கதிதருங் கடவுளென்று
மண்ணுளோர் வணங்கினார்கள் வான் முறைப்படி யிதென்ன
எண்ணியே நடந்து மோட்சமிழந் தெரிநரகில் வீழ்வார்.

வாசகர்களே! இத்தனைப் பாடலிலும் பராபரவஸ்து ஒன்றென்பதை உறுதிபடுத்தி, பலதேவர்களை நம்பி வணங்குவோர்க்கும், போதிப்

போர்கும் முக்திப் பதவி கிடையாது. பல தேவர் உண்டென்போர் வாய் புழுத்துச் சாவார்கள் என்றும், எரிநரகில் பங்கடைவார்கள் என்றும், பலதேவர்கள் உண்டெனப் போதிப்போர் பாதகர்கள் என்றும், வஞ்சகர்கள் என்றும், கள்ளக் குருக்கள் என்றும் இத்தனை ஞானிகளும், சித்தர்களும், பட்டபகல் ஒளிபோல், திட்டந்தெளிவாய் விளக்கிக் காட்டியிருக்க, இவையனைத்தையும், கற்றுணர்ந்து அறிந்த பின்னும், பராபர வஸ்து ஒன்றைத் தவிர மற்றெந்த தேவனையும், தேவியையும் சிரங்குனிந்து கைகூப்பி, மனமகிழ்ந்து வணங்கி வழிபட என்ன நியாயமுண்டு? என்பதை நீங்களேயறிந்து கொள்ளுங்கள். ஒரு வேளை அவ்விதம் வணங்கினாலும் பக்தி செலுத்தினோர்க்கு முக்தி பதவியளிக்க, அது மெய்யான தேவனாயிராத காரணத்தால், தனக்கொரு சுய வல்லமையில்லையே என்பதை அறிவாரில்லையே. அது பராபரவஸ்து வல்லாததால் நம் போல் ஒத்த பூர்வ மனிதர்கள் என்றல்லவா இந்த ஞானிகளின் விளக்கவுரை யாவும், தெளிவுண்டாக்குகிறது. இதுவன்றி இந்த பராபரவஸ்துவின், ஒப்புவமையற்ற மகத்வ லட்சணங்களை கீழே காண்கவும்.

பேரின்ப மணி மாலை விருத்தம்

அந்தர வான் கதி புவனம் கீழ் மேலெங்கு
மடுக்கடுக்காய் நிறுத்தினவன் ஆர் என்றெண்ணிச்
சிந்தையிலே உணராமல் புவியிலுள்ள
சிலையதனைச் சுயம்புலிங்க தேவனென்று
புத்தியற்று பல பல பூவெடுத்து நித்தம்
பூசை செய்து பலவிதமாய் புகழ்வதெல்லாம்
எந்தை பராபரன் தனக்கிங்கேற்கு மோதான்
எரிநரகப் பேய்க்கிணங்கு மென்பதாமே.

குதம்பைச் சித்தர்

மெய் தேவனொன்றென்று வேண்டாதபன் மதம்
பொய்த் தேவைப் மோற்றுமேடி குதம்பாய் பொய்த் தேவை

அகஸ்தியர் ஞானம் 30-ல் 26-ம் பாட்டு

ஓடுகின்ற வகைகளெல்லாம் உரைத்துப் போட்டேன்
உலகுதனில் மார்க்கமெல்லாம் உவந்து சொன்னேன்
தேடுகின்ற புராணமெல்லாம் பொய்யே என்றேன்.
சிவன் பிர்மா, விஷ்ணுவெல்லாம் பேயே என்றேன்

ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசத்தி யென்றேன்
அஞ்ஞானம் பண்ணுகின்ற அகந்தை யென்றேன்
பாடுகின்ற முப்பத்துக்குள் அடக்கிப்போட்டேன்
பரமகுரு சொன்னபடி பாடினேனே.

பாட்டு - 25

உரைத்திட்டேன் என்று சொல்லி சித்தரெல்லாம்
ஒட்டாரமாகவென்னை கோபிப்பார்கள்
மறைத்திட்ட பெரியோரு முலக்த்தோரும்
மயங்குவார் என்னையுமே வசையாய்ச் சொல்வார்
குரைத்திட்டே யுறைத்த யிந்த நூலைத் தானே
கூசாமற் சொல்லிவிட்டேன் கிழிக்கப் பார்ப்பார்
அரைத்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்து
அவர்களுக்குங் காண்பிப்பாய் யறியத்தானே

பாட்டு - 24

அண்டாமலிருப்பதென்ன வென்று கேட்டால்
ஐயையோ சிவன் காற்று அகஸ்தியாவென்னும்
ஒன்றான மார்க்கமதை விரித்துக் காட்டி
உலகமதிலின் நூலை விரிக்கச் செய்து
தண்டாமற் பொதியமாமலையிலென்னை
தாபித்துத் தயங்காமலிருக்கச் சொல்லி
ஒன்றான பரப்பிரமஞ் சொன்னார் சொன்னார்
ஓகோ, கோ, புலத்தியனே உரைத்திட்டேனே.

அகஸ்தியர் 6-ல் பாட்டு - 4

உத்தராந் தனிப்படியே புராணங்கட்டி
யுலகத்தில் பாரதம் போற் கதையுண்டாக்கி
கர்த்தாவை யின்னதென்று காணொட்டாமற்
கபட நாடகமாக வேதஞ் சேர்த்து
சித்தாக வழியாக சேர்ந்தோர்க்கெல்லாஞ்
சதியுடனே வெகுதர்க்கும் பொருள் போற்பாடி
பத்தாசை வைப்பதற்கு ஒப்பனையுஞ் செய்து
பாடினார் சாத்திரத்தைப் பாடினாரே

திருமூலர் விருத்தம்

பல கலைகளோதுவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமாறு சாஸ்திரம்
அலையுட னேயஞ் செலுத்து வெளியுந்தானு
மவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்

மலையரசன் சிவன் பிர்மா விஷ்ணு தானும்
மாசில்லாத நாதருட வழியுங் காணுர்
நிலைபெருக மோட்ச வழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே

பல வேதாந்திகளும், ஞானிகளும், சாஸ்திரிகளும், தங்கள் காவியச் செய்யுட்களில், ஒன்றான, பராபர வஸ்துவின் தன்மை லட்சணங்களை பலவாய் வர்ணித்திருப்பதை இப்பிரிவுகளில் காண்கவும்.

தேம்பாவணி பாடல்

ஈறில நன்மை நிறைவுமோர் குறை முற்றின்மையுந்
தொழத் தகுந் தெய்வ
மாநிலவியல்பே பெரியதாய்க் கிளைத்துவரும்
பல சினையென நூலோர்
ஆறிலக்கணங்க ளுரைத்தவையுள்
ளோணுண்டகையிலா லெனென்றார்

தாறிழ சுடரை மைவரிந்தன் னசாற்று தும்புன் சொலாலவையே

பொருளாவது :- யாவரும் வணங்கத்தக்க மெய்க் கடவுளின் மாருக் குணலட்சணம், மட்டின்றி எல்லா நன்மை நிறைவுடையோனும், முற்றும் ஓர் குறைவுமில்லாதவனுமேயாம். இவற்றை ஆதாரமாய்க் கொண்டு நூல்களிற் பல கொம்புகளையுண்டாக்கி மெய்யான தேவனையறிய ஆறு லட்சணங்களை விவரித்து அவற்றில் ஒன்று குறைந்தாலும் அவன் தேவன் அல்லவென்றார். எண்ணற்ற கதிருள்ள சூரியனை மையாலெழுதினாற் போல், தேவனின் ஆதி லட்சணங்களை சொல்லிக் காட்டுவேன் என்பது.

பராபர வஸ்துவின் ஆறு லட்சணம்

1. சுயம்பு 2. அநாதி 3. அரூபி 4. அதிகுணன் 5. சர்வவியாபி 6. ஆதி என்பதாம்.

தன் வயத்தனால் முதலிலனாதல்
தரும் பொறி உருவிலானதல்
மன் வயத்தெல்லா நலமுளனாதல்
வயின்றொம் வியா பகனாதல்
பின் வயத்தின்றி ஒழுங்குடனனைத்தும்
பிறப்பித்தல் காரணனாதல்
பொன் வயத்தொளிர் வான் முதலெல்லாவுலகும்
போற்றுமெய் யிறைமையினிலையே

பொருள் : - 1. தானே யாவும் செய்ய வல்லோன். 2. தானே முதல்வனாயிருப்போன். 3. ஐம்பொறிக் கொண்ட உருவில்லாதவன் 4. நிலைபெற்றச் சகல நன்மைகளையுமுடையவனாதல் 5. சர்வ வியாபகனாதல் 6. தானே தானாய் சர்வத்தையும் படைத்த ஆதி காரணனாயிருத்தல் ஆகிய இவ் ஆறு லட்சணங்கள், பொன்னொளி வீசும் வானுலகு முதலெவ்வுலகுக்கும் வணங்கத் தகும் மெய்க் கடவுளின் தேவ தத்துவமென்பதாம்.

சிலர் பராபர வஸ்து எட்டு லட்சணம்

பொருந்தியவர் என்றும் சொல்வர், அதன் விபரம். பின் வருமாறு :-

1. அளவில்லாத ஞானம் 2. அளவில்லாத காட்சி. 3. அளவில்லாத

வீரியம் 4. அளவில்லாத இன்பம். 5. நாமமின்மை 6. கோத்திரமின்மை 7. ஆயுளின்மை 8. இடையூரின்மை என்பதாம்.

இதற்கு உதாரணம் நிகண்டு 12-ம் தொகுதி 75-ம் பாட்டு

கடையில்லா ஞானத்தோடு காட்சி வீரியமேயின்ப
மிடையூறு நாமவின்மை விதித்த கோத்திரங்களின்மை
அடையுறு வாயுவின்மை, யனந்தராயங்களின்மை
உடையவன் யாவன் மற்றி வுலகினுக் கிறைவனுமே.

தெய்வ லட்சணத்திற்குப் பொருந்தாத எட்டு குற்றங்கள் பின்வருமாறு :-

1. ஞான வரணியம் என்ற அறிவு மறைப்பு
2. தெரிசனுவரணியம் என்ற தரிசனை மறைப்பு
3. வேதநீயம் என்ற வேதனையுடைமை.
4. மோகநீயம் என்ற மோகமுடைமை.
5. ஆயுள் அல்லது வயதுடமை
6. நாமமுடமை என்னும் பெயரினை யுடைத்தாயிருத்தல்.
7. கோத்திரமுடைமை என்னும் கோத்திர தொடர் போடிருத்தல்.
8. அந்தராயமுடைமை என்னும் விக்கினமுடைத்தாயிருத்தல்,

ஆகிய அஷ்ட்ட குற்றங்களுமாம். தேவர்கள் என்னப்படுவோரால், இவற்றில் ஒரு குற்றங் காணப்பட்டாலும், அதைத் தேவனென்று வணங்கி தொழ எவ்வகையிலும், யோக்கியத்தை இல்லை என்பதே இதன் விளக்கம்.

சிலர் தேவன் பத்து லட்சணம் பொருந்தியவரென்றும் சொல்வர். இதுவரை பராபரவஸ்து ஒன்றே யென்றும், அது மும்மூர்த்திகளோ பஞ்ச கர்த்தாக்களோ, முப்பத்து முக்கோடி தேவர்களோ அல்லவென்றும் சித்தர்கள், ஞானிகள், தங்கள் பாடல்களில், விளக்கி காட்டினதுமன்றி, பராபர வஸ்துவின் லட்சணங்கள், ஆறு என்றும், எட்டு என்றும், தெய்வ லட்சணத்துக்கும் பொருந்தாத எட்டு குற்றங்கள் உண்டு என்றும் இவற்றில் ஒன்று குற்றமாய்க் காணினும் அதை தேவனென்று, தொழ தகுதியற்றதென விளக்கி காட்டியிருப்பதால், இம்மட்டாய். முன் பிரிவுகளில் விரிவும், தெளிவுமாய் விவரித்துக் காட்டியுள்ள தேவர்கள்,

தேவிமார்களின் பிறப்பு, அவர்களின் கிரியைகள், தன்மை, லட்சணங்களில், பராபர வஸ்துவுக்குச் சமமான தேவர்கள் யாரென்பதை வாசகர்களே அறிந்துணர்ந்து தீர்ப்பிட்டுக் கொள்ளவும். இந்த தேவர்களின் பிறப்பும் உற்பவ வரலாறும் கோத்திரத் தொடர்பும், குலம், ஜாதி, என்னும் மாறு பாடான பிரிவினையும், இவர்கள் ஜீவியத்தில் காணும் தெய்வலட்சணத்திற்கு முற்றும் பொருத்தமற்ற, காம விகார, மோக இச்சைகள், லீலைகளும், துர்க்கிரியைகளும், மனிதர்களைப் போல் ஒருதேவன் மேல், இன்னொரு தேவன், கோபாக்கினை சுவாலைபோல் வீசச்சினந்து, பாய்ந்து தலையைக் கொய்து, கொலை புரிவதும், ஒருவரை ஒருவர், ஆகாயத்தில் தூக்கி எறிந்து, உதைப்பதும் அடிப்பதும், தங்கள் கை ஆயுதங்களாகிய, வில், அம்பு, வேல், சூலாயுதம் தண்டாயுதம் சக்கராயுதம், வாள் முதலானவைகளுடன் தேரில் ஏறி, ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்க்களத்தில் நின்று ஒருவரை ஒருவர் துண்டித்துப் போர்புரிந்து, வெற்றி தோல்வியடைவதும், தங்களால் சிருஷ்டித்துக் காக்கப்பட்டு வரும் மனிதர்களிட்ட சாபத்துக்குள்ளாகி தங்களை விடுவித்துக் கொள்ளும் வகை காணது, சாபமிட்டோரைக் கெஞ்சி பஞ்சரித்து, சாப விமோசனம் பெற்றதும். தனக்கு வந்த இருக்கனில் அரக்கர்களை ஜெயிக்க காட்டு மிருகங்களின் உதவியைத் தேடி, ஓடுவதும், மனிதர்களிலும் காணக்கூடாத பல இழிவும், இலச்சையுமான பல துர்ச்செய்கைகளையும் செய்த காரணத்தால் எட்டு லட்சணங்களில் ஒன்றேனுமில்லாத அஷ்ட குற்றங்களுக்கும் உட்பட்டவர்களும் பராபர வஸ்துவிற்குச் சமமான வணக்கத்திற்குரிய தேவர்கள் அல்ல வென்றால், பராபர வஸ்து ஒன்றையே, பணிந்து, போற்றி தொழுது சேவிப்பதே நீதியான பக்தி, சிலர் அரசாங்கத்தில் செய்து வழங்கிவரும் நாணயங்களுக்கு ஒப்பாய், கள்ளப் பணங்களைக் கருக்கட்டி உருவாக்கி, செலாவணியாக்கி இலகுவில் பணம் குவித்துக் குபேரனாகி, வாழ்வதைப் பார்த்திருக்கிறோமல்லவா? ஆனால் அரசினர் இவர்களின் மோசடிச் செயலைக் கேள்விப்பட்டதும், வலையிட்டு அரிப்பதுபோல் இரக்கங் காட்டாது சேர்த்துப் பிடித்துக் கட்டி, விலங்கிட்டு, விசாரணை மண்டபத்திலேற்றித் தீர்ப்பிட்டுத் தண்டிப்பதையும் பார்க்கிறோம் அல்லவா? இந்த உண்மை காட்சியைப் போல், படைப்பின்

சிருஷ்டிகர்த்தாவான பராபரன் ஒருவர் இருக்க, அரசின் நீதிக்குமாறாய் கசடர் கள்ளப் பணம் உருவாக்குமாப்போல், கள்ளக் குருக்கள், கருக்கூட்டி, பலவகை உலோகங்களிலும், காகிதங்களிலும் பேச்சற்ற பல செல்லாத் தேவர்களை உண்டாக்கி சிருஷ்டிகரைத் தொழவிடாமல் சிருஷ்டிப்புக்களைத் தொழ வழி காட்டினால், இவ்வித சொற் குருக்கள் பிழைப்பின் மார்க்கமாக்கிச் செய்த இவர்களின், வன்செயலைப் பார்த்துக் கொண்டிருக்கும் பரமன் கடைசி நாட்களில் இவர்களை தேவநியாயத் தீர்ப்பில் நிறுத்தி எரி நரகில் தள்ளி தண்டிப்பார் என்பது மாறாத உண்மையாகும்.

இந்தப் பராபர வஸ்துவானவர், நாமரூப கோத்திரத் தொடர்பற்றவரானாலும், பல காரணப் பெயரால் பக்தர்கள் வணங்கி வருகிறார்கள். அவையாவன : ஈசன், ஈஸ்வரன், கர்த்தன், ஆண்டவன், சிருஷ்டி கர்த்தன், கடவுள், தேவன், பராபரன் என்பவைகள்.

தேவனுக்கும் மனிதனுக்கும், வணக்க வழிபாடுகளில் நெருங்கிய உறவு ஏற்பட்டு தம் பக்தர்களாகிய தம் அடியார்களுக்கு விவரிக்கவொண்ணாத தம் மகிமைப் பிரஸ்தாபத்தை தம் கிரியைகளின் மூலம், வெளிப்படுத்திக் காட்சியளித்த போது உம்முடைய நாமம் என்ன என்று கேட்டதற்கு, தேவன் தாமே சொன்ன மறுமொழியை சத்திய வேதாகமத்திலிருந்து, கீழ்க்கண்டவாறு பார்க்கவும்.

''மோசே தேவனை நோக்கி.................'' அவருடைய நாமம் என்னவென்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால் நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்கு தேவன், 'இருக்கிறவராக இருக்கிறேன்'', என்று மேசேயுடனே சொல்லி, ''இருக்கிறேன்'' என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார் என்று யாத்திராகமம் 3:13, 14-ல் சொல்லப்பட்டிருக் கிறது.

பின்னும், அவர் நாமம் : ''அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு,'' என்று (ஏசாயா 9 : 6) லும்.

நித்திய வாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் என்று (ஏசாயா 57:15)லும் ''இருக்கிற

வரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நான் அல்பாவும் ஒமேகாவும் என்றும் "ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று (வெளிப்படுத்துதல் 1:8)லும் "நான் அல்பாவும் ஓமேகாவும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்." (வெளிப்படுத்துதல் 1 : 11) லும் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னும், "நான் நானே கர்த்தர் என்னையல்லாமல் ரட்சகர் இல்லை" என்றும் "நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன் என்றும், நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும், சிருஷ்டிகரும், உங்கள் ராஜாவுமானவர் என்றும் (ஏசாயா 43 : 11, 13, 15ல்) சொல்லியிருக்கிறது.

"நான் கர்த்தர், இது என் நாமம், என் மகிமையை வேறொருவனுக்கும் என் துதியை விக்கிரங்களுக்கும் கொடேன்" என்று (ஏசாயா 42:8)லும் சொல்லியிருக்கிறது. இவையனைத்தும் ஏகபராபர வஸ்துவாகிய தேவன், தம் பக்தர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டிய தம்முடைய உன்னத நாமங்களாகும்.

ராஜ நீதியையறிந்த குடிமக்கள், தீர்வை செலுத்தாவிடில் தப்பாமற் தண்டனைக்குள்ளாவது போல், சிருஷ்டி கர்த்தராகிய பரம்பொருள் ஒன்று உண்டு என்று அறிந்த பின் தொழுது ஆராதிக்காது விட்டால், முடிவில் அவரின் நீதியான நியாயத் தீர்ப்பிற்கும், நித்திய நரக தண்டனைக்கும் தப்பிக் கொள்ள எவ்விதத்திலும் முடியாது என்பதை உணர்ந்து, பராபர வஸ்துவின் திருவாய்மொழியால் மனித ஜாதிகளுக்குப் பகிர்ந்தளித்த சத்திய ஞான நூல் என்னும் சத்திய வேதாகமத்தைக் கற்றறிந்து உணர்ந்து, மெய் பக்தியைக் கடைப்பிடித்து பராபர வஸ்துவாகிய உன்னதமான தேவனை தொழுது ஆராதித்தால் பேரின்ப முக்தியடையலாம்.

எம்மதத்தைச் சார்ந்தவராயிருந்தாலும், கல், மரம் பஞ்ச உலோகங்களிலும், காகிதத்திலும் உருவங்களை உண்டு பண்ணி பராபர வஸ்துவுக்கு ஒப்பனையாக வைத்து வணங்கி ஆராதிப்போர், மெய்ஞ்ஞானமார்க்க வேதாந்த விதிமுறைப்படி, அஞ்ஞான மார்க்க வழிபாடுகளை ஆதரிக்கும் அஞ்ஞானிகளேயாவார்கள். இவ்வனுக்கிரக வேளையில் இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது ஆராய்ச்சியினால், அஞ்ஞானத்தையும் அவபக்தியையும் தள்ளி மெய்ஞ்ஞானத்தைத் தழுவி ஆதரித்து பக்தியை பூரணப்படுத்தி முக்தி சேருங்கள். ❖

61

சற்குருவின் லட்சணம்

முந்தின பிரிவில் சொற்குருக்களென்னும், பொய்க்குருக்கள், ஒன்றான பராபரவஸ்துவாகிய பரம்பொருளை மக்களுக்கு முற்றும் மறைத்து மனித குலத்திற்கு அவர் விதித்த பக்தி வழிபாட்டின், நெறிமுறைகளைத் தங்கள் சுயநல வாழ்க்கையை நிவிர்த்தி செய்யும் நோக்கமாய் மாறாட்டமாய்ப் போதித்து மெய்பக்தி வழிபாட்டை பெரிதும் பிளவு படுத்தி சிதைத்துள்ள யாவைய்யும் தெளிவாய் விளக்கியிருக்கிறது.

அன்னையும், பிதாவும் முன்னெறி தெய்வம் என்ற ஆதிப்பழஞ்சொற்படி பக்தியுள்ளம் படைத்த மக்கள், தம் பெற்றோரை கண் கண்ட தெய்வமாய்ப் பெரிதும் போற்றி இன்று வரை வணங்குவது நம் தேசப்பழக்கம். மாதா, தான் பெற்ற மக்களுக்கு, அதன் சொந்தப் பிதாவைக் காட்டி விளக்குகிறாள். பிதா, தன் பொறுப்பின்படி மக்களை குருவிடம் விட்டு கல்வி அறிவு புகட்டி, குருவும் இப்பிள்ளைகளுக்கு

சிருஷ்டி கர்த்தனான தேவன் ஒருவர் உண்டென விளக்கிக் காட்டி அவரை வழிபடும் விதிமுறைகளைத் தெளியச் சொல்லுகிறார். குரு உபதேசமில்லாது ஒருவன் ஞான மார்க்கமாகிய மெய்ப்பக்தியைக் கற்றுக் கொள்வது கூடாத காரியம். இதன் உண்மையை விளக்கும் கவி.

நீதி சிந்தாமணி விருத்தம்

மூப்பில்லாக் குமரி வாழ்க்கை முனையில்லான் படைத்தசேனை
காப்பிலானந்த வானங்கடைபோகா நிறைந்தவேரி
கோப்பிலான் கொண்ட கூத்து குருவிலான் படித்த ஞானம்
ஆப்பிலாச் சகடை போலேயலையுவார் புவியின்மீதே.

பொருள் :- மங்கைப் பருவமடையாதவள் குடும்ப வாழ்க்கையும், தலைவனில்லாப் போர்ப்படையும், மேகமில்லா வானமும், கரை புரண்டு நிரம்பாத ஏரியும், பொருள் விளக்கஞ் சொல்லாதான் கூத்தும், குருவினுபதேசமில்லான் கற்ற ஞானமும், கடையாணியில்லாத சக்கரத்தையுடைய வண்டிபோல உலகில் அலைச்சற்படும் என்பதாம். இது பெரும் உண்மையல்லவா? முன்னறிந்த ஞானிகளாகிய சித்தர் முனிவர்கள் என்னும் போகர், வால்மீகர், அகஸ்தியர், திருமூலர், கொங்கணவர், பட்டினத்தார், சிவ வாக்கியர், நமசிவாயர், சங்கராச்சாரியார், பத்திரகிரியார், இடைகாட்டார், கடுவெளியார், கருவூரார், குதம்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய் சித்தர், அழுகணிச்சித்தர், திருவள்ளுவர், ஔவையார் இன்னும் பல ஞானிகளும், மெய்ஞ்ஞானத்தையே தங்கள் இம்மைக்குரிய நித்திய சொத்தாய் சகலத்தையும் வெறுத்துத் தேடி, ஓடி பல சமய நூல்களையும் நாலு வேதம், ஆறு சாஸ்திர தத்துவங்களையும், பல புராண காவியங்களையும் ஆராய்ந்து பார்த்து, மெய் பொருளைக் காணாது திகைத்துக் கலங்கி, அங்கலாய்த்து, அவைகளிற்கண்ட தப்பறைகைள விளக்கிக்காட்டி இந்த சொற்குருக்களைக் கண்டித்து மெய்யான சற்குரு யார்? என்பதையும் அவர் தன்மை லட்சணங்களை தெளிவுப்படுத்துவதையும் பின்வரும் பகுதிகளில் அறிந்து கொள்ளவும்.

நாதாந்த சாரத்தின் விளக்கம்

சாதி குரு சமயகுரு வென்றுசொல்லித்
தானுலகிற் திரிவார்க்குத் தவங்களேது

வாது கற்ற நூல்கள் கற்றுத் திரிவதல்லால்
வன்பிறவியறுவதற்கு வகையங்கேது
நீதியென்னுந் தவமறியார் நிலையுங்காணார்
நிலையில்லாக் குருக்களுக்கு நிலையங்கேது
சோதியென்னுங்குருநாதன் தன்னையன்றி
தொற்புவியுற் குருக்ளென்று சொல்லொண்ணாதே

பொருள் :- இச்சொற்குருக்கள் சாதியையும் சமயத்தையும் சார்ந்து கொண்டு வாயளவில் வீண்தர்க்கம் பேசிப்போற்றும் ஞானவொளியும், வழிமில்லா நிலையில்லா குருக்களாகும். சோதி என்னும் குருநாதனை யன்றி மற்றவரைக் குருக்களென்று சொல்லக்கூடாதென்பதாம்.

பின்னும் இந்தப் பரம சற்குருவருளால் அஞ்ஞானக்கடல் கடந்து, அருள் ஒளி வீசும். மெய்ஞ்ஞானத்தைக் கண்டடைய அங்கலாய்த்துத் தேடின சில ஞானிகளின் அனுபவத்தைக் கீழே காண்கவும்.

பட்டினத்தார்

குரு மார்க்கமில்லாக் குருடருடன் கூடி
கரு மார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேன

பொருள் :- சோதி என்னுங் குருநாதனாகிய தேவனின் ஞான போதனையற்ற மனக்குருடருடன் கூடி கரு மார்க்கமென்னும் ஜீவனில்லா பதுமைகளை வணங்கும் அஞ்ஞான மார்க்கத்துள்ளே என் கருத்தழிந்து கெட்டேன் என்பதாம். ஞானிகள் எவ்வளவாய் அஞ்ஞானத்தை விளக்கித் தெளிவுபடுத்தினாலும் இவ்வகை வணக்க வழிபாடுகள் நாடு, நகரம், கிராமங்களிலுள்ள மக்கள் உள்ளத்திலிருந்து ஒழிந்து ஓய்ந்ததா? மெய்ஞ்ஞானத் துதி, தோத்திரத் தொழுகை மக்கள் வழிபாட்டில் தழைத்துத் துளிர்த்திருக்கிறதா? இல்லையே!

தாயுமானவர் புலம்பல்

ஏதுந் தெரியாதெனை மறைத்தவள் அருளே
நாதா எனக்கு ஒரு ஞான விளக்கில்லையோ?

இவரும் பட்டினத்தடிகளைப் போல் முன் கூறியது போல், பற்பல காவிய நூல்களைப் பார்த்துப் படித்து ஞானவொளி பெறும் வகைகாணாததால், பரம்பொருளை மனக்கண்களால் நோக்கிப் பார்த்து,

நாதா எனக்கு ஒரு ஞான விளக்கில்லையோ, என்று அங்கலாய்த்தார். எவ்விதமாய் ஞான மார்க்கத்தை விளக்கிக் காட்டினும், வாழ்க்கை மயக்கத்தால், தங்கள் அநித்தியமான வீடுகளுக்கு, மின்சார ஒளி வீசும் விளக்கும், அதிலும் மிக்கப் பிரயாசப்படுவாரேயன்றி தங்கள் ஆத்துமா மறுமையில் பேரின்ப நித்திய சந்தோஷ பாக்கியங்களை அனுபவிக்க வேண்டுமென்பதைக் கொஞ்சமும் உணராது தங்கள் ஆத்துமாவுக்கு ஞான வெளிச்சமில்லையே, எனத் துக்கித்து தேடாது இருப்பது பெரும் பரிதாபமே.

பட்டினத்தார்

குருநெறியறிந்து வாழ்வோர் கோடியிலொருவராவர்
பொருள் நெறியறிந்து வாழ்வோர் பூதலத்தொருவராவர்
பரநெறியறிந்து சார்வோர் பார்த்ததுங் கேட்டதில்லை

என்று பட்டினத்தார் சொன்னபடி மெய்ஞ்ஞானத்தைத் தேடுவோர் மிகச் சிலரேயாவார். இவர்களை மற்றவர் கண்டால், பழிப்பர், பரியாசிப்பர், நகைப்பர், மிகுதியும் வெறுப்பர். இது பெரும் உண்மை, அனுபவம், பட்டினத்தார் காலத்தில் மக்கள் மெய்ப்பக்தியைப் பற்றி ஆராய்ச்சியின்றி, சிறத்தையற்றிருந்ததால் இப்படிச் சொல்லியிருக்கிறார். இக்காலத்தில் இன்னும் பரிதாபமான நிலையில் தெய்வ உறவற்றிருப்பதை எங்கும் காணலாம்.

பத்திரகிரியார் புலம்பல்

அற்பு சரீரமிது ஆவியொடுங்குமுன்னே
சற்குருவைப்போற்றி தவம்புரிவதெக்காலம்

பத்திரகிரியாரும், நிலையில்லா அநித்திய சரீரத்தில் உள்ள ஆத்துமா பிரியுமுன்னே சற்குருவென்னும் பராபர வஸ்துவைப் போற்றி ஆராதித்து தவம் புரிவது எப்போது என்று அங்கலாய்க்கிறார். இவர்கள் சற்குருவின் ஞான உபதேசத்தையும் அவர் அருளால் முத்தியையும் பெற ஆவலாய்த் தேடின ஞானிகள். அநாதியான தேவன். ஆதியில் உலகத்தையும் அதிலுள்ள சர்வத்தையும் உண்டாக்கி பின் ஆதி மனிதரையும் படைத்து, அவர்கள் கைக்கொள்ள விதிப் பிரமாணங்களையும் தந்தார். அவர்கள் தேவக்கட்டளையை மீறி பாவிகளாய்ப் போனார்கள். அவர்களையும் அவர்களால் விர்த்தியாக்கப்பட்ட மனித சந்ததிகள் அனைத்தையும் பாவமும் மரணமும் ஆண்டுகொண்டதால் இவர்களுக்கு சற்குருவாய் ஞான

உபதேசம் அளித்து, இரட்சிக்க ஒரு மீட்பரை மனித அவதாரத்தில் அனுப்பச் சித்தங்கொண்டு பராபரன் தாமே வாக்களித்தார்.

இந்த அவதாரம் பகிரங்கமாய் உலகத்தில் வருவதற்கிடையில் அந்த அவதாரத்தின் முன் குறிச்சாயலாக, மனிதர் கைக்கொண்டு நடக்க பராபரன் தாமே பத்து கற்பனையாகிய கட்டளைப் பிரமாணங்களைத் தந்து சில காணிக்கைப் பலிகளையும் நிறைவேற்றும்படி தமது பக்தர்களுக்கு கட்டளையிட்டார்.

இந்த அவதாரம் சற்குருவாய் பூவுலகில் வருவதற்குச் சுமார் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்தே பராபரன் பல காலங்களில் தம் பக்தர்களுக்கு இந்த அவதாரத்தின் உற்பவ வரலாற்றையும் ஞான உபதேச திருப்பணி விடையின் விபரங்களையும், பாவிகளை மீட்க பலியாகி, மரித்து, பின் உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறிப்போய் மறுபடியும் வந்து உலகத்தை அழித்து மரித்தோராகிய பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் நியாயத்தீர்ப்பிட்டு, நீதிமான்களுக்கு மோட்சமும், பாவிகளுக்கு நித்திய நரகாக்கினையளிப்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவைகளனைத்தையும் இச்சிறு நூலில் விவரிக்க இடமில்லையாதால், சத்திய ஞானநூலாகிய பரிசுத்த வேதாகமத்தை வாங்கி அறிந்து கொள்ளவும்.

இந்த அவதாரத்தின் வருகையைப் பற்றி முன்னுரையாய் பக்தர்களும் தேவனின் சுரூபியான தேவதூதர்களும் பராபரன் கட்டளை வெளிப்பாட்டின்படி உரைத்த சில குறிப்புகளை கீழே காண்கவும். கி.மு. சுமார் 742 வருஷங்களுக்கு முன் ஏசாயா ஆகமம் 7 : 14ல் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் என்றும்.

கி.மு. சுமார் 740 வருஷங்களுக்கு முன் ஏசாயா 9 : 6ல் தமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன் நித்தியபிதா, சமாதான பிரபு எனப்படும் என்றும் சொல்லியிருக்கிறார். சுருபியான தேவதூதன் மத்தேயு 1 : 21ல் சொன்னது..... அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது. பரிசுத்த ஆவியினாலே (பரமாத்மாவில்) உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் தமது

ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றும்,

லூக்கா 1 : 30-35ல் தேவதூதன்.....மரியாளே பயப்படாதே...... நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, அவர் பெரியவராய் இருப்பார். உன்னதமானவர். குமாரன் எனப்படுவார்..... என்றான்...... மரியாள் இது எப்படி ஆகும் புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன்....... பரிசுத்த ஆவி (பரமாத்துமா) உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறப்பது பரிசுத்தமுள்ளது. தேவ குமாரன் எனப்படும் என்றும்,

இந்த அவதாரம் உதித்து செய்யப் போகிற திருப்பணி விடையைப் பற்றி சுமார், கி.மு. 698 வருஷங்களுக்கு முன் ஏசாயா 61 : 1ல் கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார். சிறுமைபட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார் என்றும்

அவர் தியாக பலியாவதை சுமார் கி.மு. 712 வருஷங்களுக்கு முன் ஏசாயா 53 : 5ல் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது, அவர் தழும்புகளால் குணமாகிறோம் என்றும்,

அவதாரத்திலேற்படும் மரணத்தைப் பற்றி முன் அறிவிப்பு சுமார் கி.மு. 712ல் ஏசாயா 53 : 12ல் அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து..... பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார் என்றும்,

அவரின் உயிர்த்தெழுதலின் முன்னறிவிப்பு சுமார் கி.மு. 1023ம் வருஷத்தில், சங்கீத ஆகமம் 16 : 10ல் 'என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உமது பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்' என்றும்,

அவர் பரத்துக்கு ஏறும் முன்னறிவிப்பு சுமார் கி.மு. 1023ல் 'தேவரீர் உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களை சிறையாக்கிக் கொண்டு போனீர்' என்றும் அதன் நிறைவேறுதல் அப்போஸ்தலர் 1 : 9ல் இவைகளை அவர் சொன்ன பின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது என்றும் எழுதியிருக்கிறது.

இந்த அவதாரத்தையே சற்குருவென்று, தங்கள் ஆராய்ச்சியில் கண்டறிந்த ஞானிகள் பலர் தம் பாடல்களில் வெளிப்படுத்தியிருப்பதைக் கீழே காணவும்.

கடவுளந்தாதி 10ல், 25ம் பாடல் கலித்துறை

சற்குரு வென்னும் பொருளைந் தெழுத்துஞ் சடாட்சரமுஞ்
சொற்குரு வென்று திருவெட்டெழுத்துஞ் சுழியுமன்று
கற்குரு செம்புக் களிம்புக்குப் பூசனை காட்டுகின்ற
மற்குரு மற்ற குருவென்று சொல்லவும் வாயிலையே

– சற்குரு என்பது ஐந்தெழுத்தாகிய நமசிவாய என்பதோ, ஓம் சரவண பவா என்பதோ அல்ல, சொற்குருவும் அல்ல, செம்பில் களிம்பேரிய சிலைக்கு பூசைகாட்டும் கற்குரு, மண்குருவை, சற்குரு வென்னும் மற்ற குருவுக்கு ஒப்பாக்க வாயில்லையே என்பதாம். இவை யாவும் சற்குருவென அழைக்கத் தகுதியற்றது என்பது பொருத்தமான அர்த்தம். இந்த சற்குருவின் அவதாரத்தைப் பற்றி பின்னும் சொல்வதைக் கீழே காண்கவும்.

தாயுமானவர் – பராபரக்கண்ணி

பந்த மெல்லாந் தீரப் பரஞ்சோதி நீ குருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே.

உலகத்தின் பந்த பாசங்களெனும் ஆசாபாசங்களாகிய பஞ்சமா பாவங்கள் யாவுந்தீர, பரம சோதியாகிய நீ குருவாய் வந்து உலகில் அவதரித்ததை மறக்கமாட்டேன், பராபரனே! என்கிறார் தாயுமானவர். இதனால் முன் சொன்ன இயேசு என்னும் அவதாரமே உலகத்தில் சற்குருவாய் வந்ததென்பதை இது உறுதிப்படுத்துகிறது. இவர்தான் முன் விவரித்தபடி, நாதா! எனக்கு ஒரு ஞான விளக்கில்லையோ? என அங்கலாய்த்தவர், பின்னும் சற்குரு மானிடனானதைக் குறித்து,

தத்துவக்களி மடலில் சொல்வது

மானிடமாய் வந்த திருமேனியின் தன்மையுணரார்
சேராவருளே வடிவென்றறியாதவர்.

பொருள் :- மனித அவதாரத்தில் வந்த பரிசுத்தரின் தன்மை

லட்சணங்களை அறிந்து கொள்ளாதவர்கள் மனிதன் கிட்டிச் சேரமுடியாத பரம்பொருளே அந்த அவதாரமென்று அறிந்துக் கொள்ள முடியாதவர்கள் என்பதாம். பின்னும் இந்த அவதாரத்தை விளக்கும் பாடல்.

பாம்பாட்டிச் சித்தர்

அருவாயு முருவாயு மாதியாயு
மந்தமாயு மொளிவாயு ஆகமமாயு
திருவாயுங் குருவாயுஞ் சீவனாயும்
செறிந்த வஸ்துவைப் போற்றியாடு பாம்பே.

காய நிலை யழிகையைக் கண்டு கொண்ட பின்
கற்பநிலை யுள்ளிற் கொண்டெக் காலமும் வாழும்
தூயநிலை கண்ட பரிசுத்த குருவின்
துணையடித் தொழுது நின்றாடாய் பாம்பே.

கற்பகாலங் கடந்தாதி கர்த்தாவோடுங்
கடமழியாது வாழுங் காரணக்குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல் செய்து
பூரண சிந்தை யோடாய் பாம்பே.

இம்மூன்று பாடல்களும் முன்கூறிய அவதார குருவையே குறித்துக் காட்டுகிறது.

கௌதமர் விருத்தம்

சற்குருவின் பெருமை தனை யுலகு தன்னிற்
தானறியச் சாற்றுகிறோஞ் சார்ந்து கேளுஞ்
சற்குருவாய் எவ்வுயிர்க்குந் தானே தானாய்ச்
சகல சீவான் மாவின் குருவுமாகிச்

சற்குருவே பேரொளியாய் நின்ற சோதி
தாரணியில் மானிடத்தின் சட்டை சாத்திச்
சொற் குருக்கள் தங்களுக்குஞ் சீடன் போலாய்ப்
புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே.

ஆதியந்த மில்லாத காலந்தன்னில்
அநாதியாய் நின்றது தான் பரமென்றாகும்
ஆதியந்தம் படைத்த பரன் மனுவோர்க்காக
அறியாத குருவென வந்தாண்டதாகும்

ஓதியயோர் காரணங்கள் விளைந்தவாறும்
உபசே வுண்மைதனை யுரைக்கக் கேளீர்
போதகதி யுன்னதமே புரக்கும் ஞானம்
புவிதனிலே நாமுமக்குப் போதித்தோமே.

இவ்விரண்டில் முந்தின பாடலில், சகல ஜீவான்மாவுக்குங் குருவானவரும், பேரொளிப் பிரகாசமாய் நின்ற சோதியாகிய, சற்குருவே மனிதவதார சட்டைக்குள் மறைந்து வந்து பொன், பொருள் சம்பாதிக்கும் குருக்களுக்கு ஞான உபதேசம் சொன்னாரென்றும் மறுபாட்டில், ஆதியந்தமில்லாத பரமன் மனிதர்களுக்காக, மனிதர் அறிந்து கொள்ளக்கூடாத வகையில் குருவாய் அவதரித்து ஞான உபதேசம் போதித்தார் என்றும் அந்த சற்குருவின், மனித அவதாரத்தில் வந்த லட்சணங்களை விளக்கிக் காட்டுகிறது.

திருவாசகம் 32

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான் - மாலேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்பம் மிகும்.

பொருள் :- மூவரென்னும், பிரம்மா, விஷ்ணு, சிவனும், முப்பத்து முக்கோடி தேவர்களும், மற்றுள்ள சில்லறைத் தேவர்களும் கண்டிராத சிவபெருமான் என்னும், மோட்சத்திற்கதிபனாகிய, பராபரன், பூவுலகில் மனித அவதாரத்தில் வந்துதித்த வரலாற்றைத் தியானிக்க, உள்ளத்திலிருந்து பேரானந்தம் பொங்கி வழியும் என்பதாம். சிவஞான சித்தியார் எழுதிய சுபக்கம் 32ம் பக்கம் பார்க்கவும். இப்பாடல் திருவாசகத்தில் உள்ளது. இப்பாடல், பராபரமாகிய பரம் பொருள் மனித அவதாரத்தில் உலகத்தில் சற்குருவாய் வந்தார் என்னும் உண்மையை, எவ்வளவு தெளிவாய் விளக்குகிறதென்பதைக் கவனிக்கவும்.

மற்றொரு ஞானியின் விருத்தம்

முச்சுடராகி யொன்றாய் முடிந்ததோர் சோதிபாதம்
அச்சுதனய னுங்காணாவ கண்ட மாயளவில்லாத
சச்சிதானந்த ஞான சதாசிவக் குருவைப் பாட
மெய் சுடருதயமான விளக்கொளி யுன்மை சேர்வோம்.

இப்பாடலிலும் இந்த அவதாரமாய் வந்த சற்குருவை, விஷ்ணு, பிரம்மாவுங் காணாத மூன்று சுடராகி, ஒன்றாகி நிற்கும் மெய்சுடர் உதயமான துண்மை என்றும் அந்த ஞான விளக்கொளியைச் சேர்வோம் என்றும் சொல்லியிருக்கிறது.

சிவ வாக்கியர்

சாவதான தத்துவச் சடங்கறுக்கும் மூடர்காள்
தேவர் கல்லுமாவரோ சிரிப்பதன்றி யென் சொல்வேன்
மூவராலு மறி யொணாத முக்கணன் முதற்கொழுந்து
காவலாகியும் முளே கலந்திருப்பர் காணுமே.

இப்பாடலிலும் மும்மூர்த்திகளாலும் அறியக் கூடாத மூன்று தத்துவங்களையுடைய ஆதிபராபரன் உனக்குள்ளே காவலாய் இருக்கிறார். அவரைக் கண்டு கொள் என்று, அந்த சற்குரு அவதாரத்தையே சொல்லுகிறது. மீளவுஞ் சிவ வாக்கியர் சொல்வது :-

அட்சரம நாதியல்ல ஆத்துமாவ நாதியல்ல
புக்கி நின்ற பூதமும் புலன்களும் நாதியல்ல
தத்துவ மநாதியல்ல சதாசிவ மநாதியல்ல
தற்பரத்தி னூடுதித்த சற்குருவநாதியே.

இப்பாடலில் 5 எழுத்து 8 எழுத்தென்னும் எழுத்துக்கள் ஆத்துமா, பஞ்ச பூதங்கள், தொண்ணூற்றாறு தத்துவங்கள், சதாசிவன் முதலானவர்களும் மற்றுள்ள எந்த வஸ்துக்களில் ஒன்றாகிலும். அநாதி வஸ்துக்களல்ல வென்றும், அவ்வித அநாதி வஸ்து ஒன்றைப் பற்றி சொல்வதானால், தற்பரமாகிய பராபரத்திலிருந்து உதித்து பரலோகத்திலிருந்திறங்கி பூலோகத்திற்குக் குருவாய் வந்த சற்குருவான ஒருவரே அநாதியான தேவனென்று சொல்லலாமென்கிறார். சிவவாக்கியரும் இந்த அவதாரத்தை விவரித்து மிகத் தெளிவாய் தம் பாடலில் தற்பரத்தினூடுதித்த சற்குருவநாதி என்கிறார். அதாவது இந்த அவதாரம்

அநாதியென்றும் பராபரனிலிருந்து உதித்து வந்ததென்றும் இவரே சற்குருவென்றும் விளக்குகிறது.

பத்திரகிரியார் பாடல் 118

அருவாகி உருவாகி ஆதியந்தமாகி நின்ற
குருவாகி வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம்.

இந்தப் பாடலில் ரூபமில்லாமலும், ரூபத்திலும், ஆதி அந்தமாகி நிற்கும் சற்குருவாகி, உலகில் வந்து என்னையாட்கொண்டு பக்தியில் நடத்தி அருள் அளிப்பது எப்போது என்கிறார், ஞானிகளில் பலர், பராபரன் மனித அவதாரத்தில் உலகத்தில் வரப்போவதைத் திட்டமாய் அறிந்ததால் தான் இப்படிப் பாடினார்கள். இதுவும் அந்த சற்குரு அவதாரத்தைக் குறிப்பதே.

இம்மட்டாய் எல்லா ஞானிகளும் விவரித்துக் காட்டியுள்ள படியேயும், இதற்கு முன் தேவனுடைய பக்தர்கள் இந்த அவதாரத்தின் வருகையைப் பற்றி முன்னுரையாய் தம் பக்தர் மூலம் வெளிப்படுத்தியுள்ள படியேயும் குறித்த காலத்தில் பராபரவஸ்துவாகிய தேவன் பரிசுத்த ஆவியென்னும், பரமாத்மாவை முன்னுரைத்திருந்த படியே ஒரு (மரியாள் என்னும்) கன்னிகையின் கர்ப்பில் அமரச் செய்து, குறித்த காலத்தில் முன் வெளிப்படுத்தியிருந்தபடியே, குழந்தையாய் பிறந்து, இயேசு கிறிஸ்து என்னும் பெயரால் வளர்ந்து கிராமங்கள் தோறும் சுற்றி நடந்து ஞான உபதேசமளித்து முப்பத்து மூன்றரை வருஷம் சுமார் இவ்வுலகத்தில் மெய்ஞ்ஞான உபதேசத்திருப்பணியை நிறைவேற்றி, பராபரன் ஒன்றெனப் போதித்து உணர்த்திக் காட்டி பாவிகள் பாவவிமோசனம் அடையும், ஞான மார்க்க விதி முறைகளையும், நீதிப்பிரமாணங்களையும், உலக முடிவையும் அதன்பின் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீதிமான்களுக்குள்ள பேரின்ப மோட்ச பாக்கியங்களையும், பாவிகளுக்குள்ள நியாயத் தீர்ப்பையும், நரக தண்டனையையும் தெளிவாய் போதித்தார்.

மனிதரில் பலர் தங்கள் அறியாமையால் அவரைத் தேவ அவதாரம் என்று உணராமல், அவரின் மெய்ஞ்ஞான உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாது, தூஷித்து, நிந்தித்து, பழித்து, உபத்திரவித்து, பலவித வாதைக்குட்படுத்தி, தலையில் முட்கிரீடமிட்டு, விலாவில் ஈட்டியால் குத்தி, முதுகில் வாரினால் அடித்து, உதிரம் ஒழுகிப் பிரண்டோட, நியாயவிதிக்குள்ளாக்கி, மரணத் தீர்ப்பிட்டும், அவர்கள் அறியாமையின் செய்கையை அவர்களுக்கு மன்னித்து, சிலுவையில் மூன்று ஆணிகளில்

அறையப்பட்டு, உலகத்தின் பாவம் போக்கும் நித்திய பலியாகி பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று ஜீவனை விட்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, முன் வெளிப்படுத்தியிருந்தபடியே, மூன்றாம் நாள் உயிரோடெழுந்து நாற்பது நாளளவும் தாம் உயிரோடிருப்பவராய் காட்சியளித்து தம்முடைய சீஷர்கள் கூடியிருக்கையில் முன் குறித்திருந்தபடியே அவர்கள், 'பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக, ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது'.

இந்த உண்மையை விளக்கி சிவவாக்கியர் சொன்ன கவி

சோதியாதியாகி நின்ற சுத்தரூப வித்து வந்துப்
போதியாத போதகத்தைப் போதிக்கின்ற பூரணர்
வீதியாக ஓடிவந்து வீணை தண்டினூடு போய்
ஆதிநாத நாதனென்றனந்த காலமுள்ளதே

சிவவாக்கியரின் இப்பாடல், இந்த அவதாரத்தில் வந்த சற்குருவாகிய இயேசுவை, ஆதியிற் சோதியாய் நின்ற துாய பரிசுத்த வித்தென்றும், அவர் அவதாரத்தில் வந்து தெருக்கள் தோறும் போய் ஒருவரும் போதியாத மா உன்னத ஞான உபதேசத்தைப் போதித்த பூரணர் என்றும் இவர் பரலோகத்திற்குப்போய் ஆதிமுதலாய் உள்ள பராபர வஸ்துவாகிய பராபரனாய் நித்திய காலமாய் உள்ளவர் என்கிறார். இதற்கு ஒப்பனையாக பட்டணத்துப் பிள்ளையின் கலித்துறை.

ஓங்காரமான விரிகையிலே ஒரு வித்து வந்து
பாங்காய் முளைத்ததும் பாரறியார் பதினாலுலகம்
நீங்காமல் நீங்கி நிறைந்து நிறையுருவாய்
ஆங்காரமானவர்க் கெட்டாக்கனியோன்ற மைந்தது.

பரலோகத்திலிருந்து ஒரு வித்தென்னும் அவதாரம் சற்குருவென்னும் சகல பரம லட்சணங்களுடன் உலகில் வந்துதித்து ஞான உபதேசமளித்தது. இவர்தான் அந்த சற்குருவென்று உலகத்தார் அறிந்து கொள்ளவில்லை. ஆயினும், வாய், மதம்பேசி வீண்வார்த்தையாடும் ஆங்கார உள்ளம் படைத்தோர்க்கு எட்டாத கனியாய், சர்வ உலகமும் அறிய நிறைவாய் நிறைந்து அமைந்து இருக்கிறது என்று பட்டினத்தாரும் சொல்லியிருக்கிறார். இந்தப் பாடலில் உள்ளபடி சற்குருவாய் அவதாரத்தில் வந்த இந்த இயேசுவை, சர்வ தேசங்களிலும் ஏற்றுக்கொண்டு, அவரின் ஞானபோதனைகளை

கைக்கொண்டு தங்கள் பாவ விமோசன பரிகாரியும், இரட்சகருமாய் போற்றித்துதித்தாலும், இன்று வரை இன்னும் பல தேசங்களிலும் நாடு, நகரங்கள், பட்டணங்கள், கிராமங்களிலும் பல மாறாட்டமான வகையில் பொருள் படுத்திக்கொண்டு, இந்த சற்குருவாகிய இயேசுவை விசுவாசித்து, ஏற்றுத் துதித்து சேவிப்பதில் பின் தங்குகிறார்கள். ஆழ்ந்த ஞானநூல் ஆராய்ச்சியில்லாமையே இதற்குக் காரணம். இந்த பரம சற்குருவாகிய இயேசுவைக் குறித்து அகஸ்தியர் சொல்வதைக் கீழே காண்கவும் :-

முச்சுடரு மொன்றாகும் மும்மூர்த்தியல்ல
மூவருமே ஆளுருவ மொன்றேயாகும்
அச்சுதாயிவர்களுமே ஆண்பெண்ணல்ல
அரனுமல்லலிங்கமல்ல அனாதியான
சச்சிதானந்தனையே வணக்கஞ்செய்து
சற்குருவைத் தரிசித்துப் பாதம்போற்றி
எச்சரிக்கை கொண்டு நடவப்பா அப்பா
எண்ணில்லா முக்திவழியெய்தலாமே

பொருள் :- மூன்றுசுடரொளியுண்டு. ஆனால் அது மூன்றும் ஒன்றேயாகும். அப்படி மூன்றானாலும் அது மும்மூர்த்தியல்லவென்றும் இந்த மூன்றும் ஆள் தத்துவத்தன்மை லட்சணத்தில் ஒன்றேயாகும் என்றும், ஆயினும் இது, ஆண், பெண் அல்ல, சிவன், லிங்கமல்ல, ஆனந்த பரம் பொருளான திருத்தத்துவ சோதி, இந்த சற்குருவைத் தரிசித்துப் பாதம் போற்றித் துதித்து எச்சரிக்கையாய் அஞ்ஞான மார்க்கத்தின் வழிபாட்டிற்கு விலகி நடந்தால், நீடுழியாய் வாழும் பேரின்ப முக்தியை அடையலாம் என்பதாம்.

இந்த மூன்று ஒன்றாயுள்ள சுடரொளியென்பது ஆள் உருவத் தத்துவத்தில் மூன்றும் ஒன்று என்பதின் அர்த்தம். முதலாவது ஆதியந்தமில்லாது அநாதியாயுள்ள பராபரவஸ்துவென்னும் தேவன் இரண்டாவது பராபர வஸ்துவாகிய தேவன் தமது பரிசுத்த ஆவியால் (பரமாத்துமாவால்) பாவ உலகத்தை மீட்கவும் ஞான போதகத்தை உபதேசிக்கவும் மனித அவதாரத்தில் அனுப்பிய பரம சற்குருவாகிய, இயேசு கிறிஸ்து. மூன்றாவது சற்குருவாகிய இயேசுகிறிஸ்துவை தங்கள் மீட்பரும் ஞான சற்குருவுமாய் விசுவாசித்து ஏற்றுக்கொண்டோர் உள்ளத்தில் தங்கியிருந்து அவர்களை வழிபிசகாது, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் எச்சரித்து நடத்தும் பரிசுத்தாவி (பரம

ஆத்மா) வானவர். இம்மூன்றும் ஒன்றான பராபரவஸ்துவேயாகும். இந்த ஒன்றில் மூன்றாயுள்ள தத்துவ தூய லட்சணத்தை உறுதிப்படுத்தி ஞானிகள் விளக்குவதைக் கீழே காண்கவும் :-

சிவ வாக்கியர்

சாவதானத் தத்துவச் சடங்கறுக்கும் மூடர்காள்
தேவர் கல்லுமாவரோ சிரிப்பதன்றி யென் சொல்வேன்
மூவராலு மறியொணாத முக்கணன் முதற் கொழுந்து
காவலாகியும் முளே கலந்திருப்பர் காணுமே.

முச்சுடராகி யொன்றாய் முடிந்ததோர் சோதி பாதம்
அச்சுதன் அயனுங் காணாவ கண்ட மாயளவில்லாத
சச்சிதானந்த ஞான சதா சிவக்குருவைப் பாட
மெய்ச்சுடர் உதயமான விளக்கொளி யுண்மை சேர்வாம்.

இவ்விரண்டில், முதற் பாடலில், சற்குருவாய் அவதரித்த இயேசுவின் மூன்று தத்துவத்தை முன் அகஸ்தியர் சொன்னது போல் மூவராலும் (பிர்மா, விஷ்ணு, சிவன்) அறியொணாத முக்கணன் (மூன்று தத்துவ லட்சணமுடையோர்) முதற் கொழுந்து ஒன்றாய் காணப்படுபவன் என்றும்,

இரண்டாம் பாட்டில், முச்சுடராகி (முத்தத்துவ சுடரொளியாகி) முடிந்த ஓர் சோதி என்றும், விஷ்ணுவும், பிர்மாவும் காணாத மெய்சுடர். உதயமான விளக்கொளி யென்றும் காட்டுகிறது. ஆகவே சற்குருவாய் அவதாரத்தில் வந்த இயேசு, மூன்று ஆள் தத்துவ லட்சணம் பொருந்திய பராபர வஸ்துவில் ஒன்றாய் காணப்படுபவர். இவரை பிர்மா, விஷ்ணு, சிவன் காணவும் இல்லை. அல்லாமலும், இவ் அவதாரம், அந்த மும்மூர்த்திகளும் அல்லவென்று முன் பாடலில் அகஸ்தியர் சொன்னதைப்போல் சொல்லியிருக்கிறது தெளிவான விளக்கமாகும். இதற்கு ஒப்பனையாக ஔவையாரும், திருமூலரும் இம்மும் மூர்த்திகளையும், அவர்கள் தெய்வீக லட்சணங்களையும் விளக்கியிருப்பதைக் கீழே காண்கவும்.

ஔவையார்

மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆல முண்ட கண்டன் அவன் மனிதன் – சீல முடன்
உற்று உணர்ந் உகந்த பெரியாய்
கற்று மறிந்தார் இல்லை காண்.

திரு மூலர்

பல கலைகள் ஓதுவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால்வேதம் ஆறு சாஸ்திரம்
அலையுடனே அஞ்செழுத்தும் வெளியுந்தானு
யவைகளிலே பொய் களவு அதர்மஞ் சேரும்

மலையரசன் சிவன் பிர்மா விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங் காணார்
நிலை பெருக மோட்ச வழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே.

சிவ வாக்கியார்

தேவர் தேவரென்று நின்று தேடுகின்ற மூடர்காள்
தேவர் யாவரென்றறிந்து தேடவு மறிகிலீர்
மூவர் தேவரென்று நீர் மொழிந்த தென்ன நியாயமோ
மேவதாகவும் முளே விரித்துணர்ந்து கொள்ளுமே.

இம்மூன்று பாடலும் மும்மூர்த்திகளை தேவன் அல்லவென்றும், மனிதர் மலையாண்ட அரசர்கள் என்றும் விளக்கிக் காட்டுகிறது.

அகஸ்தியர் பாடல்

வணங்குவாய் செக சோதி யொருவனாகி
மாநிலத்தை யொரு நொடியில் வகுத்தே மண்ணிற்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்திற் தானுதித்துக் குருவாய் வந்து
சனங்குலவு சமுசார மொன்றில்லாமற்
சன்னியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அனங்க கல சித்தர்களை யிருத்திப் போட்டு
அகண்டதலஞ் சென்றவரை வணங்குவாயே.

பொருள் :- இம்மாபெரும் உலகத்தைச் சிருஷ்டித்து, அதில் மனித ஜாதிகளையும் உண்டாக்கி, பின் அந்த உலகத்திலேயே தானே குருவாய் வந்து அவதரித்து, சனங், குலம், சமுசார வாழ்க்கையின்றி சன்னியாசம் செய்து மெய்ஞ்ஞான போதகமுபதேசித்து, பேரின்ப முத்திக்கு வழிகாட்டி, தன்சீஷர்களையிருக்கச் செய்து விட்டு பரலோகத்திற்குப் போன உலகத்தின் சோதி மயமாய் விளங்கும் ஒரு கர்த்தனை வணங்குவாயாக என்பதாம்.

உலகத்தில் பல அவதாரங்கள் வந்ததாக பல காவிய நூல்களும், சரிதைகளும் உண்டு. அவ்வகையில் வந்த அவதாரங்களில் இப்பாடலில் விவரித்துக் காட்டும் லட்சணங்கள் எந்த அவதாரத்திற்குகந்த தாயிருக்கு மென்பதை வாசகர்கள் தீர்ப்பிடுங்கள். பல அவதாரங்கள், பெண்டு, பிள்ளைகள், கோத்திரத்துடர்புடன் வந்துள்ளது என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. இப்பாடல் எவ்வளவு திட்ட வட்டமாய் தெளிவாய், சற்குருவாய் இயேசு என்னும் நாமத்தில் வந்த அவதாரத்தை விளக்கிக் காட்டியிருக்கிறது என்பதைக் கவனிக்கவும், இயேசுவின் சற்குரு அவதாரத்திற்கு இப்பாடலில் உள்ள லட்சண விளக்கம் மிகத் தெளிவாயும் மிக மிகப் பொருத்தமுள்ளதாயும் காணப்படுகிறது. அகஸ்தியரின் விளக்கத்தைப் போலவே பதினெண் சித்தர்களில் விசேஷித்தவரான மகாமகத்வமிக்க போகமுனிவரும் சற்குருவாய் வந்த இயேசுவின் அவதாரத்தைப் பற்றி மிகச் சிறந்த முறையில் விளக்கிக் காட்டுவதை கீழே காண்கவும்.

போகர் சத்த காண்டத்தில் 3ம் காண்டம்

பாட்டு 216

இறங்கினேன் ராசரிட சமாதிகண்டேன்
எழிலான ஏசுவின் தன் சீசர் கண்டேன்
சுரங்கமுடன் இம்மானுவேல் சமாதி கண்டேன்
சுத்தனாம் பரிசுத்தர் சமாதி கண்டேன்
வரங் கொடுக்கும் இஸ்ரவேல் சமாதி கண்டேன்
வளமுடனே ரோமபுரி தேசத்தார்கள்
தீறமுடனே ரோமபுரி கோட்டைக்குள்ளே
போகுவதும் வருகுவதும் கண்டேன் தானே

பாட்டு 217

கண்டேனே கோட்டை வழி சென்றபோது
கடுங்காளை யாயிரம் பேர் சூரரப்பா
தெண்டமுடன் ஏசுவின் தன் பாதம் போற்றி
தெளிவுடனே ஞான உபதேசஞ் சொல்வார்
பண்டிதங்களதி விசேடங்களனைத்து முண்டு
பன்னிரண்டு சீசவர்க்க சமாதியுமுண்டு

மண்டலத்தில் தாமிருக்கும் ஏசு தம்மை
வணக்கமுடன் வரங்கேட்போர் கோடியாமே

பாட்டு 218

கோடி பேர் சமாதி நிலை தன்னைக் கண்டேன்.
கொற்றவனாம் ரோமபுரி சமாதியோரம்
தேடியே பார்க்க வென்று போகும் போது
தேர் வேந்த ராசரப்பா இஸ்ரவேலர்
நாடியே தபசிகளா யிரம் பேர்
நலமுடனே சமாதியதுலக் கோயில்லை
கூடியே பார்க்கையிலே விநோதமெத்த
கூறவே முடியாது திண்ணமாமே.

பாட்டு 219

திண்ணமாய் எகிப்து தேசங் கண்டேன்
திடமுள்ள மாதாவின் தேசம் போனேன்
வண்ணமுடன் யூதாவில் கோடான கோடி
வனந்தனிலே ரிசிகளப்பா சொல்லொண்ணாது
என்னவே ஏசுவின் தன் மகிமை மெத்த
எடுத்துரைத்தார் சீசர்வர்க்க மனேகம் பேர்கள்
சன்னலுடன் மலையெல்லாஞ் சுற்றி வந்தேன்
சாங்கமுடன் யீசாக்குச் சமாதியுண்டு

பாட்டு 220

உண்டான சமாதியிடம் போயிருந்தேன்
ஓகோ, கோ நாதாக்கள் சீச வர்க்கம்
கண்டேனே வெகு கோடி அதிசயங்கள்
கலியுகத்தில் கண்டதில்லை இதுபோலப்பா
தண்ட வனம் தான் தாண்டி சுத்தி வந்தேன்
சகலமான சீனபதி மார்க்கத்தாரை
கொண்டுமல்லோ மவரவர்கள் தேசம் விட்டு
கொப்பனவே திரும்பி வந்தேன் சீனந்தானே

பாட்டு 226

காட்டி வத்தேன் சீனபதி தன்னிற் சென்றேன்
கடவுளாம் ஏசுவின்றன் காட்சி கண்டேன்
வாட்டமுடன் நபிமார்கள் சீசர் வர்க்கம்
வகையுடனே காணவென்று திரும்பிச் சென்றேன்
காட்டமுடன் புகை ரதத்தை மாட்டிக் கொண்டு
நலமுடனே எருசலேம் காணவந்தேன்
மாட்சிமையாய் குளிகையது பூண்டு கொண்டு
மாநபியைக் காணவென்று வந்திட்டேனே

போக முனிவர் இந்த ஆறு பாடல்களிலும், ஏசுவின் சீசரைக் கண்டேன் என்றும், சுரங்கத்தைப் போன்ற இம்மானுவேல் சமாதியைக் கண்டேன் என்றும், சுத்தனாம் பரிசுத்தர் சமாதி கண்டேன் என்றும், சொல்லுகிறார். இம்மானுவேல் என்பது சற்குருவாய் வந்த இயேசுவின் மற்றொரு பெயர். இதுவுமல்லாமல் இயேசுவை சுத்தனாம், பரிசுத்தர், என்கிறார். பின்னும் ரோமாபுரிக்கும், எகிப்து தேசத்திற்கும், யூதா தேசத்திற்கும், எருசலேமுக்கும், சீனாவுக்கும் போனதாகவும் ஆயிரமானபேர் ஏசுவின் பாதத்தைப் போற்றித் தொண்டனிட்டு ஞான உபதேசத்தைச் சொல்லுகிறார்கள். பல விசேஷித்த ஞான உபதேச போதனைகள் உண்டு என்றும், ஏசுவின் சீஷர்கள் பன்னிரண்டு பேரின் சமாதி உண்டு என்றும், உலகத்தில் ஜீவனோடு காட்சியளிக்கும் இயேசுவினிடம் வணக்கத்துடன் வரங்கேட்போர் கோடி கணக்கான பேர்கள் என்று சிறப்பாய் சொல்லுகிறார். பின்னும் பராபர வஸ்துவாகிய தேவன் ஒருவர் என்று போற்றித் துதிக்கும் இஸ்ரவேல் என்னும் ஜனங்கள் தேவரதங்களையுடைய இராசாக்கள் என்றும், இவர்கள் சமாதிக்கு கணக்கில்லை என்றும் உண்மையிலேயே இங்கு நடக்கும் விநோதங்களை சொல்ல முடியாதென்றும், யூதா தேசத்தில் ஏசுவை நோக்கித் தவம் செய்யும் ரிசிகளோ கோடானு கோடிபேர் என்றும், அங்குள்ள சீசர்கள், ஏசுவின் மகிமையைப் பற்றி, விசேஷித்த வகையாய் இவருக்குப் போதித்தார்கள் என்றும், பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள, பக்தனான ஆபிரகாமின் மகன் ஈசாக்கின் சமாதியைக் கண்டேன், அங்கு நான் கண்டது கலியுகத்தில் கண்டிராத வெகு கோடி அதிசயங்கள் என்றும், கடைசியாக கடவுளாம் ஏசுவின் காட்சியையும் கண்டேன் என்று முடிக்கிறார். இந்த போக முனிவரின் சாட்சி சற்குருவாய் வந்த இயேசுவின் அவதாரத்தை

இவ்வளவு தெளிவாய் கடவுள் என்றும், இம்மானுவேல் என்றும், சுத்தனாம் பரிசுத்தர் என்றும் போற்றிப் பேசுவது மிகச் சிறப்பாய் இருக்கிறது. ஞானிகள் பலர் இயேசுவை அவதாரமாய் வந்த சற்குருவென்றும், பரமாத்மாவாகிய, பரிசுத்தாவியால் உற்பவித்ததால் பராபரம் என்றும் திட்டமாய் அறிந்து இவ்விதமாய் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். போக முனிவர் ககனகுளிகை பூண்டு எங்கும் பறந்து போனவர்.

பத்திரகிரியார்

சாஸ்திரத்தைச் சுட்டு சதுர் மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக் காலம்.

பத்திரகிரியார் ராஜனாயிருந்தும் எல்லாம் வெறுத்துவிட்டு வெளியேறி ஞானத்தைத் தேடி ஆராய்ந்து பார்த்ததில் நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெட்டுப் புராணங்களும் பேரின்ப முக்தி பெற பிரயோஜனமற்றதெனக் கண்டதால் அவற்றைப் பொய்யானவைகளெனத் தீர்த்துச் சுட்டு சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெப்போது என்கிறார். மெய் பக்தியைக் கடைபிடிக்கும் பக்தனொருவன், பக்தியில் தான் போய்க் கொண்டிருக்கும் வழி நேர்மையற்றதும் வீணானதென்றும் தானே ஆராய்ச்சியில் அறிந்து தீர்ப்பிட்டு மெய்வழியை காணாதவரையில் முக்திபதவியடைய முடியாதென்பது உண்மை. அதிலும் சூத்திரத்தைக் காண்பதே மிக அவசியம். இந்த சூத்திரமாவது என்ன என்பதை கீழே காண்கவும்.

சங்கராச்சாரியார் நாதாந்தச்சாரம் 16-ம், 18-ம் பாடல்

கல்வியைப் பெருமையாக்
கதறியே திரிவார் புல்லர்
சொல்லிய ஞானநூலின்
சூட்சத்தை அறியமாட்டார்
வல்லவர் நாங்களென்று
வாதுகள் மிகவே பேசி
எல்லையில்லாத கன்மத்
தெய்தியே மூழ்குவாரே

பொருள் :- சிற்றறிவுடையோர் தாங்கள் காவிய புராணநூல் சாஸ்திரங்களில் கற்றதையே பெருமையாய்ப் பேசித் தர்க்கவாதம் பிடித்துக் கொண்டு பல கர்மங்களையும் செய்து கொண்டு ஞான நூல் என்னும் சத்திய

வேதாகமத்திலுள்ள தேவ வெளிப்பாட்டின் சூத்திரங்களை அறியமாட்டார் என்பதாம்.

சத்திய ஞான நூலின்

சாடையை யறியா மூடர்
வித்தைகள் மிகவுங்கற்று
வீணராயிறந்துபோனார்
அத்தனை பெருமையாக
அவனியி லறியச்சொல்லி
முத்தியை யறிவாரில்லை
மூடர்க்கு மோட்சமுண்டோ

பொருள் :- சத்திய வேதாகமத்தின் உட்பொருளை அறியாத மூடர் பல வித்தைகளையும் கற்று பலன் பெறாமல் இறந்து போனார்கள். இந்த சத்திய வேதாகமத்தின் நீதிப்பிரமாணங்களை இவ்வளவு மேன்மையாக உலகத்தில் விளக்கிக்காட்டியும், முத்தி பெறும் வழியை அறிவார் இல்லை. இவ்வித மூடர்க்கு மோட்சமுண்டோ என்பதாம். இந்தப் பாடல் இரண்டும் பத்திரகிரியார் சொன்ன சூத்திரம் என்ற வார்த்தைக்கு அர்த்தம், சத்திய ஞான நூல் அல்லது சத்திய வேதம் என்று விளக்கிக் காட்டுகிறது. சத்திய வேதம் என்பது மனிதர், தம் பக்தியைப் பூரணப்படுத்தி முக்தி சேர்வதற்கு, தேவன் தம் பக்தர்கள் மூலம் மனிதர் கைக்கொண்டு நடக்கும்படி கொடுத்த நீதிப்பிரமாணங்கள். இது சத்திய வேதத்தில் காணும் ஆதாரப்படி பத்து கட்டளைப் பிரமாணங்கள் கொண்டது. அவை பின் வருமாறு :-

முதற்கட்டளை :- உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையற்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

இரண்டாம் கட்டளை :- மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

மூன்றாம் கட்டளை :- உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

நாலாம் கட்டளை :- ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

ஐந்தாம் கட்டளை :- உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

ஆறாம் கட்டளை :- கொலை செய்யாதிருப்பாயாக.

ஏழாம் கட்டளை :- விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

எட்டாம் கட்டளை :- களவு செய்யாதிருப்பாயாக.

ஒன்பதாம் கட்டளை :- பிறனுக்கு விரோதமாய் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

பத்தாம் கட்டளை :- பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியையும் அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையையும், அவனுடைய கழுதையையும் பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றும் இந்தப் பத்துக் கட்டளைகளும் தேவனாகிய கர்த்தர் பேசிச் சொல்லிய வார்த்தைகள். மனித ஜாதிகள் முக்தி பதவியைப் பெற இதுவே சத்திய ஞானநூல் என்னும் பரிசுத்த வேதம். இந்தக் கர்த்தரின் கட்டளைப் பிராமண விதிகளை தேவ ஒத்தாசையால் கைக்கொண்டு நடந்து பூரணப்படாமல் யாரும் எவ்வகைச் சடங்குப் பிரமாணம், புண்ணியக் கிரியைகளைச் செய்து முக்தி பெறுவது முடியாத காரியம் இதைத் தெளிவாய்க் கண்டறிந்த ஞானிகள் சொல்லுவதை கீழே காணகவும்:-

பேரின்பமணி மாலை

கங்கை முதலான நதி முழுகினாலுங்
கடவுளென்றே பல பொருளைக் கருத்திலுன்னி
அங்கையெடுத் தெழுகோடி மந்திரங்கள்
அந்தி சந்தி வழிபாடாயுணர்ந்திட்டலாலுந்
திங்கள்தனை தரித்தபிரான் திரு நீறென்று
திரிபுண்டர விதிப்படியே தரித்திட்டாலும்
ஆதிபரஞ் சோதி சருவேசன்றன்னை
யிறைஞ்சாதா ரெரிநரகுக் கெய்துவாரே.

நுண்ணிய நூல் பல வெண்ணி கற்றாலென்ன
நூறு வயதிருக்க வரம் பெற்றாலென்ன?
தண்ணீரிற் பலமுறை நீராடினாலென்ன
சரீர சுத்தியால் பாவந் தவிர்ந்ததுண்டோ
மனுகுலத்தோர் ஒப்பனையின் நடப்பிதல்லால்
மனத்தழுக்கை கண்ணீராற் கழுவி மாற்றி

விண்ணிலுள்ள பரஞ்சோதிதனைப் போற்றாமல்
வீணிலே எரி நரகில் வீழ்வார் தாமே.

எத்தனை நாள் மண்ணுலகில் வாழ்ந்திட்டாலும்
இருப்பது பொய்யிறப்பது மெய்யென்றெல்லோரும்
புத்தியினாலறிந்து கண்ணாற் கண்டிருந்தும்
பூவுலகிலழிந்துபோம் பொருளைத் தேடி
வைத்திருக்க வாசையல்லால் மனுவோரிந்த
மண்ணுலக வாழ்க்கையது விழலாமென்று
முத்திதருங் கர்த்தாவை வணங்கிடாமல்
முழுமூட ரெரிநரகில் மூழ்கின்றாரே.

ஆகவே மனிதர் தேவன் அருளிய சத்திய ஞானநூலாகிய, பத்து கட்டளைகளையும் கைக்கொண்டு, இதுவரை ஆராய்ந்து தெளிவுப்படுத்திக்கொண்டே சற்குருவாய் வந்த இயேசுவை விசுவாசித்துப் பற்றிக்கொண்டு பராபர வஸ்துவைப் போற்றித் துதித்து பக்தியை கடைபிடித்து நடக்க வேண்டியதே மெய்ஞ்ஞான மார்க்கவழி. இதன் விளக்கத்தை கீழே காண்கவும் :-

ஞானவெட்டி 128- ம் பாட்டு

விட்டகுறை வருமளவு முபதேசங்காண்
மெய்யுடலுந் தளர்ந்து புவிமேலுநோக்கித்
தட்டழிந்து விழும்போது ஓதி வைத்த
சாஸ்திரத்தில் க்ஷணப்போது மறிக்கப்போமோ
எட்டுமிரண்டறியாதார் குருக்களாமோ
என்னையினிப் பறையனென்றுந் தள்ளலாமோ
மட்டமரும் பூங்குழல் வாலாம்பிகைப்பெண்
வங்கிசத்திலுதித்த சாம்புவனு நானே

ஞானவெட்டியார் சொல்லும் எட்டும் இரண்டும் பத்தென்பது தேவன் அருளிச்செய்தமுன் விவரித்த பத்து கட்டளைகள் ஆகும். இந்த நுட்பமான ஞானக்கருத்தை அறியாதவர்கள் குருக்கள் அல்லவென்கிறார் இவர்.

அகஸ்தியர் ஞானம் 88-ம் பாட்டு

தானேதான் குருக்கள் என்பான் பணங்கள் வாங்கச்
சதாசிவன் தான் வந்தாற்போற் பூசை செய்வான்
உனுள்ளோர் தங்களையே மயக்கப் பூசை

யொருமணி போலெட்டுமணியடிப்பான் மட்டை
மானார்கடங்களைத்தான் கழுத்தைக்கட்டி
மாளுவான் பாற்குழியை நம்பிக்கொண்டே
ஏன்காணுமிதினாலே வருவதேதோ
எட்டுமிரண்டறியாத விகலன்றானே.

இந்த பாடல் அகஸ்தியரும், எட்டுமிரண்டும் பத்தென்னும் பத்துக்கட்டளைகளின் பொருள் இன்னதென்று அறியாத குருக்களைத் தாழ்வாகச் சொல்லுகிறார்.

அகஸ்தியர் ஞானம் 22-ம் பாட்டு

தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
செப்பினதோர் நூல்களெல்லாஞ் சுட்டுப் போடு
தரிசிப்பாய்யோர் வழி மெய்ஞ்ஞான பாதை
அடைவதற்கு அடையாளமொன்று சொல்வேன்
பரிசிப்பாய் பத்துமொழி கையிற்கொண்டு
பரப்பிரம்மம் ஒன்றையே நாடிக்கொண்டு
வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கந்தேடி
வணங்குமந்த மறைபுகுந்து வாழுவாயே.

பொருள் :- மெய்ஞ்ஞான வழிகாட்டத் தகுதியற்ற எல்லா காவிய நூல்களையும் சுட்டுப்போடு. மெய்ஞ்ஞான பாதை வழியே போக ஓர் அடையாளஞ் சொல்வேன் கேள். பத்து கட்டளைகளையும் கைக்கொண்டு நடந்து பராபர வஸ்து ஒன்றையே விசுவாசம் வைத்து தொழுது சேவித்துக் கொண்டு, அஞ்ஞான, அவபக்தியில் சரிந்து, சிதைந்து விழாமல் பராபர வஸ்து ஒன்றையே வணங்கிப் போற்றும், பக்தியைச் சார்ந்து வாழக்கடவாய் என்பதாம். அகஸ்தியர் எவ்வளவு விளக்கமாய் இப்பாடலில் பக்தியில் பூரணப்பட, பராபர வஸ்துவை மாத்திரம் தொழவும், பத்துகட்டளை பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கவும். அவ்விதம் நிலை தவறாது நடக்கும் மார்க்கந்தேடி பக்தி செய்யும்படி உறுதிப்படுத்துகிறார் என்பதைக் கூர்ந்து கவனிக்கவும்.

இந்த பத்து கட்டளைப் பிரமாணங்களையே கைக்கொண்டு பராபர வஸ்துவாகிய கர்த்தனைப் போற்றித் துதி செய்யவேணுமென்று பின்னும் பல ஞானிகள் சொல்லுவதைத் தொடர்ந்து கவனிக்கவும்.

நந்தவனங்கள் சோலை நடைவழி சாலை சத்திரம்

இந்தடைவான தர்மமிதம் பெறச் செய்திட்டாலும்
அந்தமுமாதியில்லாத நாதியாம் பரமசோதி
தந்த வாக்கியங்கள் பத்துந் தப்பினோர் நரகில் வீழ்வார்

பேரின்பமணி மாலை

ஒரு தேவன்தனை வணங்கியவர் கற்பித்த
ஒரு பத்து கற்பனையில் நடக்கமாட்டார்
பல தேவர்களை வணங்கியவர்கட்கேட்கப்
பாரிலுள்ளோர் நடந்து கதி பெறுவாருண்டோ
தறைதனி லெண்ணி றந்த பல பாட்டுங் கூத்துங்
தானாடிப் படித்து துதி செய்ததாலே
வரமருளும் பராபரனாற் கேற்குமோ சொல்
வன்னரகப் பேய்க்கடிமை யென்போர் தாமே

பொருள் :- ஒன்றான கடவுளைத் தொழுது அவரால் கற்பிக்கப்பட்ட பத்து கட்டளைகளின் படி நடவாமல் பல தேவர்களைத் தொழுது வருகிற யாவரும் நரகப் பேய்களுக்கு அடிமைகள் என்பதாம்.

ஆகவே இதுவரையில் திட்டமும் தெளிவுமாய் பல ஞானிகளின் வார்த்தைகளைக்கொண்டு விளக்கிக்காட்டிய உலக சற்குருவாய் அவதரித்த இயேசுவின் லட்சணங்களை மனதில் ஆழ்ந்து கிரகித்து, வீண் காலம் போக்காது, பாவம் போக்கும் பரிகாரியாய் வந்த இந்த இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவர் விதித்துள்ள வேதப்பிரமாணப்படி பாவங்களை அறிக்கையிட்டு அவர் நாமத்தில் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்று ஞானஸ்நானம் என்னும் ஞானதீட்சை பெற்று, பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் பரமாத்துமா வென்னும் பரிசுத்தாவியை விசுவாசித்து ஜெபித்துப் பெற்றுக் கொண்டு பராபரவஸ்துவாகிய தேவனை நீதியின் கிரியைகளோடு தொழுது சேவித்து பக்தியை பூரணப்படுத்தி முக்தி சேர தங்களை ஒப்புக் கொடுத்து ஜீவபலியாய் தங்களையே காணிக்கையாக படைப்பதே மெய் வேதாந்த உயர் ஞானமார்க்கம். இதை கடைப்பிடித்து நடக்கும் பக்தர்கள் பரிசுத்தர்களாய் நீதியின் கிரியைகள் நிறைந்து பேரின்ப சந்தோஷத்தால் நிறைந்து இடைவிடா தேவப் பிரசன்னக் காட்சி பெற்று சகல சம்பூரண நன்மை நிறைந்த சுகவாழ்வு பெற்று தேவன் அருளிய வாக்கின்படியே சாயுச்சியம் என்னும் நீடூழி வாழும் முக்தியடைவார்கள். ❖❖❖

62

மரித்தோர் உயிர்த்தெழுதல்

மோட்சம் அல்லது முக்தி என்னும் வார்த்தை பக்தியற்றோர் விரும்பாததும் மிகவும் வெறுப்பதுமான வார்த்தை. மோட்சம் என்று யாராவது சொல்லக் கேட்டால், உடனே மோட்சத்தைக் கண்டது யார் என்பதே அண்டையில் இருந்து எழும்பும் கேள்வி. மனிதன் தேனில் விழுந்த ஈயைப்போல் பாவ சிற்றின்பத்தாலும், மண், பெண், பொன் ஆசையாலும் சிக்குண்டு மயங்கி, மறுமையைப் பற்றி, அவன் மனதிலுள்ள நம்பிக்கை தீய்ந்து அழிந்து அவன் மரித்த நிலையடைந்து விட்டதாலும், தேவனைப் பற்றிய நம்பிக்கையும் மெய் பக்தி வழிபாடும் இல்லாமையாலும் மனிதன் மோட்சத்தைப் பற்றியோ நரகத்தைப் பற்றியோ ஆழ்ந்து ஆராய்ந்து அறிய விரும்புவதில்லை. மனிதன் பராபர வஸ்துவாகிய தேவன் ஒன்றென அறிந்து அவர் விதிப்பிரமாணங்களைக் கைக்கொண்டு நீதி

என்னும் பரிசுத்த வழியில் நடந்தால் அல்லாது முக்தி சேர்வது கூடாத காரியம்.

அருளில்லார்க் கவ்வுலகமில்லை

பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை.

என்பது ஞானிகள் சொன்ன வாக்கு. இதன் பொருளாவது எவ்வித உயர்குலத்தோனாயினும் பொருள் வாய்ப்பற்றவனை இவ்வுலகத்தில் மதிப்பாரில்லை. அப்படியே, தேவனின் கிருபையும், அருளும் இல்லாதவனுக்கு மறு உலகில் பேரின்ப முக்தியடைய இடமில்லை என்பதாம். பெயரளவில், பழக்க வழக்கமான ஆகம, ஆராய்ச்சியறிவோ பரம்பரைப் பக்தியோ முக்தி தராது.

முக்தி என்பது, முற்றும் வேதாந்த விதிநெறிப்படி, பக்தியைப் பூரணப்படுத்தின நீதிமான்களான பரிசுத்தமாக்கப்பட்டோர் தங்கும் நித்திய ஸ்தலம். அப்படியே நரகமும் தேவனையும் அவர் நீதிப்பிரமாணங்களையும் கைக்கொண்டு நடவாமல் வெறுத்து பஞ்சமாபாதகங்களையே இன்பமென்று விரும்பிச் செய்து நாட்களை வீணிற்கழித்து மரித்த பாவிகள் தங்களுக்கு தேவன் விதித்த தண்டனையை நித்தியமாய் அனுபவிக்கும் நித்திய இடம். மோட்சத்தையடைவதும், நரகத்தையடைவதும், மனிதன் மரித்து பின் தேவனால் உயிரோடெழுப்பப்பட்டு தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டபின் நடக்கும் காரியம்.

பொதுவாய், மனிதர் மரித்து திரும்ப உயிரோடெழும்புவதை மனிதர் நம்புவதில்லை. மனிதன் மிகுதியாய், பண்டிகை விழா கொண்டாடி மகிழ பழகியிருப்பதேயல்லாது, மனிதன் மரித்தபின் நடப்பதைப் பற்றி தெளிவாய் சொல்வாரும் இல்லை. தான் ஆராய்ந்து பார்ப்பதுமில்லை.

மரித்தோர் உயிர்த்தெழுதல்

உலகம் முடிவில் தேவனால் அழிக்கப்பட்டு மரித்தோர் எல்லாரும் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்பதே மெய் வேதாந்த விளக்கத்தின் உண்மை. மனிதர் மரித்ததும் தாம் செய்த பாவங்களினிமித்தம் பலவித பிறவிகளை எடுக்கிறார்கள் என்பதே. மனிதரில் ஒரு பகுதியினருக்கு உள்ள அறிவு. இவ்வித மறுபிறவியின் பொய் நம்பிக்கையைப் பற்றி, மறுபிறப் பென்னும் பிரிவில் வெளிப்படுத்தி விளக்கியிருப்பதைக் காண்கவும் :-

'மனிதன் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதுமே மெய் வேதாந்தத்தின் அறிவு. மரித்தோர் உயிர்த்தெழுந்து, புண்ணிய ஆத்துமாக்கள் மோட்சத்திற்குப் போவார்கள். பாவ ஆத்துமாக்கள் தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டு, நரக ஆக்கினையை அடைவார்கள்.

மரித்தவர்கள் உயிரோடெழுந்திருப்பதைப் பற்றி போக முனிவர் சொல்வதைக் கீழே காண்கவும் :-

போகர் சத்தகாண்டம். 3ம் காண்டம்

பாட்டு 970

தாமான வையகத்தில் மாண்ட மாண்பர்
தாரணியில் வைகுண்டப் பதியில் தானும்
கோமானாம் அரசர் முதல் குருக்கள் தாமும்
கோலமுடன் ராஜாதி ராஜர் தாமும்
பூமானாம் சீமான்களெவரையுந்தான்
பொன்னுலக பதிதனிலே காணலாகும்
தாமான சடலமது மண்ணேயாகும்
நாதாந்தக் காற்றது தான் அழியாதென்றே

பாட்டு 971

அழியாது மாண்டவர் களெல்லாருந்தான்
அப்பனுடபதி தனிலே காணலாகும்
அழியாது யாத் மந்தா னெந்தநாளும்
அமரரது பதிதனிலே காணலாகும்
அழியாது மாண்டவர்களொரு காலந்தான்
அப்பனே ஒரு காலமெழுந்திருப்பார்
அழியாது ஒரு காலு அவர் தமக்கு
அப்பனே நீதியுண்டு கேள்வியுண்டே

இப்பாடல்களில் மரித்தோராகிய ராஜாக்கள், குருக்கள், பூமான்கள், சீமான்கள் மற்றுமுள்ளோரும் பொன்னுலகமெனும் மோட்சத்தில் காணப்படுவார்கள். மனித சரீரம் அழிந்து மண்ணாய்போம். நாதாந்தக் காற்றெண்ணும் ஆத்துமாவோ அழியாது. எல்லோரும் மரித்து உயிரோடெழுந்து, பின் அவர்களுக்கு, அவர்கள் செய்த கிரியைகளுக்கேற்ற நீதியான தேவ நியாயத்தீர்ப்பு உண்டு என்று போகமுனிவர் சொல்லுகிறார். மரித்தவர்களுக்கு மறுமையில் இவ்வகையில் தேவனால் தீர்ப்பிடப்பட்டு பாவ புண்ணிய கிரியைகளுக்கேற்ற பலனை அனுபவிப்பார்கள் என்று விளக்கியிருந்தாலும் இதைக் கிரகித்துச் சிந்திப்போர் இல்லை.

சத்திய பரிசுத்த வேதாகமத்தில் மரித்தவர் உயிரோடெழுந்திருப்பதைப் பற்றியுள்ள சில குறிப்புகளை கீழே காண்கவும் :

'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதானத் தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்.' அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும், கர்த்தருடனே கூட இருப்போம். I தெசலோனிக்கேயர் 4 : 16,17

'இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லோரும் நித்திரை அடைவதில்லை (மரிப்பதில்லை) ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம், எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'. (I கொரிந்தியர் 15 : 51, 52)

உலகம் முடிவிற்கு வரும் கடைசி நாட்களில், தேவனையும் சற்குருவாய் வந்த இயேசுவையும் விசுவாசித்து பக்தி செய்வோர்க்குள்ள உயிர்த்தெழுதல் இதுவாகும். எதிர்காலத்தில் நிறைவேற தேவனால் நியமிக்கப்பட்ட கட்டளை. விதி இது.



63

மரித்தோர் நியாயத்தீர்ப்பும், நரக ஆக்கினையும்

மெய்பக்தி ஆராய்ச்சியின்றி உலக சிற்றின்பத்தையே பேரின்ப பாக்கியமாய் எண்ணி, பாவத்தை செய்து தெய்வ அருள் இல்லாது, மரித்தவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு நரகாக்கினை அடைவதைப் பற்றிய பரிசுத்த வேதாகமத்திலுள்ள சில குறிப்புகளை கீழே காண்கவும் :

நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும், அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். அவருடைய சமூகத்திலிருந்து பூமியும், வானமும் அகன்று போயின. அவைகளுக்கு இடம் காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது.

என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டபடியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்......... ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான். (வெளி 20 : 11,12,15)

'ஜெயங் கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான். நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக் காரரும், சூனியக்காரரும் விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும், இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'. (வெளி 21: 7,8) இதுவே தேவன் உலகத்தின் பாவிகளுக்கு அளிக்கும் தீர்ப்பும் நரக தண்டனையும் ஆகும். பாவிகள் நித்திய காலமாய் முடிவில்லாது அனுபவிக்க தேவனால் விதிக்கப்படும் தண்டனை இதுவாகும்.

இந்த தேவ நியாயத் தீர்ப்பு உலக முடிவில் அரசர் முதல் ஆண்டி வரையில் உள்ள மரித்து உயிர்த்த பாவிகளுக்கு நியமித்துள்ளது. இந்தத் தீர்ப்பிற்கு தேவனை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ள எவ்வகையிலும் முடியாது. தேவனே தமது சிங்காசனத்திலிருந்து புஸ்தகங்களைத் திறந்து அவைகளில் எழுதப்பட்டுள்ளபடி, கிரியைகளுக்கேற்றபடி நியாயந்தீர்க்கப்பட்டு, தேவ கட்டளையை மீறி, நீதி செய்யாது பாவியாய்க் காணப்பட்டோர் அனைவரும் பட்சபாதமின்றி எரியும் நரக அக்கினியிலே நித்திய காலமாய் தள்ளப்படுவார்கள்.

மனிதனின் ஆத்துமா அவனைவிட்டு பிரியும்போது அவன் சேர்த்துக் குவித்த பொன்னும் பொருளுமான நிறைந்த சம்பத்தும், செல்வமும், பட்டமும், பதவியும், புகழ் ஆரமிட்டுப் போற்றிய கீர்த்தியும், கனமும், குலமேன்மையும் ஒரு க்ஷணத்திற் பிரிந்து உலகத்தோடு நின்றுவிடும். அதன்பின் அவன் உலகத்தின் பாவிகளோடு தேவன் நியமித்த கடைசி நியாயத் தீர்ப்புக்கு நிற்க ஆயத்தப்பட வேண்டும். இதுவரையில் தேவன் அவனுக்கு கிருபையாய் கொடுத்து வாழச் செய்த இலவசமான நாட்களில் ஞானமார்க்க வணக்க வழிபாடுகளைத் தேடித் தெளிய ஆராய்ந்து சிருஷ்டி கர்த்தாவான தேவனைத் தொழுது சேவித்து நீதியைப் பின்பற்றாது பாவத்திலே மூழ்கி நித்திய அழிவைத் தேடிக் கொண்டபடியால், நித்திய பேரின்ப சந்தோஷ பாக்கியங்களை அனுபவிக்க வேண்டியவன் நித்திய நரகத்தை

தன்பங்காகத் தெரிந்து கொண்டு அழிவுக்குத் தன்னை ஆயத்தப்படுத்துகிறான். இது எத்தனை பரிதாபம். விலை மதிக்கவோ, ஈடுசெலுத்தவோ, ஒன்றோடும் ஒப்புவமையற்ற அழிவற்ற ஆத்துமா, பேரின்பம் நிறைந்த மோட்ச உலகத்தில் தேவனோடு என்றும் பூரித்து மகிழ்ந்து நித்தியமாய் வாழ்ந்து சுகிக்க தேவன் உண்டு பண்ணிய ஆத்துமா! அதை அசட்டை பண்ணி நித்திய அழிவைத் தேடிக்கொண்டால் மீட்பில்லாத எரிநரகில் வேதனைப்பட வேண்டுமே! இனி ஒருபோதும் எவ்வகையிலும் அந்த நித்திய எரிநரக வேதனையிலிருந்து மீட்கப்பட முடியாதே! அநித்தியமான பொய் வாழ்வை இன்பமென்று எண்ணி தேவன் இரக்கமாய் தந்த கிருபையின் நாட்களை ஆத்மா மெய் பக்தியையும், ஜீவனுள்ள தேவனையும் அறிந்து வாழாது நஷ்டப்படுத்தினோர் எத்தனை பயங்கர நிலையை அடைய வேண்டியதிருக்கிறதென்பதைக் கூர்ந்து பாருங்கள். காலத்தை ஆதாயப்படுத்தி மெய் பக்தியை கடைபிடித்து முக்தி வழியை நாடுங்கள்.



64

மோட்சம் என்னும் பேரின்ப முக்தி

சுவர்க்கம் எப்படியிருக்கும்? அங்கே யார் மாத்திரம் போக முடியும்? என்பது மனிதர்க்கு மறைவாயுள்ள ஒரு காரியமும் கேள்வியுமாகும். படக்காட்சியைப் பார்த்தவர்கள் மாத்திரம் அதைப்பற்றி விவரிக்கக் கூடுமானது போல் பராபரவஸ்துவாகிய தேவனுடன் வழிபடும் பக்தர்களுக்கு மாத்திரம் சுவர்க்கத்தைப் பற்றி தேவன் வெளிப்படுத்தியுள்ள விபர்ங்களை வேதாகமத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும் அவை பின் வருமாறு :-

சுவர்க்கம் என்பது தேவனுடைய நித்திய வாசஸ்தலம் அங்கே தேவனும், தேவனுக்கு பணிவிடை செய்யும் ஆயிரமாயிரமான தேவனுடைய தூதர்களும் இருப்பார்கள். இவர்களையல்லாது தேவனில் பக்தி விசுவாசம் வைத்து நீதி செய்து தேவ்னால் பூரண

பரிசுத்தமாக்கப்பட்ட பக்தர்களும் தேவனோடு நித்தியமாய் வாசம் பண்ண வாய்ப்பு உண்டு. சுவர்க்கத்தின் மகிமை பிரஸ்தாபத்தைப் பூரணமாய் வர்ணிக்க ஆயிரம் கோடி நாவாலும் முடியாது. முந்தின பிரிவில் போக முனிவர் தமது 970-ம் பாடலில் சுவர்க்கத்தை "பொன்னுலகபதி" என்று ஒரே வார்த்தையில் சொல்லி முடித்து விட்டார். உலகமே பொன்னால் என்றால் இன்னும் விவரிக்க வேண்டிய தொன்றுமில்லையே.

சத்திய வேதத்தில் சுவர்க்கத்தைப் பற்றி விவரித்துள்ளதாவது "அதின் பிரகாசம் விலையுளர்ந்த இரத்தினக் கல்லைப் போலவும் பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது. அதற்கு பெரிதும் உயரமுமான மதிலும் கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்களும் தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. நகரத்தின் மதிலுக்கு பன்னிரெண்டு அஸ்திவாரக் கற்கள் இருந்தன.... அந்த நகரம் சதுரமாயிருந்தது. அதன் அகலமும் நீளமும் சமமாயிருந்தது.. அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது. நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருந்தது.

நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித ரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திர நீளம், மூன்றாவது சந்திர காந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம் ஏழாவது சுவர்ண ரத்தினம், எட்டாவது படிகப் பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே, பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது, நகரத்தின் வீதி பளிங்கு போலச் சுத்தப் பொன்னாயிருந்தது....... நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்கச் சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதை பிரகாசிப்பித்தது. ஆட்டுக்குட்டியானவரே (இயேசுவே)அதற்கு விளக்கு .... அங்கே இராக்காலம் இராதபடியால் அதன் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதேயில்லை. தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும், நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை.

ஆட்டுக்குட்டியானவரின் (இயேசுவின்) ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். (வெளி. 21 : 11 - 27) இத்தனை மகிமைப் பிரகாசமும் மாட்சிமை பொருந்திய வாசஸ்தலமே சுவர்க்கம் என்னும் மோட்சம், இங்கே மரணம் இல்லை, துக்கமில்லை, வருத்தமில்லை, அலறுதலுமில்லை. இத்தனையாய் விசேஷித்த நித்திய பேரின்ப உலகம் இது. குருக்கள் ராஜாக்கள், குலமக்கள், பட்டம், பதவி வகுத்தோர்க்கு இங்கே இடம் இல்லை. "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை யென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிமார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக்காரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும் வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்திரிப்பதில்லை" என்று (1கொரி. 6 : 6 - 11) சத்திய வேதாகமத்தில் சொல்லியிருக்கிறது இவ்வித பாவங்களைச் செய்து கொண்டு மெய் பக்தியும் தேவன் பேரில் விசுவாசமில்லாமற் ஜீவித்து மரிக்கும் எந்த சமயத்தவராயிருந்தாலும் அவர்களுக்கு சுவர்க்கத்தில் இடம் இல்லை.

இதன் காரணமாகவே இவ்வித பாவங்களைச் செய்வோரைப் பார்த்து உலக சற்குருவும் இரட்சகருமாய் வந்த இயேசு தமது ஞான உபதேசத்தில் 'வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னண்டை வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்றார். அதாவது பாவங்களை மன்னித்து, பாவம் கிரியை செய்யாது பக்தி வழியில் நடத்துவேன் என்றார். பின்னும் இவ்வித பக்தியில் நடத்தி, நீடுழி பேரின்ப வாழ்வைப் பெற 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்றும் 'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்' என்றும் போதித்தார் (மத். 5 : 8) பின்னும் 'தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை.... ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்' என்று (வெளி. 21: 27) சொல்லப்பட்டிருக்கிறது.

மனித உலகத்தின் சடங்குப் பிரமாண விதி முறைகளில் நடந்தேறும் ஒரு தீட்டுக்களிப்பும், சுத்திகரிப்பும், மோட்ச உலகிற்குச் செல்லாது. ஆகவே மனிதன், தனக்குக் கிடைத்த நாட்களில் வேத விதிமுறைப்படி தேவன் ஒருவர் என்று விசுவாசித்து பாவிகளை மீட்க சற்குருவாய் அவதாரத்தில் வந்த

இயேசுவை விசுவாசித்து தேவனுடைய ஆவியினால் பாவங்களற கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டு நீதிமான்கள் ஆக்கப்படவேண்டும். (1 கொரி 6 : 11) இவ்வித பரிசுத்தமாக்கப்பட்ட நிலைமையின் அனுபவத்தை மனிதகுலம் அடைவதற்காகவே தேவன் நீடிய பொறுமையுள்ளவராய் நாட்களையும், காலங்களையும் கிருபையாய்க் கூட்டித்தந்து, 'அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது' என்று (வெளி. 22 : 11,12)ல் சொல்லியபடி தமது வார்த்தையால் தேவன் உலகத்தை எச்சரித்துக்கொண்டு, உலகத்தை நியாயந் தீர்த்து, நீதியைச் சரிக்கட்டி, பரிசுத்தமாக்கப்பட்டோர்க்குப் பேரின்ப சுவர்க்கமும் பாவிகளுக்கு நித்திய நரக தண்டனையும் விதிக்க, தேவன் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஞானவான்கள் இதை உத்தம ஞான மார்க்கமென விளங்கிக்கொண்டு, தங்களையே தேவனுக்கு ஜீவனுள்ள பலியாய், ஒப்புவித்து, இதுவரையில் அனுசரித்து வந்த சகல அவபக்தியையும் அறவேயகற்றித் தள்ளிவிட்டு சத்திய வேதாகமத்தை தேடி வாங்கி, அதிலுள்ள ஞான சூத்திரங்களை படித்து பரா பர வஸ்து, ஒன்றென விசுவாசித்து, திரித்துவ பரம் பொருளாகிய அவரை எப்பொழுதும் பரிசுத்த மனதுடன் துதித்துப் போற்றி ஆராதித்து பக்தியைப் பூரணப்படுத்தினால் நீடூழி வாழலாம். பேரின்பப் பொன்னுலகை சாதகமாக்கிக் கொண்டு நீடூழி வாழ தேவன் அருள் புரிவார்.

மக்கள் குலம், விஞ்ஞானத்தை உலக விருத்திக்கும் அஞ்ஞானத்தை பக்திவிருத்திக்கும் அடிப்படையாக்கிக் கொண்டு மெய்ஞ்ஞானத்தை முற்றும் வெறுத்து விட்டு விட்டனர். உலக மாயையின் மயக்கத்தால், இவர்களுக்கு எத்தனை விளக்கிக் காட்டினும் ஏற்றுக்கொள்ளவதில்லை. இதைப் பற்றி ஞானிகள் சொல்வது பின்வருமாறு :-

பட்டினத்தார்

பாச விருளை வகையும் வரையே நோக்கிப்
பரமனருள் குருவாய் வந்துணர்த்தினாலும்
பாசமகலாது பிரபஞ்ச வாழ்க்கை
பரிந்தாசையுடலுயிர்கள் விரும்பும் நேர்மை
ஓசையுற்ற கடல் நீரையெடுத்து மேகம்
உவரகற்றிய முதாக்கியுலகிற் பெய்து
நேசமுறவைத் திடினும் நில்லாதோடி

நெடுங்கடல் புக்குவாராகும் நீ ரொப்பாமே.

பராபரவஸ்துவின் அருளே குருவாய் வந்து பஞ்சமா பாவங்களையும் தெளிவுற விளக்கி உபதேசித்தாலும் மனிதர்களுக்குள்ள உலக ஆசையின் பாசத்தால் அவர்களைவிட்டுப் பாவ மகலாதாம். எப்படியெனில், மேகமானது சமுத்திரத்திலுள்ள உப்புநீரை எடுத்து உவர் அகற்றி அமுதாக்கி உலகெங்கும் பகிர்ந்து பொழிந்தாலும் அது திரும்பவும் ஓடி உப்பு ஜலமாயுள்ள சமுத்திரத்தில் விழுந்து பாய்வது போல், இவ்வுலகத்தாருக்குப் போதிக்கிற மெய்ஞ்ஞான உபதேசமும் இருக்கிறதென்பதாம்.

இதெல்லாம், மனிதர், ஞானமார்க்க ஆராய்ச்சியற்று ஆத்மாவில் செத்த நிலைமையை அடைந்து, பரம்பரை பழக்க வழக்கங்களையும் சடங்காரச்சார விதிமுறைகளையும் பெரிதாய் கருதி மெய்ஞ்ஞானத்தைக் கடைபிடியாததால் ஏற்பட்ட ஆத்ம நஷ்டம் என்பதிற் சந்தேகமில்லை.

பேரின்ப மணிமாலை

தாழ்ந்தவிடம் தண்ணீர் நிற்குமென்ற
தன்மை போற்பரஞ்சோதி வேதம்வாரி
இந்த மானிலத்திலெளியோர் குள்ளே
சொல்லறிய பிரபயொளி வீசிற்றன்றோ
வாழ்ந்திடு மாங்காரமுள்ள கெர்வத்தோர்க்கு
மலைமேலே மறைத்தண்ணீர் நில்லாதாம்போல்
வீழ்ந்திடுவார் நரகினிலே யென்றென்றைக்கும்
மீழாமல் வெந்துழலும் வீணர்தாமே

தாழ்ந்தவிடத்தில் தண்ணீர் நிற்பது போல், பராபரவஸ்து அருளிய மெய்ஞ்ஞான வேதவெளிச்சம், தாழ்மை மணமுடையோர்க்கே பிர்காசிக்கிறது. மலையின் மேற் பெய்த மழை தண்ணீர் அதன் மேல் நில்லாதது போல், ஆங்காரிகளான கெர்வமனமுடையோர்க்கு, மேற்சொன்ன, மெய்ஞ்ஞான வேதவெளிச்சம் பிரகாசமாயிராதபடி அவர்கள் அறிவின்கண் குருடானதால் நரகத்தில் விழுந்து நித்திய காலமாய் வேதனையடைவார்கள் என்பதாம்.

பட்டினத்தார்

படித்திடுமாகமத்தின் பயனெல்லாம் பற்றிப்பார்க்கில்
நடத்திடுஞ்சோதியென்று நவிலுவர் நாலுவேதம்
படித்தவர் தமக்கு மெட்டாபராபரன் மலர் பாதத்தைப்
பிடித்தவர் தமக்கல்லாமற் பேசுவர் தமக்குண்டாமோ

பொருள் :- வேதகாவிய நூல்களில் உள்ள பொருள்களில் விபரமாய்ப் படித்துப் பார்த்தால், சோதியென்னும் பராபர வஸ்து நடத்துகிறார் என்று சொல்லுவார்கள் ஆனாலும், நாலு வேதத்தையும் படித்தோர்க்கு மெட்டாத பராபரனுடைய திருப்பாதத்தைப் பற்றிப்பிடித்து அவரின் ஞான மார்க்கத்தை கடைப்பிடித்தோர்க்கேயல்லாமல் அவரின் நாமத்தை பெயரளவில் தூய்மை நிலையின்றி வீணிற் பேசித் திரிவோர்க்கு அவர் அருள் ஒளி பிரகாசிக்காது என்பதாம்.

இச்சிறு நூலைவாசிக்கும் வாய்ப்புடையோர் இதிற்காணும் ஞானிகளின் தெளிந்த ஆராய்ச்சியில் கண்டறிந்து விளக்கியுள்ள ஞானப்பொருள்களை புதைப்பொருள்களைப் போலும், விலையேறிய முத்துக்களையும், வைரக்கற்களையும் போலும் ஒப்பாக்கி மதிப்பிடாது அதற்கு ஒப்பற்றதேடறிய ஞானக்களஞ்சிமாய் மதித்து மனதிற்கிரகித்து, பரம்பொருளின் ஞான ஒளிபெற்று ஒன்றான பராபரவஸ்துவாகிய தேவனையும் அவதாரத்தில் வந்த உலக சற்குருவையும், அனுதினமும் துதித்துப்போற்றி முடிவில் முக்தி யென்னும் பொன்னுலகத்தில் முடிவின்றி வாழ தன்னைத் தேவ அருளால் தூய்மை நிலையில் பூரணப்படுத்திக் கொள்வது நன்று. இவ்வித தூய ஞான வழியை வாஞ்சித்துக் கடைப்பிடிப்போரை பூரணப்படுத்தி நித்திய முக்தி பதவியில் சேர்க்க தேவன் அருள் புரிவார்.

முடிவில்லா நீடூழி காலமாய் பேரின்ப முக்தி என்னும் மோட்சத்தில், தேவனோடும், புண்ணிய ஆத்துமாக்களான தேவனால் பாவங்களற கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டு பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்களான எண்ணிக்கைக்கு அடங்காத பக்தர்களோடும் சேர்ந்து, பேரானந்த சந்தோஷத்தால் நிறைந்து வாழலாம்.

'காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்'; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. பிரசங்கி. 12 : 13.

★ ★ ★ ★ ★

முடிவுரை

முதலாவது இந்தப் புத்தகத்தை வாங்கி, இதை கருத்தோடு வாசித்த உங்களுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன். உங்களுக்கு எனது இதயப்பூர்வமான நன்றி.

இந்தப் புத்தகம் ஒரு சமய ஆய்வு நூல் ஆகும். இதில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் பகுத்து, நிதானித்து, ஆய்ந்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை. அதே வேளையில் இது நமது முன்னோர்களின் பாடல்களை குறிப்பாக சித்தர்களின் பாடல்களை மேற்கோள் காட்டி, ஒன்றான மெய் தேவன் யார்? என்பதை ஆசிரியர் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். இந்த பழைமையான நூல் புதிய வடிவில் மறு பதிப்பாகி வெளிவருகிறது. இந்த கடைசி காலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று திடமாக நம்புகிறேன்.

மனதின் வெளிப்பாடுகளை ஓரளவு அறிந்திருப்பதினால் உங்களுக்குள் எழும்புகின்ற கேள்விகளுக்கு என்னால் தகுந்த பதிலளிக்க முடியும் என்று நம்புகிறேன்.

ஆகவே இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள காரியங்களில் உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருக்குமானால், அதற்கான விளக்கங்கள் அறிய விரும்பினால் என்னோடு கடிதத்தின் வழியோ, தொலைபேசியின் வழியோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளத் தயங்காதீர்கள். எப்படியாவது இவ்வுலக மக்கள் அனைவரும் ஒன்றான மெய் தேவனை அறிய வேண்டும் என்ற எனது வாஞ்சையால் இந்நூலை வெளியிட்டுள்ளேன். இதைப் படிக்கும் போது இங்கே கூறப்பட்டுள்ள மெய்யான சத்தியங்கள் உங்கள் உள்ளத்தை தொடட்டும். முக்தி சேர்வதற்கு வழியை காட்டட்டும் என்று விரும்புகிறேன். தேவைப்பட்டால் என்னோடு தொடர்பு கொள்ளுங்கள். நன்றி.

இங்ஙனம்
தெய்வ சேவையில்
Rev. D. விஜயகுமார்

2000 மில்லினியம் உலகம் முழுவதும் நற்செய்தி அறிவிக்கும் கடைசி கால அருட்பணி.

ஒருவர்க்கு - ஒருவர் Each One - Reach One

கிறிஸ்துவுக்குள் அன்புடையீர்,

எங்கள் "நற்செய்தி பிரச்சார சேவை" வெளியீட்டுப் பிரதிகள் மூலம் என்னற்ற பலர் பக்திக்குரிய ஆன்மீக நற்பலன்களை பெற்றுள்ளார்கள். இந்த அரும் சேவையால் மெய் பக்தி அறிவில்லாது. ஆன்மா நஷ்டப்பட்டு கிடக்கும் தூரத்தில் உள்ளோர்களுக்கிடையில் தேவன் செய்து முடித்துள்ள ஆச்சரியப்படத்தக்க கிரியைகளுக்காகவும் அவருக்கு நன்றி, துதி ஏறெடுக்கிறோம்.

இந்த தெய்வ சேவையில் ஆர்வமாய் தாராள மனதுடன், உதவி புரிந்து பங்கெடுத்து, உறுதியாக நின்று கிறிஸ்துவுக்கு ஆத்ம ஆதாயம் செய்யும் நல் நோக்கமுடையதும், தெய்வ ஏவுதலால் மனப்பூர்வமாய் செயல்படுவதுமான ஆத்ம தாகமுடையோரை ஆண்டவர் விரும்புகிறார். நாங்களும் விரும்பி வரவேற்கிறோம். எங்களிடமுள்ள கைப்பிரதிகள், புத்தகங்களை பெற்று புறஜாதி மக்களை இயேசு வண்டை வழி நடத்திடும் இவ்வூழியம் உங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. வேறுயாரோ செய்யட்டும் என்று இருந்த விடாமல் நாமே செய்ய தேவன் விரும்புகிறார். ஆத்தும ஆதாயம் செய்வதினால் தேவ இராஜ்ஜியம் பரவுகிற படியால் நீங்களும் அந்த ராஜ்ஜியத்தின் தூனாக இருக்கிறீர்கள். இந்த ஊழியம் வளரும் போது தேவ இராஜ்ஜியம் விஸ்தரிப்பு அடைகிறது.

ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன் என பவுல் சொல்கிறார். 2 கொரி. 12 : 15.

ஆத்தும ஆதாயத்தில் நாம் கவனமாக ஈடுபடவும் இந்த ஊழியத்தின் தேவைகளும், பொருளாதாரமும் ஒரு பெரிதான பிரச்சனையாக இராதபடிக்கு ஜெபியுங்கள். கர்த்தர் ஏவினால் காணிக்கை அனுப்புங்கள். இந்த காணிக்கை தேவ இராஜ்ஜிய விஸ்தரிப்புக்கும் விலையேறப் பெற்ற ஆத்தும ஆதாயத்திற்கும் பயன்படும் அது மட்டுமல்ல நீங்களே இப்பணியை நிறைவேற்றுவதாக கர்த்தர் அறிந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

கர்த்தரின் பணியில்
Rev. D. விஜயகுமார்



பதிப்பாசிரியரைப்பற்றி...

இந்நூலினை விழுமிய பதிப்பாக வெளியிட்டுக்கொணரும் கெழுமிய பெருந்தகை Rev. D. **விஜயகுமார்** அவர்கட்காக, பரமபிதாவாகிய கர்த்தரைத் துதிக்கின்றேன்.

இந்நூலாசிரியர் சீர்மிகு போதகர் N.J.S. ஸ்டீபன் அவர்களால் ஆவிக்குள் வழி நடத்தப்பட்டு, தேவனுக்குப் பயனுள்ள பாத்திரமாக ஆயத்தம் பண்ணப்பட்டவர் இவர்.

தனது ஆவிக்குரிய பிதாவைப் போலவே இந்தியாவின் இரட்சிப்பைக் குறித்து உகந்த தரிசனமும், மிகுந்த கரிசனமும் உடையவர் இவர். தேவனின் அழைப்பைப் ஏற்று அரசுப் பணியை (சர்வேயர்) 1984ம் ஆண்டு ராஜினாமா செய்து விட்டு, கல்வி, சமூக, சமய பணி மூலம் ஊழியம் செய்து வந்தார். அதன்பின் இயேசு கிறிஸ்துவின் திடமான தரிசனம் பெற்றதும், தான் சொந்தமாக நடத்தி வந்த கல்வி நிறுவனங்களை உதறிவிட்டு முழுநேரப்பணிக்கென வெளியே வந்தார்.

1990ம் ஆண்டு ஈரோடு சி.எஸ்.ஐ.பிரப் நினைவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு ஆராதனையில் அனைத்து சபையின் மூத்தப் போதகர்களால் ஊழியத்திற்கென பிரதிஷ்டை செய்யப்பட்ட இவர் மிஷனரி மூவ்மென்ட் ஆப் இந்தியா என்ற இயக்கத்தை துவங்கி ஊழியத்தை நடத்தி வருகிறார். இந்தியா சுயாதீனத் திருச்சபை ஐக்கியத்தின் (ICI) மண்டல ஒருங்கிணைப்பாளராகவும், அகில இந்திய கிறிஸ்தவ லீக் நிறுவனராகவும் செயல்பட்டு வருகிறார்.

"முக்திவழி" என்ற இந்தப் பழைய நூலினை மீண்டும் பதிப்பித்து வெளியிட்டு இருப்பதன் மூலம் புதிய மெருகேற்றியிருப்பது, கிறிஸ்தவ இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய தொண்டு எனலாம். இந்நூலைப் படிப்போர் நிச்சயம் ஆவிக்குரிய வகையில் பயன்பெறுவர் என்பது உறுதி. இப்பதிப்பு மிகச்சிறந்த முயற்சியாகும். ஆன்ம அருளாளர்களின் சான்றாவணங்களுடன் நான்கு வேதங்களும், சாத்திரங்களும், பதினெண் புராணங்களும் கூறும் நெறிப்பாடுகளை நன்கு எடுத்தியம்பும் வியத்தகு நூல் இது. குருமார்க்கமும், கருமார்க்கமும் கண்ட மெய்நெறியாளர்கள் இவ்வையத்தின் அஞ்ஞானம் அகல, இன்றைய விஞ்ஞான உலகில் மெய்ஞ்ஞானமே போற்றவல்லது; புவியில் மாந்தர் வளமும் நலமும் எய்திட மாற்றவல்லது என உணர்த்தியுள்ளனர். அவைபற்றிய தெளிவைப் போதகர் வழி சேர்ப்பிப்பதே விரைந்த வழி!.

இந்த இனிய செயலுக்கு பெருஞ்செலவிடல் வேண்டும். இவ்விலக்கியப்பணி நிறைவேறக்கைகொடுங்கள். உங்கள் மனம் விசாலமானதே! வேண்டும் நிதியை நீட்டுங்கள்; வெல்லும் வாழ்வை மீட்டுங்கள்!!

பிரதம பேராயர் டாக்டர் **மா.பிரகாஷ்**
Ex தலைவர், மாநில சிறுபான்மை ஆணையம், சென்னை.
நிறுவனர், 'சிஸ்வா' மற்றும் 'ஐசிஐ'

Published by
Missionary Movement of India,
229/239, Bharathipuram,Surampatti (P.O), Erode - 638 009.
Tamil Nadu. South India. **Cell : 93641 02490**